வானத்து மனிதர்கள்

இந்திரா சௌந்தர்ராஜன்



GOODWILL

முதற் பதிப்பு : நவம்பர் 2014
உரிமை : ஆசிரியருக்கு

VAANATTHU MANIDHARGAL
by : Indra Soundarrajan

First Edition : November - 2014
No.of Pages : 456
Paper Used : 11.6 N.S. Book Print

விலை : ₹.285.00

Thirumagal Nilayam
New No.13, Old No.28,
Sucons Apartments,
Sivaprakasam Salai,
T.Nagar, Chennai - 600 017.
Phone : 044-2434 2899, 2432 7696

E-mail ID : enquiry@thirumagalnilayam.com
Website : www.thirumagalnilayam.com

Laser at : *Goodwill Computers,* T.Nagar, Chennai - 17
Cell:9940254493

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

வானத்து மனிதர்கள்

1

'இந்த உலகில் எவ்வளவோ காடுகள் இருக்கலாம். ஆனால் தாணுமாலயக்குடி அவைகளில் இருந்து மிகவே வேறுபட்ட ஒன்றாகும். இந்தக் காட்டுக்குள் தாணு எனும் சிவபெருமானும், மால் எனப்படும் விஷ்ணுவும், அயன் எனப்படும் பிரம்மாவும் ஒன்றாகச் சேர்ந்து உருவாக்கிய விருட்சம் ஒன்று உள்ளது. அதற்கு 'தாணுமாலயமரம்' என்று பெயர்.

இந்த மரத்தை பிள்ளையில்லாதவர்கள் சுற்றி வந்து வணங்கினால் பிள்ளை பிறக்கும். மனக்கவலை இருந்தால் நீங்கி விடும். இதனால் இந்த மரம், இந்த காட்டில் வாழ்ந்து வரும் பழங்குடி இனத்தவரால் பெரிதும் போற்றி வணங்கப்படுகிறது.

இந்த மரத்தைச் சுற்றி வேலி அமைத்து இதற்கும் மஞ்சள், குங்குமம் இட்டு அவர்கள் நாள் தவறாமல் வணங்கி வருகின்றனர். இதன் நிழலை மிதிக்கக் கூட அச்சப்படுவார்கள். அந்த அளவிற்கு இந்த மரத்தையே அந்த பழங்குடியினர் சிவன், விஷ்ணு, பிரம்மாவாக கருதுகின்றனர்.'

தாணுமாலய வன அரசு விருந்தினர் இல்லம்!

முகப்பில் வன இலாகாவுக்கு சொந்தமான ஜீப் நின்ற படி இருக்க, அதன் முன்னால் பரபரவென்று கைகளை தேய்த்தபடி எதிர் திசையையே பார்த்தபடி இருந்தார் வன இலாகாவின் ஆபீசரான காளிமுத்து.

அவர் பார்க்க எதிரில் இருசனும், அவன் மனைவி நீலியும் வருவது நன்றாக தெரிந்தது. மதிய வேளை... ஆனாலும் வானில் மேகக்கூட்டம் திரண்ட நிலையில், சாரல் மழை விட்டுவிட்டு பெய்து கொண்டிருந்தது. இதனால் நல்ல குளிரின் தாக்கம் வேறு.

காளிமுத்து இறுக்கமாய் ஸ்வெட்டர் அணிந்திருந்தார். அதையும் மீறிய குளிர்தான், அவர் கைகளை தேய்த்து விட்டுக் கொள்ள காரணம்.

ஒரு சிகரெட் பிடிக்கத் தோன்றியது. ஆனால், அங்கே இருந்தபடி பிடிக்க பயமாக இருந்தது. அதற்காகவாவது அந்த காட்டை விட்டு முதலில் வெளியேறி விடத் தோன்றி யது.

இத்தனைக்கும் காளிமுத்து தாணுமாலயக்குடி வனச் சரகத்துக்கு ஆபீசராக வந்து ஆறுமாதம் கூட ஆகவில்லை. ஆனாலும் இந்தக் காடே வேண்டாம் என்றுதான் மேலதி காரிகள் காலில் விழுந்து மாற்றல் வாங்கிக் கொண்டு புறப் பட்டபடி இருக்கிறார்.

இவர் இடத்திற்கு சிவகுமார் என்பவர் வந்து பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். அவருக்காகத்தான் காத் திருப்பும், தவிப்பும்...

முன்னதாக அந்த மலையில் வசிக்கும் மலைக்குடியைச் சேர்ந்த இருசனும், அவன் மனைவி நீலியும் கையில் தேன் குடுவை, பலாக்காய் என்று அந்த மலையில் விளையும் சில பொருட்களோடு எதிரில் வந்து நின்றனர்.

"கும்பிடுறேங்க..." என்று இருசன் கும்பிடு போட்டான்.

"என்னய்யா இதெல்லாம்?"

"ஐயா இந்த காட்டை விட்டுட்டு போறீங்கன்னு பாராக்கார கோவிந்தன் சொன்னாங்க. அதான் உங்களைப் பார்க்கலாம்னு வந்தோங்க."

"அதுசரி, இதெல்லாம் என்ன?"

"பாத்தா தெரியலீங்களா? பலாப்பழம், தேனு, சாதிக்கா, தாணுமாலய மரத்தோட இலைங்க..."

- இருசன் சொல்ல அவைகளை ஒரு வேண்டாத பார்வை பார்த்தார் காளிமுத்து.

"ஐயா இத உங்க வண்டியில வெச்சுடட்டுங்களா?"

"ஆமா... பெரிய தங்கம், வைரம் பாரு..." சலித்துக் கொண்டார் காளிமுத்து.

"என்ன அப்படி சொல்லிட்டீங்க... இந்த இலை தங்கம், வைரத்தை விட மேலுங்க. அந்த மரத்துல இருந்து இலை உதிர்ந்து விழுவறதே அபூர்வம்க. எப்ப எப்பன்னு மரத்தை சுத்தி எங்காளுங்க உட்கார்ந்திருப்பாங்க. விழுந்த இலையை நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு புடுங்கப் பார்ப்பாங்க. பட்டணத்துல இருந்து வர்றவங்களும், சில சித்த வைத்திய காரங்களும் இந்த இலைக்கு எத்தன ஆயிரமும் தருவாங்க. உங்களுக்கு தெரியாதுங்களா?"

"ஹ்ம்... இந்த காட்டுக்கு வந்து இந்த மாதிரி நம்ப முடியாத விஷயங்களைக் கண்டதுதான் மிச்சம். என் சர்வீசுல இந்த ஆறுமாசத்த மறக்கவே முடியாது."

"என்னங்க நீங்க, இந்த காட்டுக்கு வந்தா இதை விட்டுட்டு போகவே மனசு வராதும்பாங்க. நீங்கதான் இப்படி சொல்றீங்க."

"போதும்பா, போதும். ஒரு மரத்தை வெட்ட முடியல. ஒரு சிகரெட் கூட சுதந்திரமா பிடிக்க முடியல. எந்த பக்கம் திரும்பினாலும் ஒரே மர்மம். போதும் சாமி, போதும்."

"வாஸ்தவம்தாங்க, இந்தக் காட்டுக்குள்ளேயே பொறந்து வளர்ந்த எங்களுக்கே பல விஷயங்க புரியாமாட்டேங்குது. ஆனாலும் நாங்க சந்தோஷமாதாங்க இருக்கோம்."

"என்னய்யா சந்தோஷம், பெரிய சந்தோஷம். ஒரு ரேடியோ கிடையாது. டிவி கிடையாது. மின்சாரம் அது வேண்டாம்னுல்ல இருக்கீங்க! அரசியல்வாதிங்க எப்படியோ எலெக்ஷன் நேரத்துல இங்க ஒரு பூத் போட்டு, வோட்ட மட்டும் உங்ககிட்ட வாங்கிடுறாங்க. பதிலுக்கு ஒரு ரேஷன் கடையை கூட கேட்டு வாங்கத் தெரியலியே உங்களுக்கு...?"

"அதெல்லாம் எதுக்குங்க? அதான் வரகரிசியும் பொன்னாங்கண்ணியும் மானாவாரியா வெளையிதே...? அதுபோக கொய்யா, வெள்ளரி, மா, வாழை, பலான்னு பழங்க. அம்புட்டும் உங்க ஊர் உரமருந்து போடாம எங்க காலநை உரத்தால வளர்ந்த மரங்க... அதான் எங்க உடம்பெல்லாம் தேக்குமரமா இருக்குதுங்க."

- இருசன் பெருமைப்பட்டுக் கொண்டான்.

"சரிசரி, நீ உன் காய்கறி பெருமையை நீத்திக்கிட்டு போதும் புறப்படு."

"சாமி, இந்த காட்டுல இருந்து நீங்க அடுத்து எந்த காட்டுக்கு போறீங்க சாமி?"

"சேர்வராயன் மலைக்காட்டுக்கு போறேன். சந்தனமும், தேக்கும், செம்மரமும் அங்க அதிகம்யா. மூணு வருஷம் இருந்தா போதும். என் சொந்த ஊர்ல பங்களா கட்டிடுவேன். இங்க மாதிரி மரத்தை வெட்டினா சாமி வெட்டிடும், இலையை பறிச்சா காய்ச்சல் வந்துடும்னு எந்த பூச்சாண்டியும் அங்க கிடையாது."

- காளிமுத்துவின் பேச்சில் அவரது உள் எண்ணம் நன்றாக புலப்பட்டது.

"ஆமா... அங்க டி விபொட்டி, ரேடியோல்லாம் இருக்குதுங்களா?"-நீலி அதெல்லாம் ஒரு அதிசயம் என்பதுபோல கருதிக் கொண்டு கேட்டாள்.

"டிவி, ரேடியாவா? அதெல்லாம் இல்லாத ஒரே இடம் இந்த உலகத்துலேயே இந்த மலைக்காடு மட்டும்தான். கொஞ்சம் வெளியே போய்ப் பாருங்க. அப்பதான் மனுஷன் எவ்வளவு வளர்ந்திருக்கான்னு தெரியும்."

"சாமி அந்த டி வி பொட்டி விடியோ விடியோ பாடுங்களா?"

"பின்ன, ஆமா நீ அதை பார்த்ததே இல்லையா...?"

"ஒரு வாட்டம் இதே இடத்துல மடி மேல ஒரு பொட்டி மாதிரி வெச்சு ஒரு ஆபீசர் காமிச்சாரு. அடேங்கப்பா! எப்படி இருந்துச்சு தெரியுமா? அப்புறம் எங்களயும் புடிச்சு அந்த பொட்டிக்குள்ள போட்டு காட்டுனாரு."

"புரியுது... நீங்க பார்த்தது லேப்டாப்பை. இப்ப அதெல்லாம் போயாச்சு. இப்ப புத்தக சைஸ் 'டேப்'னு ஒண்ணு வந்துருக்கு. அது கைல இருந்தா ஓபாமா கிட்ட கூட பேசலாம். நம்ம பிரதமருக்கும் மெயில் அனுப்பலாம். பொண்

டாட்டி பிள்ளைகளோட பேசலாம், பாடலாம். என்ன வேணா செய்யலாம்..."

- காளிமுத்து சொன்னது நீலிக்கு புரியவில்லை. ஆனால், அதை பார்க்கும் ஆசை மட்டும் அவள் கண்ணில் தெரிந்தது.

"மச்சான், மச்சான் நாம இந்த காட்டைவிட்டு போய் அதை எல்லாம் பார்க்கலாமா மச்சான்..?" என்று காளிமுத்து. எதிரிலேயே இருசனிடம் கேட்டாள்.

இருசனோ உடனே தங்களின் சாதிக் கட்டுப்பாட்டை நினைத்துக் கொண்டான்.

"அடி போடி குறும்பி. நாம இந்த காட்டை தாண்டாத சாதின்னு உனக்கு தெரியாது? ஒரு தடவை தாண்டிட்டா அப்பால திரும்ப உள்ளார வரவும் கூடாது. இது தெரியும் தானே?"

- இருசன் அவளை அடக்கினான். அவள் முகம் சுருங்கிப் போனது. அதேநேரம் எதிரில் ஒரு கார் வருவது தெரிந்தது. காளிமுத்துவும் பார்த்தார். அவர்கள் இருவரும் கூட சற்று ஒதுங்கி நின்றிட, கார் அந்த கெஸ்ட் ஹவுஸ் முன் தேங்கி நின்றது.

உள்ளிருந்து புதிய வனத்துறை அதிகாரியாக பொறுப்பேற்க இருக்கும் சிவகுமாரும், அவர் மனைவி வள்ளியம்மையும் இறங்கினர். அவர்களைத் தொடர்ந்து வாட்சர் கோவிந்தனும் இறங்கினான். பின்னாலேயே ஒரு சரக்கு லாரியும் வந்து நின்றது.

காளிமுத்து முன்சென்று சிவகுமாரை கைகுலுக்கி வரவேற்றார்.

"வெல்கம் சார்..."

"ஹவ் ஆர் யூ காளிமுத்து."

"ஃபைன் சார். உங்களுக்காகதான் காத்துகிட்டிருக்கேன் சார். நல்லவேளை வந்துட்டீங்க."

"இந்த இடத்தைவிட்டு போகுறதுல அவ்வளவு வேகமா உங்களுக்கு?"

"சேச்சே, அப்படி எல்லாம் இல்ல. இருட்டிட்டா இந்த காட்டை விட்டு வெளியே போறது கொஞ்சம் கஷ்டம். உங்களுக்கே தெரியும்... இந்த காட்டுல நம்ம ஆபீஸ் பில்டிங் வரையிலயும்தான் கரண்ட். உள்ள பதினெட்டு மைல் சுற்றளவுக்கு மின்சாரமே கிடையாது."

"வாஸ்தவம்தான். எனிவே... உங்களை பார்த்ததுல ரொம்ப சந்தோஷம்."

"கோவிந்தன், நீ அம்மாவோட நம்ம குவார்ட்டர்சுக்கு போய் சாமானை எல்லாம் இறக்கி வை. நான் சாரோட ஆபீசுக்குப்போய் பாலோ அப் கொடுத்துட்டு வரேன். ஜீப்ல என்னை அடிவார பஸ்ஸ்டாண்டுல கொண்டு வந்து விட்டுடு..."

"சரிங்க சார்..." கோவிந்தன் லாரியோடு விலக முற்பட, சிவகுமாரின் மனைவியும் கோவிந்தனோடு செல்ல தயாரானாள்.

அப்போது அவள் பார்வையில் நீலியும் இருசனும் பட்டவே, அவர்கள் இருவரும் கும்பிட்டனர். அதை பார்த்த காளிமுத்து அவர்களை அறிமுகப்படுத்த தொடங்கினார்.

"மேடம்... இவங்க இந்த விசித்திரமான காட்டைச் சேர்ந்த தாணுமாலயக் குடிகாரங்க. இவன் பேர் இருசன். இவ பேர் நீலி. இரண்டு பேரும் புருஷன் பொஞ்சாதி. இந்த ஆறுமாசத்துல இவங்க நட்புதான் இங்க நான் கண்ட பலன்."

"அப்படியா சந்தோஷம்." என்ற வள்ளியம்மை, நீலியின் கழுத்தில் தெரிந்த பவழமாலையை அதிசயமாக பார்த்தாள். அப்படியே அவள் கழுத்தைச் சுற்றி சங்கிலி ஒன்று இருப்பது

போலவே பச்சைகுத்தப்பட்டிருந்ததையும் ஆர்வமாக கவனித்தாள்.

நீலியும் நெருங்கி வந்து அவளுக்கு கழுத்தைக் காட்டினாள்.

"நான் இதை மாலைன்னு நினைச்சேன்..."

"இல்லம்மா, இது பச்சை. எங்க மலைல எங்க சாதி பொண்ணுங்க வயசுக்கு வந்த உடனேயே இப்படி பச்சை குத்திடுவாங்க."

"ரொம்ப அழகா இருக்கு."

"நீங்களும் ரொம்ப அழகா இருக்கீங்கம்மா."

- நீலி சொல்ல வள்ளியம்மை சிரித்தாள்.

"சரிசரி, கூட வந்து சாமானை எல்லாம் இறக்கித் தாங்க" என்று கோவிந்தன் அவர்களையும் அழைத்தான்.

லாரியும் அங்கிருந்து குவார்ட்டர்ஸ் இருக்கும் ஒரு சரிவான பாதையில் செல்லத் தொடங்கியது.

வன இலாகா அலுவலகம். காளிமுத்து ஒரு லெட்ஜரில் கையெழுத்து போட, பதிலுக்கு சிவகுமாரும் கையெழுத்து போட, சம்பிரதாயமாக சாவிக்கொத்தை கொடுத்துவிட்டு, அப்பாடா என்கிற மாதிரி ஒரு சிரிப்பு சிரித்தார் காளிமுத்து.

"அப்ப நான் கிளம்புறேன்..." என்றவரை சிவகுமார் பதிலுக்கு புன்னகையோடு பார்த்தார்.

"பார்த்து சார்... இங்க நம்ம டிபார்ட்மெண்ட்டுக்கு வேலையே கிடையாது. ஒரு மரத்தை வெட்ட முடியாது. அதனால காண்ட்ராக்டர், மரம் திருடறவங்கன்னு யார் தொல்லையும் கிடையாது. நீங்க பாட்டுக்கு ஹாயாக இருக்கலாம்..." என்றபடியே வெளியே செல்ல காலெடுத்தவரை,

ஒரு நிமிஷம் என்று தடுத்தார் சிவகுமார். காளிமுத்துவும் பதிலுக்கு பார்த்தார்.

"இல்ல, இப்படி ஒரு இடத்தை விட்டுட்டு நீங்க மட்டும் ஏன் போக விரும்பினீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?" சிரித்த படியே கேட்டார் சிவகுமார்.

காளிமுத்துவிடம் திணறல். பதிலில்லை.

"நானே சொல்லிடுறேன். சம்பாதிக்க வழி இல்ல, அது முதல் காரணம். அடுத்து வானத்து மனுஷங்க. ஆம் ஐ கரெக்ட்?"

- அவர் வானத்து மனிதர்கள் என்ற நொடி காளிமுத்து முகம் இருளத் தொடங்கியது.

2

தாணுமாலய வனத்தில் அந்த வன விருட்சம் மட்டும் அதிசயமில்லை. பலப்பல அதிசயங்கள் அந்த வனத்துக்குள் உள்ளன. அதில் ஒன்று அமிர்தப் பொய்கை. இது ஒரு அதிசயப் பொய்கை மட்டுமல்ல. இது ஒரு ஆச்சரியப் பொய்கையும் கூட. சித்திரை பவுர்ணமி அன்று மட்டும்தான் இந்த பொய்கை பொங்கி எழும். அவ்வேளையில் இதில் குளித்து எழுந்தால் சீரான இளமையும், நோயற்ற எதிர்காலமும் உறுதி. எனவே சித்திரை பவுர்ணமி தோறும் இந்த பொய்கையில் நீராட சித்தர் பெருமக்கள் வருவார்கள். இவர்கள் மனித உருவத்தில்தான் வரவேண்டும் என்றில்லை. இவர்கள் கூடுவிட்டு கூடு மாறி பறவையாகவும்,

தவளையாகவும், பாம்புகளாகவும் கூட வரு வார்கள்.

அவ்வளவு பெரிய வனத்தில் இந்தப் பொய்கையை அடையாளம் கண்டுபிடிப்பது மிகவும் சிரமம். நல்ல விதிப்பாடு இருந்தால் மட்டுமே இந்த பொய்கையில் குளிக்கும் பாக்கியம் கிடைக்கும். கேட்பதற்கு புராண சங்கதி போல தெரியும் இதனை கட்டுக்கதை என்று அலட்சியப்படுத்து வோரும் உண்டு.

சிவகுமார் கேட்ட கேள்வி காளிமுத்துவை பேச விடாதபடி செய்துவிட்டது. மவுனமாக வெறித்தார்.

"என்ன சார், நீங்க மவுனமா இருக்கிறதைப் பார்த்தா நான் சரியாத்தான் கேட்டிருக்கேன்னு நினைக்கிறேன்" என்றார் சிவகுமார்.

"ஆமாம் மிஸ்டர் சிவகுமார். நீங்க கேட்டது கரெக்ட். ஒரு வன இலாகா அதிகாரியா நான் பதினைந்து வருஷ சர்வீஸ் பண்ணிட்டேன். எவ்வளவோ காடுகள்ல டியூட்டியும் பார்த்துட்டேன். ஆனா இந்த தாணுமாலயவனம் என் வரை யில் ரொம்பவே பெக்கூலியர்.

இங்க நம்ப டிபார்ட்மென்ட்டுக்கும் பெருசா கடமை எதுவும் இல்லை. நம்ம வேலையே தப்பு நடக்காம பார்த்துக்கிறதுதான். அந்த வகைல பார்த்தா இங்க தப்பே நடக்கிறது இல்லை! அடுத்து வனத்தை விரிவுபடுத்துற நடவடிக்கை. அதையும் நாம செய்யத் தேவையே இல்லாதபடி இங்க வாழ்ந்து வருகிற பழங்குடி மக்களே செய்துடுறாங்க. குறிப்பா, இவங்கள்ல யாராவது இறந்து போனா அவங்கள புதைக்கிற இடத்துல இவங்க மரம் நடுறாங்க. அப்புறம்

அவங்க நினைவா ஒவ்வொரு உறவினரும் மரம் நடுறாங்க. தப்பித்தவறிக் கூட அப்படி நட்ட மரங்களை வெட்ட மாட்டேங்கிறாங்க. அதனால அந்த மரங்களும் வானுயரத்துக்கு வளர்ந்து நிக்குதுங்க. அதை விழுந்து வேற கும்பிடுறாங்க. இவங்க இப்படின்னா, இவங்க வானத்து மனுஷங்கன்னு சொல்ற ஒரு குரூப்!" - காளிமுத்து சொல்லிக் கொண்டே வந்து குரூப் என்று முடிக்கவும் சிவகுமாரிடம் மெல்லிய அதிர்ச்சி.

"குரூப்பா?"-அழுத்தமாக கேட்டார்.

"ஆமாம் குரூப்தான்..."

"எவ்வளவு பேர்?"

"பதினெட்டு பேர்?"

"பதினெட்டு பேரா, சரியா தெரியுமா?"

"தெரியுமாவா...? அவங்க கூட பேசி அவங்களை போட்டோ கூட எடுத்தேன்"

"அந்த போட்டோவை காட்ட முடியுமா?"

"அங்கதான் சிக்கலே..."

"என்ன சிக்கல்?"

"அந்த போட்டோவே சரியா விழல. அவங்க முகமோ உருவமோ கொஞ்சமும் சரியா தெரியல..."

"ஒருமுறை சரியா எடுக்கலைன்னா இன்னொரு தடவை எடுக்க வேண்டியது தானே?"

"சாரி மிஸ்டர் சிவகுமார். அந்த ஒரு தடவை அவங்களை சந்திக்கிறதுக்குள்ளேயே எனக்கு தாவு தீர்ந்து போச்சு."

"சரி. அவங்க இந்த காட்டுக்குள்ள எங்கே தங்கி இருக்காங்க?"

"தெரியல..."

"தெரியல்லையா, என்ன பதில் இது?"

"நான் எது உண்மையோ அதை பேசுறேன்"

"காட்டுக்குள்ள நாலா பக்கமும் ரவுண்ட்ஸ் போனா தெரிஞ்சுட்டு போகுது..."

"நீங்க போங்க, இனிமே அதெல்லாம் தானே உங்களுக்கு வேலை..."

"நீங்க பேசுறதை பார்த்தா உங்களால கண்டுபிடிக்க முடியலைங்கற மாதிரி தெரியுது."

"அவங்களப்பத்தி மட்டுமில்ல சிவகுமார். இந்த காட்டுல பல மர்மங்கள். அதுல நம்மால எதையுமே கண்டு பிடிக்க முடியாது. இங்க நாம ஒரு பொம்மை. நாம அதி காரத்தை காட்ட முயன்றா, நம்மை இந்த காடு பெரிய முட்டாளா ஆக்கிடும். நான் ஒரு தடவை இல்ல, பல தடவை பெரிய முட்டாளா ஆகியிருக்கேன்."

"ரொம்ப பெக்கூலியரா இருக்கே?".

"அதுக்கு மேல ஒரு வார்த்தை இருந்தா அதை சொல்லுங்க. பை த வே நீங்களும் சிவசிவா, கிருஷ்ணா, ராமான்னா உங்களுக்கு ஒரு பிரச்னை கிடையாது. ஆனா பொழுது போகுறது அவ்வளவு கஷ்டம். பார்த்துக்குங்க..." - காளிமுத்து புறப்பட காலெடுத்தார்.

"ஒரு நிமிஷம்..."

"என்ன சிவகுமார். இன்னும் ஏதாவது தெரியணுமா?"

"இல்ல... இந்த வானத்து மனுஷங்கள பார்த்தேன்னு சொன்னீங்களே, அவங்க எப்படி நடந்துகிட்டாங்க?"

"அது ஒரு வேடிக்கை, நான் அவங்கள பார்த்தப்போ அவங்க கிரிக்கெட் விளையாடிக்கிட்டு இருந்தாங்க. என்னையும் விளையாட கூப்பிட்டாங்க."

"என்ன காளிமுத்து சொல்றீங்க_ வானத்து மனுஷங்கள நான் சினிமால வர்ற மாதிரி ஒரு டைப்பான காஸ்ட்யூம்ல, கற்பனை பண்ணி வெச்சிருக்கேன். நீங்க கிரிக்கெட் விளையாடிக்கிட்டு இருந்தாங்கன்னு சொல்றீங்களே. இடிக்குதே?"

"இடிக்குதா, தலையே சுத்தும். நான் பார்த்தபோது அவங்க கிரிக்கெட் வீரர்கள். நீங்க பார்க்கும்போது அவங்க ராணுவ வீரர்களா இருக்கலாம். இல்ல இடுப்புல வேட்டியோட விவசாயிகளா தோட்டம் போட்டுக்கிட்டு இருக்கலாம். யார் கண்டது?"

"அப்படி அவங்களுக்கு ஒரு பர்மனென்ட் காஸ்ட்யூமே கிடையாதா?"

"அப்படிதான் நான் நினைக்கிறேன். பை த வே நான் புறப்படுறேன். பஸ் ஸ்டாண்டுல ஒரு பஸ் தான் இந்த காட்டுக்கு வெளியே சர்வீஸ்ல இருக்கு. அதை மிஸ் பண்ணிட்டா திரும்ப நாளை சூலை வரை நான் இங்கேதான் இருக்கணும்."

- காளிமுத்து இதற்கு மேல் கேள்விகள் கேட்காதீர்கள் என்பது போல கூறி விட்டு புறப்பட்டுவிட்டார்.

வெளியே கோவிந்தன் வன இலாகாவின் ஜீப்போடு காத்திருந்தான். காளிமுத்துவின் பெட்டி படுக்கைகள் அதில் இருந்தன. காளிமுத்து வந்து காரில் ஏறிக் கொள்ள, சிவகுமார் இறுகிய முகத்தோடு கை அசைக்க, ஜீப் கிளம்பியது.

கிளம்பிய ஜீப் சில அடிகள் சென்ற நிலையில் நின்றது. எதனாலோ காளிமுத்து கீழே இறங்கினார். சிவகுமாரும் வெளியே வந்தார்.

இருவரும் திரும்பவும் நெருங்கினார்கள்.

"என்ன காளிமுத்து?"

"ஒரு முக்கியமான விஷயத்தை சொல்ல மறந்துட்டேன்."

"சொல்லுங்க..."

"இந்த காட்டுல தோள்ல ஒரு பிணத்தோட ஒரு மனுஷன் நடமாடிக்கிட்டு இருக்கான். அவனை இந்த காட்டு ஜனங்க அகோரசாமின்னு சொல்றாங்க!"

"என்னது. தோள்ல பிணத்தோட ஒரு மனுஷனா?"

"ஆமாம். உங்க கண்லயும் பட லாம். என் கண்ணுலயும் பட்டான்! ஆனா அவனை என்னால பிடிக்கவே முடியல. அவனை இந்த காட்டு ஜனங்க சாமியாக்கிட்டாங்க. என்னால அப்படி நினைக்க முடியல. சாமி எதுக்கு தோள்ல பொணத்தோட அலையணும்?"

"அப்ப அவன்?"

"அவன் நிச்சயமா ஆசாமிதான். மிச்சத்தை நீங்க கண்டு பிடிங்க. பைதவே அந்த அகோர சாமி பத்தி ஒரு கம்ப்ளைண்டும் கிடையாது. ஆகையால நீங்க ஒரு டிடெக்டிவா இதை செய்யத் தேவையில்லை. பர்சனல் இன்ட்ரஸ்ட்டுல அவன் யார்ன்னு கண்டுபிடிச்சாதான் உண்டு. ஆல் த பெஸ்ட்! என்ன கேட்டா நல்லா ரெஸ்ட் எடுங்க. அதிகம் அலையாதீங்க. ஏன்னா கம்ப்ளைண்டே இல்லாத காடு இது."

காளிமுத்து திரும்பவும் ஜீப்புக்குள் ஏறிக் கொள்ள ஜீப் புறப்பட்டது. சிவகுமாரிடம் சற்று உறைந்த நிலை.

கெஸ்ட் ஹவுசுக்குள் சாமான்கள் வரிசையாக இறக்கி அடுக்கி வைக்கப்பட, வள்ளியம்மை அதை மேற்பார்வை செய்து கொண்டிருந்தாள். சாமான்களோடு வந்தவர்களே அடுக்கி வைத்து விட்டு வந்து, 'நாங்க கிளம்பறோம்' என்பது போல பார்த்தனர்.

"ஐயாவை பார்த்து பணத்தை வாங்கிட்டு போங்க..." என்றவள் முன் சிவகுமாரே வந்து கொண்டிருந்தார். வந்தவர் அவர்களிடம் கூலியை தர அவர்கள் புறப்பட்டனர்.

"என்ன வள்ளியம்மை, சாமானை எல்லாம் செட் பண்ணிட்டியா?"

"ஏதோ முடிஞ்ச அளவு வெச்சிருக்கேன். எல்லாத் தையும் சரியா செட் பண்ண ஒரு வாரம் ஆகும்!"

"அதான் தெரிஞ்ச விஷயமாச்சே. போகட்டும், ஒரு நல்ல காபி போட்டு தரமுடியுமா?"

"அது சரி. இப்பதான் வந்து இறங்கியிருக்கோம். பாலுக்கு எங்கே போக?" என்று வள்ளியம்மை கேட்க, "நாங்க போய் கொண்டு வர்றோம்மா" என்றபடியே வந்தனர் இருசனும், நீலியும்.

"நீங்க இன்னும் போகலையா?"

"எப்படிங்க போவோம். நீங்க போன்னு சொல்லலியே" என்றாள் நீலி.

"அப்ப சொன்னாதான் போவீங்களா?" வள்ளியம்மை சிரித்தபடியே கேட்டாள்.

"அதானேங்க மரியாதை..."

"சரிதான், சரி இப்ப சொல்றேன் போய் பால் கொண்டு வாங்க..."

"இந்த நேரம் மாட்டுப்பால் கிடைக்காதுங்க. இந்த மலை குளிருக்கு பசுமாடுங்க தாங்குறதில்ல. அதனால வரை யாட்டு பால்தான் கிடைக்கும். கொண்டு வரட்டுமாங்க?"

"வரையாட்டுப்பாலா. அப்படின்னா?"

"வரையாடுன்னு ஒரு ஆடு இருக்குது. அதோட பாலுங்க...

"சரி கொஞ்சம் வாங்க. அதுல காபி எப்படி இருக்குன்னு பார்ப்போம்" என்றாள் வள்ளியம்மை.

அவர்கள் விலக சிவகுமார் தீவிர சிந்தனையோடு ஹாலின் நாற்காலியில் அமர்ந்தார்.

"அந்த ஆபீசர் போயிட்டாருங்களா?'

"ம்..."

"அவர் இங்க தனியாதான் இருந்துருக்கார் போல இருக்கே?"

"ஆமாம்"

"எனக்கு இந்த மலைக்காட்டை ரொம்ப பிடிச்சிருக்குங்க. கிளைமேட்டும் எவ்வளவு நல்லா இருக்கு பார்த்தீங்களா?" வள்ளியம்மை கேட்க, வாசற்புறம் ஒரு உருவம் வந்து நின்றது. தலைக்கு முக்காடு போட்டிருந்தது. யார் என்று நெருங்கி சென்று பார்த்த வள்ளியம்மை வீல் என்று அலறத் தொடங்கினாள்.

3

'திருவிளையாடல் புராணத்தில் ஒரு கதை உண்டு. தேவர்களின் தலைவனான இந்திரன் தனது தேவசபையில் ரம்பை, ஊர்வசியின் நாட்டியத்தைப் பார்த்துக்கொண்டு உல்லாசமாக இருக்கும்போது, தேவர்களின் குருவான வியாழ பகவான் வருகிறார். ஆனால், இந்திரன் வியாழ பகவானை வரவேற்று மரியாதை செலுத்தாமல், நாட்டியமே கண்ணாக இருக்கிறான். இதனால் மனம் வருந்தும் வியாழபகவான் இனி இந்த இந்திரசபை பக்கமே வரமாட்டேன் என்று கூறிவிட்டு சென்று

விடுகிறார். இதனால் இந்திரலோகத்தை இருள் சூழ்கிறது. இந்திரனும் தன் தவறை உணர்ந்து பரிகாரம் செய்யத் தயாராகிறான். அவனுக்கான பரிகாரம் பூவுலகில் வனம் ஒன்றில் இருப்பதாகவும், அது சிவலிங்க வடிவில் உள்ளதாகவும் கூறப்பட, இந்திரன் சாபமுற்று கருத்த உடம்போடு பூவுலகில் உள்ள வனங்களுக்குள் தன் விமோசனத்துக் கான சிவலிங்கத்தை தேடி அலைகிறான். அப்படி அவன் அலைந்தபோது, தாணுமாலய வனமும் அதில் ஒன்றாகிறது. இந்த வனத்து பொய்கை யில் நீராடிய அவன் உடலில் ஒளி ஏற்படுகிறது. அப்போது வானில் அசரீரியும் ஒலிக்கிறது. 'இந்திரா, நீ விமோசனத்தை நெருங்கிவிட்டாய். உன் வனப்பயணம் தொடரட்டும்' என்கிறது அந்த அசரீரி. இந்திரன் மகிழ்கிறான். அப்போது அவனைக் காண அவனது இந்திரலோகத்தைச் சேர்ந்த கற்பகமரம் முதல் பாரிஜாதமரம் வரை உள்ள எல்லா விருட்சங்களும் தாணுமாலய வனத்துக்குள் வந்து நிற்கின்றன!'

வள்ளியம்மையின் அலறல் சத்தம் சிவக்குமாரை பீதிக் குள்ளாக்கியது. வேகமாக ஓடி வந்தவர், வள்ளியம்மையை நெருங்கி, "என்னாச்சு வள்ளியம்மை?" என்று கேட்க, வள்ளி யம்மை நடுங்கியபடியே எதிரில் கைகாட்டினாள்.

அவள் விரல் காட்டிய திசையில் ஒருவன் கறுத்த போர் வையை தலையைச் சுற்றி போர்த்திக் கொண்டு, 'கும்பிடு றேங்க' என்றான். அப்படி அவன் சொன்னபோது, அவ னுடைய முகத்தின் ஒரு பகுதிதான் தெரிந்தது. மறுபகுதியை போர்வை மறைத்துக் கொண்டிருந்தது.

"ஆமா இந்த ஆளைப் பார்த்தா நீ சத்தம் போட?"

"மு... மு... முகத்தை நல்லா பாருங்க" என்றாள் வள்ளியம்மை. குரலில் நடுக்கம். சிவக்குமார் அவன் முகத்தை உற்றுப் பார்த்திட, அவனும் மறைத்திருந்த போர்வை முக்காட்டை விலக்கினான். அடுத்த விநாடி சிவக்குமாரின் முகமும் அதிர்ச்சிக்கு ஆளாகியது.

எதிரில் நின்றபடி இருந்த போர்வை மனிதனின் முகத்தில் ஒரு பாதிக்கு சதையே இல்லை. பல்வரிசையின் கடை வாய்வரை அப்பட்டமாக தெரிந்தது. வள்ளியம்மை அருவருப்போடு முகத்தை திருப்பிக் கொள்ள, சிவக்குமார் அவனை விசாரிக்கத் தொடங்கினார்.

"யாருய்யா நீ?"

"என் பேர் கந்தையய்யனுங்க. சமையக்காரனுங்க..."

"சமையல்காரனா...? நான் வேணும்னு சொல்லலியே..."

"முந்தி இருந்த ஐயாவுக்கு நான்தாங்க சமைச்சு போட்டேன். அதான் உங்களையும் பார்க்க வந்தேன்."

"காளிமுத்து உன்னைப் பத்தி எதையும் சொல்லவே இல்லையே?"

"நான் கீழ் அடிவாரத்தை சேர்ந்தவங்க. இந்த காட்டுல சுத்தற கரடிங்க கிட்ட ஒருநாள் சிக்கிட்டேன். அதோட கட்டிப் புரண்டு சண்டை போட்டப்ப ஏற்பட்ட காயத்துல தாங்க முகம் இப்படி ஆகிப்போச்சு. ஒரே அப்பா அப்பி அப்படியே கன்னத்து சதையை பிச்சு தின்னுப் புடுச்சுங்க. அப்பால காட்டுவாசிங்க பார்த்துட்டு ஓடிவந்து கரடிகிட்ட இருந்து காப்பாத்தினாங்க. மூலிகை வைத்தியர் நரசிம்மையாங்கிறவர்தான் உயிரை காப்பாத்திக் கொடுத்தார்.

உசுரு பொழைச்சுட்டேங்க. ஆனா என்னைப் பாக்க பிடிக்காததால யாரும் எந்த வேலையும் தரமாட்டேனு சொல்லிடுறாங்க. காளிமுத்தையா தான் பரிதாபப்பட்டு சமையல்காரனா ஏத்து கிட்டார். காட்டுக்குள்ள எங்க போனாலும் துணைக்கு கூட்டிகிட்டும் போவார்" -

கந்தையன் சொல்லி முடித்ததில் சிவக்குமாருக்கு தெரிய வேண்டிய அவ்வளவும் தெரிந்து விட்டது. சிந்தனையோடு திரும்பி வள்ளியம்மையை பார்த்தார். அவளிடம் அருவருப்பு இன்னமும் விலகியிருக்கவில்லை.

"அந்தாளை முதல்ல போகச் சொல்லுங்க" என்றாள் அருவருப்பு விலகாமல். அவரும் திரும்பினார்.

"சரிப்பா நீ இப்ப கிளம்பு. நாளைக்கு வா. நான் உனக்கு இங்க வேலை இருக்கா இல்லையான்னு சொல்றேன்."

"ஐயா, தயவு பண்ணி வேலை போட்டுக் கொடுங்கய்யா. நீங்க மட்டும் இப்ப இங்க வராம இருந்திருந்தா என் வேலையும் போயிருக்காது. உங்களால என் வேலை போச்சுன்னு இருக்க வேண்டாம்யா" கந்தையன் உருக்க மாக பேசினான்.

"நான்தான் நாளைக்கு வான்னு சொன்னேன்ல" என் றார் சிவக்குமார்.

அவனும் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு கிளம்பினான். கிளம்பினவன் திரும்ப வந்தவனாய், "ஐயா ஒரு விஷயங்க..." என்றான்.

"என்னய்யா?"

"இந்த வீட்டுப் பின்புறத்துல ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால யானை மந்தை அமைச்சிருக்குங்க. அங்க ஒரு பத்து பதினைஞ்சு யானைங்க கிடக்குதுங்க. அதுல சில யானைங்க அப்பப்ப மேல ஏறி வந்துடும். வந்தா சும்மா இருக்காதுங்க. பயங்கரமா கத்தி சத்தம் போடும். அப்ப வேட்டு கொளுத்திப் போட்டா ஓடிடுங்க. தப்பித்தவறி கூட அதுக்கு வெல்லம் அரிசின்னு எதையும் கொடுத்துடக் கூடாது. கொடுத்துப் பழகிட்டா அவ்வளவுதான். ஞாபகத் துல வெச்சுக்குங்க..."

போகிற போக்கில் கந்தையன் சொன்னது வள்ளி யம்மையை மேலும் உலுக்கிவிட்டது.

"என்ன வள்ளியம்மை, ரொம்ப பயந்துட்டியா?" என்றபடி ஹாலில் கிடந்த வயர்நாற்காலியில் உட்கார்ந்தார் சிவக்குமார்.

"பயப்படல, அருவருப்பா இருக்குங்க."

"பாவமா இருந்துச்சு எனக்கு, பேசாம வேலைக்கு வெச்சுப்போமே..."

"ஐயோ, ஒரு தடவை பார்க்கவே எனக்கு பிடிக்கல. இதுல தினமும் இவன் முகத்துல விழிக்கவா?"

"போகப்போக பழகிடும் வள்ளியம்மை. நான் ஏன் சொல்றேங்கிறதையும் புரிஞ்சுக்க. இந்த மாதிரி புது இடத்துல தெரிஞ்ச நபர் ஒருத்தர் கூட இருக்கிறது நல்லது."

"அதுக்கு நான் அந்த மலை ஜாதிப் பொண்ணை கூட வெச்சுக்கறேன். சுறுசுறுன்னு வேற இருக்கா."

"ஓ, நீ அப்படி வர்றியா?" சிவக்குமார் கேட்டு முடிக்க, இருசனும் நீலியும் ஆட்டுப் பாலுடன் வந்து நின்றனர். அழகிய மண்கலயத்தில் பால் நுரை பொங்க காட்சி தந்தது வள்ளியம்மையின் கண்களும் மலர்ந்தன.

"அடடே, அதுக்குள்ள பாலோட வந்துட்டியே..."

"அட இது என்னம்மா பெரிய விஷயம். வரையாட்டை பிடிக்கிறதுதான் கஷ்டம். பிடிச்சுட்டா ஒரு வண்ணயம் பால் நிச்சயம்..."

"வண்ணயமா... அப்படின்னா?"

"ஓ, நான் எங்க பாசைல பேசிட்டேன். அதாவது இந்த கலயம் நிறைய பால் நிச்சயம்னேன்."

"ஆமா, தினசரி எனக்கு இப்படி பால் கிடைக்குமா?"

"கிடைக்கும்மா, ஆனா வேண்டாம்மா!"

"அவசரத்துக்கு இந்த காட்டுல எதையும் செய்துக் கலாம். வாடிக்கையா மட்டும் செய்யக் கூடாது. அப்படி செஞ்சா அகோரசாமி தண்டிச்சிடும்."

"அகோரசாமியா, புதுசா இருக்கே இந்த பேர்?"

"இந்தக் காட்டுல உசுரோட நடமாடுற சாமிங்க அது. சுத்தபத்தமா ஒழுங்கா இருக்கிற வரை கண்ணுல படாது. தப்பு பண்ணா தோள்ல பொணத்தோட எதிர்ல வந்து நிக்கும். அப்பால நாம பொணமாவோம். அதோட தோள்ல கிடந்த பொணத்தை தூக்கி போட்டுட்டு, நம்பள பொணமாக்கி தோள்ல போட்டுகிட்டு போய்கிட்டே இருக்கும்."

இருசன் சொன்னது சிவக்குமாரை அதிர்ச்சிக்கு மாற்றியது. அப்படியே ஜீப்பில் ஏறும் முன் காளிமுத்து சொல்லிவிட்டுச் சென்றதும் நினைவுக்கு வந்தது. ஏற்கனவே கந்தையனைப் பார்த்து கிலியோடு இருந்த வள்ளி யம்மையும் அதைக்கேட்டு அதிகபட்ச அதிர்ச்சியை முகத்தில் காட்டினாள்.

"என்னங்கய்யா அப்படியே வாயை பொளந்துட்டீங்க. அகோரசாமியை பத்தி நீங்களும் கேள்விப்பட்டிருப் பீங்களே..."

"உம், கேள்விப்பட்டேன். ஆனா நீ சொல்ற மாதிரி அகோரசாமி கடவுள் இல்லையய்யா. ஒரு கிரிமினல் ஆசாமி."

"ஐயோ அப்படி எல்லாம் தப்பா சொல்லாதீங்க. அப்புறம் இன்னிக்கே அந்த சாமி உங்க முன்னால வந்து நின்னு உங்களை பொணமாக்கிட போகுது."

"ஓ, இப்படி பேசினாலே போதும்மா. அந்த சாமி வந்துடுமா?"

"என்னய்யா பயப்படாம திரும்பவும் தெம்பாவே பேசுறீங்க. வேண்டாம்யா... இந்த பேச்சை இதோட விட் ருங்க..."

இருசன்தன் பயத்தை வெளிக்காட்டியபடியே நீலியைப் பார்த்தான். அவளும் தலையை ஆட்டி ஆமோதித்தாள்.

"பயப்படாத இருசா, உங்களுக்கு படிப்பறிவில்லாத தால பல விஷயங்களை எப்படி பார்க்கணும், எப்படி அணுகணும்னு தெரியல. அதான் கொலைகாரனை எல்லாம் சாமியா நினைக்கிறீங்க. போகட்டும் விடு. அந்த அகோர சாமியை நான் பார்த்துக்கிறேன். அப்புறம் நீ எனக்கு இன் னொரு உதவியை செய்யணும்..."

"சொல்லுங்கய்யா, என்ன செய்யணும்?"

"உன் மனைவி இங்க என் வீட்டுல எல்லா வேலையும் செய்யணும். நீயும் கூட எனக்கு உதவியா இருக்கலாம், இங் கேயே தங்கிக்கலாம். சம்மதமா?"

சிவக்குமார் நேராக விஷயத்துக்கு வரவும், இருவருமே ஒருவரை ஒருவர் மருட்சியோடு பார்த்துக் கொண்டனர்.

"என்ன யோசனை?"

"இல்லய்யா அது மட்டும் முடியாதுங்க."

"ஏன் அப்படி சொல்ற? நான் நல்ல சம்பளம் தர்றேன். இங்கேயே நீங்க சாப்ட்டுக்கலாம்."

"அதெல்லாம் எதுவுமே ஒரு விஷயமில்லீங்க. எங்க மலைல நாங்க எதைச் செய்தாலும் எங்க தலைக்கட்ட கேட்டுத்தாங்க செய்வோம். மலைய மூப்பன்னு எங்களுக்கு ஒரு தலைவர் இருக்காருங்க. எங்களுக்கும் நிறைய சட்ட திட்டங்கள் உண்டுங்க. நாங்க இந்திர வம்சம்னும் ஒரு பேச்சு உண்டுங்க. இந்திரவம்சத்துல வந்தவங்க வெளிய தங்கவோ? வெளியாட்கள் கிட்ட கூலி வாங்கவோ கூடாதுங்க. எங்களை இந்த மலைக்காடே நல்லா பாத்துக்குங்க."

இருசன் சொன்னதில் நிறையவே சங்கதிகள்.

"அப்ப நீ என்கிட்ட வேலை செய்யமாட்ட...?"

"செய்ய மாட்டேங்கிறது இல்லீங்க. செய்யக் கூடா துங்க. எங்க சாதி கட்டுப்பாடுங்க."

"என்ன கட்டுப்பாடோ... சரி உன் தலைக்கட்டு என்ன பேர் சொன்ன? ஆங்... மலைய மூப்பர்!"

"ஆமாங்கோ... அதாங்க அவர் பேரு. நூறு வயசு ஆகப் போகுதுங்க... ஆனா இப்பக்கூட நல்ல மரமேறி கனி பறிப் பாருங்க..."

"நூறு வயசுலையா?"

"அட நீங்க வேற... நூத்தி பத்து வயசுல இருளாயின்னு ஒரு கெழவி இன்னும் பல்லு போகாம தேங்கா மட்டையை பல்லாலேயே உரிச்சு எடுக்கிறாங்கோ. எங்க உடம்பெல்லாம் கல்லு மாதிரிங்கோ. பொறந்த கொழந்தைக்கே நாங்க மூணு பழத்தையும் திங்கக் கொடுப்போங்க..."

"மூணு பழமா?"

"ஆமாங்கோ... மாம்பழம், பலாப்பழம், செவ்வாழை பழங்க. பொறந்த கொழந்தையை பார்க்க போகும்போது மூணு பழத்தை தென்ல பிசைஞ்சு கொண்ட போய் அது வாய்ல ஊட்டிவிடணும்கிறது எங்க சாதி வழக்கமுங்க..."

இருசன் சொல்லச் சொல்ல சிவக்குமாருக்கும், வள்ளியம்மைக்கும் வியப்பு அதிகமாகிக் கொண்டே போனது.

"இப்ப கூட நேரமாயிடுச்சுங்க. இருட்டுறதுக்குள்ள நாங்க எங்க குடிக்கு திரும்பணுங்க. இல்லாட்டி தெய்வ குத்தமாயிடும். நீங்களும் காபி போட்டு குடிச்சுட்டு ஓய் வெடுங்க. நாங்க நாளைக்கு வாரோம்..."

இருசன் சொல்லிவிட்டு நீலியுடன் புறப்பட்டு விட் டான். அவர்கள் இருவரும் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்தபடியே நின்றாள் வள்ளியம்மை.

"என்ன வள்ளியம்மை, இந்த மலைக்காடு இப்பவே கண்ணைக் கட்டுதா...?"

"கண்ணைக் கட்டலங்க. புதுசா ஒரு உலகம் தெரியும் போல தெரியுது..."

"அகோரசாமி விஷயம் உனக்கு பயத்தை தரலையா?"

"இல்லீங்க, தப்பு பண்றவங்கதானே பயப்படணும்."

"பார்றா... நான் அதை சாமியே இல்லேங்கிறேன். நீ அதை நம்பிட்ட மாதிரி பேசுறியே..."

"அது சாமியா ஆசாமியாங்கிற கவலையை நீங்க பட்டுக்கோங்க. எனக்கென்னமோ நம்ம பிள்ளையில்லா கொடுமையை இந்த மலை தீர்த்துடும்னு தோணுது..." வள்ளியம்மை அப்படிச் சொல்லவும், சிவக்குமாருக்கு சுருக் கென்றது. அங்கு தொட்டு இங்கு தொட்டு இறுதியில் வள்ளி யம்மை குழந்தையிடம் வந்து நின்றதில் லேசாக கொஞ்சம் வலி. திருமணமாகி பத்து வருடமாகியும் பிள்ளை இல்லை என்றால் வலிக்காதா என்ன?

அப்போது செல்போனிலும் அழைப்பொலி.

காதைக் கொடுத்தார் சிவக்குமார். மறுமுனையில் அவர் தம்பி நட்ராஜ்!

"ஹலோண்ணே...!"

"நட்ராஜ் நீயா?"

"நானேதான்... என்ன அந்த காட்டுக்கு போய் செட்டில் ஆயிட்டீங்களா?"

"ஆகிக்கிட்டே இருக்கோம்..."

"நானும் வந்துக்கிட்டே இருக்கேன். எப்படி இருக்கு அந்த பாரஸ்ட்? என்னோட டாக்குமென்ட்ரி பிலிம் மேக்கிங்குக்கு தீனி போடுமா?"

"போடுமாவா? நீ மட்டும் வந்தே, இந்த காட்டை விட்டே போகமாட்டே. உன் அண்ணிக்கும் இந்த காடு பிடிச்சு போச்சு. ஆனா என் வரையில இந்த மலைக்காடு ஒரு பெரிய மர்மதேசம்!"

4

தன் எதிரில் வந்து நின்ற அந்த அதிசய விருட்சங்களைப் பார்த்து இந்திரன் பெரிதும் மகிழ்ந்தான். அவைகளோ, நாங்கள் எங்கள் அரசனான நீங்கள் இருக்கும் இந்த வனத்திலேயே தங்கிவிட விரும்புகிறோம் என்றன. இந்திரன் அவைகளிடம், விரைவில் என் சாபம் நீங்கிவிடும் - சாப விமோசனமுற்ற நிலையில் நான் இந்திரலோகத்துக்குத் திரும்பி விடுவேன். எனவே நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். பூ உலகம் என்பது பதினான்கு லோகங்களில் மனிதர்கள் பிறந்து வாழும் ஒரு உலகம். மனிதப் பிறப்பு என்பது கர்மவினையை அடிப்படையாகக் கொண்டது. மனிதர்கள் வாழ்வில் ஆசை, பாசம் போன்ற உணர்வுகளுக்கு மிகவே இடமுண்டு. எனவே அப்படிப்பட்ட மனிதர்கள் உங்களைப் பற்றி அறிந்தால் உங்களை விடமாட்டார்கள். நீங்களும் அவர்களிடம் சிக்கி, மோசமான பதில் விளைவுகளுக்கு ஆளாக நேரிடும். எனவே நீங்கள் அமர லோகம் நோக்கி செல்வதே நல்லது என்றான். அவைகளும் சரி என்றன. அதே நேரம் இந்த வனத்தில் பூஉலகில் இல்லாத ஒரு சிறப்பாக தாணுமாலய விருட்சம் என்னும் ஒரு விருட்சம் உள்ளபடியால், இந்த வனம் மும்மூர்த்திகளின் ஒரு ஷேத்திரம். எனவே இங்கே நாங்கள் மானிடர்

கள் கண்களில் படாதபடி அவ்வப்போது வந்து செல்வோம். அப்படி வரும்போது தாணுமாலய விருட்சத்தை நாங்கள் எங்கள் தாயாக கருதி வணங்குவோம் என்றன.

அதனாலேயே இன்றும் கற்பக விருட்சமும், பாரிஜாத மரமும் இந்த வனத்தில் வந்து செல்வதாக கருதப் படுகிறது. மனிதர்கள் தங்கள் கால்களால் நடந்து வருவது போல கற்பகமரம் பூமிமேல் நடந்து வரும் அழகை சில அதிர்ஷ்டம் செய்த சித்த புருஷர்கள் பார்த்திருப்பதாகவும் கருதப்படுகிறது.

குறிப்பாக பவுர்ணமி இரவுகளில் அந்த கற்பகமரம் நடமாடுவதை காணலாம் என்பது தாணுமாலயக் குடிகளின் நம்பிக்கை.

- தாணுமாலயவன சரிதம்.

"இந்த மலையில சிவன், விஷ்ணு,
பிரம்மான்னு மூணு பேர் மரமா
இருக்காங்க. அது போக
பவுர்ணமிக்கு பவுர்ணமி
கற்பகமரம் இங்க நடமாடுது..."

"அந்த காட்டுக்குள் கற்பகமரம் .
திரிவதை நம்புகிறான். அதை ஒரு
நாளாவது பார்த்து விட வேண்டும்.
அதைப் பார்த்துவிட்டால்..."

சிவக்குமார் மர்மதேசம் என்று கூறவும், "வெரி இண்டர்ஸ்ட்டிங் அண்ணா... நானும் எவ்வளவு நாளைக்கு உப்பு பெறாத டாக்குமென்ட்ரிகளையே எடுத்துக்கிட்டு இருக்கிறது? உடனே கிளம்பி வரேன். அந்த மர்மதேசத்து காட்சிகள் என் கேமராவுக்கு விருந்தாகட்டும்" என்றான் நட்டி என்கிற நட்ராஜ்.

"நோ... நோ... நீ ஒண்ணும் இங்க வர வேண்டாம். நான் கொஞ்சம் செட்டில் ஆயிட்டு சொல்றேன். அப்புறமா வந்தா போதும். இந்த மர்மங்களும் எப்படிப்பட்டதுன்னு எனக்கு தெளிவாயிடும்" என்றார் சிவக்குமார்.

"அண்ணா, நீங்க உங்க வேலையை பாருங்க. நான் என் வேலையை பார்க்கிறேன். நானும் சின்னக் குழந்தை இல்லை. ஐ ஹேவ் கம்ப்ளீட்டட் த்ர்ட்டி பைவ் இயர்ஸ். கல்யாணம் பண்ணியிருந்தா எனக்கு ஹைஸ்கூல் போற பையன் இருப்பான். அண்டர் ஸ்டாண்ட்...?" என்ற பதிலோடு நட்டி பேச்சை முடித்துக் கொண்டான்.

ஆனால், நட்ராஜ் தனக்கு பிள்ளை இருக்கும் என்று சொன்னது மனதைக் கொஞ்சம் கிள்ளி விட்டிருந்தது. திருமணமே ஆகாத நிலையில் பிள்ளைக்கெங்கே செல்வது? நட்டி வரையில் ஒன்றுக்கு மூன்று பெண்களைப் பார்த்தும் இறுதியில் கை கூடி வரவில்லை. முதல் பெண் ஏற்கனவே ஒருவனைக் காதலிக்கும் கதையை சொல்லி வழிவிடுமாறு கேட்டுக் கொண்டாள். இரண்டாவது பெண் நட்டியைப் பார்த்த மறுநாளே விபத்தில் இறந்து போனாள். மூன்றாவதாக பார்க்கப்பட்டவள் என்ன காரணத்தாலோ நட்டியை பிடிக்கவில்லை என்று கூறிவிட்டாள். அதற்கு பிறகு நான் காவதாக ஒரு பெண்ணைப் பார்க்க சிவக்குமார் முயன்றார். ஆனால் நட்டி தடுத்துவிட்டான்.

"வேண்டாம்னா, எனக்கு கல்யாண ராசியில்லை' என்று. நட்டிக்கு கல்யாண ராசியில்லை என்றால் எனக்கு பிள்ளை ராசியில்லை.

நட்டி பேசி முடிக்கவும் நட்டி தொடர்பான நினைவுகள் மேலெழும்பி இறுக்கமாய் ஒரு மவுனம் வந்து சிவக்குமாரைக் கட்டிக் கொண்டது. அப்போது ஆட்டுப்பாலில் காபி போட்டுக்கொண்டு வந்த வள்ளியம்மை சிவக்குமாரின் இறுகிய முகத்தை வைத்தே என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துவிட்டாள்.

"இந்தாங்க காபி, என்ன போன்ல நட்ராஜ் பேசினானா?"

"ம்..."

"இங்கே கிளம்பி வரேன்னு சொன்னானா?"

"ம்..."

"நீங்க வேண்டாம்னு சொன்னதை வெச்சு கேட்டேன். அவன் வரட்டுங்க. இந்த காட்டுல அவனுக்கு ஒரு நல்லது நடக்கலாம் இல்லையா?" - வள்ளியம்மை பளிச்சென்று கேட்டது சிவக்குமாருக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவும் இருந்தது.

"என்ன அப்படி பார்க்கிறீங்க?"

"பாக்காம...? நான் இதை ஒரு மர்மதேசம்னு சொல்லியிருக்கேன். நீ என்னடான்னா இதை ஏதோ புனித க்ஷேத்ரம் மாதிரி நினைக்கிற போல இருக்கே..." கேட்டபடியே காபியை உறிஞ்சினார்.

"ஆமாங்க, நான் அப்படித்தான் நினைக்கிறேன். அதனாலதான் உங்களையும், இங்க ட்ரான்ஸ்பரை கேட்டு வாங்கச் சொன்னேன்."

"பைத்தியம், இப்பதான் காளிமுத்து இந்த காட்டை பத்தி கதை கதையா சொல்லிட்டு போறாரு. அகோரசாமி அப்படி இப்படின்னு இங்கேயும் நிறைய டுபாக்கூர் விஷயங்கள் இருக்கிறதா நான் நினைக்கிறேன். ஆனா நீ நேர்எதிரா நினைக்கிறியே."

"நான் நினைக்கல. இரண்டு மாதம் முந்தி நான் ஒரு கோயிலுக்கு போன இடத்துல ஒரு ஜடாமுடி சாமியார் வந்திருந்தார். அவர் அங்கே எல்லாருக்கும் கதை சொன்னார். அப்படி அவர் சொன்னதுதான் தாணுமாலய வனசரிதம். இந்த மலையில சிவன், விஷ்ணு, பிரம்மான்னு மூணு பேர் மரமா இருக்காங்க. அது போக பவுர்ணமிக்கு பவுர்ணமி

கற்பகமரம் இங்க நடமாடுது. எல்லாத்துக்கும் மேலாக இங்க ஒரு பொய்கை இருக்குங்க. இந்திமடுன்னு அதுக்கு பேர்ச அதுல குளிச்சா தீராத நோயெல்லாம் தீர்ந்துடுமாம். அவர் சொல்லச் சொல்ல எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?" - வள்ளியம்மை சொல்லி முடிக்கவும் முறைத்துப் பார்த்தார். கையில் பாதி காபி அப்படியே இருந்தது.

"காபிய குடிங்க, ஆறிடப் போகுது."

"மண்ணாங்கட்டி.. வள்ளியம்மை, இப்படி எல்லாம் பொய்யான நம்பிக்கைகளை வளர்த்துக்காதே. அது நல்ல தில்ல" என்றவரின் குரலில் ஒரு கண்டிப்பு தெரிந்தது.

"இந்த கற்பகமரம், மடு இதெல்லாம் கூட பொய்யா இருக்கலாங்க. ஆனா வானத்து மனிதர்கள் இங்க நடமாடுறது உறுதி. ஊர் உலகம் வேணுமின்னா அவங்கள வானத்து மனிதர்கள்னு சொல்லலாம். என் வரைல அவங்க பதினெட்டு சித்தர்கள். அவங்கள நான் நிச்சயம் சந்திப்பேன் நீங்க வேணா பாருங்க, நான் நிச்சயம் தாயாவேன்."

- வள்ளியம்மையின் குரலில் அசாத்திய உறுதி. அந்த நொடி அவள் உறுதிப்பாட்டுக்காக மகிழ்வதா இல்லை. வானத்து மனிதர்களை சித்தர்கள் என்று கருதும் அவளது நம்பிக்கையை எண்ணி சிரிப்பதா என்று தெரியவில்லை. வன இலாகா வரையில் வானத்துமனிதர்கள் நொட்டோரியஸ் பர்சனாலிடீஸ், அவர்களை முழுமையாக அறிந்து தெரிந்து புரிந்து ஒரு அதிகாரி கூட டிபார்ட்மெண்ட்டுக்கு அறிக்கை கொடுத்ததில்லை. சிவக்குமார் புறப்பட்டபோது அவரின் சீப் 'அந்த வானத்து மனிதர்கள் பற்றி நீங்களாவது தெளிவா ஒரு அறிக்கை தர்றீங்களான்னு பார்க்கிறேன்' என்று கூறியது நினைவில் எழும்பியது. அந்த நினைவு வள்ளியம்மையை எண்ணியபடியே பெருமூச்சாக மாறியது.

வனக்குடி செல்லும் சாலை என்று எழுதியிருந்த பெயின்ட் உதிர்ந்த போர்டை ஒட்டி நின்றது அந்த மினிபஸ்.

அதிலிருந்து ஒரு தகரப் பெட்டியுடனும், குடுகுடுப்பைக் காரன் கோட்டுடனும், தோளில் அழுக்குத் துண்டுடனும் இறங்கினான் நாடிமுத்து.

நெற்றியில் விபூதி, குங்குமம், அஞ்சனமை, மஞ்சள் என்று சகலத்திலும் பொட்டு. வாயினுள் அவன் மென்ற படியே இருக்கும் வெற்றிலைப் பாக்கு.

நாடிமுத்து ஒன்றும் அதிக உயரமில்லை. இன்ச் டேப் வைத்து அளந்தால் நூற்றிமுப்பது இன்ச் இருப்பான். கிராமம் கிராமமாக போய் வளையல், ரிப்பன், பவுடர் மை என்று கொஞ்சம் நாகரீகமான ஐட்டங்களை விற்பதுதான் ஐயாவின் திருப்பணி.

அத்தனை ஐட்டங்களும் அந்த தகரப் பெட்டிக்குள் இருக்கின்றன. பெட்டியை தலைக்கு மேல் வைத்தபடி, 'நான் காற்று வாங்கப் போனேன். ஒரு கவிதை வாங்கி வந்தேன்' என்று எம்ஜிஆர் பாட்டு பாடியபடியே ஐயா காட்டுக்குள் நுழைந்தார் என்றால், மரத்து ஓணானில் இருந்து வாலாட்டி குருவி வரை அவ்வளவும் ஒரு பார்வை பார்க்கும்.

வனக்குடி ஆட்கள் அவனை கெச்சலாக சற்று கேலி யாக பார்ப்பார்கள். 'இவன் ஒருத்தன் வாரந்தவறாம ஒரு பொட்டியை தூக்கிட்டு வந்துடுறான். இவனாலேயே நம்ப பெண்டு பிள்ளைங்க கெட்டழியப் போறாங்க' என்று முணு முணுக்காத வனக்குடியர்களே இல்லை எனலாம். சிலர் அவனை தடுத்து நிறுத்தி பெட்டியை திறந்து காட்டச் சொல்லி சீண்டி விளையாடுவார்கள். நாடிமுத்து சிகரெட் பிடிப்பான். வனத்துக்குள் பிடிக்கக்கூடாது. ஆனால், அவ னால் பிடிக்காமல் இருக்க முடியாது. எனவே புதராக பார்த்து பதுங்கி அமர்ந்து தம் போடுவான். அப்படியும் புகை காட்டிக் கொடுத்து விடும். ஆரம்பத்தில் அவனை எச்சரித்த பல வனக்குடியர்கள், இப்போது நாடி முத்துவுக்கு நட்பாகி அவர்களும் தம் போடத் தொடங்கி விட்டனர்.

நாடிமுத்துவும் அன்று வியாபாரமாகத்தான் பஸ்சில் இருந்து இறங்கினான். அங்கிருந்து ஏழெட்டு மைல் நடந்தால் தாணுமாலயக் குடிகளின் நாடுகள் வரும். தங்கள் குடியிருப்பு பகுதிகளை அவர்கள் நாடுகள் என்றுதான் குறிப்பிடுவார்கள். தென்கரைநாடு, மத்திநாடு, வடநாடு, குட்டைநாடு என்று அந்த நாடுகளுக்கும் பல பெயர்கள். அவ்வளவு நாட்டையும் நடந்தேதான் சுற்ற வேண்டும். இருநூறு முன்னூறு ரூபாய்க்கு வியாபாரமானால் பெரிய விஷயம். ஆனால், நாடிமுத்து இதற்காக மட்டும் அந்த நாடுகளுக்கு வரவில்லை. அவன் நோக்கமே வேறு. அவனும் அந்த காட்டுக்குள் கற்பகமரம் திரிவதை நம்புகிறான். அதை ஒரு நாளாவது பார்த்து விட வேண்டும். அதைப் பார்த்துவிட்டால் தான் கேட்டதை அது தந்துவிடுமே, அப்புறம் குபேர வாழ்வே வாழலாமே... இதெல்லாம் அவன் அடி மனதுக்குள் இருக்கும் ரகசியமான நம்பிக்கைகள்,

அந்தக் காட்டுக்குள் வெளியாட்கள் இரவில் தங்க அனுமதியில்லை. இரவில் தங்கவேண்டுமென்றால் வனக் குடியாக மாற வேண்டும். நாடி முத்துவுக்கு தெரிந்த ஒரே குறுக்கு வழி வனக்குடி பெண்களில் எவளையாவது மடக்கி, அவள் கழுத்தில் தாலியை கட்டி விடுவதுதான். அப்படி செய்துவிட்டால் வனக்குடி தலைவர் மலையமூப்பராலும் ஒன்றும் செய்ய முடியாது. எனவே நாடிமுத்து இப்படி பல திட்டங்களோடு தான் வளையல் வியாபாரியாகவே ஆகி யிருக்கிறான். அவன் திட்டமும் ஒன்றும் பொய்யாகி விட வில்லை. வங்கி என்று ஒருத்தி அவனுக்கு வசப்பட்டு விட் டாள். அதோ அவள்தான் எதிரிலும் வருகிறாள். வங்கியைப் பார்க்கவும் நாடியின் நாடிகளில் ஒரு சிலிர்ப்பு. வங்கி நல்ல கிழங்காக இருந்தாள். அங்கங்களில் அளவுக்கு கொஞ்சம் கூடுதலான வளர்ச்சி. கவுண்டர் பெண்கள் போல கூந்தலை அள்ளி முடிந்திருந்தாள். இடுப்பில் மூங்கில் கூடை இருந்தது. நாடியைப்பார்த்து அவளும் சிரித்தாள். அப்படியே இருவரும்

மறைவாக ஒதுங்க, நாடி பெட்டியைத் திறந்து ஒரு ரோஸ் பவுடர் டப்பாவை எடுத்தான்.

"பார்த்தியா?"

"என்ன இது?"

"ரோஸ் பவுடர், போட்டீன்னா அப்படியே சேப்பா ஜொலிப்பே..."

"நெசமாவா...?"

"காட்டு, நானே போட்டு விடுறேன்."

"ஆசையை பாரு..."

"இப்படியே தொட உடாமலேயே ஆசை காட்டினா எப்படி வங்கி? கீழ ஊர் உலகத்துல வந்து பாரு கட்டி உருள்றாங்க."

"ஐய்யே, பெத்தவங்க சும்மாவா இருக்காங்க?"

"மண்ணாங்கட்டி. அவங்க உருண்டுதானே இவங்களே வந்தாங்க..."

"அதெல்லாம் தப்பு. சாமி கண்ணைக் குத்திடும்."

"அதெல்லாம் கட்டிக்கப் போறவன் தொட்டா ஒண்ணும் செய்யாது."

- நாடிமுத்து அவளை மயக்க முற்பட்டான். அப்போது அருகில் சலசலப்பு. இருவரிடமும் உடனே ஒரு நடுக்கம். யாரோ குதித்து ஓடுவது போலவும் சப்தம்.

"அய்யோ, யாரோ வர்றாங்க" வங்கியின் கண்களில் பயம். நாடிக்கும் நாடி ஒடுங்க ஆரம்பித்தது. மெல்ல எழுந்து இடுக்கு வழியாக சப்தம் வந்த திக்கைப் பார்த்தான்.

தோள் மேல் பிணத்தோடு அகோரசாமிதான் போன படி இருந்தது. நாடி அப்படியே விக்கித்து போனான்.

5

'தாணுமாலயக்குடி வனத்தில் கற்பக மர நடமாட்டத்தை பல சித்தர் பெருமக்கள் கண்டுள்ளனர். ஆனால் அது காட்டுக்குள் ஒரு இடத்தில் நிலையாக நிற்காமல், நடமாடித் திரிவதை அவர்கள் துளி கண்டு கொண்டதில்லை. அவர்கள் கண்டுகொள்ள மறுப்பதால் அவர்கள் ஆசையை தூண்டும் விதமாக கற்பகமரம் அவர்கள் எதிரில் தேடிவந்து நடமாடும். ஆனாலும் சித்தர்கள் தங்கள் கண்களை மூடிக் கொள்வார்கள்.

அதனிடம் எதை வேண்டுமானாலும் கேட்டுப் பெறலாம்தான். ஆனால், கேட்க மாட்டார்கள். கேட்பது சித்தத்துக்கு இழுக்கு என்பதே காரணம். அது மட்டுமல்ல... கேட்பதன் மூலம் சித்தம் அடங்காமல் ஆசைப்படுவது புலனாகிறது. ஆசைப் படுபவன் எப்படி நல்ல சித்தனாக இருக்க முடியும்? எனவேதான் கற்பகமரத்தை அவர்கள் கண்டு கொள்வதில்லை. ஆனால், மலைக்குடியினருக்கு கற்பகமரத்திடம் கேட்டுப் பெற நிறைய தேவை இருக்கிறது. மலைக்குடியினர் மட்டுமல்ல, அந்த வனம் பற்றி அறிந்த சித்த வைத்தியர்கள், தாணுமாலய விருட்சத்தை வணங்க வருபவர்கள் என பலரும் கற்பகமரத்தை தேடி அலைவார்கள். அதன் தரிசனத்துக்காக பவுர்ணமி அன்றே காட்டுக்குள் புகுந்து விடுவார்கள். ஆனால், அதை ஒருவரும் நெருங்கியதில்லை. ஒரே ஒரு முறை வைத்தியர் பட்டாபிராமையா என்பவர், அது கடந்து சென்றதைப் பார்த்தார். அதன் நிழலை எட்டிப் பிடிக்க அவர் முயற்சிப்பதற்குள் அது வெகு

தூரம் சென்று அவர் பார்வையை விட்டே மறைந்து விட்டது.

அந்த அரிய காட்சியை அவர் சிலரிடம் சொல்லி வியந்த போது, 'எங்கேயாவது மரம் நடக்குமாய்யா?' என்று கேட்டு ஏளனம் செய்தவர்கள் அதிகம்.

- தாணுமாலயவன சரிதம்.

"என் பின்னால வராதே. எங்க
சாதிக்காரங்க பார்த்தா உன்ன
மரத்துல கட்டி கரடிக்கு காவு
கொடுத்துடுவாங்க..."

"உனக்கு மிலிட்டரிக்கு அர்த்தம் தெரியுமா?
இதுக்கு முந்தி எங்க இருந்த? அகத்தியர்
குகை தெரியுமான்னு..."

அகோரசாமி நடந்து செல்வதைப் பார்த்து நாடிமுத்து விக்கித்துப் போய் விட்டான். பிளந்த வாயை அவனால் மூட முடியவில்லை. அவனருகில் இருந்த வங்கியும் விக்கித்துப் போய் விரித்த விழியும், வளைந்த புருவமுமாக இருந்தாள். அது கண்களைவிட்டு மறையவும்தான் அவனுக்கு உயிர் வந்தது.

"ஆத்தே... அது நம்பளை பாக்கல. பாத்திருந்தா நீதான் அதோட தோள் பொணமா மாறியிருப்ப..." என்று மெல்ல வாயைத்திறந்தாள் வங்கி.

"எப்படியோ நான் அகோரசாமியை பார்த்துட்டேன். சாமி பொய்யில்ல. அது போதும் எனக்கு..." என்றான் நாடிமுத்து.

அவனிடம் பயத்தோடு ஒரு மகிழ்ச்சியும் தெரிந்தது.

"என்னய்யா சொல்ற?"

"அகோரசாமியே கிடையாதுன்னு சில பேர் சொல்லிட்டிருக்காங்க. அது மட்டுமா, இந்த மலையோட சமாச்சாரம் எல்லாமே புளுகு சமாச்சாரம்னு பேசிக்கிறாங்களே..."

"அதனால?"

"என்ன அதனால? அதெல்லாம் நெசம்னு சொல்வேன்ல இனி?"

"அதனால நமக்கென்னய்யா லாபம்? ஊர்ல எவனோ, என்னவோ பேசினா அதுக்கெல்லாமா கெடந்து பதில் சொல்றது?"

"அது இல்ல புள்ள, அகோரசாமி இருக்குதுன்னா மத்த விஷயங்களும் இருக்கு. அதாவது இந்த கற்பகமரம், அப்புறம் வானத்து மனுசங்க. இது எல்லாமே நிசம்னு ஆவுதுல்ல?"

"அடக் கோட்டிக் கிறுக்கா! வானத்து சாமிகள நீ நம்பாம கிடந்தியா?"

"நான் எதையுமே நம்பாமத்தான் கெடந்தேன். இனி எல்லாத்தையும் நம்புவேன். வங்கி, நீ வேணா பாரு நான் கற்பகமரத்தை கட்டாயமா பாத்து, அதுகிட்ட நிறைய கேக்கப் போறேன்"

"கிழிச்ச, எங்க மூத்த பெருசாலயே அதை இன்னும் பாக்க முடியல. நீதான் பாக்க போறியாக்கும்?"

"அந்த மூப்பன் ஒரு தூங்கு மூஞ்சிப் பய. கஞ்சாவை கசக்கி மோந்துட்டு குப்புறக் கிடக்கறவனால எல்லாம் கற்பக மரத்தை பாக்க முடியாது."

"சரி, அதை பாத்தா நீ என்ன கேப்ப?"

"என்ன கேப்பேனா, சரிதான் போ. முதல்ல நான் நல்லா செவப்பாவணும்னு கேப்பேன்."

"பொறவு...?"

"கீழ டவுனுல பெருசா கடை போட காசு பணம் கேப்பேன்..."

"எம்புட்டு?"

"இப்ப பரோட்டா கடை போட்டு இருக்கிற பழனி முத்துக்கு லட்ச ரூபா பக்கம் ஆகிச்சாம்... எனக்கு கொஞ்சம் கூடப் போகும். அதனால் ஒரு ரெண்டு லட்சம் கேப்பேன்."

"பொறவு?"

"என்னா பொறவு...?"

"எனக்குன்னு மட்டும் எதையும் கேக்கமாட்டே, அப்படித்தானே?"

- வங்கி அவனை வளைத்துப் பிடித்தாள்.

அப்படியே ஒரு மெல்லிய கோபத்தோடு எழுந்து அவனைவிட்டு விலகவும் தொடங்கினாள். அவள் அப்படிக் கேட்கவும்தான் அவனுக்கு தன் தவறு புரிந்தது.

"வங்கி... வங்கி... நில்லு புள்ள... உனக்குத் தான் நான் இருக்கேனே புள்ள. அப்புறமென்ன?" என்றபடி அவனைப் பின் தொடர்ந்தவனை ஒரு இடத்தில் நின்று நோக்கியவள்,

"இப்படி எல்லாம் பேசிக்கிட்டு என் பின்னால வராதே. எங்க சாதிக்காரங்க பார்த்தா உன்ன மரத்துல கட்டி கரடிக்கு காவு கொடுத்துடுவாங்க. நான் வாரேன்" என்று மிகவேகமாக நடக்கத் தொடங்கினாள். நாடிமுத்துவுக்கு அவளது இந்த கோபம் ஒன்றும் புதிதில்லை.

"போ புள்ள போ.. நாளைக்கு பாட்டுப் பொட்டியோட வந்து உன்னை எப்படி இழுக்குறேன் பாரு..." என்று முணு முணுத்தான். அவன் பாட்டுப் பொட்டி என்று சொன்னது செல்போன் ரேடியோவை.

மறுநாள் காலை...

எட்டுமணிக்கு கூட இருள் விலகியிருக்கவில்லை. பனியும், மேகமும் காதலர்கள் பிரிக்க முடியாதபடி கட்டிக் கொண்டு கிடப்பது போல ஒன்றுடன் ஒன்று கலந்து கிடந்தன. சூரிய கதிர்களால் அந்த வனத்தின் செடி கொடி மரங்களையோ, அதைக் கடந்த தரைப்பரப்பையோ தொடவே முடியவில்லை.

மந்தமான இருளில் சிவக்குமாரும் வள்ளியம்மையும் கட்டிலில் கூட்டுப்புழுக்களைப் போல சுருண்டு படுத்திருந்தனர். சிவக்குமாருக்கு காலையில் ஜாகிங் போகும் பழக்கம் உண்டு. தூங்குவது, குளிப்பது, சாப்பிடுவது மாதிரி தன் வாழ்வோடு ஜாகிங்கை சேர்த்து விட்டிருந்தார். அவரது ஜாகிங் டைம் காலை 5 மணி. மெல்ல கண் விழித்தவர், அருகிலுள்ள தன் ரிஸ்ட்வாட்சை எடுத்துப் பார்த்தார். மணி எட்டாகியிருந்ததால் ஒரு பகீர் உணர்வு.

இவ்வளவு நேரமெல்லாம் அவர் தூங்கியதே இல்லை.

சூரிய உதிப்புக்கு முன் எழுபவனை அன்றைய நட்சத்திரமும் திதியும் கூட எதுவும் செய்ய முடியாது. இரவில் தூங்கி இரவிலேயே எழுந்து விடுபவர்களே அதிர்ஷ்டசாலிகளாகவும், வெற்றியாளர்களாகவும் திகழ்கின்றனர். இந்த கால ரகசியங்கள் தெரிந்தவரல்ல சிவக்குமார். இதைக் கடந்து அவர் அதிகாலை எழுந்து விட அவர் அப்பா, அம்மாதான் காரணம். அவர்களும் அதிகாலை எழுபவர்கள். இன்று அவர்கள் இல்லை. ஆனால், அவர்கள் பழக்கிய பழக்கம் அப்படியேதான் இருக்கிறது. இதனாலேயே சிவக்குமாரிடம் உடம்பில் சர்க்கரை, உப்பு என்கிற பாதிப்புகள் கிடையாது. எந்தப் பாகத்திலும் அளவிற்கு அதிகமான ஊளைச்சதையும் கிடையாது.

எட்டுமணி என்று அறிந்தவர், வாரிச்சுருட்டிக்கொண்டு எழும்போதே வள்ளியம்மையும் எழுந்தாள்.

"மணி அஞ்சாயிடுச்சா?" என்று கொட்டாவி விரிய கேட்டாள்.

"மணி எட்டு வள்ளியம்மை!"

"எட்டா?"

"ஆமாம் எந்திரி... இந்த மலைக்காட்டுல சூர்யோதயம் ஒன்பது மணிக்குத்தான் போல..." என்றபடி பாத்ரூமுக்குள் நுழைந்து கதவை தாளிட்டுக் கொண்டார்.

வள்ளியம்மையும் எழுந்து நின்று சோம்பல் முறித்து விட்டு, அந்த அறையின் ஆளுயரக் கண்ணாடியின்முன் போய் நின்று தனக்குத்தானே பார்த்துக் கொண்டாள். கண்ணாடியில் ஒரு சிறிய ஸ்டிக்கர் பொட்டு ஒட்டப்பட்டிருந்தது. கண்ணாடிக்கு பின்னால் சுவரோடு உள்ள நூலளவு இடைவெளியில் விசிட்டிங் கார்டு போல ஒன்றின் விளிம்பு தெரிந்தது. அதை எடுத்துப் பார்த்தாள். அதில் நீலா என்கிற பெயர் எழுதப்பட்டு கீழே செல்போன் எண் இருந்தது.

'யார் இந்த நீலா?' என்கிற கேள்வி ஒரு வினாடி எழும்பியது. இதற்கு முன் இங்கு தங்கியிருந்த யாருக்காவது தொடர்புடையவளாக இருக்கலாம் என்று தோன்றியது.

அப்போது கதவு தட்டப்படும் சப்தம்.

யார் என்று பார்ப்பதற்காக போய் திறந்தாள். வெளியே மிலிட்டரி யூனிபார்மில் ஒரு கூட்டமே கண்ணில் பட்டது. சிலர் கையில் துப்பாக்கியும் இருந்தது.

அவர்களைப் பார்க்கவும் ஒன்றும் புரியவில்லை.

அவர்களில் ஒருவர் தலையிலுள்ள கேப்பை கழட்டிய படியே சிரித்தார்.

"நீங்க...?"

"நாங்களா... பார்த்தா தெரியலியா?"

"மிலிட்டரி மாதிரி இருக்கு..."

"வெரிகுட்..... நாங்கள்லாம் மிலிட்டரியேதான். டூ யூ நோ த மீனிங் ஆப் மிலிட்டரி?"

- அவர் ஆங்கிலத்தில் அதிர்வாக கேட்டார். வள்ளியம்மை திருதிருவென விழித்தாள்.

"என்ன... மிலிட்டரிக்கு அர்த்தம் தெரியாதா?"

- அவர் கேலியாக சிரித்தார். அவர் அப்படிக் கேட்டு சிரிக்கும் போது மற்றவர்கள் ஆளுக்கொரு தினுசாக இருந்தனர். ஒருவர் நின்ற இடத்தில் ஓடுவதுபோல் பிராக்டிஸ் செய்து கொண்டிருந்தார். ஒருவர் தன் துப்பாக்கியால் பக்கத்து மரக்கிளையில் எதையோ குறிபார்த்துக் கொண்டிருந்தார். இன்னொருவர் தன் ஷூவை துடைத்துக் கொண்டிருந்தார். இரண்டு பேர் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களை எல்லாம் பார்க்க மிகவும் வியப்பாக இருந்தது வள்ளியம்மைக்கு.

"ஆமா... நீ இந்த காட்டுக்கு புதுசா?"

அவர் வள்ளியம்மையை கேட்டார்.

"ஆ... ஆமாம்..."

"இதுக்கு முந்தி எங்க இருந்த?"

"பாபநாசம் காரையார்..."

"காரையாரா... பொதிகை மலை பக்கம்னு சொல்லு..."

"ஆ... ஆமாம்..."

"சிங்க வால் குரங்குகளுக்கும், சிறுத்தைப் புலிகளுக்கும் அந்த மலை ரொம்ப பேர் போனது... சரிதானே?"

"எக்சாக்ட்லி..."

"அந்த மலைலதான் அகத்தியருக்கும் குகை இருக்கு. அவர் உருவாக்கின சுனை ஒண்ணும் அங்க இருக்கு. தெரியும் தானே?"

- அந்த கேள்விக்கு திருதிருவென விழித்தாள் வள்ளியம்மை.

"என்ன முழிக்கிறே... போகட்டும் எங்களுக்கெல்லாம் காபி கிடைக்குமா?"

"காபி... காபி..."

"என்ன காபி காபின்னு தந்தி அடிக்கிறே... நேத்து கூட வரையாட்டுப் பால் கொண்டு நீ போட்டியே?"

"அ... ஆமா... அது இல்ல. இப்ப உங்க இவ்வளவும் பேருக்கும் காபி போட பால் இல்ல. நாங்க இன்னும் இங்க செட்டில் ஆகல..."

"அப்ப சரி... நாங்க வேற இடம் பார்த்துக்கிறோம். டேக் கேர்... பை..." அவர் சொல்லி விட்டு திரும்பி ஓடத்துவங்க, மற்றவர்களும் அவரை பின்பற்றி ஓடத்துவங்கினர். சின்னப் பிள்ளைகள் பள்ளிவிட்டு வெளியே ஓடி வீட்டுக்கு செல்வது போல் அவர்களிடம் அப்படியொரு குதூகலம்.

வள்ளியம்மை பார்த்தபடியே இருந்தாள். அவர்கள் கண்களை விட்டு மறையவும் திரும்பினாள். பாத்ரூமுக்குள் இருந்து சிவக்குமாரும் வெளி வந்திருந்தார்.

"என்ன வள்ளி... யார் கூட பேசிட்டிருந்த?"

"ஒரு மிலிட்டரி குரூப். ஏகப்பட்ட பேர். திபுதிபுன்னு வந்து வாசல்ல நிக்கிறாங்க. அதுல ஒருத்தர் ஸ்கூல் வாத்தியார் மாதிரி கேள்விகளா கேட்க ஆரம்பிச்சுட்டார். உனக்கு மிலிட்டரிக்கு அர்த்தம் தெரியுமா? இதுக்கு முந்தி எங்க இருந்த? அகத்தியர் குகை தெரியுமான்னு கேட்டுகிட்டே போறாரு..."

- வள்ளியம்மை சொல்லச் சொல்ல சிவக்குமாரிடம் நிகைப்பு. வேகமாய் வாசற்புறம் சென்று பார்த்தார். பனிப் பொழிவு மட்டும் கண்ணில் பட்டது. ஈ, காக்கை கூட பறக்க அச்சப்படும் குளிரும் முகத்தில் மோதியது.

"எங்க வள்ளியம்மை அவங்க? இந்த காட்டுக்குள்ள மிலிட்டரிக்கு என்ன வேலை? ஒரே புதிரா இருக்கே?"

"யாருக்கு தெரியும்...? பக்கத்துல கேம்ப் ஏதாவது இருக்கலாம். பாரஸ்ட் ரைடிங்னு வந்திருக்கலாம்..."

- அப்போது எதிரில் தெரிந்த பனிப் போர்வையை விளந்து கொண்டு ஒரு கறுப்பு உருவம் தெரியத் தொடங்கியது.

6

'தா'ணுமாலய வனத்தின் சிறப்பைக் கூறிடும் ஒரு ஆச்சரியமூட்டும் கதை ஒன்று உண்டு. நமது வனங்கள் எந்த அளவு சக்திக் களஞ்சியமாக திகழ் கின்றன என்பதற்கு இந்த கதையே சான்று.

அந்த நாளில் அரசன் ஒருவன் தர்மம் தவறாமல் ஆட்சி செய்து வந்தான். அவன் அரசாட்சியில் யாராவது குற்றம் செய்தால் பாரபட்சம் பார்க்காமல் கடுமையாக தண்டித்து விடுவான். அந்த வகையில், ஒருவன் மேல் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, அவன் மன்னன் முன்னால் நிறுத்தப்பட்டான். செய்த கொலையை அவனும் மறுக்காமல் ஒப்புக் கொண்டான். அரசனும் அந்த கொலையை எதனால் செய்தாய் என்று கேட்காமல், கொலையை ஒப்புக் கொண்டவனுக்கு தனது நாட்டு சட்டப்படி தூக்கு தண்டனை விதித்து விட்டான்.

கொலையைச் செய்தவன் காரணத்தை சொல்லத் துடித்தான். ஆனால், அரசன் அதை பொறுமை யோடு கேட்டுக் கொள்ளத் தயாராக இல்லை. தீர்ப்பளித்தவுடன் எழுந்து சென்று விட்டான். கொலைகாரனும் ஒரு முடிவுக்கு வந்தான். விடிந் தால் அவனைத் தூக்கிலிடப் போகிறார்கள் என்னும் நிலையில், சாதுர்யமாக சிறையில் இருந்து தப்பி

ஓடினான் அந்த கொலைகாரன். வீரர்கள் அவனைத் துரத்தினர். நாட்டை விட்டு ஓட்டமாய் ஓடியவன், யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவன் எதிரில் தெரிந்த காட்டுக்குள் நுழைந்தான். அப்படி அவன் நுழைந்த காடுதான் தாணு மாலயக்குடி காடு! அந்தக் காட்டில் அவனை யானை ஒன்று துரத்தத் தொடங்கியது. பயந்து ஓடியவன், ஒரு பெரும் பள்ளத்தில் விழுந்தான். அங்கேயே அவன் சில நாட்கள் இருக்க நேரிட்டது. குடிக்க தண்ணீர் அந்த பள்ளத்தில் உள்ள ஒரு சுனையில் கிடைத்தது. பசிக்கு உணவாக அங்கு முளைத் திருந்த இலை தழைகளைச் சாப்பிட்டான். இப் படியே பல நாட்கள் இருந்தவன், துளிகூட சோர்வே இல்லாமல் தெம்போடு இருந்ததுதான் விந்தை. பள்ளத்தில் உருண்டு விழுந்த போது ஏற்பட்ட காயங்களும் வேகமாய் ஆறிவிட்ட நிலையில், அந்த பள்ளத்தில் இருந்த சில கொடிகளை பிடித்துக் கொண்டு மேலேயும் ஏறி வந்து நின்றான். தட்டுத் தடுமாறி அந்த காட்டை விட்டு வெளியேயும் வந்து விட்டவனை இன்னமும் வீரர்கள் தேடிக் கொண் டிருந்தார்கள். ஆனால், அவர்களால் அந்த கொலை காரனை இம்முறை அடையாளம் காண முடிய வில்லை. ஏன் தெரியுமா?

- தாணுமாலயவன சரிதம்.

"இந்த நேரத்துல கூட்டமா வந்துட்டு
போறாங்கன்னா அவங்களாதான்
இருக்கணும். மிலிட்டரி எல்லாம் இந்த
மலைப்பக்கம் வர வாய்ப்பே இல்ல..."

பனி மூட்டத்துக்குள் தெரிந்த அந்த கறுப்பு உருவம் ஒரு வினாடி சிவக்குமாரையே கலங்கடித்தது. அருகில் வரவும்

தான் அது கந்தையய்யா என்பது தெரிந்தது. அவன்தான் உடம்பையும் தலையையும் ஒரு சேர இழுத்து மூடிக்கொண்டு வந்து நின்றவன்.

வள்ளியம்மை அவனைப் பார்த்த நொடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனும் வணக்கம் சொன்னான்.

"ஓ, நீயா... யாரோனு நினைச்சேன்..."

"நீங்கதானேய்யா இன்னிக்கு வரச் சொன்னீங்க?"

"ஆமாமா... அதுக்காக இவ்வளவு சீக்கிரமாவா வந்து நிப்ப?"

"இதாங்களே நீங்க காபி குடிக்கிற நேரம். அதான் வர்ற வழியில பால்பாக்கெட், காய்கறி எல்லாம் வாங்கிட்டு வந்தேன்..." என்று தன் உடம்பின் மேல் கிடந்த போர்வையை விலக்கினான். ஒரு கையில் வயர்கூடையும், கூடைக்குள் பால்பாக்கெட்டும், காய்கறிகளும் இருந்தன.

அது சிவக்குமாருக்கு சற்று இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

"ஆமாம், நான் வேலைக்கு வேண்டாம்னு சொன்னா என்ன செய்வ?" என்று திருப்பிக் கேட்டார்.

"அப்படி எல்லாம் நீங்க சொல்ல மாட்டீங்கய்யா..."

"சொல்ல மாட்டேனா... அவ்வளவு நம்பிக்கையா?"

"ஆமாங்க. இந்த காட்டுக்குள்ள என்னத் தவிர யாரும் வேலைக்கு வர மாட்டாங்க..."

- அவனது நம்பிக்கை மிகுந்த பேச்சைத் தொடர்ந்து சிவக்குமார் வள்ளியம்மை பக்கம் திரும்பினார்.

"என்ன வள்ளி... கந்தையனை வேலை பார்க்க சொல்லிடுவோமா?"

- வள்ளியம்மை மவுனம் சாதித்தாள்.

"பாருய்யா... என் மனைவி பயப்படுறா..."

"அம்மா பயப்படாதீங்கம்மா... நான் பாவப்பட்ட வன்மா! உண்மைல நான்லாம் ஒண்ணுமில்லம்மா. இந்த காட்டுக்குள்ளதாம்மா நாம பயப்பட நிறைய விஷயங்கள் இருக்கு."

- கந்தையய்யா கெஞ்சத் தொடங்கிவிட்டான். சிவக் குமாரை அது என்னவோ செய்தது.

"போகட்டும்... வர்ற வழில கூட்டமா யாராவது மிலிட்டரிகாரங்களை பார்த்தியா? இந்த மலைல எங்கே யாவது அவங்க கேம்ப் போட்டுருக்காங்களா?"

"மிலிட்டரிகாரங்களா?" கந்தையய்யா வாயை பிளந் தான்.

"ஆமாய்யா... இப்பதான் ஒரு கூட்டம் வந்து என் மனைவி கிட்ட பேசிட்டு போறாங்க..."

"அப்ப அவங்க வானத்து மனுஷங்களா இருப்பாங் கய்யா!"

"என்னது வானத்து மனுஷங்களா?" அதிர்ந்தார் சிவக் குமார்.

"ஆமாங்கய்யா... இந்த நேரத்துல கூட்டமா வந்துட்டு போறாங்கன்னா அவங்களாதான் இருக்கணும். மிலிட்டரி எல்லாம் இந்த மலைப்பக்கம் வர வாய்ப்பே இல்ல அய்யா..."

"மிலிட்டரி வர சான்ஸ் இல்லேன்னு எனக்கும் தெரியும். ஆனா நீ வானத்து மனுஷங்கன்னு சொன்னதுதான் இடிக்குது..."

"அய்யா... கூட்டமா வந்தாங்கன்னாலே அவங்க தான்யா. அவங்களை பார்க்குறதும் ரொம்ப நல்லதுன்னு தான்யா சொல்லுவாங்க."

"நல்லதா... அப்ப அவங்க என்ன கூட வளா?"

"கடவுள் மாதிரி அய்யா. அதனால தானே வானத்து மனுஷங்கன்னு கூப்பிடுறாங்க."

"ஆமா அவங்கள வானத்து மனுஷங்கன்னு சொன்னது யார்?"

"வேற யாரு... எல்லாம் இந்த தாணுமாலயக்குடியனுங்கதான்..."

"எல்லாம் புதிரா இருக்கே... டிரான்ஸ்பர் ஆகிப்போன காளிமுத்துவும் சொல்லிட்டு போனாரு."

"பெரிய புதிர் இல்லீங்க... புதிருக்கெல்லாம் புதிருங்க அவங்க."

"ஆமா. இந்த மலைக்காட்டுல அவங்க எங்க தங்கி இருக்காங்க?"

"சத்தியமா தெரியாதுய்யா... காளிமுத்தையா அவங்கள கண்டுபிடிக்க நாயா பேயா அலைஞ்சு பார்த்தார். ஒண்ணும் வேலைக்காவல."

கந்தையன் சொன்ன விஷயங்கள் சிவக்குமாரை கரையானாய் அரிக்கத் தொடங்கிவிட்டது.

"ஐயா நான் போய் வேலையை தொடங்கட்டுங்களா?"

என்று திரும்ப அவரை குடைந்தான்.

அவரும் சரி என்பதுபோல் தலையை அசைக்க கந்தையன் உள்ளே சென்றான். அரை மனதாக வள்ளியம்மை சென்றாள்.

சிவக்குமாரின் முகத்தில் மட்டும் சிந்தனை அலைகள்!

சைக்கிளில் கோவிந்தன் வந்து கொண்டிருந்தான். தாணுமாலயக்குடி வனத்தின் மத்தி நாட்டு வழியாக அவன் சைக்கிள் தினறலுடன் வந்தபடி இருந்தது. 'க்ரீச் க்ரீச்' என்கிற சைக்கிள் சப்தம் கோவணம் கட்டியபடி திரியும் மத்தி

நாட்டு பெருசுகளை திரும்பி பார்க்க வைத்தது. கூம்பு போன்ற குடிசைக்கு வெளியே அடுப்பு மூட்டி கூழ்காய்ச்சிக் கொண்டிருந்தனர் தாணுமாலயக்குடி பெண்கள். இரண்டு பிள்ளை பெற்றுவிட்டாலே ரவிக்கை அணியத்தேவையில்லை என்பது அவர்களுக்கான விதி. பருத்திப் புடவையின் மாராப்பைக் கொண்டு முன் மார்பை மூடிக் கொண்டு குனிந்து வளைந்தபடி அவர்கள் வேலை பார்ப்பதே அலாதியாக இருக்கும்.

சில குடிசைகளின் முன் நாய்கள் இருந்து கோவிந்தன் வரவும் குலைத்தன. ஆனால், கோவிந்தன் அலட்சியமாக கடந்து சென்றான். அவன் காக்கி பேண்ட்டும் சட்டையும் தொளதொளவென்று இருக்க, அவன் பார்வையில் ஒரு தேடல்.

எதிரில் ஒரு ஆலயக்குடியான் தோளில் பலாக்காயுடன் வந்தபடி இருந்தான். கோவிந்தனைப் பார்க்கவும்,

"கும்பிடுறேன் சாமி. எங்க இந்த மத்தி நாட்டுப் பக்கம்?" என்று கேட்டான்.

"எங்கய்யா உங்க மூப்பரு?"

"மூப்பரா... அவரு இன்னிக்கு தென்கரை நாட்டுல இருப்பாரு..."

"இன்னிக்கு வெள்ளிக்கிழமை மத்தி நாட்டுல தானய்யா அவர் இருக்கணும்?'

"அதெல்லாம் இப்ப மூப்பு பாக்கறதில்ல. நினைச்சா கிளம்பிடும். தென்கரை நாட்டு பக்கமா கற்பகமரம் நடமாடுறதா தகவல் வரவும் கிளம்பிட்டாரு..."

"இந்த கெழவனுக்கு இன்னும் கற்பகமரத்தை பாக்கற ஆசை விடலையா?"

"சாவறதுக்குள்ள பாத்தே தீரணும்னு சபதம்ல போட்ருக்காரு!"

"பாத்து என்னத்தய்யா கேப்பாரு. அதான் நூறு வயது வாழ்ந்தாச்சுல்ல?"

"மூச்சு நின்ன பொறவு உசுர் நேரா இந்திரலோகத்துக்கு போகணுமாம். தப்பித்தவறியும் எமபட்டிணத்துல போய் சிக்கிடக் கூடாதுங்கிற பயம்தான்."

"அப்ப இந்திலோகம்னு ஒண்ணு இருக்குன்னு சொல்லு..."

"பொறவு... அதானேங்க எங்க பூர்வீகம்?"

- ஆலயக்குடியான் திருப்பிக் கேட்ட விதத்தில் ஒரு தனி பெருமிதம். கோவிந்தன் உடனேயே தன் நெற்றியில் அடித்துக் கொண்டான்.

"ஏஞ்சாமி, தலைல அடிச்சுக்கிற?"

"ஒண்ணுமில்ல... ஆமா நீ மூப்பரை பார்ப்பியா?"

"எதுக்கு சாமி?"

"காட்டுக்கு புது ஆபீசர் வந்துருக்காருய்யா... அவர வந்து பாக்க வேணாமா?"

"அப்படியா விஷயம்... அப்ப காளிமுத்தையா கம்பிய நீட்டிட்டாரா?"

"கம்பி நீட்ட அவர் என்ன குத்தவாளியா... ஆபீசருய்யா!"

"என்னவோபோங்க. அவரும் இந்த காட்டை திருத்துறேன்னு தலைகீழா நின்னு போராடிப் பார்த்தாரு. நான் கூட சாமி நீங்கதான் திருந்தணும். இங்க எல்லா நல்லாதான் இருக்குதுன்னு சொல்வேன். கேட்டா தானே? கடைசில இந்த காடே வேணாம்னு ஓடிட்டாருக்கும்."

"நீ ரொம்ப பேசுற... மூடிக்கிட்டு நான் சொன்னபடி செய். மூப்பரைப் பார்த்தா புது ஆபீசரை உடனே வந்து பாக்கச் சொல்லு."

"கட்டாயம் சொல்றேன். ஆமா புது ஆபீசர் எப்படி?"

"யாருக்கு தெரியும்... போகப்போகத்தான் தெரியும். இந்ததபா ஆபீசர் மட்டும் வரலையய்யா... அவர் சம்சாரமும் வந்துருக்காங்க..."

"சம்சாரமுமா...?"

"வாயப் பொளக்காதே. ஆபீசருக்கு பிள்ளை குட்டிங்க கிடையாது. புருசன் பொஞ்சாதி ரெண்டே பேர்தான். இந்த ஆபீசர் வழக்கமான ஆசாமி கிடையாது. ரொம்ப நேர்மை யான ஆளுன்னு கேள்வி..."

"அப்பதங்கமாபோச்சு. அப்படி இப்படின்னு இருக்கிற வங்களுக்கு தானே இந்த காடு சிக்கல் பண்ணும்?"

"நீ வேற... இவரு இந்த அகோரசாமி, வானத்து மனுஷங்க, கற்பகமரம்னு எல்லாத்தையும் ஒரு கைபாக்கப் போறார்னு கேள்வி. இனி இந்த காட்டுல நிறைய ரசாபாசம் தான்யா."

"நீங்க என்ன மிரட்டுறீங்களா?"

"அப்படித்தான் வெச்சுக்கோயேன்..."

"போங்க சாமி... போய் வேல இருந்தா பாருங்க. உங்களால எல்லாம் இந்த காட்டுல ஒரு புண்ணாக்கும் பண்ண முடியாது."

"அது இந்த ஆபீசர் கிட்ட நடக்காதுய்யா..."

"திரும்பவும் சொல்றேன் சாமி... இப்படி கித்தாப்பா விவரம் தெரிஞ்ச நீங்களே பேசுறது கொஞ்சமும் நல்லா இல்ல."

- அந்த தாணுமாலயன் சொல்லிவிட்டு நகர ஆரம் பித்தான். கோவிந்தனும் தன் சைக்கிளை மிதிக்க ஆரம் பித்தான்.

சிறிது தூரம் சென்றவனுக்கு சிறுநீர் கழிக்கும் உணர்வு ஏற்பட்டது. சைக்கிளை நிறுத்தி இறங்கியவன், சுற்றும்

முற்றும் பார்த்துவிட்டு ஒரு பருத்த மரத்தடிக்கு சென்றான். அங்கே கீழே சில செங்கற்கள் மஞ்சள் குங்குமம் பூசப்பட்டு கிடந்தன. அது ஒரு தாணுமாலயனின் சவக்குழி. அதன் மேல் நடப்பட்டிருந்த மரம்தான் உயர்ந்து வளர்ந்திருந்தது. அவன் குடும்பத்தவர்கள்தான் வந்து வணங்கி விட்டு போயிருந்தார்கள்.

கோவிந்தன் அதை கவனிக்காமல் நின்றபடியே சிறுநீர் பெய்ய ஆரம்பித்தான். அது விளாமரம். விளாங்காய்கள் கிரிக்கெட் பால் சைசுக்கு ஏராளமாய் காய்த்திருந்தன. அதில் ஒரு காய் அப்படியே உதிர்ந்து கோவிந்தனின் நடு மண்டையில் விழுந்து தெரித்து விழ, கோவிந்தனும் எகிறிக் குதித்தவனாக, 'ஐய்யோ' என்று அலறினான். அவசர அவசரமாக தன் காக்கி பேண்டில் ஜிப்பை இழுத்து விட்டுக் கொண்டவன், அப்படியே அண்ணாந்து மேலே பார்த்தான். நடு மண்டை கலாக்காய் அளவுக்கு புடைத்து கொண்டு விட்டிருந்தது.

"என்னய்யா... ஒண்ணுக்கடிச்சியா? பெருசா மண்டைல தட்டுச்சாக்கும். எங்க ஒதுங்கணும்னு இன்னுமா உனக்கு தெரியல..." என்றபடியே ஒரு ஆலயக்குடிகாரன் கடந்து போனான்.

'இது தற்செயலா? இல்லை இந்த மரம் அவன் சொன்னது போல பெருசா?' கோவிந்தனுக்கு குழப்பமாக இருந்தது. தலையை தேய்த்து விட்டபடியே, "ஹூம்... என்னையே இந்த காடு இந்த பாடுபடுத்துதே, புது ஆபீசர் என்ன கதி ஆவார்னு தெரியலியே..." என்றும் முணு முணுத்துக் கொண்டான்.

அந்த ஜிப்சி ஜீப் தாணுமாலய வனத்தின் மண்பாதையை தொட்டிருந்தது. உள்ளே சிவக்குமாரின் தம்பி நட்ராஜ்! டாக்குமென்ட்ரி பிலிம் மேக்கர்.

மண்சாலையின் தொடக்கத்தில் ஜீப்பை விட்டு இறங்கிய நட்ராஜ், சுற்றும் முற்றும் ஒரு பார்வை பார்த்தான். ஜில்

லென்ற காற்று, பட்சிகளின் சப்த ஜாலம், திரும்பின பக்க மெல்லாம் பசுமை என்று அந்த காடு அவன் கண்ணைப் பறிக்க, பின்சீட்டில் கிடந்த கேமராவை எடுத்தான். அப் படியே வியூபைண்டர் வழியாக காட்டை ஊடுருவியபோது ஒரு மரம் மட்டும் மிக வித்தியாசமாக மஞ்சலான பழுத்த இலைகளோடு, அதேசமயம் தங்கம் போல பழுத்த பழங்க ளோடு கண்ணில் பட்டது. நட்ராஜை ஆச்சரியப்படுத்தியது அந்த காட்சி. கேமராவை ஜூம் பண்ணவும், அந்த மரத்து இலைகளும் பழங்களும் பளிச்சென்று தெரிந்தன. இப்படி மஞ்சள் இலைகளும், தங்கநிறமுமாக ஒரு தாவரம் பற்றி எவ்வளவு யோசித்தும், அப்படி ஒரு தாவரத்தின் பெயர் நினைவுக்கே வரவில்லை.

'சில பூச்செடி.களின் இலைகள் பழுத்து மஞ்சளாகும். ஆனால், அவைகள் காய்க்காது. இது எந்தவகை மரம்?' யோசித்தபடியே அதை அருகிலேயே சென்று பார்த்துவிட முடிவெடுத்த நட்ராஜ் நடக்க காலெடுக்கவும், அந்த மரமும் நகர ஆரம்பித்தது.

நட்ராஜுக்கு தூக்கி வாரிப் போட்டது.

7

'அந்த கொலைகாரன் முற்றாக உருவம் மாறி யிருந்தான். அவனது தோற்றத்தில் கிட்டத்தட்ட 30 வயது வரை குறைந்து போய் தலைமுடி எல்லாம் கருகருவென்று காணப்பட்டது. அவனை ஒருவர் கூட அடையாளம் காணாத நிலையில், அவனே ஒரு கிணற்றினை எட்டிப் பார்க்கும்போது, தன்னைப் பார்த்து முதலில் யாரோ என்று நினைத்து விட் டான். உடம்பிலும் ஒரு தனி தெம்பு.

அவனுக்கு உடனேயே புரிந்து விட்டது. இதற்கு காரணம், அந்த வனத்தில் தான் வீழ்ந்த பள்ளமும், அங்கே தான் குடித்த நீரும், பிய்த்து நின்ற இலை களும்தான் என்று! அடுத்த நொடியே அவன் புத்தி குறுக்கே பாயத் தொடங்கியது. திரும்பவும் அந்த வனப்பகுதிக்கு வந்தான். தான் விழுந்த பள்ளத்தை கண்டறிந்து கீழே இறங்கினான். கீழே சுனை நீர் பாதிக்குப் பாதி வற்றியிருந்தது. அந்தச் சுனை பவுர்ணமி நாள் வர வரப் பெருகும். அமாவாசை வரவர அருகும். இது அவனுக்கு தெரியாது. சுனை யில் இருந்த நீரை அவன் ஒரு சுரைக்குடுக்கையில் எடுத்துக் கொண்டான். தான் பறித்து தின்ற மூலிகை இலைகளையும் நிறையவே பறித்துக் கொண்டான்.

அந்த நொடியே இளமையை உருவாக்கப் போகும் ஒரு சித்தனாக அவன் தன்னை கற்பனை செய்து கொண்டான். எந்த அரசன் தன்னை தண்டித்து இந்த வனப்பகுதிக்கு தான் ஓடிவரக் காரணமா இருந்தானோ, அந்த அரசனையே சந்தித்து அவனை இளமையானவனாக ஆக்கி, அவனிடமே பெரும் செல்வத்தை பதிலாக கேட்டுப் பெறுவது என்று தீர்மானித்து விட்டான்!'

- தாணுமாலயவன சரிதம்.

"உன் உடம்போட கெட்ட கொழுப்பை
எல்லாம் இந்த தேயிலைக் கஷாயம்
கரைச்சிடும். உன் கர்மக் கணக்குல நீ
அனுபவிக்கணும்னு இருக்கிற கஷ்டம்
எல்லாமும் இது நேர் செய்துடும்..."

"சாலை நடுவில் ஒருவன் தோளில் ஒரு
உடலோடு மெல்ல மழையில்
நனைந்தபடியே செல்வது தெரிந்தது.
கையில் ஒரு திரிசூலம்..."

அதிர்ச்சிக்கு ஆளான நட்ராஜ், ஒரு வினாடி நின்று அந்த மரத்தை பார்த்த போது அது நகரவில்லை. எல்லா மரங்களையும் போலதான் தெரிந்தது. அதை நெருங்க நடக்கத் தொடங்கவும், அதுவும் நகரத் தொடங்கியது.

நட்ராஜ் வரையில் ஒரு மரம் நகர்வது என்பது நம்ப முடியாத அதிசயம். துளியும் வாய்ப்பில்லாத விஷயம். மரத்தின் வேர்கள் பூமிக்குள் ஆழப் பதிந்திருக்கும். பூமியை உழுதபடி ஒரு மரம் நகர்வது என்பது சாத்தியமே இல்லாத விஷயம். புராண கதைகளில் கூட கேள்விப்பட்டிருக்காத ஒரு அதிசயம். அப்படி இருக்க, மரம் எப்படி நகர முடியும்? ஒரு வேளை யாராவது மரத்தை அடிப்பாகத்தோடு வெட்டி அப்படியே எங்காவது தூக்கிச் செல்லப்பார்க்கின்றனரா?

நட்ராஜ் நின்ற இடத்தில் அவனுக்குள் இவ்வளவு கேள்விகள்! அருகில் சென்று பார்க்காமல் எந்த உண்மை யையும் தெரிந்து கொள்ளவே முடியாது என்பதால், ஒரே ஓட்டமாக ஓடி அந்த மரத்தை நெருங்கிவிடலாம் என்று நினைத்தவன், அதற்காக ஒரு ஓட்டப் பந்தயக்காரனைப் போல் தயாரானபோது அந்த மரமும் தயாரானது. நம்ப முடியாமல் கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்த போது அந்த மரத்தையே காணவில்லை. தாணுமாலய வனம் தனக்கான தாவரங்களுடன் எதிரில் காட்சி அளித்தது. ஒரு வினாடி எல்லாமே பிரமையா என்று கூட நட்ராஜ்க்கு தோன்றியது. தோராயமாக அந்த மரம் இருந்த இடத்தை நெருங்கிச் சென்று பார்த்தபோது, அங்கே அது இருந்த தற்கான தடயங்களே இல்லை. மாறாக சற்று தொலைவில் சிலர் வலை கட்டி வாலிபால் விளையாடிக் கொண் டிருந்தனர்.

அதைப் பார்க்கவும் நட்ராஜிடம் அடுத்தகட்ட ஆச்சரியம். கிரவுண்டில் சிலர் வாலிபால் விளையாட, கிரவுண்டுக்கு வெளியே இருபக்கமும் சிலர் நின்று கைதட்டி விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர்.

மரத்தை தேடிவந்தால் மனிதர்கள்!

நட்ராஜின் கால்கள் அவர்களை நெருங்கின. மார்பில் கேமரா மாலை போல தொங்கிட, தலையில் கேப்புடன் நட்ராஜ் வருவதை அவர்களும் பார்த்தனர். நட்ராஜ் நெருங்கவும் அவர்களில் ஒருவர் சிரித்தார். நட்ராஜ் அவரிடம், "ஐ ஆம் நட்ராஜ். டாக்குமெண்ட்ரி பிலிம் மேக்கர்" என்று கை குலுக்குவதற்காக கை நீட்டினான்.

"ஓ நட்ராஜா... மிஸ்டர் சிவக்குமாரோட பிரதர்தானே நீங்க?" அவரும் திருப்பிக் கேட்டார்.

"ஆமாம்... அண்ணனை உங்களுக்கு தெரியுமா?"

"ஏன் தெரியாம... காலைல கூட வீட்டுக்கு போயிருந்தோமே..."

"ஓ... ரொம்ப சந்தோஷம்... நீங்கள்லாம்?"

"நாங்களா... நாங்கள்லாம் இந்த காட்டுல சுதந்திரமா திரியுற ஆராய்ச்சியாளர்கள்..."

"ஐ சீ... எந்த மாதிரி ஆராய்ச்சி...?"

"எல்லா வித ஆராய்ச்சியும்தான்..." அவர் பதிலோடு, வாலிபால் பந்து அழகாய் ஒருவரால் கட் செய்யப்பட்டதற்காக ஒரு குதி குதித்து விசிலும் அடித்தார். அவரிடம் அப்படி ஒரு செய்கையை நட்ராஜ் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. அங்கே எதிர்திசையில் இருந்த ஒருவருக்கு நிச்சயம் வயது அறுபத்துக்கு மேல் இருக்கும். அவரோ நின்ற இடத்தில் எகிறி ஒரு ஜம்ப் அடித்து பழையபடியே தனது பொசிஷனில் வந்து நின்றார். நட்ராஜால் அதை துளி கூட நம்பமுடியவில்லை.

"என்ன அவர் சர்க்கஸ் வேலை எல்லாம் பண்றார்?"

"அவர் என்ன... நான் கூட பண்ணுவேன். பாக்குறீங்களா?" கேட்டுவிட்டு அவரும் நின்ற இடத்தில் வானில் எகிறி, ஒரு டைவ் அடித்து பழையபடி பூமியில் கால் பதித்து அப்படியே நின்றார். பின் ஒரு விசில்.

நட்ராஜ்க்கு தலை சுற்றியது.

அந்த வயதுக்கு அவர்கள் வாலிபால் விளையாடுவதே ஆச்சரியமான விஷயம். இதில் இப்படி சிறு பிள்ளைகள் போல ஜம்ப் அடிப்பதெல்லாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத விஷயம்.

"ஏய் மேன்... உனக்கு விளையாடத் தெரியுமா?"

"தெரியும்... ஆனா இப்ப முடியாது?"

"ஏன்?"

"நான் ரொம்ப சோர்வா இருக்கேன். பை த பை நான் இப்ப உங்ககிட்ட ஒண்ணு கேட்கட்டுமா?"

நட்ராஜிடம் பலமான பீடிகை. அவர்களின் வாலிபால் ஆட்டமும் நின்றது. பந்தை ஆட்காட்டி விரல் மேல் உலக உருண்டையை 'விர்ர்' என்று சுழற்றுவது போல சுழற்றிக் கொண்டே ஒருவரும், மற்றவர்களும் நட்ராஜ் எதிரில் வந்து நின்றனர்.

அவர்களை ஒட்டு மொத்தமாய் பார்க்க வியப்பாய் இருந்தது. அவர்களில் ஒருவருக்கு சீன முகம். ஒருவர் வெள்ளைக்காரன் போல் இருந்தார். ஒருவர் நீக்ரோ. ஒருவர் இஸ்லாமியர் போல தலையில் குல்லாய்..!

"உங்களை எல்லாம் பார்க்க எனக்கு ரொம்பவே ஆச்சரியமா இருக்கு... டிப்ரன்ட் பர்சனாலிடீஸ்!"

"வெயிட்... அங்க பார்..." என்று ஒருவர் சுட்டிக்காட்ட, அங்கே ஒரு வயதான பெண்மணி இரு தோள்களிலும் பெரும் பைகளுடன் வந்தபடி இருந்தார்.

"அவங்க...?"

"அவ பேர் அவ்வா! நாங்க அப்படிதான் கூப்பிடு வோம்."

"அவ்வா...? அவ்வை கேள்விப்பட்டிருக்கேன். இது என்ன அவ்வா?"

"ஐயோ நட்ராஜ். என் பேர் அவ்வைதான். இந்த போகன்தான் எப்பவும் என்னை அவ்வான்னு கூப்பிடுவான்..." பதில், அந்த பெண்மணியிடம் இருந்தே வந்தது. அதுவும் உரிமையோடு நட்ராஜ் என்று கூப்பிட்டு சொன்ன விதத்தில் அப்படி ஒரு வாஞ்சை.

நட்ராஜிடம் அடுத்தகட்ட உதறல்.

"உங்களுக்கு எப்படி என்னைத் தெரியும்?"

"ஏம்ப்பா... நீ என்ன யாராலயுமே கண்டுபிடிக்க முடியாத தீவிரவாதியா, உன் பேர் கூட தெரியாம இருக்க?"

"இல்ல. இப்பதான் நான் உங்கள சந்திக்கிறேன். அதான் எப்படின்னு எனக்கு தெரியல. ஒரு வேளை என் அண்ணன் சொல்லியிருப்பாரோ?"

"என்ன பேர்ல நாம இருக்கோம்ங்கிறது முக்கியமில்ல... நல்ல பேர் எடுக்கிறதுதான் ரொம்ப முக்கியம். சரி சரி, எல்லாரும் அப்பமும் தேனீரும் சாப்பிட தயாராகுங்க..." என்றபடியே தான் தோளில் சுமந்துவந்த பையில் இருந்து அப்பம் கொண்ட ஒரு அட்டைப்பெட்டி, பின் பிளாஸ்க் என்று வெளியே எடுத்து, அப்படியே மண்குவளைகளையும் வெளியே எடுத்தாள் அந்த அவ்வா என்கிற அவ்வை.

நட்ராஜ்க்கு எதுவுமே பிடிபடவில்லை. அவனுக்கும் இரு அப்பமும் குவளை தேனீரும் வழங்கப்பட்டது. நல்ல கூடு. ஆனால், பால் கலந்திராத டிகாஷன்.

குடிக்கவும், கசப்புச் சுவையில் உச்சி மண்டையே கிறுகிறுத்தது. ஆனால் அங்கிருந்த ஒவ்வொருவரும் ஏதோ

பாயசம் குடிப்பது போல குடித்தனர். நட்ராஜ் முகம் அஷ்ட கோணலாகியது.

"என்னப்பா கசக்குதா?"

"கசக்குதாவா... எமலோகம் கண்ணுக்கு தெரியுது."

"இந்த கசப்பும், உவர்ப்பும் உடம்புக்கு நல்லது! உன் உடம்போட கெட்ட கொழுப்பை எல்லாம் இந்த தேயிலைக் கஷாயம் கரைச்சிடும். உன் கர்மக் கணக்குல நீ அனுபவிக்கணும்னு இருக்கிற கசப்பை எல்லாமும் இது நேர் செய்துடும்..."

"இது... இது கிரீன் டீ தானே?"

"எதுக்கு இந்த தப்பான பேர். இதோட சரியான பேர் பசுந்தேனீர்..."

"தமிழ்ப்பற்றா?" அருகில் உள்ள ஒருவர் கிண்டல் செய்தார்.

"வெச்சுக்கோ... அதுல என்ன தப்பு?"

"அண்ட்டே நாகு வேற மாதிரி செப்பிஸ் தானு..."

ஒருவரிடம் தெலுங்கும் தமிழும் கலந்து வெளிப்பட்டது.

"அடிச்சிக்காதீங்கப்பா... எந்த பெயரால கூப்பிட்டாலும் இதோட சுவை மாறப் போறதில்ல. அப்புறம் என்ன?"

ஒருவரிடம் தத்துவமாய் பதில். நட்ராஜால் அந்த டீயை குடிக்க முடியவில்லை. அப்பத்தை சாப்பிட்ட போது அமிர்தமாய் இருந்தது. அடேயப்பா என்ன ஒரு ருசி.

"அவ்வா, இது நீங்க செய்ததா?"

"உம்... நல்லா இருக்கா?"

"அமிர்தம்"

"மண்ணாங்கட்டி. உன்னை நான் கேக் செய்து கொண்டு வரச் சொன்னேன்ல?" ஒருவர் இடையில் புகுந்து கோபித்தார். அப்போது பலமாக காற்று வீசத் தொடங்கியது. வானிலும் மழை வருவதற்கான மாற்றம்.

"சரி, சரி கிளம்புவோம். இந்த மழை இரண்டு நாளைக்கு நிற்காது" என்றபடியே ஒருவர் வலையை அவிழ்க்கத் தொடங்கினார்.

"ஆமா, நீங்கள்லாம் இங்க எங்க தங்கி இருக்கீங்க? நான் உங்க கிட்ட பல கேள்விகள் கேட்கணும்தான் வந்தேன். ஆனா இங்க வரவும் எல்லாமே மாறிப் போச்சு."

"நிக்காதே... புறப்படு! மழை வலுக்கிறதுக்குள்ள வீட்டுக்கு போ. வழியில நீ இன்னொரு அதிர்ச்சிக்கும் ஆளாக வேண்டியிருக்கு... புறப்படு... புறப்படு..."

ஒருவர் சொன்னபடியே அவ்வா வந்த வழியில் ஓடத் தொடங்கினார். மற்றவர்களும் ஓடினார்கள். அவ்வாவும் திரும்பித் திரும்பி பார்த்தபடியே சென்றாள். நம் வீட்டுப் பாட்டிகளின் சேலைக்கட்டு. அள்ளி முடிந்த கூந்தல். கழுத்தில் ஒரு துளசிமாலை. ஆனால், நெற்றியில் எந்த குறியும் இல்லை.

அவ்வாவும் அவர்களும் கண்களை விட்டு மறைய, மழையும் பொழியத் தொடங்கியது. நட்ராஜும் குழப்பத்தோடு நடந்து தன் ஜீப் நின்றிருந்த இடத்திற்கு வந்தான். ஈரம் சொட்டச் சொட்ட ஜீப்பில் ஏறி அமர்ந்தான். கேமரா நனைந்துவிட்டது கூட தெரியவில்லை.

முதலில் நடந்த மரம்.

அடுத்து வினோதமான மனிதர்கள்.

இந்த வனத்துக்குள் இன்னும் முழுதாய் நுழையக் கூட இல்லை. ஆரம்பமே இப்படி கண்ணைக் கட்டினால், போகப்போக என்னவெல்லாம் நடக்கும் என்றே தெரியவில்லையே.

ஜீப்பின் சாவியை திருகி, கிளட்சை மிதித்து கியர் போட்டு தன் ஜிப்சியை கிளப்பினான். அதுவும் கிளம்பியது. சிறிது தூரம் கூட போயிருக்காது. சாலை நடுவில் ஒருவன் தோளில் ஒரு உடலோடு மெல்ல மழையில் நனைந்தபடியே செல்வது தெரிந்தது. கையில் ஒரு திரிசூலம்.

யார் அது?

யாரை இப்படி தோளில் போட்டுக் கொண்டு போகிறான்?

ஒருவேளை சம்பந்தப்பட்ட நபரால் நடக்க முடியாதோ? அதனால்தான், தோளில் சுமக்கிறானோ? நாம் உதவி செய்தால் என்ன? கேள்விகள் எழும்பிட, ஜீப்பும் வேகமாக அவன் அருகே சென்று நின்றது. ஆனால், அவன் பக்கவாட்டு மரச் சூழலுக்குள் இறங்கிவிட்டான்.

"ஏய் நில்லு... நான் உனக்கு உதவத்தான் கூப்பிடுறேன்..." என்று நட்ராஜ் கத்தினான். அவனோ நின்று திரும்பிப் பார்த்தான். புதராய் தலைமுடி, முட்டை விழிகள், கையில் அந்த திரிசூலம். நட்ராஜ்க்கு சர்வநாடியும் ஒரு வினாடி நின்று துடித்தது.

இடையில் வானில் பலத்த இடிசத்தம். மின்னல் ஒன்று சீன தேசத்து டிராகன் மிருகம் போல் வானில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஓடி மின்னியது. கண்களை மூடி, காதுகளைப் பொத்திக் கொண்டவனாக பின்னர் திறக்கவும், எதிரில் அந்த திரிசூல மனிதனைக் காணவில்லை.

சற்றுமுன் சந்தித்த மனிதர்களில் ஒருவர், 'வழியில் இன்னொரு அதிர்ச்சிக்கும் ஆளாக வேண்டியிருக்கு' என்று கூறியது நினைவுக்கு வந்தது. அப்போது செல்போனில் அழைப்பொலி. மிக மெதுவாக எடுத்து காதைக் கொடுத்தான் நட்ராஜ்.

"குரு நான் திலக்..."

"உம்..."

"என்ன குரு... நீங்க அந்த வனத்துக்கு கிளம்பிட்டீங்களா?"

"இப்ப அங்கதான் இருக்கேன்."

"பெண்டாஸ்டிக். என்னை கூட்டிகிட்டு போறேன்னு சொன்னீங்களே குரு..."

"நோ ப்ராப்ளம். நீ புறப்படு வா..."

"எப்படி இருக்கு குரு அந்த தாணுமாலயக்காடு?"

"வந்து பார்... இது வழக்கமான காடு இல்ல. நான் இன்னும் பாதி தூரம் கூட போகல. அதுக்குள்ளேயே டர்ர் ஆகிட்டேன்"

- நட்ராஜ் குரலில் ஒரு பயம் கலந்த ஆர்வம்.

8

அரசனுக்கு ஒரு ஓலை வந்தது. அது, அரசனின் ஐம்பது வயதை இருபத்தி ஐந்து வயதாக குறைத்துக் காட்டுவதாக கூறியது. அரசன் ஆச்சரியப்பட்டு போனான். தான் தண்டனையளித்த கொலைகாரன்தான் இப்படி ஒரு ஓலை அனுப்பியிருக்கிறான் என்பது தெரியாமல் அவனை வரச் சொன்னான். அரசன் முன்னால் கொலைகாரனும் போய் நின்றான். அரசனால் கொலைகாரனை கொஞ்சம் கூட இனம் கண்டுகொள்ள முடியவில்லை. கொலைகாரனும் பேரம் பேசத் தொடங்கி விட்டான்.

"அரசே... நான் ஒரு சித்தன். என் வசம் பவ்வனம் தரும் மூலிகைச் சாறு உள்ளது. நீங்கள் அதைப்

பருகினால், உங்கள் வயதில் பாதி குறைந்து நீங்கள் இளமைக்கு திரும்பி விடுவீர்கள். இதோ அந்த மூலிகைச் சாறு. இதைப் பருகிப் பார்த்துவிட்டு சொல்லுங்கள்" என்றான்.

அரசனும் ஆவலாக அதை பருக முனைந்தபோது மந்திரி தடுத்தார். "அவசரப்பட வேண்டாம் அரசே! உண்மையில் இது எப்படிப்பட்டது என்பதை தீர்மானமாக தெரிந்து கொள்ளாமல், இதை நீங்கள் குடிக்க முனைவது நல்லதல்ல. இதை நாம் பரி சோதித்து பார்த்த பிறகே நீங்கள் இதை பருகலாம்" என்றார். கொலைகாரனுக்கு சற்று சுருக்கென்றது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "மந்திரியார் இதை தாராளமாக பரிசோதிக்கலாம்" என்றான்.

- தாணுமாலயவன சரிதம்.

"அந்த மரம் ஒரு மேன் மேட்.
அதாவது மரம் மாதிரி செய்து
அதுக்குள்ள யாரோ பூந்துகிட்டு
மெக்கானிக்கலா அதை
ஆபரேட் பண்ணி விட்டு
இருக்கலாம்...

அந்த வன இலாகாவுக்கு சொந்தமான குடியிருப்பு முன் நட்ராஜின் ஜிப்சி ஜீப் தேங்கி நிற்கவும், சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் வள்ளியம்மை. நட்ராஜ் தெரியவும், அவள் முகத்தில் ஒரு தனி மலர்ச்சி. வாசற்புறம் ஓடி வந்தாள்.

"ஹாய் நட்டி..."

"ஹலோ அண்ணி"

"உன்னை நான் ரொம்ப நேரமாக எதிர்பார்த்துகிட்டே இருக்கேன். வழி தெரியாம கஷ்டப்படியா என்ன?"

"வழி தெரியாம எல்லாம் கஷ்டப்பட்ல. ஆனா நான் வேற மாதிரி டிஸ்டர்ப் ஆனேன்..." பேச்சோடு பேச்சாக ஜீப்பில் இருந்து தன் உடமைகளை இறக்கினான். ஆளுக் கொன்றாக எடுத்துக் கொண்டு உள்ளேயும் நுழைந்தனர். நட்ராஜ் முன்னதாக அந்த வீட்டை மேலும் கீழுமாக பார்த்தான்.

"டிபிகல் கவர்ன்மென்ட் குவார்ட்டர்ஸ் அண்ணி..."

"ஆமாம்... வெள்ளையடிச்சே பல வருஷம் ஆகியிருக் கும். உன் அண்ணன் நீ வந்த பிறகு உன்கிட்ட இதை எல்லாம் விட்டு பாக்கச் சொல்லணும்னு சொல்லிக்கிட்டிருந்தார்..."

"நோ... நோ... நான் வந்திருக்கிறது டாக்குமெண்ட்ரி பிலிம் எடுக்க. இந்த கட்டடத்துக்கு வெள்ளையடிக்க இல்ல. அதுக்கு தான் அவர் ஆபீஸ்ல நிறைய அசிஸ்டென்ட்ஸ் இருப்பாங்களே..."

"உடனே டென்ஷன் ஆகாதே. நீ சூப்பர் வைஸ் பண்ண ணும்னு சொல்லிக்கிட்டிருந்தார்..."

"ஆமா, எங்கே அண்ணன்?"

"கடிகாரத்தை பார்... அவர் இன்னிக்கு பாரஸ்ட் ரைட் போகப் போறதா சொல்லிக்கிட்டிருந்தார். அவருக்கு துணையா கோவிந்தன்ங்கிறவனும் போயிருக்கான்..."

"எப்ப வருவார்?"

"லஞ்சுக்கு வந்துடுவார்..." வள்ளியம்மை சொன்ன படியே சமையல் கட்டை நோக்கிச் சென்றாள். உள்ளே யிருந்து வெங்காயம் வதக்கப்படும் வாசனை கும்மென்று பரவிக் கொண்டிருந்தது.

"டிபன் ரெடியாகிட்டிருக்கு போல... ஆமா என் ரூம் எது?" என்று கேட்டான்.

அப்போது காபியுடன் கந்தையய்யன் எதிர்பட்டான். அவனை எதிர்பாராமல் பார்த்த நொடி நட்ராஜ்க்கு தூக்கி

வாரிப் போட்டது. சில அடிகள் தடுமாறியபடியே பின்னால் சென்று கீழேயும் விழப்போனான்.

கந்தையய்யன் வேகமாக காபியை கீழே வைத்துவிட்டு, விலகிக் கொண்ட போர்வையை இழுத்து மூடிக் கொள்ள, வள்ளியம்மையும் சப்தம் கேட்டு திரும்பி வந்தாள்.

"என்ன நட்ராஜ்... என்னாச்சு?"

"யார்... யார் இது அண்ணி?"

"ஓ... இவனா... இப்ப புரியுது. பயந்துட்டியா? இவன் பேர் கந்தையய்யன். சமையல்காரன்."

"இவ்வளவு கோரமாவா?"

"அது ஒண்ணுமில்ல... கந்தையய்யா நீ போ உள்ள. இனிமே இப்படி திடுதிப்னு வந்து நிக்காத... போ..." என்று அவனை உள்ளே அனுப்பியவள், நட்ராஜ் அருகில் வந்து அமர்ந்தாள்.

"நீ காபி குடி... இவன் இப்படி கோரமா இருக்க காரணம் ஒரு கரடி. அது இவன் கன்னத்து சதையை பிச்சு தின்னுடுச்சாம். கேக்கவே பயங்கரமா இருக்கு இல்ல."

"பயங்கரமாவா... அண்ணி வழியில எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைச் சொன்னா, அப்படியே ஆடிப் போயிடு வீங்க. நிச்சயமா சொல்றேன். இது வழக்கமான காடே இல்ல. இட் ஈஸ் எ மிராகிள் பாரஸ்ட்!"

"ஆமாம் நட்ராஜ்... நானும் இங்க வந்ததுல இருந்து குழம்பித்தான் போயிருக்கேன். எனக்கு ஒண்ணுமே புரியல. ஆமா வழியில உனக்கு என்ன நடந்தது?"

- வள்ளியம்மை கேட்க, நட்ராஜும் சகலத்தையும் சொல்லி முடித்தான். அவ்வளவும் சமையல்கட்டுக்குள் இருந்த கந்தையய்யன் காதுகளிலும் விழுந்தபடி இருந்தது. நட்ராஜ் மரம் நட்ட அதிசயத்தை சொன்னபோது கந்தையய்ய

னிடம் ஒரு பரபரப்பு. அந்த பரபரப்போடு நட்ராஜ் எதிரிலும் வந்து நின்றான்.

"என்ன கந்தையா?"

"அம்மா இவர் மரத்தை பார்த்ததா சொன்னாருல?"

"அதுக்கென்ன?"

"அதான்மா கற்பகமரம்..."

"கற்பகமரமா?"

"ஆமாம்மா... கேட்டதை எல்லாம் கொடுக்கிற கற்பக மரம்மா..."

"அது கதை... அது எப்படி இப்ப?"

"ஐயோ இந்த காட்டுலதாம்மா கற்பக மரம் இருக்கு. அந்த மரத்தை தேடி எவ்வளவு பேர் அலையுறாங்க தெரி யுமா?"

"அது சரி... மரம்னா ஒரு இடத்துல வளர்றது... அது எங்கேயாவது நடக்குமா. இல்ல நடக்கத்தான் முடியுமா?"

"அம்மா நீங்க சொல்றது வழக்கமான மரங்களுக்கு பொருந்தும். கற்பக மரத்துக்கு பொருந்தாது. அது சாமி மரம்."

"என்னால அதை பாக்காம நம்ப முடியாது."

"இதோ பார்த்தவரே இருக்காரே?"

"நட்ராஜ்... நல்லா ஞாபகப்படுத்தி சொல்லு. மரம் நடந்ததா?"

"ஆமா அண்ணி... இட் ஈஸ் எ பிக் இல்லூஷன்!"

"இல்லூஷன்னா பிரமை... அதாவது கண்கட்டுன்னு சொல்ல வர்றியா?"

"இந்த மரம் எனக்கு பெரிய புதிரா இருக்கு. இது இயற்கைக்கு மாறான வினோதம்."

"வினோதமா இருந்தாதானே நட்ராஜ் அது மிஸ்ட்ரி."

"நிச்சயமா... ஒண்ணுமட்டும் நிச்சயம் அண்ணி. இங்க எனக்கு நிறைய வேலை இருக்கு. அந்த மரம், அந்த பிணம் தூக்கி மனுஷன், அந்த கூட்டமான மனுஷங்கன்னு யாரையும் நான் விடப் போறதில்ல. என் அசிஸ்டண்ட் திலக்கை வரச் சொல்லியிருக்கேன். அவனோட சேர்ந்து என் டாக்கு மென்ட்ரிக்கு ஒரு டாபிக்கல் நேம் வைக்கப் போறேன். இரண்டுல ஒண்ணு பார்த்துடுறேன்" நட்ராஜிடம் அதீதமான துடிப்பு வெளிப்பட்டது.

"ஐயா... உங்களுக்கு நானும் உதவி செய்யறேன். நான் இந்த காட்டை விட்டு போகாம இங்கேயே இருக்க காரணமே அந்த கற்பகமரம்தாங்க..." என்றான் கந்தையய்யன்.

"அதுகிட்ட தங்கம் வேணும், வைரம் வேணும்னு கேக்கத்தான் எல்லாரும் ஆசைப்படுவாங்க. நான் என் பழைய முகத்தை கேக்க விரும்புறேங்க."

அவன் அப்படி சொன்னபோது பரிதாபமாக இருந்தது.

"அப்ப நீ அந்த மரம் கேட்டதை தரும்னு நம்புறியா?"

"அட என்னங்க நீங்க... அதுக்காக காட்டுல எவ் வளவுபேர் அலையுறாங்க தெரியுமா?"

"இல்லையய்யா... அப்படி எதுவும் இருக்க வாய்ப்பே இல்லை..."

"நட்ராஜ் நீ என்ன சொல்ற?"

"அண்ணி... எனக்கு தெரிஞ்சு அந்த மரம் ஒரு மேன் மேட்... அதாவது மரம் மாதிரி செய்து அதுக்குள்ள யாரோ பூந்துகிட்டு மெக்கானிக்கலா அதை ஆபரேட் பண்ணி விட்டு இருக்கலாம் இல்லையா?"

- நட்ராஜ் கேட்கவும் வள்ளியம்மை, கந்தையய்யன் இருவருக்குமே முகத்தில் மிகுந்த ஏமாற்ற உணர்வு பரவத் தொடங்கியது.

"ஏன் உங்க மூஞ்சி ஒரு மாதிரி போகுது?"

"பின்ன... நான் அது நிஜமா இருக்கும்னுல்ல நினைச்சு கிட்டிருக்கேன்?"

"ஐயோ அண்ணி... அப்படி ஒண்ணு நிஜமா இருந்தா, அதை அண்ணன் டிபார்ட்மெண்ட்டே எப்பவோ கண்டு பிடிச்சு அது மந்திரி வரை போய்... அப்புறம் சிஎம் காதுக்கு போய் அதை அப்படியே ஒரு வலை வீசி கோழி மாதிரி அமுக்கி, அதை டெல்லி வரை கொண்டு போய் இருப்பாங்க. அதான் கேட்டதை எல்லாம் தருமே? நான் பிரதம மந்திரி ஆகணும். இல்ல உலகமே என் பேச்சை கேட்கணும். எல்லாரும் என் கால்ல கிடக்கணும்னு கேட்க மாட்டாங்களா?"

"அப்படிங்கிற?"

"என்ன அப்படிங்கிற? பத்து வருஷத்துல இரண்டு மலையையே வெடி வெச்சு காலி பண்ணி வித்து ஏப்பம் விட்டுட்டாங்க... கல்லு மண்ணையே விடாதவங்க, கற்பக மரத்தையா விட்டு வைப்பாங்க?"

"நீ சொல்றதும் வாஸ்தவம்தான். நீ சொல்ற மாதிரி அது மேன்மேடா, அதாவது மனிதர்கள் சதியா இருந்தா அதை கண்டுபிடிச்சிருப்பாங்கள்ல...?"

"கிழிச்சாங்க... கண்டுபிடிச்சா காசு கிடைக்குமா? எதுலயும் கோடிகளுக்கு இடமிருக்கணும். அப்பதான் ஒரு இன்ட்ரஸ்ட். எத்தனை கொலைகாரங்களை பிடிச்சிட்டாங்க? பல கொலைகளுக்கு யார் காரணம்னு இன்னும் தெரியலியே...?"

"அப்ப இது மிஸ்ட்ரி இல்லை, ஏதோ சதிங்கிறதுதான் உன் கருத்தா?"

"அப்சல்யூட்லி... மிஸ்ட்ரியாவது மண்ணாங்கட்டியாவது?"

"அப்ப கூட்டமா திரியறவங்க யார்?"

"அதான் வானத்து மனுஷங்கன்னு சொன்னீங்களே?"

"அது இந்த காட்டுவாசிகள் வெச்ச பேர். உண்மைல அவங்க யார்?"

"அதைத்தான் கண்டுபிடிக்கணும். அண்ணன் டீட்டிங் கிற பேர்ல அதை செய்யட்டும். நான் பர்சனல் இன்ட்ரஸ்ட்டுல அதை செய்யறேன். திலக்கும் வந்துட்டா எனக்கு ரொம்ப உதவியா இருக்கும்."

கந்தையய்யாவிடம் கனத்த அமைதி.

"என்னப்பா... உன் கனவை நான் கலைச்சிட்டேனா? நீ போய் டாக்டரை பார்த்து பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கிற வழியைப் பார். இப்படியே எல்லாரையும் பயமுறுத்திகிட்டு திரியாதே... கற்பகமரமெல்லாம் கட்டுக்கதை."

"இல்லீங்க... இப்படி சொன்ன பலபேரை இந்த காடு போயிட்டுவான்னு சொல்லிடுச்சு. அதேநேரம் இதை நம்பின வங்களை இது கை விடலைங்க."

- கந்தையய்யன் பதில் நட்ராஜை திகைக்க வைத்தது.

"சரிப்பா... நீ போய் வேலையை பார். இந்த காடு என்னை என்ன பண்ணுதுன்னு நான் பார்க்கிறேன்."

- நட்ராஜின் சவால் குரல் வள்ளியம்மையை கலக்கியது.

"நட்டி... வந்த நீ இன்னும் கால் கை கூட கழுவிக்கலை. அதுக்குள்ளாற இவ்வளவு பேச்சும், அதுல ஒரு வேகமும் அவசியமா?"

"சாரி அண்ணி... பாத்ரூம் எங்க இருக்கு?"

கேட்டு எழுந்து சென்றான். கந்தையய்யன் நின்று கொண்டே யிருந்தான்.

"நீ போய் வேலையை பார் கந்தையய்யா..."

"பார்க்கிறேம்மா... இவருக்கு கல்யாணம் ஆகி பிள்ளை குட்டிக இருக்கா?"

"இல்ல... ஏன் கேட்கிற?"

"பேசாம ஊரைப் பார்க்க அனுப்பி வைங்க. இவர் வேகம் ஆபத்துலுதான் முடியும்."

"அவன் எதிர்ல சொன்னா உன்னையும் அப்புறம் சந்தேகப்பட ஆரம்பிச்சுடுவான். போய் வேலையை பார்."

வள்ளியம்மை கடுமையான குரலில் பேசினாள்.

9

மந்திரி தன் பரிசோதனையைத் தொடங்கினார். அரசன் அந்த மூலிகையையும் நீரையும் குடிப்ப தற்கு முன், வேறு யாராவது ஒருவர் அதை உண்டு பார்த்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பிய மந்திரி, அதற்காக யாரைத் தேர்வு செய்யலாம் என்று யோசித்தார். அப்போது அந்த அரசவைக் காவலன் ஒருவன் இருமியபடி நிற்பது காதில் விழுந்தது. வயதாகி ஓய்வு பெறும் நிலையிலுள்ள அவனை அழைத்து உண்ணச் சொன்னார்.

தான் ஒரு பரிசோதனைப் பொருளாக பயன் படுத்தப்படுவதை அவன் விரும்பவில்லை. எனவே அவன் தயங்கியபடியே 'அரசே தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள். இது போன்ற பரிசோதனைகளை மிருகங்களிடம் செய்து பார்ப்பதே நல்லது' என்றும் கூறினான். அரசனுக்கும் உடனே மிகவும் வயதாகி விட்ட தன் பட்டத்து குதிரையின் நினைப்பு

வந்தது. குதிரையும் அரசனின் கொலுமண்ட பத்துக்கு அழைத்து வரப்பட்டது.

மிகவும் வயதாகி விட்ட அது வந்து நின்ற நிலை யில் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டது. அதுவே அதனுடைய முதுமையை உணர்த்தியது. திருடனும் அதற்கு தன் மூலிகை இலைகளையும், நீரையும் உண்ணக் கொடுத்தான். நேராக அதை உண்ண மறுத்து அடம்பிடித்ததால், இலை களை கொள்ளுடன் கலந்தும், நீரை தனியே ஒரு மண்தொட்டியில் வைத்தும் குடிக்கச் செய்தனர். அரசவையே அங்கு நடப்பதை கவனிக்கத் தொடங் கியது. எல்லாரிடமும் பரபரப்பு. கொலைகாரனிடமும் பரபரப்புடன் பயமும் உருவாகி விட்டிருந்தது. தப்பித்தவறி குதிரைக்கு எதாவது ஆனால், அரசர் தன்னை தூக்கில் போடப் போவது உறுதியாகி விடும். இறுதியில் தப்பித்தும் பலனில்லை என்றாகி விடும். எனவே விழித்தபடி நின்றான். ஆனால், அவன் பயந்தபடி எதுவும் ஆகிவிடவில்லை. அந்த குதிரை மெல்ல எழுந்து நின்றது. பின் உற்சாகமாக கனைக்க ஆரம்பித்தது. பின் அங்கிருந்து ஓடத் தொடங்கியது. கொலைகாரனுக்கும் பிறகே உயிர் வந்தது. அரசனும், மந்திரியும் அடுத்த நொடியே அவனிடம் எங்கே அந்த மூலிகையும் நீரும் என்று கேட்டனர். ஆனால், அதுவோ மிகவும் குறைவாக இருந்தது.

- தாணுமாலயவன சரிதம்.

"இந்த விருட்ச இலைகளோட
டவுனுக்கு ஒரு சித்த
வைத்தியரை பார்க்க
போயிட்டா. அவளை தீ
வெச்சு கொன்னுட்டாங்க..."

"இங்க நின்னுக்கிட்டு
சொல்லாதீங்க. அப்புறம்
உங்களுக்குத்தான் அது நல்லது
இல்லை. இப்பதான் இந்த காட்டுக்கு
வந்துருக்கீங்க..."

வள்ளியம்மை கந்தையய்யனை எச்சரித்தாள். ஆனால், கந்தையய்யன் அதற்கெல்லாம் அசரவில்லை.

"அம்மா... நான் இதே வீட்ல இந்த மாதிரி பல பேர் பேசிக் கேட்டிருக்கேன். வம்பை அநாவசியமா விலைக்கு வாங்காதீங்க. அவ்வளவுதான் சொல்வேன்" என்றான்.

"எல்லாரும் இப்படியே பேசி பயந்தா, இந்த காட்டை யார்தான் கந்தையய்யா புரிஞ்சிக்கிறது. நட்ராஜ் ரொம்ப தைரியசாலி. நல்ல புத்திசாலியும் கூட."

"தைரியமும், புத்திசாலித்தனமும் எங்கே தேவைப் படுதோ அங்கே காட்டப்படணும். இந்த வீட்டுக்கு அது அவசியமில்லை. ஐயா சந்தோஷமா இங்க சர்வீஸ் பண்ண லாம். வேணும்னா கற்பகமரம் கண்ணுல பாணும்னு வேண்டிக்குங்க. அப்படி அது கண்ணுல பட்டுட்டா, அது கிட்ட என்ன வேணுமோ அதை கேட்டு வாங்கிக்கலாம்..."

"ஆமா, இந்த கற்பக மரத்தை நீ நிஜமா நம்புறியா?"

"அட என்னம்மா நீங்க... ஐயா வர்ற வழியில பாத்துட்டே வந்துருக்காரு. அப்புறமும் சந்தேகப்படு றீங்களே...?"

"அதான் அது நிஜம் கிடையாது, மரம் மாதிரி ஒரு பொம்மை, அது பின்னால மனுஷங்க இருக்கலாம்னு சொன் னானே?"

"சேச்சே... அப்படி எல்லாம் இருக்க முடியாதும்மா. நான் நம்ப மாட்டேன்..."

"உன்னை யார் நம்பச் சொன்னது? போய் வேலையைப் பார். இன்னிக்கு சமையல் பிரமாதமா இருக்கணும். நட்ராஜ் ஒரு சாப்பாட்டுப் பிரியனும்கூட..."

"வள்ளியம்மை அவனிடம் அதற்கு மேல் பேச பிரியம் இல்லாதவளாக வெட்டிவிடத் தொடங்கினாள். அவனும் அரை மனதாக விலகினான்.

அந்த வனத்தின் மலைப்பாதையில் சிவக்குமாரின் ஜீப் காற்றைக் கிழித்தபடி பயணப்பட்டுக் கொண்டிருந்தது. சிவக்குமாரே ஜீப்பை ஓட்டிக் கொண்டு வர, அருகில் கோவிந்தன்.

மலைத்தலங்களுக்கே உரிய காட்டுத்தாவரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்க, பருமனான மரங்கள் நடுநடுவே வானை முட்டிக் கொண்டு தழைத்திருந்தன. கீழ்பாகம் முழுக்கவே கருங்கும்மென்ன இருள். ஜீப்பின் இருபுறமும் புதர் தழைகள் உரசும் அளவு பாதை குறுகி விட்டிருந்தது. அதையும் மீறி அப்படி உரசிடும் போது, அதில் இருந்து சில அட்டைகள் கோவிந்தனின் தோள் மேல் விழுந்து அவன் பதட்டமடையவும், முன் மார்பில் விழுந்து வயிற்றுப் பகுதியை அடைந்து விட்டன. உடனேயே அவன், "சார் வண்டியை நிறுத்துங்க. அட்டைங்க வயித்து மேல கிடக்கு" என்று அலறினான்.

சிவக்குமாரும் வண்டியை கிரீச்சிட்டு நிறுத்தினார். கோவிந்தன் கீழே இறங்கி சட்டையை கழற்றி பின் பனியனைக் கழற்றி விட்டு வயிற்றைப் பார்த்தபோது, ஒரு நான்கைந்து அட்டைப் பூச்சிகள் வயிற்றின் தொப்புள் பரப்பை சுற்றி கறுப்புக் கொப்புளங்கள் போல ஒட்டிக் கொண்டு, ரத்தத்தை உறிஞ்ச ஆரம்பித்திருந்தன.

"ஐயோ சார் பார்த்தீங்களா...?" என்று சிவக்குமாருக்கு காட்டினான். அவருக்கு இது ஒன்றும் புதிதில்லை. இப்படி அட்டைப்பூச்சிகள் ஒட்டிக்கொண்டால் அதன் மேல் மூக்குப் பொடியை தூவினால், அது காரம் தாங்காமல்

மெல்ல பிடித்த பிடியை விட்டு சுருண்டு கீழே விழுந்து விடும். ஆனால், மூக்குப் பொடி அப்போது பாக்கெட்டில் இல்லை.

"ஏம்ப்பா உன் கிட்ட மூக்குபொடி இல்லை?"

"இல்ல சார். தீப்பெட்டி இருந்தா பத்தவையுங்க சார். வேற வழியில்ல..." என்று பதட்டப்பட்டான்.

அதற்குள் அந்த அடைப்பூச்சி கோலி குண்டு சைசில் இருந்து எலுமிச்சைபழம் அளவுக்கு பருத்துவிட்டது.

"ஒரு வாட்ச்சர் இப்படியா அட்டைப்பூச்சி கிட்ட மாட்டுவ. கைல எப்பவும் பொடியோ இல்ல, அதான் இப்ப ஸ்ப்ரேல்லாம் வந்துருக்கே. அத வெச்சிக்க வேண்டாம்? என் கிட்ட இப்ப பார்த்து தீப்பெட்டியும் இல்ல..." என்று கையை உதறினார் சிவக்குமார்.

நல்ல வேளையாக சில தாணுமாலயக்குடி மக்கள் தோளில் பலாக்காய், செவ்வாழைத்தார் என்று சுமந்தபடி வந்து கொண்டிருந்தனர். கோவிந்தனைப் பார்க்கவும் நெருங்கி வந்து வயிற்றில் அட்டைகளைப் பார்த்து அகலக் கண் விரித்தனர். "எலே வேடிக்கை பாக்காம இதை புடுங்குங் கப்பா..." என்றான் கோவிந்தன்.

ஒரு தாணுமாலயன் மூக்குப் பொடி வைத்திருந்தான். அதை எடுத்து அட்டைகள் மேல் தூவி விட்டு, பக்கத்தில் முளைத்திருந்த கீத்துச் செடியின் கூரிய ஊசி போன்ற முனை கொண்ட பாகத்தால் அந்த அட்டைகளைக் குத்தவும், கருஞ்சிவப்பாய் ரத்தம் அதன் வழியாக வெளியே கசிந்திட, அட்டைகளும் உதிர்ந்து விழுந்தன.

"அப்பாடா..." என்றான் கோவிந்தன்.

"ஏஞ்சாமி அட்டை எப்பவும் கால்ல ஏறும். இப்படி வவுத்துல ஏர்ற அளவு எங்க படுத்து கெடந்தீங்க?" என்று கேட்டான் ஒரு ஆலயக் குடியன்.

"எலேய்... ஜீப்புல வர்றைல உதிர்ந்து மேல விழுந்து உள்ள இறங்கிடுச்சுப்பா.."

"பார்த்துல்ல ஓட்டிக்கிட்டுவரணும்?"

"போதும்... நீ வாயை பொத்து."

"கோவிச்சுக்காதீங்க சாமி. ஆமா இது யாரு?"

"புது ஆபீசர்யா... வணக்கஞ் சொல்லுங்க."

"அப்படியாக... வந்தனமுங்க..."

"வந்தனமா... நல்ல தமிழா இருக்கே..."

"எங்க வழக்கமுங்க. நாங்க இந்திரக்குடி மக்க..."

"குட்... எல்லாரும் ஜீப்ல ஏறிக்குங்க. போற வழியில விட்டுடறேன்..."

"நாங்க தாணுமாலய விருட்சத்துக்கு படையல் போட போய்கிட்டிருக்கோமுங்க. இதெல்லாம் எங்க உழைப்பால விளைஞ்சது. முதல்ல பறிக்கிறதெல்லாம் விருட்சப் படையலுக்குங்க..."

"விருட்சப் படையலா... புது வார்த்தையா இருக்கே...?"

"ஆமாங்கய்யா.. விருட்சப் படையல் போட்டா விருத்தி ஆகிட்டே போகும்னு சொல்வாங்க... சொல்றதென்ன, ஆகிக்கிட்டும் இருக்குது. நாங்க எல்லர்ம் சந்தோஷமா இருக்கோம்."

அவர்கள் பேசப்பேச சிவக்குமாருக்கும் அந்த விருட்சத்தை பார்க்கும் ஆவல் அதிகரித்தது.

"சரி ஜீப்ல ஏறுங்க... உங்க விருட்சம் இருக்கிற இடத்துக்கு போவோம்..." என்றார். அவர்கள் ஏறிக்கொள்ள ஜீப்பும் கிளம்பியது. அவர்கள் ஜீப்பின் பின்புறத்திலும் மலம் கழிப்பவர்கள் போல குந்தித்தான் அமர்ந்தனர்.

"எலேய்... சீட்டுல எங்களைப் போல உக்காருங்கடா. உங்களோட இம்சை..." சலித்துக் கொண்டான் கோவிந்தன்.

"அட நீங்க ஒண்ணு. எங்க இடத்தை தவிர நாங்கதான் எங்கேயும் தங்கவோ, உட்காரவோ கூடாதுங்களே..."

"இவங்க என்ன சொல்றாங்க கோவிந்தன்?"

"சார் இந்த மாதிரி இவங்க பைத்தியகாரத்தனமா பல சட்ட திட்டங்களை வெச்சுட்டிருக்காங்க சார். படிப்பறிவு இல்லாததால நாம எவ்வளவு சொன்னாலும் புரிஞ்சுக்கவும் மாட்டாங்க. பேசினதையே பேசுவாங்க..."

"ட்ரைபல்ஸ்னா அப்படித்தான். நாமதான் கொஞ்சம் கொஞ்சமா புரிய வைக்கணும்..."

"அதெல்லாம் இவங்க கிட்ட நடக்காது சார். அவ்வளவு ஏன்... இந்த மலையை விட்டு கீழ இறங்கி டவுனுக்குள்ள கூட போக மாட்டாங்க. ஊர் எல்லைல நின்னு காய்கறி பழத்தை வித்துட்டு, பதிலுக்கு அரிசி பருப்பு வாங்கிட்டு மேல வந்துடுவாங்க. ஒருத்தன் டவுன்ல சினிமா பாக்கப் போயிட்டான். அவனை ஒரு மாசம் இப்ப பாக்கப் போற விருட்சத்துக் கிட்ட முட்டி போட வெச்சுட்டாங்கன்னா பார்த்துக்குங்களேன்."

"ரியலி...?"

"ஆமாம் சார்... நல்லவேளை அவன் ஆணா இருக்கவும், இந்த தண்டனையோட போச்சு. பொண்ணா இருந்தா அவ்வளவுதான்..."

"என்ன பண்ணுவாங்க?"

"அவ எரியற நெருப்புல நடந்து வெளிய வரணும். வரமுடியுமா? அப்படியே கருகிச் சாக வேண்டியதுதான். குருவின்னு ஒருத்தி... இந்த விருட்ச இலைகளோட டவுனுக்கு ஒரு சித்த வைத்தியரை பார்க்க போயிட்டா. அவளை தீ வெச்சு கொன்னுட்டாங்க சார்..."

கோவிந்தன் சொல்லிக் கொண்டே வர, தாணுமாலய விருட்சமரம் உள்ள பகுதி வந்துவிட்டது.

அங்கே தாணுமாலயக்குடிகளின் தலைவரா ஆலய மூப்பரும் இருந்தார். அவர் கையில் திரிசூலத்தை ஞாபகப் படுத்தும் மூன்று கிளைகள் பாய்ந்த இடத்தில் வெட்டி எடுக்கப்பட்ட புங்கமரத்து கம்பு. ஆறடி உயரம் இருந்த அது மொழுமொழுவென்று இருந்தது. அதைப் பிடித்தபடி இடுப்பில் ஒரு நாலுமுழ வேட்டியும், தோளில் ஒரு துண்டு மாக இருந்தவர் சிவக்குமாரைப் பார்த்து பெரிதாக கும்பிடு போட்டார். அப்போது, 'அதிகாரி ஐயாவுக்கு வந்தனமுங்க..' என்று அவர் சொன்ன விதம் சிவக்குமாரை ஈர்த்தது. சிரித்த படியே பதிலுக்கு சிவக்குமாரும் வணங்கினார். நூறாண்டு கடந்தவரைப் போலவே தெரியவில்லை. ஒரு எழுபது வயது மதிக்கலாம். முகத்திலும், தலையிலும் புதர் போல முடி. அவர் நாவிதனைப் பார்த்தே பலப்பல வருடங்கள் ஆகியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

சிவக்குமாரின் பார்வை அப்படியே தாணுமாலய மரத்தின் மேலும் சென்றது. அடிபாகம் முழுக்க மஞ்சள் பூசி, குங்கும பொட்டு வைக்கப்பட்டிருக்க அது ஓங்கி வளர்ந் திருந்தது. கீழே சிவலிங்கத்துக்கான ஆவுடை போலவே பருமன்... மேலே சற்று மெலிந்த நிலையில் மரம் மேலெழும்பி இருந்தது. அந்த பாகம் சற்று கறுப்பாக தெரிந் தது. அதற்கும் மேலே மஞ்சளாய் மரத்தண்டு... ஒரே மரத்தில் கறுப்பு, மஞ்சள், அரக்கு என்று மூன்று வண்ணங்கள். மரத்தைச் சுற்றி வலம் வந்து வணங்குவதற்கான பாதைத் தடயம். சூழலே மிகச் சுத்தமாக இருந்தது. சற்று தள்ளி ஓரமாக சில தாணுமாலயக் குடியை சேர்ந்த சிறுவர் சிறுமிகள் மேலே மரத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

"ஆமா... இவங்க மரத்துல எதை அப்படி பார்க்கி றாங்க?"

"அதுவா சார்... மரத்து இலை கீழ விழுமான்னுதான் அப்படி பார்த்துக்கிட்டிருக்காங்க..."

"இலையா... அப்படி என்ன இருக்கு இந்த இலைல?"

"இது கைல இருந்தா நல்லது நடக்கும்ங்கிறது ஒரு நம்பிக்கை சார். இதை இவங்க டவுன் எல்லை போய் வித்து அரிசி, பருப்பு வாங்கிட்டு வருவாங்க..."

"இதுக்கு ஒரு மதிப்பு இருக்குன்னா இலைகளை திருடுறதுங்கற விஷயம் உருவாகியிருக்குமே?"

"இந்த மரத்து கிட்ட அதெல்லாம் கூடாது சார். திருடிட்டு ஒருத்தன் இந்த காட்டை விட்டு நல்லபடியா போக முடியாது சார்..."

"அப்ப அதை என்னன்னு பார்த்துடுவோம். அதோ அந்த கிளையை ஒடி..." சிவக்குமார் கட்டளையிட, கோவிந்தன் அதைக் கேட்டு சற்று வெளிறிப்போனான்.

"சார்..."

"என்னய்யா? இந்த மாதிரி இலையை விக்கிறது, வாங்குறது எல்லாம் முட்டாள்தனம். இவங்கதான் படிப்பறிவு இல்லாததால் அப்படி நடந்துகிட்டா, நாம அதை என்க்ரேஜ் பண்ணக் கூடாது. முதல்ல மரத்தை கும்பிடுறதே முட்டாள் தனம். பரவாயில்ல ஒழிஞ்சு போவுதுன்னு விடலாம். இது ஆனாலும் டூ மச்!"

சிவக்குமார் ஒரு அதிகாரியாக பேசியது, ஆலய மூப்பர் முதல் அனைவரையும் அதிரச் செய்தது.

"சாமி... நீங்க இப்படி எல்லாம் சொல்லக் கூடாது. நாங்க இந்த மரத்தை உசுரா நினைச்சு கும்பிட்டு வர்றோம்."

"அதுக்காக இலைக்காக இப்படி காத்திருக்கிறது, அதை விக்கிறதெல்லாம் தப்பு..."

"காசுக்கு விக்கலைங்க. இதால அரிசி, பருப்பு கிடைக்குது. நம்புறவங்க வாங்குறாங்க..."

"இதோ பாருங்க. ஒரு இலையால எதுவும் நடக்காது. அதுவே மரத்துல வாழ முடியுமா? பழுத்து போய் உதிர்ந்து

கீழே விழுது. அது ஒரு குப்பை..."

"அப்படி எல்லாம் இங்க நின்னுக்கிட்டு சொல்லாதீங்க. அப்புறம் உங்களுக்குத்தான் அது நல்லது இல்லை. இப்பதான் இந்த காட்டுக்கு வந்துருக்கீங்க. உங்களால இந்த காட்டுக்கும், இந்த காட்டாலால உங்களுக்கும் நல்லது நடக்கணும்க..."

"இதோ பாருங்க பெரியவரே... நான் படிச்சவன். என்னை உங்க முட்டாள்தனமான நம்பிக்கைகளால மிரட்டாதீங்க. கோவிந்தன் அந்த கிளையை ஒடி. இவங்களுக்கு இதெல்லாம் கற்பனையான எண்ணங்கிறதை புரிய வெச்சே தீரணும்."

சிவக்குமாரிடம் தீவிரம். ஆனால், கோவிந்தன் தயங்கினான். அது சிவக்குமாருக்கு புரிந்தது. அவரே எகிறி கிளையை பிடித்தார். அதில் நிறையவே இலைகள். மூப்பரோ அதைப் பார்த்து அதிர்ந்தார்.

"ஐயா... உங்க வரைல எல்லாமே ஒடியப் போகுதுங்க" என்றார்.

"அதையும் பார்க்கிறேன்..." என்ற சிவக்குமாரின் பதிலில் ஒரு தனி தெம்பு.

10

மூலிகையும் நீரும் குறைவாக இருந்ததால் அதனைப் பார்த்த அந்த கொலைகாரன், 'அரசே... எனக்கு அனுமதி அளியுங்கள். தற்சமயம் இருந்தது குதிரைக்கு என்று போய் விட்டது. நான் திரும்பவும் வனத்துக்கு சென்று தான் எடுத்து வர வேண்டும்' என்றான். 'சரி போய் எடுத்து வா' என்றார் அரசர். அப்படியே அவன் விலகவும், தனியாக மந்திரியைப் பார்த்து, 'மந்திரி இவனைப் பின் தொடர்ந்து சென்று

இவன் எங்கிருந்து இதை கொண்டு வருகிறான். அந்த வனம் எங்குள்ளது என்றும் தெரிந்து கொள்ளுங்கள். அந்த வனம் எங்கிருந்தாலும் சரி, அது நமக்கு சொந்தமாக வேண்டும். அதன் பின் இவனையும் கொன்று விடுங்கள். வனம் பற்றிய ரகசியமும் அதன்பின் நமக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்கும்' என்றார்.

அரசனின் சுயநலமான எண்ணம் மந்திரிக்கு புரியவும், மந்திரி மனம் சற்று வேதனைப் பட்டது. மந்திரிக்கு அரசனைப் பற்றி நன்றாக தெரியும். அரசனுக்கு அந்த வனம் பற்றியும், மூலிகை பற்றியும் தெரிந்து விட்டால் தன்னைக் கூட கொன்று விட்டு தான் மட்டுமே அந்த ரகசியம் தெரிந்தவராக அரசர் மாறி விடுவார். எனவே இந்த விஷயத்தில் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார்.

ரகசியமாக அந்த கொலைகாரனையும் தொடர்ந்தார். அவனும் தான் தவறி விழுந்த பள்ளத்தை தேடி கண்டுபிடித்து அதில் திரும்ப இறங்கினான். உள்ளே கண்ணில் பட்டதில் குதிரைக்கு கொடுத்த மூலிகை செடியை ஞாபகம் வைத்திருந்து பறித்தான். பின், தான் கொண்டு வந்திருந்த சுரைக்குடுவையில் அங்குள்ள ஊற்று நீரையும் எடுத்துக் கொண்டு மேலே ஏறி வந்தான். மந்திரி தயாராக நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்க்கவும் அதிர்ந்தான். அவரும் 'இங்கேதான் அந்த மூலிகை இருக்கிறதா? சுனையும் இங்கேதான் இருக்கிறதா?' என்று கேட்டு சிரித்தார். அவன் ஆமோதித்தான்.

அடுத்த நொடியே தன் வாளால் அவனை வெட்டினார். அப்படியே சுருண்டு விழுந்து இறந்தான். மந்திரியும் அந்த மூலிகை மற்றும் குடுவை நீரோடு

அரசனைக் காணப் புறப்பட்டார். புறப்படும்போது, அந்த கொலைகாரனின் உடலையும் தூக்கி தான் வந்த ரதத்தில் போட்டுக் கொண்டார்.

அவர் மனதுக்குள் புதியதாய் ஒரு திட்டம்.

– தாணுமாலயவன சரிதம்.

"ஒடிச்சதோட போகட்டும்.
இதை கசக்கி சவால்லாம்
வேண்டாம். இதுக்கே
உங்களுக்கு எப்ப என்ன
நடக்குமோன்னு தெரியாதப்ப
இதை கசக்கி நீங்களும்
கசங்கிடாதீங்க..."

"மரங்கள் வெட்டப்பட்டதாவோ,
கடத்தப்பட்டதாவோ புகார்கள்
இல்லை. அதே நேரம் இந்த
தாணுமாலயக்குடி மக்கள்
முட்டாள்களா, இல்ல புத்திசாலி
களான்னு தீர்மானிக்க முடியாத
படிதான் குறிப்புகள் இருக்கு..."

ஜீப் கெஸ்ட் ஹவுஸ் முன் நின்றது. முன்னதாக நட்ராஜ் வந்திருந்த ஜிப்சியும் நின்று கொண்டிருக்க, அதைப் பார்க்கவும் சிவக்குமாரிடம் உற்சாகம்.

அவர் கையில் அந்த விருட்சமரத்தில் ஒடித்த கிளைப் பகுதி. அதோடு இறங்கியவர் கோவிந்தனிடம், 'கோவிந்தன் என் தம்பி வந்துருக்கான். இது அவன் வண்டிதான்...' என்ற படியே உள்ளே சென்றார். கோவிந்தனும் பின் தொடர்ந்தான். அவன் முகத்தில் சுரத்தே இல்லை.

கிட்டத்தட்ட இதே தவறை இதற்கு முன் ஆபீசராக இருந்து மாற்றலாகிப் போன காளிமுத்துவும் செய்திருந்தார். அவர் சிவக்குமார் அளவு கிளையை ஒடிக்கவில்லை. ஆனால்,

தாணுமாலயக் குடிகள் பொறுக்கி வைத்திருந்த இலையை பிடுங்கி கசக்கிப் போட்டார்.

அதற்கே அவர் மலையில் ஒரு பள்ளத்தில் தவறி விழுந்து மேலே வர முடியாமல் மூன்று தினங்கள் கிடந்து, பின் ஒரு தாணுமாலயக் குடியின் கண்ணில் தற்செயலாகப்பட்டு காப்பாற்றப்பட்டார். அப்போது அந்த தாணுமாலயக் குடியனும் அவரைப் பார்த்து, "இலையை கசக்காதீங்க... கசங்கிப் போயிடுவீங்கன்னு சொன்னோம். கேட்டீங்களா... இப்ப பாருங்க..." என்று சொன்ன போது அவனுக்கு மறுப்பாக எதையும் பேச முடியவில்லை.

அவருக்கு அப்படி நடந்தது. இவருக்கு எப்படி நடக்குமோ என்று கோவிந்தன் மனம் பயந்தபடியேதான் உள்ளே சென்றான்.

உள்ளே நட்ராஜ் குளித்து முடித்தவனாக பார்க்க படு பிரஷ்ஷாக பெர்முடாஸ் டிரவுசர், டீ ஷர்ட் என்று சிவக் குமாரை எதிர் கொண்டான்.

"வாடா எப்ப வந்த?"

"நான் காலைலேயே வந்துட்டேன். என்ன பிரதர் கைல கிளை?"

"இதுவா... கேட்டா சிரிப்ப..." என்றபடி டைனிங் டேபிள் மேஜை மேல் தூக்கிப் போட்டார் சிவக்குமார். யதார்த்தமாக அந்தப் பக்கம் வந்த கந்தையய்யன் அதைப் பார்த்தவனாக வேகமாக நெருங்கி வந்து அதை கையில் எடுத்தான்.

"ஐயா இது விருட்ச மரக்கிளை தானே?" என்றான் படபடப்பாக.

"ஆமாம்... என்ன நீயும் இதை அதிர்ஷ்டம் தரக் கூடியதுன்னு நம்புறவனா?"

"என்னங்க நீங்க இப்படி கேட்டுட்டீங்க... ஆமா எப்படிங்க இவ்வளவு இலைங்க கிடைச்சது?"

"அது எங்க கிடைச்சுச்சு... ஐயா ஒடிச்சுட்டார்...!"

என்று இடையில் புகுந்தான் கோவிந்தன்.

"என்னது ஒடிச்சுட்டீங்களா... ஐய்யய்யோ!" கந்தையய்ய னிடம் பதைப்பு.

"ஏய் நிறுத்து... எதுக்கு பதைக்கிற... இது ஆப்ட்ரால் ஒரு மரத்தோட கிளை. இதுக்கு மலை ஜனங்கதான் போலியா ஒரு பவரை கொடுத்துட்டாங்கன்னா, நீயும் அதுக்கு மேல கொடுப்ப போல இருக்கே?"

சிவக்குமார் அதட்டினார்.

"ஐயா... இதுக்கு ஒரு சக்தி இருக்கிறது. நிஜம்ங்க. இதை நீங்க அனுபவிச்சு பார்த்தாத்தான் ஒத்துக்குவீங்க."

"இதோ பார்... மனுஷனுக்கு ஆறாவது அறிவை கொடுத் திருக்கிறது நல்லபடியா யோசிக்கிறதுக்காக. இப்படி அனர்த்தமா பேசுறதுக்கு இல்ல. ஆமாம் எதை வெச்சு இதுக்கு சக்தி இருக்குங்கிறே?"

"என்ன அப்படி கேட்டுட்டீங்க... சக்தி இல்லாமலா இதை காட்டுக்கு வெளிய ஜனங்க வாங்குறாங்க?"

"ஜனங்க எதை வாங்கல? டிவில கூடதான் கண்ட விளம்பரம் வருது. எந்திரம் வாங்குங்க. கல் வெச்ச மோதிரம் வாங்குங்க. அப்புறம் உங்க வாழ்க்கையே மாறிடும்னு... அதை வாங்கி எவ்வளவு பேர் உயர்ந்துட்டாங்க? எல்லாம் சும்மா... இதோ உன் எதிர்லேயே இதை கசக்கி குப்பைல போடுறேன். எனக்கு என்ன ஆகுதுன்னு பார்க்கிறேன்."

சிவக்குமார் கந்தையய்யனுக்கு பதில் சொல்லும் போக்கில், அந்த கொப்பை கையில் எடுத்து இலைகளையும் உருவத் தொடங்க, கோவிந்தன் பாய்ந்து தடுத்தான்.

"ஐயா... ஒடிச்சதோட போகட்டும். இதை கசக்கி சவால்லாம் வேண்டாம். இதுக்சே உங்களுக்கு எப்ப என்ன

நடக்குமோன்னு தெரியாதப்ப இதை கசக்கி நீங்களும் கசங்கிடாதீங்க..." என்றான்.

அந்த கொப்பும் அவன் முதுகுக்கு முன்னால் மறைந்து கொண்டது.

சிரித்தார் சிவக்குமார்.

சேர்ந்து கொண்டான் நட்ராஜ்.

நடுவில் வள்ளியம்மை திருதிருவென விழித்தாள்.

"சரி கோவிந்தா... அதை தூக்கி போடு. இவன்தான் என் தம்பி நட்ராஜ். இந்த காட்டை சுத்திப் பார்த்து படம் பிடிக்க வந்துருக்கான். இவனுக்கு எல்லா இடத்தையும் காட்டு. இவன் ஒரு வீடியோ பிலிம் மேக்கர். அதாவது விளம்பரப் படம் அப்புறம் குறும்படம்னு எடுக்கிறது இவன் தொழில்..."

"ஓ அப்படிங்களா? நீங்கதான் இந்த சப்பிச் சாப்பிடுற ஒரு மிட்டாய்க்காக ஒருத்தன் பொண்டாட்டி மயங்கி, மயக்கினவன் பின்னாலேயே ஓடிப் போற விளம்பரப் படத்தை எடுத்தவரா?"

கோவிந்தன் தான் பார்த்த விளம்பரப்படம் ஒன்றைப் பற்றி கேட்டான்.

"நோ நோ... அது நானில்லை. என் படமே ரொம்ப டிப்ரண்டா இருக்கும்" என்று காலரை தூக்கி விட்டுக் கொண்டான் நட்ராஜ்.

"என்ன டிப்ரண்டோ? டிவி விளம்பரத்துல ஒரு சோப்பு பவுடர் சூப்பரா வெளுக்கிறத பார்த்துட்டு நானும் அதை வாங்கினேன். நம்ப சட்டை பேண்ட்டெல்லாம் அப்படியே தான் இருக்கு. ஒரு வேளை புதுத்துணியை மட்டும்தான் அது அப்படி வெளுக்குமோ என்னவோ?"

கோவிந்தனுக்கு கொஞ்சம் நகைச்சுவை உணர்வும் இருந்தது. பதிலுக்கு சிரித்த நட்ராஜ், அதற்கு மேல் கோவிந்தனிடம் பேச விரும்பவில்லை.

"ஓகே நீங்க வெயிட் பண்ணுங்க. நான் சாப்பிட்டுட்டு வர்றேன். இன்னிக்கே நாம கொஞ்சம் காட்டு பக்கம் போக வேண்டியிருக்கு" என்றான்.

கோவிந்தனும் தலையாட்டியபடியே விலகிட, "போய் கை கழுவிகிட்டு வாங்க... சாப்பிடலாம்" என்றாள் வள்ளியம்மை.

"எனக்கும் நல்ல பசி... வந்துடுறேன்" என்று ஓடினார் சிவக்குமார். ஐட்டங்களை கந்தையன் டேபிளில் வைக்க ஆரம்பித்தான். நல்ல மணம்!

குறிப்பாக மலைக்கீரையை கடைந்து, அதில் தாளித்துக் கொட்டியதில் அபரிமித வாசம். சாதமும் குக்கரில் கொதிக்க கொதிக்க இருந்தது.

சிவக்குமாரும் வந்து அமர்ந்தார். வள்ளியம்மையே பரிமாறினாள். சாப்பிட்டால் பசியோடு இப்படி சாப்பிட வேண்டும் என்கிற மாதிரி இருவரும் சாப்பிடத் தொடங்கினர்.

கந்தையனின் கைக்கு நல்ல ராசி... பதார்த்தங்களில் எல்லா சுவையும் ஏற்ற இறக்கம் இல்லாமல் சரியான அளவில் இருந்தது. சிவக்குமார் பாராட்டத் தொடங்கி விட்டார்.

"கந்தப்பா... உன் சமையல் நல்லா இருக்கு. நான் ரொம்ப பயந்தேன்" என்றார்.

"கந்தப்பா இல்லீங்க கந்தையன்..."

"அப்பான்னாலும் அய்யன்னாலும் அர்த்தம் ஒண்ணு தானே?"

"இல்லீங்க அதுல கொஞ்சம் மாறுபாடு உண்டுங்க..."

"எப்படிய்யா?"

"அப்பாங்கறது கொஞ்சம் மேல்குடி மக்கள் சொல்ற சொல்லுங்க. அய்யன்கறது பாமர ஜனங்க சொல்ற

சொல்லுங்க. இந்த வித்தியாசத்தை வெச்சே அவங்க யாரு எப்படிப் பட்டவங்கன்னு ஓரளவு தெரிஞ்சுக்க முடியும்."

கந்தையய்யன் கொஞ்சம் பிரமிக்க விட்டான்.

"அட ஆமால்ல... ஒரு பேருக்குள்ள இப்படி கூட விஷயம் இருக்கிறத நான் யோசிக்கல..."

"பல விஷயங்கள்ல நாம, நாம பாக்கிறது தான் பார்வைன்னு இருந்துடறோங்க."

அவனது பதிலில் ஒரு சிறு ஞானப்பொறி. அதுவும் சிவக்குமாரை சிந்திக்க விட்டது. நட்ராஜ்க்கு எரிச்சலாக வந்தது.

"யப்பா... நீ கொஞ்சம் பேசணும்" என்றவன், வரும் வழியில் நடந்ததை எல்லாம் சொல்லத் தொடங்கினான்.

சிவக்குமாரிடம் சாப்பாட்டு ருசி விலகி காட்டைப் பற்றிய கடமை உணர்வு நிமிரத் தொடங்கி விட்டது.

"பிரதர்... இந்த காட்டுலதான் உனக்கு நிறைய வேலை இருக்கு. எனக்கும் நிறைய வேலை இருக்கு. இத்தனை வருஷத்துல மிருகங்களால தொல்லை, மரம், வெட்டி கடத்தறவங்களால பிரச்னைன்னு தான் மீட் பண்ணியிருப்போம். இது டோட்டலி டிப்ரண்ட். தொட்ட இடமெல்லாம் ஒண்ணு மூட நம்பிக்கையா இருக்கு, இல்லை புரியாத புதிரா இருக்கு..."

"ஆமாம் நட்ராஜ்... நானும் ஆபீசுல ரெக்கார்ட்சை பார்த்தேன். ஒரு வருஷம் கூட இங்க மழையோட அளவு குறையவே இல்லை. அதேமாதிரி மரங்கள் வெட்டப்பட்டதாவோ, கடத்தப்பட்டதாவோ புகார்கள் இல்லை. அதே நேரம் இந்த தாணுமாலயக்குடி மக்கள் முட்டாள்களா, இல்ல புத்திசாலிகளான்னு தீர்மானிக்க முடியாதபடிதான் குறிப்புகள் இருக்கு. அப்துல்காதர்னு ஒரு ஆபீசர் 1960கள்ல இங்க இருந்தவர். அவர் இந்த மலைவனத்தை நான் கடவுளின் கருணை மிகுந்த இடமாக பார்க்கிறேன்னு எழுதியிருக்கார்.

தாணுமாலயக் குடி மக்களையும் உலகத்துலேயே அதிக சந்தோஷமா வாழறவங்கன்னு குறிப்பிட்டிருக்கார். அதே சமயம் பின்னாலேயே வந்த மாரியப்பன்ங்கிற ஆபீசர், இந்த காட்டுக்குள்ளாற முழுவீச்சுல விஞ்ஞான வசதிகள் பெருக ணும். குறிப்பா ஒரு பள்ளிக்கூடமாவது கட்டப்படணும். அப்பதான் இந்த மலை ஜனங்க திருந்த ஆரம்பிப்பாங்கன்னு எழுதியிருக்கார். இப்படி தான் மாறி மாறி எழுதியிருக் காங்க."

"அப்ப ரொம்ப நாளா இந்த காட்டுக்குள்ள திருட்டு வேலை நடக்கிறதா நான் நினைக்கிறேன்."

"திருட்டு வேலைன்னா எதாவது திருடு போகணுமே... அப்படி எதுவும் போகலியே?"

"ஒரு வேளை இது சமூக குற்றவாளிகளோட ரகசிய தங்குமிடமா இருக்குமோ?"

நட்ராஜ் சரியாகத்தான் கேட்டான்.

சிவக்குமாரும் அவன் சொன்னதை அசைபோட ஆரம் பித்தார்.

"சாப்பிட்டு முடிச்சுட்டு பேசுங்களேன்... பாதி சாப் பாட்டுல எதுக்கு இப்ப இந்த பேச்சு?" என்று குறுக்கிட்டாள் வள்ளியம்மை. கந்தையய்யன் சமையல் கட்டில் இருந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான். தயிர் பாத்திரத்துக்காக சமையல் கட்டுக்குள் வந்தவள் கந்தையய்யனைப் பார்த்து, "என்ன அவங்க பேசுறதை எல்லாம் கேட்டு உனக்கு பயமா இருக்கா?" என்று கேட்டாள்.

"ஆமாம்மா... இதை விட சாமர்த்தியமா பேசினவர் தான் போன தடவை இருந்த ஆபீசர். கடைசில அவர் பயந்து போய்தான் இங்க இருந்து போனார்!"

"பயப்படுறதுக்கு அவர் அப்படி. என்ன தப்பு பண்ணி னார்?"

"அது... அது..."

"என்ன மென்னு முழுங்குற?"

"நான் அப்புறமா விபரமா சொல்றேம்மா... ஆனா ஒண்ணு, இவங்களை இவங்க போக்குக்கு போக விடாதீங்க. அப்புறம் நீங்கதான் ரொம்ப வருத்தப்பட வேண்டி வரும்."

என்ற கந்தையய்யன் குரலில் ஒரு பலமான எச்சரிக்கை தொனி.

11

மந்திரி அந்த கொலைகாரன் உடம்போடு தன் இருப்பிடத்தை அடைந்தார். பின் அரசனுக்கு தன் உதவியாளன் மூலம் தகவல் அனுப்பி, குறிப்பிட்ட இடத்துக்கு ரகசியமாக வரும்படி கூறினார். அரசன் உடனே கோபம் கொண்டான். தன்னை நேரில் வந்து சந்திக்காமல் மந்திரி இப்படி தகவல் அனுப் பியது ஒரு அவமரியாதையான செயல் என்று கருதி யவன், மந்திரியிடம் இருந்து மூலிகை மற்றும் நீரை பெற்றுக் கொண்டு தாணுமாலய வனம் பற்றி தெரிந்து கொண்டு விட்ட நிலையில், மந்திரியையும் கொன்று விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டான்.

மந்திரிக்குள்ளேயும் கிட்டத்தட்ட அதேபோலத் தான் திட்டம் இருந்தது. அரசன் நிச்சயம் தன்னை யும் கொன்று விடுவான். மூலிகை மற்றும் வனம் பற்றிய ரகசியம் தன்னோடு மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்பினான். எனவே அரசனை முந்தவிடாமல் தானே முந்திக் கொண்டு அரசனைக் கொன்று விட வேண்டும். அந்த பழியை திருடன் மேல் போட்டு விட வேண்டும்.

இருவரும் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு இறந்து விட்டதாக கூறி, மூலிகை ரகசியம் தனக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்க வேண்டும் என்பது மந்திரியின் திட்டம். அதற்காகத்தான் வானத்தில் கொன்ற அந்த திருட்டுக் கொலைகாரன் உடம்பை தூக்கி வந்திருந்தார்.

ரகசிய இடத்தில் சந்திப்பும் நிகழ்ந்தது. அரசன் கையில் கொலை வாளை மறைத்துக் கொண்ட நிலையில், மந்திரியை மகிழ்ச்சியோடு தழுவுவது போல கொல்ல நினைத்து முன்வர, மந்திரியும் அரசன் தன்னை தழுவும் போதே கொன்று விட தீர்மானித்து, தானும் கொலை வாளுடன் கட்டி அணைக்க, இருவரும் ஒரே நேரத்தில் ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு சற்றைக்கெல்லாம் பிண மாகி கீழே விழுந்தனர்.

அப்போது அந்த பக்கமாக வந்த சித்தர் ஒருவர், ஒன்றுக்கு மூன்றாக அங்கு கிடக்கும் பிணங்களைப் பார்த்து, 'பேராசை பெரு நஷ்டம்' என்றதோடு, 'தாணுமாலய வனத்து ரகசியங்களை சுயநலமுள்ள மனிதர்களால் புரிந்து கொள்ளவோ, தெரிந்து கொள்ளவோ முடியவே முடியாது' என்றபடியே சென்றார்!

- தாணுமாலயவன சரிதம்.

"மண்டியிட்டு வேண்டிக்கிட்டு ஒரு
இலையை எடுத்து இடுப்புல
வெச்சுக்குங்க. இல்ல
சேலைல முடிச்சு போட்டு வெச்சுக்குங்க.
நீங்க கர்ப்பம் தரிக்காட்டி, நான் நீங்க
சொல்றபடி கேட்கிறேன்..."

**"ஒரு வெளிநாட்டுக்காரர் இன்டர்நெட்டில்
தாணுமாலய வனம் பற்றி படித்து விட்டு, இலை
கேட்டு அவனை அணுகி ஒரு இலைக்கு
இரண்டாயிரம் என்று பத்து இலைகளுக்கு பணம்
கொடுத்திருந்தார்..."**

கந்தையன் பேசிவிட்டு விலகிவிட, வள்ளியம்மையை கவலை தொற்றிக் கொண்டது. கவலை வந்தாலே மனம் கனத்து விடும். பேச்சு குறையும். வள்ளியம்மையும் அப்படித் தான் ஆனாள்.

நல்லவேளையாக அப்போது நீலியும், இருசனும் வந்தார்கள். நீலி பிஞ்சு பலாக்காய்களை கொண்டு வந்திருந்தாள். கூடவே ஒரு மண் கலயத்தில் வரையாட்டு பால்!

அவளைப் பார்க்கவும் வள்ளியம்மைக்கும் ஒரு மாறுதல்.

"என்ன தாயி... முகத்துல கறுப்பு தெரியுதே, என்ன கவலை?" என்று கச்சிதமாக கேட்டாள் நீலி.

இருசனோ சிவக்குமாரிடமும் நட்ராஜிடமும் பேசத் தொடங்கியிருந்தான்.

"ஒண்ணுமில்ல நீலி... இங்க நாங்க வந்து முழுசா இரண்டு நாள் ஆகல. ஆனா எங்களை சுத்தி என்னென்னவோ நடக்குது. எதையும் புரிஞ்சுக்கவும் முடியல. ஒரே புதிரா இருக்கு. இந்த காட்டுல தொடர்ந்து எப்படி இருக்கப் போறேன்னு தெரியல" என்றாள் வள்ளியம்மை.

"நெனைச்சேன்... தாயி ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்குங்க. இது ரொம்ப நல்ல காடு. தன்னை பெருசா நினைக் கிறவங்ககிட்ட மட்டும் கொஞ்சம் விளையாடிப் பார்க்கும். மத்தபடி இங்க பயப்பட எதுவுமே கிடையாது. நீங்க இந்த காட்டையே அந்த தாணுமாலய சாமியா நினைச்சு கும்பிட்டு பாருங்க. அப்ப தெரியும். அதுக்கு பெறகு நீங்க நினைக்கிற தெல்லாம் நடக்கும்."

"நினைக்கிறதெல்லாம்னா?"

"உங்க ஆசை எல்லாம் ஈடேறும்னு சொல்ல வந்தேன்."

"நீ அப்படிதான் சொல்வ... நீ இந்த காட்டுலேயே இருக்குறவ விட்டுக் கொடுப்பியா என்ன?"

"சத்தியமா இல்ல. வேணும்னா சோதனை பண்ணி பார்த்துக்குங்க."

"எப்படி?"

"உங்களுக்கு இப்ப எதாவது ஆசை இருக்கா?"

"என்ன இப்படி கேட்கிற... ஆசை இல்லாத மனுஷங்க இந்த பூமியில உண்டா?"

"நான் கண்ட ஆசைங்கள சொல்லல... நியாயமான ஆசை, இல்லை தேவைன்னு ஒண்ணு இருக்கும்தானே?"

"எனக்கு இப்ப ஒரே விருப்பம்தான்... நான் தாய் ஆகணும். கல்யாணம் ஆகி பத்து வருஷம் கடந்துச்சு. ஆனா ஒரு குழந்தைதான் எனக்கு பிறக்கல."

"ஐய்யோ இது நியாயமான விருப்பமாச்சே. விருட்ச மரமே இதை கொடுத்துடுமே...?"

"எது... இந்த இலை இருந்தாலே அதிர்ஷ்டம்ங் கிறாங்களே அந்த மரமா?"

"அதே தான். அதை முதல்ல கும்பிடுங்க. மண்டியிட்டு வேண்டிக்கிட்டு ஒரு இலையை எடுத்து இடுப்புல வெச்சுக் குங்க. இல்ல சேலைல முடிச்சு போட்டு வெச்சுக்குங்க. நீங்க கர்ப்பம் தரிக்காட்டி, நான் நீங்க சொல்றபடி கேட்கிறேன்."

நீலி உறுதிபட பேசினாள்.

சிவக்குமார், நட்ராஜிடமும் இருசன் இதே பேச்சைத் தான் பேசிக் கொண்டிருந்தான்.

கோவிந்தனிடம் இருந்த கொம்பைப் பார்த்தவன், "ஐய்யய்யோ சார், ஏன் சார் இதை ஒடிச்சீங்க?" என்று அவன் கேட்கவும், அது தொடர்பான பேச்சுகள் அவர்களிடம்.

"கோவிந்தா நீ நட்ராஜோட போய் அந்த மரத்தைக் காட்டு. இருசா, நீயும் கூடப் போ. என் தம்பிக்கு உதவியா இரு" என்று நட்ராஜ் கூறி முடிக்க, கோவிந்தன் சிவக்குமாரை ஒரு மாதிரி பார்த்தான்.

"என்ன?"

"சார் நாம வேற பக்கம் ரைடு போவோம். நீங்க இன்னும் தெற்குநாடு, மேல்நாடு, கொழும்பு நாடு, புலிநாடெல்லாம் போய் அங்க இருக்குற ஜனங்கள எல்லாம் பார்க்கணும். அதான் இருசன் வந்துட்டானே... இவன் நம்ம தம்பியை கூட்டிக்கிட்டு போகட்டுமே" என்றான்.

"அதுவும் சரிதான். நட்ராஜ் நீ இருசனோட புறப்படு. நான் கோவிந்தனோட கிளம்புறேன். எனக்கு என் டியூட்டி - உனக்கு உன் டியூட்டி..." என்றார். சொன்ன வேகத்தில் கோவிந்தனும் சிவக்குமாரும் கிளம்பி விட்டனர். நட்ராஜும் தன் ஜிப்சியில் இருசனோடு புறப்பட ஆயத்தமாகிட, வள்ளியம்மை தானும் வருவதாக கூறினாள். நீலியும் உடன் வரட்டும் என்றாள். நட்ராஜ் மறுக்கவில்லை.

"இங்க அடைஞ்சு கிடக்குறதுக்கு அப்படியே வெளியே போயிட்டு வர்றதுதான் சரி" என்று புறப்பட்டான்.

"கந்தையய்யா வீட்டைப் பார்த்துக்கோ" என்றபடி கிளம்பினார். கந்தையய்யன் ஆகாயத்தை பார்த்தவனாக, 'தாணுமாலயா இவங்க நல்லபடி திரும்பி வரணும்' என்று வாய்விட்டு பிரார்த்தித்துக் கொண்டான்.

'நீ முன்னாலே போனா நான் பின்னாலே வாரேன்... கட்டபுள்ள பொட்டபுள்ள கருகுமணி போட்ட புள்ள... கன்னம் செவந்தவளே கண்ணம்மா... நான் தவியா தவிக்கிறேனே பொன்னம்மா...'

என்கிற பாட்டு செல்போனில் பலத்த குரலில் எதிரொலிக்க, தென்கரை நாட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் நாடிமுத்து. ஒரு தோளில் தொங்கும் துணிப்பை, மறுதோளில் கண்ணாடி வளையல் கொண்ட தகரப்பெட்டி... இறுக்கமான அரைக் கை சட்டையோடு இடுப்பில் பூப் போட்ட லுங்கி. காலில் பிளாஸ்டிக் செருப்பு. அவன் வரவும் தென்கரை நாடு என்னும் அந்த மலைக்கிராமத்து பெண்கள் அவனைச் சுற்றிக் கொண்டு நிற்க ஆரம்பித்தனர். அவன் பார்வையோ அவர்களுக்கு நடுவில் வங்கி எங்கே என்று தேடத் தொடங்கியது.

அவன் வந்தால் தென்கரை நாட்டு ஆண்கள் அவனை முறைப்பார்கள்.

"எலேய்... உன் கவட்டை காலை போட்டுக்கிட்டு வந்துட்டியா? லவுக்கை, பாடின்னு எதையாவது எங்க பெண்டுகளுக்கு கொடுத்தே அப்புறம் நீ அம்மணக்கட்டயா தான் திரும்புவே" என்பார்கள். இருந்தும் அவன் ரகசியமாக ரவிக்கை, பாடி, பவுடர், ஹேர் ஆயிலை அங்குள்ள பெண்களுக்கு விற்று விடுவான். அவர்களும் மூடி மறைத்து வாங்கிக் கொண்டு பதிலுக்கு தேன், புலிப்பல், நரிப்பல், வரகரிசி என்று கொண்டு வந்து தருவார்கள். பலர் அவனிடம் விருட்சமரத்து இலையை கூட தருவார்கள். அவனும் இலைக்கு மிக முக்கியத்துவம் தருவான்.

இன்றும் அவனுக்கு இலை தேவை இருந்தது. வனத்துக்கு வெளியே ஒரு வெளி நாட்டுக்காரர் இன்டர்நெட்டில் தாணுமாலய வனம் பற்றி படித்து விட்டு, இலை கேட்டு அவனை அணுகி ஒரு இலைக்கு இரண்டாயிரம் என்று பத்து இலைகளுக்கு பணம் கொடுத்திருந்தார்.

எனவே பத்து இலைகளுக்காகவும் அவன் வந்திருந்தான். மெல்ல ஒதுங்கி ஒரு மரத்தடிக்கு போய் அங்கே உட்கார்ந்து வளையல் பெட்டியை திறந்தான். அவன் செல்போனில் அந்த பாட்டு முடிந்து அடுத்த பாட்டு தொடங்கி

யிருந்தது. அதில் எம்ஜிஆர், 'சொர்க்கத்தின் திறப்பு விழா... வண்ணச் சோலைக்குள் வசந்த விழா' என்று பாடிக் கொண்டிருந்தார். நாடிமுத்து 1990களில் பிறந்திருந்தாலும் எம்ஜிஆர் பாட்டு அவனுக்கு பிடித்திருந்தது என்பது ஒரு ஆச்சரியமான விஷயம். எம்ஜிஆர் பாட்டுக்கு மலை ஜனங்களிடமும் ஒரு மதிப்பு இருந்தது. 'தூங்காதே தம்பி தூங்காதே' பாட்டை ஒரு பெருசு விரும்பி கேட்கும். ஆனால், எம்ஜிஆர் படத்தை எல்லாம் பார்த்தது கிடையாது.

நாடிமுத்துவின் கடை களை கட்டி விட்டது. வரிசை யாக வந்து பெண்கள் வாங்க ஆரம்பித்தார்கள். இதில் பேரம் வேறு. வேடிக்கையான பேரம்.

"ஏய்நாடி... இந்த பவுடர் அரிசிமாவுதானே? மொழு மொழுன்னு அரைச்சு டப்பியில போட்டு எடுத்து வந்தா எங்களுக்கு தெரியாதாக்கும். போவட்டும். இது வாசமா இருக்குதே... இதுல என்னத்த போடுவாங்க?" என்று கேட் டாள் ஒருத்தி.

"அதான் சவ்வாது, சந்தனம்னு எம்புட்டோ இருக் குதே..." என்றாள் இன்னொருத்தி.

"ஆமா... சித்தாட கட்டிக்கிட்டு பாட்டு இந்த டப்பி பாடுமா?" என்று கேட்டாள் இன்னொருத்தி.

அவன் அவர்களை சமாளித்தபடியே, வங்கி எங்கே என்று பார்த்தபடியே இருந்தான். பொறுக்காமல் ஒருத்தி யிடம், "ஆமா எங்க வங்கி?" என்று கேட்டும் விட்டான்.

"அவளா... அவளுக்கு கல்யாணம் முடிவு பண்ணி யிருக்காங்க. பரிசம் போட்டாச்சு... அவ கல்யாணம் முடியறவரை வீட்டை விட்டே வரக்கூடாதுல்ல..." என்றாள் ஒருத்தி.

நாடிமுத்துவுக்கு நடுநெஞ்சில் ஊசியா குத்தியது போல இருந்தது.

"நெசமாவா சொல்லுதே?"

"அட உனக்கு சந்தேகமா இருந்தா அந்த கொட்டா பக்கம் போய் நில்லு. அவ அப்பனே உன்னை துரத்த வருவான்... அப்ப தெரியும்..."

நாடிமுத்துவுக்கு அவள் சொன்னது சரி என்று பட்டது. வேக வேகமாக வியாபாரத்தை முடித்துக் கொண்டு வங்கியின் கொட்டாய் எனும் குடிசைப் பக்கமாக சென்றான். செல்போன் பாட்டு பாடியபடியே இருந்தது. மிக தோதாக 'கல்யாண நாள் பார்க்கச் சொல்லலாமா?' என்னும் பாடல். அவள் வீட்டுப் பக்கத்தில் அப்பன், ஆயி என்று ஒருவரும் இல்லை. நாடி மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே ஒரு மூலையில் குத்துக் காலிட்டு முகம் புதைத்தவளாக அமர்ந்திருந்தாள் வங்கி. சுமாரான இருள்!

"வங்கி..."

"நாடிமுத்து..."

"நானேதான்... நான் கேள்விப்பட்டதெல்லாம் நெசமா?"

"ஆமா... என் மாமனுக்குன்னு முடிவு பண்ணிட்டாங்க. அவனும் காட்டுக்குள்ள காட்டுப்பன்னி வேட்டைக்கு போயிருக்கான். யாரும் பாக்கறதுக்குள்ள புறப்படு."

"நீயா சொல்ற?"

"ஆமா... நான்தான் சொல்றேன். இப்ப புறப்படு. நாளைக்கு ராத்திரி காடுக்கு வெளிய அஞ்சு மரத்துல கிட்ட வா. நானும் இங்க இருந்து எப்படியாவது வாரேன். நாம காட்டை விட்டே ஓடிடலாம்!"

- அவள் பதில் நாடி முத்துவை திகைக்க விட்டது.

12

தாணுமாலய வனத்தின் பின்புலத்தில் நிறையவே ரகசியக் கதைகள் உள்ளன. மேலெழுந்தவாரியாக கேட்பதற்கு அவை எல்லாம் ஒரு நம்ப முடியாத விஷயமாகவும், பொய் போலவும் தோன்றும்.

'தாணுமாலய வனக்குமரி பூத்து நிற்பவள் - தொட்டால் குத்துவாள், குடைவாள்! ஆடையின்றி நிற்கும் இவளை ஆசையின்றித் தொட்டால் ஒத்து வருவாள். ஓராயிரம் சுகம் தருவாள்!' என்பது ஒரு சொலவடையாகும்.

யார் இந்த தாணுமாலய வனக்குமரி என்று தேடித் திரிந்தால் எல்லாம் கண்டுபிடிக்க முடியாது. ஆடையின்றி நிற்பவள் என்றவுடன், நாம் நிர்வாணத்தை கற்பனை செய்து கொண்டு விடக் கூடாது. நிர்வாணமாக நிற்கும் ஒரு கன்னியை எப்படி ஆசையின்றி தொட முடியும்? குருடனால் கூட இது முடியாது.

ஆனால், உண்மையில் இங்கு வனக்குமரி என்று குறிப்பிடுவது தாழைச் செடியை! அதாவது கற்றாழை. இது பருவங்களில் பூக்கும். இதன் சோறு கசப்பானது. ஆனால், மிகுந்த மருத்துவ குணம் உடையது. இதை பக்குவப்படுத்தி சாப்பிடலாம். தவத்தில் அமர்ந்து ஒரே எண்ணமாய் இருப்பவர்களுக்கு உச்சந்தலைக்கே சூடேறி விடும். ஆனால் குண்டலினி யோகப் பயிற்சியில் சஹஸ்ராரம் வரை குண்டலினியை கொண்டு செய்வது சிரமமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் இந்த குமரிச் சோற்றை சாப்பிட்டால், அந்த சூடு தணிந்து விடும். இதைத்தான் அந்த கருத்துள்ள குறிப்பு சொல்கிறது.

இப்படி இந்த வனம் குறித்து பல ரகசிய குறிப்புகள் உள்ளன.

- தாணுமாலயவன சரிதம்.

"அவங்க வலை கட்டி நாலு
பக்கமும் துரத்தி வந்து
அமுக்கி பிடிக்கிற பன்னியை,
நான் ஒரு தோட்டாவுல அமுக்கி
புடுவேன்ல. அசந்தா புலி
கரடியையேல்ல பிடிப்போம்.."

"அவங்கள பாத்து, அவங்ககிட்ட
மருந்து கேட்கிறவங்களுக்கு தன்
காலடி மண்ணை எடுத்து தந்து,
தண்ணில கலந்து குடி எல்லாம்
சரியா போயிடும்னு சொல்றாங்க."

வங்கி சொன்னதைக் கேட்ட நாடிமுத்துவுக்குள் திகைப்பும், அதே நேரம் சந்தோஷமும் ஒரு சேர ஏற்பட்டது. அது அவன் அவளைப் பார்ப்பதில் எதிரொலித்தது.

"என்னய்யா பாக்குற... கௌம்புய்யா, என் அப்பனும், மாமனும் வந்துட்டா அவ்வளவுதான் நீ..."

"வங்கி நீ இப்படி ஒரு பதிலைச் சொல்வேன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல. அப்ப நீ என்னை உன் புருஷனா ஏத்துக்கிட்டேன்னு சொல்லு..."

"என்னய்யா இப்படி கேட்கிற... ஒரு பொண்ணு ஒருத்தன் மேலதான்யா ஆசை வைப்பா. அப்படி வெச்சா வெச்சதுதான்... அப்புறம் அவளை மாத்த யாராலயும் முடியாது."

- வங்கி ஒரு மாதிரி வெட்கத்தோடு சொன்னதை, நாடிமுத்து ஒரு ரசிகனாக மாறி பெரிதாகவே ரசித்தான். அதற்குள் சிலர் வரும் சப்தம் கேட்கவும் நாடிமுத்து வியாபாரியாக மாறி சீப்பு ஒன்றை வெளியே எடுத்து, "இது

பிளாஸ்டிக் சீப். தலைல வாரும்போது பல்லு படுறதே தெரி யாது...' என்று பேச ஆரம்பித்தான்.

கச்சிதமாக தோளில் ஒரு காட்டுப்பன்றி குட்டிகளுடன் வங்கியின் மாமனும், அவன் சகாக்களும்தான் வந்திருந்தனர். காட்டுப்பன்றிக் குட்டியின் இரு கால்களை ஆலவிழுதால் கயிறுபோல கட்டி, தோளில் இந்த பக்கம் ஒரு குட்டி, அந்த பக்கம் ஒரு குட்டி என்று போட்டிருந்தான். வாயையும் கட்டியிருந்தான். அந்த பன்றிக் குட்டிகள் தங்கள் கண் வழியே மிகமிக பரிதாபமாக வங்கியைப் பார்த்தன. மாமன் பார் வையோ நாடிமுத்துவை சுட்டுவிடுவது போல பார்த்தபடி இருந்தது.

"இங்க என்னடா பண்ற?" எடுத்த எடுப்பிலேயே கடுமை யான ஆரம்பம்.

"என்ன பண்றேன்னா... பார்த்தா தெரியல. நான் வியா வாரிய்யா. வியாவாரம் பண்ண வந்தவன் கிட்ட என்ன பண்றேன்னு எகத்தாளமா கேட்குற?"

- நாடி முத்துவும் சளைக்காமல் பதில் சொன்னான். மாமன் முகம் இறுகத் தொடங்கியது. வங்கிக்குள் பதட்டம் தோன்றியது.

"மாமா நீ உள்ள வா... கஞ்சி காச்சி வெச்சிருக்கேன். சூடு ஆறிடப் போகுது" என்று பேச்சை மாற்ற முயன்றாள்.

நாடியும் வளையல் பெட்டியை தோளுக்கு ஏற்றியவ னாக திரும்பவும் தன் செல்போனை தட்டிவிட்டான். பாடல் ஆரம்பமாகியது. பாடலும் பொருத்தமாக, 'என்கிட்ட மோதாதே, நான் ராஜாதி ராஜனடி...' என்றது.

"எலேய்... பொட்டியை மூடு. இல்ல அதை தூக்கி போட்டு சுக்கு நூறா உடைச்சுடுவேன்..." என்று மாமன்காரன் நாக்கை மடித்து முஷ்டியை உயர்த்தினான்.

"சர்தான் போய்யா..." என்றபடியே நாடி விலகிப் போனான். வெகுதூரம் வரை வேகமாக வந்தவன் நின்று

திரும்பிப் பார்த்தான். வங்கி மட்டும் வெளியே ஒரு கூடையுடன் வந்தவளாக அவனைப் பார்த்து, 'நாளைய இரவு வர மறந்து விடாதே' என்பதுபோல சைகை செய்தாள்.

அவனுக்கும் அது புரிந்தது. மனதை என்னவோ செய்தது. அவளை காதலிக்கக் காரணம், அந்த காட்டுக்குள் ஒரு இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். இப்போது அதுவே காட்டை... விட்டே துரத்தப் போகிறது எனும் போது, அவன் மனது சற்று சலனப்பட தொடங்கியது.

வங்கியோடு எங்கே ஓடி ஒளிவது என்கிற கேள்வியும் எழும்பியது. காட்டை விட்டு வெளியேறி விட்டால், நிச்சயம் இந்த மலைகுடிகள் துரத்தி வர மாட்டார்கள். ஆனால், திரும்பி வந்தால் கூறுபோட்டு புதைத்து விடுவார்கள்.

அப்புறம் இந்த கற்பக மரத்தை பார்ப்பது, அதனிடம் வரம் கேட்பது எல்லாமே கனவாகப் போய்விடும். வங்கி இப்படி ஒரு சிக்கலுக்கு ஆளாக்கி விட்டாளே என்றும் தோன்றியது. அப்போது எதிரில் வேட்டைக்காரன் புலிப் பாண்டியன், அவன் சகா பெத்தராயனும் வந்து கொண்டிருந்தனர். ஒண்ணரை அடியில் ஒரு கட்டை கைப்பிடி துப்பாக்கி. பின்னால் முதுகுப் பக்கமாக வேட்டி இடுக்கில் செருகிக் கொள்ளலாம். மேலே சட்டையை போட்டுக் கொண்டால் துப்பாக்கி இருப்பதே தெரியாது. அந்த காட்டுக்குள் சட்டப்படி வேட்டையாடுவது பெரும் குற்றம். வன அதிகாரியான சிவக்குமாரோ அல்லது வாட்சர் கோவிந்தனோ பார்த்தாலே கூட போதும். அவர்களை கைதுசெய்து முட்டி போட வைத்து விடலாம். இதெல்லாம் நாடி முத்துவுக்கும் தெரியும். நாடிமுத்துவின் செல்போன் பாட்டு, அவர்களுக்கும் அவன் தான் என்பதை உணர்த்தவும் ஒளியாமல் எதிரில் வந்தார்.

"ஓ... வளையக்காரனா! இந்த செல்போன்ல பாட்டை சேமிச்சுக்கிட்டு இதை ரேடியோவா மாத்திப்புட்டியா நீ?" என்று பெத்தராயன்தான் கிண்டலாக ஆரம்பித்தான்.

நாடிமுத்துவும் அதை அணைத்தபடியே, "என்னா பெத்து.. எப்படி இருக்கு உடம்பு? புது ஆபீசர் வந்துருக்காரு, தெரியும்ல?" என்றான்.

"அப்படியா.. அப்ப காளிமுத்து இல்லையா இப்ப. அந்த ஆள் போயிட்டானா? அப்பாடா.."

"இவரு காளிமுத்துவுக்கு அப்பன்... ஆமா உங்கள வனவாசிங்க யாரும் பாக்கலையா?"

"பார்த்தா என்ன இப்போ..? அவங்க வலை கட்டி நாலு பக்கமும் துரத்தி வந்து அமுக்கி பிடிக்கிற பன்னியை, நான் ஒரு தோட்டாவுல அமுக்கி புடுவேன்ல. அசந்தா புலி கரடியையேல்ல பிடிப்போம்..?"

"பெரிய மூப்பர் பார்த்தா உங்க பாடு தில்லானாதான்.."

"பார்த்தா தான? அதான் பதுங்கிப் பதுங்கில்ல போறோம்?"

"மாட்டப் போறீங்க!"

"அதனால பரவால்ல. மாட்டுனா என்ன தண்ட னைன்னுதான் தெரியுமே..."

"தெரிஞ்சுமா தைரியமா வர்றீங்க..?"

"அப்படி வந்தா தானே இந்த கற்பகமரம், இல்லாட்டி வானத்து மனுசங்கள பாக்க முடியும்."

"ஓ... விஷயம் அப்படி போவுதா?"

"பொறவு... நீயும் அதுக்காகத்தான் இந்த காட்டுல வளையல், பொட்டுன்னு வியாவாரம் பண்ணவரே..? இந்த மலைகாரங்க என்ன உன் கிட்ட ஆயிரம், பத்தாயிரம்னா வியாவாரம் பண்ணப் போறாங்க?"

- பேசியபடியே லுங்கியை தூக்கி விட்டு, பட்டாபட்டி டவுசர் தரையில்பட இருவரும் தரையில் அமர்ந்து ஆளுக்

கொரு சிகரெட்டை பற்ற வைத்தனர். நாடிமுத்து அவர்களை ஒரு மாதிரி பார்த்தான்.

"நீயும் பத்த வையி... எதுக்கு வாய பாக்குற?"

"இல்ல... காட்டை தாண்டிட்டு பத்த வைப்போம்னு பார்த்தேன்."

"அப்ப சரி... நீ இந்த ஜென்மத்துல கற்பகமரத்தை பாக்கமாட்ட."

"அப்ப நீங்க வேட்டைங்கிற பேர்ல வர்றதெல்லாம் அதை பாக்கதானா?"

"பொறவு...?"

- வேட்டைக்கார புலிப்பாண்டி கேட்டுவிட்டு, புகையை ஒரு பெரும் கவளமாக கக்கினான். நாடிமுத்து முகத்தில் தீவிரமான யோசனை.

"என்ன யோசனை?"

"இல்ல... இந்த மரத்துகிட்ட வரம் கேட்க இன்னும் எத்தனபேர் வரப்போறாங்கன்னு தான் யோசிக்கிறேன்."

"காலம் காலமா வந்துகிட்டேதான இருக்காங்க... எத்தனை பேர் வந்தா என்ன? சந்திரமதி அம்மா மாதிரி மரத்தை மார்த்து வரத்தை வாங்குனாதான் இந்த காட்டுக் குள்ள நுழைஞ்சதுக்கு அர்த்தம்..."

"நீயும் சந்திரமதி அம்மா பத்தி அப்பப்ப சொல்ற. அப்படி அவங்க என்னத்த கேட்டு வாங்குனாங்க?"

"அப்படி கேளு... அந்தம்மா புத்துநோய் வந்து சாகக் கிடந்தாங்க. டாக்டர்ல்லாம் நீ ஒரு மாசம் உசுரோட இருந்தா அதிகம்னு சொல்லிட்டாங்க. ஆனா அம்மா பார்த்தாங்க. இந்த காட்டுக்குள்ள வந்து மரத்தை பாக்காம போற தில்லன்னு உட்கார்ந்துட்டாங்க. அதே மாதிரி பாத்தாங்க! முதல்ல தன் புத்துவியாதி நீங்கணும்னு வரம் கேட்டாங்க.

அப்புறம், எந்த காலமும் எந்த வியாதியும் வரக்கூடாதுன்னு கேட்டாங்க. மூணாவதா தன் கையால மத்தவங்க வியாதியை நீக்குற சக்திய கேட்டாங்க. மூணும் கிடைக்கவும் இப்ப அவங்க ராணி மாதிரி இருக்காங்க. அவங்கள பாத்து, அவங்க கிட்ட மருந்து கேட்கிறவங்களுக்கு தன் காலடி மண்ணை எடுத்து தந்து, தண்ணில கலந்து குடி எல்லாம் சரியா போயி டும்னு சொல்றாங்க. அதே மாதிரி சரியா போய்கிட்டே இருக்குதே..."

"அப்படியா சங்கதி..."

"பொறவு...?"

"ஆமா, அது என்ன கணக்கா மூணு வரம்?"

"கற்பகமரம் மூணு வரம்தான் தருமாம்.. அதுக்கு மேல கேட்டா அது மறைஞ்சிடுமாம்.."

"ஓ... அப்படி ஒரு கணக்கு இருக்குதா?"

"பொறவு?"

- பேச்சோடு பேச்சாக சிகரெட் தீர்ந்து தீ விரல் இடுக்கை சுடவும் தூக்கிப் போட்டான் புலிப்பாண்டி.

நாடிமுத்துவுக்குள் இப்படி ஒரு காட்டுப் பக்கமே வரமுடியாதபடி வங்கியோடு ஓடித்தான் போக வேண்டுமா என்கிற கேள்வி திரும்பவும் மண்டையை குடைய ஆரம் பித்தது.

தாணுமாலய மரத்தின் முன்னால் நின்று கொண்டிருந் தாள் வள்ளியம்மை. உடன் நீலியும், நட்ராஜ்ும். இருசன் அங்கு இலை விழுவதற்காக காத்திருக்கும் தன் சகாக்களுடன் பேசிக் கொண்டிருக்க, நட்ராஜ் கேமராவை கையில் எடுத்து மரத்தை படம் பிடிக்க தொடங்கியிருந்தான். நீலியோ வள்ளியம்மையை மரத்தை சுற்றச் சொன்னாள்.

"அம்முணி.. மனசார புள்ளையை கேட்டு இந்த மரத்தை ஒன்பது சுத்து சுத்துங்க. நீங்க ஆசைப்பட்டது கட்டாயம் கிடைக்கும்..." என்று தூண்டி விட்டாள்.

வள்ளியம்மையும் தயாரானாள். அவள் வலம் வரத் தொடங்கவும், நட்ராஜ் கேலியாக சிரித்தான்.

"சிரிக்காதே நட்ராஜ்..."

"சாரி அண்ணி... ஐ கான்ட்! என்னால முடியல."

"எப்பவும் அடுத்தவங்க நம்பிக்கையை கிண்டல் பண்றதே உனக்கு பொழப்பா போச்சு..."

"அம்முணி... மரத்தை சுத்தும்போது பேசக் கூடாது."

- இடைவெட்டினாள் நீலி.

அப்போது ஒரு இலை மேலிருந்து உதிர்ந்து விழவும், சுற்றி இருக்கும் இளசுகள் அதை அடைய தயாரானார்கள். அது சரியாக வள்ளியம்மையின் தலைமேல் வந்து அமர்ந்தது. நீலி அதை பார்த்து உற்சாகமானாள்.

"அம்முணி... சாமி வரம் கொடுத்துடுச்சு. உங்களுக்கு குழந்தை நிச்சயம்" என்றிட, வள்ளியம்மையும் அந்த இலையை கையில் எடுத்துப் பார்த்தாள். சற்று பழுத்த இலை. நட்ராஜ் இலையும் கையுமாக அவளை படம் பிடித்தான். தோளிலும் கேமரா. படம்பிடித்தபடியே,

"அண்ணனை ஒரு வருஷம் பாரீன் பக்கம் போகச் சொல்றேன். இங்க எப்படி குழந்தை பிறக்குதுன்னு பார்க்கிறேன்" என்று கமெண்ட் அடித்தான்.

"யூ ராஸ்கல். உதை வாங்கப்போற நீ!" என்று சொல்லக் கோவம் காட்டினாள் வள்ளியம்மை. அதை இருசனும் ரசித்தான். நட்ராஜ் அவனிடம், "இருசா... நாம அடுத்து எங்க போகப் போறோம்?" என்று கேட்டான்.

"எங்க வேணா போகலாங்க. ஆனா அஞ்சு மணிக்கெல்லாம் இருட்டிடும். இப்ப மணி மூணு. பாத்துக்கோங்க."

"ஒண்ணு பண்ணுவோம். இவங்கள வீட்டுல விட்டுட்டு, நாம இன்னிக்கு நல்ல தண்ணி பாயற இடமா பார்த்து

போவோம். சாயந்தர வெளிச்சத்துல சில காட்சிகள் ரொம்ப பிரமனைக்குரியதா இருக்கும்னு நினைக்கிறேன்" என்றான்.

அதன்படியே அவர்கள் திரும்ப ஜிப்சி ஜீப்பில் ஏறிக் கொண்டனர். நட்ராஜ் டிரைவிங் சீட்டில் அமரும் முன் சுழற்றில் மாலை போல கிடந்த பைனாகுலரை எடுத்து நாலாபுறமும் ஒரு பார்வை பார்த்தான். அப்போது குறிப்பிட்ட ஒரு இடத்தில் கூட்டமாக வானத்து மனிதர்கள் ஒருவர் பின் ஒருவர் என்று ஒரு சரிவில் ஏறியபடி இருப்பது தெரிந்தது. அதைப் பார்த்த மாத்திரத்தில் நட்ராஜ்க்குள் ஒரு புதிய எண்ணம்.

13

'தாணுமாலய வனத்தில் பிள்ளை வனத்தி என்றே ஒரு மூலிகை செடி உள்ளது. சவலப் பிள்ளைகளுக்கு இந்த பிள்ளை வனத்தி இலையை நன்றாக அரைத்து உடம்பில் எண்ணையை பூசுவதுபோல் பூசிவிடுவார்கள். இதன் சாறு மயிர்க்கால்கள் வழியாக உடம்பில் இறங்கி, சவலைக்கு காரணமான கணச்சூட்டை நீக்குவதோடு, சதை அழற்சியையும் போக்கும். இதனால் உண்ணும் உணவின் சக்தியை உடல் முழுவதுமாக எடுத்துக் கொண்டு நல்ல சதைப்பிடிப்பு ஏற்படுவதோடு, பிள்ளைகளும் உயரமாய் வளருவார்கள்.

இந்த பிள்ளை வனத்திற்கு பெண்களின் கருப் பிரச்சனைகளை தீர்க்கும் சக்தியும் உண்டு. இதை சரியாக இனம் கண்டு பறிக்க வேண்டும். தாணுமாலய வனத்தில் உள்ள இதுபோன்ற மூலிகைகளுக்கு நல்லதொரு இயற்கை சூழல் மிகமுக்கியம்.

சூரியவெளிச்சம், நல்ல மழை, இவற்றோடு நல்ல எண்ணங்கள் உடையவர்களால் சூழப்பட்ட நிலை மிக முக்கியமாகும்.

வேட்டைக்காரர்கள், சுயநலம் மிகுந்த மருத்துவர்கள், மரம் வெட்டிகள் நடமாடும் இடங்களில் இந்த மூலிகைகள் வளர்வதில்லை. மனித நடமாட்டமே இல்லாத, மனிதக்காலடியே படாத இடங்களில் இந்தவகை மூலிகைகள் மட்டுமல்ல, பல அற்புதமான பூக்களும் இங்கு பூக்கின்றன. காகப்பூ, செண்பகம், செங்கழுநீர் பூ போன்றவை இதில் அடக்கம்.

இந்த வனத்தில் எட்டு வகை ஜாதியை சேர்ந்த பாம்புகளும் இருப்பதுதான் ஆச்சரியமான விஷயம்!'

- தாணுமாலயவன சரிதம்.

"தரை எல்லாம் ஏராளமான
காட்டுத்தாவரங்கள் வளர்ந்து
அந்த இடத்தில் தரையே
தெரியவில்லை. அதில் சில
செடிகள் மேல் சிவப்பாய்
ரத்த சொட்டுகள்!"

"எடுத்து விரித்து பார்த்த போது,
'வானத்து மனிதர்களுக்கு
தங்கச்சுரங்கம் உள்ள இடம்
தெரியும். அவர்களை விடாதே'
என்கிற எழுத்துகள்."

நட்ராஜ் வேகமாய் இருசனை அழைத்தான். இருசனும் அவனை நெருங்கி நின்றான்.

"இருசா... அதோ அங்கபார் சிலர் கூட்டமா போறாங்க..."

"எங்கய்யா...?"

"நேரா பார்... அந்த நெட்டையான மரத்துகிட்ட..."

"எனக்கு தெரியலியேய்யா..."

"இந்தா இந்த பைனாகுலர்ல பார்..."

நட்ராஜ் இருசனிடம் பைனாகுலரைக் கொடுத்து, பார்க்கவும் சொல்லிக் கொடுத்தான்.

"ஆமாங்கய்யா... இப்ப தெரியுது..."

"அவங்க வானத்து மனுசங்க தானே?"

"அப்படித்தாங்க இருக்கணும். கூட்டமா கண்ணுல பட்டாலே அவங்களாத்தான் இருக்கணும்."

"கமான்... அவங்கள பின் தொடர்வோம். அவங்க எங்க போறாங்கன்னு பார்ப்போம்."

"இல்லீங்க... அது முடியாது. நடுவுல இந்த மலை யோட ஆறு ஓடுது. அது இங்க இருந்து பார்த்தா தெரியாது. இறங்கினா தான் தெரியும். அப்படியே இறங்கினாலும் அவங்கள பிடிக்க முடியாது. போயிடுவாங்க."

- இருசன் சொல்ல, ஜீப்பில் ஏறி அமர்ந்திருந்த வள்ளி யம்மை, "நட்டி... இப்ப எதுக்கு அவங்கள பார்க்க விரும் புறே?" என்று கேட்டாள்.

"அவங்கள பத்தி கேள்விப்பட்ட விஷயங்களை அவங்க கிட்டயே கேட்டு தெளிவு பண்ணிக்கத்தான்..."

"எங்கள வீட்டுல கொண்டு போய் விட்டுட்டு, அப்புறமா என்ன செய்யணுமோ செய்..." என்றாள் வள்ளி யம்மை.

"அவங்கள அப்படி எல்லாம் பிடிச்சுட முடியாது. ஆனா அவங்கள நாம பாக்க மனசார ஆசைப்பட்டா, அவங்களா தேடி வருவாங்க..." என்றாள் நீலி.

இருவரையும் சில வினாடிகள் கேலியாக பார்த்தவன், ஜீப்பில் ஏறி அமர்ந்து கொண்டு அதை கிளப்பினான். ஜீப்பும் வேகமெடுத்தது. ஜீப்புக்குள் வள்ளியம்மை விருட்சமரத்து இலையை தன் சேலை முந்தியில் கட்டியிருந்தாள். அந்த முடிச்சை மெல்ல அவிழ்த்து இலையை பார்த்தாள். இலை லேசாக கசங்கி ஒருவித வாசம் வீசியது. உடனிருந்த நீலியும் கவனித்தாள்.

"என்ன பார்க்கிறீங்க?"

"நல்ல வாசமா இருக்கு இந்த இலை..."

"இதை இழுத்து மோந்தா தலைவலி எல்லாமும் போயிடும்..."

"அப்படியா?"

"யூகலிப்டஸ் இலை கூடத்தான் மோந்தா சுகமா இருக்கும். இது ஒண்ணும் அதிசயமில்ல..." முன்னால் இருந்த நட்ராஜிடம் இருந்து பதில் வந்தது.

"நீ சும்மா இரு..." வள்ளியம்மை அவனை செல்லமாக அதட்டினாள்.

ஜீப்பிடம் நல்ல வேகம்.

சிவக்குமாரின் வனஇலாகா ஜீப் வனப் பாதையில் ஒரு இடத்தில் பஞ்சர் ஆகி நின்று விட்டிருந்தது. கோவிந்தன் ஸ்டெப்னி மாற்றுவதில் மும்முரமானான். சிவக்குமார் அந்த இடைவெளியில் நாலாபுறமும் பார்த்தான். அப்போது சற்று தொலைவில் ஒரு இடிந்த கட்டடம். மேலே கூரை இல்லை. ஆனால், சுவர்கள் இடியாமல் உறுதியாக இருந்து கண்ணில் பட்டன.

"கோவிந்தன்-அது என்ன கட்டடம்?" என்றும் கேட்டான்.

"அதுவா சார்... அதுதான் சார் நம்ம பழைய வன இலாகா ஆபீஸ்..."

"நம்ம ஆபீசா?"

"ஆமாம் சார்... இங்க யானைங்க தொல்லை அதிகம் சார். எழுபத்தி எட்டுல ஒரு ஆபீசரையும், எம்பத்தஞ்சுல ஒரு ஆபீசரையும் ஆபீசுக்குள்ளேயே பூந்து மிதிச்சு கொன்னுடுச்சுங்க... அப்புறம்தான் இங்க இருந்த ஆபீசை, இப்ப இருக்கிற இடத்துக்கு மாத்துனாங்க..."

கோவிந்தன் டயர்களை மாற்றியபடியே பதிலளித்தான். சிவக்குமாரும் அப்படியே அந்த சுவர்கள் உள்ள இடம் நோக்கி நடந்தான். கீழே காலடிபட்டு இலை தழைகள் வதங்கின. காய்ந்த சருகுகள் சப்தமிட்டன. சுவற்றில் பச்சையாய் பாசி படிந்து, சில இடங்களில் காளான்கள் முளைத்திருந்தன. தரை எல்லாம் ஏராளமான காட்டுத்தாவரங்கள் வளர்ந்து அந்த இடத்தில் தரையே தெரியவில்லை. அதில் சில செடிகள் மேல் சிவப்பாய் ரத்த சொட்டுகள்!

அதைப் பார்த்த நொடி சிவக்குமாருக்கு பகீரென்றது. ஆட்காட்டி விரலால் தொட்டு முகரவும், அது ரத்தம்தான் என்பது உறுதியாயிற்று. மிருகங்கள் ஏதாவது வேட்டையாடிய போது ஏற்பட்டதா? இல்லை வேறு ஏதாவதா? சிவக்குமாரின் பார்வை சுற்றிச் சுழன்றது. ஒரு இடத்தில் மிக்சர் பொட்டலத்தை சாப்பிட்ட நிலையில் கசக்கி போட்டதைப் போல ஒரு காகிதப்பந்து. எடுத்து விரித்து பார்த்தபோது, 'வானத்து மனிதர்களுக்கு தங்கச்சுரங்கம் உள்ள இடம் தெரியும். அவர்களை விடாதே' என்கிற எழுத்துகள். படித்த மாத்திரத்தில் சுரீர் என்று மின்னல் வெட்டியது போல் இருந்தது. அதற்குள் கோவிந்தனிடம் இருந்தும் குரல்.

"சார்... ஸ்டெப்னிய மாட்டிட்டேன்..."

"கோவிந்தன் கொஞ்சம் இங்க வா..."

"என்ன சார்?"

"வாய்யான்னா..."

கோவிந்தனும் ஜீப்பை விட்டு அவரை நோக்கி ஓடி வந்தான். அவன் வரவும் இலைகள் மீது தெரிந்த ரத்தத் துளிகளை காட்டினார். முதலில் அதிர்ந்தாலும், "ஏதாச்சும் மிருகங்க சண்டை போட்டுக்கிட்டு வந்திருக்கும் சார்..." என்றான்.

"அப்படின்னா இதைப் பார்..." கசங்கிய காகிதத்தை கர்ண்பித்தார். படித்தவனுக்கு பகீரென்றது.

"இதுக்கு என்ன சொல்ற?"

"உண்மையிலே ரொம்ப ஆச்சரியமாவும், அதிர்ச்சி யாவும் இருக்கு சார்..."

"எதுக்கும் இந்த ரத்தத்தை சாம்பிள் எடுத்துக்கோ..."

"அப்படியே இலையோடயா சார்?"

"ஆமாம்... இது மிருக ரத்தமா, இல்லை மனித ரத்த மான்னு லேப்ல கொடுத்து டெஸ்ட் பண்ணி பார்த்துடலாம்."

"அப்ப நீங்க என்ன சார் நினைக்கிறீங்க?"

"இங்க பெருசா தப்பு நடந்துகிட்டிருக்குய்யா. தங்கச் சுரங்கம்னு இதுல இருக்கிறத பார்த்தா, இந்த காட்டுல அப்படி ஏதாவது இருக்கிறதா கேள்விப்பட்டிருக்கியா?"

"இத்தனை வருஷத்துல நான் அப்படி எதையும் கேள்விப்பட்டதே இல்லையய்யா..."

"இல்ல... இங்க நிச்சயமா தங்கச் சுரங்கம் இருக்கணும்."

"தங்கச் சுரங்கம்னா எப்படி சார்... எனக்கு புரியல."

"தோண்டினா மண்ணுல தங்கம் கலந்துருக்கும். தண்ணில அதை கரைச்சு அரிச்செடுத்தா, ஒரு டன் மண்ணுல பத்துகிராம், இருபது கிராம், ஏன் ஒரு கிலோ தங்கம் கூட கலந்துருக்கலாம்..."

"நிஜமாவா சார்...?"

"கம்போடியா, அப்புறம் தென்ஆப்பிரிக்காவுல சில நாடுகள்ல இப்படி நிறைய இடங்கள் இருக்கு. மண்ணைத் தோண்டி அலசி அலசி, அதுல இருந்து தங்கத்தை பிரிச்சு எடுப்பாங்க. டிவில ஜியாக்ரபி சேனல்ல பார்க்கலாம். சில சமயம் ஒரு கோலி உருண்டை அளவு தங்கம் கிடைக்கும். சில நேரங்களில் எதுவுமே கிடைக்காது. மனித உழைப்பை நிறைய செலவழிக்கணும். ஒரு நாலஞ்சு பேர் கூட்டு சேர்ந்து தங்கம் தேடுவாங்க. அதுக்கு முந்தி அந்த இடத்தை லீசுக்கு எடுத்துருவாங்க. தங்கம் கிடைச்சாலும் கிடைக்கலேன்னாலும் பணத்தை கொடுத்துடணும். லாட்டரி சீட்டு மாதிரிதான்..."

"அப்ப இங்க அந்த மாதிரி இருக்கலாம்ங்கிறீங்களா?"

"நிச்சயமா... அகோரசாமி, வானத்துமனுஷங்க எல்லாரும் அதைத்தேடி சுத்துறவங்களாத்தான் இருக்கணும். குறுக்க யாராவது வந்து வெட்டிப் போட்டுட்டு தேடி திரியலாம். இல்லையா?"

"அப்படின்னா அவங்க மண்ண தோண்டி எடுத்து அரிக்கணுமே சார். அப்படி எல்லாம் எங்கயுமே நடக்கலையே சார்..."

"நடந்துகிட்டிருக்கும். நம்ம பார்வையில படாத மாதிரி இரவு நேரங்கள்ல..."

"அப்படி எத்தனை நாள் சார் செய்ய முடியும்? ஒரு நாள் இல்லை, ஒரு நாள் தெரிஞ்சிருக்குமே..."

"நீ சொல்றதும் சரிதான். எனிவே கார் டயர் பஞ்சர் ஆனதுலயும் ஒரு நல்லதுதான் நடந்துருக்கு. இல்லேன்னா இந்த உண்மையே தெரிய வந்துருக்காதே..."

சிவக்குமார் சொன்னபடி ரத்தம் எவ்வளவு தூரம் சொட்டியுள்ளது என்று பார்த்தபடியே சென்றார். ஒரு இடத்தில் மண்பரப்பு தோண்டப்பட்டது போல நெகிழ்வு. நின்று உற்றுப் பார்த்தார்.

"இங்க இந்த இடம் தோண்டப்பட்டது மாதிரி இருக்கு பார்."

"ஆமாம் சார்..."

"ஜீப்ல மண்வெட்டி இருக்கா?"

"இல்லை சார்..."

"இந்த இடத்தை தோண்டிப் பார்க்கணுமே..."

"அப்ப நான் போய் மண்வெட்டிய எடுத்துக்கிட்டு வந்துடட்டுமா சார்..."

"கமான் க்விக்! எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ வா..."

"சார் நீங்களும் வாங்க. இங்க தனியா நிக்குறது எனக்கு சரியா படல..."

"அதுவும் சரிதான்..."

சிவக்குமார் வேகமானார். ஓட்டமாக வந்து ஜீப்பில் ஏறிட, ஜீப்பும் சீற ஆரம்பித்தது.

"இங்க இருந்து நம்ம ஆபீஸ் எவ்வளவு தூரம்?"

"மேல் நோக்கி ஏழு கிலோமீட்டர் தூரம் சார்..."

"ஏழும் ஏழும் பதினாலு கிலோமீட்டர் தூரம் போக வர, எப்படியும் முக்கால் மணி ஆயிடுமில்ல..."

"ஆமாம் சார்..."

"வழியில மலை ஜனங்க கைல மண்வெட்டி இருந்தா கூட வாங்கிக்கலாமே..." சிவக்குமார் கூறிட, ஒரு தாணு மாலயன் மண்வெட்டியோடு வந்து கொண்டிருந்தான்.

"அதோ அவன்கிட்ட மண்வெட்டிய வாங்கு..."

"சார் அவனையே ஏத்திக்குவோம். அவங்க நல்லா தோண்டுவாங்க..."

"அப்ப சரி..." சிவக்குமாரின் கட்டளை செயல் ஆனது. அந்த தாணுமாலயக் குடி மனிதனும் ஜீப்பில் ஏறி மலம் கழிப்பவர்கள் போல குந்தி அமர்ந்தான்.

"நல்லா உட்காருய்யா..."

"பரவால்லீங்க..."

"அட உட்காருய்யான்னா..."

- சிவக்குமார் அதட்ட அமர்ந்தான்.

"ஒரு இடத்துல குழியை தோண்டணும். தோண்டுவியா?"

"உ ந்தரவுங்க..."

ஜீப்பும் இடிக்கப்பட்ட அந்த கட்டடப் பகுதியருகே நிற்க, மூவரும் இறங்கினர். குழியும் தோண்டப்பட்டது. மண்கட்டிகள் இலகுவாக வந்து விழுந்தன.

ஒரு அடி

இரு அடி

மூன்றாவது அடியின் போது அருகில் புலி ஒன்றும் உறுமும் சப்தம் கேட்டது. அந்த தாணுமாலயனிடம் பயம்.

"சாமி புலி வருது போலங்க..."

"நீ தோண்டு. வந்தா கூட இதோ துப்பாக்கி இருக்கு..."

"ஐயோ தப்புங்க..."

"கோவிந்தன் நீ இறங்கி தோண்டு..."

"சரிங்க சார்..."

கோவிந்தன் இறங்கினான். ஐந்தாவது அடியில் ஒரு உடல் இருப்பது தெரிந்தது. உடையில் காக்கி வண்ணம். சிவக்குமாருக்கு பகீர் என்ற நிலையில், முகம் இருந்த பக்கம் கோவிந்தன் மண்ணை விலக்க, காளிமுத்துவின் முகம் பளிச் சென்று தெரிந்தது.

14

'முதலில் அந்த எட்டுவகை பாம்புகள் எவை என்று தெரிந்து கொள்வோம். வாசுகி, தக்கன், அருந்தன், குளிகன், சங்கபாலன், பதுமன், மகா பதுமன், கார்க்கோடகன்' ஆகியவையே அந்த எட்டுவகை சர்ப்பங்களாகும். இந்த பாம்புகள் முறையே ஷத்திரியப் பிரம்ம வைஸ்ய சூத்திர எனும் நான்குவகைப் பிரிவை சேர்ந்தவையாகும். பாம்புக்கு கூடவா ஜாதி என்று சிலருக்கு கேட்கத் தோன்ற லாம். ஆனால், அவைகளை அடையாளம் காணவும், செயல்பாட்டை புரிந்து கொள்ளவும் இங்கு ஜாதி அடையாளமாக பயன்படுகிறது.

இவைகள் வனத்தில் ஒருவரை கடித்து, அவர் உயிர்ப் பிரிவதற்கு பின்னால் விதிப்பாடு உள்ளது. சில நேரங்களில் கடிக்க வேண்டும். விஷம் உடம்பில் ஏற வேண்டும் என்கிற விதிப்பாடும் இருக்கும். அந்த விஷம் முறிந்து உயிர் பிழைக்க வேண்டும் என்கிற விதிப்பாடும் இருக்கும்.

காட்டில் ஒருவரை சர்ப்பம் தீண்டிவிட்டால் விஷம் ஏறாமல் இருக்க உடனடியாக தும்பைஇலை, அவுரி இலையை பறித்து கசக்கி சாறு எடுத்து, அத்துடன் துளி சிறுநீர் பெய்து சேர்த்து, அதை காதிலும் மூக்கிலும் விட்டு விஷத்தை முறிப்பதற்கு முயலு வார்கள். இதில் கவனம் தேவை. மூலிகைகளை அடையாளம் காணத் தெரிய வேண்டும்.

மூலிகைகளை அடையாளம் காண்பது மட்டுமல்ல, பாம்புகளையும் அடையாளம் காணத் தெரிய வேண்டும். வாசுகி இனத்தை சேர்ந்தவைகளே

நாகங்கள். கார்க்கோடக இனத்தை சேர்ந்தவை வாலில் விஷமுள்ள சாரைப்பாம்புகள். சில நாகங்கள் விஷத்தை எதிரில் உள்ள உயிரினங்களின் பளபளப் பான கண்களைப் பார்த்து உமிழும். பீறிட்டுச் சென்று கண்களில் பட்ட நொடி, கண்கள் பார்வையை மெல்ல இழக்கத் தொடங்கிவிடும். பல சிங்கங்கள், புலிகள் இது போல பாம்புகளின் விஷப்பீறிடலால் தங்கள் கண்களை இழந்து வேட்டைக்கும் செல்லா மல், இருந்த இடத்திலேயே பட்டினி கிடந்து உயிரை விட்டிருக்கின்றன!'

- தாணுமாலயவன சரிதம்.

"ஒரு பக்கம் தோள்ல பொணத்
தோட அலையுற ஒருத்தன்.
இன்னொருபக்கம் கூட்டமா
திரியுற வானத்து மனுஷங்க.
இவங்களுக்கு நடுவுல ஒரு
மரத்துல இருக்கிற இலையை கூட
சாமின்னு நினைக்கிற முட்டாள்
மலை ஜனங்க..."

"புகை புலி மீது பரவியது. உறுமியபடி
கிடந்த புலியும் அப்படியே கண்கள்
செருக மயங்கியது. அதை
உறுதிபடுத்திக் கொண்ட வனக்குடியன்,
புலி அருகே சென்று காலில் தைத்திருந்த
முட்களை பிடுங்கி எடுத்தான்..."

முந்தைய ஆபீசர், காளிமுத்துவின் முகத்தைப் பார்த்த நொடி, சிவக்குமாருக்கு காலை மலைப்பாம்பு வளைத்துப் பிடித்த மாதிரி இருந்தது. கோவிந்தனும் பதட்டத்தோடு சற்று தூரச் சென்றான். தோண்டிய இடத்தில் இருந்து ஒரு வித கெட்டவாடையும் வீசத் தொடங்கியது. அந்த தாணுமாலயன் வேகமாய் மேலேறி, "ஐயோசாமி... என்னங்க இது, நம்ப

வனத்துலயா இப்படி ஒரு கொடுமை...” என்று வாய்விட்டு வெடித்தான். சிவக்குமார் நெடுநேரம் அடுத்து என்ன செய்வது என்கிற சிந்தனையிலேயே இருந்தார்.

“சார்...” கோவிந்தன் சன்னமான குரலில் அவர் சிந்தனையை கலைக்க முயன்றான். அவரும் திரும்பினார்.

“சார்... முதல்ல ஹெட் ஆபீசுக்கு தகவல் தருவோம் சார். அவங்க வரவும், உடம்பை தோண்டி எடுத்து செய்ய வேண்டியதை செய்யலாம் சார்...”

“அப்படித்தான் செய்யணும், வேற வழி இல்லை.”

“அப்ப மண்ணை போட்டு மூடிடட்டுங்களா... வாடைக்கு மிருகங்க வந்தா பிச்சு தின்னுடும். அதுலயும், நரிங்க கூட்டமா வந்தா ஒரு எலும்பு துண்டு கூட மிஞ்சாது...”

தாணுமாலய வனக்குடியன் தன் அபிப்ராயமாக சொன்னபோது, திரும்பவும் புலி உறுமும் சத்தம்.

“அப்ப வேகமா மண்ணைப் போட்டு மூடு... சீக்கிரம்!”

சிவக்குமாரின் கட்டளை, வேகமான செயலாகியது. மண்கட்டிகள் குழிக்குள் திரும்ப விழுந்தன. மூடிக்கொண்டன.

சிவக்குமார் தன் வசமுள்ள செல்போனை எடுத்து டவர் இருக்கிறதா என்று பார்த்தார். அங்கே இருந்தது. உடனேயே ஒரு எஸ்எம்எஸ் செய்தி ஹெட்குவாட்டர்சுக்கு பறக்கத் தொடங்கியது. பேசுவதற்கும் முயன்றார். ஆனால், எல்லா தடங்களும் இயங்கியபடி இருந்தன.

இடையில் அந்த குடியன் விறுவிறுவென அருகில் உள்ள மரத்தில் ஏறி நாலாபுறமும் பார்த்தான். மிருகங்களின் குரல் கேட்டால், இப்படி மரத்தில் ஏறிக் கொண்டு அவைகளிடம் இருந்து தப்பிப்பது ஒரு விதம். மரத்தின் மேல் இருந்து பார்க்கும் போதுதான் அவை இருக்குமிடத்தையும் டாப் ஆங்கிளில் தெளிவாக பார்க்க முடியும். அப்படி அவன்

பார்த்தபோது, சற்று தொலைவில் ஒரு புலி, காலில் இரண்டங்குல கருவேல முள் கொண்ட கொப்புப்பகுதி குத்தியிருக்கும் நிலையில் அதை பிடுங்க வழி தெரியாதபடி ஒரு பக்கமாய் படுத்தபடி உருமிக் கொண்டிருந்தது. வனக்குடியன் அதை பார்த்து விட்டு விறுவிறுவென கீழே இறங்கினான்.

சிவக்குமாரிடம், "சாமி... புலியோட காலல கருவேல மர முள் கொப்பி தைச்சிருக்குங்க. பின்னங்காலல தைச்சதால புலியால பிடுங்க முடியல. தவிக்குது..."

"அப்ப மயக்க ஊசி போட்டு, அது மயங்கின பிறகு எடுத்து விட வேண்டியதுதான்..."

"அவசியமில்லிங்க... புகை போட்டா போதுங்க. அது மயங்கிடும்..."

"என்னய்யா சொல்ற?"

"கபாலகிராக்கின்னு ஒரு செடி இருக்குங்க. அதை எரிச்சா அதுல இருந்து வர்ற புகை ஆடு, மாடுங்கள கூட மயக்கிச் சாச்சிடுங்க..."

"கபாலகிராக்கியா? கேள்விப்பட்டிராத பேரா இருக்கே...?"

"அதுக்கு ஒவ்வொரு மலைல ஒவ்வொரு பேர். இங்க நாங்க கபாலகிராக்கிம்போம். ஒரு நிமிஷம் இருங்க..." என்று அதை பறித்து வர ஓடினான்.

"சார் ஹெட் ஆபீசுக்கு தகவல் அனுப்பிட்டீங்களா?" என்று கேட்டான் கோவிந்தன்.

"எஸ்எம்எஸ் அனுப்பிட்டேன். இந்த மலையை பத்தி நீயும் பெருசா ஒரு தப்பும் நடக்காத மலைன்னு பேசினியே..."

"வாஸ்தவம்தான் சார்... எனக்கே இது அதிர்ச்சியாத்தான் இருக்கு..."

"காளிமுத்துவுக்கு இப்படி ஒரு நிலை வந்திருக்கக் கூடாது. ஒண்ணு மட்டும் நல்லா தெரியும் எனக்கு... அவர்

இங்க தொட ர்ந்து நீடிக்க விரும்பல. சிரமப்பட்டு டிரான்ஸ்பர் வாங்கிட்டுத்தான் போனார். காரையார் போய், அங்க டியூட்டியில ஜாயின் பண்ணியிருப்பார்னு நான் நினைச்சுக் கிட்டிருக்க, அவர் இந்த மலையையே தாண்டல. அவர் போட்டிருந்த சட்டையை கவனிச்சியா?"

"அவர் இங்க இருந்து போகும் போது போட்டிருந்த சட்டை..."

"அவரை நீ எங்க இறக்கி விட்ட?"

"நம்ப தாணுமாலய வனத்துக்கு வெளியே, தார் ரோட்டுல ஒரு பஸ் ஸ்டாப் இருக்கு. அங்க தான் சார்..."

"ஏன் பஸ் ஸ்டாண்டுல கொண்டு போய் விடல?"

"சார் அவர் விரும்பியிருந்தா, நான் பாபநாசத்துல இருக்கிற காரையார் காட்டுக்கே போய் கூட விட்டுட்டு வந்திருப்பேன். ஆனா அவர்தான் அந்த பஸ்ஸ்டாப்ல இறங்கிக்கிட்டார்..."

"அப்படின்னா அந்த பஸ்ஸ்டாப்ல அவர் இறங்கின துக்கு பிறகுதான் ஏதோ நடந்திருக்கணும்..."

"ஆமாம் சார்... அங்க இறங்கின அவர், அதன்பிறகு காரையாருக்கே போய் சேரல சார்..."

"போகட்டும்... அவர் இங்க இருந்தப்ப, அவருக்கு இந்த காட்டுல ஏற்பட்ட அனுபவங்கள் எப்படி?"

"எனக்கு தெரிஞ்சு விபரீதமா எதுவும் இல்லை சார். இங்க விபரீதமா எதுவும் நடந்ததுமில்லை சார்."

"அப்படியும் இப்ப பார்த்த விஷயம்?"

"அதுதான் சார் எனக்கும் புரியல."

"என்ன புரியல? ஒரு பக்கம் தோள்ல பொணத்தோட அலையுற ஒருத்தன். இன்னொரு பக்கம் கூட்டமா திரியுற

வானத்து மனுஷங்க. இவங்களுக்கு நடுவுல ஒரு மரத்துல இருக்கிற இலையை கூட சாமின்னு நினைக்கிற முட்டாள் மலை ஜனங்க. கூட்டிக்கழிச்சா பளிச்சுன்னு தெரியுதேய்யா... இங்கதான் பெருசா தப்பு நடக்க வாய்ப்பிருக்குன்னு..."

"தப்பு, தப்புன்னா... அது என்ன சார்?"

"என்னவா? துண்டு சீட்டுல எழுதியிருந்ததை அதுக்குள்ள மறந்துட்டியா? தங்கம்யா... தங்கம்!"

"இந்த மலைல தங்கம் இருக்குன்னா நம்பவே முடியல சார்..."

"இதோ பார்... பூகோள ரீதியா முதல்ல அதுக்கு வாய்ப்பு இருக்கான்னு யோசிக்கணும். நிறையவே இருக்குங்கிறது என் கருத்து. பல மலைகள்ல இதே போல தங்கமண் கனிமம் இருக்குய்யா... ஆனா ஒரு கிராம் தங்கம் எடுக்க அஞ்சுகிராம் தங்கம் அளவு செலவு செய்யணும். அதனால அரசாங்கம் பெருசா ஆர்வம் காட்டல. ஆனா அப்பப்ப யாராவது வந்து தோண்டுறதும், தேடுறதும் நடந்துக்கிட்டுதான் இருக்கு."

"அப்படின்னா நான் பார்த்திருப்பேனே..."

"கோவிந்தா... உன் கண்ண கட்டுறது ஒண்ணும் பெரிய விஷயமில்ல. உன்கிட்ட நான் ஒண்ணும் பெரிய ஐக்யூவை பார்க்கல. நீ ஒரு ஆவரேஜான ஆள்தான். உன்னை கட்டிப்போட சின்ன அளவுல மேஜிக் தெரிஞ்சிருந்தாலே போதும்..."

அவர்கள் இருவரும் பேசியபடி ஜீப் அருகே வரவும், அந்த வனக்குடியன் கையில் பிடுங்கிய நிலையில் ஒரு செடியுடன் வரவும் சரியாக இருந்தது.

"என்னய்யா... இதான் கபாலகிராக்கி செடியா?"

"ஆமாங்க..."

"பார்த்தா கஞ்சா செடி மாதிரி இருக்கே..."

"அதெல்லாம் எனக்கு தெரியாதுங்க. இது தீயில விழுந்தா படபடன்னு சத்தம் வரும். புகையும் பெருகும். அதை முகர்ந்தா மயக்கம் வந்துடும். எங்க குழந்தைங்க உடம்புல உரம் விழுந்து அழுதுகிட்டு இருந்தா, அதுங்க தொட்டிலுக்கு கீழே கொள்ளிக்கட்டையை பிடிச்சு, அந்த கொள்ளில இந்த இலை இரண்டை போடுவோம். இதோட புகையை அப்படியே சுவாசிக்கிற குழந்தைகளும் அழுவுறதை நிறுத்திட்டு தூங்கிடும்."

என்றபடியே புலி கிடக்கும் இடம் நோக்கி செல்லத் தொடங்கினான்.

சிவக்குமாரும் கோவிந்தனும் பின் தொடர்ந்தனர். அதன்பின், அதிகபட்சம் ஐந்தே நிமிடம் தான். புகை காட்டுக்குள் பரவ ஆரம்பித்தது. அவன் ஒரு துண்டால் தன் வாயை, மூக்கை கட்டிக் கொண்டான். கோவிந்தனும் சிவக்குமாரும் கூட சுவாசிப்பதை கட்டுப்படுத்திக் கொண்டனர்.

புகை புலி மீது பரவியது. உறுமியபடி கிடந்த புலியும் அப்படியே கண்கள் செருக மயங்கியது. அதை உறுதிபடுத்திக் கொண்ட வனக்குடியன், புலி அருகே சென்று காலில் தைத்திருந்த முட்களை பிடுங்கி எடுத்தான். ஆழமாக தைத்திருந்தது. ரத்தம் தோய்ந்த வெளிப்பட்டது. அதை அவன் இருவருக்கும் காண்பித்தான். சிவக்குமார் ஆச்சரியத்தோடு பார்த்தார். அவர் பார்வை புலியையும் ஊடுருவியது. அவன் அதன் வயிற்று பாகத்தை பார்த்துவிட்டு, 'ஐயா... இது தாய்ப்புலிங்க. சூல் கொண்டு இருக்குது' என்றான். பின் உடம்பை தடவிக் கொடுத்தான்.

"அப்படியே இரு. ஒரு போட்டோ எடுத்துக்கிறேன்."

என்று தன் செல்போனில் அவன் புலியை வருடுவதை புகைப்படம் எடுத்துக் கொண்டார் சிவக்குமார்.

"சரி புறப்படு... இனி அது போயிடும் தானே?"

"போயிடுங்க..."

"இந்த காட்டுல எவ்வளவு புலிங்க இருக்குன்னு தெரியுமா? கோவிந்தன்...?"

"பதினோறு புலின்னு மூணு வருஷம் முந்தி சர்வே பண்ணப்ப சொன்னாங்க சார்..."

"இந்த புலிங்களால வனவாசிகள் யாரும் பாதிக்கப்பட்டதில்லையா?"

"அதாங்க இல்லை. தாணுமாலயர் புலி மேல வருவார்ங்கிறதுதாங்க எங்க நம்பிக்கை..." என்றான் வனக்குடியன்.

"சரி... நீ இங்கேயே இரு. நாங்க கொஞ்ச நேரத்துல இங்க வந்துடுவோம். நாங்க வந்த பிறகு நீ போகலாம்" என்ற சிவக்குமாரை அவன் அசடாக பார்த்தான்.

"என்ன?"

"நான் போகணுங்க... இருட்டுன பிறகு ஊருக்குள்ள போனா மூப்பர்கிட்ட தகுந்த காரணம் சொல்லணுங்க."

"சொல்லு... நான்தான் இருக்க சொன்னேன்னு சொல்லு. அப்படியே இங்க ஆபீசரை பொணமா பார்த்ததை சொல்லு. அப்புறமா உங்க மூப்பரை நான் வந்த பார்ப்பேன்னும் சொல்லு..."

"சரிங்க... நீங்க எப்ப வருவீங்க?"

"அது தெரியாது... பக்கத்து டவுன்ல இருந்து ஆம்புலன்ஸ் வர்றதை பொறுத்தது அது..."

"இப்படி சொன்னா எப்படிங்க?"

"தொண தொணன்னு பேசாம இங்க இரு. நாங்க வந்துடுறோம்!"

"ஐயா நான் தனியா இருக்கைல எனக்கு ஏதாவது ஆயிட்டா?" அவன் கேள்வி சிவக்குமாரை யோசிக்க வைத்தது.

"சார்... தனியா இங்க இருக்கிறது நல்லதில்ல சார். மூணு பேரும் போயிட்டே திரும்பி வருவோம் சார். நாம இப்ப நம்ம ஆபீசுக்கு கூட போக வேண்டாம். காட்டுக்கு வெளிய முதல்ல டவுனுக்கு போய் அங்க போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு முதல்ல சொல்லுவோம்."

"அவருக்கா?"

"சார்... இது நம்ம அதிகாரத்துக்குட்பட்ட பகுதியா இருந்தாலும், வெளிய எதிரிங்க இருந்தா அவங்கதான் சார் கண்டுபிடிக்கணும். இந்த விஷயத்துல டிபார்ட்மெண்ட்ட பார்க்க வேண்டாம் சார்..."

கோவிந்தன் சொல்வதும் சரியாகத்தான் இருந்தது. சிறிது யோசித்த சிவக்குமார், சரி என்று புறப்பட்டார். வனக்குடியனை போகச் சொல்லிவிட்டு, ஜீப்பை டவுன் நோக்கி செலுத்த தொடங்கினார். அதேசமயம் அவர்கள் தோண்டி மூடிய இடத்தின் மேல் ஒரு உருவம் வந்து நின்றது.

15

தாணுமாலய வனத்துக்குள்ளே 'அர்ஜினன் மடு' என்று ஒன்று உண்டு. அர்ஜினன் தீர்த்த யாத்திரை புரிந்த சமயம், தாணுமாலய வனத்திலுள்ள தீர்த்தங் களிலும் நீராட எண்ணுகிறான். மனிதவாழ்வில் தீர்த்த யாத்திரை என்பது பாவங்களை எல்லாம் போக்கி, பெரும் புகழையும் செல்வத்தையும் தரக் கூடியது. இதனாலேயே மகாபாரத்து அர்ஜினனும் தீர்த்தயாத்திரை மேற்கொள்கிறான். அப்போது தாணுமாலய வனத்தில் ஒரு மடுவில் நீராட முடி யாமல், வனத்தில் தவம் செய்தபடி இருந்த முனிவர் கள் வருத்தத்துடன் இருந்தனர். காரணம் அந்த

மடுவில் முதலை ஒன்று இருந்து, அதில் இறங்கிக் குளிப்போரை விழுங்கி வந்தது. அதை வேட்டை யாடும் துணிவும் ஒருவருக்கும் இல்லை. இதை அறியும் அர்ஜுனன், அந்த மடுவில் துணிவுடன் இறங்கி, தன்னை விழுங்க வந்த முதலையையும் கொல்கிறான். கொன்ற பிறகே அந்த முதலை, சாபம் பெற்ற அப்சர கன்னிகை என்பது தெரிய வருகிறது. தன்னை துணிவுடன் கொல்லும் ஒரு ஆண் மகனால் சாபநிவர்த்தி என்பது, அது பெற்ற சாப விமோசன வரமாகும். அப்படி விமோசனம் பெற்ற அந்த மடு தான், அர்ஜுனன் பேரால் அர்ஜுன மடு என அழைக்கப்படுகிறது. அதில் குளிப்பவர்களுக் கெல்லாம் எப்படிப்பட்ட சாபம் இருந்தாலும் நீங்கி விடும் என்பது இன்றும் நம்பப்படுகிற ஒரு விஷய மாகும். ஆனால், அந்த மடுவைச் சுற்றிலும் கொடிய மிருக நடமாட்டம் இருப்பதால் தாணுமாலயவனக் குடியர்களே அங்கு செல்வதில்லை!

- தாணுமாலயவன சரிதம்.

"நிற்கும் அந்த நபரும்
ஜீப்பின் வருகையை
பார்த்து கை நீட்டி நிறுத்த
முயன்றார். கிட்டே
நெருங்கவும் தான் அது ஒரு
பெண் என்பது தெரிந்தது..."

"ஹாலோஜன் விளக்கொளி பக்க
வாட்டில் பட்டதில் ஒரு புதர் மேல் ஒரு
துணி கிடப்பது தெரிந்தது.
உடனேயே லைட்டோடு அருகே
நெருங்கிப் பார்த்தபோது..."

உடல் முழுக்க கறுப்பு போர்வையை போர்த்திக் கொண்டு, ஒரு கரிய வடிவாக தெரிந்த அந்த உருவம் ஆணா இல்லை பெண்ணா என்றும் தெரியவில்லை. அப்படியே மண்டியிட்ட அந்த உருவம், குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கியது. பின் போர்வையை விலக்கி உள்ளே இருந்து எதையோ எடுக்கத் தொடங்கியது. பிறகுதான், அது ஒரு மலர்க்கொத்து என்பது தெரிந்தது. அந்த மலர்க் கொத்தை தோண்டி மூடிய அந்த குழியின் மேல் அஞ்சலி செலுத்துவது போல வைத்த அந்த உருவம் அப்படியே திரும்பிச் செல்லத் தொடங்கியது.

நன்றாக இருட்டி விட்டது.

நட்ராஜ், அதுவரை படம் எடுத்தது போதும் என்று கேமரா மற்றும் கேமரா ஸ்டாண்டை மடக்கி ஜீப் டிக்கியில் வைக்கத் தொடங்கினான். கூடவே இருந்த இருசனும் அவனுக்கு எல்லா உதவிகளையும் செய்தான். அப்படியே, "என்னங்கய்யா... இதால பகல்ல மட்டும்தான் படம் பிடிக்க முடியுங்களா? ராத்திரியில பிடிக்க முடியாதா?" என்றும் கேட்டான்.

"ஏன் முடியாது... எப்ப வேணா படம் பிடிக்கலாம். ஆனா நைட்ல படம் பிடிக்க கொஞ்சமாவது வெளிச்சம் வேணும்."

"அப்ப நீங்க ஆசைப்பட்டாலும் கற்பக மரத்தை படம் எடுக்க முடியாதுன்னு சொல்லுங்க..." என்று திருப்பிக் கேட்டவனை, நட்ராஜ் பதிலுக்கு கோபமாக பார்த்தான். ஆனால், கவியத் தொடங்கிய இருளில் நட்ராஜின் கோப முகத்தை இருசனால் உணர முடியவில்லை.

"நீ மரத்தை பார்த்திருக்கியா?"

"இல்லீங்க..."

"ஏன்... உனக்கு பார்க்கணும்ங்கிற விருப்பம் இல்லையா?"

"அட நீங்க வேற... எங்க நூறு வயசாகற மூப்பரே, ஒரு நூ வையோ இரண்டு தடவையோ தான் பார்த்துருக்காரு... எனக்கு இப்ப தாங்க முப்பது நடக்குது."

"அப்ப உங்க ஆட்கள் யாருமே பார்த்ததில்லையா?"

"எனக்கு தெரிஞ்சு இல்லைங்க..."

"உங்க மூப்பரை நான் சந்திக்கணுமே...?"

"இப்ப என்னை போற வழியில எங்க கிராமத்துல இறக்கி விட்ருங்க. நாங்க இருட்டு கட்டுறதுக்குள்ள கூட்டை அடைஞ்சிடணும்ங்கிறது எங்க காட்டோட சட்டம். அப்படி நீங்க என்ன இறக்கி விடும்போது, மூப்பர் என்னோட நாட்டுல இருந்தா நான் அவர்கிட்ட உங்களை திருமுகப் படுத்துவேன். அப்ப அவர்கிட்ட பேசிக்குங்க..."

"நாடுங்கிற... திருமுகப்படுத்துவேங்கிற... இதெல்லாம் நல்ல தமிழ். ஆனா, இதை நீ பேசுறதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு..."

"எங்க குடியிருப்பு கிராமத்தை நாங்க நாடுன்னு தாங்க சொல்வோம்... அதேபோல எங்க பாஷையில சில வார்த்தைங்க உங்களுக்கு புதுசா இருக்கலாம். ஆனா நாங்கதான் இந்திர குடிமக்களாச்சே? அப்படிதான் பேசுவோம். எங்களுக்கு யார் குருசாமி தெரியுமா?"

ஜீப்பில் ஏறி அமர்ந்தபடியே இருசன் கேட்க, நட்ராஜும் அதை கிளப்பியபடியே யார் என்று கேட்காமல் கேட்டான்.

"அகத்தியர் சாமிங்க..." என்று இருசன் கூறவும், நட்ராஜிடம் திகைப்பு.

"அகத்தியர் உங்க குருவா?"

"ஆமாம்- அவர்தான உங்க தமிழ் பாஷைக்கு இலக்கணம் எல்லாம் பண்ணவர்?"

"தொல்காப்பியர்னு கேள்வி... அதேசமயம் இந்த தொல்காப்பியர், அகத்தியரோட மாணவர். ஆகையால அகத்தியர் தமிழுக்கு நிச்சயம் எதாவது செய்திருப்பார். ஆனா இதை எல்லாம் நீ பேசுறதுதான் ஒண்டர்..."

ஹெட்லைட் வெளிச்சம், ஒரு நீண்ட ஒளிக் கோடாக அந்த வனத்து மண் பாதையில் விழுந்த நிலையில் ஜீப் ஓடத் தொடங்கியது. அதேநேரம், ஒரு இடத்தில் யாரோ நிற்பது போல தெரிந்தது. நிற்கும் அந்த நபரும் ஜீப்பின் வருகையை பார்த்து கை நீட்டி நிறுத்த முயன்றார். கிட்டே நெருங்கவும் தான் அது ஒரு பெண் என்பது தெரிந்தது. நட்ராஜ் ஜீப்பை நிறுத்தி ஆச்சரியத்தோடு அந்த பெண்ணை பார்த்தார்.

மாநிறத்தில் முப்பது வயது மதிக்கலாம். நல்ல செழுமை!

"சார்... என்ன கொஞ்சம் காட்டுக்கு வெளிய கொண்டு போய் விட்டுடுறீங்களா?" என்று கேட்டாள் அவள்.

"நீ யாரும்மா... இங்க என்ன பண்ற?"

"நான்... நான்..."

"என்ன தடுமாறுற?"

"நான் காட்டுக்குள்ள விருட்சமரத்தை கும்பிட வந்தேங்க. கும்பிட்டுட்டு திரும்புறதுக்குள்ள இருட்டிடுச்சு..."

"அப்ப நீ காட்டுக்கு வெளிய டவுன் பக்கம் இருந்து வந்தவளா?" இருசன் பாயின்ட்டாக கேட்டான்.

"ஆமாங்க..."

"என்ன ஆமாங்க... இப்படியா நேரம் கெட்ட நேரத்துல வருவே. நாங்க மட்டும் இப்ப வராட்டி என்ன பண்ணியிருப்ப?"

"தாணுமாலய சாமி துணை இருப்பாருங்க..."

அவள் பதில் நட்ராஜ்க்கு கோபத்தைத்தான் தந்தது.

"அப்ப சாமியே துணைக்கு வந்து கூட்டிட்டு போகட்டும். நாம கிளம்புவோம்..." என்று நட்ராஜ் ஜீப்பை கிளப்பி விட்டான். இருசனே இதை எதிர்பார்க்கவில்லை. ஜீப்பும் சீறியது.

"அட என்னய்யா நீங்க... அந்த பொண்ணு அப்படி சொன்னதுக்காக இப்படி போய் கோவிச்சுக்கிட்டீங்க... பாவம்யா..." என்றான்.

"என்ன பாவம்யா... எது எதுக்கு சாமியை துணைக்கு கூப்பிடுறதுன்னு ஒரு விவஸ்தை இல்லையா... சரி சரி, பின்னால பார் அவ வர்றாளானு?"

"இருட்டுல எதுவும் தெரியலீங்களே... நீங்க வண்டியை திருப்புங்க... அது கரடி நடமாட்டம் உள்ள இடம். நம்ம கோபத்தை காட்டுறது நல்லதில்ல..."

இருசன் சொன்னதைக் கேட்ட நட்ராஜ் மனம் கொஞ்சம் இரங்கியது. வண்டியைத் திருப்ப வழி இருக்கிறதா என்று பார்த்தான். ஒரு மரத்தை ஒட்டி நிறைய இடம் இருந்தது. அப்படியே மரத்தை வட்டமாக சுற்றித் திரும்ப முடிந்தது. மீண்டும் வந்த வழி!

கச்சிதமாக அந்த இடத்துக்கு வந்த போது, அங்கே அந்த பெண் இல்லை. ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது.

"எங்க இருசன்?"

"இங்க தான நின்னு வண்டியை மறிச்சா?"

"ஒருவேளை நேரா போயிருப்பாளோ?"

"வண்டியை கொஞ்சதூரம் விடுங்க... இந்த பக்கம் பாதை கிடையாது. தெரியாம அது பாட்டுக்கு போய் எங்க யாவது சிக்கிடப்போகுது."

"அதான் தாணுமாலய சாமி பார்த்துக்குவாரே... எதுக்கு கவலைப்படுற?"

"ஐயா... தப்பு பண்ணால்லாம் சாமி காப்பாத்த மாட்டாரு."

ஜீப் ஓடியது. ஆனால், அந்த பெண் அந்த மண் சாலையில் எங்கும் இல்லை.

"என்ன ஆச்சரியம்... பக்கவாட்டு புதருக்குள்ள எங்கயாவது போயிட்டாளா?"

"அப்படி எல்லாம் போக முடியாது சார்..."

"அப்ப இருக்கணுமே..." நட்ராஜ் அழுத்தமான குரலில் கேட்டான். இருசனால் பதில் கூற முடியவில்லை.

கடிகாரத்தில் ரேடிய ஒளியில் மணி எட்டு என்பது தெரிந்த நிலையில், அந்த வன இலாகாவின் பழைய கட்டட முகப்பில் ஆம்புலன்ஸ் வேனில் இருந்து போலீஸ் ஜீப் வரை சகலமும் வந்து தேங்கி நின்றன! ஆம்புலன்சில் இருந்து கை வைத்த பனியனும், காக்கி பேண்ட்டும் அணிந்திருந்த இரு சார்ஜன்ட்டுகளில் இருந்து, போலீஸ் இன்ஸ்பெக்டருடன் இரு கான்ஸ்டபிள்களும் இறங்கினர். ஒரு கான்ஸ்டபிள் வீடியோ கேமரா வைத்திருந்தார். அதற்கு அவர்கள் வந்த ஆம்புலன்சில் இருந்தே வெளிச்சம் பெற தோதாக பேட்டரி பவர் தொடர்பு இருந்தது. அதன் மூலமாக, இருநூறு வாட்ஸ் அளவில் இரண்டு ஹாலோஜன் பல்புகள் எரியத் தொடங்கவும், அந்த பகுதிகள் இருள் விலகிக் கொண்டது. பளிச்சென்று வெளிச்சம்...

சிவக்குமாரும் கோவிந்தனும் வெளிச்சம் வழிகாட்ட முன்னால் நடந்து, அந்த குழிதோண்டிய இடத்தின் அருகில் போய் நின்றனர். அப்போது அங்கே கிடந்த மலர்கொத்து சிவக்குமாருக்கு அதிர்ச்சியை தந்தது. கோவிந்தனும் அதிர்ந்தான்.

"என்ன சார் ஷாக்காயிட்டீங்க?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இந்த மலர்க்கொத்து எப்படி வந்ததுன்னு தெரியல சார்..."

"அப்ப நீங்க தோண்டிப் பார்த்தப்போ இது இல்லையா?"

"இல்ல. நாங்க போனதுக்கு பிறகு யாரோ வந்துருக்காங்க. வந்து அஞ்சலி செலுத்தியிருக்காங்க..."

"ரைட்... முதல்ல பாடியை வெளிய எடுப்போம். கமான் தோண்ட ஆரம்பிங்க" இன்ஸ்பெக்டரின் கட்டளையை தொடர்ந்து சார்ஜண்ட் போலீசார் தோண்ட ஆரம்பிக்க, வீடியோ கேமரா படம் பிடிக்க தொடங்கியது.

குழியும் மிக வேகமாய் உருவானது. ஆனால் மூன்றடி, நான்கடி, ஐந்தடி என்று உள்ளே போக போக காளி முத்துவின் உடல் மட்டும் தட்டுப் படவேயில்லை. தோண்டியவர்கள் களைத்து போயினர். வியர்வையை வழித்தபடி பரிதாபமாக சிவக்குமாரை பார்த்தனர்.

"என்ன சார்... பாடியை காணலையே..." என்றனர்.

"எதுக்கும் இன்னும் கொஞ்சம் தோண்டுங்க. அது எப்படி இல்லாம போகும்?"

"இல்ல சார்... இதுக்கு மேல தரை கெட்டியா இருக்கு. இதை தோண்டுறதுல அர்த்தமே இல்ல."

"பிளீஸ் எனக்காக இன்னும் இரண்டடி. நானும் கோவிந்தனும் இங்கதான் தோண்டினோம். இதே இடம் தான்."

"அதை நாங்களும் மறுக்கல. இதுவரை சுலபமா தோண்ட முடிஞ்சதுலேயே அது தெரிஞ்சுச்சு. ஆனா இதுக்கு கீழ தோண்ட தேவை இல்ல. உடம்பு இங்க இல்ல."

சார்ஜண்ட் போலீசார் குழியில் இருந்து மேல் ஏறிக் கொண்டனர். அப்போது ஹாலோஜன் விளக்கொளி பக்கவாட்டில் பட்டதில் ஒரு புதர் மேல் ஒரு துணி கிடப்பது தெரிந்தது. உடனேயே லைட்போடு அருகே நெருங்கிப்

பார்த்தபோது, அந்த துணி காளிமுத்துவின் சட்டை என்பது தெரிந்தது. அதில் மண் திப்பிகள்.

"சார்... நீங்க இங்க இருந்து வந்ததுக்கப்புறம் திரும்ப தோண்டி உடம்பை யாரோ வெளிய எடுத்துருக்காங்க..."

"எக்சாக்ட்லி... ஏதோ ஒரு பெரிய கிரிமினல் வேலை இங்க நடந்துருக்கு..."

"யாரா இருக்கும்... எல்லாமே பெரிய மர்மமா இருக்கே?'

- சிவக்குமார் தவிக்கத் தொடங்கினார்.

அந்த இரவு வேளையில் வள்ளியம்மையிடமும் தவிப்பு. மின்சாரம் வேறு போய் விட்ட நிலையில், எமர்ஜென்சி விளக்கின் மங்கிய ஒளியில் அந்த வீட்டுக்குள் இருக்க அவளுக்கு பயமாக இருந்தது. நல்லவேளை கந்தையன் உடன் இருந்தான்.

"தைரியமா இருங்கம்மா... காட்டு வேலைன்னாலே இப்படித்தான்... இதுக்கு முந்தி காளி முத்தய்யா கூட ராத்திரி பத்துமணிக்கெல்லாம் ரைடு போயிட்டு வந்துருக்காரு..."

"அதெல்லாம் சரி... ஒரு போன் பண்ணி வர லேட்டாகும்னு சொல்லலாமே..."

"டவர் கிடைக்கணுமில்லியா?"

"ஏன் இங்க எங்கேயும் யாரும் செல்போன் பயன் படுத்தறது இல்லையா?"

"கரண்டே இல்லாத காடும்மா. இதுல எங்கம்மா செல்போன்?'

இருவரும் பதட்டமாய் பேசியபடி இருக்க, வாசலில் யாரோ வந்து நிற்கும் சப்தம். கந்தையன் எமர்ஜென்சி விளக்கோடு வாசற்பக்கம் சென்றான். வெளியே இருசன் தலையில் ரத்த காயத்தோடு பரிதாபமாய் நின்று கொண்டிருந்தான்.

16

தாணுமாலய வனம் சித்த வைத்தியர்களுக்கு ஒரு சொர்க்கபூமி அதேபோல யந்திர, மந்திர, தந்திரங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கும் அந்த வனம் ஒரு புதையல் காடு. இதில் சித்த வைத்தியர்கள், தங்களுக்கான மூலிகைகளைத் தேடி வருவார்கள். குறிப்பாக கண்புரை நோயை விரட்டும் நேத்ரமூலி இந்த வனத்தில் பிரசித்தி. இதை சரியாக கண்டறிய வேண்டும். நேத்ரமூலியின் வேரடி மண்ணும் கண் புரைக்கு அந்த நாளில் மருந்தாக பயன்பட்டது. இந்த மண்ணை நீரில் இட்டு அலசி சுத்தப்படுத்தி, பின் இடித்து மாவுபோலாக்கி, இதோடு நேத்ர மூலி சாறை விடவும். இது ஒரு மை போல திரளும். இந்த மையை தினமும் கண்ணுக்கு இட்டு வர, ஒரு மண்டலத்தில் கண்புரை நீங்கிவிடும். புரைக்கு காரணமான திசுக்கள், பாலோடு போன்ற தன்மை உடையவை. அதை தினமும் பூசிடும் மையானது கொஞ்சம் கொஞ்சமாய் கரைக்கும்.

அந்த நளில் அரசர்களுக்கு கண்புரை வந்தால், இந்த மை சிகிச்சையைத்தான் எடுத்துக் கொள்வார்கள். இன்று இந்த நேத்ர மூலிகை செடியே அழிந்து விட்டது. இதை பக்குவமாய் தயாரிக்கும் முறைகளும் அழிந்துவிட்டன. மாறாக கண்புரையை ஐந்து நிமிடத்தில் அகற்றிவிடும் விஞ்ஞான முறைகள் நன்கு வளர்ந்து விட்டன.

உடல் உறுப்புகளில் முதலில் மிக உன்னதமானது கால்கள், அதன் பின், உன்னதமாக கருதப்படுவது கண்கள். மூன்றாவதாக வருவது கைகள், நான்காவ

தாக வருவது வயிறு, ஐந்தாவதாக வருவது நுரை யீரல். இது பழுதானால், சுவாசகதியில் மாற்றம் ஏற்பட்டு ஆயுள் வேகமாக குயையும்.

'கேளடா கால்களே கதியாம் முதலுக்கு... கண் ணிரண்டும் இரண்டே!

கையிரண்டும் பின்னே... அடுத்தது வயிறு!

பஞ்சமம் சுவாசப்பை, ஆறதும் நீர்ப்பை (சிறுநீரகம்) எழுது கட் செவி, எட்டது திருவாய்!

ஒன்பதும் உள்கிடக்கும் மனமாமே!'

- என்றொரு சித்தர் பாடல் இதை அறுதியிட்டு உரைக்கிறது.

- தாணுமாலயவன சரிதம்.

"இந்த காட்டுல அதிசயம்
நிறைய நடந்து நான் பார்த்து
ருக்கேன். ஆனா மூடு மந்திரமா
இப்பதான் சில விஷயங்கள்
நடக்க ஆரம்பிச்சிருக்கு..."

"உம்... இந்த காட்டை சுத்தி வந்து
எல்லாத்தையும் படம் பிடிக்க -
ஆசைப்பட்டான். இப்ப காடுதான்
இவனை சுத்தி வரப்போகுது..."

இருசனை காயம்பட்ட கோலத்தில் பார்த்த வள்ளி யம்மைக்கு பகீர் என்றது. பின்னாலேயே வந்த கந்தையய்யனும் கவனித்தான்.

"அம்மா... விபரீதம் நடந்துடுச்சும்மா! படம் எடுக்கற சோலி எல்லாம் முடிஞ்சு திரும்பிவர்ற வழியில, தம்பி கொஞ்சம் வேகம் காட்டுனாரு. அது ஆபத்துல முடிஞ் சிடிச்சு! ஒரு மண்பாதை திருப்பத்துல அவர் வண்டி அப் படியே பக்கவாட்டு சரிவுல விழுந்து கவுந்துடுச்சும்மா.

நானும் வெளியில தூக்கி வீசப்பட்டேன். அப்படி விழுந்ததுல தான் இந்த காயம். பெரிய அய்யா இல்லீங்களா?" என்று கேட்டு முடித்தான்.

"அப்ப நட்ராஜ் இப்ப எங்க?"

"இருட்டுல எதுவும் தெரியலம்மா. போய் பார்த்தாதான் தெரியும்..."

"ஐயோ இப்ப நான் என்ன பண்ணுவேன். இப்ப பார்த்து இவரும் இங்க இல்லையே..."

வள்ளியம்மையிடம் பதைப்பு பெருகியது.

கந்தையன் இருசன் காயத்துக்கு மருந்து போட தயாரானான்.

"வேணாம் கந்தையா... இந்த இங்கிலீஷ் மருந்துங்க எனக்கு ஆவாது. போற வழியில கீரிவெளில புரண்டா இதெல்லாம் சரியாயிடும். இப்ப நீங்க புறப்படுங்க, அய்யாவை எப்படியாவது காப்பாத்தணும்."

இருசனின் துரிதம் வேலை செய்தது. கந்தையன் பெட்ரோமாக்ஸ் விளக்கை எடுத்துக் கொள்ள, வள்ளியம்மையும் புறப்பட்டாள். கதவை பூட்டிக் கொள்ள முயன்றவளை கந்தையன் தடுத்தான்.

"அம்மா... பூட்ட வேண்டாம். ஆபீசரய்யா வந்தா அப்புறம் நம்மள காணோம்னு அவர் ஒரு பக்கம் தேடி கிளம்பிடுவாரு. வீடு திறந்தே இருக்கட்டும். நாம நட்ராஜ் அய்யாவை காப்பாத்த போற விஷயத்தை ஒரு பேப்பர்ல எழுதி வெச்சுட்டு கிளம்புங்க" என்று ஒரு பேப்பரை எடுத்துக் கொடுத்தான்.

அவளும் அப்படியே செய்து விட்டு புறப்பட்டாள். கடிகாரத்தில் மணி பத்தை நெருங்கியிருந்தது. வெளியே காற்றில் அப்படி ஒரு குளிர். வள்ளியம்மை புடவைத் தலைப்பை தலையோடு சேர்த்து மூடிக் கொண்டாள்.

பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் வழிகாட்டியது. கந்தையய்யன் எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு நீண்ட கயிற்றை எடுத்துக் கொண்டான். கூடவே ஒரு காய் நறுக்கும் கத்தி.

"நான் விருட்ச மரக்கிளையை அய்யா ஒடிக்கும்போதே சொன்னேன்... ஆனா அவர் கேட்கல. இப்ப பாத்தீங்களா?" என்றான் இருசன் நடந்தபடியே.

"பட்டணம் பக்கத்துல இருந்து வர்றவங்களுக்கெல்லாம் பட்டாதான் புரியுது..." என்றான் கந்தையய்யன்.

வள்ளியம்மையால் அவர்களுக்கொரு பதிலைச் சொல்ல முடியவில்லை. அவளுக்கு சிவக்குமார் வராததே பெரிய வருத்தமாய் மனதைக் குடைந்தபடி இருந்தது. அவருக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ என்றும் மனது கற்பனை செய்து பார்த்து பயப்பட ஆரம்பித்துவிட்டது.

"ஆமா... எவ்வளவு தூரம் போகணும். இந்த இருட்டுல போக முடியுமா?" என்று அந்த பயத்தோடு கேட்டாள் வள்ளியம்மை.

"விடிஞ்சு பாத்துக்கலாம்தான். ஆனா தம்பிக்கு எதுவும் ஆகாம இருக்கணும்..."

"பெரிய பள்ளமாப்பா?"

"போய் பார்த்தா தாம்மா தெரியும். நான் தப்பிச்சதே பெருசு. இதுல நாங்க வர்ற வழியில தனியா ஒரு பொண்ணை வேற பார்த்தோம். திடீர்னு அவளும் மாயமாயிட்டா... இந்த காட்டுல அதிசயம் நிறைய நடந்து நான் பார்த்துருக்கேன். ஆனா மூடு மந்திரமா இப்பதான் சில விஷயங்கள் நடக்க ஆரம்பிச்சிருக்கு..." என்றான் இருசன்.

பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் நிறைய இடங்களில் அமுங்கி எரிந்தது. அங்கங்கே நிறுத்தி, பிஸ்டனால் பிரஷரை ஏற்றிக் கொண்டான்.

காதை 'பம்' என்று அடைக்கும் சில்வண்டுகளின் ரீங்காரச் சப்தம். விசுக்கென்று கறுப்பாக எதிரே ஏதோ ஒன்று குறுக்கில் ஓடியது.

"பயப்படாதீங்க. காட்டுப் பன்னிங்களா இருக்கும். பக்கத்துல வள்ளிக்கிழங்கு பயிர் பண்ணியிருக்காங்க. கிழங்குன்னாலே பன்னிங்க வந்துடும். ஒரு ராத்திரியில இதுங்க பன்னெண்டு மைல் தூரத்தை சாதாரணமா கடக்கும்ங்க..."

இருசன் புதிய தகவல் ஒன்றையும் சொன்னான்.

"அது சரி, இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?" என்று வள்ளியம்மை கேட்டபோது, அவள் செல்போனிடம் சிணுங்கல், அழைத்தது சிவக்குமார்தான்!

"அவர்தான்... அவர்தான்..." பரபரப்பாகி காதைக் கொடுத்தாள் வள்ளியம்மை.

"அம்மை..."

"நீங்களா? சொல்லுங்க. எங்க போயிட்டீங்க. நான் இங்க தவிச்சுகிட்டு இருக்கேன் தெரியுமா? இப்படியா இவ்வளவு நேரம் கழிச்சு போன் பண்ணுவீங்க?"

"புரியாம பேசுற நீ. போன இடத்துல இன்னிக்கு நடக்கக் கூடாததெல்லாம் நடந்துடுச்சு அம்மை. இந்த செல்போன் ஒண்ணு... நினைச்சா வேலை செய்யுது. இல்லாட்டி செத்த பொணம்தான்."

"அதெல்லாம் இருக்கட்டும். இப்பவாச்சும் பேசினீங்களே... இங்க நம்ம நட்ராஜ்க்கும் காட்டுக்குள்ள போன இடத்துல விபத்து ஏற்பட்டுடுச்சுங்க..."

"மைகாட்... எங்கே? எப்படி?"

"அதை ஏன் கேட்கிறீங்க... நான் இப்ப நட்ராஜை பார்க்க இருசனோட போய்கிட்டிருக்கேன். பாதையை ஒட்டி

ஒரு பள்ளத்துல ஜீப் விழுந்துடுச்சு. நல்லவேளை இருசனுக்கும் எதுவும் ஆகல. ஓடிவந்து தகவல் சொன்னான். அதான் அவனை காப்பாத்த போய்க்கிட்டிருக்கோம். நீங்களும் கொஞ்சம் வாங்க..."

"ஆக்சிடெண்ட் எங்கே ஆச்சு?"

"தெரியலியே... நான் இருசன் கிட்ட தர்றேன். பேசுங்க..." வள்ளியம்மை போனை இருசனிடம் தரவும், அவன் பேசத் தொடங்கினான்.

"ஐயா கொஞ்சம் சீக்கிரம் வாங்க... நம்ம வீட்ல இருந்து தெற்கு போற பாதையில. ஒரு மூணு கல் தொலைவுலதாங்க ஜீப் விழுந்து கிடக்குது..."

"நட்ராஜ் உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே..?"

"போய் பார்த்தாதாங்க தெரியும்... நான் அப்பவே சொன்னேன். அந்த சாமி மரத்துக்கிட்ட கேட்டீங்களா?"

"போதும்பா. இங்க நான் ஏற்கனவே டென்ஷன்ல இருக்கேன். நீ உன் முட்டாள்தனமான நம்பிக்கையை இதான் சாக்குன்னு என் மேல திணிக்க பார்க்காதே. இங்க பெரிய சதிவேலையே நடந்துக்கிட்டிருக்கு. உனக்கு சொன்னா புரியாது. நீ போய் வேகமா நட்ராஜை காப்பாத்துற வழியைப் பார். நானும் எவ்வளவு வேகமா வரமுடியுமோ வரேன்."

போன் கட் ஆனது.

"என்ன சொன்னார்?"

"வேகமா வந்துகிட்டிருக்காராம். ஆனாலும் என்னை கோவிச்சிக்கிறாரு! இப்படி ஏதாவது நடக்கும்னு நான் முந்தியே சொன்னது மூட நம்பிக்கையாம். அதே நேரம் இந்த காட்டுல பெரிய சதிவேலையே நடந்துக்கிட்டிருக்குதாம்... என்னென்னவோ சொல்றாருங்க. உம் பாத்து... இங்க பாதை சரியில்ல..."

பேச்சோடு பேச்சாக வள்ளியம்மையை வழிநடத்தி யான் இருசன்.

வள்ளியம்மைக்கு அந்த குளிரிலும் வியர்த்து விட்டி ருந்தது.

"நான் ஒரு புது இடத்துக்கு சந்தோஷமா இருக்கப் போறதா நினைச்சுதான் வந்தேன். ஆனா இங்க இவ்வளவு சூழ்ப்பம் இருக்கும்னு கொஞ்சம்கூட நினைக்கல. யார் சொல்றத கேட்கிறதுன்னும் தெரியல..." என்றபடியே நி ந்தாள்.

அந்த இடம் வந்துவிட்ட து.

அங்கே ஒரு அதிசயம் நடந்து கொண்டி ருந்தது. பள்ளத் தில் கவிழ்ந்து கிடந்த ஜீப்பை ஒரு பத்துபேர் நல்ல பெரிய கயிறாக கட்டி இழுத்து மேலே கொண்டு வந்து கொண் டி ருந்தனர்.

நட்ராஜ் உடல் சாலை மேல் ஒரு போர்வை விரிக்கப் ப ட்டு அதன் மேல் கிடந்தது. அவருடைய காயங்களுக்கு ப ச்சிலை கட்டு போட்டபடி இருந்தார் ஒருவர்.

எல்லாருடைய கையிலும் தீப்பந்தமும், சிலர் கையில் ப ார்ஜென்சி லைட்டும் இருந்தது. ஜீப்பில் ஏறி உட்கார்ந்து . ஐ ஸ்டார்ட் செய்து ஓடுகிறதா என்று பார்த்தார் ஒருவர். . அங்கு அவர்கள் பார்த்த ஒவ்வொரு காட்சியுமே நம்ப முடி யாத ஒன்றாகவே இருந்தது.

வள்ளியம்மையும், இருசனும், கந்தையய்னுடன் வரவும் ஆ ர்வமாகமாக, "வந்துட்டீங்களா?" என்று கேட்டு சிரித்தார் ஒருவர்.

"சாமிங்களா நீங்களா?" என்று பெ ரோமாக்ஸ் வி ளக்கை கீழே வைத்துவிட் டு பொதேலென்று காலில் விழத் தெ டங்கினான் இருசன்.

கந்தையய்யன் கை கூப்பியிருந்தான். வள்ளியம்மைக்கு தலை சுற்றாத குறை.

"கந்தையய்யா யார் இவங்கல்லாம்...?"

"அம்மா... இவங்கதாம்மா வானத்து மனுசங்க..."

"என்னது... வானத்து மனுசங்களா?"

"ஆமாம்மா... கும்புட்டுக்குங்க... சாமி இவங்கதான் ஆபீசரய்யா சம்சாரம்..."

"தெரியுமே... என்னம்மா, அன்னிக்கு ஒரு மிலிட்டரி கூட்டமா வந்தோமே... மறந்து போச்சா உனக்கு?"

"ஓ... நீங்கதானா? ஆமா நீங்க எங்கே இப்படி?"

"நைட் வாக்கிங் போறது எங்க வழக்கம். அப்படி இந்த பக்கம் வந்தப்பதான், கீழே இருந்து ஒரு மனுஷன் முனங்குற சப்தம் கேட்டது. பிறகுதான் விபத்து நடந்ததும் தெரிஞ்சது. நோ பிராப்ளம்! கால் எலும்பு முறிஞ்சிருக்கு. நல்ல ரெஸ்ட் அவசியம். தாணுமாலயக்குடியில வேடியப்பன்னு ஒருத்தன் இருக்கான். இரண்டா முறிஞ்ச எலும்பை கூட சேர்த்து வெச்சுடுவான். என்ன இருசா வேடியப்பன் இருக்கான் தானே?"

"சாமி... நடு நாட்டுல எலும்பு வைத்தியனா இப்பவும் இருக்காங்க..."

"அவன்கிட்ட பொழுது விடியவும் கூட்டிட்டு போய் காட்டு. போகப்போக சரியாயிடும். உம்... இந்த காட்டை சுத்தி வந்து எல்லாத்தையும் படம் பிடிக்க ஆசைப்பட்டான். இப்ப காடுதான் இவனை சுத்தி வரப்போகுது" என்றார் ஒரு வானத்து மனிதர். எஸ்கார்ட்ஸ் போல தலையில் மாடர்னாய் தொப்பி தரித்திருந்தார். அவர் பேச்சில் பல விஷயங்கள் பெரும் புதிராக இருந்தன. சகஜமாக பேசுவது போலவும் இருந்தது. மர்மமாய் அதில் ஏதோ இருப்பது போலவும் இருந்தது.

அப்போது அந்த ஜீப்பும் ஓடத்தொடங்கி, என்ஜின் இயங்கி புகை வெளிப்பட்டது.

"நம்ம ராமதேவன் கில்லாடி. கவுந்து கிடந்த ஜீப்பை நிமிர்த்தி ஓட வெச்சுட்டான் பார்..." என்றார் ஒருவர்.

"அப்ப நாங்க வரோம். உடம்பை தூக்கி போட்டுகிட்டு ஜீப்புல பார்த்து போங்க. வரவா?"

தொப்பிக்காரர் கேட்க, எல்லாரும் ஒரு வரிசையில் வந்து புறப்பட தயாராயினர். கையிலுள்ள தீப்பந்தங்கள் அவர்களை பெரிய அளவில் அடையாளம் காட்டவில்லை. அவர்கள் விறு விறுவென்று புறப்பட்டு செல்லவும், தன்னையும் மறந்து பார்த்தபடி இருந்தாள் வள்ளியம்மை.

அவர்களிடம் என்னென்னவோ கேட்கத் தோன்றிய போதிலும், வாயைத் திறந்து பேச முடியவில்லை. என்ன ஆச்சரியம்...

அவர்கள் பார்வையை விட்டு மறைய, சிவக்குமாரின் ஜீப் அங்கு வந்துசேர சரியாக இருந்தது. சிவக்குமாரும் பாய்ச்சலுடன் இறங்கி வந்தார். நட்ராஜை பார்த்து விதிர்த்தார்.

"ஐயா ஆபத்து எதுவும் இல்ல. வானத்து மனுசங்க சரியான நேரத்தில் வந்து காப்பாத்திட்டாங்க" என்றான் இருசன்.

"அவங்க எப்ப வந்தாங்க?"

"இப்பதான்யா... இப்பதான் போறாங்க..."

"எந்த பக்கம்?"

"இதோ இந்த பக்கம்..."

"அவங்கள அப்படியே இருக்கச் சொல்றதுக்கென்ன... ஏன் போக விட்ட?"

"அவங்க முன்னால எதுவுமே தோண மாட்டேங்கு துங்களே..."

"மண்ணாங்கட்டி... அவங்க அவ்வளவு பேரும் கிரிமினல்ஸ். விட மாட்டேன் அவங்கள..." என்ற சிவக்குமார், பக்கமாய் உள்ள மரம் ஒன்றின் மேல் விறுவிறுவென ஏறி அவர்கள் போன திக்கை பார்த்தார். ஆனால், அவர்கள் தென்படவில்லை. மாறாக தோளில் பிணத்துடன் 'அகோரசாமி' போய் கொண்டிருந்தது.

17

'உடல் உறுப்புகளில் கண்களை விட பெரியது கால்களே என்பதுதான் சித்த புருஷர்கள் பலரின் கருத்தாகும். ஒருவருக்கு காலில்லாமல் போகும் போது, அவர் பிறரைச் சார்ந்தே வாழ வேண்டிய கட்டாயம் உருவாகிறது. கண்களை இழந்தவர் கூட, கால்கள் இருக்க தன் பணியை தானே செய்து கொள்ள முடிந்தவராக இருக்கிறார். ஆனால், கால்கள் இல்லாமலோ அல்லது செயலற்றோ போகும் போது அவர் தனக்கு தானே பாரமாகி விடுகிறார்.

இதனாலேயே 'கால்கள்' என்பது நம் வரையில் வணக்கத்திற்குரிய ஒன்றாகவும் கருதப்படுகிறது. ஒரு கொடுங்கோலன் கூட, அவன் கால்களில் ஒருவர் விழுந்து கதறிடும் போது கருணைக்கு தன்னை மாற்றிக் கொள்கிறான். காலில் விழுந்து பெரியவர்களை வணங்கும்போதுதான் அவர்களும் விலைமதிப்பே இல்லாத ஆசிகளை நமக்கு வழங்குகிறார்கள்.

கால்களின் மதிப்பை என்றும் மறந்து விடக்கூடாது என்றே பாதபூஜை என்னும் ஒரு பூஜா முறையையே

நம்மவர்கள் உருவாக்கினர். இதில் குருநாதர், பெற்றோர் ஆகியோருக்கு நீரால் பாதங்களைக் கழுவி மலர்தூவி அர்ச்சித்தல் என்பது ஒரு முறை. பின், அந்த காலைக் கழுவிய நீரை தலையில் தெளித்துக் கொள்வது அதன் உச்சகட்டம், நம் முடைய பாத பூஜையை அவர்களும் நாராயண சமர்ப்பணம் என்று இறைவனிடம் சேர்த்து விடு வார்கள். இது மறைமுகமாக இறைவனுக்கு செய்யும் பூஜையாகவும் கருதப்படுகிறது. இதையெல்லாம் வைத்தே 'சரணாகதி' என்னும் தத்துவமே உரு வானது. கால்களுக்கு பின்னாலே இப்படி சிந்திப்ப தற்கு எவ்வளவோ விஷயங்கள் உள்ளன. இந்த கால்கள் ஒரு மனிதனிடம் ஆரோக்கியமாக திகழ, அந்த கால்களால் அவன் செய்யும் பயணமும், எவரையும் எட்டி உதைக்காது, மிதிப்பது பவித்ரமாய் வாழ்ந்திடும் வாழ்க்கையும் ஒரு காரணமாக அமை கிறது. குறிப்பாக கால்களைக் கொண்டு புனித யாத்திரைகள் மேற்கொள்வது, கால்களை ஆரோக்கியமாக பேணிடும் ஒரு வழியாகும். இந்த வகையில் தாணுமாலய வனத்திற்கு ஒருவன் வரு வதும் புண்ணியமாகும்!

- தாணுமாலயவன சரிதம்.

"சற்று தூரத்தில் இருளுக்குள்
அடர்வான இருளாக யாரோ வருவது
போல ஒரு தோற்றம். கோவிந்தனுக்கு
சற்று பகீரென்றது. அந்த உருவமும்
அவனை நோக்கி வேகமாக வரத்
தொடங்கியது.."

"இந்தக்காடு நானும் நீயும் நினைக்கிற
காடு இல்ல. இந்த உண்மையை

இன்னிக்குதான் எனக்கு தெரிய
வந்துச்சு. கற்பகமரமெல்லாம் உண்மை
தானான்னு ஒரு பெரிய சந்தேகம் இப்ப
எனக்கே வந்துருக்கு...”

அடர்ந்த இருளில் தோளில் பிணத்துடன் ஓடும் அந்த உருவம் வினாடியில் சிவக்குமாரின் பார்வையில் இருந்து மறைந்தது. இருண்ட சூழலும் அவருக்கு பெரிய எதிரியாகி விட்டன. முகச்சுழிப்போடு மரத்தை விட்டு கீழே இறங்கினார்.

“கோவிந்தா... தோள்ல பொணத்தோடு இந்த காட்டுல சுத்துற மனுஷனை இப்ப பார்த்தேன். ஆமா அவனுக்கு பேர் என்ன... ஏதோ சொல்வாங்களே...?”

“அகோரசாமி சார்...!”

“ஆங், அகோரசாமி... அது அகோரசாமி இல்ல. அயோக்கிய சாமி..”

“அப்ப நீங்க வானத்து மனுஷங்கள பாக்கலியா சார்...”

“எங்க... அவங்களுக்காக மரத்து மேல ஏறினா, இவன்ல போறான். பொணத்தோட இவன் போறதைப் பார்த்து நான் பயப்பட்டு இந்த காட்டை விட்டே ஓடிப் போயிடுவேன்னு தப்பு கணக்கு போட்டுருக்கான்... ஆனா அது நடக்கப் போறதில்ல. இந்த மர்ம ஆசாமிகளை எல்லாம் இரண்டுல ஒண்ணு பார்க்காம நான் இந்த காட்டை விட்டு போக மாட்டேன்...”

சிவக்குமாரின் குரலில் சபத உணர்வு நன்றாக தெரிந்தது. அதுவரை மவுனமாயிருந்த வள்ளியம்மை,

“போதுங்க... எதுவா இருந்தாலும் வீட்டுக்கு போய் பேசிக்கலாம். முதல்ல புறப்படுங்க...” என்றாள்.

“ஆமாங்கய்யா... நாம முதல்ல இடத்தை காலி பண்ணுவோம். நீங்க தம்பியை நம்ப வண்டியில ஏத்திக்கிட்டு

புறப்படுங்க. நான் தம்பி வண்டியை எடுத்துக்கிட்டு பின்னாலேயே வரேன்..." என்றான் கோவிந்தன். சொன்ன படியே நட்ராஜின் ஜிப்சிக்குள் ஏறி, அதை ஸ்டார்ட் செய்ய முயன்றான். அது ஸ்டார்ட் ஆனது. கோவிந்தனுக்கு அதுவே பெரிய ஆச்சரியம். ஓட்டி வந்த நட்ராஜ்க்கு கால் எலும்பு முறிந்து விட்டது. ஆனால், வண்டிக்கு எந்த பழுதும் இல்லை. அதுவும் ஓட ஆரம்பித்தது.

மலைப் பாதையில் அந்த ஜிப்சியை ஓட்டுவது சற்று சிரமமாக இருந்தது. கீழே உருண்டு விழுந்ததில், சக்கரங்கள் சற்று ஆட்டம் கண்டு போயிருந்தன. அது ஸ்டியரிங்கை தொட்ட உடனேயே தெரிந்து விட்டது. வண்டியை ஓரமாக நிறுத்தி, கீழே இறங்கிச் சென்று சக்கரங்களை தட்டிப் பார்த்தான் கோவிந்தன். இருளில் அதன் நட்டுகள் பெரிதாக கண்ணுக்கு தட்டுப்பட வில்லை. அந்த இடைவெளியில் சிவக் குமார், நட்ராஜ் மற்றும் வள்ளியம்மை, கந்தையனோடு அவனைக் கடந்து போனார். போனவர் பிரேக்பிடித்து நின்றவராக, "என்னாச்சு... எனி பிராப்ளம்?" என்று கத்திக் கேட்டார்.

"ஒண்ணும் இல்ல சார்... வீல் பேலன்ஸ் இல்லை... அவ்வளவுதான் நீங்க போங்க..." கோவிந்தன் பதிலுக்கு பலமாக கத்தினான்.

"சரி பார்த்து வந்துடு..."

"நீங்க போங்க வரேன்..."

அவன் பதிலைத் தொடர்ந்து அவரது வாகனம் விரைந்து அவன் கண்ணை விட்டும் மறைந்தது. கோவிந்தன் நீண்ட சிந்தனையோடு திரும்பவும் சீட்டில் ஏறி அமர்ந்தான். ஹெட் லைட் வெளிச்சம் ஒரு நேர்கோடு போல நெடுந் தூரத்துக்கு விழுந்தது. மெல்ல ஜீப்பும் புறப்பட்டது. கோவிந்தன் மனதுக்குள் முதன் முறையாக பலமான சந்தேக ரேகைகள்.

இந்த காட்டின் மேல் அவனுக்கு இதுவரை எந்த ஒரு சந்தேகமும் வந்ததேயில்லை. அவன் வரையில் இந்தக் காடு ஒரு ஆச்சரியக்காடு. அதிசயக்காடு. ஆனால், இப்போது காளிமுத்துவை பிணமாக பார்த்தது தொடங்கி, திரும்ப அந்த உடலை காணாமல் போனதுவரையில் அவ்வளவும் பக்கா கிரிமினலான விஷயங்கள். இந்தக் காடு எப்படி இப்படி மாறிப்போனது என்று அவனுக்குள் இப்போது பெரிய கேள்வி. அமர்ந்தபடியே யோசிக்கத் தொடங்கினான்.

மொத்த வனப்பரப்பும் அறுபது மைல் சுற்றளவுக்கு வரும். இதில் மலைப்பாங்கான பகுதியும், அதன் சரிவுகளும் மட்டுமே பல லட்சம் சதுர அடிகள் இருக்கும். இதில் எங்கே அந்த தங்கச் சுரங்கம் இருக்கக் கூடும் என்றும் கேட்டுக் கொண்டு யோசிப்பைத் தொடர்ந்தான்.

வானத்து மனிதர்கள் கூட அவன் வரையில் இப்போது சற்று முரணாகத்தான் தெரிந்தனர். அவர்கள் சிவக்குமார் வருவதற்குள் கிளம்பிப் போனது சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவ்வளவு வேகமாக அவர்களால் எப்படி மறைய முடிகிறது என்று ஆச்சரியமாகவும் இருந்தது. உண்மையில் அவர்கள் யார்? பெரும் குழப்பமாகவும் இருந்தது.

ஜிப்சியிடம் நிதானமான வேகம். அவன் பார்வையும் இருபுறமும் பார்த்தபடியேதான் இருந்தது. ஒருவழியாக மண்பாதை முடிந்து தார்ச்சாலை வந்தது.

அப்பாடா என்று அதில் வண்டியை ஏற்றியவன், சற்று வேகமெடுக்க முயன்றான். ஆனால், வண்டி தேங்கித்தேங்கி ஓடி ஒரு கட்டத்தில் அப்படியே நின்று விட்டது.

இண்டிகேட்டரில் பெட்ரோல் இல்லை என்பதற்கான குறியீடு பளீச்சென தெரிந்தது.

"பெட்ரோல் தீர்ந்து போச்சா... சரிதான்! ஏதோ இவ்வளவு தூரம் வர முடிஞ்சிச்சே..." என்று சலித்துக் கொண்டான். அப்படியே ஜிப்சியின் முன்புறம் பானட் மேல்

ஏறி அமர்ந்து, சட்டை பட்டனை எல்லாம் திறந்து விட்டுக் கொண்டான்.

நல்ல இருட்டு! சில் வண்டுச் சப்தம்! அடர்வான குளிர் காற்று! வானில் நட்சத்திர மினுக்கல்கள்!

வேறு யாராக இருந்தாலும், அந்த நிலையில் அங்கே தனித்திருக்க பயப்படுவார்கள். கோவிந்தனுக்கு அந்த வனத்தின் ஒவ்வொரு பாகமும் அத்துபடி... எனவே அவனிடம் பயம் பெரிதாக இல்லை. குழப்பம்தான்!

அப்போது சற்று தூரத்தில் இருளுக்குள் அடர்வான இருளாக யாரோ வருவது போல ஒரு தோற்றம். கோவிந்தனுக்கு சற்று பகீரென்றது. அந்த உருவமும் அவனை நோக்கி வேகமாக வரத் தொடங்கியது.

'யார் இது இந்த நேரத்தில்?' என்று கோவிந்தன் நினைக்கும் முன், "யோவ் வந்துட்டியா... பெரிய ஆளுய்யா நீ. எனக்காக கார் வண்டியையே கொண்டு வந்துட்டியா?" என்ற கேள்வியோடு அருகில் வந்தது.

கோவிந்தன் பானட்டை விட்டு குதித்து இறங்கி, ஜிப்சியின் ஹெட்லைட் ஸ்விட்சை போட்டான். வெளிச்சம் பாயவும்தான் அது தாணுமாலய வனக்குடியை சேர்ந்த 'வங்கி' என்று தெரிந்தது. அவளும் கோவிந்தனைப் பார்த்து அதிர்ந்தாள்.

"ஏ... ஏ புள்ள நீ... நீயா?"

"அது... அது... நீயாய்யா... நாடிமுத்து வரல?"

"நாடிமுத்துவா... யார் அந்த வளையக்காரனா?"

"அ...ஆமாம்..."

"அப்ப அவனை பாக்கத்தான் நீ இவ்வளவு தூரம் வந்தியா... நீ தென்கரை நாட்டுக்காரி தானே?"

"ஆமாம்யா.. ஆமா நீ யாருக்காக இங்க காத்திருக்க?"

"காத்திருக்கேனா... சர்தான்! வண்டியில பெட்ரோல் இல்ல. அதான் நின்னு போச்சு. ஆமா, நீ எதுக்கு அந்த வளையக்காரன தேடி கிட்டு வந்த? நீ இப்படி வரலாமா? உன் சாதிக்காரங்க பார்த்தா எவ்வளவு பெரிய பிரச்னை ஆகும்னு தெரியுமா, இல்ல தெரியாதா உனக்கு?"

கோவிந்தன் கேள்விகளாய் அடுக்க ஆரம்பிக்க, அவளும் வெலவெலத்துப் போனாள். திருதிருவென விழித்தாள்.

"யோவ்... மொள்ளப் பேசுய்யா... நான்... நான்..." என்று ஏதோ சொல்ல வந்து, சொல்ல முடியாதவளாக தவித்தாள்.

"என்னன்னு சொல்லு. ஏன் வாயை மூடி கிட்ட? நான் காட்டிலாகா போலீசு... என்கிட்ட எதையும் மறைக்காதே..." அவன் மிரட்டினான்.

"அது... அது... நான் நாடி முத்துவை கட்டிக்கிற எண்ணத்தோடதான்யா வீட்டை விட்டே வந்துருக்கேன். எனக்கு என் மாமனையே கட்டி வைக்கிற எண்ணத்துல இருக்குது என் அப்பு. ஆனா, எனக்கு அதை கொஞ்சம் கூட பிடிக்கலையய்யா..."

"ஓ காதலா? அதுவும் அந்த வளையக்காரன் மேலயா...? ஆமா, அவன்கிட்ட என்ன இருக்குன்னு நீ அவனைப் போய் காதலிச்சிருக்கே?"

கோவிந்தன் கேள்விக்கு பதில் கூறத் தெரியாமல் திரும்பவும் திருதிருவென விழித்தாள் வங்கி.

"போகட்டும்... அவன் வந்து உன்னை கூட்டிக்கிட்டு போறேன்னு சொன்னானா?"

"ஆமாம்யா... அதான் உன்னை பார்த்துட்டு அதுன்னு நினைச்சு பேசிட்டேன்..."

"இப்பதான் இந்த காட்டு மேல எனக்கு முதல் தடவையா சந்தேகம் வந்துச்சு. இப்ப உன்னை பார்க்கவும் அது உறுதியாயிடுச்சு. உனக்கு தைரியம்தான் புள்ள. நீ இப்படி

முடிப்போனா, திரும்ப இந்த காட்டுப்பக்கமே வரமுடியாதுங்கறது தெரியுமா, தெரியாதா?"

"நல்லா தெரியும்... எனக்கும் இந்த காடு புடிக்கல. அதான் நான் விலகிப் போக முடிவெடுத்துட்டேன்..."

அவள் பதிலால் அதிர்ந்தான் கோவிந்தன்.

"காடு பிடிக்கலையா... இந்தக் காடு உனக்கே பிடிக்காம போயிடுச்சா? அப்படி என்ன உனக்கு இங்க பிடிக்காம போயிடுச்சு?"

"வேண்டாம்யா... என் வாயக் கிளறாதே! உனக்கு புண்ணியமாகப் போகும். என்னை இப்படி பார்த்ததாவும் எங்க சாதி சனங்க கிட்ட நீ சொல்லிடாதே..."

"மண்ணாங்கட்டி... உனக்கு இந்த காட்டுல அப்படி என்ன குறை? என் கேள்விக்கு நீ முதல்ல பதிலைச் சொல்லு..."

"எதுவுமே பிடிக்கல எனக்கு... குறிப்பா என் முரட்டு மாமன். அது எப்பப் பார் குடிச்சுட்டு வர்றது பிடிக்கல. அப்புறம் பொடி மாதிரி ஒண்ணை மூக்கு முன்னால வெச்சு உறிஞ்சுது. அப்படி உறிஞ்சின பிறகு, அது போடுற ஆட்டம் இருக்கே... அது சுத்தமா பிடிக்கல..."

"என்னாது... ஒரு தாணுமாலய வனக்குடியன் குடிச்சுட்டு வர்றானா? இந்த காட்டுக்குள்ளயா?"

"ஆமாம்யா... இதெல்லாம் வெளிய யாருக்கும் தெரியாது."

"நம்பமுடியலியே... காட்டுக்குள்ள சரக்கு எப்படி வந்துச்சு? அப்புறம் பொடி மாதிரி ஒண்ணை வெச்சு உறிஞ்சினான்னே... அது போதை பவுடர்! அது எப்படி உன் மாமன் கிட்ட?"

"எல்லாமே பெரிய மர்மமா இருக்குய்யா... கொஞ்சம் கொஞ்சமா என் அப்பனையும் என் மாமன் குடிகாரனா ஆக்கிடுச்சு. இதுல ஒருநாள் என்னை கூட்டிகிட்டு போய்

டவுன்காரங்க மாதிரி உடுப்பு கொடுத்து போட்டுக்கிட்டு வரச் சொல்லுச்சு..."

"எதுக்கு?"

"நான் டவுன் புள்ள மாதிரி பாத்தா தெரியணுமாம்!"

"ஓஹோ.."

"சரின்னு நானும் போட்டுக்கிட்டு வந்தேன். அப்படி நான் வரவும் என்னை போட்டோ படம் புடிச்சுச்சு."

"போட்டோவா... உன் மாமன் உன்னை போட்டோ பிடிச்சானா?"

"ஆமாம்யா.. அதோட எந்த நடவடிக்கையும் துப்புரவா எனக்கு பிடிக்கல... யோவ், இதை எல்லாம் நான் சொன் னேன்னு யார்கிட்டயும் சொல்லிடாதே.. ஆமா இங்க இருந்து டவுன் ரோட்டுக்கு எம்புட்டு தூரம்?"

"அது இருக்கு கொள்ள தூரம். ஆமா.. அந்த நாடிமுத்து இப்ப இங்க வருவானா?"

"அது கட்டாயம் வரும். நான்னா அதுக்கு ரொம்ப இஷ்டம்."

"உன்னை அவன் கட்டிக்கிறேன்னு சொன்னானா?"

"சொல்லாம நான் இப்படி கட்டுன சேலையோட புறப்பட்டு வருவேனா?"

"அப்ப இரு... அவன் போன் நம்பர் என்கிட்ட இருக்கு. அவன் இப்ப இந்த காட்டுக்குள்ள வந்துகிட்டிருந்தா நான் கூப்பிடவும் பேசுவான். அப்ப அவன் எங்க வந்துகிட்டிருக் கான்னு தெரிஞ்சிடும்" என்ற கோவிந்தன், நாடிமுத்துவை தன் செல்போனில் அழைக்க முயன்றான். நல்லவேளையாக டவர் இருந்தது. சப்தமும் ஒலித்து மறுபுறத்தில் இருந்து நாடி முத்துவும் பேசினான்.

"ஹலோ... யாருங்க போன்ல?"

"உம்... உங்கப்பன்..."

"எலே வளையல் பொட்டி... நீ இப்ப எங்கடா இருக்க?"

"எதுக்கு கேட்கிற? இப்படியா தூக்கத்தை கெடுத்து போன் பண்ணுவ... யாருடா நீ?"

"என் குரலை வெச்சு நான் யார்னு உனக்கு தெரியலியாக்கும்?"

"யாரு... தூக்க கலக்கத்துல சரியா தெரியல. இரு யோசிக்கிறேன்..."

"அப்ப நீ அந்த வங்கிப் பொண்ணை கூட்டிக் கிட்டு போக தாணுமாலய காட்டுக்கு வரலன்னு சொல்லு."

"வங்கிப் பொண்ணா... நீ கோவிந்தன்... வாட்சர் கோவிந்தன் தானே?"

"கண்டுபிடிச்சிட்டியே... தூக்கம் தெளிஞ்சிடுச்சா? ஏண்டா நாயி, நீ வருவே உன் கூட ஓடிப்போயிடலாம்னு இங்க இந்த பொண்ணு நின்னுகிட்டிருக்கா. நீ அங்க குப்புறப் படுத்து தூங்கிகிட்டு இருக்கியா?"

"என்னது வங்கி வந்துருக்காளா... எனக்குன்னு காத்து கிட்டிருக்காளா... அது வந்து கோவிந்தா..."

"எது வந்துடா... எது வந்து?"

"கோவிந்தா... இதை நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கல. உனக்கு புண்ணியமா போகும். நீ அவளை திரும்பி போகச் சொல்லிடு. நான் அவளோட ஓடிப்போயிட்டா அப்புறம் வனம் பக்கமே வர முடியாது. அப்புறம் எந்த காலத்துலயும் என்னால கற்பக மரத்தை பார்க்க முடியாது. நான் உன்கிட்டமட்டும் சொல்லிக்கிறேன். நான் வங்கியை காதலிச்சதே, நானும் ஒரு வனக்குடியனா ஆகி அந்த காட்டுக்குள்ளேயே வந்து ணுங்கிறதுக்காகதான். ஆனா நான் இழுத்துட்டு

ஓடிட்டா, திரும்ப உள்ள சேர்க்கமாட்டாங்க. இதை எல்லாம் நீ அவகிட்ட சொல்ல வேண்டாம். எனக்கு உடம்பு சரியில்ல. காய்ச்சல்ல படுத்த படுக்கையா இருக்கேன்னு மட்டும் சொல்லு. மிச்சத்தை நான் அவகிட்ட பேசிக்கிறேன்."

"அட கூறு கெட்டவனே... கற்பக மரக்கிறுக்கு பிடிச்ச வனா நீ?"

"ஆமா... உனக்கென்னவோ அதை பார்க்கிற ஆசையே இல்லாத மாதிரி பேசுறியே..."

"இதோ பாரு... இந்தக்காடு நானும் நீயும் நினைக்கிற காடு இல்ல. இந்த உண்மையை இன்னிக்குதான் எனக்கு தெரிய வந்துச்சு. கற்பகமரமெல்லாம் உண்மை தானான்னு ஒரு பெரிய சந்தேகம் இப்ப எனக்கே வந்துருக்கு. நீ என்ன டான்னா அதுக்காக ஒரு பொண்ணையே வளைச்சு, அவ மனசையும் கெடுத்து வெச்சிருக்கே..?"

கோவிந்தன் கோபத்தோடு நாடிமுத்துவுக்கு பதிலைச் சொன்ன அந்த இரவின் நொடிகளில், அவன் உண்மைதான!! என்று சந்தேகப்பட்ட கற்பகமரம் பளீச்சென்ற ஒளியோடு சற்று தொலைவில் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

18

'தா'ணுமாலய வனம் குறித்த ஒரு புராண கதை ஒன்றும் உண்டு. இந்த உலகமானது பிரளயத்தில் அழிந்து, திரும்பவும் உயிர்கள் தோன்றிய போது, இந்த வனத்தில்தான் எல்லாவிதமான தாவர ஜங்க மங்களும் இருந்ததாம்.

அதாவது, செடி, கொடி, மரம், சுனை மற்றும் பூ, காய், கனி, விதை, மற்றும் புழு, பூச்சி, ஈசல், பல்லி, மற்றும் எலி, பூனை, முயல், அணில் மற்றும் நரி,

நாய், எருது, மான் மற்றும் கழுகு, குயில், குருவி, கவுதாரி மற்றும் சிங்கம், புலி, கரடி, மலைப்பாம்பு என்று சர்வ ஜீவராசிகளும் இந்த வனத்தில் இருக்க, இதைக்கண்ட முனிவர்கள். இந்த வனமே சமச்சீர் வனம் என்று உணர்ந்து இங்கே வந்து தங்கள் தவக்கடமையை நிறைவேற்றினார்கள்.

இதிலுள்ள ஜீவராசிகள் அவ்வளவும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிடும். இதனால் இவற்றின் எண்ணிக்கை எப்போதுமே கூடாது, குறையாது... அதே போல பருவ காலங்களில் இங்கே நிகழ வேண்டியது நிகழ்ந்திடும். இலை உதிர்தல், புதியன துளிர்த்தல், பூத்தல், காய்த்தல் என்கிற ஓட்டத்தில் இங்கே ஒரு பழுதும் இல்லை. பசிக்கும்போது மட்டுமே இங்குள்ள மாமிச உண்ணிகளிடம் குரூரம் தலை யெடுக்கும். மற்ற நேரங்களில் மானும், புலியும் ஒரே மடுவில் நீர் அருந்தும். இதுவே பூகோள ரீதியான தெய்வீக தன்மையை குறிப்பதாகும்.

- தாணுமாலயவன சரிதம்.

"இது சாதாரண காடு இல்ல.
இங்க உலக மகா
கிரிமினல்கள் அந்த வானத்து
மனுஷங்க. அப்புறம் அந்த
அகோர சாமி. எல்லாத்துக்கும்
பின்னால் இருக்கிறது
தங்கம்..."

"தாணுமாலயக்குடி மக்கள் மொத்தம்
எவ்வளவு பேர்னு சர்வே எடுத்து, அவங்
களுக்கெல்லாம் ஒரு ஐடென்டி கார்டை
கொடுத்து, கார்டு இல்லாம யார் இந்த
காட்டுக்குள்ள திரிஞ்சாலும் சரி,
அவங்களை தூக்கி உள்ள போடப் போறேன்..."

கோவிந்தன் அந்த காட்சியைக் கண்டு அதிர்ந்தான். அந்த காட்சியை வங்கியும் பார்த்தாள்.

"ஏ புள்ள... அது கற்பக மரம் தானே?" என்று கையில் உள்ள செல்போனை அணைக்காமலே கேட்டான்.

"ஆமாய்யா... அதேதான்! வாய்யா அதுகிட்ட எப்படியாவது போய் அதை பிடிப்போம்..." என்று வங்கியும் துடித்தாள். அவள் பேசுவதில் இருந்து, அவன் பேசுவது வரை எல்லாமே அந்தப் பக்கமாய் நாடிமுத்துவின் காதிலும் விழுந்து கொண்டிருந்தது.

கோவிந்தனும் வேகமாக அதை நோக்கி ஓடக் காலெடுப்பதற்குள், அது கண்களை விட்டு மறைந்தும் போனது.

"அடக்கெரகமே! அதுக்குள்ள மறைஞ்சிடுச்சே..." அவனிடம் சலிப்பு மிகுதியானது.

"எங்க மூப்பர் சொல்வாரு... மரம் கண்ணுலபட்டா கோவிந்தா, நாராயணா, ஈஸ்வரான்னு கைய ஒசத்தி சத்தமா கும்புடணுமாம். அப்படி கும்புட்டாத்தான் அது நிக்குமாம். இல்லாட்டி இப்படித்தான் போயிடுமாம்..."

"நீ கும்பிட்டு நிறுத்துறதுக்கென்ன?"

"சட்டுன்னு அதெல்லாம் நினைவுக்கு வரலையய்யா..."

"மண்ணாங்கட்டி..."

கோவிந்தன் சலித்துக் கொள்ள, நாடிமுத்து கோவிந்தா, கோவிந்தா என்று அழைத்துக் கொண்டிருந்தான்.

கோவிந்தனுக்கு நாடிமுத்துவோடு பேசிக் கொண்டிருந்தது எல்லாம் மறந்தே போய் விட்டது. கண்ணில் பட்ட மரம்தான் மனதில் நிரம்பியிருந்தது.

எல்லாமே பொய் என்று சொல்லும்போது தானா இப்படி ஒரு காட்சியைப் பார்க்க வேண்டும்? இப்போது எது

உண்மை? தான் முன்பு நினைத்ததா? இல்லை கண்ணாலேயே பார்த்ததா?

கேள்விகளின் பிடிகளில் அவன் சிக்கிவிட, அந்த செல் போனில் மிக மெல்லிய குரலில் கோவிந்தனை அழைக்க நாடி முத்துவின் குரலும் அடங்கிப் போனது.

"யோவ்..." வங்கி அவனை கலைத்தாள். அவனும் கலைந்தான்.

"இப்ப நான் என்ன செய்யட்டும்?"

"வந்த வழியே திரும்பிப் போ... நாடிமுத்து உன்னை கவ் வி க்கிட்டு காட்டை விட்டு ஓடத் தயாரா இல்ல."

"அப்படின்னா?"

"என்ன அப்படின்னா? அவனுக்கும் இந்த மரம்தான் குறி. அதுக்காகத்தான் அவன் உன்னை குறிவெச்சு பழகி யிருக்கான். புரிஞ்சுக்க..."

"அடப்பாவி... என்ன இப்படி கவுத்துப் புட்டானே?"

"அவன் கவுத்தா, நீ எதுக்கு கவுந்து போற?"

"நீ என்னய்யா சொல்ற?"

"நீ திரும்பிப் போ... உன் மாமன் உன்னை கட்ட முடியாதபடி என்ன செய்யணுமோ... அதை நான் செய்யு றேன். இப்போதைக்கு உன் வரைல என்னால அதைத்தான் செய்ய முடியும்..."

"அது போதும்யா எனக்கு... இந்த வளையக்காரன் வரட்டும். அவன் பெட்டியைப் புடுங்கி மரப்பொந்துக் குள்ளேயே போடுறேன். அதை எடுக்க கையை விட்டு பாம்பும், தேளும் கடிச்சு சாவட்டும்..."

வங்கி வயிறெரிந்தாள்.

"சரிசரி... புறப்படு. பொழுது விடியுறதுக்கு முந்தி உன் கொட்டாய்ல போய் யாருக்கும் தெரியாம அடங்கிடு" என்று துரிதப்படுத்தவும் செய்தான்.

அவளும் வந்த வழியே நிதானமாக நடக்கத் தொடங்கினாள். உதட்டில் 'தாணுமாலயா' என்கிற வேண்டல்!

வீட்டில் நட்ராஜை படுக்க வைத்து, ஒரு போர்வையை போர்த்திவிட்டு திரும்ப முனைந்த சிவக்குமாரிடம், "பிரதர் என் கிட்ல இருக்கிற இஞ்செக்ஷன் சிரிஞ்சை எடுத்து ஒரு ஊசி போட்டு விடுறியா?" என்று கேட்டான் நட்ராஜ்.

"ஏன் நட்ராஜ்? அடிப்பட்ட இடம் வலிக்குதா?"

"காலை பிச்சு போட்டுடலாம் போல இருக்கு..."

"பெய்ன் கில்லர் இருக்கா உன்கிட்ட?"

"பெய்ன் கில்லர் இல்ல, மைண்ட் கில்லர் இருக்கு..."

"யூ மீன் போதை மருந்து?"

சிவக்குமார் கேட்க, நட்ராஜிடம் மவுனமான ஆமோதிப்பு. சிவக்குமாருக்கு அந்த ஆமோதிப்பு அதிர்ச்சியை தந்தது.

"நீ அந்த பழக்கத்தை விடலையா இன்னும்..."

"எப்படாவாவதுதான் பிரதர்..."

"தப்பு நட்ராஜ். பெரிய தப்பு இது..."

"பிரதர் இது பேசுற நேரமில்ல... வலி உயிர் போகுது. பிளீஸ்..."

நட்ராஜ் குரலில் கெஞ்சல். சிவக்குமாரும் அவனது கேட்பேக்கை திறந்து, சகலத்தையும் திறந்து அவனுக்கு ஒரு ஊசியைப் போட முனைய நட்ராஜ், "கையில வேண்டாம்... தொடையில..." என்று தொடையை பரபரப்போடு காட்டி

யான். தொடையில் ஏராளமான ஊசி முனை பட்ட புள்ளித் ங்கள்!

பகீர் உணர்வுடன் ஊசியைப் போடவும், அதுவரை வெறித்தபடி இருந்த நட்ராஜ் முகத்தில் ஒரு அசட்டுச் சிரிப்பு ன்றே தோன்றியது. அதைக் காண சிவக்குமாருக்கு பிடிக்கவில்லை. வேகமாக விலகி எதிரில் இருந்த படுக்கை அறைக்குள் நழையவும், வள்ளியம்மை சிலைபோல் அமர்ந் திருந்தாள்.

கதவை தாழிட்டுவிட்டு அருகில் போய் அமர்ந்த சிவக் குமாரை அவளும் கலக்கமாக ஏறிட்டாள்.

"என்ன அப்படி பார்க்கிற?"

"கடைசியில அந்த மரம் ஜெயிச்சிடுச்சு பாத்தீங்களா?"

"எந்த மரம்?"

"சொல்ல சொல்ல கேட்காம இலையை பறிச் சீங்களே?"

"வள்ளியம்மை... நல்ல நேரத்துல படு. என் வாய்ல கண்டபடி வந்துடப்போகுது."

"இவ்வளவு ஆன பிறகுமா உங்களுக்கு இங்க ஒரு சக்தி இருக்கிறது தெரியல...?"

"பைத்தியக்காரி... நான் இன்னிக்கு எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை உன்கிட்ட இன்னும் சொல்லல. சொன்னா இப்படி பேசமாட்ட..."

"என்ன அது?"

"காலையில சொல்றேன். இப்ப படு..."

"பரவாயில்ல இப்பவே சொல்லுங்க..."

"எனக்கு முந்தி இருந்த ஆபீசர் காளிமுத்து இப்ப உயிரோட இல்ல. தெரியுமா உனக்கு?"

"என்னாச்சு... ஹார்ட் அட்டாக்கா?"

"கொலை... படுகொலை..."

"ஐய்யோ... யார் செய்தா?"

"இனிமேதான் கண்டுபிடிக்கணும்... கொலை செய்தது யார்ன்னு மட்டுமல்ல... காளிமுத்து உடம்பையும்..."

"புரியும்படி சொல்லுங்க..."

சிவக்குமார் நடந்து முடிந்ததை சொல்லி முடிக்க, வள்ளியம்மை உறைந்து போனாள்.

"இது சாதாரண காடு இல்ல. இங்க உலக மகா கிரிமினல்கள் அந்த வானத்து மனுஷங்க. அப்புறம் அந்த அகோரசாமி. எல்லாத்துக்கும் பின்னால் இருக்கிறது தங்கம்..."

"அப்ப தாணுமாலய விருட்சம், கற்பக விருட்சமெல்லாம்..."

"காதுல பூ சமாசாரங்கள். கல்வி அறிவில்லாத இந்த மலை ஜனங்களை இந்த கிரிமினல்கள் ஏமாத்தலாம். ஆனா என்கிட்ட நடக்காது..."

"எனக்கு பயமா இருக்குங்க."

"பயப்படுறதால புண்ணியமில்ல வள்ளியம்மை. இரண்டுல ஒண்ண பார்க்கிறேன் நான்."

"நட்ராஜ்க்கு கால் ஒடஞ்சதும் நல்லதுதான். இல்லேன்னா படம் பிடிக்கிறேன்னு சுத்த கிளம்பி, ஆபத்தை தான் விலைக்கு வாங்கிக்கிற மாதிரி இருக்கும்..."

"யு ஆர் ரைட்! நட்ராஜை நாளைக்கு டாக்டர் செக் பண்ணி ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணச் சொன்னா, பண்ணிட... வேண்டியதுதான். நீ கூட இருந்து பார்த்துக்கோ. எனக்கும் உங்க ரெண்டு பேர் பத்தின கவலை இருக்காது. நானும் இங்க ரெண்டுல ஒண்ணு பாக்க முடியும்."

"உங்கள விட்டுட்டு நான் போறதா... மாட்டேன்."

"பைத்தியம் மாதிரி பேசாம நான் சொல்றதைக் கேள். நான் ஒண்ணும் தனியா போய் எதையும் செய்யப் போறதில்ல. டிபார்ட்மெண்டுக்கு நாளைக்கு மெயில் கொடுக்கப் போறேன். ரைபிள், பிஸ்டலோட ஐம்பது ரைடர்களை கேட்கப் போறேன். இம்மீடியட்டா டெலிபோன் டவரை பிக்ஸ் பண்ணி, எல்லா இடத்துலயும் கான்டாக்டை கிரியேட் பண்ணப் போறேன். அதே மாதிரி ஜெனரேட்டர் செட், புல்டோசர், பொக்லைனர்னு இங்க இதுவரை இல்லாத எல்லாத்தையும் கேட்கப் போறேன். அதுக்கு முந்தி இந்த மலையில இருக்கிற தாணு மலையக்குடி மக்கள் மொத்தம் எவ்வளவு பேர்னு சர்வே எடுத்து, அவர்களுக்கெல்லாம் ஒரு ஐடென்டி கார்டை கொடுத்து, கார்டு இல்லாம யார் இந்த காட்டுக்குள்ள திரிஞ்சாலும் சரி, அவங்களை தூக்கி உள்ள போடப் போறேன்..."

சிவக்குமாரிடம் ஆவேச அலை. வள்ளியம்மையே வாயடைத்துப் போனாள்.

மறுநாள்!

காலை எட்டுமணிக்கெல்லாம் இருசனும், நீலியும் வந்துவிட்டனர். இருசன், வானத்து மனிதர் சொன்ன நாட்டு வைத்தியருடன் வந்திருந்தான். அவர்களைப் பார்க்கவும் சிவக்குமாருக்கு கோபம் வந்தது.

"யாருய்யா இது?"

"எலும்பு வைத்தியருங்க..."

"எலும்பு வைத்தியரா? எந்த காலேஜ்ல படிச்சாரு?"

"ஐயா... எல்லாம் அனுபவப் பாடங்க. வானத்து மனுசங்களே இவரைப் பத்தி சொன்னாங்கன்னா பார்த்துக்குங்க..."

"ஓ... அந்த கிரிமினல் கூட்டமா?"

"ஐயா நீங்க என்ன சொல்றீங்க?"

"அவங்களை எல்லாம் பிடிச்ச உள்ள போடப் போறேன். திருட்டுப் பசங்க..."

"ஐயோ... அவங்க சாமிங்க. அப்படி எல்லாம் சொல்லாதீங்க..." இருசன் வக்காலத்து வாங்க, கோவிந்தனும் சோர்வாக வந்தான்.

"வா கோவிந்தா... எங்க நட்ராஜோட ஜீப்?"

"பெட்ரோல் இல்லாம நின்னுடுச்சுங்க. நான் நடந்தே வந்து நம்ம ஆபீஸ்ல படுத்து எழுந்திரிச்சுட்டு இப்ப வரேன்..."

"அப்படியா... சரி, இந்த காட்டான் கிட்ட இந்த காட்டோட போலியான பக்கத்தை பத்தி நீயே சொல்..."

"எதைங்க?" கோவிந்தன் திருப்பிக் கேட்கவும், சிவக் குமாரிடம்ட. அதிர்ச்சி.

"எதையா... எல்லாம்தான்..."

"இல்லையய்யா... அவசரப்பட்டு பேசாம, கொஞ்சம் நிதானமா யோசிச்சு பேசுவோம்யா..."

"யோசிச்சு பேசுறதா? காளிமுத்து பொணத்தை பார்த்த நீயா இப்படி பேசுற?"

"அதைப் பார்த்த நான் கற்பகமரத்தையும்ல பார்த்தேன்..."

கோவிந்தன் பதில் அவ்வளவு பேரையும் அதிரச் செய்தது.

19

*'வ*னங்களில் புனலாடுதல் என்று ஒரு விஷயம் அந்த நாளில் உண்டு. நாட்டையாண்டிடும் அரசர்கள், ஒரு புத்துணர்ச்சிக்காக இந்த புனலாடலில் பங்கெடுப்பார்கள். புனலாடுதல் என்றால் ஒரு வனத்தில் கண் உள்ள எல்லா விதமான நீர் நிலைகளிலும் நீராடுதல் என்று பொருள். ஒரு வனத்துக்குள் அருவி இருக்கும். சிற்றோடை இருக்கும், தடாகம் இருக்கும், மலை ஏரிகள் கூட இருக்கும். இது போக நதி ஓடக் கூடும். சுனைகளும் இருக்கும். தடாகத்துக்கும் சுனைக்கும் மெல்லிய வேற்றுமை உண்டு. தடாகம் மழை நாளில் தாமரை அல்லியோடு பூத்துக் குலுங்கும். வேனிற் காலத்தில் தடாகம் வளரக் கூடும். ஆனால் சுனை அவ்வாறின்றி, எப்போதும் ஒரே அளவு நீரோடு இருக்கும். இவ்வாறுள்ள சகல நீர் நிலைகளிலும் நீராடுவதே புனலாடுதல் எனப்படும். இதனால் உடலும், உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றிடும். மகாபாரதத்தில் காண்டவவனத்தில் கிருஷ்ணனும் அர்ஜுனனும் புனலாடச் சென்ற வைபவம் மிக பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அப்படி அவர்கள் சென்ற போது, அந்த காட்டை'ய தன் பசிக்காக விழுங்க விரும்புகிறான் அக்ள்'. ஆனால், அதற்கு இந்திரன் பெரும் தடையாக இருந்து, மழையைப் பொழி வித்து அக்னியால் செயல்பட முடியாதபடி செய்து விடுகிறான். பின் அர்ஜுனன், மழைநீர் வனத்தின் மேல் விழாதபடி தன் பானங்களாலேயே பந்தல் போட்டு தடுக்க, அக்னி முழுவனத்தையும் எரித்து சாம்பலாக்கி முடிக்கிறான். அவ்வேளையில்

நாகலோகத்து நாகம் ஒன்றும், நான்கு சக்கரவாகப் பறவைகளும், தேவலோக சிற்பி மயனும் மட்டுமே அந்த வனத்தில் இருந்து தப்பிக்கின்றனர். மற்ற அவ்வளவு உயிர்களையும் அக்னி விழுங்கி விடு கிறான். திரும்பவும் அந்த காண்டவ வனம் முளைத் தெழ பலநூறு ஆண்டுகள் ஆயிற்று. அப்போது அந்த காட்டில் அக்னிக்கு பயந்து தப்பித்த பறவை கள் அவ்வளவும், தங்களுக்கு ஏற்ற இடமாக கருதி தஞ்சம் புகுந்த வனம்தான் தாணுமாலய வனமாகும்.

- தாணுமாலயவன சரிதம்.

"என் வரையில இந்த காட்டுல
எந்த குத்தமும் இல்லீங்க.
குத்தமுள்ளவங்களால இங்க
இருக்கவும் முடியாதுங்க.
அகோரசாமி சுத்திகிட்டு
இருக்கிறதே தப்பு பண்ணா
தண்டனை தரத்தான்..."

"வள்ளியம்மையை நெருங்கி
மூச்சருகே கைவைத்து சுவாச
ஓட்டத்தை முதலில் கவனித்தான்.
பின் கண்ணிரண்டை திறந்து பார்த்து
விட்டு, கையின் மணிக்கட்டு
நாடியை பரிசோதித்தான்..."

கோவிந்தன் சொன்னதைக் கேட்டு எல்லாரும் திகைத்து., நட்ராஜ் மட்டும் திகைக்காமல் அதற்கு பதிலைச் சொல்ல ஆரம்பித்தான்.

"பிரதர்... என்ன எல்லாரும் வாயைப் பொளந்துட்டீங்க. கோவிந்தன் ஒண்ணும் பொய் சொல்லல. ஏன்னா கோவிந்தன் பார்த்த அந்த கற்பக மரத்தை நானும் பார்த்தேன்."

"நட்ராஜ், பார்த்துட்டு நீ எப்படி விட்டே?"

"நாள் விடலை. அதுதான் ஓடிப் போயிடுச்சு."

"அது எப்படி ஓட முடியும். மரம்னாலே நின்ன இடத்துல, நகர முடியாம வளருகிற ஒரு தாவரம். ஆனா அது ஓடிப் போகுதுன்னா, அதுக்கு வேர்களுக்கு பதிலா சக்கரங்கள் இருக்கிறதால்ல அர்த்தம் பண்ணிக்க வேண்டியிருக்கு..."

"சக்கரமாவது ஒண்ணாவது... பளபளன்னு ஜொலிச்சுக்கிட்டு தனியா தெரியுதுங்க."

கோவிந்தன் சுருக்கமாய் சொன்னான்.

"அது ஒரு அப்பட்டமான சதிவேலை. சினிமா இண்டஸ்ட்ரியில ஆர்ட் இயக்குனர்கள் சிலர் செட் போடும் போது, பெரிய பெரிய மரங்களை பிளாஸ்டர் ஆப் பாரிஸ் மெட்டீரியலில் உருவாக்குவாங்க. அப்படி உருவாக்கின மரங்களை கிரேன் உள்ள டிராக்டர்கள் அப்படியே தூக்கி, விரும்புற இடத்துல வைக்கும். அப்படி செய்து கொண்டு வரப்பட்ட ஒரு மரம்தான் அது. அது ஒரு இடத்துல இல்லாம, காடு பூரா சுத்திவர்றதுக்கு பின்னால ஒரு சரியான காரணம் இருக்கு. நாம அதை எப்படியாவது கண்டுபிடிக்கணும்."

நட்ராஜ் தன் யூகங்களை அப்படியே சொன்னான். அதுவரை பொறுமையாக இருந்த அந்த நாட்டு வைத்தியர் உடனே அதைக் கேட்டு சிரித்தார்.

"என்னப்பா சிரிக்கிற... நான் சொன்னது உனக்கு புரியலையா?"

"நல்லா புரியுதுங்க. சுருக்கமா அந்த மரத்தையே சந்தேகப்படுறீங்க. ஏதோ சினிமா, இயக்குனரு, கிரேனு அப்படி இப்படிங்கிறீங்க. இதெல்லாம் ஒரு அம்பது அறுவது வருஷமா தானுங்களே இருக்குது?"

"சினிமா வந்து நூறு வருஷம் ஆயிடுச்சுய்யா..."

"இருக்கட்டுமே... இந்த கற்பகமரத்தை என் கொள்ளுப் பாட்டனும், அந்த பாட்டனுக்கு பாட்டனுமெல்லாம் கூட பாத்துருக்காங்களே... அப்ப அதுக்கென்ன சொல்றீங்க?"

நாட்டு வைத்தியன் கேள்வி சிவக்குமாரை திடுக்கிட வைத்தது.

"அப்ப என் தம்பி சொல்றது பொய்யா?"

"இந்த மாதிரி ரொம்ப பேர் பேசி கேட்டுருக்காங்க. கற்பகமரத்தை பாத்தே தீரணும்னு காட்டுக்குள்ள பல வருஷமா சுத்தி வந்த சாமியாருங்க எவ்வளவு பேர் தெரியுங்களா,"

"அதனால?"

"இல்லீங்க... அதை நம்ப முயற்சியாலயோ, ஆசைப்படுற தாலயோ எல்லாம் பாக்க முடியாதுங்க. நமக்கு தலைச்சுழி இருக்கணுங்க..."

"அப்ப அது ஒரு மிஸ்ட்ரியான விஷயம் தாங்கற..."

"நீங்க சொல்றதுக்கு அர்த்தம் எனக்கு தெரியாதுங்க. என் வரையில இந்த காட்டுல எந்த குத்தமும் இல்லீங்க. குத்தமுள்ளவங்களால இங்க இருக்கவும் முடியாதுங்க. அகோரசாமி சுத்திகிட்டு இருக்கிறதே தப்பு பண்ணா தண்டனை தரத்தான்..."

நாட்டு வைத்தியன் சொன்ன பதில் பெரிய எரிச்சலைத் தான் சிவக்குமார் வரையில் ஏற்படுத்தியது.

"பிரதர் இவங்ககிட்ட பேசுறதுல பிரயோஜனமே கிடையாது. இந்த வைத்தியரை முதல்ல அனுப்பிட்டு, என்னையும் டாக்டர்கிட்ட காட்டுற வழியைப் பார். என் கால் சரியாகட்டும்... திரும்பி வந்து இரண்டுல ஒண்ணு பார்க்கிறேன்..."

நட்ராஜிடம் கோபம் கொப்பளித்தது.

"அய்யாமாருங்களே... நான் சொல்றதை சொல்லிட்டேன். இனி உங்க பாடு. என்கிட்ட இருக்கிற தைலமும், நெல்லிகையும் மூணு வாரத்துல இவரை துள்ளிக்குதித்து ஓட வைக்கும். உங்க பட்டணத்து டாக்டர்கள் ஆறு மாசம் படுக்க வெச்சிருவாங்க. நல்லா யோசிச்சுக்குங்க."

"நீதான்யா ஆறுமாசமாக்குவ. இன்னிக்கு எவ்வளவோ பத்திரிகைகள் வந்தாச்சு. நாங்க டவுன்ல டாக்டர்கிட்ட போய் பார்த்துக்கிறோம். நீ புறப்படு..."

சிவக்குமாரின் குரலில் தொனித்த கடுமை, அந்த வைத்தியனை இருசனை நோக்கி பார்க்க வைத்தது. இருசனும் இனி பேசுவதில் பயனில்லை புறப்படு என்பது போல பார்த்தான்.

"உனக்கும் இங்க என்ன சோலி... நீயும் புறப்படு" என்றான் அந்த நாட்டு வைத்தியன். இருசனும் புறப்பட பார்த்தான். சிவக்குமார் தடுத்தார்.

"இருசா நீ இரு. வைத்தியர் போகட்டும்..."

"இல்லீங்க. நானும் போறேன். நேத்து நான் இருட்டு முந்தி வாரம் போனதுக்கு என்னை மந்தையில நிறுத்தி மூப்பர் கேள்வி கேட்கத் தெரிஞ்சார். நான்தான் கால்ல கையில விழுந்து மன்னிப்பு கேட்டேன். உங்க கூட இருந்தா எப்ப நான் எங்க நாட்டுக்கு திரும்புவேன்னே சொல்ல முடியாது. மூப்பரும் ஒரு தடவைதான் மன்னிப்பார்..."

இருசன் பளீச்சென்று சொல்லிவிட்டு, நாட்டு வைத்தியரோடு கிளம்பி விட்டான். நீலியும் அரை மனதாக அவர்களோடு சேர்ந்து நடந்தாள். வள்ளியம்மை மவுனமாக பார்த்தபடி இருந்தாள். அவர்கள் போவதை பார்க்கவும், அவளுக்குள் இனம் தெரியாத வருத்த உணர்ச்சி. அது அவள் தலையில் ஒருவித கிறுகிறுப்பை உருவாக்கவே, நின்ற இடத்தில் அப்படியே மயங்கி விழத் தொடங்கினாள்.

அதைப் பார்த்த சிவக்குமார் பதட்டத்துடன் நெருங்கவும், நீலியும் திரும்பி ஓடிவந்தாள். கூடவே வைத்தியனும்...

நீலி பதறினாள்.

"அட என்னா வேடிக்கை பாக்குற. அம்மணிக்கு என்னன்னு பாரு..." என்றாள். வைத்தியரும் வள்ளியம்மையை நெருங்கி மூச்சருகே கைவைத்து சுவாச ஓட்டத்தை முதலில் கவனித்தான். பின் கண்ணிரண்டை திறந்து பார்த்து விட்டு, கையின் மணிக்கட்டு நாடியை பரிசோதித்தான். பரிசோதித்த நொடியில் முகத்தில் ஒரு சந்தோஷ உணர்ச்சி.

"என்னய்யா... சிரிக்கிற?"

"சிரிக்காம... ஐயா நீங்க தகப்பனாக போறீங்க..."

"என்னது?" சிவக்குமாரால் அதை நம்ப முடியவில்லை.

"நீங்க தகப்பனாக போறீங்க. பிள்ளை நாடி துடிக்குது. இது பிள்ளை மயக்கம்..." என்றான்.

சிவக்குமாருக்குள் குபீரென்று ஒரு புது ரத்த ஓட்டம். அந்த வைத்தியனே உச்சந்தலை முடியில் ஒரு நான்கைந்து முடிக்கற்றைகளை பிடித்து வெடுக்கென்று இழுக்கவும், வள்ளியம்மையின் மய்க்கம் கலையத்தொடங்கியது. கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தவள்,

"தாயி... நான் சொன்னேன்ல எங்க சாமி மரம் கைவிடாதுன்னு..." என்று கேள்வியோடு எதிர் கொண்டாள்.

"என்ன சொல்ற நீலி?"

"நீங்க தாயாகப் போறீங்க... அதான் பொசுக்குன்னு மயக்கம் போட்டு விழுந்துட்டீங்க..."

வள்ளியம்மை சந்தோஷத்துடன் கணவனை ஏறிட்டாள். கோவிந்தனும் சிவக்குமாரை அர்த்தத்துடன் பார்த்தான்.

"என்ன கோவிந்தா... நான் அப்பாவானதுக்கு அந்த பையன்தான் காரணம்னு நீயும் சொல்லப் போறியா?"

"அதுவும் கட்டாயமா ஒரு காரணம்ங்க..."

"அப்ப நாம காளிமுத்துவை பிணமா பார்த்தது... அந்த பிய் பேப்பர் செய்தி எல்லாம்...?"

"தப்பும் நடக்கிற மாதிரிதாங்க தெரியுது."

"நீ குழப்புற... உன்கிட்ட பேசுறதுல பிரயோஜனமில்ல. போகட்டும்... இன்வெஸ்டிகேஷனுக்கு பிஆர்ஓல இருந்து ஒரு கூட்டமே வரப்போகுது. ஆபீசை போய் சுத்தப்படுத்து... பத்து பேருக்கு மேல வரலாம். காபி, டீ அப்புறம் டிபன்னு எல்லாத்துக்கும் ரெடியாயிடு. இருசன் நீலி நீங்க இரண்டு பேரும் போகலாம்..."

சிவக்குமார் மளமளவென்று உத்தரவு போட்டவராக, "வள்ளியம்மை... இந்த வைத்தியன் சொன்னதை நம்பிடாத. நாம சிட்டிக்கு போய் அங்க டாக்டர்கிட்ட கன்பார்ம் பண்ணிப்போம்" என்றார்.

சிவக்குமாரின் அந்த சந்தேகம், வள்ளியம்மைக்கு வருத்தத்தை தந்தது. தப்பித்தவறிக் கூட இந்த நம்பிக்கை பொய்யாகி விடக்கூடாது என்று அவள் மனதும் துடிக்கத் தொடங்கியது.

அது ஒரு சுமாரான ஆஸ்பத்திரி, பார்க்க நவீனமாக இல்லை. ஆனால், பக்கத்தில் இருக்கும் ஒரே ஆர்த்தோ டாக்டர் அவர்தான்.

நட்ராஜை பரிசோதித்தவர், ஸ்கேன் ரிப்போர்ட்டுடன் எக்ஸ்ரேவையும் பார்த்தார். எலும்பு முறிவை அந்த எக்ஸ்ரே ஊர்ஜிதம் செய்தது.

"எப்படி ஆச்சு?"

நட்ராஜ் நடந்ததை சொல்லத் தொடங்கினான்.

"இரவு நேரத்துல மலைப்பாதையில என் ஜிப்சி கார்ல வரும் போது ஜீப் கவுந்துடுச்சு. நானும் மயங்கிட்டேன்."

"இங்க பக்கத்துல மலைப்பகுதின்னா தாணுமாலய வனப்பகுதிதான்..."

"எனக்கு ஆக்சிடண்ட் நடந்ததும் அங்கதான்..."

"அங்க எதுக்கு போனீங்க?"

"டாக்டர்... நான் அந்த வனப்பகுதிக்கு வந்துருக்கிற காட்டிலாகா அதிகாரி. இவன் என் தம்பி..."

சிவக்குமார் இடையிட்டார்.

"அங்கேயே எலும்பு முறிவுக்கு பேர்போன எல்லப்பன் கிற தாணுமாலய வைத்தியன் இருப்பாரே... அவர்கிட்ட காட்டாம என்கிட்ட வந்திருக்கீங்களே..."

"அந்த ஆள் வந்து பார்த்தான். நான்தான் அவன்கிட்ட காட்ட விரும்பல..."

சிவக்குமார் சொன்னதைக் கேட்டு டாக்டர் முகம் ஒரு மாதிரி ஆனது.

"இன்பாக்ட் என்னை விட பெரிய டாக்டர் அவர். நான் கைவிட்ட கேசை கூட எல்லப்பன் சரி செய்துருக்கார். நானே என் டிஸ்பென்சரியை ஷிப்ட் பண்ணிகிட்டு சேலம், திருச்சி, கோயமுத்தூர்னு போயிடலாமாங்கிற எண்ணத்துல இருக்கேன்... பிகாஸ் ஆப் எல்லப்பன்..."

"ஒரு மெடிக்கல் டாக்டர் இப்படி பேசலாமா?"

சிவக்குமார் கோபத்தோடு கேட்டார்.

"அந்த மலையில ஏதாவது தப்பு பண்ணினீங்களா?" என்றார் டாக்டர் சீரியசாக.

"டாக்டர்... என் தம்பிக்கு சிகிச்சை ஆரம்பிக்காம என்ன கேள்வி இது?"

"அப்ப தப்பு பண்ணியிருக்கீங்க?"

"டாக்டர்... நீங்க தேவையில்லாம பேசுறீங்க... உங்க டியூட்டிய மட்டும் பாருங்க... போதும்!"

"சாரி... என் கேள்விக்கு நீங்க சரியான பதில் சொல்லல. நான் அந்த மலையை கடவுளா நினைக்கிறவன். தயவுசெய்து என்னை தப்பா எடுத்துக்காம கிளம்புறீங்களா?"

அந்த டாக்டர் அதிர்ச்சியளித்தார்.

20

தாணுமாலய வனத்துக்குள் ஒரு மண்டல காலம் ஒருவர் இந்த காட்டுக்குள் கிடைக்கும் காய் கனிகளை மட்டும் புசித்துக் கொண்டு, காட்டில் வாழ்ந்து வரும் எந்த ஒரு உயிருக்கும் தீங்கு செய்யாமல், இக்காட்டிலுள்ள சகலவிதமான தீர்த்தங்களிலும் நீராடிய நிலையில் யோகம் புரிந்தால், அவர்களது முன்வினைக் கருமங்கள் அவ்வளவும் தீர்ந்து, அவர்கள் அடுத்த பிறப்பில் இப்பூவுலகின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கக் கூடிய அதிகாரமும், செல்வமும், ஆரோக்கியமும் படைத்தவர்களாக பிறப்பார்கள் என்பது உறுதி.

இக்காலக்கட்டத்தில் ஒரு வார்த்தை கூட பேசாமல் மவுனமாய் இருப்பது மிக முக்கியம். எதிர்பாராத விதமாக ஊர்வனவற்றாலோ, பறப்பனவற்றாலோ, நடப்பனவற்றாலோ தனக்கொரு தீங்கு நேருமாயின், அவ்வேளையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அந்த உயிரை அழிக்க முனைதலும் கூடாது. ஒருவேளை, அதன் தாக்குதலால் உயிர்

பிரிய நேருமாயின், அதை ஊழ்வினையாகக் கருதி ஏற்றிட வேண்டும். பின் உயிர் போன உடலை காட்டுவாழ் உயிர்கள் தங்கள் பசிக்கு உணவாக உட்கொண்டிட, இறந்தவர் ஆன்மா மறுபிறப்பு காணாது சொர்க்கம் புகும்!'

- தாணுமாலயவன சரிதம்.

"எழுதினாலோ, ரத்த சம்பந்த
மில்லாத யாருக்காவது சொல்லித்
தர முயன்றாலோ, அவங்க வன
தேவதை கோபத்துக்கு ஆளாகி
ஒன்பது நாள்ல இறந்து போயிரு
வாங்கன்னு ஒரு நம்பிக்கை..."

"அது சாதாரண மலையில்லை.
உலகத்தோட கிரிமினல்ஸ் அவ்வளவு
பேரும் அங்கதான் சுத்திட்டு இருக்காங்க.
நான் அங்க கால் வெச்சதுல இருந்து இந்த
செகண்ட் வரை ரொம்பவே குழம்பிப்
போய்..."

அந்த டாக்டரின் பதிலைத் தொடர்ந்து சிவக்குமாரும் நட்ராஜும் திகைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். டாக்டரோ அலட்சியமாக ஸ்டெதஸ்கோப்பை தூரவைத்துவிட்டு, எக்ஸ்ரே போர்டின் ஸ்விட்சை அணைத்து, எக்ஸ்ரே பிலிமையும் அதிலிருந்து விடுவித்து எடுத்து உறைக்குள் போட்டு, 'புறப்படுங்கள்' என்பது போல் சிவக்குமாரை பார்த்தார். சிவக்குமாரிடம் அந்த நிலையிலும் ஒரு சிரிப்பு.

"என்ன சிரிக்கிறீங்க?"

"இல்ல... நீங்க நிஜமான டாக்டரா இல்ல, டூப்ளிகேட் டான்னு யோசிக்கிறேன்..."

"எப்படி வேணா நினைச்சுக்கோங்க. ஐ டோண்ட் கேர்..."

"டாக்டர் சார்... நான் ஒண்ணும் தெருவுல போற ஒரு சராசரி குடிமகன் கிடையாது... ஒரு ரெஸ்பான்சிபிள் பாரெஸ்ட் ஆபீசர். டு யூ நோ மை பவர்?"

"உங்க பவர், என்னோட பவர் எல்லாத்தையும் விட அந்த மலை வனம் என் வரையில ரொம்ப பவர்புல் மிஸ்டர் ஆபீசர்..."

"எல்லாம் சுத்த ஹம்பக்... இது விஞ்ஞான உலகம்! நேச்சுரல் பவரைக் கடந்து ஒரு பவரும் எங்கேயும் இல்ல. இன்பாக்ட், அந்த வனத்துல நான் கிரிமினல்ஸ் பவரைத்தான் பார்க்கிறேன். இந்த டிவைன் பவர்ங்கிற வார்த்தையே ஒரு மீனிங்லெஸ் வேர்ட். அதை நீங்க புரிஞ்சுக்கணும்."

"சாரி... நாம டைமை வேஸ்ட் பண்ணிக்கிட்டிருக்கோம். இப்ப உங்களுக்கு என்ன வேணும்?"

"என் பிரதர்க்கு டிரீட்மெண்ட்..."

"நான் கொடுக்கிறேன். ஆட்சேபணையில்லை. ஆனா, என்னைவிட அந்த எல்லப்பன் ரொம்ப பாஸ்ட். அவர்கிட்ட இருக்கிற ஆயிலும், மூலிகையும்தான் வேகமா குணமாக காரணம். நீங்க அங்கேயே இருக்கிறதால உங்களுக்கும் சவுகர்யம். என்ன சொல்றீங்க...?"

"அப்ப நீங்க எதுக்கு இங்க டிஸ்பென்சரி வெச்சிருக்கீங்க?"

"நான்தான் சொன்னேனே... நான் காலி பண்ணிட்டு போகப்போறேன்னு..."

"சரி... அந்த எல்லப்பன்கிற தாணுமால வைத்தியன் என் தம்பி விஷயத்துல சொதப்பிட்டா?"

"சான்சே இல்ல. நான் இப்ப பர்ஸ்ட்எய்ட் பண்ணி அனுப்பறேன். நீங்க அவன்கிட்ட காட்டுங்க."

"அவன் கொடுக்கிற மருந்து என்னன்னு தெரிஞ்சுக்கிட்டு நீங்க அதை கொடுக்கலாமே?"

"அது தொழில் ரகசியமாம். வழிவழியா வர்ற விஷயமாம். அதை எதுலயும் எழுதி வைக்கக் கூடாதாம். எழுதினாலோ, ரத்த சம்பந்தமில்லாத யாருக்காவது சொல்லித்தர முயன்றாலோ, அவங்க வன தேவதை கோபத்துக்கு ஆளாகி ஒன்பது நாள்ல இறந்து போயிருவாங்கன்னு ஒரு நம்பிக்கை அவங்ககிட்ட இருக்கு..."

"தந்திரமா நீங்க முயற்சி செய்து பார்த்திருக்கலாமே?"

"அப்படி நான் செய்யலைன்னு உங்களுக்கு தெரியுமா?"

" அப்ப செஞ்சீங்களா?"

"செய்தேன்... ஒரு பேஷண்ட்டுக்கு எல்லப்பன் தடவின ஆயிலையும், பத்து போட்ட மூவிகையையும் நான் அந்த பேஷண்ட் கிட்ட இருந்து எடுத்து, ஒரு லேப்ல கொடுத்து அதோட கண்டென்ட்டை கண்டுபிடிக்க முயற்சி செஞ்சேன். சொன்னா நம்ப மாட்டீங்க. நான் அப்படி நடந்துகிட்ட நாள்ல இருந்து விஷ ஜ்வரத்துல விழுந்து பட்டபாடு எனக்குத்தான் தெரியும்."

"டாக்டரான நீங்க மருந்து, மாத்திரை சாப்பிட்டு உங்க முயற்சியை கண்டினியூ பண்ண வேண்டியதுதானே?"

"எனக்கு என் நினைவே தவறிடுச்சு. நான் எப்படி நீங்க சொன்ன மாதிரி நடந்துக்க முடியும்?"

"என்ன டாக்டர் நான் எப்படி கேட்டாலும் ஒரு பதிலை ரெடியா வெச்சிருக்கீங்களே..."

"இருக்கிறதை சொல்றேன் ஆபீசர்..."

"சரி உங்ககிட்ட பேசுறதுல பிரயோஜனமில்ல. நீங்க பர்ஸ்ட் எய்ட் மட்டும் பண்ணுங்க போதும். அந்த எல்லப்பன் டிரீட்மெண்ட் எப்படிப்பட்டதுன்னு நான் கண்டுபிடிக்

றேன். அந்த காட்டுக்குள்ள நான் எவ்வளவோ விஷயங் களை கண்டுபிடிக்க வேண்டியிருக்கு. அதுல இதுவும் சேரட்டும். ஆனா ஒண்ணு... அங்க ஒரு புண்ணாக்கும் இல்லைங்கிற உண்மை உங்களுக்கு தெரியுற நாள் தூரத்துல இல்ல. வரேன்..."

என்ற சிவக்குமார், முதலுதவி சிகிச்சை முடியவும் நட்ராஜையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டவராக வெளி யில் வந்தார். வெளியே காரில் வள்ளியம்மை ஏசியை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். இருவரும் திரும்பி வந்து காரில் ஏறுவதைப் பார்த்து திகைத்தாள். காரும் புறப்பட்டது.

"என்னாச்சுங்க?"

"இப்ப என்ன எதுவும் கேட்காத வள்ளியம்மை. நட்ராஜ்க்கு மலையில நம்ம இடத்துலேயே டிரீட்மெண்ட் கொடுக்கிற முடிவுக்கு நான் வந்துருக்கேன். உன்னோட கர்ப்பத்தை இப்ப ஒரு லேடி டாக்டர்கிட்ட கன்பார்ம் பண்ணிட்டு உடனே நாம கிளம்பணும். மதியம் ஒரு மணிக் குள்ள நாம போயாகணும். என்கொயரிக்காக ஆபீசர்ஸ் வந்துடுவாங்க. அவங்க வரும்போது நான் அங்க இருக் கணும்."

பேச்சோடு பேச்சாக வேகம் எடுத்தது கார். ஒரு லேடி டாக்டரின் டிஸ்பென்சரி முன்னால் தேங்கி நின்றது. சிவக் குமாரும் வள்ளியம்மையும் இறங்கி உள் சென்றனர்.

நட்ராஜ் அந்த இடைவெளியில் தன் அசிஸ்டென்ட் திலீப்புக்கு போன் செய்தான்.

"குரு... ரொம்ப நேரமாக உங்களுக்கு டிரை பண்ணிட்டு இருக்கேன். ஸ்விட்ச் ஆப்னு வந்துச்சு. என்னாச்சு குரு?"

"அது ஒரு பெரிய கதை திலீப். ஆமா நீ. புறப்பட்டு வர்றேன்னு சொன்னியே, ஏன் வரல?"

"வந்துகிட்டே இருக்கோம். இப்ப கூட அந்த தாணு மாலய வனப்பகுதிங்கிற போர்டுகிட்டதான் காரை நிறுத்திட்டு உங்க கூட பேசிக்கிட்டு இருக்கேன்."

"வெரிகுட்... எனக்கு நேத்து நைட் அந்த காட்டுல ஒரு ஆக்சிடெண்ட் ஆகி பிராக்சர் ஆயிடுச்சு. நான் இப்ப பக்கத்து டவுன்யில இருக்கேன். ஒரு இரண்டு மணி நேரத்துல வந்துடுவேன். நீ போய் அங்க பாரெஸ்ட் ஆபீசுல இரு. கோவிந்தன்கிற வாட்சர் இருப்பான். என் பேரை சொல். உன்னை பக்கத்துல இருக்கிற வீட்டுக்கு கூட்டிட்டுப்போவான். வெயிட் பண்ணு வந்துடுறேன்..."

"பை த பை குரு, நான் கூட ரேகாவை கூட்டிகிட்டு வந்திருக்கேன்."

"அடப்பாவி... அவ எதுக்கு உன்கூட?"

"அவளுக்கு யாரோ இந்த மலைக்காட்டைப் பத்தி பெருசா சொல்லியிருக்காங்க. அதைக் கேட்டுட்டு நானும் வரேன்னு சொன்னா...'

"அவங்க பேரண்ட்ஸ் எதுவும் சொல்லலியா?"

"டாக்குமென்ட்ரி அசைன்மென்ட்டுன்னு சொல்லி சமாளிச்சுட்டோம். அங்க ஒரு மரத்து இலை கூட ரொம்ப விசேஷமாமே. அதை எப்படியாவது கொண்டு வாங்கன்னு ரேகாவோட பாட்டி சொல்லி அனுப்பியிருக்காங்க.'

"திலீப்... அது சாதாரண மலையில்லை. உலகத்தோட கிரிமினல்ஸ் அவ்வளவு பேரும் அங்கதான் சுத்திட்டு இருக்காங்க. நான் அங்க கால் வெச்சதுல இருந்து இந்த செகண்ட் வரை ரொம்பவே குழம்பிப் போய் இருக்கேன்னா பார்த்துக்கோ."

"ரைட் குரு... நாம எல்லாத்தையும் நேர்ல பேசுவோம். நீங்க வாங்க. நாங்க போயிட்டு இருக்கோம்..."

"உன் கண் எதிர்ல எதைப் பார்த்தாலும் கார்லேர்ந்து இறங்கிடாத. நேரா ரேஞ்சர் ஆபீஸ் கிட்ட போய்தான் நிக்கணும்."

நட்ராஜ் எச்சரித்து முடித்த நிலையில் செல்லை முடக்கினான். எலும்பு முறிந்த இடத்தில் சுரீர் என்று வலி எடுத்தது. அதுவரை அடங்கியிருந்த வலி அதிகமாகும்போல இருந்தது.

உள்ளே சென்ற சிவக்குமாரும், வள்ளியம்மையும் சில நிமிடங்கள் சென்ற நிலையில் வெளியே வந்தனர். வள்ளியம்மை முகத்தில் பூரிப்பு நன்றாக தெரிந்தது. அதுவே அவளது கர்ப்பம் உண்மைதான் என்பதை உணர்த்தி விட்டது. சிவக்குமாரிடமும் ஒரு சந்தோஷ மனநிலை. இருவரும் காரில் ஏறிட, வள்ளியம்மை திரும்பி நட்ராஜை பார்த்து கட்டை விரலை உயர்த்தி காட்டினாள்.

"கங்கிராஜுலேஷன்ஸ்" என்றான் அவனும்.

"என் நம்பிக்கை வீண் போகலை நட்ராஜ்"

"ஒரு தற்செயல் விஷயத்தை நீங்களும் அந்த மலை யோட முடிச்சுபோடாதீங்க."

"நான் போடலை. அதே நேரம் நீங்களும் நான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்னு அடம்பிடிக்காம ஓபன் மைண்டோட இருங்க."

"பிரதர் அண்ணியார் சொல்றது காதுல விழுந்துச்சா?"

"ஏன் விழாம? ஒண்ணு மட்டும் நிச்சயம். என் கேரியர்ல இதுதான் சவாலான காலம்!"

"இங்க எனக்கு மட்டும் என்ன? டோண்ட் ஒர்ரி பிரதர். இந்த காடா, நாமளான்னு பாத்துடுவோம். கொஞ்சம் சீக்கிரம் போ... எனக்கு வலி உயிர் போகுது..."

நட்ராஜ் முகம் சிணுங்க, அந்தக் காரும் எதிரில் தெரிந்த அந்த தாணுமாலயவனமலை நோக்கி வேகமெடுத்தது!

சோகமாக அமர்ந்திருந்தாள் வங்கி. செருமியபடியே வந்தாள் நீலி. வங்கியும் அவளை ஏறிட்டாள். வங்கியின் முகத்தில் வளையல்காரன் வராமல் ஏமாற்றிவிட்ட ஏமாற்றமும், தான் ஓடப்பார்த்த விஷயம் யாருக்காவது தெரிந்து விடுமோ என்கிற பயமும் ஒளிந்திருந்தது.

"என்ன புள்ள... காட்டுமுனிய கண்ணுல பார்த்தவ மாதிரி மிரண்டு போய் பாக்கே...?'

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல.."

"என்ன ஒண்ணுமில்ல... நீ இப்ப நம்ம கூட்டத்து பொண்ணே இல்லடி. மெய்யெதிரா நிறைய பேசுற.."

"நீலியக்கா... என்ன விள்ளாதே... நான் மனசு நொந்து போய் கெடக்கேன்..."

"விள்ளாதேன்னா எப்படி? நீ நம் வனத்தை விட்டே ஓடப் பாத்துருக்கே அது மெய்தானே?"

"யக்கா... அரவமாப் பேசாதே. ஆமா உனக்கு யார் சொன்னா?"

"யாரும் சொல்லல. நானே நீ நடுநிசியில போனதை பார்த்தேன். உன் பின்னாலேயே ரொம்பதூரம் வந்தேன். என் கால்ல முள்ளேறவும் உட்கார்ந்துட்டேன். நீயும் தூரமா போயிட்ட..."

நீலி கேட்டு முடிக்கவும், வங்கி வசமாக மாட்டிக் கொண்டவள் போல திருதிருவென விழித்தாள்.

"முழியாத... ஏன் உன் புத்தியில இந்த சலனம். வளையக் காரன் உன்ன வரச் சொல்லியிருந்தானா?"

"இல்லக்கா..."

"பொறவு...?"

"நாந்தேன் அவனை வரச் சொல்லியிருந்தேன்..."

"அடிக் கொள்ளி..."

"நான் கொள்ளி இல்லக்கா... இப்ப நம்ப வனத்துல தான் பல கொள்ளிங்க திரியுறாங்க..."

"என்னடி சொல்லுற?"

"ஆமாக்கா. குடிசைக்குள்ள வா காட்டுறேன்."

வங்கி நீலியை அழைத்துக் கொண்டு தன் குடிசைக்குள் நுழைந்தாள். உள்ளே ஒரு ஆளைப் போட்டு அடக்கம் செய்யலாம் என்னும் அளவிற்கு குதிர்போல பெரிய பானை ஒன்று. அதனுள் மலைப் பலாப்பழங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக பல பழங்கள் இருந்தன. அதில் ஒரு பழத்தை எடுத்தாள். அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கையகலத்துக்கு அறுத்து எடுக்கப்பட்டு, பின் திரும்ப மூடியிருந்த பகுதியை மெல்ல வெளியே எடுத்தாள். உள் இருக்கும் சுளைகளின் வளர்ச்சியை தெரிந்து கொள்ள அப்படி கீறி எடுத்துப் பார்ப்பது சகஜம்.

அப்படி அவள் வெளியே எடுத்த பாகம் வழியே உள்ளே கையை விட்டாள். பின்பு வெளியே எடுத்தாள். கடையில் அரைகிலோ அளவுக்கு வாங்கும் மைதா பாக்கெட் போல ஒரு பாக்கெட்...

21

'தமிழகத்தில் இன்று பல மலைக்காடுகள் உள்ளன. இதில் அதிக அளவு மலைக்காடுகள் நெல்லை மாவட்டத்திலும், அடுத்து சேலம், கோவை, வட ஆற்காடு என்று செல்கிறது. இதில், நெல்லை மாவட்டத்து மலைக்காடுகளில் தீர்த்தச் சிறப்பு மிகுதி. எந்த ஒரு மலை மேல் அருவி, தடாகம், ஏரி, ஆறு, ஊற்று என்கிற ஐ வகை அமைப்புள்ளதோ,

அந்த மலை தீர்த்தச் சிறப்பு உடையதாகும். தீர்த்தச் சிறப்பு மிகுந்த மலைவனங்களில் அந்த தீர்த்தத்தா லேயே மூலிகைகள் மலைவனம் முழுக்கவே பரவி யிருக்கும். தீர்த்த சிறப்புள்ள வனங்களில்தான் விலங்குகள் அதிகம் இருக்கும்.

இந்த விலங்குகளும், வனமானது வளமாக திகழ ஒரு காரணமாகும். விலங்குகள் அதிகம் இருக்கும் இடத்தில் பறவைகளும் அதிகம் வந்து போகும். பறவைகளால் தான் விதைகள் மலை முழுக்க பரவுகிறது. அடுத்து விலங்குகளின் சாணத்தாலும் பரவிடும்.

இப்படி ஒன்றைக் தொட்டு ஒன்று என்று சங்கிலிக் கண்ணி போல மலைவனங்களின் தாவர நலன் பேணப்படுகிறது. இதில் ஒன்று குறைந்தாலும், அந்த மலைவனம் காலப்போக்கில் அருகிவிடும்.

இன்றுள்ள மலைவனங்களில் தாணுமாலயவனம் எது என்பதில் குழப்பம் உள்ளது. அதேபோல புரா ணத்தில் வரும் தாருகாவனம், கிஷ்கிந்தாவனம், காண்டவவனம் போன்ற வனங்கள் எங்குள்ளது என்ற கேள்வி எழுகிறது. இதில் கிஷ்கிந்தை கர்நாடகாவில் ஹம்பி எனும் நகரின் அருகில் உள்ள தாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஹம்பியைதான் கிருஷ்ண தேவராயர் விஜயநகரப் பேரரசின் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். இந்நகரை ஒட்டி இப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் துங்கபத்திரை நதிதான், அன்று பம்பா நதியாக விளங்கியது. இந்த நதியின் கரையில் இருந்த வனமே கிஷ்கிந்தாவனம்.

சரி இன்று எது தாருகாவனம்? எது தாணுமாலயவனம்?

"அவன் ரேடியோ பொட்டிய
பார்த்தெல்லாம் கெரங்குனேன்னா
அவன் உன்னை கொண்டு போய்
பெரும்பட்டணத்துல வித்தே
புடுவான். அதுக்கு நம்ம
மலைக்காட்டு எட்டிக்கா
எம்புட்டோ மேலில்லையா...?"

"அவங்க 18 பேரும் ஒரு பெரிய
ஆராய்ச்சிக்காக சர்வதேச விஞ்ஞானிகள்
கழகத்துக்கிட்ட எங்களுக்கு தனியா ஒரு
காடு வேணும்னு கேட்டவங்க. அவங்க
ஆராய்ச்சிப் பொருளே காடுதான்..."

அந்த பாக்கெட்டை பார்த்த நீலியிடம் திகைப்பு.

"ஏ வங்கி... இது என்ன பலாப்பழத்துக்குள்ள வழ வழன்னு ஒரு பொட்டலம்?"

"அம்மூட்டும் போதை சமாச்சாரம்..."

"போதை சமாச்சாரமா?"

"ஆமாம்... என் மாமன்தான் இதை இங்க வெச்சிருக்குது. கொஞ்ச நேரத்துல இதை இது எடுத்துக்கிட்டு போய் லாரியிலயும், வேன்லயும் போட்டுடும்... அப்பால இது இந்த மலையை விட்டு போயிடும்..."

"உன் மாமன் ஏன் இப்படி செய்யுது? இதுக்கு பின்னால யாருடி இருக்கா?"

"அது எனக்கு தெரியாது. இந்த வீட்டுல இது மட்டு மல்ல, என்னென்னே தெரியாத சமாச்சாரம் நிறைய இருக்கு. இரு காட்டுறேன்."

வங்கி வெளியே போய் ஒரு பார்வை பார்த்து விட்டு வந்து, உள்ளே இருந்து மதுபாட்டில்களை, சிகரெட் பாக் கெட்டுகளை, செல்போன்களை, சிறிய அளவிலான போர்ட் டபிள் டிவி செட்டை என்று ஒவ்வொன்றாக காட்டினாள்.

நீலியின் முகம் அதைப் பார்த்து ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் மாறிப் போனது.

"உன் மாமன் கோட்டியாயிட்டான். இது மட்டும் நம்ம மூப்பருக்கு தெரிஞ்சா அவ்வளவு தான்..."

"நீ சொல்லிட்ட. நான் சொல்ல முடியாம கெடந்து தவிக்கிறேன். அதான் வளையக்காரன் கூட ஓட இருந்தேன்."

"அடிப்போடி அண்ட முடைச்சவளே... மொத இதை எடுத்த இடத்துல வையி... எங்கூட... அருவிப் பக்கம் வா. ஓடையில அயிரை மேயுற நேரம்! அத பிடிச்சு எடுத்துகிட்டு நாம நம்ம காட்டு போலீஸ் அய்யாவைப் பாத்து விஷயத்தை சொல்வோம். இப்ப வந்திருக்கிறவரு ரொம்ப வேகமா இருக்காரு."

நீலி அவளுக்கொரு வழியை காட்டியவளாக அந்த குடிசையை விட்டு வெளியே வந்தாள். எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு வந்த வங்கியிடம் ஒரு கனத்த மவுனம்.

"என்னடி யோசிக்கிற... பயப்படுறியா?"

"பொறவு?"

"பயந்தா நம்ம காடு நாசமா போயிடும்டி.. இது கோயிலுடி.."

"இல்ல நான் என் மாமன்கிட்ட முதல்ல பேசிப் பாக் கிறேன். போலீசுகிட்ட ல்லாம் போக வேணாம் நீலிக்கா..."

"அப்ப மூப்பரை பார்த்து அவருகிட்டயாவது சொல்லு வோம்..."

"யக்கா..." வங்கி இழுத்தாள்.

"இதோ பாருடி... இதுக்கெல்லாம் பயந்து நீ காட்டை விட்டு ஓடப் பார்த்தே, நீ இந்த வனத்து பொட்டச்சியே கிடையாது. அந்த வளையக்காரன் ஒரு அன்னாடம். பட்டணத்துல அன்னாடங்களும், பிச்சைக்காரங்களும் ஒண்ணுன்னு எங்க ஊட்டு பெருசுங்க சொல்லி கேள்விப் பட்டிருக்கேன். அவன் ரேடியோ பொட்டிய பார்த்தெல்லாம் கெரங்குனேன்னா அவன் உன்னை கொண்டு போய் பெரும் பட்டணத்துல வித்தே புடுவான். அதுக்கு நம்ம மலைக்காட்டு எட்டிக்கா எம்புட்டோ மேலில்லையா?"

"ஐயோ... இம்புட்டு இருக்கா நீலிக்கா?" என்று வங்கி வாய் பிளந்தாள்.

"நமக்கெல்லாம் நம்ம காடுதான் சரி. நம்ம சாமி கை விடாது."

"அப்படின்னு நீ சொல்ற... ஆனா இங்க மாமனை அது கை விட்ருச்சே? ரெண்டு நாள்ல அது என் கழுத்துல தாலிய வேற கட்டப் போவுதே... இது கூட சேர்ந்து எப்படிக்கா நான் வாழ முடியும்...?

"கண்ணு தண்ணிவிட்டு கலங்குறத விடு. ஆனா ஒண்ணு. இதை இப்படியே விடக் கூடாது..."

"யோசிக்க எங்க நேரம் இருக்கு... இரண்டு நாள்ல என் கழுத்துல அது தாலிய கட்டிப்பிடுமே..."

"நீ அமைதியா இரு. நான் அதை கண்காணித்து என்ன செய்யணுமோ செய்யுறேன்..."

இருவருமே பேசிக் கொண்டே அருவிக்கரை நோக்கி நடந்தனர். கையில் ஒரு மண்பானையை எடுத்துக் கொண்டனர். அருவி நீர் ஒரு இடத்தில் தேங்கி, பின் சலசலத்து ஓடும். தேங்கிய இடத்தில் அயிரைகள் நிறைய திரியும். துண்டை விரித்தே பிடிக்கலாம். ஜிலேபி கெண்டைகளும், மூக்குத்தி

கெண்டைகளும் கூட அதிகம் அகப்படும். குழம்பு வைத்து சாப்பிட்டால் ஆகாயத்தில் இருப்பதாக கருதப்படும் சொர்க்கம் அந்த குழம்புச் சட்டிக்குள் வந்து விடுமாம்!

வனஇலாகா அலுவலகம். தன் வாகனத்தில் சிவக் குமார் வந்து இறங்கவும், அங்கே காத்திருந்த திலீப்பும், ரேகாவும் எழுந்து நின்று சிரித்தனர்.

"வாப்பா... நட்ராஜ் நீங்க வந்திருக்கிற விஷயத்தை சொன்னான். அவன் இப்ப நடமாட முடியாத நிலையில இருக்கான். தெரியும் தானே?"

"தெரியும் சார்..."

"ரைட்! நீங்க குவார்ட்டர்கல போய் பாருங்க. எங்க கோவிந்தன்?"

"எங்களுக்கு டீ போட்டு கொண்டு வரேன்னு போனார்!"

திலீப் சொல்ல, கோவிந்தன் டீயோடு வர சரியாக இருந்தது.

"கோவிந்தா இவங்கள நம்ம வீட்டுக்கு கூட்டிகிட்டுபோ. ஆமா என்கொயரி டீம் எப்ப வர்றதா சொன்னாங்க?"

"சார் ஒரு அரை மணி நேரத்துல வந்துடுவாங்க சார். நம்ம ஹெட் சென்னையில இருந்து திருச்சிக்கு விமானத்துல வந்து, அங்க இருந்து கார்ல வந்துகிட்டு இருக்கார். சேலம் ஆபீஸ்ல இருந்து நாம கேட்ட டீம் வந்துகிட்டிருக்காம் சார்..."

கோவிந்தனின் விளக்கம் திலீப்பை கேள்வி கேட்க வைத்தது.

"என்ன சார்... வீரப்பனை பிடிக்க மாதேஸ்வரன் மலை காட்டுல ஒரு டீம் அலைஞ்ச மாதிரி இங்கேயும் ஒரு டீம் வருதா?"

"ஆமாம் திலீப்... எல்லாமே இங்க அப்நார்மலா இருக்கு. யெம் சர்வீஸ்ல இப்படி ஒரு மலைக்காட்டை நான் பார்த்ததே இல்ல. இங்க ஒரு கிரிமினல் கூட்டமே திரியுது..."

"யார் சார்... வானத்து மனிதர்களா?"

"ஓ... உனக்கும் அவங்களை தெரியுமா?"

"குருஜி போன் பண்ணும் போது சொன்னார் சார். நாம் க்கிற மரம், வானத்து மனுஷங்க, மலையை விட்டு கீழே இறங்கா மலைவாசிங்கன்னு எல்லாமே வித்தியாசமா இருக்கு."

"இதெல்லாம் புதுசு இல்ல. ஆனா நடக்கிற சுற்பக மரம், இந்த வானத்து மனுஷங்க, இவங்க எல்லாமே கிரிமினல் சமாச்சாரம். இதை ரெண்டுல ஒண்ணு பார்த்தே தீரணும்."

"சார்... இந்த வானத்து மனிதர்கள் பற்றி என் குரு என்கிட்ட சொன்னதுக்குப் பிறகு, நான் நெட்ல இந்த தாணு மலைய வனம் பத்தி ஏதாவது நியூஸ் கிடைக்குமான்னு தேடிப் பார்த்தேன். உங்க டிபார்ட்மெண்ட்டோட சர்வே ரூட் மெ...ய்ல்ஸ் கிடைச்சது. அப்புறம் பொட்டானிக்கல் ரூட் மெ ய்ல்ஸ் நிறைய கிடைச்சது. அதேபோல, அந்த விருட்ச மரம், அதன் இலை பத்தியும் கூட செய்தி இருந்தது. இன்சாட் பிக்சர் வியூவையும் பார்க்க முடிஞ்சது. கூடவே இந்த மலை மேல 1983ம் வருஷம் ஒரு விமானம் விழுந்து விபத்து ஏற்ப...துங்கிற தகவலும் கிடைச்சது சார்."

"அந்த விஷயம் எனக்கும் தெரியுமே..."

"அந்த விபத்துல பிளைட்ல டிராவல் பண்ணினவங்க மொத்த 18 பேர் சார். அவ்வளவு பேரும் இந்த உலகத்தோட விஞ்ஞானிகள். அதாவது அமெரிக்கா, சீனா, ஆப்பிரிக்கா, ஜப்பான்னு எல்லா நாட்டு விஞ்ஞானிகளும்தான் அதுல டிராவல் பண்ணினவங்க."

"அதுவும் எனக்கு தெரியுமே திலீப்..."

"அவங்க என்ன ஆனாங்கன்னு தெரியுமா சார்...?"

"இது என்ன கேள்வி திலீப்... அவங்க அந்த விபத்துல எரிஞ்சு சாம்பலாகியிருப்பாங்கன்னு சொல்லத்தான் வேணுமா?"

"இல்ல சார்... அதுலயும் 18 பேர்... இந்த வானத்து மனுஷங்களும் 18 பேர்... ஒரு வேளை அபூர்வமா தப்பி இருக்கலாம் இல்லையா?"

திலீப் கேட்ட கேள்வி, சிவக்குமாரை முதன் முறையாக சற்று யோசிக்க வைத்தது. அதே வேகத்தில், "நீ என்ன சொல்ல வர்ற... அப்படி தப்பிச்சவங்கதான் இந்த வானத்து மனுஷங்கன்னு சொல்ல வர்றியா?"

"ஏன் சார் இருக்கக் கூடாது?"

"முட்டாள் மாதிரி பேசாதே... உன் யூகப்படி அவங்க தப்பிச்சதாவே இருக்கட்டும். விபத்து நடந்தது 1983ல. இப்ப நடக்கிறது 2013. இடையில 30 வருஷங்கள் ஓடிப்போச்சு. இந்த முப்பது வருஷங்கள் அவங்க அவங்களோட நாட்டுக்கு போகாம இந்த மலைக்காட்டுல வசிக்கிறாங்களாக்கும்... இது உனக்கே ஒரு முட்டாள்தனமான எண்ணமா தோணல?"

"சார்... அந்த 1983ல இருந்துதான் வானத்து மனிதர்கள் பற்றிய சர்ச்சை ஏற்பட்டிருக்கு. விமானத்துல இருந்து விழுந்த வங்கிறதால, மலைஜனங்கள் வானத்து மனுஷங்கன்னு அவங்களை கூப்பிட்டிருக்க நிறைய சான்ஸ் இருக்கு. அவங்க 18 பேரும் ஒரு பெரிய ஆராய்ச்சிக்காக சர்வதேச விஞ்ஞானிகள் கழகத்துக்கிட்ட எங்களுக்கு தனியா ஒரு காடு வேணும்னு கேட்டவங்க. அவங்க ஆராய்ச்சிப் பொருளே காடுதான். அப்படிப்பட்டவங்க தாணுமாலய வனத்தை விட்டுட்டப்படி போவாங்க...? யோசிச்சுப் பாருங்க...ஞ்

சளைக்காமல் திலீப் சொன்ன பதில் இம்முறை சிவக்குமாரை நிறையவே யோசிக்க வைத்தது.

"சரி திலீப், நீ போய் ரெஸ்ட் எடு. இன்னிக்கு ராத்திரி நாம நிறைய பேச வேண்டியிருக்கு. அப்ப மேற்கொண்ட பேசலாம்" என்றார்.

கோவிந்தனும் முதன் முறையாக திலீப்பை ஆச்சரிய பார்வையோடு பார்த்தான்.

அதுவரை அமைதியாக உடன் இருந்த ரேகா, "திலீ... நெட்டுல பெருசா அலசு அலசியிருக்க..." என்றாள்.

"ரேகா- நான் இன்னும் நிறைய விஷயங்களை சொல்லல. அதைச் சொன்னா இன்னும் ஆச்சரியமா இருக்கும்" என்ற படியே கோவிந்தனுடன் அவர்கள் நடந்தனர்.

22

'எது தாருகா வனம்? எது தாணுமாலய வனம்' எனும் கேள்விக்கு ஆய்வாளர்கள் தான் விடை கண்டாக வேண்டும். இவைகளெல்லாம் புராண கதைகளில் காணப்படுவதால், அவை எல்லாம் பொய்யாக இருக்கவும் வாய்ப்பு அதிகம் எனும் கருத்தும் பலரிடம் இருக்கிறது.

அதற்கேற்பவே தாணுமாலய வனசரிதமும் இன்று எவரிடமும் இல்லாமல், அது ஒரு செவி வழி விஷய மாக ஆகிவிட்டது.

ஆயினும், இந்த வனங்கள் பொய்யில்லை... நம் நாட்டு இதிகாச புராணங்களும் பொய்யில்லை என்று உறுதிபட கூறுகின்றவர்கள் இருக்கின்றனர்.

சமீபத்தில் ஒரு குழுவினர், ராமாயணத்தை பெரிதும் போற்றி அதை ஒரு உபன்யாசமாகவே நிகழ்த்தி வரும் ஒருவரின் தலைமையில்

ராமாயணம் நிஜமாகவே நடந்த ஒரு வரலாறு என்று கண்டறிந்துள்ளனர்.

ராமன் தலைநகராக கொண்டு ஆட்சி செய்த அயோத்தி வடக்கே உள்ளது. அவன் சீதையை மீட்கச் சென்ற இலங்கையோ தெற்கில் தமிழ் நாட்டை அடுத்து கடலுக்கு அப்பால் உள்ளது. இடையில் பல நாடுகளும், அதில் பல காடுகளும் குறுக்கிடுகின்றன. அந்த காடுகள் வழியாகத்தான் ராமனும் ராமேஸ்வரம் வரை வந்திருக்கிறான். அந்த வழித்தடங்கள் மிகச் சரியாக உள்ளன.

அக்குழுவினரும் அந்த வழித்தடங்களின் வழியாக அயோத்தி வரை சென்றனர். இதனால் கிஷ்கிந்தை இருப்பதும், நெல்லைக்கு அருகே மகேந்திரகிரி எனும் மலைவனம் இருப்பதும் காலம் காலமான உண்மைகளே என்பது தெரியவந்தது.

அதுபோலவேதான் தாணுமாலய வனத்தையும் கண்டறிய வேண்டும். அது இன்றைய கொல்லி மலையாகத்தான் இருக்க வேண்டும் என்பதுதான் சிலர் எண்ணம்.

எப்படி?

"அந்த வானத்து மனுஷங்களை
பிடிச்சா, மூக்காலே மூணு வீசம்
குழப்பம் தெளிவாயிடும்.
அப்புறம் எல்லாமே
தங்கத்துக்காகத்தான்னும்
தெரிஞ்சிடும்..."

திடீரென்று ஒரு அலறல் சத்தம் கேட்டது.

அந்த அலறல் சத்தம் கேட்டு கோவிந்தனும் திலீப்பும் திகைப்போடு நாலாபுறமும் பார்த்தனர். ரேகா திலீப்பை

பிருங்கிக் கட்டிக் கொண்டாள். கோவிந்தன் தோராயமாக சப்தம் வந்த திக்கை கணித்து, அந்தப்பக்கமாய் ஓடினான். அதே வேளையில் அந்த சப்தம் அப்படியே அடங்கி விட்டிருந்தது.

திலீப்பும் ரேகாவும் கோவிந்தனை பின் தொடர்ந்தனர். கோவிந்தன் ஒரு இடத்தில் விறுவிறுவென்று மரம் ஒன்றின் மேல் ஏறத் தொடங்கினான். மேலே ஏறி நாலாபுறமும் பார்க்கும்போது, யாராக இருந்தாலும் கண்ணில் பட்டே தீர வேண்டும். ஆனால், அப்படி யாரையும் பார்க்க முடியவில்லை. யார் கத்தியது என்றும் உணர முடியவில்லை. கோவிந்தன் சில நிமிடம் வரை நோட்டமிட்டுவிட்டு, பிறகு தான் இறங்கினான்.

"என்ன மிஸ்டர் கோவிந்தன்... யார்னு தெரிஞ்சுதா?"

"இல்ல தம்பி. யாரையும் காணோம். ஒரே விசித்திரமா இருக்கு..."

"அது ஒரு பெண்ணோட குரல்..."

"நோ... நோ... இரண்டு பெண்களோட குரல்..."

ரேகா திலீப் சொன்னதை மறுத்து, இரண்டு பெண்கள் என்றது கோவிந்தனை சிந்திக்க வைத்தது.

"சரி வாங்க... நடந்துகிட்டே பேசுவோம். ஒரு வாரமாகவே இந்த காடு காடா இல்ல. எல்லாமே தப்பா நடக்குது."

"அப்ப அதுக்கு முந்தி உங்க வரைல எந்த பிரச்னையும் இல்லையா?"

"இருந்திருந்தா காளிமுத்து சார் மாதிரியே நானும்ல டிரான்ஸ்பர் வாங்கிக்கிட்டு போயிருப்பேன்..."

"ஆச்சரியமா இருக்கே... நீங்க இங்க எவ்வளவு வருஷமா இருக்கீங்க?"

"ஏழு வருஷமாச்சு தம்பி... நிம்மதியா இருந்தேன். நிஜமா சொல்றேன். இந்த காட்டை நானும் கடவுளாத்தான் நினைச்சேன். ஒரு காய்ச்சல், குளிர்னு படுத்தது கிடையாது. ஒரு நாள் இல்ல ஒரு நாள், நம்ப கண்ணையும் கற்பகமரம் படும். அப்ப அதுகிட்ட... பெருசா ஒரு வரத்தை வாங்கி லைப்லயும் செட்டில் ஆயிடணும்ங்கிறது தான் என் எண்ணம்."

"மை காட்... கற்பக மரக் கிறுக்கு உங்களுக்கும் இருக்கா?'

"இப்ப நீங்க சொல்றத நான் கேட்டுக்கத்தான் வேணும். ஏழு வருஷமா நான் ஒரு இளிச்சவாயனா இருந்த மாதிரிதான் என் மனசுக்கும் தோணுது..."

"நல்லவேளை இப்பவாச்சும் உங்களுக்கு நீங்க எப்படி பட்டவர்னு தெரிஞ்சுதே..."

திலீப் சொன்னவிதம் கோவிந்தனை வருத்தப்பட செய்தாலும், வேறு வழி தெரியவில்லை. குவார்ட்டர்சும் வந்தது. ரேகா, திலீப்பை பார்த்த வள்ளியம்மையிடம் ஒரு புது உற்சாகம்.

"அப்பாடா... ரேகா எனக்கு ஒரு நல்ல துணையா சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தே..." என்று அவளை கட்டி அணைத்துக் கொண்டாள். திலீப் நட்ராஜிடம் ஆதரவாக பேசினான். கால் கட்டையும் பார்த்தான்.

"என்ன குரு... இப்படி படுத்துட்டீங்களே... இந்த காட்டுல உங்களோட சேர்ந்து நிறைய சாதிக்கப்போறதா நினைச்சுகிட்டிருந்தேன்..."

"இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போயிடல. அந்த எல்லப்பன் வந்தா, ஒரு வாரம் பத்துநாள்ல நடக்க முடியுமாமே... அது எப்படின்னு பார்த்துடுவோம்..."

"பை தை... கோவிந்தனோட நானும் போறேன். இந்த காட்டையும் பார்த்த மாதிரி இருக்கும்..."

"அப்படியே செய்... என் இடத்துல நீ இருக்கிறதா நினைச்சுக்கோ. கேமராவை கையில எடுத்துக்கோ. வித்தி யாசமா எதை பார்த்தா லும் ஷூட் பண்ணத் தவறிடாதே..."

நட்ராஜ் அனுமதி தர, திலீப்பும் கோவிந்தனும் புறப் பட்டனர். திலீப் தான் வந்த வாகனத்தையே எடுத்துக் கொண்டான். கோவிந்தனும் ஏறிக் கொள்ள, அந்த காரும் அந்த மலைவனச் சாலையில் ஓடத் தொடங்கியது.

வன இலாகா அலுவலகம்...

புழுதி பறக்க வந்து நின்றது தலைமை அதிகாரியின் அரசாங்க வாகனம். முன்புறம் தமிழக வனத்துறை என்கிற பட்டயம். காரின் கூரையில் சிகப்பு நிற சைரன்! பின்னா லேயே சேலம் மாவட்ட ஏ.எஸ்.பியுடன், கீழே மலைச் சரகத்தில் அமைந்திருக்கும் கிராமத்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் வந்திருந்தார். இவர்களோடு உபரியாக கிரைம் பிராஞ்ச் பிரிவை சேர்ந்த சில போலீஸ்காரர்கள் சாதாரண உடையில் வந்திருந்தனர். அவ்வளவு பேரையும் சிவக்குமார் வரவேற்றார்.

வட்டமாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. கோவிந்தன் தண்ணீர் பாட்டில்களை நடு நாயகமாக ஒரு மேஜை மேல் வைத்திருந்தான். எல்லாரும் அமர்ந்து கொள்ள, அவர்களுக்கிடையே உரையாடல் தொடங்கியது. சிவக் குமார் தான் வந்து பொறுப்பேற்று கொண்டது முதல் காளிமுத்துவை பிணமாக பார்த்தது வரை அவ்வளவையும் சொல்லி முடித்தார். பின் அந்த பிணம் காணாமல் போய் விட்டதையும் கூறவும், எல்லாரிடமும் நெற்றியில் நமைச்சல்.

வனஇலாகாவின் தலைமை அதிகாரி ஏ.எஸ்.பியை பார்த்தார். அவர் எஸ்ஐயை பார்த்தார்.

"உங்க பார்வைக்கு எனக்கு அர்த்தம் புரியுது சார். கீழ அடிவாரத்துல இதுவரை இந்த மலை சம்பந்தமா தப்பா எந்த ஒரு விஷயமும் நடந்ததில்ல. ஒரு கேஸ் கூட பதிவானதில்ல.

கற்பகமரம் நடமாட்டம் இருக்குங்கிறதால, அதை பார்க்க அப்பப்ப எங்கிருந்தெல்லாமோ வருவாங்க. ஆனா அவங்களால எந்த பிரச்னையும் ஏற்பட்டதில்ல..."

"இந்த கற்பகமர நடமாட்டம் உண்மையா பொய்யான்னு நீங்க உங்களுக்குள்ள கேட்டுகிட்டதில்லையா சார்...?"

"எப்படி சார் கேட்டுக்காம இருக்க முடியும். இந்த வினாடி வரை அந்த மித் என் வரைல ஒரு புதிராத்தான் சார் இருக்கு..."

"ஓ... நீங்க அதை ஒரு மித்துன்னு சொல்றீங்களா?'

"வேற எப்படி சார் சொல்றது..."

"ரைட்... மிஸ்டர் சிவக்குமார்... பைனலா உங்க முடிவு என்ன?"

"ஒரே முடிவுதான் சார்... அந்த வானத்து மனுஷங்களை பிடிச்சா, முக்காலே மூணு வீசம் குழப்பம் தெளிவாயிடும். அப்புறம் எல்லாமே தங்கத்துக்காகத்தான்னும் தெரிஞ்சிடும்."

"தங்கம்னு நீங்க உறுதியா நம்புறீங்களா?"

"காளிமுத்து சார் புதைக்கப்பட்டிருந்த இடத்துல கிடைச்ச தகவல்தான் தெளிவா சொல்லிடுச்சே?"

"இந்த மலையில தங்கம் இருக்க வாய்ப்பிருக்கா?"

"பூகோள ரீதியா எங்கே வேணா எது வேணா இருக்கலாம். பர்ட்டிகுலரா சேலம் மாவட்டம் கனிமவளத்துக்கு பேர் போன மாவட்டம். ஒரு பக்கம் இரும்புத் தாதுக்கள் நிரம்பியிருக்கிற கஞ்ச மலை, இன்னொரு பக்கம் மேக்னசைட் நிரம்பியிருக்கிற பள்ளத்தாக்கு பகுதி... இப்படி இரும்பு, மேக்னசைட்டுன்னு இரண்டு விஷயங்கள் இருக்கும் போது தங்கம் இருக்கக் கூடாதா என்ன?"

"சரி... தங்கம் இருக்கிறதாவே நாமளும் நம்புவோம். ஒரு ...ய் ...லியனை நான் விட்டுட்டு போறேன். அவங்களோட ...ந்து அந்த வானத்து மனுஷங்களை அரெஸ்ட் பண்ற ...ழிய பாருங்க. அப்படியே காணாம போன காளிமுத்து சார் ... ...ம்பையும் மீட்க முடியுமான்னு பாருங்க... பாவம் அவர் ...னைவி. அவர் நம்ப டிபார்ட்மெண்ட்டுல டியூட்டியில இருக்கிறதா இந்த நிமிஷம் வரை நினைச்சுகிட்டிருக்காங்க. அவர் இறந்துட்டார்னு எப்படி அவங்ககிட்ட சொல்றதுன்னு தான் எனக்கு தெரியல..."

"சார்... அதை எப்ப இருந்தாலும் சொல்லித்தானே தீரணும்?"

"சொல்லித்தான் தீரணும். ஆனா நீங்க சொன்னது ...ட்டும் போதாதே. நீங்க யாரையாவது பார்த்துட்டு தவறான முடிவுக்கு கூட வந்துருக்கலாம் இல்லையா?'

"நோ சார்... நான் ஒரு சின்சியர் ஆபீசர். காளிமுத்து உடம்பை நல்லா பார்த்துட்டுதான் சொல்றேன். இன்பாக்ட் கோவிந்தனும் அதை பார்த்ததுல இருந்து ரொம்பவே மாறிட்டான்..."

"கோவிந்தன் கிட்ட நானும் போன்ல பேசினேன். நீங்க சொன்ன மாதிரிதான் சொன்னான். ஆனாலும், புதைச்ச உடம்பை கடத்தி என்ன பண்ணப் போறாங்க...? புரியலையே..."

"நான் பார்த்துட்டேன்னு தெரிஞ்சு கடத்திட்டாங்க சார். அப்படி இல்லைன்னா, இந்த மீட்டிங்ல நீங்க தீர்மானமா இந்த காட்டுல கிரிமினல்ஸ் இருக்கிற முடிவுக்கு வந்துருப்பீங்க தானே?"

"அதுவும் சரிதான்... எதுவா இருந்தாலும் நாம நம்ம கடமையை சின்சியரா செய்துதான் தீரணும். நீங்க உங்க கடமையை செய்யுங்க. உங்களுக்கு எல்லாருடைய ஆதரவும் உண்டு. அவசியம் ஏற்பட்டா நான் மந்திரிகிட்ட கூட பேசுறேன்."

"தேங்க்யூ சார். இந்த வனத்துக்கு வெளிய போலீஸ் டிபார்ட்மெண்ட் கோ ஆபரேட் பண்ணுனா போதும் எனக்கு..."

"நோ பிராப்ளம் மிஸ்டர் சிவக்குமார். நாங்க இனி இந்த மலையில இருந்து வர்ற எல்லாரையும் சந்தேகக் கண்ணோட தான் பார்ப்போம். வெளிய நாங்க பார்த்துக்கிறோம். உள்ளே நீங்க பார்த்துக்கோங்க..."

"தேங்க்யூ ஏஎஸ்பி சார். பை த பை, இந்த வனத்துக்கு நடுவுல சரியான மையத்துல ஒரு செல்போன் டவரை நிறுவ ணும் சார். அது எனக்கு இப்ப ரொம்ப முக்கியம்..."

"நான் அதுக்கு எல்லா ஏற்பாட்டையும் செய்யுறேன். நம்ம டிபார்ட்மெண்ட் சார்பாவே டவர் போட நான் மந்திரி கிட்ட சேங்ஷன் வாங்குறேன். டீம்ல எல்லாரும் எப்பவும் லிங்கோட இருந்தாலே போதும், பாதி வேலை முடிஞ்சிடும்."

வனஇலாகாவின் உயரதிகாரி சிவக்குமாரின் அவ்வளவு தேவைகளுக்கும் ஓகே சொன்னார். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் நடந்த அந்த கூட்டமும் ஒரு முடிவுக்கு வந்து அவர்களும் புறப்பட்டனர்.

தாணுமாலய வன தென்கரை நாடு...

'புலி உறுமுது... புலி உறுமுது... வேட்டைக்காரன் வரவைப் பார்த்து...' என்கிற பாடல் ஒலிக்க, ஒரு வேனில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான் நாடிமுத்து.

எதிரிலேயே காரில் திலீப்பும், கோவிந்தனும் வந்து இறங்கினர். கோவிந்தனைப் பார்த்த நாடி முத்து முகத்தில் சலனம்.

ஆடு திருடியவன் போல ஒரு நெளிசல்.

"வாரே வா... உனக்கு தைரியம்தான்!" என்றான் கோவிந்தன்.

"கோவிந்தா... இது யாரு புதுசா?" நாடிமுத்து பாட்டை அலையத்தபடி சமாளிக்க பார்த்தான்.

அப்போது இருசனும் நீலியை தேடிக் கொண்டே வந்தவனாக அவர்கள் முன் வந்து நின்றான்.

"அடடே இருசனா?"

"ஆமாம் கோவிந்தண்ணே... எம் பொஞ்சாதி நீலியை பாத்தீங்களா?"

"இல்லையேப்பா..."

"எங்க போனான்னே தெரியல. அவளையும் காணோம், இந்த வங்கிப் பொண்ணையும் காணோம்..."

இருசன் சொல்லவும், நாடிமுத்துவுக்கு காலில் முள் குறியது போல இருந்தது.

23

இன்றைய கொல்லிமலை, கொள்ளிப்பாவை என்னும் மந்திரத்தில் பாவை ஒருத்தியால் கொல்லி மலை என்று பெயர் பெற்றதாக கூறுவார்கள். இந்த கொல்லிப் பாவை என்பது ஒரு அழகிய பெண் சிலை. இதை காண்பவர்கள் மயங்கி, இதன் அருகே சென்று இதை தீண்டும் போது, இந்தப் பாவைச் சிலை தீண்டியவனை வாளால் வெட்டிக் கொல்லு மாம். அப்படி அதை சித்தர்கள் வடிவமைத்து வைத் திருந்தார்கள். சித்த புருஷர்களின் தவத்துக்கு இடையூறு செய்ய வருகிறவர்களைத்தான் இந்த கொல்லிப்பாவை கொல்லுவாள் என்பதும் அன்று நிலவிய நம்பிக்கை.

இந்த கொல்லிமலையில்தான் அறப்பளீஸ்சுவரர் எனும் பெயரில் அந்த ஆதிசிவனுக்கும் கோயில் உள்ளது. கொல்லிமலையை முந்திக் கொண்டு நிற்கும் ஒரு மலைதான் சேர்வராயன் மலைவரிசை. இதில்தான் ஏற்காடு உள்ளது. இந்த சேர்வராயன் மலை உச்சியில், ஒரு குகைக்குள் மகாவிஷ்ணு வுக்கு கோயில் உள்ளது. இந்த இரு மலைகளுக்கும் இடையில் அய்யன் மலை என்று ஒரு மலை இருந் தது. அங்கே பிரம்மமுனி எனும் சித்தர் வாழ்ந்து தவம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இந்த பிரம்ம முனி தவம் செய்த இடத்தில் ஒரு ஜீவ சமாதி அமைந்து, அது காலத்தால் எவரும் வந்து செல்ல முடியாத ஒரு இடமாக ஆகிவிட்டது என்றும் சிலர் கூறுவார். மொத்தத்தில் மும்மூர்த்திகளின் பெய ரால் கோயில் அமைந்திருக்கும் இந்த மலைகளே தாணுமாலய வனமாக இருக்க வேண்டும் என்பது சிலர் கருத்து. அதற்கேற்ப கொல்லிமலைப் பகுதி யில்தான் கிராமங்களை நாடுகளாக கருதி அழைக்கும் தன்மையும் உள்ளது.

"பச்சிலைக் கரைசலை குடித்தவர்கள்
அங்கேயே அரைமணி நேரம் வரை
இருக்க வேண்டும். இடையில் வாந்தி
எடுத்துவிட்டால் திரும்ப பச்சிலை
கரைசலை குடிக்க வேண்டும். வாந்தி
வராவிட்டால் அந்தப் பச்சிலை
உடம்பில் கலந்து விட்டதாக
பொருள்..."

"ஆலயக்குடி மக்கள் போட்டோ படமே
புடிச்சுக்க மாட்டோம். போட்டோ புடிச்சா
தான் ரேஷன் அட்டை தருவோம்னு

அரசாங்கத்துல சொன்னப்போ, எங்களுக்கு
அந்த அட்டையே வேண்டாம்னு
சொன்னவங்க நாங்க.

நாடிமுத்துவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை இருசன் கவனித்தான். கோவிந்தனும் கவனித்தான்.

"என்ன இருசா சொல்ற... உன் பொஞ்சாதியோட வங்கி பொண்ணையும் காணலியா?"

"காணாமதானே கோவிந்தண்ணனை தேடிகிட்டு வந்திருக்கேன்..."

"காணாம போக அவங்க ரெண்டு பேரும் என்ன சின்ன புள்ளைங்களா?"

"அது எனக்கும் தெரியும்... ஆனா எங்க போயிருக்காங்கன்னு தெரியலியே..."

"பொறுமையா தேடிப்பாருப்பா... ஒருவேளை காட்டுக்கு வெளிய வியாபாரத்துக்கு ஊர் எல்லைக்கு போயிருக்கலாம் இல்லையா?"

"போயிருக்கலாம்தான்... நேத்து பலாமுசு நிறைய கிடைச்சிச்சு. பட்டணத்தவங்களுக்கும் பலாமுசுன்னா ரொம்ப இஷ்டம். அதனால கொண்டுகிட்டு போயிருக்கலாம். ஆனா என்கிட்ட சொல்லாம காட்டை விட்டு நீலி போகவே மாட்டா கோவிந்தண்ணே..."

"நீ வருத்தப்படாதே... பொறுமையா இரு, வந்துடுவா. அப்புறமா நான் எதுக்கு வந்தேன்னு சொல்லலியே..."

"எதுக்குண்ணே?"

"நீ கூட்டிகிட்டு வந்த வைத்தியரை திரும்ப கூட்டிகிட்டு போகத்தான்..."

"ஆபீசர்தான் டாக்டர்கிட்ட நாங்க பாத்துக்கிறோம்னு சொன்னாரே?"

"அந்த டாக்டரே நம்ம வைத்தியன்தான் டாப்புன்னு சொல்லவும் திரும்பிட்டாரு. ஆமா, எல்லப்பன் இங்க எங்க இருக்கான்?"

"அவன் குடிசையிலதான் இருப்பான்.... வரும்போது எண்ணை காய்ச்சிகிட்டிருந்தான். வாடை வந்துச்சு."

"சரி நான் போய் பாத்து கூட்டிகிட்டு போறேன். நீ போய் உன் வேலைய பார்..." என்ற கோவிந்தனிடம் இருந்து இருசனும் விலகத் தொடங்கினான். விலகும் முன் நாடி முத்துவை திரும்ப ஒரு பார்வை! அந்த பார்வையே சரி இல்லை. அது நாடிமுத்துவுக்கும் தெரிந்தது. இருசன் விலகவும், கோவிந்தனும் நாடி முத்துவை ஒரு மாதிரிதான் பார்த்தான்.

"கோவிந்தா... இப்படி பாக்காதே... எனக்கு ஒரு மாதிரி இருக்குது..."

"ஏன் இருக்காது.. இப்ப நீ மட்டும் வராம இருந்திருந்தா, நீதான் வங்கியை இழுத்துகிட்டு ஓடிட்டேன்னு நான் நினைச்சிருப்பேன்..."

"அப்படி ஓடிப்போயிருந்தா தைரியமா இந்த காட்டுக்கு நான் திரும்ப வருவேனா?'

"உனக்குதான் கற்பக மரக்கிறுக்கு பிடிச்சிருக்கே... நீ வரத்தானே செய்வே?"

"என்ன கோவிந்தா நீ கற்பகமரக்கிறுக்குன்னு அதை எல்லாம் நம்ப மாதவனாட்டம் பேசுற?"

"இப்ப சொல்றேண்டா... நல்லா கேட்டுக்க. எல்லாமே பித்தலாட்டம். இந்த காட்டுல ஒரு பெரிய சதி வேலையே நடந்துகிட்டு இருக்குது..."

"நெசமாவா?"

"என்ன நெசமாவா? பெரிய பெரிய போலீஸ் ஆபீச ருங்க எல்லாம் வந்து வன இலாகா கட்டடத்துல கூட்டம் நடத்துகிட்டிருக்கு. இனி இந்த காடே தலைகீழா மாறப் போகுது. புதுசா ஒரு பய உள்ள நுழைய முடியாது. நுழைஞ் சாலும் அவ்வளவுதான். நீயும் வந்து ஆபீசர் அய்யாவைப் பாரு. காட்டுக்குள்ள வியாபாரம் பண்ணணும்னா அவர் சம்மதம் தரணும். இல்ல சந்தேக கேஸ்ல புடிச்சு உள்ள வெச்சிடுவோம்."

கோவிந்தன் அதிகார தோரணையோடு பேசியது நாடி முத்துவை கலவரப்படுத்தியது. மிரள மிரள பார்த்தான்.

"என்ன பார்க்கிறே... போய் பொழப்பை கவனி. வங்கியை பாத்தா அவன உன்னை அறையாம விடமாட்டா. நல்லவேளை அவளை நான் பாத்தேன். இல்லேன்னா இப்ப போன இருசன் அவளையும், அவன் பொண்டாட்டியையும் தேடாம உன்னை தேடி கிளம்பியிருப்பான். நீ தப்பிச்ச..."

கோவிந்தன் நாடிமுத்துவை மிரட்டாமல் மிரட்டி விட்டு வைத்தியன் குடிசையை நோக்கி நடந்தான். கூடவே இருந்த திலீப் மனதுக்குள் இப்போது ஏராளமான கேள்விகள்.

"என்ன கோவிந்தன் சார்... இந்த நாடிமுத்து பின்னால கூட ஏதோ மர்மமா விஷயம் இருக்கும் போல இருக்கே?" என்று ஆரம்பித்தான்.

"மர்மம் எல்லாம் ஒண்ணும் இல்ல தம்பி.... இவனை அந்த வங்கிங்கிற பொண்ணு காதலிச்சா. இவனோட சேர்ந்து ஊரை விட்டே ஓடவும் தீர்மானிச்சா. ஆனா, இவன்தான் பின் வாங்கிட்டான்..."

"ரொம்ப ஆச்சரியமா இருக்கே. இங்க காதலுக்கு கூட இடமிருக்கா?"

"இல்லாமதான் வங்கி காதலிச்சாலாக்கும். ஆனா இந்த காதல் இந்த மலைக்குடிகளுக்கு தெரியாது. தெரிய வந்தா அவ்வளவுதான்..."

"ஓ... சாதிக் கட்டுப்பாடுகள் உண்டா?"

"ரொம்பவே உண்டு... வழியில ஜாதி தலைவர் மூப்பரை சந்திக்க முடிஞ்சா நீங்களே புரிஞ்சுக்குவீங்க."

"சாதித் தலைவர் பேர் மூப்பரா?"

"ஆமாம்... நூறு வயதை தொட்டுட்டார். ஆனா பாத்தா தெரியாது..."

"இயற்கையோட கலந்து வாழும் போது ஆயுள் அதிகரிக்கிறது சகஜம்தானே?"

பேசிக் கொண்ட வைத்தியனின் குடிசைப் பக்கம் வந்த போது, வைத்தியன் தைலம் காய்ச்சும் வாசம் மூக்கைத் துளைத்தது. அதற்குத் தோதாக குடிசையைச் சுற்றி லேசான புகை மண்டலம். குடிசைக்கு முன்னால் மரக்கட்டில்கள். அதில் சிலர் வைத்தியனிடம் வைத்தியம் செய்து கொள்ள வந்து அமர்ந்திருந்தனர். அதில் பலருக்கு மஞ்சள் காமாலை. மஞ்சள்காமாலைக்கு ஒரு பச்சிலைக் கரைசலை ஒரு மூச்சில் தந்து குடிக்கச் சொல்ல பலரும் குடித்துவிட்டு அமர்ந்திருந்தனர். அப்படி பச்சிலைக் கரைசலை குடித்தவர்கள். அங்கேயே அரைமணி நேரம் வரை இருக்க வேண்டும். இடையில் வாந்தி எடுத்துவிட்டால் திரும்ப பச்சிலை கரைசலை குடிக்க வேண்டும். வாந்தி வராவிட்டால் அந்தப் பச்சிலை உடம்பில் கலந்து விட்டதாக பொருள். அதன்பின் அவர்கள் காமாலையை நினைத்து எந்த கவலையும் கொள்ளத் தேவையில்லை.

வைத்தியனின் குடிசைக்கு பின்னால் ஒரு கல்சட்டியில் தான் தைலம் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த தைலம் மேல் பூச்சுக்கு.

கோவிந்தனும் திலீப்பும் வரவும் எல்லாரும் ஏறிட்டனர். எல்லப்பனும் ஒருவருக்கு சிகிச்சை அளித்தபடியே ஏறிட்டான்.

"அடடே அய்யாங்களா?"

"நானேதான்... உன்னை பார்க்கத்தான் வந்திருக்கேன். புறப்படு..."

"எங்கங்க?"

"எல்லாம் ஆபீசரய்யாதம்பிக்கு வைத்தியம் பண்ணத்தான். கைல எதெல்லாம் எடுத்துக்கணுமோ அதை எல்லாம் எடுத்துக்கோ..."

"டவுன்ல டாக்டரை பாத்துக்கிறேன்னாரே?"

"அப்ப அப்படி சொன்னார். இப்ப நீ பாத்தாலே போதும்னு நினைக்கிறாரு. கையோட கூட்டிக்கிட்டு வரச் சொன்னார்..."

கோவிந்தன் பேசும் போது திலீப் கேமராவை எடுத்து அந்த சூழலை படம் பிடிக்கத் தொடங்கிவிட்டான். அது எல்லப்பனை சற்று சலனப்படுத்தியது.

"தம்பி... கொஞ்சம் படம் பிடிக்கிறதை நிறுத்துறீங்களா?" என்றான் கடுமையான குரலில். திலீப்பும் சிரித்தபடியே, "ஏன் இதை ஷூட் பண்ணக் கூடாதா?" என்று கேட்டான்.

"ஆலயக்குடி மக்கள் போட்டோ படமே புடிச்சுக்க மாட்டோம். போட்டோ புடிச்சா தான் ரேஷன் அட்டை தருவோம்னு அரசாங்கத்துல சொன்னப்போ, எங்களுக்கு அந்த அட்டையே வேண்டாம்னு சொன்னவங்க நாங்க... இது தெரியாம இங்க நடக்கிறத படமா புடிக்கப் பார்க்கிறீங்களே?"

"படம் பிடிச்சு இன்டர்நெட்ல போட்டா உலக நாடுகள்ல இருந்தெல்லாம் உங்கள பார்க்க வருவாங்க. உங்களுக்கும் வருமானம் குவியுமே..." திலீப் சொன்ன பதில் எல்லப்பனுக்கு கோபத்தைத் தான் தந்தது.

"நான் காமாலை வைத்தியத்துக்கு காலணா வாங்குறது கிடையாது. எலும்பு முறிவுக்கு கூட காசா வாங்குறதில்ல. துணிமணி, அரிசி, பருப்புன்னு வாங்கி அதையும் எங்க இனத்து பெரியவங்களுக்குதான் கொடுக்குறேன். நான் வியாபாரி இல்ல தம்பி. புரிஞ்சுக்குங்க..." என்றான்.

எல்லப்பன் சொன்ன பதிலுக்குள் அவன் ஒரு சேவக னாகவும் தெரிந்தான். பிழைக்கத் தெரியாத முட்டாளாகவும் தெரிந்தான்.

"சரி எல்லப்பா... பேசிக்கிட்டிருந்தா நேரம்தான் போகும். புறப்படு... அங்க சின்னவர் வலியால துடிச்சிட்டு இருக்கார்..." என்றான் கோவிந்தன்.

"நீங்க போங்க... நான் பின்னால வரேன். இங்க இவங் களை எல்லாம் விட்டுட்டு வர முடியாது..."

"எல்லப்பா... வேணும்னா ஒரு பத்து நிமிஷம் காத்திருக் கேன். இவங்களை கவனிச்சு அனுப்பிட்டு, என் கூட வண்டியில வா. சீக்கிரம் போகலாம்..."

கோவிந்தன் எல்லப்பனை விடுவதாக இல்லை. எல்லப்பனும் அவர்களை எல்லாம் வேகமாக கவனிக்கத் தொடங்கினான். அப்போது திபுதிபுவென்று ஒரு நான்குபேர் ஓட்டமாய் அங்கு வந்து நின்றனர். அவர்களில் ஒருவன் எல்லப்பனை பார்த்து, "எல்லப்பா... வேகமா புறப்படு... நம்ம பிரம்மன் பேயடிப் பள்ளத்துல விழுந்துட்டான். அவனை தூக்கி அங்கேயே வைத்தியம் பாக்கணும். அவனால நிக்கக் கூட முடியலியாம். புறப்படு..." என்றனர்.

"பேயடிப்பள்ளம் பக்கம் எதுக்குப்பா போனீங்க?" என்ற எல்லப்பனின் கேள்விக்கு அவர்களிடம் பதிலில்லை.

"என்ன முழிக்கிறீங்க... நான் ஆபீசரய்யாவை பார்த் துட்டுதான் வரமுடியும். இவங்க அதுக்காகதான் வந்துருக் காங்க..." என்று எல்லப்பன் கோவிந்தனையும் திலீப்பையும் காட்டினான்.

அப்போதுதான் அவர்கள் கோவிந்தனையே பார்த்தனர். பார்த்துவிட்டு பேந்தப் பேந்த விழித்தவர்கள், "சரி பல்லப்பா நீ ஆபீசரை போய் பார்த்துட்டு வா. நாங்க பிரம்மனை அதுக்குள்ள தூக்கிக்கிட்டு வந்துடுறோம்..." என்று அங்கிருந்து வேகமாக நழுவ முயன்றனர்.

"பாத்து... ரெண்டுநாள்ல அமாவாசை வருது. கார் கோடகன் வேற திரியற காலம்."

"எல்லப்பன் சொன்னதைக் கேட்டு அவர்கள் முகத்தில் அச்சம் பரவியது. திலீப்பிடமும் ஆச்சரிய அதிர்வு.

'அதென்ன பேயடிப்பள்ளம்?' என்கிற கேள்வியும்.

24

'சித்த புருஷர்களில் பிரம்மரிஷி என்று ஒரு சித்தரும் குறிப்பிடப்படுகிறார். இவர் பிரம்மரிஷி என்கிற பெயரைப் பெற்ற விதம் பெரிதும் ஆய்வுக்கு உரியது. மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவை இவர் தன் ஆதர்ச கடவுளாக கொண்டதால், பிரம்ம ரிஷி ஆனார் என்பர் சிலர். மனிதப்பிறவி எடுத்து விட்ட ஒவ்வொருவருமே பிரம்மத்தை உணர வேண்டியது மிக முக்கியம். அதிலும் அந்தணர் களுக்கு அது கட்டாயம் என்பதை உணர்த்தவே, அவர்களை பிரம்மணர்கள் என்றும் அழைத்தனர். அதுவே காலத்தால் பிராமணர்கள் என்றானது என்பார்கள். அந்த வகையில், ஒரு பிராமணர் தான் பிரம்மத்தை உணர தவம் செய்து பிரம்மரிஷி ஆனார் என்பவர்களும் உண்டு. இப்படி பிரம்மரிஷி எனும் பெயக்கு பின்னாலேயே சிந்திப்பதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன.

இந்த பிரம்மரிஷியும், கோரக்கரும் ஒரு கால கட்டத்தில் நல்ல நண்பர்கள் ஆகினர். இவர்களுக்கு இடையே நிறைய கருத்து ஒற்றுமை இருந்தது. குறிப்பாக இந்த உலகில் எல்லாமே இரண்டாக இருக்கிறது. அதாவது இன்பம் துன்பம், இனிப்பு கசப்பு, உயரம் குட்டை, கறுப்பு வெள்ளை இப்படி எல்லாமே இரண்டாக உள்ளது. இதனால்தான், மனிதர்களும் நல்லவன் என்றும், கெட்டவன் என்றும் இரண்டு விதமாக உள்ளனர்.

இதற்கு காரணம், அந்த ஆதிசக்தியின் படைப்பு தான். படைக்கும்போதே ஒரு மனிதனை நல்லவ னாகவும், பசியில்லாதவனாகவும் சிரஞ்சீவியாகவும் படைத்துவிட்டால், உலகில் எங்கும் எவரிடமும் வருத்தமே இருக்காதே என்கிற கேள்வியும், சிந்தனையும் கோரக்கரிடமும், பிரம்மரிஷியிடமும் ஒரு சேர எழுந்தது.

இந்த சிந்தனை தான் அவர்களை தாணுமாலய வனத்தில் ஒரு பெரும் வேள்வியையும் செய்ய வைத்தது!'

"பரம்பரை ரகசியம் அது... எந்த
வம்சத்துல எங்க வயித்துல
பொறக்குற பெண் பிள்ளைகளுக்கு
கூட நாங்க அதை சொல்லக்
கூடாதுங்கிறது விதி..."

"ஒரு பக்கம் இந்த காட்டுல
கிரிமினல்கள், மறுபக்கம் இந்த
மாதிரி மிஸ்ட்ரி. ரொம்ப
வினோதமான பாரெஸ்ட்தான் இது..."

திலீப் முகத்தில் பேயடிப்பள்ளம் குறித்த கேள்வி பிரதானமாக எழுந்து நின்றது. கோவிந்தன் அதை கவனித்தான்.

"என்ன சார் யோசனை?"

"இல்ல... பேயடிப்பள்ளம்னு சொல்றாங்களே. பேரே வினோதமா இருக்கே?"

"அந்த மாதிரி வினோதமான விஷயங்கள் இந்த வனத்துல நிறைய இருக்கு."

கோவிந்தன் சொல்லத் தொடங்க, அவர்கள் வந்த ஜோரில் திரும்பியிருந்தனர். திலீப்புக்கு அவர்களோடு போய் அந்த பேயடிப் பள்ளத்தை பார்க்க வேண்டும் போல் தோன்றியது. அதுதான் படம் பிடிக்க ஒரு திரில்லான விஷயமாகவும் இருக்கும் என்று நினைத்தவன், அவர்கள் வந்த வேகத்தில் போய் விட்டதற்காக வருத்தப்பட்டான்.

அதற்குள் எல்லப்பன் அங்கு இருப்பவர்களுக்கு மூலிகை மருந்தை பார்த்துப் பார்த்துக் கொடுத்துவிட்டு, ஒரு மரப்பெட்டியை தூக்கி தன் உதவியாளனிடம் தர, அவன் அதை தலையில் வைத்துக் கொள்ள, எல்லப்பனும் புறப்பட்டான். திலீப்புடன் வண்டியில் ஏறி அமர்ந்தான். எல்லப்பனின் உதவியாளன் வண்டிக்குள்ளேயும் மரப்பெட்டியை தலைமேல் வைத்திருக்க, "அதை அப்படி சீட்டுக்கு கீழ வைய்யா..." என்றான் கோவிந்தன்.

ஆனால் உதவியாளனோ, "பராவல்ல துரை.. இது சாமி. கண்ட இடத்துலெல்லாம் வைக்கக் கூடாது" என்று தலை மேலேயே வைத்து பிடித்தபடி உட்கார்ந்திருக்க, திலீப்புக்கு சிரிப்பும் சிந்தனையும் ஒரு சேர வந்தது.

தரையில் இருந்தும் தலைமேல் சுமக்கும் அவனை முட்டாள் என்பதா, இல்லை குருபக்தி மிகுந்தவன் என்பதா என்று கணிக்க முடியவில்லை. திலீப்புக்கு ஒன்று மட்டுமே புரிந்தது. அந்த மலையில் அவனுக்கு நிறையவே வேலை

இருப்பதாக கருதிக் கொண்டான். அவனது வாகனமும் புறப்பட்டது.

"எல்லப்பா... எங்க சின்னவரை நீ ஒரு வாரத்துல நடக்க வெச்சுடணும்" என்று ஆரம்பித்தான் கோவிந்தன்.

"அது எலும்பு எவ்வளவு தூரம் ஒடிஞ்சிருக்குங்கிறதை பொறுத்த சமாச்சாரம்..."

"இரண்டாவே முறிஞ்சாலும் நீதான் சேர்த்துடுவியே..."

"நான் எங்க சேர்க்கிறேன்... எல்லாம் இந்த மலை மூலிகைகளோட மகிமை..."

"ஆனா அது எந்த மூலிகைன்னு யார் கேட்டாலும் சொல்ல மாட்டேங்கிறியே..."

"பரம்பரை ரகசியம் அது... எந்த வம்சத்துல எங்க வயித்துல பொறக்குற பெண் பிள்ளைகளுக்கு கூட நாங்க அதை சொல்லக் கூடாதுங்கிறது விதி..."

"அது சரி... நான் தெரியாம தான் கேட்கிறேன்... ஒரு வேளை உன் வம்சம் பெருகாம அதாவது, ஆம்பளப் பிள்ளையே பிறக்காம போயிட்டா?"

"அப்படி ஒரு நிலை வராதுங்க... ஒரு வாரிசு எங்களுக்கு உறுதி. அந்த வாரிசும் ஒரு சுத்து உசுரோட இருந்தே தீரும்..."

"ஒரு சுத்துன்னா?"

"அறுவது வருஷம்..."

"ஓ... அறுவது வருஷம்தான் ஒரு சுத்தா?"

"ஆமாங்க... எங்க அகத்தியர் கணக்குங்க அது..."

"தமிழ் வருஷக் கணக்கும் அது தானே?"

அவர்களுக்குள் ஒரு இணக்கமான உரையாடல் தொடங்கியது. திலீப்புக்கு அந்த பேயடிப் பள்ளம் என்கிற விஷயம் உறுத்திக் கொண்டே இருந்தது.

"கோவிந்தன்... அந்த பேயடிப்பள்ளம் பத்தி இவருக்கு தெரியுமான்னு கேளுங்களேன்..." என்றான்.

"அதுவா தம்பி... அது கிட்டத்தட்ட எங்க மலைக் காட்டு மயானம். குறிப்பா இடைல செத்துப் போறவங்களையும், சிங்கம் புலி அடிச்சும், யானை மிதிச்சுச் செத்துப் போறவங்களையும் நாங்க அங்க போய் வீசி எறிஞ்சிடுவோம். அவங்களை முறையா அடக்கம் பண்ணி விருட்சம் நட மாட்டோம்... அப்படி அவங்களை வீசி எறியப்போய், அவங்க குறையா செத்ததால பேயா சுத்தி வருவாங்க! அதனால அந்த பக்கமா யாரும் போக மாட்டாங்க. இருந்தாலும், சில நேரம் அந்த பள்ளத்துல தேன் எடுக்கவும், புலியை வேட்டையாடவும் வெளியே இருந்து சிலர் வந்து, அங்க போய் பேயால அடிபட்டு செத்துப் போறதும் உண்டு. உள்ளே உருண்டு விழுந்து அங்க கிடக்குற எலும்புக் குவியலுக்குள்ள கிடக்குறதும் உண்டு. மொத்தத்துல நல்ல விதி இருக்கிறவன் அங்க போக மாட்டான்..."

எல்லப்பன் சொன்ன தகவல் திலீப்புக்கு மிகவே புதிது.

"ஆமா... குறையா செத்துப் போறதுன்னா என்ன?" என்று தன் சந்தேகத்தை கேள்வியாக்கினான்.

"அம்பது வயதுக்கு கீழ ஒருத்தர் எங்க இனத்துல செத்தா, அவங்க குறையா செத்துப்போனவங்க தம்பி. அவங்களதான் நான் அங்க வீசி எறிவோம்."

"அதுசரி முறையா அடக்கம் பண்ணி விருட்சம் நட மாட்டோம்னு சொன்னீங்களே... அது?"

"நிறைஞ்ச வாழ்வு வாழ்ந்து யார் செத்தாலும், குறிப்பா எம்பது, தொண்ணூறு வயசுன்னு வெச்சுக்கோங்களேன். அப்படி செத்து போனவங்களே, நாங்க அவங்க நடமாடின இடத்துலயே புதைப்போம். அப்படிப் புதைச்ச இடத்துல அவங்களுக்கு விருப்பமான மரத்தை நடுவோம். பின்னால அந்த மரத்தை நாங்க எங்க முன்னோரா நினைச்சு சாமியா

கும்பிடுவோம். அதோ தெரியுதே ஒரு மாமரம்... அது என் பாட்டன் மரம்!"

பேசிக் கொண்டே வந்த எல்லப்பன் ஒரு மாமரத்தை காட்ட, திலீப் வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினான். மாமரத்தையும் எட்டிப் பார்த்தான். மரம் முழுக்க நிறையவே காய்கள்!

"இந்த மரத்து மேல என் உறவுங்க ஏறமாட்டாங்க. நாங்க போய் இந்த மரத்துகிட்ட வேண்டிகிட்டாலே போதும், எங்க தேவைக்கு எல்லா காயும் தானா உதிர்ந்துவிடும்..."

எல்லப்பன் சொன்னது சூப்பர் மிஸ்ட்ரியாக இருந்தது.

"என்ன வைத்தியரே... விட்டா மாமரம் உங்க கூட பேசும்னு கூட சொல்வீங்க போல இருக்கே" என்றபடி சிரித்தான்.

"அது பேசுங்க... நமக்குதான் அதோட பாஷை எப்படிப் பட்டதுன்னு தெரியாது."

"மரத்தை முன்னோரா நினைக்கிறது ஒரு நல்ல எண்ணம். ஆனா மரத்துக்கு மனிதத் தன்மை இருக்குன்னு சொல்றதை ஏத்துக்க முடியாது..."

"வேண்டாம்... உங்கள யார் ஏத்துக்க சொன்னது? எங்க நம்பிக்கை எங்களுக்கு..."

எல்லப்பனிடம் தடுமாற்றமே இல்லை.

"இப்ப கூட அவ்வளவு காயையும் உதிர்க்கச் சொன்னா உதிர்த்திடும் இந்த மரம்..." என்று தொடரவும், திலீப் வியப்பாக பார்த்தான்.

"எங்கே உதிர்க்க சொல்லுங்க பார்க்கலாம்..."

"நான் எப்பவோ சொல்லிட்டேன். திரும்பி வரும் போது எல்லாம் உதிர்ந்து கிடக்கும். அப்படி உதிர்ந்து கிடக்குறது பெரும்பாலும் பழமா மட்டும்தான் இருக்கும். பிஞ்சு உதிராது. நீங்களும் பார்ப்பீங்க..."

"அதையும் பார்க்கிறேன். ஒரு பக்கம் இந்த காட்டுல விரிவினைகள், மறுபக்கம் இந்த மாதிரி மிஸ்ட்ரி. ரொம்ப வினோதமான பாரெஸ்ட்தான் இது" என்று திலீப் விமர்சனமும் செய்ய, எல்லப்பன் முகத்தில் மாறுதல்.

"நீங்க என்ன தம்பி சொல்றீங்க... இந்த காட்டுல தப்பு நடக்குற மாதிரி பேசுறீங்களே..."

"ஆமாம். நிறையவே தப்புங்க. நடுவுல உங்களை மாதிரி ஆட்களோட அசட்டு நம்பிக்கை."

"இல்ல தம்பி... அப்படி எல்லாம் தப்பு நடக்க முடியாது. இது தெய்வீக வனம்."

"அது உங்க நம்பிக்கை. தப்பு நிறையவே நடக்குது. அது உங்களுக்கெல்லாம் தெரியவும் போகுது."

"தப்புன்னா எந்த மாதிரி?"

"அதையும் நீங்க கூடிய சீக்கிரம் தெரிஞ்சுக்குவீங்க..." திலீப் சளைக்காமல் பதில் கூற, குவார்ட்டர்சும் வந்தது. மரப்பெட்டியோடு இறங்கி கட்டிலில் படுத்துக் கிடந்த நட்ராஜையும் நெருங்கினர்.

சிவக்குமார் அலுவலகத்துக்கு போயிருந்தார். வள்ளியம்மையும், ரேகாவும் மட்டும் இருந்தனர். எல்லப்பன் முதலில் நட்ராஜின் நாடியை பிடித்து பார்த்தான். பின் மளமளவென்று தன் பாணியில் கால் ஒடிந்த பாகத்தில் தைலத்தை பூசி, காலை நேராக ஒரு நேர்கோட்டில் பிடித்து மடக்க முடியாதபடி ஒரு குச்சியை வைத்து சுருட்டி, வைத்திருந்த கொடியின் தண்டுப்பகுதியை கயிறு போல கட்டி, மேலே மெல்லிய பருத்தி துணியை சுற்றி, அதன்மேல் ஒரு சட்டியில் அரைத்த நிலையில் எடுத்து வந்திருந்த மூலிகைத் தூவையலை சாணி போல தட்டி, அதன் மேலும் பருத்தித் துணி கொண்டு கட்டு கட்டி முடித்தான்.

அவன் செயல்பாட்டில் ஒரு நேர்த்தி தெரிந்தது. திலீப் அதை தன் செல்போன் கேமராவில் ரகசியமாக படம் பிடித்துக் கொண்டான். அப்படியே தைலம், துவையல், அந்த கொடி என்று சகலத்தையும் எல்லப்பனுக்கு தெரியாமல் ரகசியமாக எடுத்து வைத்துக் கொண்டான். கோவிந்தன் கவனித்தும் கவனியாத மாதிரி இருந்துவிட்டான். எல்லப்பன் வந்த வேலை முடிந்தது. வள்ளியம்மை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ரேகாவும் பிரமிப்போடு பார்த்தபடியே இருந்தாள்.

எல்லப்பனின் வேலை ஒரு வழியாக முடிந்தது.

புறப்படத் தயாரானான்.

"ஆமா... இவர் எழுந்து நடக்க எவ்வளவு நாளாகும்?" ரேகா ஆர்வமாக கேட்டாள்.

"எப்படியும் பதினைஞ்சு நாள் ஆகும்."

"கட்டாயம் நடந்துடுவாரா?"

"நிச்சயமா... ஆனா தாணுமாலய சாமியை மனசார நினைச்சுக்கணும். சாமி இலை எப்பவும் இவர் இடுப்புல இருக்கணும்."

"இல்லேன்னா?"

"குணமானாலும் வலி போகாது. முந்தி மாதிரி நடக்க முடியாது."

எல்லப்பன் சொன்ன பதில் நட்ராஜை நிரடியது. எல்லப்பன் பார்வை வள்ளியம்மையையும் ஊடுருவியது.

"என்ன அப்படி பார்க்கிற?"

"முகத்துல ஒரு வெளிச்சம் தெரியுது. கரு உண்டாகியிருக்கீங்கதானே?"

"ஆமாம்..."

"என் யூகம் சரியா இருந்தா ஆண் ஒண்ணு, பெண் ஒண்ணு... இப்ப இருந்து சரியா ஏழு மாசம் இருபத்தி ஒரு நாள் செல்ல அதிகாலையில பிரசவமாகும். எழுதி வெச்சுக்குங்க. நான் புறப்படுறேன்."

எல்லப்பன் கேட்காமலேயே தேதி முதல் சொன்னது வள்ளியம்மைக்கு ஆச்சரியம். அதை விட ஆச்சரியம், ஆண் ஒன்று, பெண் ஒன்று என அவன் சொன்னது.

அப்போது யானை ஒன்றின் பிளிறல் சத்தம், அவர்கள் நடுவே பலமாக கேட்கத் தொடங்கியது.

25

'கோ'ரக்கரும் பிரம்மரிஷியும் ஒரு புதிய உலகத்தையும், மனித சமுதாயத்தையும் படைக்க வேள்வியை தொடங்கினர். நெறிமுறைப்படி நடத்துகின்ற வேள்வி வெற்றிபெற்றே தீர வேண்டும். இதனால்தான், அசுரர்களும் தவம் செய்து பல வரங்களை பெற முடிந்தது.

வேள்வி தொடங்கவும் அதன் முதல் எதிரொலி இந்திரலோகத்தில்தான்! 'இரு சித்தர்கள் ஒரு புதிய உலகை படைக்க விரும்புவது கூடவே கூடாத ஒரு விஷயம். அரு ஒரு மலட்டு மனித கூட்டத்தையே உருவாக்கலாம். ஏற்ற இறக்கங்கள் வாழ்வில் இருந்தால்தான், சுவாரஸ்யம். ஏற்ற இறக்கம் இருந்தாலே ஒரு இயக்கமும் நடைபெற முடியும். எல்லாரும் பல்லக்கில் செல்ல விரும்பினால், பல்லக்கை யார் தூக்குவது?' இந்திரனிடம் இப்படி எல்லாம் கேட்டனர்.

இந்திரனும் சித்தர்களின் வேள்வியை தடுத்து நிறுத்த முடிவு செய்தான். ஒரு வேள்வி தொடங்கப் பட்டால் இடையில் தடைபடக்கூடாது. தடை பட்டாலோ மீண்டும் அந்த வேள்வியை தொடங்கி வரசித்தி அடைய முடியாது. எனவே வேள்வியை தடுத்துவிட இருள்மாயை, மருள்மாயை எனும் மாயா அம்சம் கொண்ட இரு அழகான பெண்களை அனுப்பி வைத்தான். அவர்களும் தங்கள் அழகை காட்டி வேள்விச் சாலையை சுற்றி வந்து பிரம்மரிஷி, கோரக்கர் ஆகிய இருவரின் மனஒருமையைக் கெடுத்து, வேள்வியையும் எப்படியோ தடுத்து நிறுத்தி விட்டனர். வேள்வி தடைபடவும், இரு சித்தர்களுக்கும் கோபம் மிக ஆவேசத்துடன் வந்தது.

கோபம் வந்தாலே சாபம்தானே?'

"நாம வெடிபோட்டு
விரட்டலைன்னா கொஞ்ச நேரத்
துல காட்டுயானைங்க
அவ்வளவும் ஒண்ணா சேர்ந்துடும்
சார். அப்புறம் குவார்ட்டர்சே தூள்
தூளாயிடும் சார்..."

"ஒரு யானை மூப்பரை நோக்கி
ஆவேசமாக ஓடிவரத் தொடங்கியது.
மூப்பர் அப்படியே உறைந்து
போய்நின்று விட, அது அவரை
தும்பிக்கையால் வளைத்து தூக்கி
வீசி எறிந்தது..."

பிளிறல் சப்தம் அவர்களை அந்த குவார்ட்டர்சின் ஜன்னல் வழியாக வெளியே பார்க்க வைத்தது.

அது ஒரு மாலை நேரம். சற்று நேரத்தில் இருட்டிவிடும். இருள்வதற்கு முன்பான அந்த நேரத்தில், குவார்ட்டர்சின் ஒரு பக்கமாய் உள்ள சரிவுக்கு அப்பால் நான்கைந்து யானைகள் வந்திருந்தன. அவைகளிடம்தான் பிளிறல்.

வள்ளியம்மைக்கு இப்படி யானைகள் பிளிறுவது ஒன்றும் புதிதில்லை. இருந்தாலும், பயமாக இருந்தது. கோவிந்தன் வேகமாக டெலஸ்கோப்பை எடுத்து வந்தான். அதைப் பார்க்கவும் திலீப் தன் கேமரா வழியாகவே ஜூம் செய்து பார்க்க ஆரம்பித்தான்.

பிளிறல் மிகவே அதிகமாக இருந்தது. எல்லப்பனும் தன் உதவியாளனுடன் பார்த்துவிட்டு, "யானைங்க எப்பவும் இந்த நேரத்துல இந்தப் பக்கம்வராதே..." என்றான்.

"அது மட்டுமல்ல... அதுங்க இப்படி கத்தவும் செய்யாது. அடிகிடி பட்டிருந்தாதான் இப்படி கத்தும்..." என்றான் உடன் இருந்த உதவியாளன். அதற்கேற்ப டெலஸ்கோப் வழியாக பார்த்த கோவிந்தன் முகத்தில் ஒரு சிணுங்கல். திலீப்பும் கேமரா வழியாக பார்த்தவனாக, "யானைங்க மேல ஒரே மண்ணா இருக்கு. ஒரு யானையோட கால்ல ரத்தம் கசிஞ்சிகிட்டு இருக்கு" என்றான்.

நெருக்கமாக நின்றபடி இருந்த ரேகாவும், வள்ளியம்மையும் ஆச்சரியத்தை எதிரொலித்தனர். படுத்த நிலையில் இருந்த நட்ராஜும் கோவிந்தன் முகம் போன போக்கை வைத்து கேட்டான்.

"மிஸ்டர் கோவிந்தன்... என்ன ஏதாவது விபரீதமா நடக்கப் போகுதா?"

"ஆமாங்க... அதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு..." அவன் சொல்லும்போதே, யானையில் பிளிறல் உறைய வைப்பதாக இருந்தது.

"அப்ப அந்த யானைங்க இங்க வந்து நம்மையும் தாக்குமா?"

"அப்படி இல்ல... அடிபட்ட யானையை பார்க்க கூட்டம் கூட்டமா மத்த யானைங்க வந்துடுங்க. தப்பித் தவறி அடிபட்ட யானை இறந்துட்டா அவ்வளவுதான்... இந்த குவார்ட்டர்சை சுத்தி என்ன வேணா நடக்கலாம்..."

"சரி இப்ப என்ன செய்யலாம்?"

"நான் ஆபீசுக்கு போய் வேட்டுத்திரி, தீப்பந்தம், வெடின்னு எடுத்துக்கிட்டு, சார் இருந்தா அவரையும் கூட்டிக்கிட்டு வரேன். நீங்க யாரும் தயவு செய்து வெளியே வந்துடாதீங்க..." என்ற கோவிந்தனை எல்லப்பன் சற்று கோபமாக பார்த்தான்.

"என்னய்யா பார்க்கிற?"

"போய் மூப்பரை கூட்டிக்கிட்டு வாங்க... அவருக்கு யானை பாஷை தெரியும். அடிபட்ட யானைக்கு வைத்தியம் பார்க்கவும் அவராள முடியும். வேட்டு போடுறேன், வெடி வைக்கிறேன்னு பிரச்னையை அதிகப்படுத்தாதீங்க..."

எல்லப்பன் சொல்லிக் கொண்டிருக்கும்போது குவார்ட்டர்ஸ் கூரை மேல் ஒரு யானை ஆவேசமாக பிடுங்கி எரிந்த செடி ஒன்று மண் திப்பிகளோடு வந்து விழுந்த சப்தம் கேட்டது.

"அதுக்கு வலி அதிகமாயிட்டே போகுது போல... மூப்பர்தான் சரிப்பட்டு வருவார்."

"என்ன எல்லப்பா நீ... மூப்பர் இல்ல, யார் வந்தாலும் யானைங்க கேட்காது. மூப்பர் என்ன யானை பாகனா?"

"அவர் யானை பாகன் இல்ல. ஆனா இந்த காட்டு யானைகளை அவருக்கு நல்லா தெரியும். பல நேரம் அவர் கிட்ட போய் தடவிக் கொடுத்ததை நான் பாத்துருக்கேன். ஒரு வருஷம் மழையே பெய்யல. காட்டுக்குள்ள யானை குடிக்க மடுவுங்க இல்லாம போச்சு. அப்ப எங்க குடியிருப்பை ஒட்டி ஒரு மடுவை உருவாக்கி, அதுல கிணத்து தண்ணியை

கொண்டுபோய் ரொப்பி யானைங்க தாகம் தீர பாடுபட்டவர். யானைகளுக்கு நன்றி உணர்ச்சி அதிகம். மூப்பரை அதுங்க ஏதாவது எதுவும் செய்யாது..."

எல்லப்பன் அவ்வளவு சொல்லியும் கோவிந்தன் சிவக்குமாருக்கு தகவல் சொல்வதுதான் சரி என்பது போல புறப்பட்டான். எல்லப்பனுக்கும் புரிந்துவிட்டது. உதவியாளனைப் பார்த்து, "நீ போய் மூப்பரை கூட்டிட்டு வா" என்றான்.

திலீப் அந்த உதவியாளனிடம், "வாப்பா நான் உன்னை கூட்டிக்கிட்டு போறேன். என் ஜீப்லயே போய்ட்டு வந்துடலாம்" என்றான். ரேகா அதை கேட்டு ஆச்சரியப்பட்டாள்.

"என்ன ரேகா... அந்த மூப்பரையும் நாம பார்க்கணுமே... இது ஒரு நல்ல சந்தர்ப்பமில்லையா?" அவன் கேட்ட விதத்தில், அவன் உள்நோக்கம் புரிந்தது.

வன இலாகா அலுவலகம்.

வனவர்பரமசிவம், வனஉயிரின பாதுகாவலர் ராஜரத்தனம் மற்றும் வனப்படை சார்ஜண்ட்களுடன் சிவக்குமார் பேசியபடி இருந்தார். அவர் காதிலும் யானை பிளிறும் சப்தம் கேட்டது. மிக தேய்ந்த நிலையில் காதில் ஒலித்த அந்த சப்தம் அவர்களை எல்லாம் உஷார்படுத்தியது.

"சார்... இருட்டப் போகுது. யானைகள் கத்துற சப்தம் வேற கேட்குது. இருட்டுறதுக்குள்ள புறப்படலைன்னா வழியில யானைகள் துரத்தினா சிக்கலாயிடும். நாங்க வட வாறு சமவெளில டென்ட் போட்டுட்டு வந்திருக்கோம். அதனால செல்போன்ல பேச முடியாது. நாங்க கிளம்புறோம். நாளைக்கு நாம உள்ள சர்ச்சிங்ல இறங்கிடலாம். அந்த வனத்து மனுஷங்களை அதிகபட்சம் மூணு நாள்ல நாம பிடிக்கிறோம். டோண்ட் ஒர்ரி..." என்றார் வனஉயிரினப் பாதுகாவலர் ராஜரத்னம்.

"அந்த பிணத்தோடு சுத்துற அகோர சாமியையும் விட்டுடக் கூடாது."

"எல்லாரையும் இரண்டுல ஒண்ணு பார்த்துடலாம். நீங்களும் புறப்படுங்க."

"நானும் கட்டாயம் குவார்ட்டர்சுக்கு போயாகணும். என் தம்பி கால் உடைஞ்சு படுத்த படுக்கையா இருக்கான். அனேகமா அந்த எல்லப்பன் வந்து வைத்தியம் பார்த்து முடிச்சிருப்பான்."

சிவக்குமார் சொல்லிக் கொண்டே போய் அலுவலக ஜன்னல்களை மூட ஆரம்பிக்க, சகசார்ஜண்ட் போலீஸ் காரர்கள் அவருக்கு உதவியாக இறங்கினர். இரண்டு நிமிடத்தில் கதவை பூட்டி, சாவியை கொடுத்து விட்டு அவர்கள் வந்த ஜீப்களில் ஏறிக் கொள்ள, அவையும் புறப்பட்டன.

சிவக்குமார் கைக்கடிகாரத்தை பார்த்தார். மணி ஐந்தரை. ஆனால், காட்டுப்பகுதிகள் பலநேரங்களில் ஐந்து மணிக்கு கூட இருள் தட்டிவிடும். அன்று பரவாயில்லை. வேகமாக குவார்ட்டர்சுக்கு செல்ல அவரும் நடக்க தொடங்கவும், எதிரில் கோவிந்தன் இளைக்க இளைக்க ஓடிவந்து நின்றான்.

"சார்... கிளம்பிட்டீங்களா?"

"ஏன் கோவிந்தா... எதுக்கு இந்த பதட்டம்?"

"சார் யானை கத்துற சப்தம் கேட்கலையா?"

"கேக்குது. அதான் நானும் கிளம்பினேன்..."

"ஒரு யானைக்கு அடிபட்ட காலல ரத்தம் ஒழுகுது சார். அதான் இவ்வளவு சப்தம். நாம வெடிபோட்டு விரட்டலைன்னா கொஞ்ச நேரத்துல காட்டு யானைங்க அவ்வளவும் ஒண்ணா சேர்ந்துடும் சார். அப்புறம் குவார்ட்டர்சே தூள் தூளாயிடும் சார்..."

"நம்ம ஆபீசுல வெடி இருக்கா?"

"இருக்கு சார்... ஆபீஸ் ஸ்டோர் ரூம் பரண்ல ஒரு மூங்கில் கூடையில எப்பவும் ஒரு அஞ்சாறு வெடி ஸ்டாக் இருக்கும் சார். நான் எடுத்துக்கிட்டு வந்துடுறேன்."

"நானும் வரேன்... ஆமா எல்லப்பன்...?"

"வந்து வைத்தியம் பார்த்து முடிச்சாச்சு சார். இப்ப எல்லப்பனும் நம்ம வீட்லதான் சார் இருக்கான்...."

"இது என்ன புது பிரச்னை? முதல்ல வெடியை எடுத்துக்குவோம்!"

திரும்ப அலுவலக கதவை திறந்து, உள் நுழைந்து வெடியை எடுத்துக் கொண்டு ஓட்டமாய் ஓடத் தொடங்கினார். குவார்ட்டர்சை நெருங்க நெருங்க சப்தம் அதிகமாக இருந்தது. குவார்ட்டர்சை நெருங்கின அதே நொடி, திலீப் ஜீப்பும் வந்து நிற்க, உள்ளிருந்து மூப்பரும் எல்லப்பனின் மனைவியாளரும் இறங்கினர்.

மூப்பரை அப்போதுதான் சிவக்குமார் பார்க்கிறார். ஆஜானுபாக்குட்டையான பருமனான உருவம். தலையிலும் தாடையிலும் ஏராளமான முடி. அவ்வளவும் சிக்கு பிடித்து முடை பிடித்திருந்தது. கையில் ஒரு உருண்டை தடி. தடியின் நுனியில் சிறுமணி ஒன்று கம்பியால் கட்டப்பட்டிருந்தது. மூப்பரின் நெற்றியில் நாமம் பச்சை குத்தப்பட்டிருந்தது. பச்சை யாக 'ப' என்கிற எழுத்தை பார்ப்பது போல இருந்தது.

வாயிற்கதவருகே நின்றபடி வள்ளியம்மையும், ரேகாவும் மூப்பரை வியப்பாக பார்த்தபடி இருக்க, அவர்களுக்கு இடையே ஒரு ஆள் உயர மரம் ஒன்று பெயர்ந்து வந்து விழுந்தது. பிளிறலும் அதிகரித்துவிட்டது.

"மூப்பரு... போ போய் முதல்ல சமாதானப்படுத்து. நான் முதல்ல ஒரு வெடிய பத்தவச்சிட்டு வரேன். அதை கசக்கி காயம் பட்ட இடத்துல சாறு விட்டு கட்டு போட்டா வலி நின்னுடும்.

ஆனா யானை பொறுமையா காலைக் காட்டணும். அதுக்கு நீதான் பொறுப்பு" என்றான். கோவிந்தன் வெடி உள்ள மூங்கில் கூடையோடு மூப்பரை பார்த்தான்.

"வெடியெல்லாம் போட்டுடாதீங்க சாமி. அதுலயும் இருட்டப் போற நேரம். அதுங்க கத்துறதுல இருந்து ஒரு யானைக்கு பெருசா காயம்னு நல்லா தெரியுது. பள்ளத்துல விழுந்தாதான் காயம் படும். இல்லேன்னா மடுவுல தண்ணிக் காக இறங்கும்போது முதலை இருந்து கவ்வுன்னா காயம் படும். நான் போய் பார்க்கிறேன்" என்ற மூப்பர், ஒரு தீ பந்தத்தை கொளுத்தி எடுத்துக் கொண்டே யானை பாஷையில் சில சப்தங்கள் போட்டபடி அவைகளை நோக்கி செல்லத் தொடங்கினார்.

அவர் தைரியம் சிவக்குமாரையே பிரமிக்கச் செய்தது. ஆனால், யானைகள் பிளிறுவதை கொஞ்சமும் நிறுத்த வில்லை. அவர் நெருங்க நெருங்க பிளிறல் சப்தம்தான் அதிகமானது. அதோடு அருகே அவைகளை பார்க்க முடிந்ததில், அவைகளின் மேல் நிறைய செம்பழுப்பு மண்திப்பிகள் ஒட்டியிருந்தன. அவைகளில் அங்கங்கே புள்ளிபுள்ளியாய் மஞ்சளாகவும் காட்சி தந்தன. மூப்பருக்கு அது ஆச்சரியமாக இருக்க, அவரை எல்லப்பன் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு யானை மூப்பரை நோக்கி ஆவேசமாக ஓடி வரத் தொடங்கியது. மூப்பர் அப்படியே உறைந்து போய்நின்று விட, அது அவரை தும்பிக்கையால் வளைத்து தூக்கி வீசி எறிந்தது. மூப்பர் ஒரு மூட்டை போல சிவக்குமார் அருகே வந்து விழுந்தார். கோவிந்தன் மற்றவர்களை பார்த்து குவார்ட்டர்சுக்குள் நுழையச் சொல்லி கத்தினான். மூப்பரை தூக்கி எறிந்த யானை, தொடர்ந்து அவர்களை நோக்கி வரவும், எல்லப்பன் மூப்பரை தொட்டுத் தூக்கியவனாக குவார்ட்டர்சுக்குள் நுழைய முயன்றான்.

கோவிந்தனும் வந்து உதவிட, மூப்பரோடு எல்லப்பன் உள்ளே வர கதவை வேகமாக இழுத்து மூடினான். அந்த யானைகள் இரண்டும் கதவுக்கு அப்பால் நின்று பிளிறத் தொடங்கின.

காது ஜவ்வே கிழிந்து விடும்போல் இருந்தது. ரேகாவும், வள்ளியம்மையும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டனர். சிவக்குமார் துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டு சுடுவதற்கே தயாராகி விட்டார். அந்த யானைகள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயன்றால் சுட்டு விடுவதுதான் ஒரே வழி. எல்லப்பனும் அவரை சுட வேண்டாம் என்றெல்லாம் கூறவில்லை.

"என்ன மூப்பரே... இது என்ன தெய்வ குத்தமா? இப்படி வந்து மாட்டிக்கிட்டோமே..." என்றான்.

"அப்படித்தான் தோணுது. யானைங்க மேல மண்ணா இருக்கு. மண்ணும் மின்னுது. பசுக்காட்டுக்குள்ள போன யானைங்க இதுங்க. அங்க தான் ஏதோ நடந்துருக்கு..." என்றார் மூப்பர்.

"பசுக்காடா... அப்படின்னா?" சிவக்குமார் கேட்டார்.

"இந்த காட்டோட ஈசானம்தான் பசுக்காடு. அதுக்கு பரிமயக்கிக் காடுன்னு பேர் உண்டு. உள்ளேப்போனா நினைவு தப்பிப் போகும். சித்தர் சாமிங்களால மட்டும்தான் மூச்சைக்கட்டி அங்க போய்வர முடியும். இந்த யானைங்க எல்லாம் அங்க போய்தான் அடிப்பட்டிருக்கு..."

"அது என்ன பசுக்காடு. பசுமாடுங்க அங்க அதிகமா?"

"ஐய்ய... பசுன்னா தங்கம்ங்க..." மூப்பர் சொல்ல, சிவக்குமார் வாயைப் பிளந்தார்.

26

'பிரம்ம முனியும் கோரக்கரும், இருள் மாயைக்கும் மருள் மாயைக்கும் அளித்த சாபம் என்ன தெரியுமா? தங்களை மயக்கிய அவர்களை எப்போதும் மயக்க வஸ்துவாகவே ஆகும்படி சபித்துவிட்டனர். அதன் படி இருள்மாயை புகையிலை செடியாகவும், மருள் மாயை கஞ்சா செடியாகவும் மாறினர்.

புகையிலையும், கஞ்சாவும் மனிதர்களுக்கு எதிரி யான தாவரமாகின. மனக்கவலை, உளைச்சல் மிகுந்தவர்கள் இவ்விரண்டையும் பயன்படுத்தும் போது, இதனால் அவர்கள் ஆரோக்கியம் செரும். எனவே உங்களை கண்டாலே மனிதர்கள் அஞ்சுவ தோடு, ஒதுக்கியும் வைப்பார்கள் என்றும் இரு வரும் கூறிவிட, இன்று வரை இரண்டுக்கும் சமூகத் தில் மதிப்பே இல்லாமல் போய்விட்டது. இந்த சம்பவம் நடந்த இடம் தாணுமாலய வனம் என்பர். இந்த சம்பவம் நடந்த இடத்திலேயே தென்பகுதி முழுக்க கஞ்சாபயிரும், வடபகுதி முழுக்க புகை யிலையும் வளர்ந்து தளதளவென்று நிற்கின்றன. யாகம் நடைபெற்ற இடத்தில் புற்கள் கூட முளைத் திடாதபடி அந்த இடம் பொசுங்கிய இடம்போல் உள்ளது.'

"ஜன்னல் இருந்த இடம் ஒரு சதுர
துவாரமாய் தெரிய, அந்த யானை
அதற்குள் தன் தலையை
நுழைத்து, ரத்தம் வடியும் தன்
தும்பிக்கையால் உள்ளே திலீப்பை
பிடித்து இழுத்தே விட்டது..."

"பாருங்க குண்டுபட்ட யானை
கத்துறதை. இந்த சப்தம் காட்டு
யானைங்க அவ்வளவையும்
மட்டுமில்ல, மத்த மிருகங்களையும்
இங்க வர வெச்சிடும்..."

வாயைப் பிளந்த சிவக்குமாரை அர்த்தத்தோடு பார்த்தான் கோவிந்தன். அந்த காட்டுக்குள் தங்கம் இருக்கும் இடம் இந்த யானைகளால் இப்படிக்கூட தெரியவருமா என்ன?

"மூப்பரே பசுக்காடுன்னு நீங்க சொல்ற காட்டுமண் பொன்னுமா என்ன?" சிவக்குமார் அந்த நொடியே போட்டு வாங்க ஆரம்பித்தார்.

"ஆமாங்கய்யா... அந்த காட்டு மண் ஒருவகையில மருந்து கூட! தை மாசம் பொறக்குற அன்னிக்கு காலையில சூரியன் உதிக்கும் முன்ன அங்க போய் மண்ண கொண்டு வந்து, அதோட செம்மண் கலந்து வீடு வாசலை மெழுகுறது எங்க இனத்து வழக்கம். இதுக்காக ஒருத்தனை மூச்சு கட்ட பழக்குவோம். அவன் எங்களுக்கு சாமியும் கூட... விருட்ச மரத்துக்கு கூட்டிப் போய் குலுக்கல்ல அவன் யார்னு தேர்வு செய்வோம். பொறவு அவன் ராமா ராமன்னோ, நாராயண நாராயணான்னோ, இல்ல சிவ சிவான்னோ சொல்லிக் கிட்டே இருக்கணும். அதுவும் மூச்சு விடாம சொல்லிக் கிட்டிருக்கணும். அவனுக்கு எங்க இனத்தவங்க தினமும் கைப்பிடி குருணை அரிசி கொடுத்து, கஞ்சி காய்ச்சிக் குடிக்க சொல்வாங்க. யாரெல்லாம் குருணை கொடுத்தாங்களோ அவங்களுக்கெல்லாம் இவன் அங்க போய் தான் எடுத்துக் கிட்டு வர்ற மண்ணுல ஒரு கைப்பிடியோ இரண்டு கைப் பிடியோ கொடுப்பான். அந்த மண்ணோட செம்மண்ணை கலந்து வாசலை மெழுகித்தான் நாங்க பொங்க திருநாளையே ஆரம்பிப்போம்..."

மூப்பர் சொன்னதில் ஒரு கலாச்சாரம் சார்ந்த செயல் முறையே ஒளிந்திருந்தது. சிவக்குமாரிடம் உடனேயே பிரமிப்பு. நாளை முதல் வேலையாக பசுக்காட்டுக்குதான் தன் இலாகாவின் காவலர்களோடு போக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். அந்த நொடி பக்க வாட்டுச் சுவரில் திம்திம்மென்று சப்தம்.

"ஐயோ இது என்ன சப்தம்?"

"யானை இந்த கட்டடத்தை இடிக்க பாக்குது..."

"கோவிந்தா முதல்ல வெடியை எடுத்து ஜன்னல்வழியா திரியை கொளுத்தி வீசு..."

சிவக்குமார் கட்டளையிட, கோவிந்தனும் தயாரானான். மூப்பர் எதுவும் சொல்லவில்லை. ஆனால், எல்லப்பன் பயந்தான்.

"ஐயா... இதுக்கெல்லாம் இந்த யானைங்க பயப்படாதுங்க. கோபம் வேணும்னா அதிகரிக்குமுங்க..."

"அதுக்காக வீட்டை அது இடிக்கட்டும்னு வேடிக்கை பார்க்கவா?"

சிவக்குமார் கேட்க, கோவிந்தன் ஒரு வெடியை கொளுத்தி ஜன்னல் வழியாக வீசி எறிய சரியாக இருந்தது. பரபரவென்று திரி எரிய வெளியே போய் விழுந்த அது டமாலென்று வெடித்தது. வெடித்த நொடி புகை புசுபுசுவென்று மண்ட ஆரம்பித்தது. கோவிந்தன் ஜன்னல் கதவை வெகுவேகமாக இழுத்து, புகை உள்ளே வராத படி மூடப்போனான். அப்போது சுவற்றை முட்டி மோதி இடிக்கப் பார்த்த யானை, அவன் கையை தும்பிக்கையால் வளைத்து பிடிக்க முனைந்தது. கோவிந்தனுக்கு உயிரே போய் விட்டது போல் இருந்தது. சிவக்குமாரும் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்க, திலீப் பழம் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து யானைத் தும்பிக்கையை குத்தவும், அது பிடியை விட்டது. கத்தியும் தும்பிக்கையை குத்தி

காயப்படுத்திவிட்டது. அதனிடம் பிளிறல் சப்தமும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கூடி விட்டது.

"போச்சு... பிரச்னையை பெருசுபடுத்திட்டீங்க தம்பி. யானைக் கோபம் பொல்லாதது" என்ற எல்லப்பனை வள்ளியம்மையும், ரேகாவும் பயத்தோடு பார்த்தனர். அதிக பயமும், அதிர்வும் வள்ளியம்மை கருவையே கலைத்துவிடுமோ என்கிற அளவுக்கு வெளியே யானைகளிடம் பிளிறல். திலீப் அந்த நிலையிலும் ஜன்னல் வழியாக யானைகளின் கோபத்தை படம் பிடிக்க முயன்றான்.

"சார்... நம்ம டிபார்ட்மெண்ட்டுக்கு போன் போட்டு நம்ம சார் ஜண்ட்சை தீவட்டியோட வந்து இதுகளை விரட்டச் சொல்லுங்க சார்... இப்ப இது ஒண்ணுதான் சார் நாம தப்பிக்க வழி...." என்றான் கோவிந்தன். சிவக்குமாரும் செல்போனில் முயற்சி செய்தார். ஆனால், நாட் ரீச்சபிள் என்றே அது ஒலித்தது.

"ச்சே... இப்ப பார்த்து நாட் ரீச்சபிள்னே வருது...." என்று பதறினார் சிவக்குமார்.

அப்போது எந்த ஜன்னலை கோவிந்தன் மூட முயன்றானோ, அந்த ஜன்னல் மேலேயே அந்த காயம் பட்ட யானை மோதியதில் ஜன்னல் சட்டம் பெயர்ந்து வீட்டுக்குள் உட்புறம் விழுந்தது. ஜன்னல் இருந்த இடம் ஒரு சதுர துவாரமாய் தெரிய, அந்த யானை அதற்குள் தன் தலையை நுழைத்து, ரத்தம் வடியும் தன் தும்பிக்கையால் உள்ளே திலீப்பை பிடித்து இழுத்தே விட்டது.

திலீப் கேமராவுடன் அதன் வசமானான். ஆனால், ஜன்னல் சுவற்றோடு நின்று விட்டான். அவனை அந்த சதுர துவாரம் வழியாக வெளியே இழுக்க அந்த யானை பாடாய் பட்டது. எல்லப்பனும் அவன் உதவியாளரும் திலீப்பை அதனிடமிருந்து விலக்க முயன்றனர்.

மூப்பர் வெலவெலத்து போயிருந்தார். படுக்கையில் இருந்த நட்ராஜ்க்கு இன்று அவ்வளவு பேருமே செத்து

போகப் போகிறோம் என்றே தோன்றியது. ஒரு யானை தலீப்பை பிடித்த பிடியை விடாத நிலையில், இன்னொரு யானை சுவற்றை மோதியதில் சுவற்றில் மின்னல் போல விரிசல் விழ ஆரம்பித்தது.

எல்லப்பன் உதவியாளன் அதைப் பார்த்த மாத்திரத்தில் ஓடிப்போய் வாசற்கதவை திறந்து கொண்டு வெளியே தலை தெறிக்க ஓடத் தொடங்கினான். அவனது செயலால் வாசற் கதவு திறந்து கொள்ள, ஓடிவந்து ஒரு யானை அதன் முன் நின்று கொண்டு உள் நுழையப் பார்த்தது. பருத்த உடம்பால் முடியவில்லை. ஆனால், தலை நுழைந்து விட்டது. தலை நுழைந்த நிலையில் அப்படியே தும்பிக்கையை நீட்டி உள்ளே இருப்பவர்களை பிடிக்க துழாவியது.

அதைப் பார்த்த எல்லப்பன், "மூப்பா... பெரிய குத்தம் காட்டுல நடக்குது மூப்பா. இல்ல உனக்கும் எனக்குமே இப்படி ஒரு நிலை வராது. இப்ப என்னத்த செய்ய?" என்று சத்தமான குரலில் கேட்டான்.

"ஆமாம் எல்லப்பா! பூனை மாதிரி கிடந்த யானைங்க புலியா மாறிடுச்சுங்க... இப்படி ஒரு நிலை என் நூறு வருஷ வாழ்க்கையில வந்ததே இல்ல... இப்ப நம்மள அந்தவானத்து மனுஷங்களால மட்டும்தான் காப்பாத்த முடியும்..." என்றார் மூப்பர்.

வானத்து மனிதர்கள் என்று மூப்பர் சொன்ன நொடி சிவக்குமாரிடம் விடைப்பு.

"மிஸ்டர் மூப்பர்... அவங்களாலதான், இந்த காடே கெட்டுக்கிடக்கு. நீங்க போய் அவங்க காப்பாத்துவாங்கன்னு சொல்றீங்களே" என்றார். அப்படியே துப்பாக்கியை லோட் செய்து வாயிற்படியை அடைத்துக் கொண்டு தும்பிக்கையால் துழாவும் யானையைப் பார்த்து சுடமுயன்றவரை எல்லப்பன் தட்டி விட்டான்.

"சும்மா இருங்கய்யா... மூப்பர் பேச்சைக் கேளுங்க..." என்றான் கோபமாக.

"என்ன உளர்றீங்க... இந்த மலையிலேயே பிறந்து வாழ்ற உங்களால இந்த யானைகளை புரிஞ்சுக்க முடியல. அந்த வானத்து மனுஷங்க வந்து கிழிக்கப் போறாங்களாக்கும்? விடுங்க... விட்டா இந்த வீடே தரை மட்டம் ஆயிடும். நாமளும் பரலோகம் போக வேண்டியதுதான். இப்பதான் என் மனைவி கர்ப்பம் தரிச்சு, என் வாழ்க்கையிலயும் ஒரு அர்த்தம் உருவாகியிருக்கு. அதை இந்த யானைங்க அழிக்க நான் விடமாட்டேன்" என்றபடியே ஜன்னலில் தில்லீப்பை கழக்கி பிடித்தபடி இருந்த யானையின் தும்பிக்கையை பார்த்து சுட்டார் சிவக்குமார். குண்டு பாய்ந்த நொடி தும்பிக்கைப் பிடியை அந்த யானை விட, தில்லீப் சொத் தென்று கீழே விழுந்தான், அது அவன் மார்பை வளைத்து பிடித்ததில் மார்புப் பகுதியே நொறுங்கி விட்டது போல ஒரு வலி.

ரேகா ஓடிப்போய் அவனை இழுத்தபடி அந்த வீட்டின் ஒரு அறை நோக்கி செல்லத் தொடங்கினாள். சிவக்குமார் அடுத்த குண்டை வாசலில் நிற்கும் யானையை நோக்கி சுட முயல, அது மிரண்டு பின் வாங்கியிருந்தது.

"ஐயோ தம்பி அவசரப்பட்டுட்டீங்க... பாருங்க குண்டு பட்ட யானை கத்துறதை. இந்த சப்தம் காட்டு யானைங்க அவ்வளவையும் மட்டுமில்ல, மத்த மிருகங்களையும் இங்க வர வெச்சிடும். பொழுது வேற இருட்டிச்சு. தப்பித்தவறி கரண்ட்டு கம்பத்துல இதுங்க மோதினா கரண்ட்டும் போயிடும்..."

மூப்பர் தழுதழுத்தார்.

"ஐயா கிழவனாரே... புரியாம பேசாதீங்க. அந்த வானத்து மனுஷங்கள் வந்து காப்பாத்து வாங்கன்னு சொன் னீங்களே... அவங்க எப்படி வருவாங்க. அவங்களுக்கு யார் மூலமா தகவல் தருவீங்க?"

படுக்கையில் இருந்த நட்ராஜ் பாயின்ட்டாக கேட்டான்.

"அட நீங்க வேற தம்பி... இனி உங்ககிட்ட பேசுறதுல அர்த்தமில்ல. அவங்கள கூப்பிட வேண்டியதுதான். எதாவது ரொம்ப அவசியம்னா கூப்பிடுங்கன்னு அவங்க ஒரு மந்திரத்தை சொல்லியிருக்காங்க. அதை நான் சொல்லி அவங்களை இங்க வரவைக்கிறேன்..."

"மந்திரமா? இது என்ன பைத்தியகாரத்தனம்... அப்படி என்ன மந்திரம் அது?"

"அதை நான் வெளிய யாருக்கும் சொல்லக்கூடாது."

"இப்படி ஒரு விஷயம் வேறயா... சரி, அந்த மந்திரத்தை சொல்லி கூப்பிட்டு பாருங்க. வர்றாங்களான்னு நாங்களும் பார்க்குறோம்..." நட்ராஜ் அந்த நிலையிலும் மிக கோபமாக பேசினான். மூப்பரும் வேகமாக கைகளை கூப்பிக் கொண்டு 'சாமிமார்களே' என்று சொன்னபடி, மனதுக்குள் அந்த மந்திரத்தை தனக்குள் முணுமுணுத்துக் கொள்ளத் தொடங்கினார்.

ரேகா திலீப்பை மடியில் போட்டுக் கொண்டு, அவன் மார்பை தேய்த்துவிட்டபடியே அந்தக் காட்சியை பார்த்தாள். வள்ளியம்மை பயத்தில் சிவக்குமாரை ஒட்டிக் கொண்டு நின்றிருந்தாள். எல்லப்பனும் மனதுக்குள் வானத்துமனிதர்களை தியானிக்க ஆரம்பித்திருந்தான். ஒரு ஆச்சரியம் போல யானைகள் பிளிரும் சப்தம் மெல்ல குறையத் தொடங்கியது. சுவற்றை மோதி தகர்க்கும் முயற்சியும் நின்று போனது. மொத்தத்தில் அந்த குவார்ட்டர்சுக்கு வெளிப்புறத்தில் ஒரு அமைதி.

சிவக்குமாருக்கும் நட்ராஜ்க்கும் முதன் முறையாக ஒரு அதிர்வு கலந்த ஆச்சரியம் ஏற்பட்டது. மெல்ல பூனைபோல நடந்த சிவக்குமார், ஜன்னலை ஒட்டிச் சென்று வெளியே பார்க்க முனைந்தார்.

சூரியன் அஸ்தமித்து இருள் சூழ்ந்துவிட்ட அந்த அந்தி வேளையில் அவர் பார்த்த காட்சி அப்படியே பிரமிப்பு மூட்டியது.

அந்த யானைகள் ஒன்றாய் ஒரு இடத்தில் நின்றிருக்க, கையில் தீப்பந்தங்களுடன் வானத்து மனிதர்கள்! அதில் ஒரு வானத்துமனிதர் தும்பிக்கையில் குண்டு காயம்பட்ட யானையின் காயம்பட்ட இடத்தில் ரத்தத்தை துடைத்து மருந்து போல தயாராகிக் கொண்டிருக்க, மாட்டு வைத்தியர் போல ஒரு மனிதர் காலில் அடிபட்ட யானைக்கு ஊசி போட்டபடி இருந்தார். ஒரு வானத்து மனிதர் அதிக ஒளி மிகுந்த பேட்டரி சார்ஜர் விளக்கை பிடித்து வெளிச்சத்தை காட்டிக் கொண்டிருந்தார். அதுவரை கத்திக் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்த யானைகளின் சாந்தமான அணுகுமுறை அவர்கள் மொத்தபேரையும் பிரமிப்பில் ஆழ்த்திவிட, ஜன்னலில் தெரிந்த சிவக்குமார் முகத்தைப் பார்த்து ஒரு வானத்து மனிதர் பலத்த குரலில் பேச ஆரம்பித்தார்.

"டோன்ட் ஒர்ரி மிஸ்டர் பாரெஸ்டர். இதுங்களை நாங்க பார்த்துக்கிறோம். மூப்பரை வரச் சொல்லுங்க" என்றார்.

27

'பா'ரததேசத்தின் வனப்பகுதிகள், உலகின் மற்ற வனப்பகுதிகளோடு ஒப்பிடும்போது மிக வேறு பட்டவையாக தெரியும். உலகம் முழுக்க பெரும் காட்டுப்பகுதிகள் நிறையவே உள்ளன. அளவில் பெரிய காடுகள் ஆப்பிரிக்க கண்டத்தில்தான் உள்ளன. அமெரிக்காவின் அமேசான் காடும் அளவில் மிக பெரியது. இந்த காடுகளில், தாவரங் களுக்கு நடுவே கொடிய மிருகங்களும் வாழ்ந்து வருவது அனைவருக்கும் தெரியும். ஆனால், இந்த காடுகளில் எல்லாம் இயற்கையின் பஞ்சபூத சக்தி மட்டுமே உள்ளது. அந்த பஞ்சபூத சக்தியை

உணர்ந்து, அதை சமநிலைப்படுத்த முடிந்த முனிவர்களோ, ரிஷிகளோ இந்த காடுகளில் ஒருவர் கூட கிடையாது.

இந்தியக் காடுகளில் மட்டும்தான் அருளாளர்கள் எனப்படும் இவர்கள் உள்ளனர். இவர்கள் தங்கள் தவசக்தியால் மிருகங்களைக் கூட அடக்கி ஆளும் வல்லமை பெற்றிருந்தனர். உயிரினங்களில் பாம்பும், புலியும் உயிர் விழுங்கிகள். அதாவது, உயிரோடு உள்ள ஜீவன்களை இவைகள் அப்படியே விழுங்கி உண்டு உயிர் வாழ்ந்திடும். இந்த பாம்பையும், புலியையுமே தன் வசப்படுத்தி, கட்டி வைத்த வர்கள் நம் சித்தர்கள். புலிப்பாணி என்று ஒரு சித்தர், புலியின் மேல் அமர்ந்து சென்று குருவான போகரின் மயக்கத்தை நீக்குவதற்கு தண்ணீர் கொண்டு வந்தார். பாம்பாட்டி சித்தரோ, ராஜ நாகங்களை கூட தன் தோளில் போட்டுக் கொண்டு திரிந்தார்.

உலகிலேயே வனங்களையும் ஆட்சி செய்யும் தேசமாக இந்திய தேசம் திகழ்கிறது என்பதே உண்மை!'

"நீங்க உங்க வீரத்தை காட்ட
வேண்டியது எங்ககிட்ட இல்ல. அந்த
பசுக்காட்டு கிரிமினல்கள் கிட்டதான்.
அவங்களைப் பிடிங்க. உங்க பல
குழப்பங்களுக்கு விடை
கிடைக்கும்..."

அந்த வானத்து மனிதரின் அழைப்பைத் தொடர்ந்து மூப்பர் அந்த குவார்ட்டர்சிலிருந்து அவர்களை நோக்கி ஓடினார். வைத்தியன் எல்லப்பனும் அவரை பின் தொடர்ந்தான். சிவக்குமாருக்கு பேச்சே வரவில்லை.

ஒரு புராணக் கதையில் கூட இப்படி ஒரு சம்பவத்தை அவர் படித்தது கிடையாது. ஆனால், இப்போதோ அவர் கண்ண முன் அமானுஷ்யங்கள் சர்வ சாதாரணமாக அரங்கேறியபடி உள்ளன.

சிவக்குமார் மட்டுமல்ல, கேமராவும் கையுமாக பரபரப்பாக இருந்த திலீப், ரேகா என்று இருவரும் கூட நம்ப முடியாதபடி அந்த காட்சிகளை பார்த்தபடி இருக்க, வள்ளியம்மையும் அவர்களை கைகளை கூப்பிக் கொண்டு பார்த்தாள்.

படுக்கையில் கிடந்த நட்ராஜிடம், இதை எல்லாம் பார்க்க முடியாத தவிப்பு. இருந்தும் தரையோடு தரையாக கால்களை இழுத்துக் கொண்டு, கையாலேயே தன் உடம்பை ஊன்றி ஊன்றி இழுத்து வந்தவன், குவார்ட்டர்ஸ் வாசல் வழியே யானைகள் வானத்துமனிதர்கள் வசம் நாய்க்குட்டி போல அடங்கி நிற்பதைப் பார்த்தான்.

மூப்பர் அவர்களை நெருங்கிய மாத்திரத்தில் அவர்கள் கால்களில் விழுந்து எழ முயன்றார். ஆனால், ஒரு வானத்து மனிதர் அதை தடுத்தவராய், "மூப்பர் நீ கூப்பிட்ட உடனே வந்துட்டோம் பாத்தியா?" என்றார்.

"ரொம்ப சந்தோஷம் சாமி... ரொம்ப ரொம்ப சந்தோஷம். நான் ஜென்மம் கண்டு ஒரு நூறு வருஷ காலம் முடியப் போகுது. சத்தியமா சொல்றேன். இன்னிக்கு மாதிரி ஒரு மோசமான நாளை நான் பார்த்ததேயில்லை. இந்த யானைங்க கோபத்தால வைகுண்டம் போகப்போறது நிச்சயம்னு தான் நினைச்சேன். நல்லவேளை நீங்கள்லாம் வந்து காப்பாத்திட்டீங்க..."

"முழு மனசோட நீ கூப்பிடும் போது நாங்க வராம போயிடுவோமா... ஆமா இந்த கஜராஜாவை யார் காயப் படுத்தினது?"

"தற்காப்புக்காக ஆபீசர் அய்யா தான் துப்பாக்கியால சுட்டாருங்க..."

"எதுக்கு சுட்டுக்கிட்டு... கையெடுத்து கும்பிட்டு தாணு மாலயான்னு மண்டி போட்டிருந்தாலே அடங்கியிருக்குமே?"

"அப்ப இருந்த பதட்டத்துல தோணல சாமி. ஆனா நாங்க கூட பாதுகாப்புக்காக தான் காயப்படுத்தினோம். அதுக்கு முந்தியே ஒரு யானை காயம்பட்ட காலோட இங்க வந்து பிளறிகிட்டிருந்துச்சு சாமி... நான் வந்ததே இதுங்கள சமாதானம் செய்யத்தான்..."

"அப்ப இது ஆபீசர்கிட்ட நியாயம் கேட்டு வந்துருக்கு? ஒரு வானத்து மனிதர் அப்படி சொல்லவும், எல்லப்பன் நின்ற இடத்தில் இருந்தபடியே சிவக்குமாரைதான் பார்த்தான். அவரும் பிரமிப்பு கலையாதபடி நெருங்கி வந்தார். வானத்து மனிதர்களையே வெறித்து வெறித்து பார்த்தார்.

"என்ன சார் இப்படி பார்க்கிறீங்க... இந்த யானைங்க உங்கள தாக்க வரல. உங்க கிட்ட கம்ப்ளைண்ட் பண்ண வந்திருக்கு..."

"கம்ப்ளைண்ட்டா... யானைங்களா?"

"இங்க நின்னு பிளிறினதுக்கு பேர்தான் கம்ப்ளைண்ட். இதுங்க என்ன பேப்பர் வாங்கி பேனாவால எழுதி ஒரு கவர்ல போட்டா கொண்டு வந்து கொடுக்கும்?"

"ஐ கான்ட் பிலீவ்... ஆமா நீங்கள்லாம் முதல்ல யார்னு சொல்லுங்க. உங்களைப் பிடிக்கிறதுதான் என் நோக்கமே... கமான் நீங்கள்லாம் யார்? இந்த காட்டுல எங்க இருக்கு உங்க இருப்பிடம்? மாயாவிங்க மாதிரி வர்றீங்க, போறீங்க... உங்களை புரிஞ்சுக்கவே ஒரு தனி அறிவு தேவைப்படும் போல தெரியுதே...?'

சிவக்குமார் அந்த பிரமிப்பு கலையாத நிலையிலும், தன் மனதில் இருந்ததை கொட்டி விட்டார். ஆனால், அவர்களோ

பதிலுக்கு சிரித்தனர். தங்களுக்குள் கேலியாக பேசிக் கொள்ளவும் செய்தனர்.

"டேய் சிவா... நான் ஒண்ணு சொன்னா இவர் ஒண்ணு பேசுறார் பார்த்தியா?"

"அதானே... ஏ பிரம்மா... இந்த காட்டுல சிங்கம், புலி திரியலாம். மனுஷங்களான நாம திரியக் கூடாதா?"

"விடப்பா... புது ஆபீசர் புரியாம பேசுறார். ஹலோ மிஸ்டர் ஆபீசர். நாங்க யாரும் இந்த கர்ட்டுல ஒளிஞ்சு வாழல. இந்த காட்டுல நாங்க எங்க வேணா இருப்போம். எங்களுக்குன்னு ஒரு இடம் கிடையாது. இந்த காடே எங்க இடம்தான். எங்களுக்கு உதவி செய்ய மட்டும்தான் தெரியும். இதோ இந்த மூப்பர் கூப்பிட்டார், வந்தோம். ஏதோ எங்க ளால ஆன உதவியையும் செய்துட்டோம். இந்த யானைகள்ல ஒரு யானைக்கு யாராலோ காயம் ஏற்பட்டிருக்கு. அதுவும் பசுக்காட்டுக்குள்ள! உங்க ஆவேசத்தை அந்த பசுக்காட்டு பக்கம் போய் காட்டுங்க. நாங்களே கூட அங்க மனித நடமாட்டத்தை கவனிச்சோம். மனுஷங்கள்னா, இதோ இந்த ஆலயக்குடி மனுஷங்க கிடையாது. அவங்க வெளியே இருந்து வர்றாங்க, போறாங்க. நீங்க இப்ப எங்க கிட்ட பேசின மாதிரி வீராப்பா பேசி கிட்டெல்லாம் அங்க போயிடாதீங்க. அதான் ஒரு பட்டாலியனே வந்து இறங்கி யிருக்கே? அவங்களோட போய் அவங்க யார்னு பாருங்க. பசுக்காடு அமைதியா இருந்தா, இந்த பாரததேசமும் அமை தியா இருக்கும். அங்க அமைதி போச்சுன்னா டில்லியிலயும் போயிடும்..."

ஒரு குட்டையான வானத்துமனிதர் சற்று நீளவே பேசி முடித்தார். அவர் பேச்சு டில்லி வரை நீண்டதுதான் ஆச்சரியம்.

சிவக்குமாருக்கு தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது. திலீப் இந்த இடைவெளியில் திரும்ப

கேமராவை எடுத்து வந்து படம் பிடிக்க தொடங்கி யிருந்தான்.

"என்ன எங்களை போட்டோ எடுக்கணுமா?" ஒரு வானத்து மனிதர் கேட்டார். திலீப் வேகமாக தலையை அசைத்தான்.

"இருட்டிப்போச்சே... இந்த எமர்ஜென்சி வெளிச்சம் போதுமா?"

"இல்ல... என் கேமரா பிளாஷே போதும்..."

"அப்படியா... என்ன கேனன் எம் 200 கேமராவா?"

"ஆமாம்... உங்களுக்கு இந்த கேமரா பற்றி தெரியுமா?"

"இது என்ன... இதுக்கு மேல அட்வான்சா எவ்வளவோ கேமரா வந்தாச்சு. புஜன், உன் கேமரா, எக்ஸ்ரே வா கூட இயங்கும்தானே?"

திலீபுக்கு பதில் சொன்னபடியே புஜன் என்று ஒருவர் பெயரை அழைத்து அந்த வானத்து மனிதர் கேட்க, புஜன் என்கிற அந்த வானத்து மனிதரும்,

"யா... எக்ஸாக்ட்லி! என்கிட்ட இருக்கிற கேமரா, யுஎஸ்ல நாசால ஒர்க் பண்ற சில சயின்டிஸ்ட்கிட்டதான் இருக்கு..." என்றார்.

"நீயும் அங்க இருந்து வந்தவன்தானே?"

"ஓ... அதுவா? அது ஒரு வசந்தகாலம். இப்ப அங்க என்னை எல்லாரும் மறந்துருப்பாங்க..."

"நிச்சயமா இல்ல. அங்க இருக்கிற ரெக்கார்ட்ஸ்ல உன் பேர் நிச்சயமா இருக்கும்... என்ன, மிஸ் ஆயிட்டேங்கற குறிப்போட இருக்கும்..."

அவர்கள் தங்களுக்குள் பேசப்பேச, சிவக்குமாருக்கு அவர்களைப் பற்றி, அவர்கள் மறைமுகமாக உணர்த்துவது

போல் தோன்றியது. திலீப் அவர்களை சுற்றிச்சுற்றிவந்து ம ம் பிடித்தான்.

"சரிப்பா... இப்படியே நின்று பேசிக்கிட்டிருந்தா ப்படி? எனக்கு பசிக்குது. அவ்வா சமைச்சு வெச்சிருப்பா. கிளம்புவோம்."

"அதுவும் சரிதான், புறப்படுவோம்... ரைட்... கஜ ராஜாக்களா... புறப்படுங்க நீங்களும். இனிமே பசுக்காட்டுப் பக்கம் இரை தேடி போகாதீங்க. அந்த நடமாடுற சமூக விரோதிகளை நம்ம ஆபீசர் கட்டாயமாக பிடிச்சிடுவாரு. மே ான்ட் ஓர்ரி... புறப்படுங்க, புறப்படுங்க..."

ஒரு வானத்து மனிதர் கூறவும், யானைகள் அங்கிருந்து விலகிச் செல்ல ஆரம்பித்தன. மூப்பரும் வானத்து மனிதர்கள் கைகளை பிடி த்து கண்ணில் ஒற்றிக் கொண்டு நெகிழ அவர் களும் புறப்பட்டனர்.

"நில்லுங்க... உங்க கூட நாங்க நிறைய பேச வேண்டி யிருக்கு..." சிவக்குமார் அவர்களை தடுக்க முனைந்தார்.

"சாரி ஆபீசர்... நாங்க வந்த வேலை முடிஞ்சாச்சு. எங்களுக்கு பசிக்குது. நீங்க உங்க வீரத்தை காட்ட வேண்டி யது எங்ககிட்ட இல்ல. அந்த பசுக்காட்டு கிரிமினல்கள் கிட்டதான். அவங்களைப் பிடிங்க. உங்க பல குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். குறிப்பா நீங்க பொணமா பார்த்த காளி முத்து ஆபீசர் விஷயத்துக்கும் சேர்த்துதான் சொல்றேன்..."

அந்த பதிலோடு சிறுபிள்ளைகள் போல அவர்கள் அங்கிருந்து ஓடத் தொடங்கினர். மூப்பரும் சிவக் குமாரிடம் விடைபெற்று கொண்டார். நட்ராஜ் இமைத்த விழிகளை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான். மூப்பருடன் எல்லப்பனும் சேர்ந்து கொண்டான்.

"மூப்பா... இந்த காட்டுல தப்பு நடக்குதுன்னு நான் சந்தேகப்பட்டது சரியாப் போச்சு பார்த்தியா?" என்று பேசிக்

கொண்டே அவன் செல்வது எல்லார் காதுகளிலும் விழுந்தது.

சிவக்குமாரும் இறுக்கமான மவுனத்தோடு குவார்ட்டர்சுக்குள் நுழைந்தார். பெயர்ந்து கிடந்த ஜன்னல் கண்ணில் பட்டது. திலீப் அதைத் தூக்கி திரும்பவும் ஜன்னல் இருந்த பாகத்தில் வைக்க முயன்றான். ரேகா அவனுக்கு உதவி செய்தாள். தற்காலிகமாக ஜன்னல் நின்று கொண்டது.

ஹாலில் இப்போது அவர்கள் அவ்வளவு பேரும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். நாற்காலியில் அமர்ந்திருந்தார் சிவக்குமார். அப்படியே கைக்கடிகாரத்தை பார்த்தார். மணி எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. நட்ராஜிடம் பேச்சு மூச்சில்லை.

"நாளைக்கு முதல்ல இந்த ஜன்னலை சரி செய்யணும்ங்க..." என்றாள் வள்ளியம்மை.

"செய்துடுவோம்..."

"நடந்ததை நினைச்சா மலைப்பா இல்ல?"

"எனக்கு தலையை பிச்சுக்கலாமான்னு இருக்கு..."

"உண்மையில, நாம அவ்வளவு பேரும் இன்னிக்கு சாகப் போறது உறுதின்னுதான் நான் நினைச்சேன். உயிர் பிழைச்சு இப்படி பேசிக்கிட்டிருக்கறத நினைச்சா ஆச்சரியமா இருக்கு" இடையிட்டாள் ரேகா.

"ஆமாம் பாஸ். நாம பிழைச்சது நமக்கு மறுஜென்மம் மாதிரிதான். வானத்து மனிதர்கள் வந்திருக்கலேன்னா நாம நிச்சயம் செத்துருப்போம்..."

திலீப்பும் எக்சைட் ஆனான். ஆனால், சிவக்குமாரிடம் இறுக்கம் தொடர்ந்தது.

"நான் அந்த வானத்து மனுஷங்களைப் பற்றி யோசிச்சிட்டிருக்கேன்..."

"டோண்ட் ஒர்ரி... நான் என் செல்போன்ல ரெக்கார்ட் பண்ணிட்டேன். அவங்க நான் சந்தேகப்பட்ட மாதிரி விமான விபத்துல தப்பிச்ச விஞ்ஞானிங்கதான். புஜன்னு ஒருத்தர் நாசால ஒர்க் பண்ணதா சொன்னதை கேட்டீங்க தானே?"

"நல்லா கேட்டேன். அவங்களோட விஷய ஞானம் பிரமிப்பையும், குழப்பத்தையும் தருது..."

"இதுல குழப்பிக்க எதுவும் இல்ல. அவங்க தெளிவாக இருக்காங்க. காட்டுல தப்பு நடக்கிற இடத்தை அடையாளப் படுத்திட்டாங்க. நம்மள கண்டு ஓடி ஒளியல. இன்பாக்ட் எல்லாரும் நான் போட்டோ எடுத்தப்போ அப்படி சிரிச்சாங்க..."

"அதனால அவங்களை சந்தேகப்பட தேவையில்லன்னு சொல்றியா?"

"என்னால சந்தேகப்பட முடியல சார். அதைத்தான் நான் அப்படி சொன்னேன்..."

"என்னால சந்தேகப்படாம இருக்க முடியல. விஞ் ஞானிகள்தான் அந்த வானத்து மனுஷங்கன்னா, அவங்கள மந்திரத்தால எப்படி வரவழைக்க முடியும்?" பாயின்ட்டை பிடித்தார் சிவக்குமார்.

28

'இந்திய மண்ணில் அழியா இடம் பெற்றவை ராமாயணமும், மகாபாரதமும் ஆகும். தற்போது நிகழ்ந்து வரும் இன்டர்நெட் காலமாகிய இக்காலத் திலும் இவையிரண்டும் தன் முக்கியத்துவத்தை துளியும் இழக்கவில்லை. இன்றும் உபன்யாசம் செய்பவர்களாலும், சொற்பொழிவாளர்களாலும்

அதிகம் பேசப்படும் ஒன்றாக இவை இரண்டும் மட்டுமே உள்ளன.

இதில் ராமாயண நாயகன் ராமன், அந்த திருமாலின் அவதார வடிவம். இந்த ராமன் பதினான்கு ஆண்டுகள் கானகம் செல்ல வேண்டும் என்று கைகேயி சொன்னதும், அதன்படி மரவுரி அணிந்து ராமன் கானகம் சென்றதை அறிவோம்.

தன் மகன் பரதன் நாடாள வேண்டும் எனும் விருப்பத்தில் கைகேயி இவ்வாறு கட்டளை இட்டதாக ராமாயணம் கூறுகிறது. ஆனால், இதன் அடிப்படையான நுட்பம் வேறாகும். கைகேயி ராமனை கடல்கடந்து வேறு எங்காவது செல்ல வேண்டும் என்றோ, இல்லை ஏதாவது ஒரு மலை உச்சிக்கு சென்று அங்கு வாழ வேண்டும் என்று கூறியிருக்கலாம். ஆனால், கானகத்துக்கு அவன் மரவுரி தரித்துச் செல்லக் கட்டளையிட்டாள். இதன் அடிநாதமான விஷயம் கானகமும், அதன் உயிர்களும் அவதார புருஷன் ராமனின் கருணைக்கும் அருளுக்கும் இலக்காக வேண்டும் என்பதால்தான். ஒரு நாட்டின் அரசியாக விளங்கிய கைகேயியே கானகம் ராமனால் முதலில் ஆளப்படட்டும் என்று கருதினாள். பிறகே ராமன் அயோத்தி அரசனானான்.

"தேரையர் - இவர் மண்டை ஓட்டை
திறந்து மூளையில ஆபரேஷன்
பண்ணத் தெரிஞ்சவராம். அடுத்து
காகபுஜண்டர் - இவர் சாகாவரம்
பெற்றவர். ஒருவரை பார்த்த
மாத்திரத்தில் அவங்களோட
முன்ஜென்மம், அடுத்த ஜென்மத்தை
புட்டு புட்டு வைக்க முடிந்தவராம்..."

சிவக்குமாரின் கேள்வி திலீப்பை சிந்திக்க வைத்தது. நம் ராஜ்ம் அதை ஆமோதிப்பது போல பார்த்தான்.

"அவங்க மந்திரத்தாலத்தான் வந்தாங்கன்னு நாம எப்படி நினைக்கணும்? யானைகள் கத்தல்தான் காடு முழுக்க கேக்குதே? அதை கேட்டு அவங்க வரும் போது, இங்கே மறைப்பரும் மந்திரம் சொன்னார். இட் ஈஸ் ஏ கோ இன்சிடென்ட்ஸ்!"

ரேகா சிவக்குமாரின் கேள்வியை கோ இன்சிடென்ட்ஸ் . ஆக்க முனைந்தாள்.

"நோ... நோ... இது கோ இன்சிடென்ட்ஸ் இல்லை. யானத்து மனிதர்கள் ஒண்ணும் நம்மள மாதிரி நார்மல் ஹியூமன் பீயிங் கிடையாது. சம்திங் ஸ்ட்ரேஞ்..." சிலிர்த்தாள் வள்ளியம்மை.

"கரெக்ட். அவங்க நார்மல் ஹியூமன் கிடையாது. ஒ ருவத்துலதான் அவங்க மனிதர்கள். மற்றபடி அவங்ககிட்ட மனிதசக்திக்கு அப்பாற்பட்ட பல சக்திகள் இருக்கிறமாதிரி தான் தெரியுது. இல்லன்னா அவங்க வரவும், அவ்வளவு யானைகளும் நாய்க்குட்டி மாதிரி அடங்கிப்போகுமா?"

"மை டியர் பிரதர்... இன்னிக்கு நடந்த சம்பவத்துல ஒரு மிஸ்ட்ரியான விஷயம் உண்டுன்னா, அது அந்த யானைகள் அவங்களுக்கு கட்டுப்பட்ட அந்த ஒரு விஷயம்தான். மற்ற படி எல்லா விஷயமும் ஜஸ்ட் கோ இன்சிடென்ஸ். அதாவது, தற்செயலா நடந்தவைதான்."

"எப்படியோ ஒரு மிஸ்ட்ரி மேட்டர் இருக்கே? பை தவை இங்க இந்த சித்தர்களோட சக்தி பத்தியும் குறிப்பு இருக்கு. அதை படிக்கிறேன் கேளுங்க... சிவவாக்கியர் தங்கத்தை அற்பமாக கருதியவர். கோரக்கர் அடுப்புச் சாம்பலில் அவதரித்தவர். பாம்பாட்டி சித்தர் பாம்புகளோடு குழந்தை போல விளையாடுபவர். போகர் நவ பாஷாணத் தால் முருகனை செய்தவர். புலிப்பாணி இவர் காட்டுப்

புலியின் மேல் அமர்ந்து சென்று குருநாதர் குடிக்க தண்ணீர் கொண்டு வந்தவர்...”

“வாவ்... புலியையே கட்டுப்படுத்த முடியும்னா யானை கள்லாம் சாதாரணம்தானே?”

“திலீப் நீ தொடர்ந்து சொல்... யாரும் தயவு செய்து குறுக்கிட வேண்டாம்...”

“ரைட் சார்... பை த பை, போகர்ங்கிறவர் வான்வெளில பறவை மாதிரி பறந்தே போகத் தெரிஞ்சவராம். அப்படி அவர் பறந்து அடிக்கடி சீனாவுக்கு போயிடுவாராம்!”

“அடுத்து கருவூர் சித்தர்... இவருக்கு ஆகம சாஸ்திரம் முழுவதும் அத்துபடியாம். இவருக்கும் தங்கம் செய்யத் தெரியுமாம். அடுத்து தேரையர் - இவர் மண்டை ஓட்டை திறந்து மூளையில ஆபரேஷன் பண்ணத் தெரிஞ்சவராம். அடுத்து காகபுஜண்டர் - இவர் சாகாவரம் பெற்றவர். ஒருவரை பார்த்த மாத்திரத்தில் அவங்களோட முன் ஜென்மம், அடுத்த ஜென்மத்தை புட்டு புட்டு வைக்க முடிந்தவராம். கொங்கணர் - இவர் பார்வையாலேயே தீப்பிடிக்க வைப்பவராம். அப்படி இவர் பார்த்த பார்வை யால ஒரு கொக்கு எரிஞ்சு சாம்பலாகியிருக்கு... அடுத்து கருவெளி சித்தர். இவர்தான் ‘காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா’ன்னு பாடினவர். அப்புறம் இடைக்காடர்... இவர்தான் இப்ப கோயில்ல இருக்கிற நவக்கிரகங்களோட பொசிஷனை டிசைட் பண்ணுனவ ராம்...”

இன்டர்நெட் திலீப்புக்கு சித்தர்கள் பற்றிய விவரங் களை அள்ளிக் கொடுத்துக் கொண்டே போனது. கேட்க கேட்க பிரமிப்பாக இருந்தது. நம்பவும் முடியவில்லை. ஒரு கட்டத்தில் கையை உயர்த்தி திலீப்பை படித்தது போதும் என்று தடுத்தார். பின், “அந்த விமான விபத்து சம்பந்தப்பட்ட தகவல்களை பிரிண்ட் அவுட் எடு. அதோடு இவங்களை

இப்ப நீ எடுத்த போட்டோவோட பொருத்திப் பார். நிச்சயம் இவங்க யார்னு தெரிய வந்துடும்" என்றார்.

"முதல்ல அந்த போட்டோக்களை நான் டவுன்லோட் பண்றேன்..." என்ற திலீப், கேமராவில் இருந்து லேப் டாப்புக்கு டவுன் லோட் செய்தான். பின் அவர்களின் முகங்களை கவனிக்க ஆரம்பித்தான். முகம் உள்ள பகுதி இருண்டு தெளிவில்லாமல் இருந்தது. எல்லாரும் லேப்டாப்பை சுற்றி நின்று கொண்டு, அந்த வானத்து மனிதர்கள் முகங்களை போட்டோவில் பார்க்க ஆவலாயினர். ஆனால், எல்லாரிடமும் ஏமாற்றம்.

"என்ன இது... திலீப் நீ சரியா எடுக்கிறதுக்கு என்ன?"

"சரியாதான் சார் எடுத்தேன்... இப்படி ஒரு ரிசல்ட்டுக்கு சான்சே இல்ல.."

"அட போப்பா- அவங்க குடும்பி இப்ப நம்ம கைலன்னு நினைச்சேன். கடைசில எல்லாம் போச்சே?"

சிவக்குமார் வருத்தப்பட்டுக் கொள்ள, "நான் அவங்கள அந்த பதினெட்டு சித்தர்களாதாங்க நினைக்கிறேன். பதினெட்டு சித்தர்கள் அழிவில்லாதவங்கன்னு படிச்சிருக்கேன்.

இவங்க நிச்சயம் அவங்கதான். நீங்க இவங்க சொன்ன மாதிரி, அந்த பசுக்காட்டுல நடக்கிற தப்பை தடுக்கிற வழியை பாருங்க. அவங்க சொன்ன மாதிரி காளிமுத்து சாரை கொன்னு புதைச்சதும் யார்னு தெரிஞ்சிடும்."

வள்ளியம்மை மிக நம்பிக்கையாக பேசினாள். சிவக்குமாரிடமும் அதுதான் சரி என்பது போல் முடிவு.

29

'பேச்சு வழக்கில் வரம் என்னும் சொல் தனித் தன்மை கொண்டது. வரம் என்றாலே, சக்தி மிகுந்த வர்கள் நமக்கு தரும் நமக்கு மிக விருப்பமான ஒன்றாகும். வரம் பெறவும் முயற்சியும், அதிர்ஷ்ட மும் வேண்டும். அடுத்து வரம் என்றாலே அது மிக மதிப்பானது என்பதே அடிப்படையான விஷய மாகும். இம்மட்டில் வரத்தை மனிதர்களும், தெய்வங்களும்தான் தர வேண்டும் என்றில்லை. இயற்கை எனப்படும் காடுகளும் நமக்கு வரம் தரு பவையே. காடுகள் நமக்கு தரும் வரம்தான் தாவரம்!'

"ஒரு காலத்துல வனராமர் படை
இருந்துச்சு. அப்ப கள்ளத்தனமா
காட்டுக்குள்ள மரம் வெட்ட ஒரு
கூட்டம் வந்துச்சு. அதை விரட்ட
அமைச்ச படைதான் வனராமர் படை.
என் கொள்ளுப்பாட்டன் காலத்துல
நடந்த விஷயம் இது..."

மறுநாள்!

தாணுமாலய வனத்தின் அன்றைய விடியல் மிக ரசமானதாக இருந்தது. வானில் வெண்ணிற மேக மூட்டம். அதன் நடுவே சூரியன் மறைந்து மறைந்து வெளிப்படுவது. காலை வேளையில் அவன் வானில் கண்ணாமூச்சி விளை யாடுகிறானோ என்று கருதத் தோன்றியது. பனிக்காலத்தில் சாம்பிராணி புகை போட்டது போல் பனி மண்டிக்கிடக்கும். மற்ற காலங்களில் கண்ணுக்கு புலனாகாத பனிக்கூட்டம் உடம்பில் சிலுசிலுப்பாய் எதிரொலிக்கும்.

பனி அதிகம் இருந்தால், பட்சிகள் அவ்வளவாய் குரல் கொடுக்காது. குறைந்திருக்கும் நாட்களில் அவைகளிடம் சப்தம் அதிகமிருக்கும். அன்று அவ்வளவாக பனி இல்லை போலும். பறவைகளின் கும்மாளமான சப்தத்தை வைத்து அனுமானிக்க முடிந்தது.

தாணுமாலய வனத்தின் உச்சிப்பரப்பில் அன்னவாவி என்றொரு ஏரி உண்டு. பத்து ஏக்கர் பரப்பளவுக்குள்தான் இருக்கும். அங்கே போய் வருவது சிரமம். மிகவும் குறுகலான சிகரமாய் அந்த பாகங்கள் இருப்பதால், பறவைகளை தவிர பிற மிருகங்கள் அங்கு செல்வது இயலாத காரியம். எனவே பறவைகளுக்கு அன்னவாவி துளியும் தொந்தரவில்லாத சரணாலயமாக ஆகிவிட்டது. அங்கே அந்த ஏரி நீரை இமயத்தின் கைலாசமலை ஏரியான மானசரோவர் ஏரிக்கு சமமாக கருதுபவர்களும் உண்டு. அந்த நாளில் அன்னைப்பட்சி இனம் இருந்த போது, அன்னங்கள் அந்த ஏரிக்கு வந்து அங்கேயே தங்கி இருந்து விட்டு செல்லுமாம். அதனால்தான், 'அன்னவாவி' என்கிற பெயர் ஏற்பட்டது.

தாணுமாலயர்களில் சிலர் சித்ரா பவுர்ணமிக்கு அன்ன வாவிக்கு போய் குளித்து விட்டு, அங்கிருக்கும் நீரை குடுவையில் அடைத்து எடுத்து வருவார்கள். அந்த அன்ன வாவி உள்ள மலை உச்சி மேலே மட்டும் நிறைய மழை மேகங்கள் மண்டிக்கிடந்தன.

அந்த வனத்தின் தென்கரை நாட்டு கிராமத்தில் தன் மகளின் வீட்டில் தங்கியிருந்த மூப்பர், ஓடையில் குளித்து விட்டு ஈரவேட்டி முதுகின் மேல் காய நடந்து வந்து கொண்டிருந்தார். தென்கரை நாட்டில் ஓங்குதாங்காக ஒரு வாகை மரம் வளர்ந்திருந்தது. அதன் கீழ் மூப்பருக்காக வனக்குடிகள் காத்திருந்தது. அவர்களில் நீலியின் கணவன் இருளனும், வங்கியின் அப்பனான வண்டிமலை யானும் பவ்யமாக நின்று கொண்டிருந்தனர். மூப்பரும் நின்று விட்டார்.

"எலே என்ன இது காலங்காத்தால கூட்டமா நிக்கி றீங்க?"

"எல்லாம் உனக்காகத்தான் மூப்பா..."

"விஷயத்துக்கு வா. என்ன சமாச்சாரம்..."

"மூப்பா... நம்ப வனம் இப்ப நல்லவனமா இல்ல. புதுசு புதுசா முகங்க தெரியுது- யார் யாரோ வர்றாங்க, போறாங்க..."

"அது எனக்கும் தெரியும்... அப்புறம்?"

"தெரிஞ்சா ஆச்சா- இங்க நீலியும் வங்கியும் தொலைஞ்சு வேற போயிட்டாங்க..."

"என்னவே சொல்ற... பொட்டச்சிறுக்கிக சேலை வாங்குறேன், ரவிக்கை வாங்குறேன்னு டவுனு பக்கம் போயிருப்பாளுக..."

"அதுசரி- அப்படி போயிருந்தாலும் வந்துருக்கணுமே... நாலு நாளாச்சு... காடு முழுக்க சல்லடை போட்டு தேடிட் டான், வங்கி அப்பன் வண்டிமடையான்."

"எலே வண்டி ... இவன் சொல்றது நெசமாலே?"

"ஆமா மூப்பா... என் மவளுக்கும் அவ மாமனுக்கும் கல்யாணம்னு வேற முடிவு பண்ணியிருந்தேன். பாவி மக என் தலைல கல்ல தூக்கி போட்டுட்டு எங்கியோ போயிட்டா..."

"போனவ என் பொஞ்சாதியையும்ல இழுத்துகிட்டு போயிருக்கா..." இருசன் இடையிட்டான்.

"அந்த வளையக்காரன் மேலதான் எனக்கு சந்தேகம். உன் பொண்ணை அவன்தான் சுத்திச்சுத்தி வந்தான்..."

"யாரு... அந்த நாடி முத்துவை சொல்லுறியா நீ...?'

"அந்த நாய்தான்... அவனாலதான் நம்ம பெண்டுக அவ்வளவு பேரும் குடிச்சுவரா போயிட்டாளுக... வளவி,

பெரு, பாடி, வெள்ளப்பசைன்னு கண்ட கழுதையை கூப்பிடி நம்ம பொட்டச்சிகளை கெடுத்தவன் அவன்..."

"சரி இப்ப என்ன செய்யலாம் சொல்லுங்க..."

"ஒண்ணு, நாம ஒண்ணா சேர்ந்து ஒரு காலத்துல வெள்ளைக்காரனால களவுப்பிரச்னை வந்தப்போ வனராமர் சேனை'ன்னு ஒண்ணை உருவாக்குன மாதிரி, இப்பவும் உருவாக்கி மொத்தக்காட்டுக்குள்ளயும் ஒரு சுத்தி சுத்தி வரணும். அப்படி கட்டுப்பாடா நம்ம நிலைபாட்டை சொல்லி, புது மனுஷாள் யாரும் இனி நமக்கு தெரியாம நம்ம நாட்டுக்குள்ள நுழையை முடியாதபடி செய்யணும்."

"நல்ல விஷயம்தான். அப்படியே செய்துடுவோம். முக்கியமானவங்களை கூப்பிட்டு தமுக்கு போட்டு இந்த விஷயத்தை முதல்ல சொல்லச் சொல்லு. எங்க கொம்பூதி... அவனும் கூட போயிடட்டும்..."

"அதுக்கு முந்தி விருட்ச மரத்துக்கிட்ட வந்து கட்டுச் சங்கிலியை எடுத்து கொடு... அதை கட்டிக்கிட்டு போனா தானே நாட்டு மக்களும் நின்னு கவனிப்பாங்க..."

"நல்லது... உச்சி வேளைக்கு விருட்ச மரத்துகிட்ட எல்லாரும் வந்துடுங்க. நான் கட்டுச்சலங்கையோட வந்து காலில கட்டியே விட்டுடறேன். எனக்கும் வனம் போற போக்கு சரியில்லன்னு நல்லா தெரியுது. வானத்து மனுஷங்க மட்டும் இந்த வனத்துல இல்லாம போயிருந்தா, நானே கூட இப்ப உங்க முன்னால உசுரோட இருக்க முடியாது. ஆனைக் கூட்டம் என்ன மிதிச்சு கொன்னுருக்கும்..."

மூப்பர் சொன்னதைக் கேட்டு அவர்கள் முகத்தில் அதிர்ச்சி. இருசன் மட்டும் ஒரு முடிவோடு அங்கிருந்து விலகி, சிவக்குமாரின் குவார்ட்டர்சை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

சமையற்கட்டில் வள்ளியம்மையும் ரேகாவும் காலை டிபன் தயாரிப்பில் மும்முரமாக இருந்தனர். திலீப் ஷேவ் செய்து கொண்டிருந்தான். நட்ராஜ் முகத்தில் தீவிர சிந்தனை

சிவக்குமார் செல்போனில் டவர் சரியாக கிடைக்கும் இடமாக தேடிச்சென்று பேசிக் கொண்டிருந்தார். தீவிரமான ஆக்ரோஷமான பேச்சு. அதிலிருந்தே பசுக்காட்டை சுற்றி வளைப்பதில் அவர் மும்முரமாயிருப்பதை உணர முடிந்தது.

கச்சிதமாய் இருசன் வந்தான். சிவக்குமாரை பார்த்த படியே வீட்டு வாசலுக்கு வந்தான். வள்ளியம்மை பார்த்து விட்டு உள்ளே அழைத்தாள். வந்தவன், ஜன்னல் இடிந்து சட்டம் பொருத்தப்பட்டிருப்பதை பார்த்தான். ஆச்சரியம் அவன் முகத்தில் எகிறிக் குதித்தது.

"எப்படிம்மா இப்படி ஆச்சு?"

'அத ஏன் கேட்கிற... ராத்திரி யானைங்க வந்து அட்ட காசம் பண்ணிடுச்சு!"

"அதான் மூப்பர் அப்படி சொன்னாரா?"

"அப்ப மூப்பரை பார்த்துட்டு வர்றியா நீ?"

"ஆமாம்மா. நீலி வேற காணாம போயிட்டா."

"என்னது நீலி காணாம போயிட்டாளா?"

வள்ளியம்மை பதைக்க, சிவக்குமாரும் போன் பேசி விட்டு வந்து அதைக் கேட்டு துணுக்குற்றார்.

"நீலி மட்டுமில்லம்மா... எங்க கூட்டத்து பொண்ணு ஒருத்தி வங்கின்னு பேர்... அதுவும் காணோம்"

"எப்ப இருந்து இருசா?"

"நாலு நாளாவே அவங்க காணோம் சார்... காட்டுல தப்பா ஏதோ நடக்குது சார். மூப்பரே வருத்தப்பட்டார். வனராமர் படையை இன்னிக்கு அமைக்கப் போறோம்."

"வனராமர் படையா?"

"ஆமாம். ஒரு காலத்துல வனராமர் படை இருந்துச்சு. அப்ப கள்ளத்தனமா காட்டுக்குள்ள மரம் வெட்ட ஒரு

கூட்டம் வந்துச்சு. அதை விரட்ட அமைச்ச படைதான் வானரர்கள் படை... என் கொள்ளுப்பாட்டன் காலத்துல நடந்த சம்பவம் இது..."

"வினோதமா இருக்கே. அதெல்லாம் வேண்டாம். இப்ப நீதான் எங்க டிபார்ட்மெண்ட் இருக்கே...?"

"அப்ப உங்களால என் நீலியை கண்டுபிடிச்சு தர முடியுமா?"

"ஏன் முடியாம... இந்த காட்டையே தலைகீழா மாத்த தான் நான் வந்துருக்கேன். எல்லா ஏற்பாடும் நடந்து கிட்டு இருக்கு. இந்த வானத்து மனுஷங்களைத்தான் கொஞ்சம் கூட புரிஞ்சுக்க முடியல..."

சிவக்குமார் போட்டு வாங்க ஆரம்பித்தார்.

"அவங்க நல்லவங்கதான் சார்... சாமி மாதிரீங்க..."

"அப்ப அவங்ககிட்ட நீ உன் நீலி என்ன ஆனான்னு கேட்க வேண்டியதுதானே?"

திலீப் எடுத்து கொடுத்தான்.

"அதுவும் நல்ல யோசனைதாங்க. கடைசில யாராலயும் முடியாட்டி அவங்ககிட்டதான் கேட்கணும்..."

"ஏய் நான் சும்மா பேச்சுக்கு சொன்னேன். கவலைப் பட வேண்டாம். ஒரு போலீஸ் போர்ஸ் வந்து இறங்கியிருக்கு. அனேகமா உன் நீலி இந்த காட்டை கெடுத்துக்கிட்டு இருக்கிற கூட்டத்து கிட்டதான் சிக்கியிருப்பா..."

"காட்டை கெடுத்துக்கிட்டு இருக்கிற கூட்டங்களா?"

"ஆமாம்... ஏன் நம்ப முடியலியா?"

"இல்ல, உங்களுக்கு எப்படி தெரியும்?"

"அதுவா இப்ப முக்கியம்... நீ கூடவே இரு. எங்களுக்கு உதவியா இருக்கும்." சிவக்குமார் சொல்லவும், ஒரு பிளேட்டில்

இட்லி வைத்து சட்னியோடு எடுத்து வந்து தந்தனர். அவன் தயங்கினான். அவர்களுக்கு சமமாக சாப்பிட என்னவோ போல் இருந்தது. ஆனால், திலீப் ஊக்கப்படுத்தினான். நட்ராஜ் மவுனமாக பார்த்துக் கொண்டிருந்தான். மனதுக் குள் பல்வேறு விதமாய் எண்ணங்கள். சிவக்குமார் அள்ளி விழுங்கிவிட்டு பாத்ரூம் நோக்கிச் செல்ல, இருசனையும், திலீப்பையும் அருகில் அழைத்தான் நட்ராஜ்.

"என்ன பாஸ்?"

"திலீப், நீ இருசனோ புறப்படு. இருசா, நீ போய் அந்த வானத்து மனுஷங்களை பார்த்து உன் பொண்டாட்டி பத்தி கேள். அவங்க என்ன சொல்றாங்கன்னு முதல்ல தெரிஞ்சுக்கு வோம்..."

"ஆனா பெரியவர் கூட இருக்கச் சொன்னாரே..."

"அவரை நான் பார்த்துக்கிறேன். திலீப் நீ புறப்படு..."

"என்ன பாஸ். வானத்து மனிதர்கள் இருப்பிடத்தை தெரிஞ்சுக்கத்தான போகச் சொல்றீங்க?"

"அதுக்கு மட்டுமில்ல. அவங்க என்ன சொல்றாங்க, எப்படி சொல்றாங்கன்னும் தெரியணும்."

"நினைச்சேன்... சரி நான் புறப்படுறேன்."

திலீப் சிவக்குமார் பாத்ரூமில் இருந்து வரும் முன் இருசனோடு புறப்பட, ரேகா அதை கவனித்தாள். திலீப் அவளுக்கு சமிக்ஞை காட்டினான். அவளும் புரிந்து கொண்டாள். வேகமாய் அவனை நெருங்கி, 'திலீப் கேர்புல்' என்றாள்.

"நோ பிராப்ளம் ரேகா. நீ தைரியமாக இரு" என்றவன் இருசனோடு வெளியே இறங்கினான்.

"நடந்து போறோமா இல்ல கார்ல போலாமா?" என்று கேட்டான்.

"நா ந்தே போலாம் சாமி..."

"அவங்க இருக்கிற இடம் தெரியுமா?"

"அது தெரியாது. ஆனா விருட்சமரத்தை சுத்திகிட்டு அவங்களை நினைச்சு கும்பிட்டா வருவாங்க..."

"கட்டாயம் வருவாங்களா?" நடக்க ஆரம்பித்தபடி கேட்டான். "கட்டாயம் வருவாங்க தம்பி..."

"அப்ப நீ இன்னிக்கு கூப்பிடுற. ஆனா நான் உன் கூட இருக்க மாட்டேன். தூர நின்னுக்கிறேன். நீ உன் பொண்ணு பத்தி கேள். என்ன சொல்றாங்கன்னு நான் தூர இருந்து பார்க்கிறேன்."

கையில் கேமராவுடன் அவன் சொன்ன விதமே இருசனை சற்று சலனப்படுத்தியது.

30

*'வ*னம் ஒன்று, தமிழ் வளர்க்க ஒரு நகரமாக மாறிய வரலாறு உங்களுக்கு தெரியுமா? அதைத் தெரிந்து கொள்ள முதலில் இந்திரனிடம் செல்ல வேண்டும். இந்திரன் என்ற உடனேயே இந்திரலோகமும், அங்கு நடக்கும் ஆட்டம் பாட்டங்களும் நம் நினைவுக்கு வர வேண்டும். அது அந்த அளவு கோலாகலமான ஒரு உலகமாகும். அங்கேதான் நவகிரகங்களில் ஒருவரான பிரகஸ்பதி என்னும் வியாழ குரு, இந்திரனால் அலட்சியம் செய்யப்படுகிறார். அதன் விளைவாக, இந்திரனும் குருவின் சாபத்துக்கு ஆளாகி, அவன் ரூபம் மிக குரூரமாக மாறிப் போகிறது. பின் சாப விமோசனமாக பூலோகத்தில் உள்ள வனம் ஒன்றில் இருக்கும் சிவபெருமானின்

லிங்க உருவத்தை தரிசனம் செய்ய, அவன் குரூரம் நீங்கி மீண்டும் பொலிவடைகிறான். பின் அந்த வனத்தை திருத்தி, அங்கேயே சிவபெருமானுக்கு கோயில் எழுப்பி, ஒரு நகரமும் அமைக்கிறான். அப்படி அவன் திருத்திய வனம்தான் கடம்பவனம். அமைத்த நகரம்தான் மதுரை!'

"சாமிமாருங்களா... கொஞ்சம் வாங்க!
நான் என் பொஞ்சாதியை காணாம
தவிச்சு போய் கிடக்கேன். கொஞ்சம்
வந்து வழி காட்டுங்க. உங்க பாதம்
தொட்டு கேட்டுக்கிறேன்..."

திலீப் சொன்னதைக் கேட்ட இருசன் நின்று திலீபை ஒரு வினாடி வெறித்தான்.

"என்ன இருசா நின்னுட்ட?"

"இல்ல... வந்ததுல இருந்தே பார்க்கிறேன். நீங்க எல்லாத்தையும் சந்தேகப்படுறீங்க. ஆராய்ச்சி பண்றீங்க. நம்பிக்கை மட்டும் வைக்க மாட்டேங்கிறீங்க."

"இதோ பார் இருசா... நான் இப்ப உன் முன்னால நடந்துக்கிற மாதிரி விஞ்ஞானிங்க நடந்துகிட்டதாலதான், இதோ கழுத்துல தொங்குதே கேமரா... இதை கண்டுபிடிக்க முடிஞ்சது. பாக்கெட்டுல இருக்கே செல்போன் அதை கண்டுபிடிக்க முடிஞ்சது. உனக்கு சொன்னா புரியாது... நீ இந்த காட்டுலயே பிறந்து வளர்ந்தவன். படிப்பறிவில்லாத தால உங்களை சுலபமா ஏமாத்திடலாம். எதையும் கேள்வி கேட்டு புரிஞ்சுக்கிற சக்தியும் உங்களுக்கு கிடையாது. ஆகையால இப்ப என் பேச்சைக் கேள்... தப்பா நிச்சயம் எதுவும் நடந்துடாது. வானத்து மனுஷங்க நீ சொல்ற மாதிரி

நல்லவங்களா இருந்தா, நானும் அவங்கள நிச்சயம் பாதுகாத்துட்டு போறேன்...”

ஒரு நீண்ட விளக்கம் தந்து இருசனை இழுத்துச் செல்கிறான். மலைப்பாதைகளில் அங்கங்கே வளைவாகவும் குறுகலாகவும் பிரிவுகள். அவை சரிந்தும் மேலேறியும் பல திசைகளில் சென்றது. அதன்மேல் இருசன் நடக்க, திலீப் பின் தொடர்ந்தான். கைக்கடிகாரம் மணி ஒன்பதை கடந்து விட்டிருந்தது. பனி முழுமையாக விலகி, சூரியக்கதிர்கள் ஒளிக்கோடுகளை மரங்களுக்குள் நுழைத்திருந்தது.

கரடி ஒன்று பாறை ஒன்றின் மேல் ஜம்பமாக உட்கார்ந்து கொண்டு மார்பு முடியில் சிடுக்கு எடுத்தபடி இருந்தது. அதைப் பார்த்துவிட்டு கேமராவில் படம் எடுக்க முயன்ற திலீப்பை வேகமாய் இருசன் தடுத்தான்.

“என் இருசா?”

“பேசாம வாங்க... அது தன்னை தாக்க முயற்சி செய்யறதா நினைச்சிட்டா, நாம தொலைஞ்சோம். இப்ப கூட நான் கூட வர்றதாலதான் அது உங்கள எதுவும் செய்யல. நீங்க தனியா வந்திருந்தா நீங்க அவ்வளவு தான்.” என்றபோது திலீப்புக்கு பகீரென்றது.

சிவக்குமார் மிடுக்காக தன் யூனிபார்மில் புறப்பட்டு விட்டார். எங்கே திலீப் என்று தேடவும், நட்ராஜ் படுத்த படியே பதில் சொன்னான்.

“பிரதர்... திலீப் இருசன் கூட வெளிய போயிருக்கான்.”

“எங்க நட்ராஜ்?”

“அந்த வானத்து மனுஷங்க இருக்கிற இடத்தை தெரிஞ்சுக்கதான் திலீப் போயிருக்கான்.”

“அதான் நான் ஒரு பட்டாலியனோட காட்டையே கலக்கப் போறேனே... தனியா திலீப் வேற எதுக்கு?’

"ஒரு விஷயத்துல இரண்டு பேர் இரண்டு விதமா முயற்சி செய்யறது ஒண்ணும் தப்பில்ல. நான் கால் ஒடிஞ்சதால இங்க இருக்கேன். இல்லேன்னா எப்பவோ அவங்கள பத்தின பல உண்மைகளை கண்டுபிடிச்சிருப்பேன். இப்ப எனக்கு பதிலா தான் திலீப் போயிருக்கான்..."

"அவனுக்கு ஏதாவது ஆயிட்டா...?"

"இப்படியெல்லாம் பயந்தா எதையும் கண்டுபிடிக்க முடியாது. திலீப் என் சிஷ்யன் தான். ஆனா, பல விஷயத்துல அவன் குருவை மிஞ்சின சிஷ்யன். அவனை அவனே பார்த்துக்குவான்."

நட்ராஜ் பதில் சிவக்குமாருக்கு சற்று எரிச்சலை தந்தது. இருந்தும் அடக்கிக் கொண்டு புறப்பட்டார். வீட்டு வாசல் கதவை தாண்டும் முன் கைத்துப்பாக்கியை எடுத்து உள்ளே தோட்டாக்கள் இருக்கிறதா என்று ஒரு பார்வை பார்த்துக் கொண்டார்.

காட்டுப்பாதையில் இருசனும் திலீப்பும் நெடுந்தூரம் வரை கடந்துவிட்டிருந்தனர். மணியை பார்த்தபோது பத்தைத் தாண்டியிருந்தது.

"இருசா, இன்னும் எவ்வளவுதூரம் போகணும்? இப்படின்னு தெரிஞ்சிருந்தா பேசாம ஜீப்புலயே வந்துருக்கலாம்."

"வந்தாச்சு சார். அதோ பாருங்க விருட்ச மரம்..."

இருசன் கைகாட்ட, விருட்சமரம் கண்ணில் பட்டது. மரத்துக்கு மேல் பளீச்சென்று லைட்டிங் செய்யப்பட்டது போல் ஒரு ஒளி. நின்ற இடத்தில் இருந்தபடியே ஒளியோடுகூடிய அந்தக் காட்சியை திலீப் படம் எடுத்துக் கொண்டான்.

இருசன் அது தவறு என்பது போல பார்த்தான்.

"என்னப்பா மரத்தை போட்டோ பிடிக்கக் கூடாதா?"

"உங்களுக்குத்தான் காய்ச்சல், குளிர்வரும்..."

"இப்படி ஒரு மிரட்டல் வேறயா?"

"வரும்போது தெரிஞ்சுகிட்டுபோங்க, இப்ப என்ன...?"

"ஏம்பா இருசா... கிருமிகள் உடம்பை தொத்திக்கும் போதுதாம்ப்பா காய்ச்சலும், குளிரும் வரும். போட்டோ எடுத்தா வரும்னா எப்படிப்பா?"

"எடுத்தவங்களுக்கு வந்து பார்த்திருக்கேங்க. ஒரு பத்திரிகைகாரர் வளைச்சு வளைச்சு எடுத்தார். கடைசில ரெண்டு மாசம் படுத்த படுக்கையாயிட்டார்..."

"போதும் இருசா போதும். உனக்கு பாடம் எடுக்க எங்னால முடியாது. நான் இங்கேயே நின்னுக்கிறேன். நீ இப்ப மரத்துகிட்ட போறே. வானத்து மனுஷங்களை கூப்பிடுற. உன் பொண்டாட்டி, அப்புறம் வங்கியும் எங்கே இருக்காங்கன்னு கேட்கிற. அவங்க இருக்கிற இடம் தெரியணும். தெரிஞ்சா போதும், மிச்சத்தை சிவக்குமார் சார் கிட்ட சொல்லி நாம பார்த்துப்போம். முதல்ல சொல்றாங்களான்னு பார்க்கிறேன்..."

திலீப்பின் குரலில் அவ நம்பிக்கை தெரிந்தது.

இருசன் வேகமாக விருட்சமரம் நோக்கி ஓடினான். தாணுமாலயக்குடி இளம் சிறுமிகள் இரண்டு பேர், அந்த மரத்து இலை கீழே உதிர்ந்து விழுந்தால் எடுத்துக்கொள்ள தயாராக ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தனர்.

பக்கத்து நகரில் இருந்து சிலர் வந்து மரத்தை சுற்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் வந்திருந்த மாருதி கார் ஒன்று சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தது. இருசன் அவர்களைப் பார்க்கவும், சற்று நெளிந்தான். அங்கிருந்தபடியே திலீப் இருந்த இடத்தை பார்த்தான். திலீப் தன் கேமராவில் ஜூம் செய்து பார்த்துக் கொண்டிருந்தான்.

இருசன் அவர்கள் வணங்கி விட்டு போகட்டும் என்று காத்திருக்க தொடங்கினான். அவர்களும் வணங்கி முடிந்த வர்களாக, மரத்தை அண்ணாந்து பார்த்தனர். அவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கும் தங்களுக்கு அதன் இலை கிடைத்தால் சந்தோஷப்படுவார்கள் போல் தோன்றியது.

அப்போது ஒரு இலை உதிர்ந்து, இருசன் தலை மேலேயே விழுந்தது. அவனும் அதை தன் வலக்கையால் எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டான். அவர்கள் அவனை ஏக்கமாய் பார்க்கவும், அந்த இலையை அவர்களிடம் தந்தான். உடனே ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து அவர்களில் ஒருவர் தந்தார்.

"பரவால்லயா... பணம்லாம் வேண்டாம். உங்க கோரிக்கை நிறைவேறினா போதும். எல்லாம் நல்லபடியா நடக்கும். பொறப்படுங்க..." என்றான். அவர்களும் மகிழ்ச்சி பொங்க புறப்பட்டனர். அந்த சிறுமிகள் அவர்களை பரிதாப மாக பார்க்கவும், இரண்டு பிஸ்கட் பாக்கெட்டுகளை எடுத்து தந்தனர்.

இருசன் கண்ணீரோடு கை கூப்பியவனாக, விருட்ச மரத்தை ஒரு வலம் வந்தான். பின் கண்களை மூடிக் கொண்டு வானத்து மனிதர்களை நினைக்க ஆரம்பித்தான்.

'சாமிமாருங்களா... கொஞ்சம் வாங்க! நான் என் பொஞ்சாதியை காணாம தவிச்சு போய் கிடக்கேன். கொஞ்சம் வந்து வழி காட்டுங்க. உங்க பாதம் தொட்டு கேட்டுக்கிறேன்...' என்று அவன் மனம் உருகி அழ ஆரம் பித்தது.

அப்போது விருட்சமரம் பின்னால் இருந்து ஒரு வானத்து மனிதர் வெளிப்பட்டார். அவர் மரத்தை ஒட்டி நின்று கொண்டு இருசனை பார்த்து சிரித்தார்.

"சாமி வந்துட்டீங்களா?"

"நீ கூப்பிட்டா நான் வந்துதானே ஆகணும். இப்படி கிட்ட வா..." அவர் அவனை மரத்தின் பருத்த பாகத்தின் பக்கம் அழைத்தார். திலீப்புக்கு இருசன் தெரியாமல் மறைந்தான். மரத்தண்டு மறைத்து நின்றது.

'ஐயோ... இவன் மரத்துகிட்ட எதுக்கு போனான்? அங்கே என்ன பண்றான்?' என்று திலீபின் மனம் அரற்றத் தொடங்கியது.

இருசன் வானத்து மனிதரிடம் பேசியபடி இருந்தான். அவன் திலீப்பை மறந்தே போயிருந்தான்.

"சாமி... என் பொஞ்சாதி நீலியையும், அவ சினேகிதி வங்கியையும் காணல சாமி. எங்க போனாளோ, என்ன ஆனாளோ... பயமா இருக்கு சாமி! அவங்க இருக்கிற இடம் தெரியணும் சாமி..." இருசன் பேசப்பேச, கண்ணீர் கன்னத்தில் வழிய ஆரம்பித்தது. அந்த வானத்து மனிதர் அவனை நிர்மலமாய் வெறித்தார்.

"சாமி... என்ன சாமி எதுவும் பேசாம பார்க்கிறீங்க?"

"பார்க்காம என்னப்பா பண்ண... யாரா இருந்தாலும் இந்த பூமியில பிறந்துட்டா ஒரு நாள் இறந்துதானே தீரணும்?"

"ஐயோ சாமி. நீங்க என்ன சொல்றீங்க?'

"பேயடிப் பள்ளத்துல போய் பார். உனக்கே எல்லாம் தெரியும்..."

"பேயடிப் பள்ளத்துலயா... அப்படின்னா என் நீலி?"

"போப்பா, போய் பார். நீ கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லிட்டேன். வரட்டுமா?"

அப்படியே மரத்தின் பின்புறம் சென்றவர், அங்கிருந்த புதர் ஒன்றுக்குள் புகுந்தார். அவ்வளவுதான் மறைந்து விட்டார்.

இருசனும் மரத்தை விட்டு சாலைப்பக்கம் வந்தான். திலீப் ஓடி வந்து, "ஏ இருசா எங்க போயிட்ட?" என்று கேட்டான்.

"இங்க தானங்க இருக்கேன்..." என்றான் அழுதபடியே.

"நீ இந்த மரத்துகிட்ட போகவும், என்னால உன்னை பாக்க முடியல. எங்கேயோ போயிட்டேன்னு நினைச்சு ஓடி வந்தேன்... ஆமா, ஏன் அழுவுற?"

"நீலியும், வங்கியும் பேயடிப்பள்ளத்துல கிடக்கிறதா வானத்து மனுசர் சொல்லிட்டு போறாரு..."

"பேயடிப்பள்ளமா... கேட்ட மாதிரி இருக்கே?"

"ஐயோ அது எங்க மயானங்க. குறை உசுரா போனவங்க உடம்பை நாங்க தூக்கி வீசுற இடம்..."

"மூப்பர் இருக்கும் போது இரண்டு பேர் வந்து பேயடிப் பள்ளத்துல ஒருத்தர் விழுந்துட்டார்னு சொன்னாரே, அந்த இடம்தானே?"

"அதே இடம்தான்..."

அப்ப அவங்களுக்கு என்ன ஆகியிருக்கும்?"

"ஐயோ என்ன சார் கேள்வி இது? இரண்டு பேரும் அங்க பொணமா கிடக்குறாங்க சார்..."

"இருசா... என்ன சொல்ற நீ?"

"அவங்க சாவை சொல்லாம சொல்லிட்டு போயிட் டாரு சாமி..."

"வந்தவர் உடனே போயிட்டாரா?"

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிட்டா சாமிங்க நிக்க மாட்டாங்க..."

"நான் படம் பிடிக்க நினைச்சேன். ஆனா டிரிக்கா சிக்காம தண்ணி காட்டிட்டாரே எனக்கு..."

"சார் உங்களுக்கு உங்க கவலை. எனக்கு என் நீலி போயிட்டாளே சார்... நான் இனி என்ன சார் பண்ணுவேன்."

இருசன் கதறி அழத் தொடங்கினான்.

"அழாதே... வா முதல்ல அங்க போய் பார்ப்போம். அந்த பேயடிப் பள்ளமும் என் டார்கெட்டுல இருக்கிற இடம்தான்..."

இருசனை திலீப் இழுத்துக் கொண்டு நடந்தான்.

"போற வழியில வங்கியோட அப்பன் வண்டி மடையனையும் கூட்டிக்குவோம். அப்படியே எங்காளுங்க நாலு பேரோட போனாதான் அங்க பாதுகாப்பா போக முடியும்..."

"இல்லன்னா?"

"ஐயோ அங்க பொணம் தின்னி காட்டு நாயுங்களும், நரிங்களும் திரியும். ஒத்தையா மனுஷங்களைப் பாத்தா அவ்வளவுதான்..."

"நீ உயிரோட பார்க்கிறதுக்கே இப்படி சொல்றியே... அவங்க உடம்பு இன்னுமா அப்படியே இருக்கும்னு நினைக்கிற?"

திலீப் கேட்கவும், இருசனுக்கு மயக்கம் வர ஆரம்பித்தது.

31

'கடம்ப வனம்தான் மதுரை என்றானது. அது ஏன் மதுரை என்றானது தெரியுமா? இந்திரன் நகரத்தை உருவாக்கி, தான் எழுப்பிய கோயிலுக்கு குடமுழுக்கும் செய்தான். அப்போது பெரிதும் மகிழ்ந்த சிவபெருமான், தன் சிரசின் மேல் உள்ள

சடைக்குள் இருந்து அங்கே அடைந்து கிடக்கும் கங்கையோடு, வற்றாத சுனையாக இருக்கும் அமிர்தச் சுனையில் இருந்து அமிர்தமாகிய மதுவை எடுத்து இந்திரன் அமைத்த நகரின் மேலும் கோவில் மேலும் தெளித்தாராம்.

மதுவாகிய மதுரம் என்னும் அமிர்தத் துளிகள் பட்ட நகரம் என்கிற காரணத்தால், அந்த நகரம் மதுரை என்று அழைக்கப்படலாயிற்று.

மதுரைக்கு வடக்கில் அழகர் மலை எனும் மலை ஒன்று உண்டு. அங்கேயும் ஒரு வனம் உண்டு. இங்கே நூபர கங்கை என்று ஒரு ஊற்று உள்ளது. வற்றாத இந்த ஊற்றின் நீர் மிகுந்த மருத்துவ குணம் கொண்டது. இந்த வனத்துக்கு அர்ஜுனன் வந்து இந்த நூபர கங்கையிலும் நீராடியுள்ளான்!'

"மலை முழுக்க இருக்கிற எல்லா
கிராமத்துக்கும் போய், அங்க
உள்ளவங்களோட பேசிட்டு
வரட்டும். இதனால யாராவது தப்பு
பண்ணிகிட்டிருந்தாலும் இனி
பண்ணினா மாட்டிப்போம்னு வாலை
சுருட்டிக்குவாங்கல்ல..."

திலீப் கேட்ட கேள்வி இருசனை ஒரு மிரட்டு மிரட்டி விட்டது. வங்கியையும், நீலியையும் காட்டு நாய்களும், நரிகளும் தின்று வெறும் எலும்புதான் இருக்குமோ என்கிற பயம் மிக வேகமாய் இருசன் முகத்தில் பரவியது. அதை திலீப்பும் புரிந்து கொண்டான்.

"இருசா.. இங்கேயே எதையாவது நினைச்சு கலங்காதே. அங்கே போய் முதல்ல பார்ப்போம். வானத்து மனிதர்களும் மனுஷங்க தானே? அவங்க சொன்னா கடவுளே வந்து சொன்னதா அர்த்தமா என்ன? அவங்க பேச்சும் தப்பாக

வாய்ப்பிருக்கு. எல்லாத்தையும் அங்கே போய் முடிவு செய்வோம்" திலீப் ஆறுதலாக பேசினான். ஆனால், இருசன் மனது சமாதானப்படவேயில்லை.

வண்டி மடையானை அழைத்து கொண்டு, கூடவே நிலவரையும் அழைத்துக் கொள்ள தோதாக அவன் வங்கியின் வீடு நோக்கி நடந்தான்.

திலீப்புக்கு நடந்ததை நட்ராஜ்க்கு சொல்ல வேண்டும் போல் தோன்றியது. செல்போனை எடுத்து பார்த்தான். கொஞ்சம் போல் சிக்னல் இருந்தது.

நட்ராஜும் சிக்கினான்.

"குரு..."

"யெஸ் திலீப்..."

"வானத்து மனிதர் வந்தாரு. ஆனா எனக்கு தண்ணி காட்டிட்டார் குரு..."

"இதை சொல்லத்தான் போன் பண்ணினயா?"

"அவசரப்பட்டா எப்படி... மெயின் மேட்டரே இனி தான் இருக்கு..."

"அதை முதல்ல சொல்லுப்பா..."

திலீப் வங்கியை பற்றியும். நீலியை பற்றியும் வானத்து மனிதர் சொன்ன விஷயத்தை சொல்லி முடித்தான்.

"அப்ப இப்ப இருசன் பேயடிப் பள்ளத்துக்கு போகப் போறானா?"

"ஆமாம்... இருசன் நீலி இறந்துட்டதாவே முடிவு பண்ணிட்டான். அங்க தனியாபோறது சரியில்லையாம். ஆகையால கூட்டமா போக முடிவெடுத்துருக்கோம். எனக்கும் அந்த பேயடிப் பள்ளத்தை ஷூட் பண்ண ஒரு அருமையான சந்தர்ப்பம்..."

"நீ தப்பு பண்ணிட்ட. ரேகாவையும் கூட்டிகிட்டு போயிருக்கணும். அவ ரன்னிங். கமெண்ட்ரி கொடுக்க கொடுக்க, ஷூட் பண்ற துதான்த்ரில். அதுலயும் த்ரில்லான விஷயங்கள் சிக்கினா ஜாக்ரபி சேனல்ல நம்ப சிடி உலகம் பூரா சுத்தி வரும். மொத்தம் 427 மொழில அந்த சேனல் செயல்படுதாம். லட்சக்கணக்கில டாலரா பணமும் கொட்டும்."

"ஐயோ குரு... இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல. ரேகாவை உடனே தயாரா இருக்க சொல்லுங்க. நான் நேரா வரேன். நாங்க ஜீப்ல அங்க போறோம். இவங்க நடந்து வரதுக்குள்ள நாங்க போயிடுவோம்."

"அப்ப இருசனை அனுப்பிட்டு கிளம்பி வா. இது அருமையான சான்ஸ். எக்காரணத்தைக் கொண்டும் மிஸ் பண்ணிடக்கூடாது."

இருசன் மிக வேகமாக ஆப்பிரிக்க காட்டு மகா மியர்கள் போல ஓடியபடி இருந்தான்.

'மகாமியர்கள் நடக்கவே மாட்டார்கள். எப்போதும் ஓட்டம்தான். கையில் ஒரு கோலை வைத்திருப்பார்கள். கழுத்தில் முன்னோர்களின் முதுகெலும்பில் கடைசியாக இருப்பதை எடுத்து மாலையாக கட்டி கழுத்தில் போட் டிருப்பார்கள். உடல் முழுக்க பச்சை குத்திக் கொண்டு விதாரமாக இருப்பார்கள். மலைப்பாம்பை வாட்டி அதன் கொழுப்பை எடுத்து உடம்பில் பூசிக் கொள்வார். இதனால் ஆண்மை அதிகரிக்கும் என்பது அவர்கள் நம்பிக்கை.

உலகில் ஒவ்வொரு கண்டங்களிலும் வனங்கள். அந்த வனங்களில் வசிப்பவர்களிடம் எல்லாம் வினோதமான நம்பிக்கைகள். இந்த நம்பிக்கைகள் மட்டும் இல்லாவிட்டால், மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசமே இல்லாமல் போய்விடும்.

அவர்களோடு ஒப்பிடும்போது, இந்திய வனவாசி களிடம் மிருகத்தன்மையே கிடையாது. ஆனால், ஏராளமான

நம்பிக்கைகள். அதிலும் தாணுமாலய வனவாசிகளின் நம்பிக்கைகள் தனி ரகமாக இருந்தன. அவை எல்லாம் மூட நம்பிக்கைகளா... இல்லை இவைதான் அசலான நம்பிக்கை களா?

திலீப் இருசன் ஓடுவதை பார்த்த நொடி இப்படி எல்லாம் நினைத்தான். திலீப்புக்கு அவனோடு ஓடுவதற்கு, ஆபரேட்டர்ஸ் நோக்கி திரும்புவது புத்திசாலித்தனமாய் தோன்றியது.

ரேகாவை அழைத்துக் கொண்டு சுதந்திரமாய் செயல் படும் எண்ணமுடன் திலீப் வேகமாய் திரும்பத் தொடங்கி னான்.

தாணுமாலய வனத்தின் வடமாறு செம்மண் மேட்டு பிரதானத்தில் அங்கங்கே தார்ப்பாயால் உருவாகியிருக்கும் டெண்ட்டுகள், அவைகளை காவல் காக்கும் சென்ட்ரி போலீசார். சிவக்குமாரின் ஜீப் வரவும், பேரேடில் இருந்த ஜீவானந்தம் என்கிற ஆபீசர் பேரேடை கலைத்தவராக சிவக்குமார் அருகில் வந்தார்.

பக்கமாய் பெரிதாய் ஒரு மரத்தால் ஆன மேடை போடப்பட்டு, அதன் மேல் தாணுமாலய வனத்தின் வரை படம் திசைக்குறிப்புகளோடு விரித்துவைத்த நாளிதழ் பக்கம் போல கண்ணில் பட்டது.

அந்த வரைபடத்தில், அந்த வனத்துக்குள் இருக்கும் பிரமங்கள் பெயர்களோடு குறிப்பிடப்பட்டிருந்தன. அது போக நீர் நிலைகள், அருவிகள், ஏரிகள் பற்றியும் குறிப்புகள். அதில் வடக்கு திசையில் கிழக்கும் வடக்கும் வெட்டிக் கொள்ளும் ஈசான்ய பாகத்தில் இருந்தது பசுக்காடு.

சிவக்குமாரின் பார்வை பசுக்காடு என்னும் அந்த இடத்தின்மேல்தான் போய் நின்றது.

"என்ன மிஸ்டர் சிவக்குமார்... எல்லாரும் நல்ல வார்ம் அப்போட இருக்காங்க. நாம ரெய்டை தொடங்கிடலாமா?" ஜீவானந்தம் கேட்டார்.

"நிச்சயமா... இதோ இந்த பசுக்காடுதான் நம்ப டார்கெட். நம்ம போர்ஸ் அப்படியே சுத்தி வளைக்கணும். இங்க யார் இருந்தாலும் கைது செய்திட வேண்டியதுதான்..."

"காரணம்?"

"இங்கதான் தங்கம் இருக்கற மாதிரி தெரியுது. அதனால இங்க இருந்து மண் சலிக்கப்பட்டு, அரிச்செடுக்கப்பட்டு தங்கத்தூளை தனியா சேமிக்கிறதா தகவல்..."

"ஆப்பிரிக்க நாடுகள்ளதான் இப்படி செய்வாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். இங்கேயுமா?"

"பசுக்காடுங்கற பேருக்கு அர்த்தமே தங்கக் காடுங்கிறதுதானாம். பசுன்னா பசு மாடு கிடையாது. தங்கம் ஜீவானந்தம்."

"ஐ சீ... இந்த தகவல் நம் சென்ட்ரல் மைன்ஸ் கார்ப்பரேஷனுக்கு எப்படி தெரியாம போனது?"

"இவ்வளவு நாளா தெரியாம போனதை விடுங்க. இப்பதான் தெரிஞ்சிடுச்சே... இனி விடக் கூடாது."

"சரி... மத்த குரூப்சை என்ன செய்ய?"

"ஒரு பிரெண்ட்லி ரன் பண்ண வைப்போம். மலை முழுக்க இருக்கிற எல்லா கிராமத்துக்கும் போய், அங்க உள்ளவங்களோட பேசிட்டு வரட்டும். இதனால யாராவது தப்பு பண்ணிகிட்டிருந்தாலும் இனி பண்ணினா மாட்டிப் போம்னு வாலை சுருட்டிக்குவாங்கல்ல."

"அதுமட்டுமில்ல... இவ்வளவு போலீஸ் வந்துருக் காங்கன்னா, மலைல பெருசா ஏதோ தப்பு நடக்குதுன்னும் தெரிஞ்சிடும். அதனால எச்சரிக்கையாவும் இருப்பாங்க."

"யு ஆர் ரைட்... நீங்க டீம் லீடர் பிரிச்சு குரூப், குரூப்பா அனுப்பிடுவாங்க. நான் ஹெட் ஆபீசுக்கு நம்ப ஆபரேஷன் பத்தி பேப்பர் ஒர்க் பண்ணி எக்ஸ்ப்ளைன் பண்ணிடுறேன்."

"நல்லது சிவக்குமார். கேரி ஆன். நான் ஒரு பதினைஞ்சு நிமிஷத்துல வந்துடுறேன்" ஜீவானந்தம் விலகிட, சிவக்குமாரும் போனை எடுத்துக் கொண்டார்.

குவார்ட்டர்சில் ரேகா தயாராக இருந்தாள். டைட்டான ஜீன்ஸும், டீ ஷர்ட்டும் அணிந்திருந்தாள். அதில் இருந்த வித்தியாசத்துக்கு வள்ளியம்மை முகம் சுளித்தாள்.

"வேற டிரஸ்சே இல்லையா ரேகா... ஒரு வேளை வெளியூர்ல இருந்து மனுஷங்களை பார்த்து பேச நேர்ந்தா, துடுக்கா ஒரு பத்திரிகைகாரரா பேசுற மாதிரி பேசாம பாந்தமா நடந்துக்கோ..."

"நீங்க பயப்படுறதுல அர்த்தமே இல்ல. இப்ப எல்லாமே நமக்கு சாதகமா இருக்கு. வானத்து மனிதர்களைப் பத்தின விவரம் மட்டும் விலகினா போதும். இந்த மலைய அப்புறம் யாராலையும் கைல பிடிச்சுக்க முடியாது. பெரிய டூரிசம் பிளேஸ் ஆயிடும். நாங்களும் ஆக்கிட்டுதான் மறுவேலை பார்க்கிறதா இருக்கோம்."

ரேகா தெம்பாக பேசிக் கொண்டே புறப்பட்டாள். இருவரையும் நட்ராஜ் டாடா காட்டி அனுப்பி வைத்தான்.

பேயடிப்பள்ளம்!

விசுவிசுவென்ற காற்றின் குலாவலுக்கு நடுவில் ஆளரவ மின்றி அமைதியாக கிடந்தது. குறிப்பிட்ட இடம் வரை ஜீப்பில் செல்ல முடிந்தது. பின் ரேகாவும், திலீப்பும் இறங்கிக் கொண்டனர்.

திலீப் கைக்கடிகாரத்தை பார்த்தான்.

மணி மதியம் இரண்டு. ஆனால், மாலை ஆறுமணி போல மேகம் சூழ்ந்த நிலையில் கொஞ்சம் போல இருள் சூழ்ந்து கிடந்தது அந்த இடம்.

"ரேகா... நாமதான் முதல்ல வந்திருக்கோம். அவங்க யாரும் வரலை பார்த்தியா?"

"சரி... அவங்க வந்தபிறகு போவோமா... இல்ல நாம மட்டும் பர்சனலாக ஒரு எட்டு எட்டிப் பார்த்துடுவோமா?"

"அதான் சரி... அவங்க வரும் போது வரட்டும். நாம போய் முதல்ல ஷூட்டிங்கை முடிப்போம். நீ உன் கேமராவை தயார் படுத்து..."

திலீப் சொன்னபடியே எந்த சலனமும் இல்லாதவனாக பேயடிப்பள்ளம் நோக்கி முதலடியை எடுத்து வைத்தான். தொலைவில் மரம் ஒன்றின் மேல் ஒரு காட்டுப் பூனை அவனை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது.

32

'மலைகளின் பலவிதமான சிறப்புகளுக்கு அதன் கூம்பிய வடிவமைப்பும் ஒரு காரணம். கூம்பு போன்ற இந்த அமைப்பு பிரமிடுகளை நினை வூட்டும். பிரமிடுகளை பற்றி எண்ணும்போது எகிப்து நாட்டின் நினைவும் வரும். இங்குதான் உலக அதிசயங்கள் ஏழில் ஒன்றாக பிரமிடுகள் உள்ளன. மிக புராதனமான அந்த பிரமிடுகள், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப் பட்டவை. அதனுள் நுழைந்தவர்கள் உயிரோடு வெளியே வருவது அசாத்தியம். உள்ளே ஜிக் ஜாக்காக வழிகள் இருக்கும். அவைகளில் புகுந்து வசமாய் சிக்கிக் கொள்வோம். எவ்வளவு நடந் தாலும் நடந்த இடத்திலேயே நடந்து கொண் டிருப்போம். பலர் உள்ளேயே இறந்து எலும்புக் கூடுகளாகியுள்ளனர். ஒரு ஆச்சரியம் என்ன வென்றால், பிரமிடு வடிவத்துக்குள் வைக்கும் எந்த பொருளும் அழுகுவதில்லை. ஆனால், காய்ந்து

போகும். அதேபோல் கூரிய முனைகள் மழுங்காது. மேலும் கூர்மை அடையும். மருந்துகளும் தங்கள் வீரியத்தை இழக்காது. பிரமிடின் உட்பாகத்தில் நாற்றமும் ஏற்படாது. ஆனால், இதை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்க யாருக்கும் இதுவரை வழி தெரிய வில்லை. அதே நேரம் அதன் சக்தியை மறுக்க முடியவில்லை!'

"அப்போது ஒரு நல்ல பாம்பு
சொத்தென்று அவன் கழுத்
தின் மேல் எங்கிருந்தோ மலை
போல் விழுந்தது. அதைப்
பார்த்து ரேகா அலறிக்
கொண்டு மேலேறிட..."

திலீப் அந்த காட்டுப் பூனையை பார்த்தான். அதுவும் அவனைப் பார்த்தது. திலீப் வேகமாக திரும்பி ரேகாவை பார்த்தவனாய் காட்டுப் பூனையை நோக்கி கையை காட்டி னான். அவளும் புரிந்து கேமராவை அதன் பக்கம் திருப்பி னாள். அது தன் உருண்டைக் கண்களால் முடிந்தவரை விழித்துப் பார்த்தது. புசுபுசுவென்ற அதன் ரோமங்கள் வாலைத்தில் சிலிர்த்துக் கொண்டன. அப்போது தான் அந்த நடக்கக் கூடாத சம்பவம் நடந்தது. அந்த பூனையின் தலைக்கு மேலே ஒரு மலைப்பாம்பு சத்தமேயில்லாமல் தழைந்து விழ ஆரம்பித்தபடி இருந்தது. அதை ரேகாவும் கவனித்து விட்டாளா என ஜூம் செய்தாள். திலீப்பும் அதை பார்த்து விட்டான். நொடிக்கும் குறைவான அந்த நேரத்தில் அந்த பாம்பு பூனையை கவ்வி விட்டது. பூனை எவ்வளவு முயன்றும் பயனில்லை. மூன்றே விழுங்கில் பூனை அதன் வாயிலிருந்து ஒரு அடிக்கும் அதிகமான தூரத்தை கடந்து விட்டது.

மொடியப்பள்ளத்தில் தொடக்கமே மிரட்டலாக ஒரு பரபரப்போடு தொடங்கிவிட்டது. ரேகா ஒரு வினாடி

உறைந்து போனாள். பெண்மைக்கே உரிய அச்சம் அவளை அடுத்த அடிகளை எடுத்து வைக்க விடவில்லை. ஆனால், திலீப் மெல்ல நடக்க ஆரம்பித்தான்.

தாணுமாலய வனத்தின் குப்பென்ற பசுமை அங்கே இல்லை. ஒரு பொட்டல் வெளிபோலதான் அந்த பகுதி இருந்தது. அங்கும் இங்குமாய் மரங்கள். அதுவும் எட்டி மரங்கள். நேராக வளராமல் முறுக்கிக் கொண்டு கோணலாய் வளர்ந்திருந்த அந்த மரங்களின் மேல் கழுகுகள் சில அமர்ந்திருந்தன. அந்த பகுதி முழுக்க ஒரு வகை நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. அங்கங்கே முற்றங்கள் கிடந்தன. காய்ந்த மாலைகள், உடைந்த சிறு மண் கலயங்கள் என்று அது சுடுகாட்டு சடங்கு நடக்கும் ஒரு இடமாகத்தான் தெரிந்தது. அங்கங்கே பிணமேடை போல் மேடைகள், கருங்கற்களால் கட்டப்பட்டு அந்த கட்டுமானம் சிதைந்து போயிருந்தது.

திலீப் அவ்வளவையும் பார்த்த மாத்திரத்தில் புரிந்து கொண்டான். திரும்பி ரேகாவை பார்த்தான். அவள் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். அவள் பார்வை மலைப்பாம்பு மேலேயே இருந்தது. அந்த கறுப்பு பூனை அதன் உடம்பில் மையத்தை அடைந்திருந்தது. அதுவும் ரேகாவை பார்த்து விட்டு தன் இரட்டை நாக்கை அவ்வப்போது நீட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

"ரேகா கமான்..." திலீப் நின்ற இடத்தில் இருந்து பலமாய் குரல் கொடுத்தான். அதைக் கேட்டு ரேகா ஒரு வினாடி நடுங்கிவிட்டாள். அதே வேளையில் அவன் குரல் நாலாபுறமும் எதிரொலித்தது. அந்த எதிரொலியாக சில காட்டு நாய்கள் 'கிர்' என தங்களின் கோரைப் பற்கள் வெளியே தெரிய சரேல் சரேல் என சில பாகங்களில் இருந்து வெளிப்பட்டு நின்றன. ஒரு நாய் பாறை ஒன்றின் மேல் நின்று கொண்டு பார்த்த விதமே அலாதியாக இருந்தது. நல்ல வேளை நரிகள் இல்லை.

திலீப் அதைக் கண்டு ஒன்றும் பயப்பட வில்லை. பக்கத்தில் பாடை கட்டி எடுத்து வந்து போட்டிருந்த மூங்கில்

கல் ஒன்று கிடந்தது. அதை குனிந்து எடுத்தான். அடுத்த நொடி அந்த வாய்கள் விசுக்கென்று மறைந்தன.

ரேகாவும் நெருங்கி வந்தாள். வியர்க்கத் தொடங்கி யிருந்தாள்.

"என்ன பயமா இருக்கா?"

"இது என்ன கேள்வி... நான் சுடுகாட்டையே சினிமால மட்டும்தான் பார்த்திருக்கேன்..."

"பயப்படாதே... பயந்தா டாக்குமெண்ட்ரி பண்ண முடியாது. நான் இருக்கேன். கேமரா ஆன்லேயே இருக்கட்டும். அந்த நாய்களை படம் பிடிச்சியா?"

"இல்லை. இந்தா நீயே எடு. ஐ காண்ட் டூ..."

அவள் கேமராவை அவன் தோளுக்கு மாற்றினாள். அப்படியே அவள் கையை பிடித்துக் கொண்டாள். அவர்கள் நின்ற இடத்திலிருந்து ஒரு பெரும் சரிவு ஆரம்பமாகி யிருந்தது.

"ரேகா... இதுதான் பேயடிப்பள்ளமா இருக்கணும்னு நினைக்கிறேன்..." திலீப் எதிர் திசையை காட்டினான்.

பார்க்க முடிந்த தூரத்தில் எலும்புகள் நிறைய கிடந்தன. திலீப் துணிந்து இறங்கத் தொடங்கினான்.

"திலீப் வேண்டாம்" ரேகா தடுத்தாள்.

"பயப்படாதே. இந்த ஆவி, பேய் எல்லாம் பெரிய கற்பனைகள். அதெல்லாம் உண்மையா இருந்தா இந்த நிமிஷம் இலங்கைல அநியாயமா கொல்லப்பட்ட ஒண்ணரை லட்சம் பேரும் ஆவியா வந்து அந்த நாட்டையே ஆட்டிப் படைச்சிருக்கணும். என் பாட்டிக்கும் நான்னா உசுரு. இப்ப உயிரோட இல்ல. அவங்களும் ஆவியா வந்துருப்பாங்க..."

திலீப் அந்த இடத்தில் அந்த நேரத்திலும் ஒரு ப்ரொஃபஷனலிஸ்ட் போல் பேசியதை ரேகாவும் ரசித்தாள்.

திலீப் இறங்கிய சில அடி தூரத்தில் ஒரு துப்பட்டா போல் துணி ஒன்று கிடந்தது. கழுத்தில் கட்டப்படும் கருக மணி மாலை ஒன்றும் அவிழ்ந்து கிடந்தது. அதை ரேகாவை விட்டு எடுக்க சொன்னான். அவளும் எடுத்துக் கொண்டாள். அப்போது தாரை தப்பட்டை சப்தம் கேட்கத் தொடங்கியது.

"திலீப் என்ன சத்தம்?"

"அந்த இருசன்தான் கூட்டமா வந்துகிட்டிருக்கணும்."

"இங்க நீலி, வங்கியோட உடம்பு இல்லையே?"

"அதுதான் தெரியல. இது அவங்க உடையா இருக்கலாம். நாயும் நரியும் உடம்பை இழுத்து போயிருக்கலாம்."

"சரி... வா போவோம். அவங்க வரும் போது நாம இங்க இருக்க வேண்டாம். நம்மை இங்க பார்த்தா அவங்க தப்பா நினைக்கலாம்."

"ஒன் மினிட்..." என்றவன், கேமராவில் எலும்புக் குவியல்களை படம் பிடித்துக் கொண்டான். அப்போது ஒரு நல்ல பாம்பு சொத்தென்று அவன் கழுத்தின் மேல் எங்கிருந்தோ மாலை போல் விழுந்தது. அதைப் பார்த்து ரேகா அலறிக் கொண்டு மேலேறிட, திலீப்பின் கேமரா கை நழுவி கீழே விழுந்து உருண்டு பள்ளத்துக்குள் விழ ஆரம்பித்தது.

கழுத்தில் விழுந்த பாம்பும் அவனை மாறி மாறி கொத்தத் தொடங்க, அவன் துணிவை வரவழைத்துக் கொண்டு அதை ஒரு கையால் இறுகப்பற்றி விறுவிறுவென சுழற்றி வீசி எறிந்தான். எறிந்த வேகத்தில் மேலேறி ஓடி வந்தான். வந்தவன் அப்படியே மயங்க ஆரம்பித்தான். ரேகா நெருங்கி வந்து தாங்கிக் கொள்ள முயன்றும் முடியவில்லை. கீழே விழுந்து விட்டான். அவள் பார்க்க, அவன் மார்பில் பாம்பின் பல் தடங்கள் தெரிந்தன.

நல்லவேளை தாரை தப்பட்டையோடு தாணுமாலயக் குடியர்கள் நெருங்கி வந்துவிட்டனர். அவர்களில் சிலர்

முடி வந்து இருவரையும் பார்த்தனர். அதில் வைத்தியன் எல்லப்பனும் இருந்தான். இருவரையும் பார்த்து விட்டு,

"நீங்க எங்க இங்க வந்தீங்க?" என்று கேட்டான்.

"அதை எல்லாம் இப்ப பேச நேரமில்ல. இவரை பாம்பு கடிச்சிருச்சு. முதல்ல இவரை காப்பாத்தணும்" பதறினாள் ரேகா.

மற்று தாணுமாலயக் குடியர்கள் எதிரில் பள்ளத்தை ஆவல் பார்த்தனர். சிலர் எல்லப்பனுக்கு உதவி செய்தனர். ஆனால், அவர்களில் இருசன் இல்லை. வண்டி மடையான் மட்டும் அழுதபடி இருந்தான்.

"ஆமாம் இருசன் வரலையா?"

"அவன் எங்களுக்கு தகவல் தந்துட்டு முன்னேயே இங்க வந்துட்டான். அவனை நீங்க பார்க்கலையா?"

"இல்லையே?"

நிலீப்பை தோளின் மேல் ஏற்றி நடந்தபடியே எல்லப்பன்தான் பேசினான்.

"ஏலேய்... இங்க யார் உடம்பும் இல்ல. அவளுங்க உடம்பை நாய் நரிங்க தின்னுருக்கும்" என்றான் ஒரு தாணுமாலயக் குடியன். ஒருவன் ரேகாவின் கையில் இருந்த துப்பட்டா போன்ற துணியை பார்த்தான்.

"இது நீலியோட சும்மாட்டு துணி மாதிரி இருக்குதே" என்று கேட்டபடியே அதை அவர்களிடம் இருந்து வாங்கி விரித்தான். பின் முகர்ந்து பார்த்துவிட்டு,

"இது அவ துணிதான். நம்ம சனங்க தலைக்கு போடுற சீயக்கா வாசம் வீசுது..." என்றான்.

ரேகாவுக்கு ஜிலீர் என்றது. அப்போது ஒரு நரியின் ஊளை சப்தமும், நாய்களின் குரைப்பும் கேட்டது.

"தா சப்தம் கேட்குது... அதுங்கதான் பொணத்தை இழுத்துக்கிட்டு போய் தின்னுக் கிட்டிருக்குங்க" என்றான் இன்னொருவன்.

"ஐயோ மவளே... அநியாயமா போயிட்டியா?" என்று வங்கியின் அப்பனான வண்டி மடையான் விசும்பி வெடித்து அழ ஆரம்பித்து விட்டான். ஒரு வனக்குடியன் பக்கத்தில் ஓங்கலாய் வளர்ந்திருந்த ஒரு மரத்தின் மேல் குரங்கைப் போல் ஏற ஆரம்பித்தான். விறுவிறுவென உச்சிக்கு ஏறியவன், அங்கிருந்தபடி கூம்பான ஒரு மலைப்பாறை மேல் சில நாய்கள் மாமிசப்பிண்டம் ஒன்றை குதறித்தின்றபடி இருப்பதை பார்த்தான்.

"ஆமாண்டேய்... அதுங்க தின்னு தீர்க்கப் போகுதுங்க. நாம பிச்சுக்குவோம். இல்லன்னா அதே வேகத்தோடு நம்ம மேலே பாஞ்சிடும்" என்றபடியே சரசரவென கீழ் இறங்கினான்.

தாரை தப்பட்டை சப்தத்தோடு வந்தவர்கள் திலீப்பை சுமந்து கொண்டு படுவேகமாக அந்த பகுதியை விட்டு செல்லத் தொடங்கி விட்டனர். கம்பீரமாக வந்த திலீப்போ விஷம் பாய்ந்த உடம்போடு, அதுவும் பிணத்தை சுமப்பது போல இருவர் அவனை சுமந்த நிலையில் அவன் உடம்பு அந்த பகுதியை விட்டு கடந்து கொண்டிருந்தது.

தாணுமாலய வனத்தின் ஒவ்வொரு கிராமங்களுக்குள்ளும் சிவக்குமாரால் அனுப்பப்பட்ட வன இலாகாவின் பாதுகாப்பு படை போலீசார் கையில் துப்பாக்கியுடன் பிரவேசித்துக் கொண்டிருந்தனர். தெற்கு நாடு எனும் கிராமத்துக்குள் நுழைந்த போலீசாரை அங்கே இருந்த மூப்பர் அதிர்ச்சியோடு பார்த்தார். மூப்பரை அங்கு நுழைந்திருந்த பழனிவேல் எனும் ஆபீசர் நட்போடு பார்த்தவராக நெருங்கினார்.

"வந்தனமுங்க..."

"நீங்கதான் மூப்பரா?"

"ஆமாங்க..."

"எங்கள பார்த்து பயப்பட வேண்டாம். இந்த ரோந்து கடமையைமாத்தான்..."

"எனக்கும் தெரியும்க... எங்க நாடு கோயிலா இருந்துச்சு. இப்ப அதுல சில பாம்புங்க பூந்துடுச்சு. அப்பப்ப இப்படி நடக்கிறது சகஜம்தான். முந்தி எங்க வனராமர் படையால அந்த பாம்புகளை அழிச்சோம். இப்ப நீங்க வந்துருக்கீங்க."

"பரவாயில்ல. புரிஞ்சுகிட்டு பேசுறீங்க. காட்டுக்குள்ள விதிக்கு புறம்பா யார் தப்பு செய்தாலும் கைது பண்ணிடு வோம். நீங்க வருத்தப்படக்கூடாது..."

"நல்லா பண்ணுங்க. எங்க பொண்டுக இரண்டு பேர் வேற காணாம போயிட்டாங்க..."

"கம்ப்ளைண்ட் எழுதி கொடுத்திருக்கீங்களா?"

"அதெல்லாம் எப்பவும் பண்ணதில்லங்க. ரொம்பவும் முடியாட்டி வானத்து மனுஷங்கள கூப்புடுவோம். அவங்க எங்களுக்கு எல்லா உதவியும் செய்வாங்க."

"என்ன வானத்து மனுஷங்களா... இந்த காட்டுல அவங்களுக்குன்னு ஒரு இடம் இல்லையா?"

"ஏன் இல்லாம... ஆனா மதிமயக்குற காட்டுக்குள்ள இருக்கிற அவங்கள பாக்க போறது ரொம்ப கஷ்டங்க. அதுக்கு அவசியமும் இல்ல. அதான் நாங்க நினைச்சாலே வந்துடுறாங்களே..."

"மதிமயக்குற காட்டுக்குள்ளயா... ஓ அந்த மகரந்த பொடி பறக்கிற காடா?"

"மகரந்த பொடியா... அப்படின்னா?"

"பூக்கிற பூக்களுக்கு நடுவுல இருக்கிற தூளைத்தான் மகரந்த பொடின்னு சொல்வோம். அது காற்றில் கலந்து

பறக்கும் போது அதை சுவாசிக்கிறதால தான் மயக்கம் ஏற்படுது. மயக்கம் ஏற்படுத்துற பூக்கள் பூக்கிற அந்த காட்டைதான் நீங்க மதி மயக்குற காடுங்கிறீங்க. இப்ப அதுக்குள்ள மாஸ்க்குங்கிற முகமூடியை போட்டுகிட்டு போகிற வழிமுறை எல்லாம் வந்தாச்சு. அதோட ஒரு குரூப் இப்ப அந்த காட்டுக்குள்ள நுழைஞ்சிருப்பாங்க. வானத்து மனுஷங்க அங்கே எப்படி எந்த மாதிரி வாழ்ந்துகிட்டு வர்றாங்கன்னு கொஞ்ச நேரத்துல தெரிஞ்சிடும்..."

அதிகாரி பழனிவேலின் கருத்து நிஜம்தான் என்பது போல முகத்துக்கு முகமூடி போல மாஸ்க்கை அணிந்து கொண்டு கையில் துப்பாக்கியுடன் ஆறுபேர் கொண்ட ஒரு சிறுபடை மதிமயக்கி வனக்காட்டுக்குள் காலடி எடுத்து வைத்திருந்தது.

அப்போது...

33

*'பி*ரமிடின் ஆற்றலை முன்பே உணர்ந்தவர்களாக நம்மவர்கள் இருந்ததுதான் ஆச்சரியம். குறிப்பாக முனிவர்கள் தங்கள் தலைமுடியை கூம்பு போல வடிவமைத்துக் கொண்டதற்கு காரணமே பிரபஞ்ச சக்தியை கூரிய ஒரு முனையால் பெறவும், உடம்பின் ஆற்றலை வெளிப்படுத்தவுமே. இந்த கூம்பு வடிவம், தாடி விஷயத்திலும் செயலாற்றுகிறது என்பது இன்னொரு ஆச்சரியம். தலையில் கூரிய சிகையும், நீண்டதாடியும் உடையவர்களுக்கு கண்களில் கோளாறுகள் ஏற்படாது. கண் பார்வையும் கூர்மையாக இருக்கும். முகமும் தேஜஸ்சுடன் விளங்கிடும்.

இந்த பிரமிடின் ஆற்றலை உணரமுடிகிறது. ஆனால், துல்லியமாக இதுதான் காரணம் என்று விஞ்ஞானிகளால் இதை இன்று வரை நிரூபிக்க முடியவில்லை. இது விஞ்ஞானத்துக்கு விளங்காத மர்மமாகவே உள்ளது. மலைகளும் பிரமிடுகளை எதிரொலிப்பதால் அவைகளின் சக்தியையும் உணர முடிகிறது. ஆனால், நிரூபிக்க முடியவில்லை.

அதிலும் தாணுமாலய வனத்தில் பிரமிடுகளை எதிரொலிக்கும் வகையில், உட்புறம் போய் தங்க முடியும் என்கிற தன்மையோடு பல குன்றுகள் இருப்பதுதான் விசேஷம்!'

"பாலால் அந்த சிவலிங்கம்
மூழ்கி, சுற்றிலும் அந்த பால்
தேங்கி நின்றது. பார்ப்பதற்கு
ஒரு பால் சுனை மேல்
சிவலிங்கம் ஒன்று நின்று
கொண்டிருப்பது போல்
இருந்தது..."

"மலைப்பாறை ஒன்றின் மேல்
உடும்பு ஒன்று தன் முன் இரு
கால்களால் தண்டால்
எடுப்பவன் போல் நிமிர்ந்து
அவர்கள் ஆறு பேரையும்
பார்த்தது..."

மதிமயக்கி வனக்காட்டுக்குள் ஆறுபேர் கொண்ட அந்த படை காலடி எடுத்து, வைத்து நடந்தபோது, எதிரில் ஒரு மரத்தடியில் ஒரு சிவலிங்கம்... பூஜிக்கப்பட்டு விளக்கேற்றப்பட்ட நிலையில்... ஆனால், யாரையும் காணவில்லை. அலைந்து பயந்த அந்த ஆறுபேரும் சில வினாடிகள் வெறித்

தார்கள். பின் மெல்ல அருகில் சென்றனர். அவர்கள் முதுகுபுறமாய் சிறிய ஆக்சிஜன் சிலிண்டர்கள்.

யாரோ வந்து வழிபாடு செய்துவிட்டு போயிருப்பதை அந்த சிவலிங்கம் உணர்த்திட, அவர்களும் பார்வையிலேயே தங்களுக்குள் அந்த எண்ணத்தை பரிமாறிக் கொண்டார்கள்.

தொடர்ந்து நடந்தனர்!

மிகவே அடர்த்தியாக கருங்கும்மென்று நிழலோடு காட்சி தந்தது நடக்கும் பகுதி. ஒரு கையில் துப்பாக்கி, சிரசின் மேல் டார்ச் பொருந்திய கேப். டார்ச்சை எரிய விட்டுக் கொண்டனர். நிழல் பகுதியை ஓரளவு ஊடுருவ முடிந்தது.

நடக்க நடக்க இருள் அதிகமானபடியே இருந்தது. வனங்களில் பறவைகளின் கூக்குரல்கள் கலந்து ஒலிக்கும் ஒரு வகை சப்தம் கூட கேட்கவில்லை. அவர்களுக்கு முதன் முறையாக சப்தமே எழாத, மிக மிக நிசப்தமான ஒரு இடத்துக்கு தங்கள் வாழ்நாளில் வந்ததுபோல் இருந்தது. ஒரு பறவை கூட இல்லை. ஒரு உயிரினம் கூட இருக்க வாய்ப்பில்லாதது போலவும் தோன்றியது. நாலாபுறமும் அவர்கள் பார்வை சுற்றிச் சுழன்றது. வனப்பகுதிகளுக்கே உண்டான அடர்த்தியான மரங்கள், கீழே பாறைகள், அங்கங்கே மண்பரப்புகள். அதில் கீழாநெல்லி, தொட்டாச்சிணுங்கி போன்ற தாவர வகைகள். சில இடங்களில் மழைநீர் தேங்கிய சுனைகள் தெரிந்தன. சுனைக்குள் பச்சை நிறத்தில் தவளைகள். ஒருவர் தன் கேமராவால் பதிவு செய்து கொண்டார். சுற்று சூழலையும் பதிவு செய்து கொண்டார். இருளில் எவ்வளவு தூரம் காட்சிகள் பதிவாகுமோ தெரியாது. ஆனால், அங்கே அந்த இருளே கூட ஒரு காட்சிதான்...

ஒரு உண்மை தெளிவாக தெரிந்தது. வன இலாகாவை சேர்ந்தவர்களே கூட இத்தனை நாட்களில் இந்த பக்கம் வந்திருக்கவில்லை என்பதுதான் அது.

அப்போது மணி ஓசை ஒலிக்கும் சப்தம் கேட்க ஆரம்பித்தது. அது சீராக கேட்காமல் விட்டு விட்டுக் கேட்டது. அந்த ஆறுபேருமே ஆச்சரியமானார்கள். நெருங்கி நின்று கொண்டார்கள். அந்த மணிசப்தம் இப்போது மிக அருகில் கேட்கத் தொடங்கியது. அதன் திசையும் தெரிந்தது. அப்புறம் வந்த திசையைப் பார்க்கவும் அங்கே ஒரு ஆகிருதியான பசுமாடு! வெள்ளை வெளேர் என்று உஜாலா போட்டது போன்ற வெளுப்பில், மிக கம்பீரமான அந்த பசுமாடு நின்றபடி அவர்களைப் பார்த்தது. அதன் கழுத்தில் மஞ்சள் கயிறால் மணிக்கட்டப்பட்டு, அதுதான் அது நடந்து வரும்போது ஒலித்திருக்கிறது. அந்த பசுவுக்கு பெரிய மடி!

நன்கு சிவந்த காம்புகள். காற் குளம்புகளும் வெண் பட்டை நிறத்தில் செதுக்கியது போல இருக்க, அந்த பசு தன் கருத்த மை விழிகளால் ஆறுபேரையும் பார்த்தது. அவர்களில் கேமரா வைத்திருந்தவர் உடனேயே அதை படம் பிடிக்க தயாரானார். அதுவோ உடனேயே மணி ஒலிக்க புறப்பட்டு விட்டது.

அவர்களும் அந்த மாட்டை பின்தொடர ஆரம்பித்தனர். ஒரு மாடு வருகிறது என்றால், அதன் எஜமானர் என்று ஒருவர் இருந்தே தீர வேண்டுமே? அந்த பசு அவர்கள் வந்த வழியில் திரும்ப அவர்களை அழைத்துச் சென்றது. ஆனால், அவர்களுக்கு அது தெரியவில்லை. சில இடங்களில் அது துள்ளிக் குதித்து ஓடியது.

அவர்கள் தங்கள் வாழ்நாளில் அப்படி ஒரு அழகிய பசுவை பார்த்திருக்க மாட்டார்கள். அப்படி ஒரு வாளிப்பு, வனப்பு.

அந்த பசு அவர்கள் முன்பு சந்தித்த சிவலிங்கம் இருக்கும் மரத்திடம் வந்து நின்றது. பின்தொடர்ந்து வந்தவர்களிடம் வியப்பு. அந்த பசு அவர்கள் பார்ப்பதை பற்றி கவலையோ படவில்லை. அது அந்த சிவலிங்கத்தை நெருங்கி தன் பால் சுரக்கும் மடியை லிங்கத்தின் தலைபாகத்துக்கு

மேலாக வைத்துக் கொண்டு நின்றது. நின்ற சில விநாடிகளில் அதன் நான்கு காம்புகளிலும் பால் பீறிட ஆரம்பித்தது. அது லிங்கத்தின் மேல் அபிஷேகமாகியது. அவர்களும் அதைப் பார்த்து வியந்து போய் நின்றனர். கேமரா வைத்திருந்த வருக்கு அதை படம் எடுக்க வேண்டும் என்று கூட தோன்ற வில்லை. ஒரு ஐந்து நிமிட நேரம்... பாலால் அந்த சிவலிங்கம் மூழ்கி, சுற்றிலும் அந்த பால் தேங்கி நின்றது. பார்ப்பதற்கு ஒரு பால் சுனை மேல் சிவலிங்கம் ஒன்று நின்று கொண்டிருப்பது போல் இருந்தது.

அந்த பசுவும் அபிஷேகித்தது போதும் என்பது போல அந்த மரத்தை மூன்று முறை சிவலிங்கத்தோடு சேர்த்து வலம் வந்தது. பின் வந்தவழியே திரும்பி நடக்க ஆரம்பித்தது. அவர்களும் திரும்ப அதை பின் தொடரத் தொடங்கினர். இந்த முறை அது அந்த மலையின் வேறு ஒரு பகுதி வழியாக செல்லத் தொடங்கியது. அந்த வழித்தட மே புல் கூட முளைக்காதபடி நடைபாதை போலவே இருந்தது. அவர்கள் ஆறு பேரும் அந்த நடைபாதையில் ஒருவர் பின் ஒருவர் என்று வரிசையில்தான் நடக்க முடிந்தது. இதில் முதலில் நடப்பவர் ஒரு இடத்தில் கால் இடறி விழவும், பின்னால் வந்தவர்களும் அதே போல இடறி கீழே விழுந்தனர். பின் எழுந்தனர். உடம்பில் படிந்த மண் திப்பிகளை தட்டி விட்ட படியே எதிரில் பார்த்தபோது அந்த பசுமாட்டைக் காண வில்லை. அது எங்கே போனது? எப்படிப் போனது? என்றே தெரியவில்லை. அவர்களிடம் பெரிதும் வியப்பு. அந்த பாதை தொடர்ந்து நீண்டுபோய் கொண்டே இருந்தது.

மாஸ்க்கை விலக்கியபடியே ஆறு பேரில் ஒருவர்,

"இப்ப என்ன செய்யலாம்... மாட்டை நாம மிஸ் பண் ணோமா, இல்ல அது நம்மள மிஸ் பண்ணிச்சான்னே தெரியல" என்றார்.

"நாமதான் மிஸ் பண்ணிட்டோம். மாடா அது... எவ்வளவு அழகு?" என்றவரும் மாஸ்க்கை விலக்கினார்.

"பசுமாடு ஒரு மகாலட்சுமிங்கிறது உண்மைதான் [illegible]..."

.அவர்கள் வியந்து கொண்டனர். மாஸ்குகள் விலகி [illegible] ன.

"பேசினதுபோதும் தொடர்ந்து நடங்க... அதுபாலை [illegible]யாரிந்தப்ப படம் எடுக்கல போல தெரியுதே?"

நடந்தபடியே கேட்டார் ஒருவர்.

"மெய் மறந்த நிலைல சுத்தமா அதெல்லாம் ஞாபகமே [illegible]லை..."

"இந்த பதிலை நம்ம மேலதிகாரிகள்கிட்ட சொன்னா [illegible]ரிக்கக் கூட மாட்டாங்க. வேலையை ரிசைன் பண்ணிட்டு [illegible]ாரியாராகிடுன்னு சொல்லிடுவாங்க.."

"இதை எல்லாம் எதுக்கு சொல்லணும். நாம தப்பா [illegible]தையாவது பார்த்திருந்தாதானே சொல்லணும்?"

"தப்பா பார்க்கிறது கூட சகஜம். ஆனா இன்னிக்கு நாம [illegible]பார்த்தது அபூர்வம். நான் சில புராண கதைகள்லதான் இப்படி மாடு லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து பாத்துருக் கேன்."

"நான் அதை கூட படிச்சதில்ல. என் வரைல அந்த [illegible]காட்சி ஒரு நூறு சதவிகித மிராகிள்..."

"நடங்க... நடங்க.... அந்த மாடு, அதோட எஜமான்னு .அவ்வளவு பேரையும் கண்டுபிடிக்கணும். விடக்கூடாது."

"மாட்டை விடுங்க. ஒரு ஈ காக்கா இல்ல கவனிச் சிங்களா?"

"ஆமாம்... இப்படி ஒரு காடு கூட அதிசயம்தான். இதுல நாம் முதல்ல காலடி வெச்சிருக்கோம்ங்கிறதே கூட பெருமைக்குரிய விஷயம்தான்.."

அவர்கள் அதுவரை பேசாததற்கும் சேர்த்து பேசிக் கொண்டு நடந்தனர். இருள் விலகி வெளிச்சமும் நன்றாக பரவ ஆரம்பித்திருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக பறவைகள் கத்தும் சப்தம். அணில்குஞ்சின் கீச்சுக்குரல் கேட்க ஆரம்பித்தது.

"நாம இப்ப மதிமயக்கி வனத்தை கடந்து வேற பகுதிக்கு வந்துட்டோம்னு நினைக்கிறேன்..."

"ஆமாம்!" ஒருவர் ஆமோதித்த போது, மலைப்பாறை ஒன்றின் மேல் உடும்பு ஒன்று தன் முன் இரு கால்களால் தண்டால் எடுப்பவன் போல் நிமிர்ந்து அவர்கள் ஆறு பேரையும் பார்த்தது.

"அதோ உடும்பு..."

"அப்ப புழு பூச்சின்னு எல்லாம் இருக்கணும். நிச்சயமா இது மதி மயக்கி வனப்பகுதி இல்ல..."

"இங்க இதை மதி கெட்டான் வனம்ங்கிறாங்க. ஆனா நமக்கு கெடல. தெளிஞ்ச மாதிரிதான் இருக்கு. என்ன சொல்றீங்க?"

"உண்மைதான். ஆனா டிபார்ட்மெண்ட் தப்பா ஏதோ நடக்குதுன்னு பயந்ததுக்கு தோதா ஒரு விஷயம் கூட கிடைக்கலையே..?"

ஒருவர் வருத்தப்பட்ட போது, தலையில் பானையுடன் வயதான கிழவி ஒருத்தி எதிரில் வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவர்களுக்கு வியப்பு. அவளிடமும் வியப்பு.

"ஆமா நீங்க யாரு... புதுசா இருக்கு?" அவள்தான் கேட்டாள்.

"நாங்க யாரா இருந்தா என்ன? நீ யார்? எங்க இருந்து வர்ற?" ஒருவர் அதட்டலாய் கேட்டார்.

"எனக்கு தென்கரை நாடு. அதோ அங்க தெரியுது பாருங்க..." அவள் காட்டிய தூரத்தில் நிறைய குடிசைகள் தெரிந்தன.

"சரி இந்த பக்கமா எதுக்கு வந்த?"

"சாமிங்க வருவாங்க... நான் மோர் கொடுப்பேன். பதிலுக்கு அபிஷேக பால், மருந்துபொடி எல்லாம் தருவாங்க..."

"சாமிங்களா... அது யாரு?"

"சாமிங்கன்னா சாமிங்கதான். இது என்ன கேள்வி?"

"நீ சாமியார்கள சொல்றியா?"

"ஆமாம்... இன்னிக்கு மாசி மாச சிவராத்திரி வேற. பகல்ல இருந்தே வர ஆரம்பிச்சிடுவாங்க..."

"இன்னிக்கு சிவ ராத்திரியா?"

"ஆமா... ஆகாய மார்க்கமா வருவாங்கல்ல..."

"ஆகாய மார்க்கமாவா? அது எப்படி?"

"அவங்கதான் பறப்பாங்களே..."

"பறப்பாங்களா?"

"ஆமா... போகட்டும், நீங்க ஏன் முகத்துக்கு முகமூடி போட்டுகிட்டு இருக்கீங்க?"

"அது முகமூடி இல்ல... மாஸ்க். நாங்க இந்த மலைல வீசுற காத்தை இப்ப சுவாசிக்கல. நாங்க ஆக்சிஜன் சிலிண்டரால சுவாசிக்கிறோம். ஆனா இங்க இப்ப காத்தைதான் சுவாசிக்கிறோம். போகட்டும் நீ இந்த பக்கமா ஒரு பசுமாட்டை பாத்தியா?"

"பசுமாட்டையா... இல்லையே?"

"என்ன இல்லையே... இதே பக்கம்தான் வந்தது. அது எவ்வளவு அழகு தெரியுமா?"

"கழுத்துல மணி கட்டியிருந்ததா?"

"ஆமாம்..."

"அப்ப அது நந்தினிபசு... ஐயா மாருங்களா நீங்க அதைப் பார்த்தீங்களா?" கிழவி கேட்டதில் ஏராளமான ஆச்சரிய அதிர்ச்சி.

34

'பெரும் மூலிகை வனங்களில் இதுபோல குன்று களும், அதன் கீழே குகைகளும் இருப்பது இயற்கை யாக அமைந்துவிட்ட ஒரு விஷயம். இந்த குகை களில் பெரும்பாலும் கரடிகள் அலையும். எவ்வளவு நாட்கள் உணவு கிடைக்காவிட்டாலும் இவை களுக்கு பசியோ, களைப்போ ஏற்படாது.

இந்த குகைகளின் உட்பாகத்தில் வெளிப்புறச் சூழலுக்கு துளியும் தொடர்பில்லாத சீதோஷ்ண நிலையே நிலவும். இப்படிப்பட்ட குகைகளை நெடிய தவம் செய்ய எண்ணும் துறவிகளும், சித்தர் களும் தேர்வு செய்து, இதனுள் அமர்ந்து காலம் போவதே தெரியாமல் தவம் புரிவர்.

இந்த குகைக்குள் சேகரித்து வைத்துக் கொள்ளும் தேன் மற்றும் பழங்கள் துளியும் கெட்டுப் போவ தில்லை. இயற்கைத் தன்மை கெடாமல் அப்படியே இருப்பதுதான் விந்தை. மலைகள் மட்டுமல்ல... மலைக் குகைகளும் பெரும் ஆய்வுக்குரியவை!'

"நட்ராஜ் தன் கட்டுப்போட்ட
காலை இழுத்துவிட்டுக்
கொண்டு திலீப்பை நெருங்கி
மார்புப் பகுதியை பார்த்தான்.

மார்பின் மேல் பாம்பு கடித்த
இடத்தில்..."

"அந்த மதிகெட்டான் வனத்துல
உள்ள இந்த சிவலிங்கத்தை
தரிசிக்க இன்னிக்கு ஆகாயத்துல
இருந்து கவுனர்கள்
வருவாங்களாம். ஏன்னா
இன்னிக்கு சிவராத்திரி..."

'நந்தினிப்பசு' என்று கிழவி சொன்னதைக் கேட்டு அவர்களிடம் திகைப்பு. அவர்களில் குமாரதேவன் என்பவன்தான் சீனியர். அவர் கிழவியை குடையத் தொடங்கினார்.

"நந்தினிப் பசுன்னா என்ன பாட்டி... ஒரு பொண்ணு பேர் மாதிரி இருக்கே?"

"சரியாச் சொன்னீங்க... எங்க குடியில வெள்ளிக்கிழமை, அதுவும் தை வெள்ளிக்கிழமை சாயங்காலமா ஆறு மணிக்கு பொண்ணு பொறந்தா நாங்க அந்த பொண்ணுக்கு நந்தினின்னு பேர் வைப்போம். நந்தின்னா காமதேனுன்னும் அர்த்தம். அது ஆகாயத்துல இருந்து வந்துட்டு போகிற தேவ ஜாதிப்பசு..."

பாட்டி ஆகாயம் என்ற உடனேயே பொசுக்கென்றாகிவிட்டது அவர்களுக்கு.

"ஆகாயப்பசுவுக்கு கழுத்துல எதுக்கு மணி... நீ புருடா விடாம சொல்லு பாட்டி" என்றார் குமாரதேவன்.

"எனக்கு பொய்யெல்லாம் பேசத் தெரியாது. உங்ககிட்ட நான் இவ்வளவு பேசினதே பெருசு. அதேசமயம் அந்த பசுவை நீங்க பார்த்திருக்கீங்கன்னா நீங்க ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கணும். அதை பார்க்கிறவங்களுக்கு நீடித்த பிரச்னை இருந்தா அதெல்லாம் தீர்ந்துடும்."

"அப்ப எங்க பிரச்னை எல்லாம் தீர்ந்துடும்னு சொல்ல வர்றியா நீ?"

"அதை நீங்க போகப்போக உணருவீங்க. எனக்கு வழியை விடுங்க. சாமிங்க காத்திருந்தாலும் காத்திருப்பாங்க..."

"நாங்க உள்ள இருந்துதான் வரோம். ஈ, காக்கா கிடையாது. இந்த பசுவை மட்டும்தான் பார்த்தோம்..."

"அது அப்படித்தான்... மனுஷங்க மதி கெட்டான் காட்டுக்குள்ள போனாதான் கிறுக்கு பிடிச்சிடுதே...? அதனால எங்க ஆட்கள் எதுக்கும் அதுக்குள்ள போகமாட்டோம். மீறிப்போக நேர்ந்தா மூச்சு கட்டி தலைமேல பானையை கவுத்துகிட்டு போவாங்க. அதுவும் அவங்க ஆடுமாடுங்க உள்ள போயிட்டா பத்திக்கிட்டு வர்றதுக்காக..."

கிழவி மிக இயல்பாக பேசினாள். பொய் பேசுவதாகவோ, ஏமாற்றிப் பேசுவதாகவோ நினைக்க முடியவில்லை.

"ஆமா கவுனருங்க ஆகாய மார்க்கமா வருவாங்கன்னு சொன்னியே... அது யார் கவுனர்?'

"எனக்கென்ன தெரியும். கவுனருங்க ஆகாயவாசிங்கன்னு தெரியும். அவ்வளவு தான்!"

"இரு உன்னை ஒரு போட்டோ பிடிச்சுக்கிறோம்..."

"ஐயோ அதெல்லாம் வேணாம்" கிழவி முகத்தை மூடிக் கொள்ளப் பார்த்தாள். ஆனால், அதற்குள் கேமரா வைத்திருந்தவர் கிழவியை புகைப்படம் எடுத்துவிட்டார்.

கிழவியிடம் மோர் வாங்கிகுடித்தனர். மிகச் சுவையாக இருந்தது. வயிற்றுக்குள் ஒரு புது சுகம் தெரிந்தது.

"மந்த எருமையோட பால்ல இருந்து வெண்ணையை துப்புரவா எடுத்து, அந்த மோர்ல பெருங்காயப்பிசின்,

இஞ்சியை தட்டிப் போட்டு எலுமிச்சம் பழத்தையும் பிழிஞ்சு ஊத்துணியை போத்தி உரியில தொங்க விட்டுருவோம். விடி ஒங்க எடுத்து குடிச்சா தேவாமிர்தமா இருக்கும். துளியும் பிழிக்காது..." என்று அந்த மோரின் தயாரிப்பு முறைகளையும் விவரித்து சொன்னாள்.

அவளுக்கு நூறு ரூபாயை தந்த போது வாங்க மறுத்து விட்டாள்.

"இதை வெச்சுக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேன். வாங்க நாட்டுலயும் இதுக்கு மதிப்பு கிடையாது. நான் உங்களை எல்லாம் என் பேரப் புள்ளையா பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டாள் பாட்டி. அவர்களுக்கும் அவள் செயல் நெஞ்சைத் தொட்டது. பாட்டி திரும்பி நடந்தாள்.

"பாட்டி சாமிங்கள பாக்கப் போகலியா?" என்று கேட்டார் குமாரதேவன்.

"இனி அவங்க வர மாட்டாங்க. இங்க வேகமா இருட்டும். கோடி ரும். நீங்களும் வெரசா கிளம்புங்க. இல்லாட்டி மிருக வாதைக்கு ஆளாயிடுவீங்க..."

"கொஞ்சம் முந்திதான் அந்த பசுவை பார்த்ததால கொடுத்து வெச்சிருக்கணும்னே. இப்ப பயமுறுத்துற...?"

"நான் சொன்ன அதுவும் நெசம்தான். இதுவும் நெசம் தான். உங்களுக்கு இனி யோக காலம். நீங்க போயிருவீங்க..." என்றாள்.

பாட்டி பேச்சை எப்படி எடுத்துக் கொள்வது என்றே அவர்களுக்கும் தெரியவில்லை. புதிராக இருந்தது. எதார்த்த மாய் பேசுவது போலவும் தோன்றியது. பாட்டி தலைமேல் பானையுடன் விறுவிறுவென்று நடந்தாள். குமாரதேவன் திரும்பி வந்த வழித்தடத்தைப் பார்த்தார். அடுத்து என்ன செய்யலாம் என்பது போல தன் சகாக்களைப் பார்த்தார்.

"நாம நம்ம சீப்ஜ பார்த்து நடந்ததை சொல்வோம். பாட்டி சொன்ன மாதிரி உள்ள இருட்டுல மாட்டிக்க வேண்டாம்" என்றனர் அவர்கள். அதைத் தொடர்ந்து தங்களின் கேம்ப் உள்ள பகுதி நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டனர். குமாரதேவன் கையில் உள்ள திசை காட்டி கருவி அவருக்கு கிழக்கு மேற்கை துல்லியமாக காட்டிற்று!

நான்கு பேர் திலீப்பை தூக்கிவந்து குவார்ட்டர்ஸ் வீட்டுக்குள் போட்டபோது பகீரென்றது வள்ளியம்மைக்கு. அப்போது திலீப் மயக்கத்தில் இருந்தான். கூடவே வந்த ரேகா அவர்களுக்கு நன்றி சொல்லவும் அவர்கள் திரும்பினர்.

நட்.ராஜ் திலீப்பைப் பார்த்து சற்று பதைத்தவனாக, "ரேகா என்னாச்சு? ஆமா எங்க கேமரா?" என்று எழுந்து அமர முயன்றான்.

"சொல்றேன் சார்... இப்படி ஒரு த்ரில்லான எக்ஸ்பீரியன்சை நான் கதைல கூட படிச்சதில்ல" என்று ரேகா பேயடிப் பள்ளத்தில் நடந்ததை சொல்லத் தொடங்கினாள்.

சொல்லி முடிக்கவும், இருள் சூழ்ந்து அன்றைய பகல் பொழுது முடியவும் சரியாக இருந்தது. ரேகா சொல்லி முடிக்க, நட்.ராஜ் தன் கட்டுப்போட்ட காலை இழுத்து விட்டுக் கொண்டு திலீப்பை நெருங்கி மார்புப் பகுதியை பார்த்தான். மார்பின் மேல் பாம்பு கடித்த இடத்தில் எல்லப்பன் போட்டிருந்த மூலிகைப் பற்று சாணியை போல காய்ந்து தெரிந்தது. திலீப் முகத்திலும் கறுப்புச் சாயம் பூசினது போல் இருந்தது.

"முகமே மாறிடுச்சே?"

"நல்ல வேளை, விஷம் மூளைய தொடல. தொட்டிருந்தா காப்பாத்தியிருக்க முடியாதுன்னார் எல்லப்பன்."

"இனி உயிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே..."

"இல்ல... ஆனா நாளைக்கு காலைலதான் கண் விழிப்பாரு இவர்..."

"மெல்லவே எழுந்திரிக்கட்டும். ஆமா கேமராவை இப்படி விட்டுட்டு வந்திருக்கியே ரேகா... உயிரைக் கூட விடலாம். அதை விடலாமா?" நட்ராஜ் கேட்ட விதம் ரேகாவை எரிச்சலடைய செய்தது.

"சாரி சார்... அங்க நடந்ததை நீங்க பார்த்திருந்தா கேமராவை இப்படி பெருசா பேசமாட்டீங்க. நிஜமா திலீப் உயிர் பிழைச்சது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?"

"வைல்ட்லைப் எக்ஸ்பீரியன்ஸ்ல இதெல்லாம் சகஜம் ரேகா..."

"அது வேற சார். இந்த காடு சம்திங் மிஸ்ட்ரியான காடுதான். அதுல எனக்கு டவுட்டே இல்ல..."

"போச்சுடா... ரேகா இங்க எந்த மிஸ்ட்ரியும் இல்ல. எல்லாம் கிரிமினல்ஸ் பண்ற வேலை."

"இரண்டும் இருக்கு சார்."

"என்ன... உனக்கும் தலையில அடிகிடி பட்டுடுச்சா?"

ரேகாவும், நட்ராஜும் வார்த்தைகளில் மோதிக் கொள்ளத் தொடங்கவும், வள்ளியம்மை இடையிட்டாள்.

"நட்ராஜ் கொஞ்சம் சும்மா இரு.. ரேகா சொல்றதுதான் சரி. இந்த காட்டுல நிறைய நல்ல விஷயங்களும் இருக்கு..."

"அது இந்த காட்டுல மட்டுமில்ல அண்ணியாரே... எல்லா காடுகள்லயும் இருக்கு... காடுகள் இல்லன்னா நகரங்கள் கிடையாது."

"போதும் உன் டாக்குமென்ட்ரி மாதிரியே போர் அடிக்காதே. திலீப் கண் முழிக்கட்டும். அவன் என்ன சொல்றான்னு பார்ப்போம்."

"திலீப் என் சிஷ்யன். கண் திறந்தே உடனே போலீஸ் போர்சோட போய் அந்த கேமராவை எடுத்துட்டு வர்றதே முதல் வேலை. அதன் விலை மூணரை லட்சம். அதைவிட அதுக்குள்ள இருக்கிற காட்சிகளுக்கு விலை அதிகம்."

நட்ராஜ் பணத்தாலேயே மதிப்பிட்டான். வள்ளியம்மை சிவக்குமாருக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்ற கவலையில் மூழ்க ஆரம்பித்தாள்.

காட்டின் கேம்ப் பகுதி. ஜெனரேட்டரை ஓடச் செய்ததில் எல்லா பக்கமும் விளக்குகள் எரிந்து நல்ல வெளிச்சமாக இருந்தது. குறிப்பிட்ட இடத்தில் பெரிதாய் மேஜை போடப்பட்டு சுற்றிலும் நாற்காலிகள். அதில் ஒன்றில் சிவக்குமார். அவன் எதிரில் காட்டுக்குள் ரைடு போயிருந்த டீம் லீடர்கள் அமர்ந்திருந்தனர். இன்னும் சிலர் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். அங்கே செல்போன் டவர் கிடைத்ததால், பலர் தங்கள் குடும்பத்தாரோடு பேசியபடி இருந்தனர். கோவிந்தன் டீயும் சமோசாவும் தயார் படுத்திக் கொண்டிருந்தான். சிவக்குமாருக்குள் ஒரே பரபரப்பு. குமாரதேவன் முகத்தை துடைத்தபடி வரவும் ஆவலாக பார்த்தான்.

"என்ன குமாரதேவன் நீங்கதானே அந்த மதிகெட்டான் வனத்துக்கு போனது?"

"ஆமாம் சார்... ரியலி வெரி இன்ட்ரஸ்டிங் சார்..."

"நமக்கு உபயோகமா ஏதாவது கிடைச்சுதா?"

சிவக்குமார் கேட்ட நொடி குமாரதேவனுக்கு போன். எடுத்து காதை கொடுத்த குமாரதேவன் முகத்தில் ஒரு பரவசம். பேசி முடித்து விட்டு சிவக்குமாரை ஏறிட்ட குமாரதேவன், "சார்... இந்த தாணுமாலய வனத்து மிஸ்டரிய சந்தேகப்படாதீங்க சார். இங்க தெய்வீகம் நிறைய இருக்கு சார். அதுல எனக்கு சந்தேகமே இல்ல..."

"முதல்ல என்ன நடந்ததுன்னு சொல்லுங்க..."

"நல்ல சாமி தரிசனம் கிடைச்சது. தாகத்துக்கு அருமை யான மோர் கிடைச்சது. மனசுக்கு இதமான கருத்துகள் கிடை த்தன..."

"கொஞ்சம் புரியும்படி சொல்றீங்களா?"

"படங்களாகவே எடுத்துட்டு வந்திருக்கோம். பாருங்க..." என்று சிவலிங்கத்தை புகைப்படமாய் எடுத்ததில் இருந்து சில காட்சிகளை காட்டினர். ஆனால், இருட்டில் எடுத்ததால் நல்ல தெளிவாரிட்டி இல்லை.

"குமாரதேவன்... இதையா நான் கேட்டேன். அந்த வானத்து மனுஷங்க பத்தி ஏதாவது தெரிஞ்சுதா?"

"இல்ல சார்... ஆனா சில தகவல்கள் கிடைச்சிருக்கு."

"என்ன அதை முதல்ல சொல்லுங்க."

"அந்த மதிகெட்டான் வனத்துல உள்ள இந்த சிவ லிங்கத்தை தரிசிக்க இன்னிக்கு ஆகாயத்துல இருந்து கவுனர்கள் வருவார்களாம். ஏன்னா இன்னிக்கு சிவராத்திரி..."

"அது யாரு கவுனர்கள்?'

"அது தெரியல. நாங்க பார்த்தது காமதேனுப் பசுவை. இப்பவும் அந்த பசு கண்ணுலேயே இருக்கு. அதை பார்த்தா நல்லது நடக்குங்கிறதும் நிரூபணமாயிருக்கு..."

"உளறாம என்ன நடந்ததுன்னு சொல்லுங்க."

"சார் என் மகளுக்கு இரண்டு கண்ணும் தெரியாது. பார்வை வர வாய்ப்பே இல்லேன்னு டாக்டர்கள் சொல்லிட் டாங்க. ஆனா இப்ப அவளுக்கு பார்வை வந்துடுச்சு சார். நல்லா பார்க்க முடியுதாம். இப்பதான் போன் வந்தது..."

குமாரதேவனை தொடர்ந்து, "சார் என் தரப்புலயும் ஒரு குட் நியூஸ். என் மகனுக்கு வெளிநாட்டுல வேலை கிடைச் சிருக்கு" என்றபடி வந்தார். அவரது குரூப்பில் இருந்த ஒருவர்.

35

‘ஒரு மலை வனத்தில் எந்த அளவு மழை பெய்ய வேண்டும் என்று ஒரு கணக்கே உள்ளது. அதிலும் தாணுமாலய வனத்தில் எவ்வளவு மழை பெய்யும் என்பதை அங்குள்ள ஒரு சராசரி மலைக் குடியனே கூறிவிடுவான். இம்மட்டில் சித்திரை முதல் தேதியே மழை தொடங்கி விடுகிறது. இந்த முதல் தேதி யன்று அதிகாலை மழை தொடங்கினால் அளவான மழை. பொழுது விடிந்த நிலையில் முதல் யாமம் எனப்படும் ஒன்பது மணி வேளையில் பெய்யத் தொடங்கினால், அளவுக்கு அதிகமான மழை. உச்சி வேளையில் பெய்யத் தொடங்கினால் காட்டில் வெள்ளப் பெருக்கும், அதில் யானைகள் கூட அடித்துச் செல்லப்படுவதும் நிச்சயம். அன்று மதியம் மூன்று மணிக்கு பெய்தால் குறைந்த மழை. மாலை பெய்தால் மிகக் குறைந்த மழை. இது ஒரு அனுபவக் கணக்கு!

இந்தக் கணக்கு இத்தனை வருடங்களில் பொய் யானதே இல்லை என்பதுதான் ஆச்சரியம்!’

“அடுத்து நாம கண்டுபிடிக்க
வேண்டியது வானத்து மனிதர்களோட
இருப்பிடத்தை... அப்புறம்
அவங்களை அரெஸ்ட் பண்ணி நம்ம
கஸ்டடிக்கு கொண்டு வந்து...”

“இந்த காடு நமக்கு ஒரு பாடம் எடுக்க
தொடங்கியிருக்கு. நமக்கு நல்லது நடக்கிறதை
வெச்சு யோசிச்சா, நம்ம மேல இந்த காட்டுக்கு
எந்த வருத்தமும் இல்லைங்கிற மாதிரி நினைக்க
தோணுது...”

ஒருவருக்கு இருவர் இப்படி நல்ல செய்தியை சொல்லவும், அங்கு இருந்த மற்றவர்களுக்கெல்லாம் ஒரு பூர்வம் வெகுவேகமாய் தொற்றத் தொடங்கியது. ஆனால், சிவக்குமாருக்கு குமாரதேவனிடம் ஏன் பேசினோம் என்று இருந்தது.

விட்டால் குமாரதேவன் அந்த மதிகெட்டான் வனத்தையே கடவுளாக்கி, அங்கே மனிதர்கள் காலடிகள் படுவதே பாவம் என்று கூறிவிடுவார் போலவும் தோன்றியது.

"என்ன சார்... நாங்க சொன்னதைக் கேட்டதும் உங்களுக்கும் அந்த இடத்துக்கு போயிட்டு வரணும்னு தோணுதா?" என்று தழைந்த குரலில் ஆரம்பித்தார் குமாரதேவன்.

"வாயை மூடுங்க குமாரதேவன்... நீங்க அந்த வானத்து மனுஷங்களைப் பத்தி உபயோகமா ஏதாவது தகவலோட வருவீங்கன்னு நான் எதிர்பார்த்தேன். ஆனா புராண கதைல வர்ற மாதிரி மாடு வந்தது, அபிஷேகம் செய்ததுன்னு எதை எதையோ சொல்லிகிட்டிருக்கீங்களே..."

"நடந்தது எதுவோ அதை சொன்னேன் சார்... நம்ப முடியலேன்னா வாங்க, அந்த சிவலிங்கத்தை காட்டுறேன்..."

"சிவலிங்கம் இருந்துட்டுப் போகட்டும். இந்த நாட்டுல தான் மைல்கல்லைக் கூட சாமியா கும்பிடுற வழக்கம் உண்டே? யாராவது ஒரு சாமியார் தனக்குன்னு ஒரு லிங்கத்தை வெச்சு கும்பிட்டுகிட்டு இருப்பார். உடனே அதைப் பார்த்து பரவசப்பட்டா எப்படி?"

"சார் ஒரு பசு அதுமேல தானா பாலைப் பொழிஞ்சா, அது அதிசயமில்லையா சார்...?"

"என்ன அதிசயம்? முதுமலைக் காட்டுல யானைகள் பிள்ளையார் சிலைக்கு மணி அடிச்சு பூஜை செய்யுதுங்க. அப்படி பழக்கி வெச்சிருக்காங்க... அந்த மாட்டையும் அப்படி பழக்கியிருப்பாங்க..."

"சரி சார்... என் பொண்ணுக்கு பார்வை வந்துடுச்சே?"

"அப்ப இந்த காட்டுல தப்பா எதுவுமே இல்லைன்னு சொல்ல வர்றீங்களா?"

"அப்படி சொல்லல சார்... எல்லாமே இங்க தப்பா இருக்குன்னு நினைக்கிறது தப்போன்னு தோணுது சார்..."

"இதோ பாருங்க குமாரதேவன்... நான் இந்த டிபார்ட்மெண்ட்டுக்கு வந்து இருபது வருஷ சர்வீஸ்போட்டுட்டேன். என் சர்வீசுல இதுவரை ஏழு பாரெஸ்ட்டை பார்த்துட்டேன். எனக்குன்னு ஒரு அனுபவம் இருக்குங்கிறதை நீங்க ஒத்துக் கணும். எல்லா பாரெஸ்ட்டுலயுமே கல்வியறிவில்லாத டிரைபல்ஸ், அப்புறம் அவங்க நம்பிக்கை சார்ந்த விஷயங்கள்னு நிறையவே இருக்கு. கொல்லிமலைல எருமைக்கடாவை வெட்டி, அதோட ரத்தத்தை அப்படியே குடிப்பாங்க. அப்படி குடிச்சு ஒருத்தன் ஜீரணமாகாம இன்பெக்ஷன் ஆகி செத்துப் போனான். ஆனா, சாமி அவனை தண்டிச்சிடுச்சுன்னுதான் அவங்க நினைச்சாங்க. அவங்களுக்கு எப்படி புரிய வைக்கிறதுன்னே எனக்கு தெரியல. இப்படித்தான் ஒவ்வொரு மூடநம்பிக்கைகள் ஒவ்வொரு இடத்துல... இங்க அது ரொம்பவே வேரோடிப் போய் இருக்கு.

இந்த வானத்து மனுஷங்க ஏழு உலக அதிசயத்தை விட அதிசயமானவங்களா இங்க இருக்காங்கிறதுதான் நான் தெரிஞ்சுகிட்டிருக்கிற உண்மை. அப்படிப்பட்டவங்களை முதல்ல நம்ப கண்ட்ரோலுக்கு கொண்டு வரணும்ங்கிறது என் எண்ணம். அப்புறம் இந்த காட்டுல இருக்கிற தங்கம்! இதுக்காகத்தான் இங்க பல குற்றங்கள் நடக்குது.

இந்த தங்கம் நம்ம அரசாங்க சொத்து. அது அநியாயமா களவு போய்கிட்டு இருக்கு. அதுக்கு இந்த காட்டுல இருக்கிற 'மித்'தை களவாணிகள் அழகா பயன்படுத்திக்கிறாங்க. ஆகையால, அவங்களை பிடிக்கிற கடமையும் நமக்கு இருக்கு. அதுக்குதான் ஒரு பட்டாலியனையே இங்க கொண்டு வந்து குவிச்சிருக்கேன். ஆனா நீங்க இதெல்லாம்

(illegible)ருந்தும், இந்த மலைக்காட்டுல நல்ல விஷயமும் (illegible)ருக்குன்னு எக்சைட் ஆனார் எப்படி குமாரதேவன்?"

சிவக்குமாரிடம் ஆவேசம் கொப்பளித்தது.

"சார்... இப்பவும் சொல்றேன். நல்ல விஷயங்களும் (illegible)ருக்கு. அதேவேளை என் கடமைல நான் எந்த தப்பு பண்ண (illegible)' ன் சார். ஒரு வனத்துறை அதிகாரியா நாம என்ன (illegible)யணுமோ அதை செய்வோம் சார். அதுக்கு நான் என்ன (illegible)யணுமோ செய்ய தயாரா இருக்கேன்..."

"நம்மோட பெரிய கடமையே முதல்ல அந்த தங்கம் (illegible)ருக்கிற பகுதியை கண்டுபிடிக்கிறதுதான். நிச்சயம் நாம (illegible)ந்தது தெரிஞ்சு களவாணிகள் தப்பி ஓடியிருப்பாங்க. (illegible)' டை விட்டு வெளிய போகிற எல்லா வழித் தடங்கள்லயும் (illegible)கமரா பிக்ஸ் பண்ணப்பட்டிருக்கு. அது யார் உள்ள (illegible)றாங்க, யார் வெளிய போறாங்கங்கிறதை படம் பிடிச்சுக் (illegible)' டேயிருக்கு.

அதை மானிட்டர் பண்ணிகிட்டேயிருக்கார் ஒரு (illegible)ஆபீசர். சந்தேகப்படும்படி யார் அது கண்ணுலபட்டாலும், (illegible)அவங்கள கைது செய்யச் சொல்லி இருக்கேன். அந்தப் (illegible)ணியில ஒரு ஆபீசர், நாலு ரேஞ்சர் அசிஸ்டென்ட்சோட ஒரு ஜீப்புல சுத்தி வந்துகிட்டேயிருக்கார். இதுவரை அந்த (illegible)கைல ஏழு பேர் கைதாகியிருக்காங்க!

அடுத்து நாம கண்டுபிடிக்க வேண்டியது வானத்து (illegible)னிதர்களோட இருப்பிடத்தை... அப்புறம் அவங்களை (illegible)அரெஸ்ட் பண்ணி நம்ம கஸ்டடிக்கு கொண்டு வந்து, (illegible)ன்கொயரி பண்ண வேண்டியிருக்கு. இதுவும் ஒரு (illegible)வாலான விஷயம்தான்.

அதேநேரம் நம்ப டிபார்ட்மெண்ட் ஆபீசரான காளி (illegible)றத்து சார் கொலை செய்யப்பட்டு, அவர் உடம்பு கூட இப்ப (illegible)ங்க இருக்குன்னு தெரியல. நம்ப டிபார்ட்மெண்ட்டுக்கு (illegible)விடுக்கப்பட்ட ஒரு பெரிய சவாலாதான் நான் இதை

நினைக்கிறேன். மிஸ்டர் காளிமுத்து பேமிலிக்கு விஷயம் தெரிஞ்சு போய் அவங்க தவிச்சுக்கிட்டிருக்காங்க. காளி முத்துவுக்கு எப்படி அப்படி ஒரு கொடிய முடிவு ஏற்பட்டது? அதுக்கு பின்னால யார் இருக்கா? இதுக்கெல்லாம் நமக்கு முடிவு தெரிஞ்சே ஆகணும்."

சிவக்குமார் உருக்கமாய் சொன்ன அவ்வளவு விஷயமும் அவர்களை மிக உணர்வுப்பூர்வமாக மாற்றி யிருந்தது.

குறிப்பாக குமாரதேவன் அப்போதே விடுப்பில் போய் மகள் பார்ப்பதை பார்க்க ஆசைப்பட்டிருந்தார். அதை இப்போது ஒத்தி வைத்தார். அவரது சகாவும் அதே முடிவுக்குதான் வந்திருந்தார்.

சிவக்குமார் தற்காலிகமாக தன் குவார்ட்டர்ஸ் வரை போய்விட்டு வருவதாக கூறி விலகவும், குமாரதேவன் தன் சகாக்களோடு தனியே ஒதுங்கினார்.

அவர்கள் மொத்த ஆறு பேர்... அதில் இருவருக்கு அந்த மோர்க்கார கிழவி சொன்னது போல நல்லது நடந்து விட்டது. மற்ற நால்வரும் தங்களுக்கும் நிச்சயம் நல்லது நடக்கும் என்கிற ஒரு நம்பிக்கையில் இருந்தனர். தனித்து சென்று ஒரு மரத்தடியில் கூடி நின்ற அவர்கள், திரும்பவும் மதிகெட்டான் வனத்துக்குள் நுழைந்து பார்க்க தயாராயினர்.

"குமாரதேவன் சார்... போன தடவை நாம போலீஸ் காரங்களா போனோம். இப்ப பக்தர்களா போவோம். அதுவும் பிரார்த்தனையோட போவோம் சார். இந்த காட்டுல நடக்கிற தவறுகள் சரி செய்யப்படணும்னு பிரார்த் தனை செய்துக்குவோம் சார்..." என்றார் ஒருவர்.

"ஆமாம் சார்... எனக்கும் அப்படித்தான் தோணுச்சு. நிச்சயமா அந்த மதிகெட்டான் வனத்துக்குள்ளதான் தங்கம் இருக்கிற பகுதி இருக்கணும்... நம்மைப் போலவே ஆக்சிஜன் சிலிண்டரோட போய் களவாணிகள் அங்க தங்கம் எடுக்க முயற்சி செய்துருக்கணும்."

"எனக்கும் அப்படிதான் தோணுது. இந்த தடவை நாம எல்லாரின் கன்னையும் சேர்த்து எடுத்துக்குவோம். ரெண்டுல ஒண்ணாவது பார்த்துடுவோம். அப்புறம் இன்னிக்கு சிவராத்திரி... அந்த பாட்டி சொன்ன கவுனர்கள் யாருன்னும் பார்த்துடு வோம்..."

"கவுனர்கள்ங்கிற பேரே வித்தியாசமாயிருக்கு. இது வரை நான் கேள்விப்பட்டதேயில்லை. இவங்க வானத்துல இருந்த வர்றவங்கன்னு அந்த பாட்டி சொன்னது இன்னும் ஆச்சரியமா இருக்கு..."

"ஒரு வேளை இந்த தங்கம் இருக்கிற விஷயத்தை தெரிஞ்சுக்கிட்டு, சரியா அங்க லேண்ட் ஆகுற மாதிரி பாராசூட்ல இறங்குவாங்களோ?"

"ஒரு காட்டுல ஒரு பர்ட்டிகுலர் பார்ட்ல லேண்ட் ஆகுற மாதிரி பாராசூட்ல இறங்குறது சாத்தியம்னு எனக்கு தோணல. இருந்தாலும், நாம பலவிதமா இப்படி யோசிக் கிறது ஒண்ணும் தப்பு இல்ல."

"ஒண்ணு மட்டும் நிச்சயம் சார்... நாம இந்த முறை உபயோகமா எதையாவது கண்டுபிடிக்காம திரும்பக் கூடாது..."

"குமாரதேவன் சார்... உங்க மக கூட பேசினீங்களா? அவ நல்லா பேசுறாளா?"

"அப்பான்னு அழகா கூப்பிட்டா. என்னால இப்ப கூட நம்ப முடியல. எப்படிடா பார்க்க முடிஞ்சதுன்னு கேட்டேன். எப்படின்னே தெரியலப்பா. ஆனா பார்வை தெரியுறதுக்கு கொஞ்சம் முன்னால, பாத்ரூம்ல ஸ்விட்சை போடும்போது ஷாக் அடிச்சு மயக்கம் போட்டு விழுந்துட்டேன். கண் திறந்து பார்த்தா பார்வை தெரியுது. ஆனா ரொம்ப தெளிவா தெரியல. ஓரளவுதான் தெரியுது. ஒண்ணுமே தெரியாம இருக்கிறதுக்கு இது எவ்வளவோ மேல் இல்லையான்னு கேட்டா..."

"உண்மைதானே சார்... அப்ப ஷாக் அடிச்சதுல பார்வை நரம்புகள் தூண்டப்பட்டிருக்கணும்னு தோணுது. அப்படிதானே சார்..."

"இருக்கலாம். எல்லாமே பெரிய புதிரா இருக்கு. ஒண்ணு மட்டும் உறுதி. நாம இப்ப ஒரு முக்கியமான காலகட்டத்துல இருக்கோம். இந்த காடு நமக்கு ஒரு பாடம் எடுக்க தொடங்கியிருக்கு. நமக்கு நல்லது நடக்கிறதை வெச்சு யோசிச்சா, நம்ம மேல இந்த காட்டுக்கு எந்த வருத்தமும் இல்லைங்கிற மாதிரி நினைக்க தோணுது. நாமளும் அதுக்கு தகுந்த மாதிரி நடந்துக்குவோம். சிவக்குமார் சாருக்கு முழுக்க முழுக்க விஞ்ஞானப் பார்வை. அதான் அவரால உருப்படியா எதையும் கண்டுபிடிக்க முடியல..."

"விஞ்ஞானப் பார்வை ஒண்ணும் தப்பு கிடையாது. விஞ்ஞானம் இல்லாம ஆன்மிகமும் இருக்க முடியாது. விஷயம் விஞ்ஞானத்துல இல்ல... நான்ங்கிற அகங்காரம் இருந்தா கஷ்டப்படணும். பணிவு இல்லேன்னாலும் கஷ்டம் தான்."

அவர்கள் தங்களுக்குள் பல மாதிரியாக பேசிக் கொண்டனர். இறுதியாக, "சார் புறப்படுவோமா மணி பத்தாகப் போகுது" என்றார் ஒருவர்.

"இன்னிக்கு அந்த சிவலிங்கத்தை சுற்றி நடக்கப்போற அவ்வளவு அதிசயங்களையும் பார்த்தே தீரணும். நம்ம பிரார்த்தனையையும் அங்க வைப்போம்..." குமாரதேவன் புறப்பட்டு விட்டார். அவர்களும் தயாராயினர்.

36

'தா'ணுமாலய வனத்தில் மாம்பூக்களை வைத்து அந்த வருடத்து செழிப்பை சொல்லிவிடும் ஒரு வழக்கம் உண்டு. இலையுதிர் காலம் முடிந்து

வசந்தகாலம் தொடங்கும்போதே பூக்கள் பூக்கத் தொடங்கிவிடும். இக்காலகட்டத்தில் வேப்பம் பூக்களும் கொத்து கொத்தாய் பூத்திடும். இந்த பூக்களை வைத்தும் புதிதாய் தொடங்கிவிடும் தமிழ் வருடத்தில் தானிய விளைச்சல் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லி விடுவார்கள். குறிப்பாக, 'முப்பத்தாக்கள்' எனப்படும் மூன்று தலைமுறை கண்ட கிழவிகள் இதில் மிகத் தேர்ந் தவர்கள்.

இந்த கிழவிகள் பிரசவம் பார்ப்பதிலும் கைதேர்ந்த வர்கள். கர்ப்பிணியின் முகத்தையும், அவர்கள் நடப்பதையும் வைத்தே ஆணா, பெண்ணா என்றும் மிகச் சரியாக கூறிவிடுவார்கள். இந்த கணிப்புகள் ஒருமுறை கூட தவறியதில்லை என்பது தான் ஆச்சரியம்!'

"யானைகள் கிட்ட இருந்து
வானத்து மனிதர்கள் நம்மை
காப்பாத்தின அதிசயத்தையும் நீ
சொல்லல. உயிரே போயிருக்க
வேண்டிய இடத்துல நீ இப்படி..."

குமாரதேவனும், அவரது சகாக்களும் டார்ச்லைட் உதவியுடன் புறப்பட்டனர். சிறிது தூரம் கூட சென் றிருக்கமாட்டார்கள். 'நில்லுங்கள்' என்று ஒரு அதட்டலான குரல் அவர்களை தடுத்தது. சப்தம் வந்த திசையில் சிவக் குமார்தான் தென்பட்டார். அவரும் சற்று கோபமாக அவர் களை நெருங்கி வந்தார்.

"தூங்கப் போகலையா?"

"இல்ல சார்... அது வந்து..."

"என்ன... திரும்ப அந்த காட்டுக்குள்ள போய் ஆராயப் போறீங்களா?"

"ஆ...ஆமாம் சார்... சிவராத்திரிங்கிறதால விசேஷ பூஜைல்லாம் நடக்குமாமே..."

"அந்த பூஜையை நான் போய் பாத்துக்கிறேன். நீங்க போய் படுங்க..."

"சார்..."

"என்ன சார்... இது நைட் டைம். டியூட்டி பார்க்க ஒரு கால நேரம் இருக்கு. ஏற்கனவே இங்கே மண்டைய பிச்சுக்கிற விஷயங்கள் இஷ்டத்துக்கும் இருக்கு. இதுல நீங்க போய், உங்களுக்கு ஏதாவது ஆகிட்டா டிபார்ட்மென்ட்டுக்கு நான் தான் பதில் சொல்லணும்..."

"அப்ப நீங்க போனா எதுவும் ஆகாதா சார்...?"

"குமாரதேவன்... நான்தான் இங்கே உங்களுக்கு சுபீரியர் ஆபீசர். என்கிட்ட தயவு செய்து ஆர்கியூ பண்ணாதீங்க."

"ஆர்கியூ பண்ணல சார்... சில விஷயங்கள் நடக்கும் போதே கவனிக்கணும் சார்... விட்டுட்டா அந்த சந்தர்ப்பம் திரும்ப வராது."

"அது எனக்கும் தெரியும். அதனாலதான், நான் போய் பார்க்க முடிவு செய்தேன். உங்க கடமையை நாளைக்கு பொழுது விடியவும் தொடருங்க. இப்ப போய் நல்லா ரெஸ்ட் எடுங்க. நான் போனபிறகு எனக்கு தெரியாம போக முயற்சி பண்ணாதீங்க."

கட்டளை குரலில் பேசிவிட்டு சிவக்குமார் புறப்பட்டார். காத்திருந்தது ஜீப். அவர் ஏறிக் கொள்ளவும் வெளிச்சத்தை துப்பிக் கொண்டே வேகமெடுத்தது.

கதவை திறந்து வைத்துக் கொண்டு வெளிப்புறமே பார்த்தபடி இருந்ததில் ஏராளமான கொசுக்கள் வீட்டுக்குள்

[illegible] விட்டன. ரேகா, வேட்டையாடிக் கொண்டிருக்க, [illegible]யம்மை சிவக்குமாரை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். [illegible] தூக்கம் வராமல் தன் கையில் ஒரு 'டேப்'பை [illegible]துக் கொண்டு அதில் வெறுப்போடு கேம் விளையாடிக் [illegible]டிருந்தான். திலீப் மயக்கத்தில் இருந்து எழாதவ [illegible] இருந்தான். நட்ராஜ் அவ்வப்போது திரும்பித் திரும்பி [illegible]யை பார்த்தபடியே தான் இருந்தான். திலீப் மயக்கம் [illegible]தா, அவன் எழுந்து பேசமாட்டானா என்கிற [illegible] பார்ப்பும், துடிப்பும் நட்ராஜின் முகத்தில் நிறையவே [illegible]தது.

வள்ளியம்மை அன்று வழக்கத்துக்கு மாறாக நிறைய [illegible] விஷயங்களை செயல்படுத்தியிருந்தாள். அந்த [illegible]ர்சின் ஒரு ஷெல்ப்பில் சில சுவாமி படங்களை [illegible]த்து, அதற்கு வீட்டைச் சுற்றி கிடைத்த பூக்களை [illegible]ண்டு மாலை கட்டிப் போட்டு விளக்கு ஏற்றியிருந்தாள். [illegible] ஆச்சரியமாக பார்க்கவும், அவளை அழைத்து அந்த [illegible]த்தில் கோலம் போடச் சொல்லி, அவளையும் குளித்து [illegible]டு வரச் சொல்லியிருந்தாள்.

"நான் இதை எல்லாம் ஒரு தடவை கூட செய்ததில்ல" [illegible]று ரேகா கூறவும், "இப்ப கத்துக்கோ... இதை தெரிஞ்சுக்க [illegible]னா பெண் ஜென்மமா பொறந்ததுலேயே அர்த்தமில்ல" [illegible]று அவளிடம் கடிந்து கொண்டிருந்தாள். அதெல்லாமே [illegible] பாஜை என்னவெல்லாமோ செய்து கொண்டிருந்தது.

அப்போது ஜீப்பின் ஹாரன் சப்தமும் ஒலித்து அடங்கி [illegible], சிவக்குமார் உள் இறங்கி வந்தார். வள்ளியம்மை [illegible]கத்தில் சற்றே மகிழ்ச்சி.

உள் நுழையும்போதே ஊதுவத்தி வாசனை சிவக் [illegible]ருக்கு உணர்த்திவிட்டது. யூனிபார்மை கழட்டியபடியே, "என்ன வள்ளியம்மை... பூஜை செய்தியா?" என்று [illegible]ரம்பித்தார்.

"ஆமாங்க... ரேகாவும் ஹெல்ப் பண்ணினா..."

"சரி டி.பன் ரெடியா?"

"தயாரா இருக்கு... ஹாட்பேக்ல போட்டு எப்பவோ எடுத்து வெச்சுட்டேன். இட்லி, தக்காளி சட்னி..."

"சீக்கிரம் கொடு... நான் வெளியே போகணும்."

"என்னங்க இது... இந்த நேரத்துல எங்க போகப் போறீங்க..."

"அதெல்லாம் உனக்கு எதுக்கு... நீ அநாவசியமா பயப் படாதே. இந்த நிமிஷம் இந்த தாணுமாலய வனத்துல நூத்தி ஐம்பது போலீஸ்காரங்க டென்ட் போட்டு தங்கியிருக்காங்க. ஒவ்வொரு மர்மமா அவிழப் போற நேரமும் நெருங்கி கிட்டிருக்கு..."

இடுப்பு பெல்ட்டை தளர்த்தியபடியே பாத்ரூம் நோக்கி சென்ற சிவக்குமாரை நட்ராஜ் அம்புப் பார்வை பார்த்தான்.

"என்ன நட்ராஜ் தூக்கம் வரலையா?"

"எப்படி வரும்? ஏதாவது உருப்படியா கிடைச்சுதா?"

"ஓரளவு கிடைச்சிருக்கு. ஆமாம், திலீப் மயக்கம் இன்னுமா தெளியல...?"

"ஆமாம்... ஒரு பக்கம் நான் நொண்டியா... மறுபக்கம் அவன் மயக்கத்துல... சாரி பிரதர்... எங்களால உனக்கு எந்த ஹெல்ப்பும் இல்ல..."

"அப்படி சொல்ல முடியாது நட்ராஜ்... இங்க கொஞ்சம் நல்ல விஷயங்கள் இருக்கிறதாவும் தெரியவந்துருக்கு..."

"அப்படி என்ன நல்ல விஷயங்கள் பிரதர்...?"

"அதை எப்படி சொல்றது... மதிகெட்டான் வனத்துக் குள்ளதான் எல்லா மர்மமுமே இருக்கிற மாதிரி தெரியுது. அங்க போய் சர்ச் பண்ணிட்டு வந்த குரூப்போ, ஏதோ அந்த கைலாச யாத்திரைக்கே போய்ட்டு வந்த மாதிரி ஒரு

பாக்கைசட்மெண்ட்டுல இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் சில நல்ல விஷயங்கள் நடந்திருக்கு..."

"எல்லாம் காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதைதான்... போகட்டும் இந்த ராத்திரில நீ எங்க போக போற?"

"இன்னிக்கு சிவராத்திரியாமே?'

"இருந்துட்டு போகட்டும்... அதனால என்ன?"

"மதிகெட்டான் வனத்துல சிவராத்திரி வேளைல வானத்துல இருந்த கவுனர்கள்ங்கிற மனிதர்கள் வர்றாங்களாம். வந்து சிவபூஜை செய்வாங்களாம்!"

"இது என்ன புது கதை?"

"கதையா... இல்ல மாய்மாலங்கிறதை போய் பார்த்தா தானே தெரிஞ்சுக்க முடியும்..."

சிவக்குமார் சிவராத்திரி என்ற உடனேயே வள்ளி யாம்மைக்கு ஒரு சிலிர்ப்பு.

"என்னங்க... உங்ககூட நானும் வரட்டுமா?" என்று ஆரம்பித்தாள். அதைக் கேட்ட நொடி சிவக்குமாரிடம் திகைப்பு.

"வள்ளி என்ன விளையாடுறியா?"

"விளையாடலங்க... சிவராத்திரி கண்முழிக்கிறது விசேஷம். அதுலயும் சிவதரிசனம் பண்றது ரொம்ப ரொம்ப விசேஷம்."

"போதும் வாயை மூடு- இங்க எல்லாரும் இந்த வீட்டுல கை போய், கால் போய் படுத்த படுக்கையில கிடக்கணுமா?"

"ஏன் அப்படி நினைக்கிறீங்க... நீங்க டியூட்டியை பாருங்க. நான் பக்தியோட பாத்துட்டு போறேன்."

"வாயை மூடு... பிரச்னையோட சீரியஸ்நெஸ் தெரியாம பேசுறியே..."

"தெரிஞ்சுதான் பேசுறேன். என் வரையில இது நல்ல காடுங்க. எனக்கு நல்லது மட்டும்தான் நடக்கும். நீங்க பயப் பட வே தேவையில்ல."

"பேசினது போதும்... டிபனை கொண்டா..."

சிவக்குமார் கடுமையாக அதட்ட, டிபனும் வந்தது. அள்ளிப்போட்டுக் கொண்டார். சாப்பிட்டு முடித்த வேகத்தில் திரும்பவும் யூனிபார்ம் போட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

ஜீப் புறப்பட்டு செல்லும் சப்தம் கேட்டு முடியவும், நட்ராஜ் கேலியாக வள்ளியம்மையை பார்த்தான்.

"என்ன நட்ராஜ் ஒரு மாதிரி பார்க்கிற?"

"உங்க கூட துணையா வர்றேன்னு சொல்லியிருந்தா கூட சிவா கூட்டிக்கிட்டு போயிருப்பான். சிவராத்திரில சாமி கும்புடறது விசேஷம்னு சொன்னதுலதான் ஐயா சூடா யிட்டாரு..."

"உனக்கு பட்டும் புத்திவரல..."

"என்ன அண்ணியாரே... நான் என்ன வில்லத்தனம் பண்ணிட்டேன்னு உங்களுக்கு இந்த கோவம்...?"

"பண்ணாமதான் நீ, உன் சிஷ்யன்னு ரெண்டு பேரும் படுத்த படுக்கையா கிடக்கிறீங்களா?"

"நாங்கதான் ரிஸ்க் எடுத்தோம். ரிஸ்க் எடுக்கும்போது இதெல்லாம் சகஜம்தானே?"

"நல்ல விஷயத்துக்கு எடுத்தா நல்லது நடந்திருக்கும்..."

"அண்ணியாரே... உலகம் உருண்டைன்னு கலிலியோங் கிற விஞ்ஞானி முதன் முதலா சொன்னப்ப யாரும் ஒத்துக்கல. பதிலுக்கு கல்லாலதான் அடிச்சாங்க."

"நீ ஒண்ணும் கலிலியோ கிடையாது. அபூர்வமா பல விஷயங்கள் நம்மை சுத்தி நடந்த பிறகும் எல்லாத்தையும் மறந்துட்டு கண்ணோட பார்க்கிறது தப்பு!"

'அண்ணி... எதுக்கு என்கிட்ட இப்படி ஒரு உபதேசம்? ஏரியா ஆபீசர் கொலை செய்யப்பட்டிருக்கார். இரண்டு பெண் யானை செத்துட்டாங்களா, உயிரோட இருக்காங்களான்னு தெரியல. தங்கம் இருக்கிறதும் தெரிஞ்சு போச்சு. இதை எல்லாம் கேள்விப்பட்டும், ஏதோ தப்பு நடக்கு முன்னு புரிஞ்சுக்காம அதிசயம், ஆச்சரியம்னா என்ன அர்த்தம்?"

"நீ தவறுகளை மட்டும்தான் சொன்ன. நான் கருத்தரிச்ச அதிசயத்தை நீ சொல்லல. யானைகள் கிட்ட இருந்து மனுஷத்து மனிதர்கள் நம்மை காப்பாத்தின அதிசயத்தையும் நீ சொல்லல. உயிரே போயிருக்க வேண்டிய இடத்துல நீ இப்படி தெம்பா பேசிகிட்டு இருக்கிறது கூட ஒரு அதிசயம் தான். அதையும் நீ சிந்திக்கல.."

"அண்ணியாரே... எதுக்கு இந்த கோபம்? நான் அதிசயங்களை புரிஞ்சுக்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். உங்க அதிசய நம்பிக்கைகளால இந்த காட்டுல நடந்த தவறுகளுக்கு விடையை கண்டுபிடிக்க ஏன் முடியல...?"

"இப்பதான் நீ சரியான கேள்வி கேட்டு இருக்க. அந்த தவறுகள் யாரால... எதனாலன்னு நான் கண்டுபிடிக்கிறேன். உன் அண்ணனுக்கு கடமை உணர்ச்சின்னா, எனக்கு பக்தி உணர்ச்சி. ரேகா நீ என் கூட நிப்பியா?"

வள்ளியம்மை அப்படி ஒரு முடிவுக்கு வருவாள் என்று ரேகா எதிர்பார்க்கவில்லை. அவளிடம் திகைப்பு!

37

*'வ*னத்து அதிசயங்களில் முதுநாகமும் ஒன்று. இது ராஜநாக இனத்தை சேர்ந்தது. மூன்றரை மீட்டர் நீளம் வரை சராசரியாக வளரக்கூடியது. வனத்தின் குளிர்ந்த இடத்தை தேர்வு செய்து அங்கே இது வசிக்கும். இரைதேடி இரவுகளில் தான் வெளியே வரும். எவ்வளவு உயரமான மரத்திலும் ஏறிவிடும். அணில்குஞ்சுகள் கூட்டிலுள்ள பறவைக்குஞ்சுகள், காட்டுஎலிகள், பூனைகள் என்று எதையும் இது விடாது.

இதைப்பிடிக்க முள்ளம்பன்றியை பயன்படுத்து வார்கள். முள்ளம்பன்றிக்கு சில கிழங்கு வகைகளை தின்னக் கொடுக்கும் போது அதோடு மயக்கம் ஏற்படுத்தும் கஞ்சா இலையை சேர்த்துக் கொடுப் பார்கள். முள்ளம்பன்றி இதனால் அரை மயக்கத்தில் இருக்கும். அப்படியே செத்தது போல் கிடக்கும். அப்போது இந்த முதுநாகம் அதை சாதாரண பன்றியாக கருதி விழுங்க முயலும். அப்போது விழித்துக் கொண்டு தன் முட்களை பன்றி விரிக்க முயலும். அதனால் முதுநாகத்தின் வாய்ப்பாகம் ரணமாகி பாம்பு பன்றியை விட்டுவிடும். அதே சமயம் அதனால் மற்ற எதையும் உண்ண முடியாது போய் சுருண்டு விடும். அப்படி இது சுருண்ட நிலையில் இதை பிடிப்பார்கள். இதன் தோல் பல விஷயங்களுக்கு பயன்படும். இதன் கொழுப்பில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்ப்பூச்சு தோலுக்கு பெரும் மினுமினுப்பு தரும்.

"ஒரு கர்ப்பிணியான அவள்
இப்படி நடுராத்திரியில் ஒரு
காட்டின் பயங்கரம் தெரியாமல்
வெளியே போனது பெரிய
அளவில் நட்ராஜ்க்குள் பயத்தைக்
கூட உருவாக்கிற்று..."

ரேகா என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் மலைகாரப்பாடு பார்த்தாள். அவள் பார்வை நட்ராஜ் பக்கமும் மாறியது. அவன் அவளை பார்வையாலேயே போக வேண்டாம் என்பது போல சமிக்ஞை காட்டினான்.

ஆனால் ரேகா துணிந்து வள்ளியம்மையோடு புறப்பட்டு விட்டாள். முன்னதாக ஒரு சால்வையை எடுத்து போர்த்திக் கொண்டாள். செல்போனையும் எடுத்துக் கொண்டாள்.

இருவரும் வாசற்கதவை சாற்றிக் கொண்டு புறப்பட முனையவும் நட்ராஜ் தடுத்தான்.

"அண்ணியாரே... வேண்டாம். சிவாவுக்கு தெரிஞ்சா கோபப்படுவான்..."

"எதுவும் ஆகாது நட்டி... யு டேக் ரெஸ்ட்..."

"நோ.... இப்ப மிட் நைட் டைம்... இது காடு. ஆண் துணை இல்லாம போறது கொஞ்சமும் சரியல்ல..."

"அப்கோர்ஸ்... ஆனா இன்னிக்கு சிவராத்திரி. அபூர்வ மான நாள். எனக்கு சிவபெருமான் துணையா வருவார். நான் அந்த சிவலிங்க பூஜையை பார்க்க விரும்பறேன். பொதுவா சிவராத்திரி அன்னிக்கு அஞ்சுகாலம் பாக்கணும். எங்களுக்கு மூணுகால மாவது கிடைச்சாலும் போதும்."

வள்ளியம்மை நட்ராஜின் வாயை அடைத்தவளாக கையை வெளிப்பக்கம் தாழிட்டுக் கொண்டு போயே விட்டாள்.

நட்ராஜ்க்கு ஏமாற்றமாக இருந்தது. அந்த இரவுப் பொழுதில் சில்வண்டுச் சப்தம் காதைத் திருகிற்று. பலவித எதிர்பார்ப்புகளோடு வந்து இப்படி முடங்கிக் கிடப்பது எரிச்சலை ஏற்படுத்திற்று.

பார்வை சற்றுதள்ளி மயக்கத்தில் கிடந்த திலீப் மேலும் சென்றது. அவன் கிடக்கிற கோலமும் நெஞ்சைக் கரித்தது.

அந்த வேளையில் ஏற்பட்ட இயலாமை மனதை குத்திக் கிழித்தது. 'அவ்வளவும் திட்டமிட்ட சதிவேலை. ஒரு காடே சிலரிடம் அகப்பட்டு களவு போனபடி இருக்கிறது. அந்த சிலரை வெல்லத் துப்பில்லாதபடி இப்படி முடங்கி விட்டோமே' என்றும் தோன்றியது...

அதைக் கூட ஜீரணிக்க முடிந்தது... வள்ளியம்மை நம்பிக்கையோடு இருப்பதுதான் அதிகம் மனதை நெருடிற்று. ஒரு கர்ப்பிணியான அவள் இப்படி நடுராத்திரியில் ஒரு காட்டின் பயங்கரம் தெரியாமல் வெளியே போனது பெரிய அளவில் நட்ராஜ்க்குள் பயத்தைக் கூட உருவாக்கிற்று.

மனதுக்குள் இப்படி மருகுவதற்கு எழுந்து நிற்க முயன்று நடக்க முயற்சித்தால் என்ன என்றும் தோன்றவே அதற்கான முயற்சிகளில் இறங்கினான். முதலில் இரு கைகளை ஊன்றி எழுந்து அமர்ந்தான். பின் நீண்ட கட்டுப்போட்ட காலை தூக்கி கீழே தொங்க விட்டான். அந்த நொடி வலி உயிர் போயிற்று. ஒரு வழியாக படுத்துக் கிடந்த நிலையில் இருந்து எழுந்து உட்கார்ந்தாயிற்று. இப்போது நிற்க வேண்டியது தான் அடுத்த செயல். ஆனால், அதற்கு சற்று அவகாசம் எடுத்துக் கொள்வது நல்லது என்று மனதுக்குப் பட்டது.

வெளியே டார்ச்லைட் உதவியோடு வள்ளியம்மையும் ரேகாவும் நடந்து கொண்டிருந்தனர்.

"மேடம்..."

"சொல் ரேகா..."

"அந்த மதிகெட்டான் வனத்துக்கு உங்களுக்கு வழி தெரியுமா?"

"தெரியாது..."

"அப்ப எப்படி நாம போகப்போறோம்?"

"கவலைப்படாதே... வானத்து மனுஷங்க வந்து கூட்டிக்கிட்டு போவாங்க..."

"என்ன மேடம் சொல்றீங்க..." ரேகா திகைத்து நின்றாள்.

"என்ன ரேகா... உன்னால நம்ப முடியலியா?"

ரேகா பதிலுக்கு வெறித்தாள்.

"மூப்பர் யானைகள் வந்து தாக்கினப்ப அவங்களை மனசார நினைச்சது ஞாபகம் இருக்குல்ல..."

"அதனால?"

"நாமளும் நினைப்போம்..."

"மேடம்..."

"என்ன?"

"அது ஒரு தற்செயல் சம்பவமா கூட இருக்கலாம் இல்லையா?"

"அது தற்செயலா இல்லை உண்மையாங்கறதை நாம இப்ப பரிசோதனை செய்து பார்த்துடுவோம்..."

"எப்படி மேடம்?"

"நாமளும் மனசார பிரார்த்தனை செய்வோம்..."

"மேடம்..."

"என்ன..."

"இல்ல இந்த பிரார்த்தனை வழிபாடு இதெல்லாம் எனக்கு கொஞ்சமும் பழக்கமில்லாத விஷயங்கள்..."

"அதனால என்ன... நான் உனக்கும் சேர்த்து பிரார்த்தன பண்றேன்..."

"ஒருவேளை அவங்க வரலைன்னா பேசாம வீட்டுக்கு திரும்பிப் போயிடுவோமா?"

"வேற வழி?"

"அப்ப சரி..."

"ஆனா நான் அப்படி நினைக்கல. எனக்கு நம்பிக்கை இருக்கு..."

வள்ளியம்மை நின்ற இடத்தில் டார்ச்சை ரேகா கையில் கொடுத்துவிட்டு கைகளை கூப்பி வானத்து மனிதர்களை மனதுக்குள் நினைக்க ஆரம்பித்தாள்.

"சாமிங்களா...! உங்களை எல்லாம் நான் சித்த புருஷர் களாதான் நினைக்கறேன். சித்தர்களாலதான் அதிசயங்களை செய்துகாட்ட முடியும். அவங்களை புரிஞ்சுக்க யாராலயும் முடியாது. உங்க வரைலயும் எல்லாம் அப்படித்தான் இருக்கு. என் வரைல நீங்க பதினெட்டு சித்தர் பெருமக்களாத்தான் இருக்கணும்.

நான் இப்ப நடுக்காட்டுல சிவராத்திரி சிவதரிசனத்துக் காக தவிச்சுப் போய் நிக்கறேன். நான் இப்ப தனியா கூட நிக்கல. என் வயித்துல ஒரு சிசு. என்கூட ஒரு பொண்ணு. ஆக நாங்க மூணு பேர் நிக்கறோம். இந்த தாணுமாலயவனம் ஒரு தெய்வீக வனம்கறது உண்மைன்னா நீங்கள்ளாமும் இந்த வனத்தை பாதுகாக்கறது சத்தியம்னா எனக்கு இப்ப துணைபுரிய வாங்க..."

வள்ளியம்மையின் மனது நெகிழ்ந்து கசிந்தது. கண் களில் நீர் கோர்த்துக் கொண்டது. அவள் உணர்ச்சி வசப் படுவது ரேகாவுக்கும் நன்கு தெரிந்தது.

அந்த நொடியில் 'ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...' என்ற ஒரு குரலும் கேட்கத் தொடங்கியது. யாராக இருக்கும் என்று ரேகா சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். ஒருவர் கையில் நீர்ப் பாத்தமோடு வந்தபடி இருந்தார். அவர்தான் ஓம் நமச் சிவாய என்றவர்.

அவரை பார்க்க சற்று வினோதமாக இருந்தார். ஜிப்பா ஜுப்பா என்கிற ஆடை, நீண்ட தாடி, தலைமுடியிலும் வெளுப்பு. கருக்கமாக சொன்னால் அந்த நாளைய தாகூர் திரும்ப வந்தது போல் இருந்தது. அவர் வரவும் ரேகா வள்ளி யாயிமையை உசுப்ப அவளும் கண்திறந்தாள். ரேகாவுக்கு மலையில் அது நம்ப முடியாத ஒன்றாகத்தான் இருந்தது.

"சாமி வந்துட்டீங்களா?" என்றாள் வள்ளியம்மை.

"நீ யாரும்மா... இங்க என்ன பண்ற?"

"நான் இந்த காட்டோட ஃபாரெஸ்ட் ஆபீசரோட மனைவி. என்னைத் தெரியலியா உங்களுக்கு?"

"ஓ... நீதானா அந்த ஆபீசர் மனைவி..."

"ஆமாம் சாமி... என் நம்பிக்கை வீண் போகல. நீங்க வந்துட்டீங்க... ரொம்ப சந்தோஷம் சாமி."

"நான் சிவதரிசனத்துக்கு போய்கிட்டிருக்கேன். யாரோ என்னை கூப்பிட்ட மாதிரி இருக்கவும் வந்தேன். இப்ப நான் என்னம்மா செய்யணும்?"

"ஐயோ நானும் அதுக்குதான் புறப்பட்டேன். இந்த வனத்துல சித்தர்கள் சிவராத்திரி வேளைல சிவபூஜை செய் வாங்களாமே?"

"ஆமாம்மா. அது ஒரு அற்புதக்காட்சி. வா சேர்ந்தே போவோம்..."

"சாமி... உங்க பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?"

"என் பேரா... காடன்மா..."

"காடனா?"

"ஆமாம்மா.... காடுன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். அதனால அந்த அர்த்தம் தரும் காடன்கற பேரையே வெச்சுக் கிட்டேன்..."

"உங்க மற்ற சித்தர் சாமிங்கள்ளாம் எங்க சாமி?"

"ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு வேலைம்மா... ஆனா எல்லாரும் பிரம்ம முகூர்த்த தீபாராதனைக்கு மதிகெட்டான் வனத்துக்கு வந்துடுவாங்க..."

நடந்தபடியே பேச்சு வளர்ந்தது. ரேகா நிஜமாலுமே பிரமிப்பில் இருந்தாள். தன் செல்போனில் உள்ள ரெக் கார்டரை ஆன் செய்து கொண்டிருந்தாள்.

"சாமி நான் இந்த ராத்திரி வேளைல துணிச்சலா வந்துருக்கறது சாமி தரிசனத்துக்காக மட்டுமில்ல. உங்க எல்லார் கூடவும் நிறைய மனம் விட்டு பேசறதுக்காகவும் தான்."

"தாராளமா பேசு... காட்டு நடைல பேச்சு தான் தைரியம்."

"சாமி இந்த காட்டுல நீங்க எங்க குடியிருக்கீங்க?"

"அதுவா... சொன்னா நம்ப மாட்டேம்மா..."

"நம்பறேன் சாமி. சொல்லுங்க!"

"சொல்றத விட உனக்கு கண்ணுல காட்டிடறது நல்ல தில்லையா?"

"அது இன்னும் பெட்டர்..." என்றாள் ரேகா.

"ஆமா, இந்த குட்டி யார்?" அவர் ரேகாவை குட்டி என்றார்.

"இவ பேர் ரேகா... என் சிஸ்டர்..."

வள்ளியம்மை தன்னை சகோதரி என்று குறிப்பிட்டது பிரபாவுக்கு சிலிர்ப்பை அளித்தது.

"ஆமா... நிறைய பேசணும்னு சொன்னியே... பேசு."

"நீங்க இந்த காட்டுலயே வசிக்கிறவங்கதானே?"

"அதுல என்னம்மா சந்தேகம். எங்க வரைல இந்த காடுதான் பூலோக சொர்க்கம்."

"இந்த பூலோக சொர்க்கம் சொர்க்கமாவே இருக்க வேணுமா வேண்டாமா?"

"இது என்னம்மா கேள்வி... நிச்சயமா இருக்கணும்மா..."

"ஆனா இங்க நிறைய தப்பு நடக்குதே சாமி..."

"அதான் தட்டிக்கேட்க நீயும் உன் புருஷனும் வந்துட்டீங்களே..."

"சாமி என்ன சொல்றீங்க?"

"நான் சொன்னது சரிதானே?"

"ரொம்ப சரி சாமி... ஆனா என் புருஷனுக்கு இங்க எல்லாம் பெரிய மர்மமா இருக்கு. எதையும் அவரால தெளிவா புரிஞ்சுக்க முடியல. குறிப்பாக நீங்கெல்லாமே கூட அவர் வரைல குற்றவாளி லிஸ்ட்லதான் சாமி இருக்கீங்க..."

"அதனால என்னம்மா... ஸ்படிகம் எல்லா நிறங்களையும் ஏத்துக்கும். அந்த நிறம் நீங்கிட்டா அது நிறமே இல்லாத தண்ணி மாதிரி ஆகிடும். உன் புருஷன் எங்களை குற்றவாளின்னு நினைச்சா குற்றவாளிதான். நீ சாமின்னு நினைச்ச நானும் சாமியா பேசிட்டிருக்கேன்."

"ரொம்ப தத்துவமா பேசறீங்க... ஆனா, என் புருஷன் உங்ககூட பேச தவிச்சிட்டிருக்கார்..."

"அவருக்குள்ள தவிச்சா ஆச்சா? இப்ப நீ கூப்டா நான் வந்தேன். அந்த மாதிரி அவரும் கூப்டட்டுமே..."

"கூப்ட்டா தான் வரணுமா? அவர் பதவிக்கு மரியாதை தந்து நீங்க வந்து பார்க்க கூடாதா?"

"அதுதான் உன் விருப்பம்னா வரேன்..."

"ரொம்ப சந்தோஷம் சாமி..."

ரேகாவுக்கு வள்ளியம்மை பேச்சும் சரி, அவர் பதிலும் சரி மிக புத்திசாலித்தனமாக இருப்பதும் போல் தோன்றிற்று.

"ஆமா இன்னும் எவ்வளவு தூரம் சாமி இருக்கு" என்று அடுத்து கேட்டாள் வள்ளியம்மை.

"வந்தாச்சும்மா... நான் இப்ப ஒரு கொட்டையை தரேன். அதை வாய்ல போட்டுக்கோ. விழுங்கிடாத. அப்பதான் பூஜையை நீ உன்னை மறக்காத நிலைல பார்க்க முடியும்..." என்று இருவருக்கும் இரு கொட்டைகளை தந்தார். வாயில் போட்ட நொடி சற்று உவர்ப்பாக இருந்து பின் இனிக்க தொடங்கியது.

அதேவேளையில் கோரசாக ஒரு கூட்டமே 'ஓம் நமசிவாய...' என்று ஒலிக்கும் குரலும் கேட்டது. ரேகாவிடம் பரபரப்பு தொற்றிக் கொள்ள ஒரு வெள்ளை எருது கழுத்தில் மணியோடு கம்பீரமாக அவர்களை கடந்து ஓடிற்று. அப்படி ஒரு எருதை ரேகா அவள் வாழ்நாளில் பார்த்ததில்லை. அங்கங்கே மரங்களில் தீப்பந்தங்கள். அந்த மரங்களுக்கு கீழெல்லாம் பூஜிக்கப்பட்ட நிலையில் சிவலிங்கங்கள். அதில் ஒரு லிங்கத்துக்கு ஒரு நாகம் தன் வாயாலே வில்வத்தை எடுத்து போட்டு அர்ச்சித்தப்படி இருந்தது.

38

*'வ*னத்து அதிசயங்களில் முதுநாகத்தை முள்ளம் பன்றியை வைத்து பிடிப்பது ஒரு விதம் என்றால் அதை பவுர்ணமி இரவில் உயிரோடு பிடிப்பது இன்னொரு விதம்!

இதற்காக உடம்பில் ஒருவித தைலத்தை பூசிக் கொண்டு தாவர வாசனையோடு மரங்களில் ஏறிக் காத்திருப்பார்கள். கீழே பச்சைத் தவளைகளை சுனைகளில் இருந்து பிடித்து வந்து செயற்கையாக ஒரு குட்டையை உருவாக்கி அதில் முழங்காலளவு நீரை விட்டு நிரப்பி அதில் இந்த தவளைகளை விட்டுவிடுவார்கள். தவளைகள் வானத்து சந்திரனைப் பார்த்தால் எக்காளமாய் கத்தத் தொடங்கி விடும். இதன் குரலே காட்டிக் கொடுத்து விடும். அடுத்து இந்த தவளைகளின் மேல் வீசும் ஒருவகை வாசம் முதுநாகத்தை இழுக்கும். முது நாகமும் விழுங்க வரும். விழுங்க வந்த முதுநாகம் குட்டையில் இறங்கி அவைகளை விழுங்கிடும் போது மரத்தின்மேல் இருப்பவர்கள் அதை கவ னித்த நிலையில் நாகத்தைப் பிடிக்க தயாராவார்கள். முதுநாகம் பிடிப்பதில் இருளர்களும், சேணியர்களும் கை தேர்ந்தவர்கள். நாகதாளிவேரை மணிக்கட்டில் கட்டிக் கொண்டு பாம்பின் கழுத்தை இவர்கள் லாவகமாக பிடிப்பார்கள்... நாகதாளிவேரின் வாடை முதுநாகத்தை சுருள வைக்கக் கூடியது. நூறாண்டு கள் கடந்து விட்ட நாகங்களின் வாயில் அதன் விஷப்பையே சுருங்கி விஷமும் கருநீலத்தில் கல் போல உருமாற ஆரம்பித்திருக்கும்... இதைத்தான் இதன் ரத்தினம் என்பார்கள். இந்த ரத்தினத்தை வழித்து எடுத்து தாயத்துக் குப்பிக்குள் அடைத்து கையில் கட்டிக் கொள்ள அதனால் நினைத்த காரிய சித்தி ஏற்படும் என்பது நம்பிக்கை!'

"அங்கே ஒரு சித்தர் வில்வ
இலைகளை மாலை போல
காட்டிக் கொண்டிருந்தார். அவர்
சிரிப்பு ரேகாவை சீண்டுவது
போல கூட இருந்தது..."

"சிவகுமார் ஒரு கட்டத்தில்
சரேலென்று வேகமாக திரும்பி
டார்ச்சின் வெளிச்சத்தை
பாய்ச்சினார். அதில் மருண்ட
விழிகளுடன் திருதிருவென விழித்
தவனாக நின்றபடி..."

ஒரு நாகம் வில்வம் கொண்டு சிவலிங்க வழிபாடு செய்வது என்பதை வள்ளியம்மை சினிமாவில் கூட பார்த்ததில்லை. ஆனால் அங்கே பார்த்த போது அவளால் மட்டுமல்ல ரேகாவாலும் நம்ப முடியவில்லை.

"என்னம்மா... நம்ப முடியலையா?"

"ஆமாம்... இது எத்தனை பெரிய அதிசயம்?"

"அதிசயம்கறதெல்லாம் முதல் தடவை பார்க்கும் போதுதான். தொடர்ந்து பார்க்கும் போது பாம்பால இதுவும் முடியும் போல இருக்குன்னுதான் தோணும்... மேல் நாடுகள்ள டால்பின் மீன்கள் பந்து விளையாடுதே..."

"நான் அதைவிட இதை பெரிய அதிசயமா பாக்கறேன்..." என்ற ரேகா செல்போன் கேமராவில் அதை புகைப்படம் எடுக்க முனைந்தாள்.

"அம்மாடி... நெட்ல பாம்பு வில்வத்தால லிங்கத்தை வழிபட்ட வீடியோவே இருக்கும்மா... ஒரு சூரிய கிரகண நாள்ல தஞ்சாவூர் பக்கம் ஒரு பழமையான சிவன் கோவில்ல நூற்றுக்கணக்கான பேர் பார்க்க இப்படி ஒரு அதிசயம் நடந்து அது வீடியோவாவும் எடுக்கப்பட்டது. நீ இதை

வ்வ்வ்ம் அதிசயமா கண்காட்சி மாதிரி பார்க்காத. நீ ப்ப்ப்வோ செய்த புண்ணியம்தான் இந்த ராத்திரியில இங்க ப்ப்ப்க் காரணம். பக்தியோட இங்க பிரார்த்தனை செய். அதுதான் உனக்கு நல்லது..." அவர் சொன்னது ரேகாவிற்கு ஸ்ரீரா ந்தியை தரவில்லை. இந்த வேளையில் திலீப் இல்லாமல் ப்ப்ப்ய்விட்டானே என்றுதான் மனது கிடந்து வருந்தியது.

தொட்ர்ந்து நட்ந்ததில் நல்ல வெளிச்சமுள்ள சூழலும் ஒரு பெரும் மரத்தடியில் ஐந்தடி உயர சிவலிங்க ரூபம் ஒன்ற்றும் கண்ணில் பட்டது. அதற்கு சிவசித்தர்கள் அலங் ர்ப்ப்ரம் செய்து கொண்டிருந்தனர். ஒருபுறம் ஒருவர் ப்ப்ஞ்ச்ர்மிர்தம் தயாரித்தபடி இருந்தார். இன்னொருவர் ப்ப்ப்லை பெரிய தாழியில் ஊற்றியபடி இருந்தார். ஒருவர் ப்ப்ப்ப்ட்டிக் கொண்டிருந்தார். ஒருவர் குங்கிலியம் என்னும் ஸ்ர்ப்ப்ராணி புகையை மூட்டிக் கொண்டிருந்தார். யாரும் ய்ப்ப்ரையும் பார்க்கவில்லை. அவரவர்களுக்கு அவரவர் வேலை.

அதுபோக ஆங்காங்கே உள்ள மரத்தடிகளில் சிறு சிறு லிங்கங்களும் அவைகளுக்கான வழிபாடுகளும் நடந்தபடி இருந்தன.

வள்ளியம்மைக்கு ஒரு புது உலகில் நுழைந்ததுபோல் இருந்தது. அவள் தன்னை அழைத்து வந்த காடன் என்றவ ரிட ம், "சாமி அபிஷேகம் எப்ப தொடங்கும்?" என்று கேட்டாள்.

"சரியா பன்னெண்டு மணிக்கும்மா... அதுக்கு இன்னும் ப்ப்த்து நிமிஷம் இருக்கு..." என்றார் காடன் என்கிற அவர். வள்ளியம்மை சுற்றிலும் ஒரு தேடலோடு பார்த்தாள். ரேகா ப்ரிந்தது போல் கேட்டாள்.

"மேடம், சார் வந்துருக்காரானா பாக்கறீங்களா?"

"ஆமாம்மா... நமக்கு முந்தி கிளம்பினவர்... இன்னேரம் வந்துருக்கணுமே..." வள்ளியம்மை நாலாபுறமும் பார்த்தபடி ப்தில் சொன்னாள்.

"எனக்கும் அதான் ஆச்சரியமா இருக்கு... ஒருவேளை இங்க வர வழி தெரியலியா?"

"நானும் அப்படித்தான் நினைக்கறேன். எது எப்படி இருந்தாலும் சரி. நமக்கு இன்னிக்கு நல்ல சந்தர்ப்பம்மா..."

"மேடம் நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க... இப்படி பூஜையை பாக்கறதே ஒரு பெரிய விஷயம்னா இவ்வளவு நல்ல விஷயம் கொண்ட காட்டுல எப்படி மேடம் கொலையும் திருட்டும் நடக்குது?"

"என்ன ரேகா... நட்ராஜோட நாத்திக காச்சல் உனக்கும் அடிக்க ஆரம்பிச்சிடுச்சா..."

"சத்தியமா நான் நாத்திகமெல்லாம் பேசலை. இப்படி பேசறதுதான் நாத்திகமான்னும் எனக்கும் தெரியாது. என் மனசுல இந்த கேள்வி எழுந்தது... அதான் கேட்டுட்டேன்..."

ரேகா சொன்ன பதிலுக்கு சற்றுதள்ளி ஒரு சிரிப்பு சப்தம் எதிரொலியாக விளைந்தது. திரும்பிப் பார்த்தாள். அங்கே ஒரு சித்தர் வில்வ இலைகளை மாலை போல காட்டிக் கொண்டிருந்தார். அவர் சிரிப்பு ரேகாவை சீண்டுவது போல கூட இருந்தது. ரேகாவும் அவர் அருகில் சென்றவளாக, "இப்ப எதுக்கு சாமி சிரிச்சீங்க... நான் என்ன தப்பா கேட்டுட்டேன்..." என்றாள்.

"நீ தப்பா எல்லாம் கேட்கல... ஆனா நான் சிரிச்ச காரணமே வேற..."

"சிரிக்கறதுக்கு இரண்டு காரணம்தான் இருக்க முடியும். ஒண்ணு மகிழ்ச்சி... இன்னொண்ணு கேலி... உங்க சிரிப்பு சரியான கேலி சிரிப்பு..."

"சரி அப்படியே வெச்சுக்கோ..."

"என்ன அப்படியே வெச்சுக்கோ... என் கேள்வி வருத்தத்துக்கு உரியது. அதுல கேலியா சிரிக்க என்ன இருக்கு?"

"கோபிக்காதம்மா... நான் சிரிக்கவும்தான் நீ இவ்வளவு தூரம் பேசற... பேசறத விட்டுட்டு ஆழ்ந்து யோசிச்சு பார். சாக்கடை இல்லாம ஒரு வீடு இருக்க முடியுமா?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"ஒரு வீடுன்னு இருந்தா சாக்கடை இருக்குமா, இருக்காதா?"

"இருக்கும்..."

"எதனால அப்படி?"

"இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி. சாக்கடை இருந்தாதானே வீட்ல இருக்கறவங்க குளிச்சு சுத்தமா இருக்க முடியும்?"

"அப்ப சாக்கடை இல்லேன்னா அந்த வீட்ல யாரும் சுத்தமா இருக்க முடியாது தானே?"

"கிட்டத்தட்ட அப்படிதான்..."

"இந்தக் காட்டுல தப்பா சிலர் இருக்கறதுங்கறதும் அப்படித்தாம்மா..."

அவர் பதில் ரேகாவுக்கு கொஞ்சம் புரிந்தது. கொஞ்சம் இடித்தது. அதை கேள்வியாக்க அவள் விரும்பினாள். மூளை, அதற்குள் அவருக்கு அழைப்பு வந்து அவர் வில்வ மாலையுடன் அங்கிருந்த சிவலிங்கம் நோக்கி நடந்தார்.

வள்ளியம்மை காதில் இந்த தர்க்கம் எதுவும் விழவில்லை. அவள் நாலாபுறமும் சிவகுமாரையே தேடியபடி இருந்தாள்!

ஒரு கையில் டார்ச்சுடன் ஒரு கையில் ரிவால்வருடன் நடந்து கொண்டிருந்தார் சிவகுமார். டார்ச் வெளிச்சம் மிதமாக காரின் ஹெட்லைட் வெளிச்சம் போல இருந்தது. வேலு வே கோவிந்தனும் அவருக்கு துணையாக வந்து கொண்டிருந்தான்.

"என்ன கோவிந்தன், இன்னும் மதிகெட்டான் வனம் வரலையே... நாம தவறான திசைல போய்கிட்டிருக் கோமோ?"

"எனக்கும் அப்படிதான் சார் தோணுது..."

"இல்ல கோவிந்தன்... இன்னிக்கு மதிகெட்டான் வனத்துல அவ்வளவு பேரையும் பார்த்தே தீரணும்... எல்லா மர்மத்துக்கும் ஒரு முடிவு கட்டியே ஆகணும்..."

"நீங்க என்ன சொன்னாலும் சரிசார்.... இந்த காட்டுல நம்ம அறிவு, அதிகாரம் எல்லாத்துக்கும் மேல ஏதோ ஒரு விஷயம் நிச்சயமா இருக்கு சார்..."

"போதும் கோவிந்தன்... ஒரு போலீஸ்காரனா இருந்து கிட்டு முதல்ல இப்படி யோசிக்கறதை விடு. இப்ப கூட பாதை மாறினது. நம்ப மிஸ்டேக்தான். இதுக்கும் காட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல..."

"எல்லாம் வாஸ்தவம்தான் சார்... ஆனா எதனால நாம பாதை மாறணும்?"

"எதனாலன்னா... இருட்டுல சரியா வழி தெரியல அவ்வளவுதான் விஷயம்..."

"இருவரும் மாறி மாறி பேசியபடியே நடந்தபோது கூடவே யாரோ வருவது போலவும் ஒரு சலசலப்பு..."சிவகுமார் அதை தொடக்கம் முதலே உணர்ந்து வந்தவராக ஒரு கட்டத்தில் சரேலென்று வேகமாக திரும்பி டார்ச்சின் வெளிச்சத்தை பாய்ச்சினார். அதில் மருண்ட விழிகளுடன் திருதிருவென விழித்தவனாக நின்றபடி இருந்தான் நாடி முத்து. ஆனால் அவன் தோளில் வளையல் பெட்டியோ, இதர சமாச்சாரங்களோ எதுவுமில்லை.

"ஏய் நாடி... என்ன பண்ற இங்க?"

"யார் கோவிந்தன் இது?"

"நாடிமுத்து சார்... வளையக்காரன்..."

"அது சரி... இப்ப இங்க என்ன வேலை?"

"என்னத்தங்க சொல்றது... நீலியும் வங்கியும் உசுரோட இல்லையாம்ல..."

"அதனால?"

"வங்கி செத்துட்டாங்கறதை என்னால நம்ப முடியல. அதான் காட்டுக்குள்ள அவ எங்கையாவது எனக்காக காத்திருக்க மாட்டாளான்னு தேடி அலைஞ்சுகிட்டு இருக்கேன்..."

"இருட்டுல தேட நீ என்ன ஆந்தையா? யார் கிட்ட கதை விற?"

"ஐயோ சத்தியமாங்க... பகல் பூரா தேடுவேன். ராவானா நிலவேம்பை அரைச்சு உடம்புல பூசிகிட்டு ஏதாவது ஒரு மரத்து மேல ஏறி படுத்துடுவேன். நீங்க வர்ற சப்தம் கேட்கவும் முழிச்சு கிட்டு பின்னால வந்தேன்..."

"அட பொசகெட்டவனே! அவ செத்துட்டாங்கறது தான் நெசம். பேயடிப் பள்ளத்தல உடம்பு கிடந்ததா தகவல் வந்து ஊரே திரண்டு போச்சே... உனக்கு அது தெரியாதா?"

"கேள்விப்பட்டேண்ணே... ஆனா யாரும் உடம்பைப் பாக்கலியே... பாத்துருந்தா தூக்கிட்டு வந்துருப்பாங்களே..."

"அட கூறு கெட்ட வளையக்காரா... எல்லாரும் போய் தூக்கிட்டு வர்ற வரைக்கும் பேயடிப் பள்ளத்து நாயும் நரியும் இன்னிக்கு எனக்கு விரதம்னு வாயை வெச்சுக்கிட்டு சும்மா இருக்குமாக்கும்..."

"அண்ணே... வேண்டாண்ணே... என் வங்கி உசுரோட இருக்கறதா என் மனசு நம்புதுண்ணே. அதை கண்டதை சொல்லி கெடுத்துடாதீங்க..."

"அடப்போடா நீயும் உன் நம்பிக்கையும். சரி... சரி... இங்க இருந்து மதிகெட்டான் வனத்துக்கு உனக்கு வழி தெரியுமா?"

"துல்லியமா தெரியாது... ஆனா போகப்போக சில அடையாளங்கள வெச்சு கண்டு பிடிச்சுடுவேண்ணே..."

"அப்படியா... முன்னால நட!"

"அங்க இந்த நேரத்துல எதுக்குண்ணே?"

"என்ன எதுக்குங்கற... இன்னிக்கு சிவராத்திரி... வானத்து மனுஷங்கள்ள இருந்து யாரோ கவுனர்களாமே அவங்கள்ளாம் வருவாங்களாம்ல?"

"ஐயோ, சிவராத்திரியா... அது கூட தெரியாம போச்சே எனக்கு..."

"ஏன் தெரிஞ்சிருந்தா என்ன பண்ணியிருப்ப?"

"எனக்கு கற்பக மரத்தை பாக்கணும். சிவராத்திரி பூசை பார்க்கணுங்கறதெல்லாம் ரொம்ப கால ஆசைண்ணே..."

நாடிமுத்து கற்பகமரத்தை தொட்டு பேசவும் சிவ குமாருக்குள் ஒரு படபடப்பு. அதேசமயம் தோளில் பிணத் தோடு அலையும் அகோரசாமி அவர்கள் முன்னால் விசுக் கென்று ஒரு புலி பாய்ந்து செல்வது போல சென்று மறைந் தது.

அந்த நொடி சிவகுமாரின் நெஞ்சில் ஒரு பெரும் அதிர்வு!

39

'நா'கரத்தினம் என்பது விஞ்ஞான பூர்வமாக சாத்யமே இல்லாத ஒன்று என்பது பாம்புகளை பலகாலமாக ஆய்வு செய்து வரும் மேல் நாட்டவர் கருத்து. ஆனாலும் நம் இலக்கியங்களிலும் குறிப் பாக இதிகாசங்களிலும் நாகரத்தினம் பற்றிய

செய்திகள் நிறையவே காணப்படுகின்றன. பாம் புக்கு காது கேட்காது. அது பால் குடிக்காது என்ப தெல்லாமும் ஆய்வாளர்கள் கருத்து. ஆனால் பல இடங்களில் பாம்பு பால் குடிப்பதை பலரும் பார்த்துள்ளனர். 'இடியோசை கேட்ட நாகம் போல அவன் அஞ்சி நடுங்கினான்' என்று இலக்கியங் களில் உவமைகள் காணக்கிடைக்கின்றன. இதி லிருந்து பாம்புக்கு கண்களே காதுகளாகவும் செயல் படுகிறது என்பது புலனாகிறது.

இந்த பாம்பு ரத்தினம் கக்கும் என்பதற்கும் இலக்கிய சான்றுகள் ஏராளமாக உள்ளன. ஆனாலும் இன்று நாகரத்தினம் என்று ஒன்று எங்கும் இருப்பதாக தெரியவில்லை.

இருப்பினும் தாணுமாலயவனத்தில் ரத்தினம் கக்கும் பாம்பு இனம் இருக்கிறது என்பதுதான் அங்குள் ளோரின் நம்பிக்கையாகும்.

"காவல் தெய்வமா? கண்றாவி
தெய்வம்னு சொல். தெய்வம்
இப்படிதான் பொணத்தை
தோள்ள போட்டுகிட்டு
அலையுமா? கேட்கவே
வேடிக்கையா இல்ல?"

"எல்லாவிதமான வனங்களையும்
பார்த்தாகி விட்டது. ஆனால் எந்த
காட்டிலும் ஏற்படாத ஒரு
சவாலும் சுவாரசியங்களும்
தாணுமாலயக் காட்டுக்குள்..."

"காட்டுகுள்ற ஒரு மரத்துல ஒரு
டெட் பாடிய பாத்துட்டுதான்
போன் பண்றேன். இம்மீடியட்டா
ஆம்புலன்ஸ் வேனோட புறப்பட்டு
வாங்க..."

தன் நெஞ்சில் ஏற்பட்ட அதிர்வு குறையாதபடி "கோவிந்தன்... யாரோ ஒருத்தன் கிராஸ் பண்ணிப்போறான் பார்..." என்று கத்தினார் சிவகுமார்.

"ஆமாம் சார்... நானும் பார்த்தேன்... அது யாரோ இல்ல, அகோரசாமி சார்..."

"மண்ணாங்கட்டி... சாமியா இருந்தா எதுக்குய்யா நம்மள பாத்துட்டு அந்த ஓட்டம் ஓடணும்?" சிவகுமாரின் கேள்விக்கு கோவிந்தனிடம் பதிலில்லை. நாடிமுத்துவும் சிவகுமார் கேட்டதும் சரிதான் என்பது போல பார்த்தான்.

"ச்சே... செகண்ட்ல தப்பிச்சிட்டான். அடுத்து எங்க பார்த்தாலும் சரி ஷூட்தான்..." சிவகுமார் தன் கைத் துப்பாக்கியை வெறித்தபடியே சொன்னது நாடிமுத்துவை மிரட்டியது.

அவர்கள் நடந்து கொண்டே பேச ஆரம்பித்தனர்.

"சார்... அப்ப இந்த அகோரசாமி இந்த காட்டோட காவல் தெய்வம் இல்லையா?" என்று கேட்டான் நாடிமுத்து.

"காவல் தெய்வமா? கண்றாவி தெய்வம்னு சொல். தெய்வம் இப்படிதான் பொணத்தை தோள்ல போட்டுகிட்டு அலையுமா? கேட்கவே வேடிக்கையா இல்ல?"

"அது எல்லாரும் பயப்படறதுக்காகவாம்... தோள்ல கிடக்கற பொணம் கூட இந்த காட்டுல செய்யக் கூடாத தப்பை செய்தவங்க உடம்புனு சொல்வாங்க..."

"அப்படின்னா ஒரு பொணம் இல்லை பல பொணத்தை இந்த அகோரசாமி தூக்கிக்கிட்டு சுத்தணும். எல்லாமே மூடத்தனமான நம்பிக்கைகள். அவ்வளவுக்கும் ஒரு முடிவு கட்டறேன்" சிவகுமார் குரலில் ஆக்ரோஷம் மின்னியது.

டார்ச்லைட் வெளிச்சமும் வழியை காட்டியது. இரவு நேரத்தில் ஒரு அடர்வான காட்டுக்குள் அதைக் குடைந்து கொண்டு செல்வதைப் போல ஒரு ஆபத்தான விஷயம் இருக்கவே முடியாது. அதிலும் ஏராளமான அட்டைப் பூச்சிகள் கொண்ட மழைவளமுள்ள காடு மிகவே ஆபத்தானது. சமயத்தில் நூற்றுக்கணக்கான அட்டைகள் உடம்பை ஆக்ரமித்து மொத்த ரத்தத்தையும் உறிஞ்சிக் கொண்டு வெளியேறி விடும். அதன்பின் வெளிறிப்போன உடம்புதான் கிடக்கும். அதை மிருகங்கள் குதறி எடுத்து விடும்.

இதெல்லாம் சிவகுமாருக்கு தெரியாது என்று கூற முடியாது. வன இலாகாவில் சேர்ந்து பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எல்லாவிதமான வனங்களையும் பார்த்தாகி விட்டது. ஆனால் எந்த காட்டிலும் ஏற்படாத ஒரு சவாலும் சுவாரசியங்களும் தாணுமாலயக் காட்டுக்குள் ஏற்பட்டு விட்டது. அதுதான் அட்டைப் பூச்சி பற்றி எல்லாம் கவலை கொள்ளவே விடவில்லை.

இடையில் மணிக்கட்டில் நேரம் எவ்வளவு என்று பார்த்தபோது மணி இரண்டைத் தொட்டிருந்தது.

"மைகாட்... இன்னும் சில மணி நேரத்துல பொழுதே விடிஞ்சிடும். வேகமாக நடங்க..." என்ற சிவகுமாரிடம் இரவின் களைப்பை மீறிய ஒரு வேகம். அப்போது முன் நடந்தபடி இருந்த நாடிமுத்து 'ஐயோ கோவிந்தண்ணே...' என்றபடியே விக்கித்து கத்தினான்.

"என்னய்யா..." என்று கோவிந்தனும் ஓடி அவனருகே வந்தான். பதிலுக்கு நாடிமுத்து ஒரு மரத்தை பார்த்தான். அதில் ஒரு பிணம் தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தில்

கயிறைக் கட்டிக் கொண்டு தூக்கில் தொங்குவது போல் தொங்கும் அது யார்?

சிவகுமார் டார்ச்லைட் ஒளியை அருகே சென்று மேல் நோக்கி பாய்ச்சவும் கோவிந்தன் வாய்விட்டு "அட இது நம்ம கந்தையன்" என்றான். சிவகுமாரும் கந்தையனை அந்த கோலத்தில் பார்த்து விக்கித்துப் போய் நின்றார்.

கந்தையன் ஏற்கனவே கரடியால் அடிபட்டு கோர மாய் காட்சி தருபவன். அந்த நடுநிசியில் நாக்கு வெளித் தொங்க அவன் காட்சி தந்த கோலம் அவர்கள் மூவரையுமே ஒரு மிரட்டு மிரட்டியது.

"சார்... நம்ப வீட்டுல சமையல்காரனா இருந்தவன் இங்க எப்படி வந்து இப்படி தொங்கிகிட்டு இருக்கான்னு தெரியலியே..." என்று இழுத்தான் கோவிந்தன்.

"அதான் கோவிந்தன் எனக்கும் குழப்பமா இருக்கு. நாலு நாளைக்கு முந்தி வீட்டு வேலை முடிஞ்சு போன வன்தான். அப்புறம் வீட்டு பக்கமே வரல. எல்லா வேலை யையும் வள்ளியம்மைதான் செய்தா. சரி ஏதோ உடம்பு சரியில்லாம போயிருக்கணும்னு எனக்கு தோணிச்சு. அப்புறமா இவனை நினைக்க வேண்டிய அவசியமே ஏற் படல. தொட்டு தொட்டு வேலைகள். வந்து நான் அதுல கவனமாயிட்டேன். இப்ப என்னடான்னா இங்க தொங்கிக் கிட்டிருக்கான்."

"சார்... இப்ப என்ன சார் பண்ண?"

"அதான் எனக்கும் இப்ப புரியல... காலைல வந்து பாத்துப்போம்னு இதை இப்படியே விட்டுட்டுபோனா இந்த உடம்பு இங்கேயே இருந்துட்டா பிரச்னை இல்ல. காளிமுத்து உடம்பு காணாம போன மாதிரி போயிட்டா?"

"ஆமாம் சார்... பேசாம இங்க இருந்து உடம்பை இறக்கி போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பிட்டு நாம அடுத்த வேலையை பார்ப்போம் சார்..."

"அதுவும் சரிதான்... சிவராத்திரி நம்ப வரைல இப்ப சிவராத்திரியா போச்சே..."

சிவகுமாரிடம் வருத்தம் பீறிட்டது. நாடி முத்துவுக்கு லேசாக வியர்த்திருந்தது. அவனும் கந்தையனைப் பார்த்திருக்கிறான். இப்போது இப்படி பிணமாக பார்க்கவும் பழைய நினைவுகள் அலைமோத ஆரம்பித்தது. கூடவே காளிமுத்து உடல் பற்றி சிவகுமார் குறிப்பிட்டதும் குடைய ஆரம்பித்தது.

"கோவிந்தண்ணே..."

"என்ன?"

"காளிமுத்து உடம்பு காணாம போன மாதிரின்னு சொன்னீங்களே. நம்ம பழைய ஆபீசரய்யா காளிமுத்துவா?"

"ஆமாய்யா... அவரேதான்!"

"அவர் வேற காட்டுக்கு மாறுதலாக போறதால்ல பன்கிட்ட சொன்னாரு..."

"ஓ... அவர்கூட உனக்கு பரிச்சயமுண்டா?"

"என்னண்ணே... எத்தினியோ தடவை என் செல் போனை பிடுங்கி வெச்சு பாட்டு கேட்டுட்டு பிறகுதானே கொடுப்பாரு..."

"அட... ஆமால்ல... இப்ப இருக்கற பதட்டத்துல எனக்கு இதுகூட ஞாபகம் வரலை பார்..."

"அவரு இப்ப உசுரோட இல்லையாண்ணே?"

"ஆமாம்... உசரோடயும் இல்ல. உடம்பையும் காணோம்."

"என்னண்ணே இது... செத்த உடம்பு எப்படிண்ணே காணாம போகும்? அதால என்ன பிரயோஜனம்?"

"போயிருக்குது... நீ தொண தொணன்னு பேசாம கொஞ்ச நேரம் சும்மா இரு. இங்க ஏற்கனவே நாங்க மண்ணை காஞ்சு போய் கிடக்கோம்..."

கோவிந்தன் அதட்டலாக நாடிமுத்துவை அடக்கினான். ஆனால் நாடிமுத்துவால் சும்மா இருக்க முடியவில்லை.

"ஆமா கந்தையய்யன் உங்க வீட்லதான் சமையல் வேலை பார்த்தானா?" என்று சிவகுமாரிடம் கேட்க ஆரம்பித்தான்.

"ஆமாம்... ஏன் கேட்கற?"

"இல்ல... காளிமுத்து அய்யா இருந்தவரை ஆபீஸ் பக்கமே வராதவன் அப்புறமா உங்ககிட்ட வந்து சமையல் காரனாவும் சேர்ந்துருக்கான்னா ஆச்சரியமா இருக்குது..."

"இதுல ஆச்சரியப்பட என்னய்யா இருக்கு? காளிமுத்து ஒண்டிக்கட்டை. அவருக்கு எதுக்கு தனியா ஒரு சமையல் காரன்...?"

"அது சரிதாங்க... இருந்தாலும் அவரோட ரொம்ப நெருக்கமா இருந்தாங்க. அவரோட நான் இவனை பல தடவை காட்டுக்குள்ள பாத்துருக்கேங்க..."

நாடிமுத்து சிவக்குமாருக்கு ஒரு புதிய செய்தியை சொல்வது போல தோன்றியது.

"காளிமுத்து என்ன மாதிரி ஆபீசர்? காட்டுல எல்லாரோடயும் சினேகமா இருந்துருப்பார். இதுல என்ன பெருசா இருக்கு?"

"அவர் சினேகமா இருந்துருக்கலாம். ஆனா ஒரு பெண்ணோட கந்தையய்யன் வந்தப்ப அந்த பொண்ணால இரண்டு பேருக்கும் பெரிய சண்டையே வந்துச்சே. அப்ப அவர் ஆபீஸ் பக்கமே நீ இனி வரக்கூடாதுன்னு சொன்னாரு. ஆனா அப்ப கந்தையய்யன் அதை பெருசா எடுத்துக்காம ஐய்யா ரொம்ப அலட்டிக்காதீங்க... அப்புறம் இந்த காட்டை

[illegible] போகவே முடியாதபடி ஆயிடும்னு சொன்னான். அப்படி அவன் சொன்னப்ப நான் ஒரு மரத்தடில படுத்து [illegible] நேன். நான் அங்க படுத்திருக்கறத இரண்டு பேருமே [illegible]லை..."

நாடிமுத்துவிடம் இருந்து அந்த நள்ளிரவில் புதிது [illegible]யாக செய்திகள் வரத்தொடங்கவும் கோவிந்தனுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. சிவகுமாருக்கும் நாடிமுத்துவிடம் [illegible] விசாரணை மேற்கொள்வது சிலமுடிச்சுகள் அவிழ உதவி [illegible]யும் என்று தோன்றியது.

செல்போனில் அவர் கிடைக்கிறதா என்று பார்க்கவும் [illegible] சிக்னல் அங்கே கிடைத்தது. நைட்ஷிப்டில் இருக்கும் [illegible] ஆபீசருக்கு உடனேயே அவரிடம் இருந்து போன் [illegible]னது.

"மிஸ்டர் லாரன்ஸ்.."

"யெஸ் சார்..."

"நான் சீப் பேசறேன்..."

"சொல்லுங்க சார். நீங்க இன்னுமா தூங்கல?"

"தூங்கற நிலைலயா இந்த காடு இருக்கு... இப்ப கூட [illegible]ங்குள்ற ஒரு மரத்துல ஒரு டெட் பாடிய பாத்துட்டுதான் [illegible]ன் பண்றேன். இம்மீடியட்டா ஆம்புலன்ஸ் வேனோட [illegible]ப்பட்டு வாங்க..."

"எங்க வரணும் சார்... எப்படி வரணும்?"

"இது ராத்திரி நேரம்... எங்களுக்கே நாங்க இருக்கற இடம் தெரியல. நான் நாடிமுத்துங்கற ஒருத்தரை அனுப்பி [illegible]வைக்கிறேன். அவர் உங்களை கூட்டிகிட்டு வருவார்..."

"ஓகே சார்.. நான் ஆம்புலன்சோட தயாரா இருக்கேன். [illegible]ணமா தொங்கறது யார் சார்?"

"உங்களுக்கு சொன்னா தெரியாது. நான் நேர்ல விபரமா சொல்றேன்..." என்ற சிவகுமார் நாடி முத்துவை பார்த்தார்.

"புரியுதுய்யா... நான் போய் கூட்டிகிட்டு வரணும் அப்படிதாங்களே?"

"ஆமாம்... தாமதிக்காம வா... கமான் க்விக்!"

"உங்க கைல இருக்கற டார்ச்லைட்டை கொஞ்சம் தந்தீங்கன்னா நல்லா இருக்கும்..."

"அதுவும் சரிதான்... கோவிந்தன் இங்க சுள்ளிகளை பொறுக்கிப் போட்டு தீமூட்டு.. அந்த வெளிச்சம்தான் நமக்கு துணை... கமான்..."

சிவகுமாரின் கட்டளையை தொடர்ந்து அடுத்த 10வது நிமிடம் சுள்ளிகள் தீப்பிடித்து கோபுரமாக எரியத் தொடங்கின. நாடி முத்துவும் டார்ச்லைட்டை வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

"சார்... சிவத்தை பாக்கப் போறதா நினைச்சு புறப்பட்டோம். கடைசில ஒரு சவத்துக்கு காவலா உட்காரும்படி ஆயிடுச்சே சார்..." என்றான் கோவிந்தன்.

"நீ வாய் விட்டு சொல்லிட்டே... நான் சொல்லல அவ்வளவுதான் வித்தியாசம்..."

"இப்ப கூடவா சார் இந்த காடு ஒரு வினோதமான காடுன்னு உங்களுக்கு தோணல..."

"ஏன் தோணாம.. அந்த வினோதத்தை பாக்காம நானும் விடறதாயில்லை..."

சிவகுமார் அழுத்தமாக சொன்னதில் ஒரு வெறி தெரிந்தது.

விடியப் போகும் சமயம். சிவராத்திரிக்கான ஐந்தாம் கால அபிஷேகம் தொடங்கியிருந்தது. வள்ளியம்மை அதில்

[illegible] மறந்திருந்தாள். ரேகாவும் சகலத்தையும் மறந்திருந்தாள். அங்கே வானத்து மனிதர்கள் மட்டுமின்றி ஒரு [illegible] கூட்டமே கூடியிருந்தது. ஆனால் யாரிடமும் [illegible]

40

ரத்தினம் கக்கும் பாம்பு இனத்தை போலவே மிக மேலான ஒரு விலங்கினத்தை தாணுமாலய வனத்தின் மரங்களில் காணலாம். அதுதான் தேவாங்கு எனும் விலங்கு. குரங்கைப் போன்ற வடிவமைப்பு கொண்ட தேவாங்குக்கு தட்டையான முகம் உருண்டையான விழிகள். இது மிகவும் பயந்த குணத்தை உடையது. அதேசமயம் இது தெய்வீக மானது. இதை மாந்திரீகர்கள் பிடித்து வைத்து பயன்படுத்துவார்கள். இதன் எச்சில் கூட மருந்தாக கருதப்படுகிறது. தீயசக்திகள் தேவாங்கு உள்ள இடத்தை அண்டாது என்பது ஒரு நம்பிக்கை.

அந்த நாளில் பிரம்ம ராட்ஷசர்கள் மரங்களில் தஞ்சம் புகுந்து அங்கே தான் சுற்றி வருவார்கள். அந்த பிரம்ம ராட்ஷசர்கள் கூட தேவாங்கு உள்ள மரங் களை அண்ட மாட்டார்களாம். இதனால் வனத்தின் வழியாக பயணிப்போர் இரவில் தங்க நேர்கையில் தேவாங்கு உள்ள மரம் என்று தெரிந்தால் அங்கே தைரியமாக தங்குவார்கள். விடிந்த பிறகு தேவாங்கை பார்த்துவிட்டு பயணத்தை தொடர் வார்கள்.

"சிலர் இடுப்பில் கோவணம். சிலர்
உடம்பு முழுக்க விபூதி பூசி

வெண்ணிற சகோதரர்கள் போல
காட்சி தந்தனர். ஆனால் எல்லார்
கையிலும் மரத்தில் இருந்து
ஓடிக்கப் பெற்ற கம்புகள்
இருந்தன..."

"உச்சபட்சமாய் ஆகாயம் நோக்கி
அந்த தீபச்சுடர்களை வயதான
ஒருவர் காட்டி நின்றார். அந்த நொடி
அவர்கள் அவ்வளவு பேரும் பார்க்க
வானில் இருந்து ஒரு நட்சத்திரம்
பூமியில் விழ ஆரம்பித்தது..."

"இந்த தகவல் கொண்டு வரும்
கந்தையன் என் நம்பிக்கைக்கு
பாத்திரமானவன். இவன் வசம்
ஐந்து கிலோ கொடுத்து விடவும்.
இனி நான் இந்த காட்டின் அதிகாரி
அல்ல. உங்களில் ஒருவன்
காளிமுத்து...

அங்கு நடந்து கொண்டிருந்த சிவபூஜையில் வள்ளியம்மையோடு ரேகாவும் தன்னை மறந்திருந்தாள். இதமான தட்பவெப்பம், தாங்க முடிந்த அளவிலான குளிர், இயற்கையான நீர் வெளிச்சம், வேறு எங்கும் பார்க்க முடியாத வடிவத்திலான மனிதர்கள். அதில் சிலருக்கு தலை முடி சடை பிடித்து கண்டு கண்டாய் தொங்கிக் கொண்டிருந்தது. சிலரது தலைமுடி தரையை தொட்டுக் கொண்டிருந்தது. சிலர் தலை முடியை பிரமிடு போல தலைக்கு மேல் சுருட்டி அடக்கியிருந்தனர். சிலர் இடுப்பில் பளிச்சென்ற வெண்ணிற வஸ்த்ரம். சிலர் இடுப்பில் காவி. சிலர் இடுப்பில் கோவணம். சிலர் உடம்பு முழுக்க விபூதி பூசி வெண்ணிற சகோதரர்கள் போலகாட்சி தந்தனர். ஆனால் எல்லார் கையிலும் மரத்தில் இருந்து ஓடிக்கப் பெற்ற கம்புகள் இருந்தன. அந்த கம்பின்

மலையில் மூன்று கிளைப்பகுதி சென்றதன் அடையாளம் இருந்தது.

அந்த பகுதியை குங்கிலிப் புகை சூழ்ந்து கொண்டு இருந்தது. புகை எது, பனி எது என்று பிரித்து பார்க்க முடியவில்லை. மிக ரம்மியமான மணம். ஒரு வானத்து மனிதர் கையில் 'டேப்' போல ஒரு இசைக்கருவியை வைத்து இருந்தார். ஒரு கூட்டத்தில் அவர் அதை தட்டி இசை எழுப்பத் தொடங்கினார். சீரான இசை. இசை என்றால் என்னவென்றே தெரியாதவன் கூட இந்த இசையை கேட்டால் தன்னை மறந்து கை கால்களை அசைக்க முற்படுவான். அப்படி ஒரு லயம். அந்த மனிதர் இசைத்த இசைக்கு முதல்வொருவராக வந்து ஆட ஆரம்பித்தனர். சில வானத்து மனிதர்கள் காலில் சலங்கை கட்டியிருந்தனர். ஆடும்போது அதிலிருந்து சீரான சப்தம் வெளிப்பட்டது.

'கங்காதரா... லம்போதரா... லிங்காபரா... விஸ்வேஸ்வரா...' என்று ஒருவர் சிவநாமாவை உச்ச ஸ்தாயில் சொல்லி வானை நோக்கி இரு கைகளையும் விரித்தார். பதிலுக்கு மற்றவர்கள் அந்த நாமாவை எதிரொலித்தனர். அப்போது பார்வதிக்கும் வள்ளியம்மைக்கும் பெரும் சிலிர்ப்பு ஏற்பட்டது.

இப்படியாக ஆட்டமும் பாட்டுமாய் பூஜை நீண்டு மகாசக்கட்டமாய் நூற்றி எட்டு தீபம் கொண்ட தீப தூளி ஆரம்பிக்கப்பட்டது. உச்சபட்சமாய் ஆகாயம் நோக்கி அந்த நீலச்சுடர்களை வயதான ஒருவர் காட்டி நின்றார். அந்த நொடி அவர்கள் அவ்வளவு பேரும் பார்க்க வானில் இருந்து ஒரு நட்சத்திரம் பூமியில் விழ ஆரம்பித்தது.

அது சிவபெருமான் பூஜையை ஏற்றுக்கொண்ட அடையாளம் போல் கருதப்பட்டது. எல்லாரும் பரவசமாக, 'ஹரஹர மகாதேவா' என்றனர். அந்த வனமெங்கும் அது எதிரொலித்தது.

மீண்டும் ஒரு இனம் புரியாத பரவச உணர்வு வள்ளியம்மையை ஆட்கொண்டது. அதன்பின் ஒரு அமைதி... எல்லாரும் ஆங்காங்கே அமர்ந்து கொள்ள அபிஷேக பால், பஞ்சாமிர்தம், மூலிகை கஷாயம் விநியோகம் ஆகத் தொடங்கியது. அவ்வளவும் தடித்த தேக்கு இலைகளால் செய்யப்பட்ட தொன்னை மூலம் விநியோகிக்கப்பட்டது. அதில் மூலிகை கஷாயம் குடித்த போது உவர்ப்பும் கசப்பும் ஒரு சேர எழுந்தது. ரேகா சற்று முகத்தை சுளித்துக் கொண்டாள்.

ஆனால் சில நொடிகளிலேயே அந்த உவர்ப்பும் கசப்பும் இனிப்பாய் மாறி உடம்பில் ஒரு புத்துணர்ச்சி பரவியது. அதைத் தொடர்ந்து பால், பின் பஞ்சாமிர்தம் தரப்பட்டது. அதை வள்ளியம்மைக்கு தந்த ஒரு வானத்து மனிதர், "இன்னொரு தொன்னை சேர்த்துக் குடி... வயித்துல வளர்ந்துக்கிட்டிருக்கற சுகுமாறனுக்கு அது போய்ச் சேர்ந்து நல்ல கார்த்திகை நாள்ல அவனும் வந்து பிறக்கட்டும்" என்றார்.

தான் கருவுற்றிருப்பது அவருக்கு எப்படித் தெரியும் என்கிற ஆச்சரியம் மாறாமல் வள்ளியம்மை அவரைப் பார்த்தாள்.

ரேகாவுக்கு கொடுக்கும்போது "உன் பாட்டன் செய்த சிவபூஜை புண்ணியம்தான் இப்ப இங்க நீ வரக் காரணம். ஒரே நாள்ல லட்சம் பேருக்கு சோறு போட்ட புண்ணியவான்! சாகறதுக்கு முந்தி சந்நியாசம் வாங்கிகிட்டு அவ்வளவு பாவ புண்ணியத்தையும் சந்ததிகளுக்குன்னு சொல்லி கங்கைல மூழ்கினார் உன் தாத்தா. இப்ப நீ சிவராத்திரி சிவப்பிரசாதம் சாப்பிடறே. இந்த மூலிகைச் சாறு உன்னை எப்பவும் ஆரோக்கியமா வெச்சிருக்கும். ஒரு ஜலதோஷ தும்மல் கூட நீ போடமாட்ட..." என்றார். அதைக் கேட்ட ரேகாவுக்கும் ஒரு புத்துணர்வு.

பிரசாத விநியோகத்துக்கு பிறகு எல்லாரும் சில நிமிடங்கள் தியானத்தில் அமர வேண்டும் என்று கேட்டுக்

ல்லாண்டார் ஒருவர். அதேபோல அங்கே அவரவர்கள் அமர்ந்து கொண்டனர். ஒரு வயதான ஒற்றை நாடி மல்லியாசி வித்தியாசமாக சப்பணமிட்டு அமராமல் குக்குட ஆசனம் எனப்படும் முறையில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டது பார்க்க வினோதமாக இருந்தது. வல்லியப்பையும் ரேகாவும் அருகருகே அமர்ந்து கொண்டனர். அதுவும் சாதாரணமாக...

தியானமும் தொடங்கியது. அங்கே பேரமைதி...

பொழுது விடிந்துவிட்டது. பெரும் இரைச்சலுடன் அம்புலன்சும் வனத்துறை ஜீப் வாகனங்களும் கந்தையய்யன் பிலையாக கிடந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தன. ஒரு ஜீப்பில் இருந்து குதித்து இறங்கினான் நாடிமுத்து... அவனைத் தொடர்ந்து சக அதிகாரிகள் மற்றும் போலீஸ்காரர்கள் இறங்கினர். இப்போதெல்லாம் ஒரு விபரீத சம்பவம் எங்கு நடந்தாலும் அங்கே போய் அதைக் காணத் தொடங்கும் நாடிகள் முதல் வீடியோ எடுக்க வேண்டும் என்பது டிபார்ட்மெண்ட் உத்தரவு. அதற்கு தோதாக ஒரு போலீஸ்காரர் கேமராவோடு படம் பிடிக்கத் தொடங்கி விட்டார். அவரே கமென்ட்ரியும் கொடுத்துக் கொண்டார்.

'டுடே 24.3.2014... அதிகாலை மணி ஆறு மணி பத்து நிமிஷம் இப்போ... தாணுமாலய ஃபாரெஸ்ட்ல நார்த் சைட்ல டிவிஷன் ஏ க்குண்டான சர்வே கொண்ட பகுதியில இப்ப வீடியோ எடுக்கப்பட்டிருக்கு.

மரத்துல ஒருத்தர் தூக்குல தொங்கறதா கிடைச்ச தகவலை வெச்சு ரேஞ்சர், ஸ்பெஷல் ஆபீசர், வன உயிரினக் காப்பாளர்னு எல்லா ஆபீசர்களும் இங்க அப்பியர் ஆகி யிருக்காங்க' என்று மைக் அருகே சொல்லிக் கொண்டே அவர்களை எல்லாம் அவர் வீடியோவில் படம் பிடிக்க அவர்களிடம் பரபரப்பு. கந்தையய்யன் உடம்பு தரைமேல்

மரக்கட்டை போல கிடந்தது. உடம்பில் அங்கங்கே அவனை அடித்து துன்புறுத்தியதற்கான தடயங்கள்.

"இது தற்கொலை இல்லை... யாரோ கொலை செய்து மரத்துல கட்டி தொங்க விட்டிருக்காங்க..."

"எக்சாக்ட்லி... போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல கிளியரா தெரிஞ்சிடும். இந்த நபரோட ஷர்ட் பாக்கெட்ல என்ன இருக்குன்னு பாருங்க..."

அவர்களிடம் ஆய்வு தொடங்கியது. சட்டை பாக் கெட்டில் சில்லரை காசுகளுடன் ஒரு பான்பராக் பாக்கு பொட்டலமும் முகவரி எழுதப்பட்ட ஒரு லாட்ஜ் ரசீதும் இருந்தது.

'கே.எம். லாட்ஜ், முனீஸ்வரா லே அவுட்' என்கிற அதன் முகவரியின் கீழ் காளிமுத்துவின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

"அனேகமாக நம்ம ஆபீசர் காளிமுத்துவா தான் இருக்கணும். அந்த ரசீதுபின்னால ஏதோ எழுதியிருக்கு பாருங்க..." என்று ரசீதை திருப்பிப் பார்த்திட பின் பக்கமாய்

'இந்த தகவல் கொண்டு வரும் கந்தையய்யன் என் நம்பிக் கைக்கு பாத்திரமானவன். இவன் வசம் ஐந்து கிலோ கொடுத்து விடவும். இனி நான் இந்த காட்டின் அதிகாரி அல்ல. உங்களில் ஒருவன் - காளிமுத்து...' என்றும் எழுதப் பட்டிருந்தது.

அதைப்படித்த சிவக்குமார் முகம் சிந்தனையோடு நிமிர்ந்தது.

"என்ன சார்... காளிமுத்துதான்னு கன்ஃபர்ம் ஆயிடுச் சுல்ல..."

"ஆமாம். அவர் ஐந்து கிலோன்னு எதைக் கேட்டார்னு தெரியல. ஆனா ஒண்ணு... காளிமுத்து தப்பான பாதைல போயிட்டார்னு மட்டும் நல்லா தெரியுது."

"அது சரி... ஒரு ஆபீசர் இப்படி ஒரு தகவலை ஒரு ....' ஜ் ரசீதோட பின்பக்கமாவா எழுதி அனுப்புவார். அவருக்கு வேற பேப்பரே கிடைக்கலியா?"

"யு ஆர் கரெக்ட்... பேப்பர் கிடைக்காத ஒரு சூழல்ல, ...' டுக்குள்ள இருந்துகிட்டு அவசரத்துக்கு இதை பயன் படுத்தி எழுதியிருக்கலாம்."

"அப்படித்தான் நினைக்கத் தோணுது.... எனிவே நம்ம இன்வெஸ்டிகேஷனை ஆபீஸ்ல வெச்சுப்போம். இப்ப பாடி போஸ்ட் மார்ட்டத்துக்கு போகட்டும்" என்றார் சிவக்குமார். அடுத்த சில நிமிடங்களில் கந்தையன் உடம்பு ஸ்ட்ரெச்சரில் ஏறிக் கொள்ள ஸ்ட்ரெச்சரோடு ஆம்புலன்ஸ் புறப்பட்டது. அதன் சைரனும் காட்டின் அமைதியை கலைத்து பெரும் சப்தம் போடத் தொடங்கியது.

மற்றவர்களும் அவரவர் ஜீப்புகளில் ஏறிக் கொண்டனர். நாடி முத்துவோடு சிவக்குமார் தன் ஜீப்பில் ஏறினார். அவ் வளவையும் வீடியோ படம் எடுத்த நபர் விடவில்லை. நாடிமுத்து பரிதாபமாக சிவக்குமாரை பார்த்தான்.

"என்ன?"

"என்ன எங்க சார் கூட்டிகிட்டு போறீங்க?"

"விசாரணைக்கு.."

"அதான் எனக்கு தெரிஞ்சதை எல்லாம் சொல்லிட் டேன்களே..."

"பயப்படாதே... உன்கிட்ட நாங்க தெரிஞ்சுக்க நிறைய விஷயம் பாக்கி இருக்கு..."

"சார்... நான்தான் எல்லாத்தையும் சொல்லிட்டேனே.."

"பயப்படாதேன்னு சொல்றேன்ல.."

- சிவக்குமார் அதட்டலான குரலில் கூறவும் அவன் சற்று அடங்கினான்.

சிவக்குமாரின் வன இல்லம்.

வாயிலில் தேங்கி நின்ற ஜீப்பில் இருந்து உதிர்ந்து உள்ளே நுழைந்த சிவக்குமாருக்கு ஆச்சரியமான ஆச்சரியம். உள்ளே வள்ளியம்மை, ரேகா நட்ராஜ் மூவரிடமும் அப்படி ஒரு தூக்கம்!

41

'தாணுமாலய வனத்தில் சில வினோத மரங்கள் உண்டு. அவைகளின் அடிப்பாகத்தில் மனித முகம் போன்ற தோற்றங்களை கூர்ந்து பார்த்தால் காண லாம். இந்த வனத்தில் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சித்த புருஷர் வாழ்ந்து வந்தார். அவர் தாணுமாலயக் குடிமக்களோடு கலந்து அவர்கள் வீடுகளில் தங்கி அவர்களில் ஒருவராகவே காணப் பட்டார். எப்போது யாரைப் பார்த்தாலும் தன் வலது கையை உயர்த்தி ஆசிர்வதிப்பார். அவர் இறந்த நிலையில் தாணுமாலயக் குடிகள் அவரைப் புதைத்த குழியின் மேல் அவர் நினைவாக செம் மரக்கன்று ஒன்றை நட்டனர். இன்று அந்த மரம் ஓங்கி உயர்ந்து வளர்ந்து கிடக்கிறது. இந்த மரத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி உள்ளங்கை போலவும் அதிலிருந்து பிரிந்து செல்லும் கிளைகள் விரல்கள் போலவும் காட்சி தருகின்றன.

வனத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து அண்ணாந்து பார்க்கும்போது அந்த சித்தர் அன்று போல் இன்றும் வாழ்த்துகிற மாதிரியே இருக்கிறது. இன்றும் தாணுமாலயக் குடிகள் அந்தப் பகுதியை தாண்டும் போது அந்த குறிப்பிட்ட இடத்தில்

இருந்து அண்ணாந்து பார்த்து அந்த மரத்தை வணங்கி அவரின் ஆசியை பெற்றே செல்வார்கள். அப்படிச் செல்கிறவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற் படாது என்பதும் அவர்கள் போன காரியம் வெற்றி கரமாகவும் முடியும் என்பதும் மலைக்குடிகளின் நம்பிக்கையாகும்.

"வள்ளியம்மை முதல் நாள் இரவில்
நடந்தவைகளை சொல்லத்
தொடங்கினாள். வீட்டை விட்டு
புறப்பட்டது... வழியில் வானத்து
மனிதர் ஒருவரைப் பார்த்தது...
அவரோடு மதிகெட்டான் வனத்து
க்குள்ள நுழைந்தது..."

"அவங்க நீங்க நினைக்கிற மாதிரி
இல்ல. நேத்து நான் ஒரு வானத்து
மனிதர் கிட்ட உங்கள பத்தி
பேசினேன். அவரும் இந்த
காட்டுல தப்பு நடக்குதுன்னுதான்
சொன்னார்..."

சிவகுமார் வரையில் அவர்கள் தூங்கிக் கொண் டிருப்பது பெரும் ஆச்சரியத்தை தந்தது. நேராக வள்ளி யம்மை அருகே சென்று போர்வையை விலக்கி முகமருகே குனிந்து அழைத்தார். ஒரு முறைக்கு இருமுறை அழைத்த பிறகே வள்ளியம்மை கண் விழித்தாள். கண் விழித்தவள் மலைக்குமாரை மலங்க மலங்க பார்த்தாள்.

"என்ன வள்ளியம்மை இது? மணி என்ன தெரியுமா?"

"அது... அது..."

"என்னாச்சு வள்ளியம்மை... போய் முகம் கழுவிகிட்டு காபி போட்டு எடுத்துக்கிட்டு வா. என்னாச்சு உங்களுக் கெல்லாம்... பாரு இவங்களும் தூங்கறதை..."

சிவகுமாரின் குரல் நட்ராஜின் தூக்கத்தையும், திலீபின் தூக்கத்தையும் கலைத்தது. இருவரும் கண் விழித்தார்கள்.

"என்ன பிரதர்... உனக்கும் இன்னிக்கு அப்படி ஒரு தூக்கமா?"

சிவகுமாரின் கேள்வி ரேகாவையும் எழுப்பியது.

எழுந்தவள் வள்ளியம்மையிடம், "மேடம்... நாம எப்படி இங்க வந்தோம்... நாம தியானத்துல்ல உட்கார்ந்திருந்தோம்?" என்று கேட்டாள்.

"ஆமாம் ரேகா... அதுதான் எனக்கும் புரியல... நாம எப்படி வீடு திரும்பினோம்... யார் கொண்டு வந்து விட்டாங்க..." வள்ளியம்மையும் திருப்பிக் கேட்டாள்.

அவர்கள் இருவரும் பேசிக் கொள்வது சிவகுமாருக்கு குழப்பத்தைதான் ஏற்படுத்தியது.

"நீங்க என்ன பேசிக்கறீங்க?"

"நாங்க இரண்டு பேரும் ராத்திரி சிவராத்திரி பூஜைக்காக அந்த மதிகெட்டான் வனத்துக்குள்ள போயிருந்தோம். என்ன ஒரு அற்புதமான பூஜை... எத்தனை சாமியாருங்க..."

வள்ளியம்மையிடம் பரவசம். நட்ராஜ் அதை கேட்டு திருதிருவென்று விழிக்க, நட்ராஜ் முகத்தில் பலத்த மாற்றம்.

"என்ன உளர்றீங்க ரெண்டுபேரும்? எப்ப நீங்க மதி கெட்டான் வனத்துக்கு போனீங்க? அதுவும் எனக்கு தெரி யாம?"

"நீங்க ராத்திரி வீட்டை... விட்டு போன கொஞ்ச நேரத்துலயே நானும் ரேகாவும் கிளம்பிட்டோங்க..."

"வாட் நான்சென்ஸ்... என்னாலயே அந்த காட்டுக் குள்ள போக முடியல... சிவராத்திரி என் வரைல ஒரு சவ ராத்திரியா மாறினதுதான் மிச்சம். இதுல நடு ராத்திரி நீங்க அந்த வனத்துக்கு போனீங்களா... இதை நான் நம்பணு மாக்கும்?"

சிவகுமாரின் கோபமான கேள்விக்கு நட்ராஜ் பதில் சொல்லத் தொடங்கினான்.

"பிரதர்... நீ போன உடனே இவங்களும் சென்டிமென்ட்டா அங்க போக ஆசைப்பட்டு கிளம்பப் பாத்தாங்க. நான்தான் நீ திட்டுவேன்னு நிறுத்திட்டேன். என்னை நிர்பந்திட்டே படுத்துட்டாங்க. இவங்க அங்க போயிட்டு வந்ததா சொன்னது அவ்வளவும் இவங்க கண்ட கனவு..."

"அதான பாத்தேன்... எனக்கு தெரியாம இவங்க எப்படி அங்க போக முடிஞ்சதுன்னு ஒரு வினாடி திகைச்சு போயிட்டேன்?"

சிவகுமார் ஆசுவாசப்படுத்திக் கொள்ள வள்ளியம்மை பேசத்த மறுப்புணர்வோடு,

"இல்ல... அது கனவல்ல. எங்களுக்கு ஏற்பட்ட அசல் அனுபவம்..."

"கனவுன்னா எப்படி ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி வர முடியும்?" ரேகா கேட்டாள்.

"ரேகா... உனக்கு என்னாச்சு? அண்ணிதான் சாமி ப்ளைன்னு சென்டிமெண்ட் டைப். நீ எப்படி இவங்க கூட கூட்டு சேர்ந்த?"

திலீப் ரேகாவை பார்த்து கேட்டான்.

"திலீப்... என் அனுபவம் உனக்கு ஏற்பட்டா நிச்சயமா நீயும் மாறிடுவ..."

"அப்படி என்ன பெரிய அனுபவம்?"

வள்ளியம்மை முதல் நாள் இரவில் நடந்தவைகளை சொல்லத் தொடங்கினாள். வீட்டை விட்டு புறப்பட்டது... வழியில் வானத்து மனிதர் ஒருவரைப் பார்த்தது... அவரோடு மோதிகெட்டான் வனத்துக்குள்ள நுழைந்தது... அங்கே சித்தப் புருஷர்கள், வானத்து மனிதர்கள் என்று சந்தித்து... ஒரு நாகம்

சிவலிங்கத்துக்கு பூஜை செய்தது... என்று வள்ளியம்மை சொன்னதை சற்று தடுத்து, 'மேடம்... மிச்சத்தை நான் சொல்றேன்...' என்று ரேகா கூற ஆரம்பித்தாள்.

'அவ்வளவு பேரும் சிவபூஜை செய்தாங்க. கடைசியா தீப ஆராதனையை ஆகாயத்துக்கு காட்டினப்போ காத்திருந்த மாதிரி ஒரு நட்சத்திரம் விழுந்தது... அதைத் தொடர்ந்து ஒரு வானத்து மனிதர் டேப் வாத்ய இசை இசைச்சார்... எல்லாரும் அதற்கேற்ப அழகா ஆடினாங்க...' என்று ரேகாவும் தொடர்ந்தாள்.

"ஸ்டாப் இட்..." சிவகுமார் பலமாய் கத்தித் தடுத்தார். அவளும் நிறுத்தினாள்.

"நான் இங்க ஏற்கனவே ரொம்ப குழம்பிப் போய் இருக்கேன். இந்த காடு என்னைப் படுத்தறது போதாதுன்னு இப்ப நீங்களும் சேர்ந்து கிட்டீங்களா?"

"பிரதர் கூல் டவுன்... இவங்க நல்லா தூங்கி கனவு கண்டுட்டு உளறிகிட்டு இருக்காங்க... நீ ராத்திரி போனது என்னாச்சு?"

"அதை ஏன் கேட்கற... ஒரு பழமொழி சொல்வாங்களே... நான் உப்பு விக்க போனா மழை பெய்யுது... மாவு விக்கப் போனா காத்தடிக்குதுன்னு... அந்த கதையா இருக்கு என் விஷயம்..."

"அப்ப நீ மதிகெட்டான் வனத்துக்கு போய் எதையும் பாக்கலையா?"

"பாக்க முடியல. வழியில ஒரு டெட் பாடி. டோட்டலா என்னை திசை திருப்பிடுச்சு... அது யாருன்னு கேட்டா நீ இன்னும் திகைச்சு போவ..."

"யாரோடது?" நட்ராஜ் கேட்க, திலீப், ரேகா, வள்ளியம்மை என அனைவரும் சிவகுமார் சொல்லப்போகும் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

"கந்தையய்யன்..." என்றார் சிவகுமார்.

"நம்ம வீட்டு சமையல்காரனா?"

"அவனேதான்! ஆனா அவனால சில புது தகவல்கள் கிடைச்சிருக்கு..."

"அது என்ன?"

"இதுக்கு முந்தி இங்க என் சீட்ல இருந்த காளிமுத்துவும் ஒரு கிரிமினல்... இந்த காட்டுல தப்பு நடக்க காளிமுத்துவும் ஒரு காரணம்..."

"என்ன சொல்ற பிரதர்... காளிமுத்து இந்தக் காடே வேண்டாம்னு ஓடிப் போனவர்னுல்ல கேள்விப் பட்டோம்."

"அவ்வளவும் பொய்... ஓடிப் போற மாதிரி நடிச்சுட்டு என் டி பார்ட்மெண்ட்டை ஏமாத்த பாத்திருக்கார்..."

"ஐய்யோ... பிரதர் இந்த காடு விஷயம் ஏன் இப்படி ஒரே இழுபறியா புரியாத புதிராவே இருக்கு..."

"மிகப் பெரிய குற்றங்கள் இப்படித்தான் இருக்கும் ராஜ். தங்கச் சுரங்கம்ங்கற விஷயம் என்ன சாதாரணமா... அதைச் சார்ந்த விஷயம் இது... அரசாங்கமே இத்தனை வருஷமா இந்த தங்கச்சுரங்கம் பத்தி தெரியாம ஏமாந்திருக்குன்னா நான்லாம் ஒரு சாதாரண மனுஷன். என்னால எப்படி எல்லாத்தையும் உடனடியா கண்டுபிடிக்க முடியும்?"

"அப்ப இந்த காட்டோட ஹிஸ்ட்ரி எல்லாமே அந்த தங்கச்சுரங்கத்தை மையமா வெச்சு தானா?"

"அதுல என்ன சந்தேகம்... பர்ட்டிகுலரா வானத்து மனிதர்கள்! அவங்கதான் அந்த சுரங்கத்தை தங்களோட கைப்பிடிக்குள்ள வெச்சிருக்கணும்."

சிவகுமார் சொன்னதை வள்ளியம்மை ஏற்க முடியாதவள் போல முகம் காட்டினாள். ரேகாவும் கிட்டத்தட்ட அப்படித்தான்...

"என்ன அவங்களைப் பத்தி சொல்லவும் உங்க முகம் மாறுது..."

"மாறாம... அவங்க நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. நேத்து நான் ஒரு வானத்து மனிதர் கிட்ட உங்கள பத்தி பேசினேன். அவரும் இந்த காட்டுல தப்பு நடக்குதுன்னுதான் சொன்னார். உங்களுக்கு உதவவும் தயாரா இருக்கறதா சொன்னார்..." வள்ளியம்மை அவர்களுக்கு வக்காலத்து வாங்கினாள்.

"அவங்க உதவ தயாரா இருக்காங்களா?"

"ஆமாம்... அவரே சொன்னார்?"

"அப்படி சொல்றவர், ஆபீசுக்கு வர வேண்டியது தானே?"

"நீங்க நினைச்சா நிச்சயம் வருவோம்னு சொன்னார்..."

"இப்ப நினைக்காமதான் அவரைப் பத்தி பேசிட்டு இருக்கேனா?"

"நினைக்கறதுன்னா இப்படி இல்ல... கடவுளை நினைக்கற மாதிரி..."

"அப்ப அவங்க என்ன கடவுளா?'

"என் வரைல கடவுள் மாதிரிதான்.."

"வள்ளியம்மை... தயவு செய்து நீ ஒரு போலீஸ்காரன் மனைவின்னு வெளில சொல்லிடாதே.."

சிவகுமாரின் மீசை கோபத்தில் துடித்தது.

"போலீஸ்காரன்னா கடவுள் நம்பிக்கை கூடாதா?"

"மண்ணாங்கட்டி... சாமியை நம்பறதுக்கும், ஆசாமியை நம்பறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. புரிஞ்சுக்கோ?"

"இப்ப உங்களுக்கு என்ன வேணும்... அவங்க உங்களை [illegible] வரணும்... நீங்க அவங்க கிட்ட விசாரணை பண்ண [illegible]. அவ்வளவுதானே?"

"நீ பேசறத பார்த்தா அவங்க ஏதோ என்னை பார்க்க [illegible]கிட்டே இருக்கற மாதிரி பேசறியே..."

"உங்களுக்காக நான் பிரார்த்தனை பண்றேன். அவங்க [illegible] வருவாங்க. நீங்களும் என்ன கேட்கணுமோ கேட்டு [illegible] தெரிஞ்சுக்கணுமோ தெரிஞ்சுக்குங்க..."

"அவங்க யோக்ய மானவங்களா இருந்தா, இந்த [illegible]டுல நடக்கற தப்புக்கும், அவங்களுக்கும் சம்பந்தம் [illegible]லன்னா, சமூக பொறுப்போட அவங்களா முன் வந்து [illegible]சொல்லியிருக்கணும். பிரார்த்தனைங்கறது ரொம்ப பெரிய விஷயம். மர்மமான இந்த வானத்து மனிதர்களோட அதை நீ [illegible]பந்தப்படுத்தி சிந்திக்கறதையே நான் வெறுக்கறேன்.

இப்ப நான் சொல்றேன் கேட்டுக்கோ...

ஒருநாலு பேர் கைதாகியிருக்காங்க. அங்க என் கொயரி [illegible]ந்துக்கிட்டிருக்கு. ஒரு பட்டாலியின் போர்சே காட்டுக்குள்ள இப்ப இருக்கு. அவசியப்பட்டா இன்னும் பத்து [illegible]டாலியன் கூட வரும். தாணுமாலயக் காட்டோட பதினேழரை லட்சம் சதுர அடிகளையும் அங்குல சுத்தமா [illegible]ளக்கும் போது அந்த தங்கச் சுரங்கம் எப்படி எங்க கண்ணுல படாம போயிடும்னு நான் பாக்கறேன்..."

சிவகுமார் ஆவேசமாக பேசிவிட்டு திரும்பினால் எதிரில் வாசல் படிமேல் வள்ளியம்மையிடம் வருவதாகச் சொல்லியிருந்த அந்த வானத்து மனிதர் நின்று கொண்டிருந்தார்.

42

*'தா*ணுமாலய வனத்தில் சித்தர்கள் மரமாகி நிற்பது மட்டும் அதிசயமில்லை. வனத்துக்குள் பல சுயம்பு லிங்கங்கள் இருப்பதும் அதிசயமாகும். இந்த சுயம்பு லிங்கங்களுக்கு பின்னாலே பல சங்கதிகள் உள்ளன. ஒவ்வொரு சுயம்பு லிங்கத்தின் பின்னேயும் ஒரு சித்தர் இருக்கிறார். அந்த நாளில் அவர்கள் தங்களுக்கு தாங்களே ஜீவசமாதியில் அமர்ந்து கொண்டனர். மண்மூடப்பெற்ற அவர்களின் கல்ப உடம்பு காலத்தால் கல்லாகி சப்பணமிட்டு அமர்ந்த பாகம் ஆவுடையாகவும், முதுகும் சிரசும் லிங்க உருவாகவும் மாறிற்று.

மண்ணுக்குள் புதைந்து போகும் மரமானது காலத்தால் கல்லாவது போல சித்தர்களின் கல்ப உடம்பும் கல்லாகி அதுதான் பூமியிலிருந்து வெளிப்பட்டு சுயம்புலிங்கமாக காட்சி தந்தது.

அந்த உடம்பு லிங்கமாகி ஏன் மேலெழும்ப வேண்டும்? சுயம்புலிங்கம் வெளிப்பட காரணம் என்ன?'

"திலீபும், நட்ராஜும் புருவத்தை
வளைத்துக் கொண்டு அந்த
வானத்து மனிதரைப் பார்த்தனர்.
உள்ளே வந்தவர் வள்ளியம்மை,
ரேகாவை..."

"நாங்க அவ்வளவு பேரும் இறந்து
எங்க உடம்புகள் எரிஞ்சு
சாம்பலாயிட்டதா எங்களுக்கு
வேண்டியவங்க முடிவு பண்ணிட்டாங்க

அற்புதமான காடு..."

"இந்த காட்டுல காணாம போனதா
சொல்லப்படற இரண்டு
பெண்கள். ஒருத்தி நீலி,
இன்னொருத்திதான் வங்கி..."

குவார்ட்டர்சின் வாயிலில் தெரிந்த வானத்து மனிதர் சிவக்குமாருக்கு நிஜமாலுமே ஒரு அதிர்வை அளித்தார். அவரும், 'வரலாமா உள்ளே?' என்று கேட்டபடியே வந்தார். ரேகாவும், வள்ளியம்மையும் 'வாங்க சாமி... வாங்க...' என்று வரவேற்றனர். திலீபும், நட்ராஜும் புருவத்தை வளைத்துக் கொண்டு அந்த வானத்து மனிதரைப் பார்த்தனர். உள்ளே வந்தவர் வள்ளியம்மை, ரேகாவை பார்த்து, 'சிவராத்திரி அபிசேகமெல்லாம் எப்படிம்மா இருந்தது?' என்று கேட்டார். அந்த கேள்வி சிவக்குமாரை இடித்தது.

"சாமி... அப்படி ஒரு கனவு வரும்னு நான் நினைச்சு கூட பாக்கல. அந்த கனவுல என் கிட்ட வாக்கு கொடுத்தபடியே நீங்க வந்ததை நினைச்சு சந்தோஷப்படறேன். ரொம்ப நன்றி சாமி..." என்றாள் வள்ளியம்மை.

"அது உன் வரைல கனவாயிடுச்சா? சரிதான். கனவோ, நனவோ... அனுபவம்தானே முக்கியம்." அவர் கேட்டதில் அது கனவில்லை நிஜம்தான் என்பதுபோல ஒரு விசை. அது மேலும் சிவக்குமாரை இடித்தது.

"ஸ்டாப் இட்... இங்க என்ன நடக்குது. நீ கனவுங்கறே. இவர் அது நிஜங்கற மாதிரி பேசறார்... என்ன வள்ளியம்மை இதெல்லாம். நான் போன பிறகு எனக்குத் தெரியாம நீ காட்டுக்கு போனியா?"

சிவக்குமாரின் கோபம் நட்ராஜை கிளறியது.

"பிரதர்... அப்படி போயிருந்தா நான் கும்மா இருந்திருப்பேனா... நீ வளவளன்னு பேசாம இந்த மனுஷர்கிட்ட

என்ன கேக்கணுமோ கேள். அப்பதான் இவங்கள பத்தின மர்மத்துக்கும் ஒரு விடை கிடைக்கும்..." என்றான்.

"ஆமாமா... என்ன கேக்கணுமோ கேளுப்பா... எனக்கு தெரிஞ்ச பதிலை சொல்ல நான் தயாரா இருக்கேன்" வானத்து மனிதர் நெஞ்சு நிமிர்த்தி சொன்னதோடு அருகில் இருந்த நாற்காலியில் வக்கணையாக அமர்ந்து கொள்ளவும் செய்தார். அந்த வேகமும் கம்பீரமும் ஆச்சரியப்படுத்தியது. சிவக்குமாருக்குதான் எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதில் சிக்கல்...

"என்ன பிரதர்... எப்படி ஆரம்பிக்கறதுங்கற தடுமாற்றமா?" நட்ராஜ் அதை புரிந்து கச்சிதமாக கேட்டான்.

"அதெல்லாம் இல்ல... ஆங் உங்கபேர் என்னன்னு சொல்ல முடியுமா?" சிவக்குமாரிடம் ஆரம்பமாகி விட்டது என்கொயரி.

"என் பேர்... என் பேர்..." என்று இருமுறை கூறியவர் எல்லாரையும் ஒரு மாதிரி பார்த்தார். பின் வெண்ணிற தாடியை விரல்களால் நீவி விட்டபடியே, 'என் பேர் சுந்தர்...' என்றார்.

"இதைச் சொல்ல எதுக்கு இவ்வளவு தயக்கம்?"

"தயக்கமில்ல. சும்மா உன்னை டென்ஷன் பண்ணிப் பார்த்தேன்..."

"நான் ஒரு வன இலாகா அதிகாரி. என்கிட்ட இப்படி எல்லாம் நடந்துக்க கூடாது..."

"சரிங்க அதிகாரி சார்... உங்க அடுத்த கேள்வி?"

அந்த வானத்து மனிதர் முந்தினார்.

"ஆமாம் நீங்க மட்டும் வந்திருக்கீங்க. எங்க உங்க மற்ற சகாக்கள்?"

"..அவங்க அவங்க வேலையை பார்த்துகிட்டு இருப்
....."

"..அவங்க வேலைன்னா.... புரியல..."

"இப்ப நான் உன்கூட பேசிட்டிருக்கேன். இது என்
.....அந்த மாதிரி அவங்கவங்களுக்கும் ஒரு வேலை..."

"இங்க என்கூட பேசிக்கிட்டிருக்கிறது உங்களுக்கு
.....?"

"நான் அப்படித்தான் நினைக்கறேன்... இது வேலை
.....அரட்டைன்னா எனக்கு ஆட்பேணையில்லை..."

"லுக் மிஸ்டர் சுந்தர். ஒரு கேள்வி கேட்டா அதுக்கு
..... சுத்தி வளைக்காம பதில் சொல்லணும்..." சிவக்
..... கோபம் பீறிட்டது.

"லிஸ்டர் ஆபீசர். இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்.
..... யார்.. இந்த காட்டுல எங்க இருக்கோம். என்ன
..... ம். இதுதானே உங்களுக்கு தெரியணும்?"

"எக்ஸாக்ட்லி..."

"சொல்றேன் கேட்டுக்குங்க... நாங்க மொத்தம் பதி
..... டு பேர். நாங்க அவ்வளவு பேருமே விஞ்ஞானிகள்.
..... ல் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு துறை... ஒரு விமான
..... த்தால இந்த காட்டுக்கு வந்து சேர்ந்தோம். எங்க காயங்
..... ணமாகி நாங்க நடமாடவே எங்களுக்கு பலவாரங்கள்
..... வைப்பட்டது. அதுக்குள்ள நாங்க அவ்வளவு பேரும்
..... ந்து எங்க உடம்புகள் எரிஞ்சு சாம்பலாயிட்டதா எங்க
..... க்கு வேண்டியவங்க முடிவு பண்ணிட்டாங்க. அதேசமயம்
..... து ஒரு அற்புதமான காடு... அபூர்வமான காடுங்கறதை
..... ங்க புரிஞ்சுகிட்டோம். எங்க ஆராய்ச்சிக்கான விடை இந்த
..... ல இருக்கறதாவும் நம்பினோம். அதனால மதிமயக்கி
..... த்துக்கு அப்பால் இருக்கற வனமாலிங்கற குன்றுக்கு கீழ்
..... ள குகைகள்ல அடைக்கலமாகி எங்க ஆராய்ச்சியை

தொடர்ந்தோம். நாங்க உயிரோட இருக்கற தகவலை எங்களை சேர்ந்த யாருக்கும் நாங்க சொல்ல விரும்பல. எங்களுக்கு கல்யாணமாகி பிள்ளை குட்டிகளும் இல்ல. அதனால நாங்க இந்த வனத்தையே எங்களோட உலகமா ஆக்கிக்கிட்டோம். அப்படியே எங்க ஆராய்ச்சியை தொடர்கிறோம். நாங்க ஒரு சிறு புல்லை கூட கிள்ளிப் போட்டதில்லை.

இதை எல்லாம் நம்பறதும் நம்பாததும் உங்க விருப்பம். அதேசமயம் இந்த காட்டுல வாழற தாணுமாலய வனக் குடிகள் எங்களுக்கு ரொம்ப இஷ்டமான ஜனங்க. கல்வி யறிவு இல்லாத அவங்களோட இயற்கையான வாழ்க்கை முறை எனக்கும் எங்க கூட்டத்துக்கும் ரொம்ப பிடிக்கும். அவங்களுக்கும் நாங்க உதவியா இருக்கோம். அவங்களும் எங்ககிட்ட மரியாதையா இருக்காங்க.

எப்பவாவது எங்களுக்கு ஏதாவது பிரச்னைன்னா அது உங்க டிபார்ட்மெண்ட்டால தான்..! எங்களை தப்பா புரிஞ்சு கிட்டு எங்களோட மோத நினைக்கும் போது பலருக்கு நாங்க எப்படிப்பட்டவங்கன்னு உணர்த்தியிருக்கோம். பல அதிகாரிகள் எங்களை புரிஞ்சுகிட்டு இந்த காட்டு ஜனங்கள் போலவே எங்களை வானத்து மனிதர்கள்னு சொல்லி சந்தோஷமா பழகியிருக்காங்க. அதுல தவறானவங்களும் உண்டு.

இந்த காட்டுல ஒரு தங்கச் சுரங்கம் இருக்கறது உண்மை. இதை கூட நாங்கதான் முதல்ல கண்டுபிடிச்சோம். இந்த காட்டுக்கு அதிகாரியா வந்த காளிமுத்துவும் ஒரு நாள் அந்த தங்க சுரங்கம் பத்தி தெரிஞ்சுகிட்டார். அவர் அரசாங்கத்துக் கிட்ட சொல்லி அரசாங்க வசம் இந்த சுரங்கம் போய் சேரும்னு நாங்க நினைச்சோம். ஆனா காளிமுத்து சுயநலத் தோட சில மனிதர்களோட வந்து சுரங்கத்தை தன் வயப் படுத்தப் பார்த்தார். ஒரு கட்டத்துல இந்த காட்டை விட்டே போயிட தீர்மானம் செய்து காட்டை விட்டும் போயிட் டார். பிறகுதான் நீங்க வந்தீங்க. உங்களை மட்டுமில்ல

மற்றவர்களையும் ஒரு பக்கம் குழப்பவும் அவர் திட்டம் போட்டார். ஆனா பேராசை பெரு நஷ்டம்னு அவரே அவருக்கு எமனானார். இதுதான் நடந்தது..."

சுந்தர் என்கிற அந்த வானத்து மனிதர் சொல்லி முடிக்கவும் சிவக்குமாரிடம் ஸ்தம்பிப்பு பிரமிப்பு பரபரப்பு என்று பலவிதப்பட்ட தவிப்புகள்.

"இவ்வளவு தெரிஞ்சு வெச்சிருக்கற நீங்க இதை ஏன் பொங்கண்ணன் சார்ஜ் எடுத்துகிட்ட அன்னிக்கே வந்து இதை எல்லாம் சொல்லல...?" நட்ராஜ் சடாரென்று இடையிட்டான்.

"தம்பி... புத்திமதியை எப்படி கேட்காதவனுக்கு சொல்லக் கூடாதோ அப்படிதான் இந்த விஷயமும்... இன்னொரு உண்மையை புரிஞ்சுக்கோ. அவங்க யாரையும் நாங்க தங்கம் எடுக்க விடல. அவங்களை இந்த காட்டை விட்டு வெளியே போகவும் விடல. ஏன் சொல்லு?"

"ஏன்?"

"தங்கம்பத்தின உண்மை காட்டுல ஒண்ணு யாருக்கும் தெரியாத ரகசியமா இருக்கணும். இல்லேன்னா அரசாங்க வசம் பத்திரமா இருக்கணும். அப்படி அது பத்திரமா இருக்கணும்னா வந்துருக்கற நீ நல்லா அதிகாரியா இருக்கணும். நீ உன் கடமையை ஒழுங்கா செய்யறவனான்னு உன்னை நாங்க பரிசோதிச்சோம். நீ குழம்பின. ஆனா தவறானவனா இல்ல. அதோட உன் மனைவியோட பக்தி உணர்வு எங்களுக்கு நம்பிக்கை தந்தது. அதனாலதான் அவ விருப்பப்படியே வந்து உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டு இருக்கேன்."

"எல்லாம் சரி... உங்களோட பல விஷயங்கள் ரொம்ப மிஸ்ட்ரிக்கா இருக்கே... அது ஏன்?"

நட்ராஜ் திரும்ப இடையிட்டான்.

"மிஸ்ட்ரி எங்களுக்கு ரொம்ப பிடிச்ச விஷயம். அதை தவறா பயன்படுத்தறதுதான் தப்பு..."

"நட்ராஜ் என்கொயரில நீ நடுவுல கேள்வி கேட்காத. இவர் சொன்ன நீண்ட பதில்ல எனக்கு பல கேள்விகள் இருக்கு. மிஸ்டர் சுந்தர்... நீங்க ஒரு விஞ்ஞானி. இந்த மலைக் காட்டுல குகைல வாழறதா சொன்னீங்க. ஆனா உங்க டிரெஸ், அப்புறம் உங்ககிட்ட இருக்கிற இன்ஸ்ட்ரூமெண்ட் எல்லாம் சிடி லைப்ல இருக்கறவங்க சம்பந்தப்பட்டது. அது மட்டும் எப்படி?"

"இது ரொம்ப முட்டாள்தனமான கேள்வி மிஸ்டர் ஆபீசர். எங்கள்ல யாராவது ஒருத்தர் பக்கத்து நகரத்துக்கு போய் எங்க தேவைக்கு வாங்கிட்டு வருவோம்..."

"அதுக்கு பணம் வேண்டாமா?"

"அதை எங்களுக்கு சம்பாதிக்க தெரியும் ஆபீசர்..."

"அதான் எப்படி?"

"அதை உங்களுக்கு நான் சொல்லணும்னு அவசிய மில்லை. தங்க சுரங்கம் பத்தின விஷயங்களைப் பத்தி கேளுங்க. சொல்றேன்..."

"சரி... அந்த சுரங்கம் இப்ப எங்க இருக்கு?"

"மதிகெட்டான் வனத்துக்கு தெற்கில் வன வாவிங்கற ஏரிய கடந்து போகணும். அந்த ஏரியில ஒரே ஒரு படகுதான் இருக்கும். அதுவும் நாங்க செய்த படகு..."

"அதை எப்படி மிஸ்டர் காளிமுத்து கண்டுபிடிச்சார்?"

"அதுக்கு இந்த வனத்தை சேர்ந்த சில வனக்குடியர் கள்தான் காரணம். அதுல ஒருத்தன் தான் வீரன்..."

"வீரனா?"

"இவனைத்தான் கைது செய்திருக்கீங்க... காட்டை விட்டு தப்பிக்க பாத்தவங்கள்ள இவனும் ஒருத்தன். இவ னோட முறைப் பொண்ணுதான் வங்கி..."

"வங்கியா... அது யார்?"

"இந்த காட்டுல காணாம போனதா சொல்லப்படற இரண்டு பெண்கள். ஒருத்தி நீலி, இன்னொருத்திதான் வங்கி..."

"யெஸ்... இப்ப தெளிவாயிடுச்சு. இந்த வங்கியோட பரம்பரைனான வீரன்தான் காளிமுத்துவுக்கு எல்லா உதவியும் செய்தவனா?"

"ஆமாம்..."

"அந்த வங்கி நீலி இரண்டுபேரும் இறந்து போயடிப் பள்ளத்துல அவங்க உடம்பு கிடக்கறதா தகவல் வந்ததே... அவங்கள கொலை செய்து உடம்பை வீசினது இந்த வீரன் தானா?'

"இதை அவன் கிட்டயே கேட்டு தெரிஞ்சுக்குங்க சார்."

"சரி... காளிமுத்து சார் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தாரே... அவரை யார் கொலை செய்தது?'

"இதுக்கும் பதில் வீரன்கிட்டதான் இருக்கு..."

அந்த வானத்து மனிதர் அமைதியாக சொன்ன விதமே அலாதியாக இருந்தது.

43

'சுயம்பு லிங்கங்களுக்கு பின்னாலே ஆச்சரிய மூட்டும் பல விஷயங்கள் உள்ளன. ஒவ்வொரு சுயம்புலிங்கமும் ஒரு சித்த உடம்பு. மனித உடம்பைத்தான் சித்த புருஷர்கள் மூலிகைகளாலே கல்ப உடம்பாக்கிக் கொள்கிறார்கள். கல் போன்ற உடலையே கல்ப உடம்பு என்பர். பின் அவர்கள்

பூமிக்கடியில் ஜீவசமாதியாகி விடுவார்கள். அந்த சமாதி பிளந்து மேலெழும்பி வருவதே சுயம்பு லிங்கம். இதற்கு காரணம் அவர்கள் பூமிக்கு மேலே, பூஜைக்கு ஆளாகி அருள் புரிந்திட விரும்புவது தான்.

ஒரு சித்தன் மவுனத்தில் சில காலம், யாத்திரையில் சில காலம், தவத்தில் சில காலம், யோகத்தில் சில காலம் என்று இருப்பான். அதிசயமாக சமூகத்துக்கு குறிப்பாக தன்னை நாடி வருபவர்களின் துயர் தீர்ப்பதற்கு சில காலத்தை ஒதுக்குவார்கள்.

அப்படி ஒதுக்கப்படும் தருணத்தில் தான் சுயம்பு லிங்கங்களாய் பூமிக்கு மேல் எழும்பி நிற்பார்கள்!'

"நாங்க தியானத்துல இருக்கும்
போது சப்தமில்லாத அமைதி-
குறிப்பா எண்ணங்களே இல்லாத
ஒரு மனநிலைல எங்களை யார்
நினைச்சாலும் எங்களுக்கு
கேட்கும்..."

"போலீஸ்காரர்களிடம் ஒரு கிரிமினல்
சிக்கிவிட்டால் துவைத்துப்
பிழிவதற்கு பின்னாலே பெரும்
உளவியல் காரணங்கள் உள்ளன.
தப்பானவர்களோடுதான் அவர்கள்
தொடர்பு..."

எல்லாவற்றுக்கும் பதில் வீரனிடமே இருப்பதாக அவர் சொன்னது சிவகுமாருக்கு சற்று எரிச்சலைத் தந்தது.

"இவ்வளவு தூரம் எல்லா உண்மைகளையும் சொன்ன நீங்க இந்த வீரனுக்கு தெரிஞ்ச உண்மைகளையும் சொல்லலாமே...?" என்றான்.

"நீங்க நோகாம நோம்பு கொண்டாட நினைக்கறீங்க ஆபீசர்..." கிண்டலான பதில் அந்த வானத்து மனிதரிடம்.

"உங்களுக்கு தெரிஞ்ச எல்லா உண்மைகளையும் சொல்லணும். ஒரு விஷயம் தெரிஞ்சிருந்து அதை மறைக்கறதும் பெரிய குற்றம்...."

"இந்த சட்ட விவரங்கள் எல்லாம் எனக்கும் தெரியும் ஆபீசர். எனக்கு தெரிஞ்ச எல்லா விஷயங்களையும் சொல்லிட்டேன். இனி நீங்க என்கொயரி பண்ண வேண்டியது உங்க கிட்ட சிக்கியிருக்கற குற்றவாளியத்தான். என்னை சும்மா தொல்லை பண்ணக் கூடாது.

நானும் சரி என் கூட்டத்தாரும் சரி கிட்டத்தட்ட இந்த காட்டுவாசிகளா ஆகி பல வருஷங்கள் ஆயாச்சு. எங்களால மத்தவங்களுக்கு பிரச்னைன்னாதான் இனி எங்க கிட்ட பேசணும்.

உங்களுக்கு நான் ஒரு விஷயத்தை உறுதியா சொல்லிக்கறேன். நானே நாங்களோ இந்த காட்டை விட்டு எங்கேயும் போயிடமாட்டோம். எங்கள பாக்க விரும்பினா மனசார நினைச்சா போதும். நாங்க உங்கள தேடி வந்துடுவோம்... இந்த காடு வாழணும். இந்த காட்டு உயிர்கள் வாழ்வாங்கு வாழணும் ஞாபகம் வெச்சுக்குங்க. நான் புறப்படறேன்."

அவர் புறப்படக் காலெடுத்தார். உடனேயே மிக வேகமாய் நில்லுங்க என்று தடுத்தார் சிவக்குமார்.

"என்ன ஆபீசர்?"

"இல்ல... நான் தெரியாம தான் கேக்கறேன். அது எப்படி நாங்க நினைச்சாலே நீங்க வரமுடியும்? எனக்கு புரியல..."

"ஓ... அந்த விஷயத்தை நம்ப முடியலியா... பல முறை நாங்க பலர் நினைக்க வந்துருக்கோமே?"

"அதுதான் எப்படின்னு கேக்கறேன். ஒரு போன் பண்ணுங்க. நான் வரேன்னா அதுல ஒரு அர்த்தம் இருக்கு.

அப்படி இல்லாம இங்க நாங்க நினைச்சாலே நீங்க வர முடியும்னா அது எப்படி?"

"ஒண்ணு பண்ணுங்க. நான் இப்ப போறேன். கொஞ்ச நேரம் கழிச்சு நீங்க நினையுங்க. அப்ப நான் வரேனா இல்லையான்னு பாருங்க..."

"மிஸ்டர் சுந்தர்... நான் கேக்கறத நீங்க சரியா புரிஞ்சுக்காம பதில் சொல்றீங்கன்னு நல்லா தெரியுது. நீங்க வந்துருக்கீங்க. இனியும் வருவீங்கன்னே வெச்சுப்போம். அது எப்படி சாத்தியம்னு தான் கேட்கறேன்."

"நாங்கள் யோகிகள்! எங்களோட கேட்கும் திறன் உங்க திறனைப் போல பல மடங்கு. நாங்க தியானத்துல இருக்கும் போது சப்தமில்லாத அமைதி - குறிப்பா எண்ணங்களே இல்லாத ஒரு மனநிலைல எங்களை யார் நினைச்சாலும் எங்களுக்கு கேட்கும்.

மனதுக்கு பலவித சக்தி உண்டு. இதுல எதையும் தெரிஞ்சுக்காம மனசுக்கு கவலைப்படவும் சந்தோஷப்படவும் மட்டுமே தெரியும்கற நிலைலதான் எல்லாரும் இருக்காங்க. மனோசக்தியை புரிஞ்சுகிட்டு அதை பயன்படுத்த தொடங்கினா எவ்வளவோ சாதிக்கலாம்.

தீவிரமா ஒரு விஷயத்தை நினைக்கும் போது அது தொடர்பா பல விஷயங்கள் நடக்குது. இது எதுவும் மாய மாலம் கிடையாது. விஞ்ஞானம்! நாங்களும் விஞ்ஞானிகள் தாங்கறத மறந்துடாதீங்க..."

அவர் அந்த பதிலோடு விறுவிறுவென்று விலக ஆரம்பித்தார். அவரை எந்த ஒரு கேள்வியாலும் கட்டிப் போட முடியவில்லை.

"சார்... கடைசில நான் நெட்ல பார்த்து கண்டு பிடிச்சு சொன்னதுதான் சரியா இருந்துருக்கு. இவங்க அவ்வளவு பேரும் விமான விபத்தால இந்த காட்டுக்கு வந்தவங்கறது தான் சரி" என்றான் திலீப்.

"பிரதர்... வந்த மனுஷன் கில்லாடி. ஓரளவு எல்லா விஷயத்தையும் சொன்னாலும் நாம கேட்க இன்னும் நிறைய கேள்விகள் இருக்கு. அதை கேட்கறதுக்குள்ள அந்த நபர் திரும்பிப் போனதுதான் எனக்கு பிடிக்கல. போகட்டும் பல விஷயங்கள்தான் தெரிஞ்சு போச்சே... அடுத்து என்ன செய்யப் போற?"

"என்ன செய்யறதா? அந்த வீரனை நோண்டி நுங்கு எடுக்க வேண்டியதுதான்."

"அதை விட முக்கியம்... உடனடியா அந்த தங்கச் சுரங்கத்துக்கு சீல் வைக்கறது. இப்பவே எவ்வளவு களவு போயிருக்கோ?"

நட்ராஜிடம் ஆற்றாமை பீறிட்டது.

"நீ சொல்றதும் சரிதான். நான் இப்பவே புறப்பட றேன்."

"இருங்க. சாப்ட்டு போங்க..."

"என் மனசு இருக்கற நிலைல என்னால சாப்பிடல்லாம் முடியாது வள்ளியம்மை... நான் புறப்படறேன்."

சிவக்குமார் வேகமாக சென்று ஜீப்பில் ஏறிக் கொள்ள ஜீப் புறப்பட்டது.

உடனே வள்ளியம்மை ரேகாவை பார்த்து, "ரேகா... வானத்து மனுஷர் வந்து வார்த்தையைக் காப்பாத்திட்டார் பார்த்தியா?" என்றாள்.

"ஆமாம் மேம்... அவங்கள பத்தி எனக்கிருந்த கொஞ்ச நஞ்சம் சந்தேகமும் இப்ப தீர்ந்துடுச்சு... ஆனா நாங்கள்ளாம் சைன்ஸ் டிஸ்ட்டுன்னு அவர் சொன்னதைத்தான் நம்ப முடியல..."

"ஆமாம் அவங்க சித்தர்கள்..."

"நாமளும் சித்தர்களோட தானே பார்த்தோம்?"

இருவரது பேச்சையும் கேட்ட திலீப் எரிச்சலானான்.

"ஹலோ... நீங்க எப்ப இவங்கள சித்தர்களோட பார்த்தீங்க?"

"நேத்து ராத்திரி..."

"என்ன கனவு கண்டுட்டு உளற்றீங்களா?"

"இல்ல... நிஜத்தைதான் கனவுன்னு சொன்னோம்."

"நான் இங்கேயேத்தான இருக்கேன். எனக்கு தெரியாம எப்ப போனீங்க?"

"திலீப் நீ நல்ல மயக்கத்துல இருந்த. நட்ராஜ் சாரும் தூங்க ஆரம்பிச்சுட்டார். நாங்களும் கிளம்பிட்டோம்."

"அப்ப நேத்து ராத்திரி நீங்க சிவராத்திரி பூஜைக்கு போனது கனவில்லையா?"

"உன்வரைல அது கனவு. எங்க வரைல அது நிஜம்."

"அப்ப இந்த வானத்து மனிதர் ஒரு சித்தரா?"

"ஆமாம்... அதுல எனக்கு சந்தேகமேயில்லை."

"அவரே தன்னை ஒரு சைன்ட்டிஸ்ட்டுன்னு சொன்னாரே?"

"ஏன் ஒரு சைன்ட்டிஸ்ட் சித்தரா இருக்கக் கூடாதா?"

"போதும் நிறுத்துங்க. இங்க ஏற்கனவே மண்டை காஞ்சு கிடக்கோம். இதுல நீங்க வேற..." நட்ராஜிடம் எரிச்சலின் வீச்சு.

"குரு... ரேகா சொல்றதுதான் எனக்கும் சரின்னு படுது. வானத்து மனிதர் நிச்சயம் சித்தர் தான்..." திலீப் ரேகாவை வழிமொழிந்தான்.

"அப்படின்னா இங்க நமக்கு ஏற்பட்ட மிஸ்ட்ரி எக்ஸ்பீரியன்ஸ். பர்ட்டிகுலரா நாம பார்த்த கற்பகமரம்,

தோள்ல பிணத்தோட அலையற அகோரசாமி இதெல்லாம் நிஜம்னுல்ல ஆகுது?"

"ஆமா... இந்த கற்பகமரம் பொய் இல்ல. அவ்வளவு ஏன் நான் கர்ப்பம் தரிச்சதே கூட விருட்ச இலையால தானே. அதுவே பெரிய மிஸ்ட்ரிதானே?"

"நிச்சயமா மேடம்..."

"அப்ப எனக்கு கால்ல அடிபட்டது. திலீபுக்கு அடிப்பட்டது எல்லாம்..."

"தப்புக்கு தண்டனை..."

"பொடலங்கா... உண்மையை தெரிஞ்சுக்க முயற்சி செய்தது ஒரு தப்பா?"

"நாம சண்டை போட்டுக்க வேண்டாம். வீரனை பல்கொயரி பண்ணப் போயிருக்கற சிவக்குமார் என்ன பண்றான்னு பார்ப்போம். இந்த காட்டுக்குள்ள வந்ததுல இருந்தே ஏராளமான எக்ஸ்பீரியன்ஸ்.. இதுல நல்லது கெட்டது துன்னு இரண்டும் இருக்கு. எது கெட்டதுன்னு இப்ப தெரிஞ்சு போச்சு. நல்லதுதான் இனி தெரியணும்..."

"தெரியணும் இல்ல... புரியணும்" திருத்தினான் திலீப்.

ஒரு கயிற்றில் வீரனை தலைகீழாக கட்டி தொங்க விட்டிருந்தார்கள். போலீஸ்காரர்களிடம் ஒரு கிரிமினல் சிக்கிவிட்டால் துவைத்துப் பிழிவதற்கு பின்னாலே பெரும் உளவியல் காரணங்கள் உள்ளன. தப்பானவர்களோடுதான் அவர்கள் தொடர்பு எப்போதும் உள்ளது. அடுத்து சமூகத்தில் பல குற்றங்களை தடுத்து நிறுத்த முடியாத ஆதங்கம். இது இரண்டும்தான் ஒன்றாக சேர்ந்து ஒரு கிரிமினல் சிக்கும் போது புகுந்து விளையாட வைத்து விடுகிறது.

வீரனுக்கு ரத்த வாந்தியே வந்துவிட்டது. கட்டை அவிழ்த்து தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தி திரும்பவும்

கட்டியடிக்க முனையவும் வலி தாங்காமல் பேச ஆரம் பித்துவிட்டான்.

"எல்லா உண்மைகளையும் சொல்லிடறேன் சொல் றேன்."

"உனக்கு பாரெஸ்ட் ஆபீசர் காளிமுத்துவை தெரி யுமா?"

"நல்லா தெரியும்..."

"அவரை யார் கொலை செய்தது?"

"அவர் ஒரு கூட்டத்தோட கூட்டு சேர்ந்து செயல்பட் பார்த்தாரு. அந்த கூட்டத்தை சேர்ந்த பாபுங்கறவன்தான் கொலை செய்தான்..."

"ஏன் கொலை செய்தான்?"

"காளிமுத்து சாருக்கு தங்கச் சுரங்கம் இருக்கற இடத்தை காட்டினதே பாபுதான். ஆனா ஒரு கட்டத்துல காளிமுத்து சார் பாபுவை கொல்ல நினைச்சார். ஆனா பாபு முந்திட்டான்."

"ஏன் முந்தினான்... காளிமுத்து ஏன் கொல்ல நினைச் சார்?"

"காளிமுத்து சார் அவசரப்பட்டு கூட்டு சேர்ந்துட்டார். பிறகுதான் தப்பை உணர்ந்தாரு. அதனால அந்த தங்கச் சுரங்கம் பத்தி யாருக்கெல்லாம் தெரியும்னு அவர் நினைச் சாரோ அவங்களை கொல்ல நினைச்சார். அதேசமயம் அவங்களும் காளிமுத்துவை கொல்ல நினைச்சாங்க."

"ஒத்துமையா செயல்படாம ஏன் அடிச்சுக்கிட்டாங்க?"

"பேராசைதான். தங்கச்சுரங்கத்தை தனியா கண்டு பிடிக்க முடியல. அதனால ஒரு கூட்டு தேவைப்பட்டது. பிறகு அந்த கூட்டத்தை வெட்டிவிடறதும் கஷ்டமா இருந்தது..."

"அப்புறம்?" சிவக்குமார் கேட்க வீரன் முக்கிய ரகசியத்தை சொல்ல ஆரம்பித்தான்.

44

'ஒரு சுயம்பு லிங்கம் ஒரு இடத்தில் உருவாகப் போகிறது என்றால் அங்கே இயல்புக்கு மாறுபட்ட விஷயங்களும் நடக்க ஆரம்பிக்கும். குறிப்பாக அந்த பாகத்தில் மழை பெய்து சுயம்புலிங்கம் தோன்றும் இடத்தில் நீர் தேங்கும். அதில் உச்சிச் சூரியன் ஒரு மண்டல காலம் எவ்விதத் தடையும் இன்றி தெரிவான். இதற்கு 'பஞ்சபூத பூஜை' என்று பெயர்! அடுத்து நீர் வற்றி அங்கே 'வேம்பு, துளசி, வில்வம், அரசு, எலுமிச்சை' என்கிற தாவரங்கள் தழைக்கத் தொடங்கும். குறைந்த பட்சம் இதில் இரண்டு தாவரமாவது அந்த இடத்தில் தழைத்து வளரும்.

மூன்றாவதாக பசுமாடுகள் அங்கே வந்து அமர்ந்து இளைப்பாறும். அப்போது கோமியம் சாணி வெளியேறும். நான்காவதாக வேதம் தெரிந்த ஒரு மனிதன் அங்கே எதன் பொருட்டாவது வந்து சேர்ந்து தன் நித்யகர்மங்களில் ஒன்றைச் செய்வான்.

ஐந்தாவதாக தெய்வாம்சமுள்ள ஒரு குலப்பெண் அங்கே தங்கி இளைப்பாறுவாள். இதெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் சுயம்பு லிங்கங்கள், எழும்பப்போகும் இடத்தில் தானாக நடைபெறும்.'

"இந்த பாபு பொம்பள பிசினஸ்
பண்றவன்.
மகா மோசம். கஞ்சா,
பவுடர்னு எல்லா
கசுமாலமும் அவன்கிட்ட
இருந்தது..."

வீரன் தந்து வரும் வாக்குமூலத்தை ஒருவர் வீடியோ எடுத்தபடி, இருந்தார்.

"காளிமுத்தாய்யாவுக்கு தப்பான பொண்ணுங்க சக வாசம் இருந்தது. அதுல ஒருத்தி பேர் நிலா. அவ ஆபீசுக்கே வந்துடுவா. பொறவு அய்யாவோட குவார்ட்டர்சுல தங்கி இருந்துட்டு போவா. அவதான் காளிமுத்தய்யாவை கெடுத்து குட்டிச்சுவராக்குனவ..."

வீரன் சொல்லச் சொல்ல வந்த புதிதில் குவார்ட்டர்சில் படுக்கை அறையில் ஒரு விசிட்டிங் கார்டும் அதன் பின்புறம் நிலா என்ற பெயரும் எழுதப்பட்டிருந்ததை வள்ளியம்மை பார்த்துவிட்டு வந்து காட்டியதும் சிவக்குமாருக்கு நினைவுக்கு வர ஆரம்பித்தது.

"அந்த நிலா எங்க இருந்து வந்தா?"

"அதெல்லாம் தெரியாது. அவ ஒரு மாதிரியான பொம்பளை. எப்படியோ வந்துட்டா. அவதான் காளி முத்தையய்யாவுக்கு பாபுவையும் அவன் கூட்டத்தையும் அறி முகப்படுத்துனா. இந்த பாபு பொம்பள பிசினஸ் பண்றவன். மகா மோசம். கஞ்சா, பவுடர்னு எல்லா கசுமாலமும் அவன் கிட்ட இருந்தது. அவன்தான் காளிமுத்தையா கிட்ட இந்த வனத்துல கஞ்சா பயிர் பண்ணலாம். ஆறே மாசத்துல ஏக்கருக்கு ஒரு கோடி கிடைக்கும்னு சொன்னான்..."

"அப்ப கஞ்சா பயிர் இங்க போடப்பட்டதா?"

அந்த கேள்வி முன் சற்று தயங்கியவன், 'ஆமாங்கய்யா' என்றான்.

"அதை உன் ஜாதி ஆட்கள் யாரும் கவனிக்கலையா?"

"நாங்க கவனிக்க விடல. காளிமுத்து சார் அதுக்கு பன்னதான் பொறுப்பா போட்டிருந்தார்."

"ஒரு தாணுமாலயனா இருந்துகிட்டு எப்படி இப்படி ஒரு தப்பு பண்ணின?"

"போதைதாங்க காரணம்!"

"போதையா?"

"ஆமாங்க... சாராயம்னா எனக்கு உசுருங்க. காளிமுத்து . அய்யா என்னை அதுல அடிச்சிட்டாரு. வெளிநாட்டு சரக்கா வாங்கித் தருவாரு. அப்படியே கஞ்சாவுல வர்ற பணத்துல பனக்கு பங்கு தர்றதா சொன்னாங்க..."

"சரி அந்த மாதிரி செய்து எவ்வளவு சம்பாதிச்ச?"

"ஒரே ஒரு வெள்ளாமைதான் நடந்தது. அதுலயும் பாதி காட்டுத்தீயில எரிஞ்சு போச்சு."

"காட்டுத்தீயிலயா?"

"ஆமாம்... எரிஞ்சது போக மிச்சத்தை நான் என் மாமன் வண்டிமடையான் வீட்ல வெச்சிருந்தேன். என் மாமன் மவ வங்கியத்தான் நான் கட்றதா இருந்தேன்..."

"அந்த சரக்கை எப்படி வெளியே கொண்டு போனே... . அதை யார் வாங்கிட்டு போனது?"

"சத்தியமா எனக்கு தெரியாது. பலாப்பழம், பூசணிக் காய் மாதிரி காய்க்குள்ள வெச்சு நான் எங்க வன எல்லைல கொண்டு போய் வேன்ல ஏத்திடுவேன். மத்ததெல்லாம் பாபு பாடு..."

"இப்ப பாபு எங்க?"

"உங்க கஸ்ட டியிலதான் இருப்பான்."

"இந்த காட்டுல திரியற வானத்து மனிதர்களை நீ பார்த்திருக்கியா?"

"அவங்கள பாக்காதவங்களே இந்த காட்டுல இருக்க முடியாதுங்க..."

"அவங்களுக்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையா?"

"அவங்க சாமி மாருங்க. அவங்களுக்கு நான் மட்டும் தான் பயந்தேன். காளிமுத்து சார் முதல்ல பயப்பட்டார். பொறவு பயப்பட்டார். அதனாலதான் இந்த காட்டுல வேலை வேணாம்னு மாற்றல் வாங்கிட்டு போனார்."

"அவங்களுக்கு நீ பயந்தேன்னா எப்படி?"

"அவங்களுக்கு காட்டுல சின்ன தப்பு கூட யாரும் பண்ணக்கூடாது. பண்ணா வந்து திருத்து வாங்க. அப்படியும் கேட்கலேன்னா தண்டிப்பாங்க."

"எந்த மாதிரி?"

"தப்பு பண்றவங்க முன்னால பாம்பா வருவாங்க. யானையா வந்து நிப்பாங்க. தப்பு பண்றவங்க எங்கையாவது விழுந்து கை, காலை முறிச்சுக்குவாங்க."

"இதுவரை தெளிவா பதில் சொல்லிட்டு வந்த நீ திடீர்னு பாம்பு யானைன்னு பூச்சாண்டி காட்றியே..."

"சத்யம்... பூச்சாண்டி இல்ல. நீங்க எங்க மூப்பரை வேணா கேட்டுப் பாருங்க."

"அவங்க தங்களை விஞ்ஞானிங்கறாங்க. நீயோ மாயாவி மாதிரி சொல்ற. எதை நம்புறது?"

"அது உங்க இஷ்டம்..."

"அவங்கள பார்த்து காளிமுத்து சாரும் பயந்தார்னு சொன்னே... எப்படி?"

"காளிமுத்து சாருக்கும் அவங்களுக்கும் எப்பவும் பிரச்சனை பொருத்தம்தான். குறிப்பா அந்த நிலா பொண்ணு வரும்போது யானையா மறிச்சு அதை திருப்பி அனுப்பி விடுவாங்க. அப்புறம் அகோரசாமிய விடுவாங்க..."

"அகோரசாமி... இந்த பொணத்தோட அலையற நபர் தானே?"

"சாமிங்க அது. அது கூட நிலாவை மிரட்டியிருக்கு..."

"அப்ப அகோரசாமிக்கும் வானத்து மனுஷங்களுக்கும் நிறைய தொடர்பு இருக்குன்னு சொல்..."

"ஆமாம்... அவங்களுக்கு தெரியாம ஈ காக்கா கூட இங்க பறக்க முடியாது."

"இது தெரிஞ்சு நீ மட்டும் எப்படி துணிச்சலா தப்பு செய்தே?"

"வானத்து மனுஷங்கள காளிமுத்து சார் முதல்ல நம்மளப்போல மனுஷங்களாத்தான் நினைச்சார். ஒரு படி மேலே போய் அவங்கள தப்பானவங்களா நினைச்சார். அவங்கள பத்தின ரகசியத்தை தெரிஞ்சுக்க நானும் உதவி செய்தேன். நானும் அவரும் ஒரு நாள் மதிகெட்டான் வனம் போயி அங்க இருந்து வடக்கு பக்கம் மேல ஏறி 'வாவி'க்கு போனோம். எனக்கும் ரொம்ப நாளா மதிகெட்டான் வனத்துக்குள்ள போய் பாக்கற ஆசை இருந்தது. வாவில அவனப்பாட்சி எல்லாம் இருக்கறதா எங்க வீட்டு கெழவிங்க சொல்லியிருக்காங்க. அவங்கதான் வாவிக்கு அப்பால தங்க மண்டபம் இருக்கு. அதை வன தேவதை காவல் காக்குதுன்னு சொல்வாங்க. இதை நான் காளிமுத்து அய்யாகிட்ட சொல்ல அவர் அவர்தான் என்னை வழிகாட்ட சொல்லி கூட்டிகிட்டு போனார்..."

"அப்ப காளிமுத்து கூட வாட்சர் கோவிந்தன் வரலையா?"

"இல்லீங்க. கோவிந்தனை காளிமுத்தய்யா கிட்டயே சேர்க்க மாட்டாருங்க. நான்தான் அவருக்கு எல்லாம். ஆனா வெளிய பெருசா யாருக்கும் தெரியாது..."

"கோவிந்தனை ஏன் காளிமுத்து ஒதுக்கினாரு...?"

"கோவிந்தன் ரொம்ப நல்லவங்க... அதான்."

- வீரன் அவ்வளவு ரத்தின சுருக்கமாக சொல்வான் என்று சிவக்குமார் எதிர்பார்க்கவில்லை. கோவிந்தனும் அங்கு இருந்தான். பதிலுக்கு அவனைப் பார்த்த போது அவன் முகத்தில் சற்று பெருமிதம். சிவக்குமாரின் கேள்விகள் திரும்பவும் தொடர ஆரம்பித்தன.

"அது எப்படி மதிகெட்டான் வனத்துக்குள்ற போயிட்டு மதிகெடாம அதாவது எதுவும் ஆகாம நீங்க திரும்பினீங்க?"

"நான் மூச்சு கட்டுனேன்யா... அய்யா முகமூடி மாதிரி ஒண்ணை மாட்டி செயற்கையா சுவாசிச்சுகிட்டு வந்தார்."

"இதை வானத்து மனுஷங்க யாரும் பாக்கலையா?"

"போகும் போது பாக்கல. வரும்போது பார்த்தாங்க."

"எதுவும் கேட்கலையா?"

"கேட்டாங்க. எங்க போய்ட்டு வர்றீங்கன்னு கேட்டாங்க. என்ன கேள்வி கேட்க அதிகாரமில்லைன்னு காளிமுத்து சொல்லிட்டார்."

"அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?"

"தப்பானபாதைல போறீங்க. வேண்டாம்னு சொன்னாங்க. ஆனா காளிமுத்தய்யா அவங்கள முதல்ல உங்கள இந்த காட்டைவிட்டு விரட்டினாதான் இந்த காடு உருப்படும்னு சொன்னார்."

"அதுக்கு அவங்க எதுவும் சொல்லலியா?"

"உங்க வேலைய நாங்க பாத்துகிட்டிருக்கோம். ஆனா நீங்க வேற வேலை பாக்கறீங்க. இது உங்க உயிருக்கே ஆபத்தா முடியும்னாங்க. கடைசில அப்படித்தான் ஆச்சு..."

"சரி... அந்த தங்கச்சுரங்கத்தை எப்ப எப்படி கண்டு பிடிச்சீங்க?"

"அன்னிக்கே நாங்க மலைல மதிகெட்டான் வனத்தை வடபாகம் கடந்து மேல ஏறிட்டோம். செடி கொடிகள பிடிச்சுகிட்டு சிரமப்பட்டுதான் ஏறினோம். அப்ப அங்க மேல இடங்கள்ல லிங்கங்கள் முளைச்சிருந்துச்சு..."

"லிங்கங்கள் முளைச்சிருந்ததா? முளைக்க அது என்ன மரமா செடியா?"

"எனக்கு பாக்க அப்படிதான் தெரிஞ்சுச்சு. ஒரு இடத்துல ஒரு லிங்கம் மேல காலவெச்சு தான் மேல ஏற வேண்டி வந்தது. அதுக்குப் பிறகு ஒரு வாரம் என் கால் நெருப்பா எரிச்சுச்சு..."

"சரி... லிங்கம் மேல கால வெச்சு மேலபோய் வாவிய பாத்தியா?"

"பாக்காம... எங்க பாட்டன்மார் சிலர் சித்திரை பவுர்ணமிக்கு போய் அதுல குளிச்சிட்டு அந்த வாவி தண்ணியோட வரும்போது நான் விடுவேனா? அங்க என்ன ஒரு ஆச்சரியம்னா அந்த வாவி ஒரு ஏரி மாதிரி இருந்துச்சு. தண்ணியும் அம்புட்டு சுத்தம். சிலு சிலுப்பு வேற. அதுல சில இடத்துல தாமரை பூத்திருந்தது. அன்னப்பட்சிங்களும் நிறைய இருந்துச்சு... அந்த ஏரியல படகு மாதிரி ஒரு கட்டுமரம் துடுப்போட இருந்தது. அங்க அது எப்படி வந்ததுன்னு தான் எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு. சித்தர் சாமிங்க அதை கூப்டுனதா எங்க கெழவிங்க கதைல சொல்வாங்க. நானும் அவங்க செஞ்சதாதான் இருக்கும்னு நினைச்சுகிட்டேன்."

"சரி... அதுல ஏறி போனீங்களா?"

"போகாம... நான்தான் துடுப்பு போட்டேன். கட்டு மரமும் நல்லாவே போச்சு. சுத்தி மலைச் சரிவு. அது ஒரு புது உலகமா இருந்துச்சு. மனசுக்கு ரொம்ப இதமா இருந்துச்சு. காளிமுத்து சார் அப்படியே சிலிர்த்து போயிட்டார். செல் போன்ல எல்லா பக்கமும் போட்டோ பிடிச்சார்."

"அங்க உனக்கு மூச்சு வாங்கலையா?"

"அவசியமில்ல. மதிகெட்டான் வனத்துக்குள்ள மையத்தை சுத்தி மான் பாயற தூரம்தான் மதிகெடும்கறது ஒரு கணக்கு... மத்த இடமெல்லாம் இந்த இடம் மாதிரிதான்..."

மான் பாயும் தூரம் என்று வீரன் சொன்னது ரசனைக் குரியதாக இருந்தது.

45

'இந்த உலகில் அதிக சுயம்பு லிங்கங்கள் இருப்பது இமய மலையில்தான். அங்கே கூம்பு வடிவ தோற்றம் ஒவ்வொன்றுமே ஒரு சுயம்பு லிங்கம். அதற்கு கீழே ஒரு சித்த புருஷர் அடக்கமாயிருக்கிறார் என்று பொருள்.

இமயமலை இந்த உலகின் ஒரு அதிசயம். அது மிக உயரமான சிகரம் என்பதால் மட்டுமல்ல... ஒரு சிகரம் கல்லாலும் மண்ணாலும் கோபுரம் போல் உயர்ந்து நிற்காமல் நீரால் நிற்பது என்பது அதிசயம் தானே?

நீர்தான் அங்கே உறைந்து பனியாகி உயர்ந்து நிற்கிறது. நீர் ஓடக் கூடியது. இடத்திற்கு ஏற்ப மாறக் கூடியது. ஆவியாகி மறையக் கூடியதும் கூட. இந்த மூன்றும் மனித மனதுக்கும் பொருந்தும். மனம்

நிலையில்லாதது. சலனப்படக் கூடியது. மாறிய படியே இருக்கும். இந்த மனம் தவத்தின் போது உருகாமல் இறுகிப் பனி போல் ஆகிறது. ஓடும் நீர் திடமானால் பனி. ஓடும் மனம் திடமானால் அந்த பனிபோல தூய்மை நிலையை அடையும். இதை தரவல்லவன் அந்த ஈசன். அதனால்தான் அவனது இருப்பிடமாக இமயம் உள்ளது!'

"கால்ல சதை பிஞ்சு ஜட்டியோட
காளிமுத்தய்யா வந்த
கண்றாவியை வார்த்தைல சொல்ல
முடியாது. நல்லவேளை நாங்க
மேல இருந்து கீழ் இறங்கவும்
எதிர்ல வானத்து மனுஷங்க
வந்தாங்க..."

"அந்த ஏரியையும் அதோட ஒரு
கரைல தங்க சுரங்கத்தையும்
பார்த்து மலைச்சு போயிட்டேன்.
அந்த நிமிஷமே இந்த
உலகத்தையே நான் விலைக்கு
வாங்கிட்ட மாதிரிதான்
உணர்ந்தேன்..."

வீரனிடம் விசாரணை தொடர்ந்தது.

"சரி... அந்த கட்டுமரத்துல பயணம் செய்து அந்த தங்கச் சுரங்கத்தை அடைஞ்சீங்களா?"

"தங்க மண்டியை தானே சொல்றீங்க?"

"ஆமாம்..."

"விடுவோமா... அந்த கட்டுமரம் ஒதுங்குன கரை மண்ணே மஞ்சளாதான் இருந்தது. சூரிய வெளிச்சம் பட்டு தகதகன்னு மின்னுச்சு அங்க குறிப்பிட்ட பாகம் வரை

ஒரு புல் பூண்டு இல்ல. தங்கம்... தங்கம்... எங்க பார் தங்கம் தான்."

வீரன் சொல்லும்போதே அவன் கண்களில் ஒரு பிரகாசம்.

"சரி... அப்புறம் என்ன செஞ்சீங்க?"

"அதை ஏன் கேக்கறீங்க... நான் மண்ணை எடுத்து உடம்பெல்லாம் பூசிக்கிட்டேன். அந்த தரைல உரண்டு புரண்டேன். தங்க நகை செய்து போட்டுக்கத்தான் துப்பு இல்ல. இதைச் செய்யலாமே?"

வீரன் மிக சகஜமாக பேச ஆரம்பித்தான்.

"காளிமுத்து அங்க என்ன செஞ்சார்?"

"அவர் எதை பார்த்தாலும் போட்டோ எடுப்பார். அங்கேயும் போட்டாவா எடுத்தார்.

அப்புறம் தன் சட்டையை கழட்டி அதுல அந்த மண்ணை மூட்டையா கட்டி எடுத்துக்க பார்த்தாரு. அப்புறம் பேண்ட்டை கழட்டி கீழ் பாகத்துல முடிச்சு போட்டு கால் பாகத்தை ஒரு குழாய் பை மாதிரி ஆக்கி அதுலயும் மண்ணை அள்ளி போட்டாரு. அண்ணாந்து அண்ணாந்து பார்த்தாரு. ஆனா அங்க இருந்து வானத்தை பாக்க முடியல. பக்க வாட்டு மலை சரிவா மூடி யிருந்துச்சு. சூரிய வெளிச்சமே கூட பக்க வாட்டுலதான் விழுந்துச்சு. நேரா இறங்க முடியாதபடி மலையோட மேல் பாகம் மூடிக் கிட்டிருந்துச்சு."

"இப்பதான் தெரியுது... ஹெலிகாப்டர் இல்லேன்னா விமானத்துல பயணிக்கறவங்க கண்ணுலயே அந்த இடம் ஏன் படலைன்னு?"

"அது மட்டுமல்ல... அங்க இருந்து நாங்க திரும்பும் போது தான் அங்க காட்டு நாய்ங்க இருந்தது தெரிய வந்தது. ஒரு நாய் இரண்டு நாய் இல்ல. ஒரு பத்து பதினைஞ்சு இருக்கும்..."

"அப்படியா... காட்டு நாய்கள் அங்க இருந்ததா?"

"இருந்தது மட்டுமல்ல. எங்கள துரத்திச்சுங்க. நாங்க அந்த மண் மூட்டையை அப்படியே போட்டுட்டு தண்ணில குதிச்சு கட்டுமரத்துல ஏறும் போதும் அந்த நாய்ங்க விடல. நீந்தி வந்து அய்யா காலை கடிச்சு குதறிடுச்சு..."

"மைகாட்... அப்புறம் என்ன ஆச்சு?"

"என்ன ஆகணும்... கால்ல சதை பிஞ்சு ஜட்டியோட காளிமுத்தய்யா வந்த கண்றாவியை வார்த்தைல சொல்ல முடியாது. நல்லவேளை நாங்க மேல இருந்து கீழ இறங்கவும் எதிர்ல வானத்து மனுஷங்க வந்தாங்க..."

"அப்புறம்?"

"கால்ல ரத்தம் வழியறதை பாத்து சிரிச்சாங்க. என்ன மாமிங்க தண்டிச்சிட்டாங்களான்னு கேட்டாங்க. எங்களுக்கு புரியல. பிறகுதான் காட்டு நாய்களை அவங்க பைரவ சாமியா நினைச்சு சொன்னது புரிஞ்சிச்சு..."

"உம்... அப்புறம் என்ன ஆச்சு?"

"காளிமுத்து வலி தாங்காம கதறினார். அப்ப ஒரு வானத்து மனுஷர் கிட்ட வந்து இந்த காயத்தை நாங்க குணப்படுத்தறோம். திரும்ப இந்த பக்கமே வரமாட்டேன்னு அங்க இருந்த ஒரு சிவலிங்கம் மேல சத்தியம் செய்யச் சொன்னாங்க. காளிமுத்து ஐயாவும் சத்தியம் செய்தாரு..."

"அப்புறம்?"

"மூலிகைகளை பறிச்சு வந்து கட்டுப் போட்டாங்க. அவர் போட்டுக்க பேண்ட் சட்டையும் தந்தாங்க. சத்தியத்தை மீறினா உயிர் போயிடும்னாங்க. கடைசில அவங்க சொன்ன மாதிரியே ஆயிடுச்சு."

"அப்ப காளிமுத்து சத்தியத்தை மீறிட்டார். அப்படி ஆனே?"

"மீறாமதான் அந்த நிலாவோடயும், பாபுவோடயும் சேர்ந்தாராக்கும்..."

"அப்ப அவங்களோட சேர்ந்து தங்க மண்ணை கடத்தப் பார்த்தாரா?"

"இந்த விஷயத்துக்கு பதிலை நீங்க அந்த பாபுகிட்டயே கேளுங்க. என்னை கஞ்சா காட்டு பக்கம் அனுப்பிட்டாங்க. அதை கடந்து எனக்கு எதுவும் தெரியாது."

"சரி... நீலி, வங்கி இரண்டு பேரும் என்ன ஆனாங்க?"

"வங்கி என் தில்லுமுல்லை கண்டுபிடிச்சுட்டா. அதை நீலிகிட்ட சொல்லவும், நீலி வங்கியோட சேர்ந்து உங்ககிட்ட சொல்ல தயாராயிட்டாங்க. உங்களுக்கு தெரிஞ்சா ஆபத்துன்னு நான் தான் இரண்டு பேரையும் கொலை செய்தேன்..."

"நீ மட்டும்தான் செஞ்சையா... உனக்கு வேற யாரும் உடந்தை இல்லையே..."

"நான் மட்டும்தான் கொலை செய்தேன். இதுல வங்கியை கழுத்தை நெரிச்சும், நீலியை ஒரு மரக்கட்டையால அடிச்சும் கொன்னு உடம்பை பேயடிப்பள்ளத்துல போட்டேன்..."

"இப்பவும் அவங்க உடம்பு அங்கதான் இருக்கா?"

"அதை அப்பவே பேயடிப்பள்ளத்தை சுத்த வர்ற காட்டு நாய்களும், நரிகளும் தின்னுருக்கும்."

"சரி... நீ இன்னும் எதாவது சொல்ல விரும்பறியா?"

"எனக்கு தெரிஞ்ச எல்லாத்தையும் சொல்லிட்டேன்..."

வீரனிடம் முதல் கட்ட விசாரணை முடிந்தது. அடுத்து அவன் குறிப்பிட்ட பாபுவிடம். அவன் புகைப்படத்தையும், பெயரையும் போட்டு கிரிமினல் ரெக்கார்டுகளை கம்ப்யூட்டரில் தேடியதில் அது அவனைப் பற்றிய ஏராளமான தகவல்

களை அள்ளி வழங்கியது. சர்வ தேச கடத்தல்காரன் என்பதுவரை அதில் தகவல்கள்.

மிகப் பெரிய நெட்ஒர்க். மிக நவீனமான அணுகுமுறை. யாரு மனது வைத்தால் தாணுமாலய வனத்துக்குள் ஒரு ரெலிபேட் அமைத்து தினமும் அதில் பயணிக்க முடியும். ஒரு டவர் போட்டு பிரத்யேகமாக உலக அளவில் 3ஜி டெக்னாலஜியை பயன்படுத்தி எதையும் சாதிக்க முடியும். அப்படிதான் அந்த தங்க மண்டியன் புகைப்படங்கள் உடலுக்குடன் உலகம் முழுக்க சென்றுள்ளது. அதை கொலு பொம்மை போல செய்து பின் அதை பாதரசத்தில் மூழ்கி எழ வைத்து அந்த பொம்மைகளை சாதாரண ஈய பொம்மை களாக ஆக்கி போலீஸ் கண்ணில் மண்ணைத் தூவுவது என்று பெரிய பெரிய திட்டங்களை எல்லாம் போட்டு விட்டான்.

அவை எல்லாமே அவனை நார்கோ டெஸ்ட் எனப் படும் உண்மையை சொல்லத் தூண்டும் ஊசி மருந்து முறை யில் தெரியத் தொடங்கியது.

தன்னையும் மறந்து எல்லா கேள்விகளுக்கும் பதில் கூறத் தொடங்கினான்.

"நிலாதான் காளிமுத்து சாரோட தொடர்பை உரு வாக்கி தந்தா... நானும் காளிமுத்து சாரும் ஒரு நாள் அந்த தங்கச் சுரங்கத்தை பாக்க போனோம். நான் நேர்ல போய் அதை பாக்கற வரை நம்பல. ஏற்கனவே போய் நாய்க்கடி பட்டதால இந்த முறை நாட்டு வெடிகுண்டுல இருந்து ஏகே47 வரை எல்லாம் கொண்டுகிட்டு போனோம். யார் எதிர்ல வந்தாலும் சரி போட்டுத் தள்ளிடற முடிவுல இருந்தேன் நான். நாய் கடிச்சா கடிபடாதபடி முரட்டு தோலால ஆன உடைகளை போட்டுகிட்டோம். ஆனா ஒரு நாய் கூட நாங்க போன அன்னிக்கு வரல. நான் அந்த எரியையும் அதோட ஒரு கரைல தங்க சுரங்கத்தையும் பார்த்து மலைச்சு போயிட்டேன். அந்த நிமிஷமே இந்த உலகத்தையே நான் விலைக்கு வாங்கிட்ட மாதிரிதான் உணர்ந்தேன்.

அப்புறமா போட்டோ எடுத்துகிட்டு அங்க இருந்து புறப்பட்டோம். நிறைய தங்க மண்ணையும் முட்டை கட்டி எடுத்துக்கிட்டோம். நாங்க கட்டுமரப்படகுல திரும்பும் போது கொஞ்சமும் எதிர்பார்க்காதபடி முதலைகள் அந்த தண்ணில எங்களை கடிக்க வந்தது. அதுகளை சுட்டேன். அதுல ஒரு முதலை இறந்துடுச்சு. சில முதலைகள் தண்ணில கீழ போயிடுச்சு. அந்தப் போராட்டத்துல என் கேமரா, காளிமுத்து சாரோட போன் எல்லாம் ஏரியில விழுந்துடுச்சு. நாங்க முதலைகள் கிட்ட இருந்து தப்புனதே பெரும்பாடு.

நான் பம்பாய்ல இருக்கற தங்க கடத்தல் மன்னன் தாஹீர் மூலமா இந்த தங்க மணலை கடத்தி எடுக்க திட்டம் போட்டேன். ஆனா காளிமுத்து சார் தடுத்தார். இந்த விஷயத்தை வெளில சொல்லாம நாம மட்டுமே கொஞ்சம் கொஞ்சமா மண்ணை கடத்தி தங்கம் எடுப்போம். அதை ரகசியமா ஒரு இடத்துல செய்வோம்னு சொன்னார். அப்படியே நான் டியூட்டியில இருந்து செஞ்சா பெரிய துரோகமாயிடும். நான் முதல்ல டிரான்ஸ்பர் வாங்கிக்கறேன். அப்புறம் வேலையை ரிசைன் பண்ணிடறேன். பிறகு வீரன் உதவியோட காட்டுல ஒரு இடத்தை தீர்மானிச்சு அங்க இருந்து செயல்படலாம். அதுக்கு முந்தி இந்த வானத்து மனுஷங்களை ஒழிச்சுக்கட்டணும்னு சொன்னார். நான் அதுக்கும் சரின்னு சொன்னேன். ஆனா வேலை டிரான்ஸ்பர் ஆகி புறப்பட்டவர் வழியிலயே என்னை பார்த்தப்போ என்னை ரகசியமா கொல்ல முயற்சி செய்தார். நிலா அதை கண்டுபிடிச்சு சொல்லவும் நான் முந்திகிட்டு காளிமுத்தை, சாரை கழுத்தை நெரிச்சு கொலை செய்து புதைச்சுட்டேன். நீங்க தோண்டிப் பார்ப்பீங்கன்னு எதிர்பார்க்கல. அப்படியே வானத்து மனிதர்களைக் கொல்லவும் முடிவு செய்து என் ஆட்கள் சிலருக்கு எழுதின குறிப்பும் உங்க கைல கிடைச்சது. இதை எல்லாம் நான் தூர இருந்து பார்த்துக்கிட்டுதான் இருந்தேன். நீங்க அங்க இருந்து போகவும் நான் காளிமுத்து சார் உடம்பை எடுத்து பேயடிப்பள்ளத்துல போட்டுட்டேன். உங்களையும் குழப்பி விட்டேன்.

என்னால தனியா அந்த தங்கச் சுரங்கத்தை நோக்கி போக முடியாதபடி நீங்க போலீஸ் கூட்டத்தையே இங்க வர வெச்சுட்டீங்க. உங்க கிட்ட நான் மாட்டுவேன்னு எதிர் பார்க்கல."

பாபுவின் முதல் கட்ட வாக்குமூலமும் ஒரு தெளிவைத் தந்தது. இவர்கள் மூலமாகவும் தெரிய வந்த ஒரே விஷயம் வானத்து மனிதர்கள் தவறானவர்கள் இல்லை என்பதுதான்.

அங்கு விசாரணை மும்முரமாக நடந்து கொண்டிருக்க ஒரு ஆபீசரின் செல்போனும் ஆன் கண்டிஷனில் விசாரணை செய்திகளை அப்படியே யாரோ கேட்கும்படி பாஸ் ஆகிக் கொண்டிருந்தது.

46

'ஈசனின் உறைவிடமாக இமயம் திகழக் காரணம் ஈசனின் பிரதான நோக்கமே. ஈசனை எண்ணும் போது கூடவே விஷ்ணு, பிரம்மா எனும் இரு தேவர் களும் இவர்களது செயல்களான அழித்தல், காத்தல் படைத்தலும் நினைவுக்கு வரும்.

பிரம்மாவின் படைப்பாற்றலுக்கு பின்னால் கூட விஷ்ணுதான் உள்ளார். விஷ்ணுவின் நாபிக் கமலத் தில் பூந்து வந்தவரே பிரம்மா... படைப்புக் கடவு ளான பிரம்மாவையே படைத்தவர் விஷ்ணு என்ப தால் விஷ்ணுவே படைப்பவராகவும் படைத்ததை காப்பவராகவும் உள்ளார் என்றும் கூறலாம். இதில் அழிப்பதும் ஒரு முக்கிய வினைப்பாடாகும். அழி வதும், மாறுவதும் உலக இயற்கை சார்ந்த ஒன்று. மனிதப் பிறப்பெடுத்து விட்ட நம் உடலிலும் மனம் ஒரு புறம் வாழ்ந்தபடி இருக்க, உடம்பில் திசுக்கள்

இறந்து கொண்டே போய் நாம் ஒவ்வொரு நொடி யும் மாறுதலுக்கு ஆளாகிக் கொண்டே இருக்கி றோம்.

இந்த அழிவும் அதன் தொடர்பால் ஏற்படும் மாற்ற மும் சிவ சம்பந்த முடையவை!'

"இந்த வீரன் எல்லா தப்பையும்
ஒத்துக்கிட்டான். இந்த பாபுதான்
மும்பைல தாஹீர்ங்கறவனோட
சேர்ந்து செயல்பட பார்த்தான்.
ஆனா அதுக்கு வழி இல்லாதபடி
இப்ப மாட்டிக்கிட்டான்..."

"நாற்காலியில் தலை தொங்கிய
நிலையில் காணப்பட்டான் பாபு.
கையிலும், காலிலும் மட்டும்
கட்டு. சிவக்குமார் வரவும் ஒரு
சென்ட்ரி போலீஸ்காரர் பாபு
முகத்தில் பளிச்சென்று பச்சைத்
தண்ணீரை வீசி எறிந்தார்..."

அந்த ஆபீசர் அமைதியாக நின்று விசாரணையை கவனிப்பவர் போல காட்டிக் கொண்டிருந்தார். அவரது நேம் பேட்ஜில் 'சரவண மார்த்தாண்டன்' என்னும் பெயர்.

சிவக்குமாரும் தற்காலிகமாக என் கொயரிக்கு ஒரு இடைவெளி விட்டார். இனி என்கொயரி அடுத்த கட்டத்துக்கு தேவைக்கேற்ப செல்லும். வனத்துறை மந்திரி வரை சென்று எல்லாரும் கூடித்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கும்.

தாணுமாலய வனத்தில் தங்கச்சுரங்கம் என்று பர பரப்புச் செய்தியாகவும் வெளியாகலாம். என்கொயரி நிறுத்தப்படவும் அந்த சரவண மார்த்தாண்டன் சிவக் குமாரிடம் நெருங்கி வந்தார்.

"சார்... எல்லாமே ரெக்கார்ட் ஆயிடுச்சு. இவங்களை நாம சென்னைக்கு நம்ம ஹெட் ஆபீசுக்கு கொண்டு போயிடலாமா?" என்று கேட்டார்.

"அவசரப்பட வேண்டாம் சரவண மார்த்தாண்டன். எனக்கு இவங்ககிட்ட இன்னும் கேள்விகள் பாக்கி இருக்கு..."

"அப்படியா சார்?"

"இந்த என்கொயரி முடிஞ்சுட்டதா நினைக்கறீங்களா?"

"கிட்டத்தட்ட அப்படித்தானே சார்... அதான் எல்லா விஷயத்தையும் சொல்லிட்டானே..."

"அப்படி என்ன சொல்லிட்டான்... சொல்லுங்களேன் பார்ப்போம்!"

"என்ன சார்... என்ன ஆழம் பாக்கறீங்களா?"

"சேச்சே... இப்படி நாம நமக்குள்ள உரசிகிட்டாதான் பல புதிய கோணங்கள் புலப்படும்!"

"இந்த வீரன் எல்லா தப்பையும் ஒத்துக்கிட்டான். இந்த பாபுதான் மும்பைல தாஹீர்ங்கறவனோட சேர்ந்து செயல் பட பார்த்தான். ஆனா அதுக்கு வழி இல்லாதபடி இப்ப மாட்டிக்கிட்டான். அந்த தங்கச் சுரங்கத்துல ஷூட் பண்ணின எவிடென்சும் அந்த ஏரியில விழுந்துடுச்சு. ஒரு வேளை இந்த பாபு தாஹீர் கிட்ட அந்த சுரங்கம்பத்தி பேசி .அவங்க இவனோட அடுத்த கட்ட செயல்பாடுகளுக்காக காத்துக்கிட்டிருக்கலாம்..."

"அது ஒண்ணு போதுமே... அவன் இப்ப இந்த சுரங்கம் மேல குறிவெச்சிருப்பானே?"

"இருக்கலாம் சார்... ஆனா நாமதான் அந்த சுரங்கத்தை .அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி அதை ஒரு கவர்மென்ட் சொத்தா ஆக்கிடப் போறோமே!"

"அதுக்கு முந்தி இந்த தாணுமாலய வனத்தோட ஒரு டியூட்டி ஆபீசரா எனக்குள்ள இந்த வனம் தொடர்பா பல கேள்விகள் இருக்கு..."

"அந்த வானத்து மனுஷங்களை பத்தியா சார்..."

"அவங்களை பத்தி மட்டுமல்ல... அகோர சாமி, கற்பக மரம்னு நிறைய புதிர்கள் இன்னும் கொஞ்சம் கூட புரியாத புதிராவே இருக்கு..."

"அப்ப அது சம்பந்தமா இரண்டு பேர் கிட்டயும் கேட் போம்..."

"கேட்போம் இல்ல... கேட்டே தீரணும். அந்த புதிர் களுக்கு விடை கிடைக்கறதுலதான் இந்த கேஸ்ல நாம் ஜெயிக்கறதும் இருக்கு."

"உண்மைதான் சார்... இதுவும் அந்த பாபு குரூப் வேலை யாதான் இருக்கும். வாங்க கேட்போம்."

சரவண மார்த்தாண்டன் அழைத்தார். சிவக்குமாரும் திரும்பி வந்தார்.

நாற்காலியில் தலை தொங்கிய நிலையில் காணப் பட்டான் பாபு. கையிலும், காலிலும் மட்டும் கட்டு. சிவக் குமார் வரவும் ஒரு சென்ட்ரி போலீஸ்காரர் பாபு முகத்தில் பளிச்சென்று பச்சைத் தண்ணீரை வீசி எறிந்தார். அது வட்டமாய் பட்டுத் தெரிந்திட அவனும் பதறிய படி கண் திறந்தான்.

அவன் எதிரே ஒரு போலீஸ்காரர் நார்கோ ஊசி போட தயாரானார். அதைப் பார்த்தவனுக்கு பீதியாகியது.

"சார் இந்த ஊசி எல்லாம் வேண்டாம். நான் எல்லா உண்மைகளையும்தான் சொல்லிட்டேனே..."

என்று கெஞ்சாத குறையாக பேசினான்.

"அப்படின்னு நீ சொன்னா நாங்க நம்பிடுவோமா? முஸ்தபை தாஹீர் மாதிரி இன்னும் யார் யார் கூடல்லாம் உனக்கு தொடர்பு இருக்குதோ?"

"சார்... நான் அவன் கூட மட்டும்தான் இருக்கேன். ஒருத்தன் ஒரே சமயத்துல பல குரூப்ல இருக்க முடியாது சார். எங்க அண்ணனுடைய உலகத்துல நாங்க ஒரு தப்புக்கே குண்டு வெச்சு அழிக்கற அளவு கூட போவோம். ஆனா தப்பித் தவறியும் எங்களுக்குள்ள ஏமாற்றவோ, துரோகம் செய்யவோ மாட்டோம்."

"கரெக்ட்... அதனாலதான் நீ இன்னும் பலரை காட்டிக் கொடுக்காம எனக்கு தண்ணி காட்டி கிட்டிருக்கியோன்னு ஒரு சந்தேகம்."

"எப்ப தாஹீரையே காட்டிக் கொடுத்தேனோ அப்பவே நான் செத்துட்டேன் சார்... ஒரு வேளை என்னை நீங்க வெளிய விட்டாலும் என் கூட்டம் போட்டுத் தள்ளிடும். அதனால இனிமே மறைக்கறதுல எந்த புண்ணியமும் இல்ல..."

"நல்லாவே சமாளிக்கற... ஆமா இந்த அகோரசாமியா இங்க நடமாடறது யார்?"

"அகோரசாமியா... அது யார் சார் புதுசா? இப்படி ஒரு பேரையே நான் இப்பத்தான் கேள்விப்படறேன்..."

"சபாஷ்... நல்லாவே நடிக்கற. யோவ். நல்ல ஸ்ட்ராங் காபி போடுய்யா. ரெண்டு கைலயும் போடு. இவன் மனசுல என்னங்களே இருக்க கூடாது. இவன் சாப்பிட்டது, குடிச்சினது, யூரின் பாஸ் பண்ணதை கூட இன்னிக்கு இவன் லிக்கியாகணும். கமான்... கமான்..."

சிவக்குமார் படபடத்தான். ஆனால் ஊசி போட்டவராக இருந்த அந்த நபர் சிரித்தார்.

"என்னய்யா சிரிக்கற?"

"ஓவர்டோஸ் போட்டா விபரீதமாகும். அப்புறம் மென்டலாயிடுவான் சார்."

"ஆகட்டும். இவன்லாம் நல்லா இருந்தா தானே ஆபத்து..."

"அது இவன் எல்லா ரகசியங்களையும் சொல்லி முடிச்ச பிறகு சார்... இப்ப இந்த டோஸ் போதும். எல்லாம் சொல்லிடுவான் பாருங்க." என்றபடியே அந்த நபர் ஊசியோடு பாபுவின் கையை பிடிக்க பாபு முகத்தில் அசுர மாற்றம்.

"சார் சத்யமா அகோரசாமி யாருன்னு தெரியாது. எங்கம்மா மேல சத்தியமா தெரியாது சார்... என்னை நம்புங்க.." என்று வெறிபிடித்தது போல கத்தியவன் அப்படியே மயங்கியதுதான் மிச்சம். சிவக்குமார் ஊசிக்குரிய நபரைப் பார்த்தார்.

"நெஜமா இவனுக்கு எதுவும் தெரியாது சார்... நீங்க வீரனைக் கேளுங்க. அவனுக்கு தெரிஞ்சிருக்கலாம்."

அந்த நபரின் கருத்தை தொடர்ந்து வீரன் முன் இருவரும் நின்றனர். வீரன் முன் ஊசி சிரிஞ்சை காட்டவும் தைரியமாக கையை காட்டினான்.

"என்னடா... உனக்கு அவ்வளவு தைரியமா?"

"எப்படி வேணும்னாலும் வெச்சுக்கோங்க. என் லைப் முடிஞ்சு போச்சு... என்னை நீங்க சும்மா விட்டுப் போறதில்லன்னும் நல்லாவே தெரியும் சார். உங்களுக்கு இப்ப என்ன தெரியணும்?"

"அகோரசாமிங்கறது யார்?"

"அதான் சாமின்னு சொல்லிட்டீங்களே... அப்புறம் என்ன?"

"சாமியா?"

"ஆமாம் சார்... என் பாட்டன் முப்பாட்டன் காலத்துல இருந்து இந்த காட்டைக் காவல் காக்கறது அந்த சாமி தான்!"

"அப்ப அந்த சாமி ஏன் உங்களை எதுவும் செய்யலை?"

"செய்யலையா... அது துரத்தித்தான் நான் காட்டை விட்டே தப்பி ஓடப் பார்த்தேன். அப்பதான் உங்க கையும் கிடைச்சுது."

"என்னய்யா சொல்ற... அந்த அகோரசாமி உங்க குரூப் இல்லையா?"

"அது சாமி சார்... அது எப்படி எங்க குரூப் ஆகும்?"

"சாமியா... இதை என்னை நம்ப சொல்றியா?"

"அது உங்க இஷ்டம்..."

"அப்ப கற்பக மரம்?"

"அது இந்த காட்டோட அதிசயம் சார்..."

"பொடலங்கா. எல்லாமே ஃப்ராடு வேலை."

"அது எனக்கு தெரியாது. காளிமுத்து சாரும் இதையேதான் சொன்னார். நீங்க எல்லாருமே இந்த விஷயத்துல மண்ணுதான் போல."

"போதும்... உண்மையை சொல். ஒரு கல்லால ஆன சிலை நடக்கும்னு சொல். நான் அதைக் கூட நம்புவேன். ஆனா காலில்லாத வேர் விட்ட ஒரு மரம் எப்படிய்யா நடக்கும்?"

"அதுதான் கற்பகமரம் ஆச்சே... அதிசயமாச்சே... அதனால இருக்கலாம் இல்லையா?"

"அப்ப அதுக்கும் உங்க கூட்டத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லைங்கிறியா?"

"அதுதான்யா உண்மை."

வீரன் சாதித்தான்.

"சரி அதை நீ பார்த்திருக்கியா?"

"இல்லையய்யா... ஆனா பாக்கணும்னு ரொம்ப ஆசைப் பட்டேன். ஆசைப்பட்டா ஆச்சா? அதைப் பார்க்க விதியில இடமிருக்கணும்னு எங்க மூப்பர் சொல்வார்."

வீரன் ஒரு புறம் சிவக்குமாருக்கு தேவைப்பட்ட உண்மைகளையும், மறுபுறம் சிவக்குமாரால் துளியும் நம்ப முடியாததையும் சேர்த்தே சொல்லவும் சிவக்குமாரின் முகத்தில் அதீத மாறுதல். அப்போதும் சரவண மார்த்தாண்டனின் செல்போன் ஆன் செய்யப்பட்ட நிலையில் யாருக்கோ அங்கு நடப்பதை எல்லாம் அப்படியே ஒலிபரப்பிக் கொண்டு தானிருந்தது.

47

'ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்ந்திட பூகோள ரீதியான சுற்றுச்சூழல் முக்கியம். இந்தச் சூழலை தருவது சிவம். அந்த சூழலில் அவன் எல்லா செல்வங்களையும் பெற்று வாழ்ந்திட வகை செய்வது திருமால். இந்த இரண்டுக்கும் நடுவே அந்த மனிதன் உணர வேண்டியது தன்னுள் உள்ள பிரம்மத்தை...!

மனித வாழ்வில் மும்மூர்த்திகள் இப்படியாகத் தான் பங்கு வகிக்கிறார்கள். பிரம்மத்தை ஒருவன் உணரத் தொடங்கி விட்டால் ஈசனும், மாலும் அவன் வரையில் தாய் தந்தையர் போல் ஆகி விடுவர். உச்சபட்சமாக இருவரும் ஒன்றே என்பதை உணர்ந்து அந்த ஒன்றின் மேலான வடிவம் அல்லது

சக்தியே பரம் பொருள் என்றுணர்வதே மேலான ஞானம்!

இந்த ஞானத்தை தாணுமாலய வனத்தில் வாழ் பவர்கள் ஒரு நாள் இல்லை ஒரு நாள் அடை வார்கள் என்பது தாணுமாலயவன செய்தியாகும்!'

"இப்பவே சென்னை போய் நம்ம டிபார்ட்மெண்ட் சுபீரியர்ஸ் கிட்டயும் மந்திரிகிட்டயும் இங்க நடந்ததை சொல்லி அவங்களை கூட்டிட்டு வாங்க. அதுக்குள்ள இந்த வானத்து மனுஷங்களையும் நான் அரெஸ்ட் பண்ணி நம்ம கஸ்டடிக்கு கொண்டு வந்துடறேன்..."

வீரனிடம் பேசிவிட்டு தாடையை தடவிக் கொண்டு [illegible] தனியே ஒதுங்கிய சிவக்குமார் முகத்தில் குழப்பம் [illegible] ஆரம்பித்திருந்தது. அதுவரை ஆன் கண்டிஷனில் [illegible] செல்போனை பாக்கெட்டில் கைவிட்டு அணைப்பது [illegible] அணைத்துவிட்டு சிவக்குமாரை நெருங்கிய [illegible] மார்த்தாண்டன்,

"என்னசார்... உங்களுக்குள்ள இன்னும் தெளிவு ஏற் [illegible] லையா?" என்று கேட்கவும் சிவக்குமாரிடம் அதற்கு [illegible] இல்லை. தொடர்ந்து மவுனம்.

"சார் நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"சொல்லுங்க சரவண மார்த்தாண்டன்."

"இவ்வளவு நேரம் நாம விசாரிச்சதுல இரண்டு விஷயம் [illegible] வாகியிருக்கு. ஒண்ணு ஒரு கைப்பிடி அளவு தங்க [illegible] இந்த காட்டை விட்டு வெளியேறலை. தங்கம் இருக்கற [illegible] யாரும் விஷவலா ரீடியாவுல பதிவாகல. ஆகையால [illegible] பெருசா கவலைப்பட தேவையில்லை சார்.

இவங்க மேல சார்ஜ்ஷீட் பைல் பண்ணும் போது கூட கஞ்சா கேஸ் மட்டும் போட்டா போதும். அந்த தங்க சுரங்கம் பத்தி நாம மீடியா கிட்ட பேசவே வேண்டாம்."

"ஏன் அப்படி சொல்றீங்க?"

"நாம தங்கச் சுரங்கம் இருக்குன்னு பகிரங்கப்படுத்தினா குறிப்பா மண்ணா அது இருக்குன்னா அதை அள்ளி எடுத்துக்க பலர் பலவிதமா திட்டம் போட்டு இந்த மலைக் காட்டுக்குள்ள ஊடுருவுவாங்க. ஆகையால இது ரகசியமா இருக்கறதுதான் சரி.

அடுத்து இந்த வானத்து மனுஷங்க நல்லவங்களோ இல்லை கெட்டவங்களோ இந்த காட்டுல இனி அவங்க நடமாடக் கூடாது. அதுக்கு நாம நடவடிக்கை எடுத்தே தீரணும் சார்..."

சரவண மார்த்தாண்டன் சொன்னதில் நிறையவே பொருள். ஆனால் வானத்துமனிதர்கள் பற்றி சொன்னது மட்டும் சிவக்குமாரை நெருடியது.

"என்ன சார் யோசிக்கிறீங்க... அந்த சுரங்கம் இனி அரசாங்க சொத்து. அது இருக்கிற இடத்தை சுத்தி ஐந்து மைல் சுற்றளவுக்கு முதல்ல ஒரு பெரிய பாதுகாப்பு வளையத்தை நாம உருவாக்கணும். நானே அதை செய்து என் தலைமைல கண்காணிப்பை தொடங்கிடறேன். நீங்க இப்பவே சென்னை போய் நம்ம டிபார்ட்மெண்ட் சீரியர்ஸ் கிட்டயும் மந்திரிகிட்டயும் இங்க நடந்ததை சொல்லி அவங்களை கூட்டிட்டு வாங்க. அதுக்குள்ள இந்த வானத்து மனுஷங்களையும் நான் அரெஸ்ட் பண்ணி நம்ம கஸ்டடிக்கு கொண்டு வந்துடறேன்."

"சரவண மார்த்தாண்டன்... நான் போகணும்னே இல்ல. இங்க இருந்து ரிப்போர்ட் போய்கிட்டேதான் இருக்கு. எப்ப இந்த வனத்துக்குள்ள ஒரு பெரிய ஃபோர்ஸ் வந்து டேரா போட்டோமோ அப்பவே மீடியாவும் இந்த பக்கம் திரும்பிடிச்சு.

இன்ஃபாக்ட் இப்ப கூட இங்க பத்திரிகைகாரங்க, டிவிகாரங்க நமக்கு தெரியாமலே இங்க இருந்து நியூஸ் கலெக்ட் பண்ணிக்கிட்டு இருக்கலாம்."

"நீங்க இப்படி சொல்வீங்கன்னு எனக்கு தெரியும்சார். அதனாலதான் நானே அவங்களை அடையாளம் கண்டுபிடிச்சு வெளியே போகும்படி சொல்லிட்டேன் சார்."

இதைக் கேட்டதும் சிவக்குமாருக்கு சுரீர் என்றது.

"என் கிட்ட கேட்காம நீங்க எப்படி அவங்களை அனுப்பலாம்?" என்று சிவந்து முகத்துக்கு மாறி கேட்கவும் சரவண மார்த்தாண்டனுக்கே திக்கென்றது.

"சார் அப்ப நீங்க ரெய்ட் போயிருந்தீங்க. அதான்..."

"இது ஒரு பதிலா? பத்திரிகைகாரங்க விஷயம் ரொம்ப வெடிவெடிவானது. அவங்க அப்படி எல்லாம் போயிடமாட்டாங்க. சொல்லப்போனா இப்பதான் ரொம்ப ஆக்ரோஷமா செயல்படத் தொடங்குவாங்க."

"அதை எல்லாம்தான் பார்த்துக்கறேன் சார். நீங்க எவ்வளவுதான் பார்ப்பீங்க?"

"இது என் கண்ட்ரோல்ல இருக்கற காடு. நான்தானே பாதுகாத்தாகணும்?"

"உங்க அக்கறை எனக்கு புரியாம இல்ல சார். இந்த மாதிரி விஷயத்துல நாமளும் ரொம்ப கவனமா நடந்துக்கணும். ஆகாயல நீங்க நேர்ல போய் எக்ஸ்ப்ளைன் பண்றது தான் சார் சரி. நீங்க இப்பவே புறப்படுங்க. நானும் இப்பவே வெல்லா ஃபோர்சையும் அந்த தங்க காடு இருக்கற மலைப் பகுதியை சுத்தி நூறு அடிக்கு ஒரு போலீஸ்னு போட்டுட றேன்."

சரவண மார்த்தாண்டன் அக்கறை காட்டி பேசியது சிவக்குமாருக்கு ஆறுதலாக இருந்தது.

"சரி நான் வீட்டுக்கு போயிட்டு கிளம்பறேன். அக்யூஸ்ட்டுகளை பத்திரமா பார்த்துக்கோங்க. அவங்க கிட்ட எந்த என்கொயரியும் வேண்டாம். தங்க மலையை சுத்தி செக்யூரிட்டியை டைட் பண்ணுங்க. மிச்சத்தை நான் செல்போன்ல பேசி கைட் பண்ணிக்கறேன். என் வரைல எவ்விரி ஒன் அவர் உங்ககிட்ட இருந்து ஆக்சுவல் ரிப்போர்ட் எஸ்எம்எஸ் ஆகிகிட்டே இருக்கணும். ஓகே?"

"ஓகே சார். நோ பிராப்ளம் சார்..."

சரவணன் மார்த்தாண்டன் ஒரு சல்யூட்டோடு அதை ஏற்றுக்கொள்ள சிவக்குமாரும் புறப்பட்டார். சரவண மார்த்தாண்டன் முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு.

குவார்ட்டர்சில் ரேகா தலைக்கு குளித்து பூ வைத்துக் கொண்டிருந்தாள். வள்ளியம்மையிடம் சேலையை வாங்கி அணிந்து கொண்டிருந்தாள்.

அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் திலீப். நட்ராஜால் இப்போது நாற்காலியில் அமர முடிந்திருந்தது.

வள்ளியம்மை விசேஷமாக சமைத்துக் கொண்டிருப்பது உள்ளிருந்து வரும் வாசத்தில் இருந்து தெரிந்து போயிற்று.

"என்ன ரேகா... நீயும் அண்ணியும் ரொம்ப எக்சைட்டா இருக்கீங்க?"

"ஆமாம்... அதான் எல்லா பிரச்னையும் தீரப்போகுதே..."

"யார் சொன்னது... நாங்க அப்படியேதானே இருக்கோம்?"

"அதுக்கு காரணம் எங்ககிட்ட இருக்கற நம்பிக்கை உங்ககிட்ட இல்லாததுதான்..."

"ஒரு சிவராத்திரி பூஜை இப்படியா உன்ன மாத்தும்?"

"போதும் திலீப்... ரொம்ப கிண்டல் பண்ணாத. என் வரைல இந்த காடு ஒரு பாடம். நான் அதை படிக்கிற மாணவி. ...ம் படிக்கிற மாணவி பணிவோட இருக்கறதுதான் ...ணவ லட்சணம்..."

"தாயே விட்டா உபன்யாசமெல்லாம் பண்ணுவே ...பால இருக்கே. ஒரு விஷயத்தை நான் உனக்கு ஞாபகப் ...டுத்த விரும்பறேன். இந்த உலகத்துல ஈ எறும்புல தொடங்கி ...காடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால தெரியற ...' சத்திரம்வரை எல்லாமே விஞ்ஞானம்தான். விஞ்ஞான ...ரில்லாம எதுவுமே இல்லை. இதை நான் சொல்லல. நீதான் ...ரு நாள் சொன்ன. ஞாபகமிருக்கா?"

"நல்லா ஞாபகமிருக்கு. ஆன்மிகமும் ஒரு விஞ்ஞானம் ...ான். அதை எப்படி எக்ஸ்ப்ளைன் பண்றோங்கறதுலதான் ...ல்லாம் இருக்கு. சிவலிங்கம் என் வரைல் ஒரு அற்புதமான ...றியீடு. அதுல வட்டம், சதுரம், செவ்வகம், நீளம், அகலம்னு ...ல்லாம் இருக்கு. ஒரு மலை உச்சில ஒரு ராட்சஸ சைஸ் ...வலிங்கத்தை நீ கற்பனை செய்துப்பார். அதுல சிலுவை குறி ...ருக்கு, முஸ்லிம்களோட மசூதி டூம் இருக்கு. எனக்கு இப்ப ...அது ஒரு பெரிய கணக்கு பாடமாவும் இருக்கு."

ரேகா பேசிக் கொண்டே விளக்கேற்றினாள்.

"திலீப்.... ரேகாவுக்கு ஞானம் வந்துடுச்சு. அவ இனி ...ப்படித்தான் பேசுவா. உன் லவ்வும் இனி அவ்வளவுதான். ...ன்னா ரேகா இனி ரேகா மாதாஜியா மாறிட்டா" என்று ...' ராஜ் குறுக்கிட்டு கலாட்டா செய்தான்.

அதைக் கேட்டு ரேகா நட்ராஜை முறைத்தாள்.

"என்ன முறைக்கற?"

"ஆன்மிகம் பேசினா உடனே மாதாஜியா. சிவ ...பெருமானே ஒரு குடும்பஸ்தர்தான். தெரியும்ல?"

"அப்படியா ரேகா... ஆமா தெரியாமதான் கேட்கறேன். உங்களுக்கு வந்த மாற்றம் எங்களுக்கு ஏன் வரல?"

"நாங்க நம்பறோம். நீங்க நம்பல. அதான் காரணம்!"

இப்படி அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்த போது சிவக்குமாரின் ஜீப் சத்தம் கேட்கவும் கவனம் அந்தப் பக்கம் திரும்பியது.

சிவக்குமார் வேகமாக இறங்கி உள்ளே நுழைந்தார்.

"என்ன பிரதர்... எல்லாம் நல்லபடியாதானே போய்கிட்டு இருக்கு?"

"அஃப்கோர்ஸ்... காளிமுத்து சாவோட மர்மம், நீலி, வங்கி சாவோட மர்மம்னு எல்லாமே ஓரளவு தெளிவாயிடுச்க. கூடவே இந்த காட்டுக்குள்ள பெரிய அளவுல தங்கம் இருக்கிறதும் தெரிஞ்சிருக்கு. வானத்து மனிதர்கள் பற்றின மர்மமும் ஓரளவு தெளிவாயிடுச்சு. ஆனா பிடிபடாத மர்மங்களை இன்னும் இருக்கு நட்ராஜ்..."

"அது என்ன பிரதர்?"

"கற்பகமரம், அகோரசாமிங்கற விஷயம் துளிகூ புரியல..."

"அது எப்படி பிரதர்... இவ்வளவு விஷயமும் தெரிய வரும் போது அதுதானா ஒரு விஷயம்...? அது மட்டும் எப்படி தெரியாம போகும்?"

"நிச்சயமா இது ஒரு விஷயம்தான் நட்ராஜ்... இந்த இரண்டு விஷயமும் காலகாலமா இந்த காட்டுல இருக்கற நம்பிக்கை சார்ந்த விஷயங்கள் மாதிரிதான் தெரிய வந்துருக்கு..."

"என்ன சொல்ற பிரதர்... கற்பகமரம் அப்ப உண்மையா?"

"அப்படித்தான் வீரன் சொன்னான்!"

"யார் அது?"

"பிடிபட்டிருக்கற இந்த காட்டைச் சேர்ந்த ஒரு .ஆக்யூஸ்ட்..."

"அவன் என்ன பெரிய ஞானியா இல்ல விஞ்ஞானியா? .அவன் பேச்சை கேட்டு நீ அதை கணக்கு எடுத்துக்க_ அவனே ஒரு குற்றவாளி..."

"அந்த குற்றவாளி மற்ற எல்லா குற்றங்களையும் ஒத்துக்கறான் நட்ராஜ்... அப்ப அவன் பேச்சை எப்படி கன்சிடர் பண்ணாம இருக்க முடியும்?"

"அப்ப இன்றைய என்கொயரில குழப்பம் தான் .ரிச்சம்னு சொல்..."

"ஆமாம்... முழுசா ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டதா சொல்ல முடியாது. நானும் இப்பவே சென்னைக்கு புறப் ..ப _றேன். இங்க நடந்த அவ்வளவு விஷயங்களையும் எங்க .டி .பார்ட்மெண்ட் சுபீரியர்கள் கிட்ட சொல்லப் போறேன். விஷயம் மினிஸ்டர்க்கு போய் சிளம்க்கும் போகப்போகுது. .ன்னா இந்த தாணுமாலய வனம் இப்ப ஒரு காடு மட்டுமல்ல தங்கச் சுரங்கம் இருக்கற ஒரு காஸ்ட்லியான பகுதியாகவும் .ஆகிடுச்சு..."

சிவக்குமார் உணர்ச்சி பூர்வமாக சொல்லி முடிக்க, "இதுக்கு ஏன் இவ்வளவு குழம்பணும். வானத்து மனிதர்களை கூப்பிட்டு கேட்டா சொல்லிட்டு போறாங்க..." என்றாள் ரேகா.

அதுவும் சரிதானே?

48

'மலை உச்சிப் பாகங்களுக்கும், அதன் கீழ் இருக்கும் குகைப் பாகங்களுக்கும் தனிப்பெரும் சக்தி உண்டு. இந்த சக்தியை புரிந்து கொள்ள பூகோள அறிவும் விண்குறித்த அறிவும் வேண்டும். கூடவே காலம் குறித்த தெளிவும் இருந்தால் அது பேருதவியாக இருக்கும்.

இங்குள்ள சக்தியை ஒரு மனிதன் முயன்றால் நேராக தவத்தின் மூலமும், மறைமுகமாக வழி பாடுகளின் மூலமும் பெற்றிட முடியும். அதனா லேயே இந்த பகுதிகளை கண்டறிந்து இங்கே தவம் செய்து வாழ்வதை ஒரு வழி முறையாக சித்தர் பெருமக்கள் கொண்டிருந்தனர்.

பல இடங்களில் இந்த உச்சிபாகங்களில் கோவில் கட்டப்பட்டு வழிபாடுகள் உருவாக்கப்பட்டன. வழிபாடுகளில் கலந்து கொள்வோர் அந்த சக்தியை சுவாசம் மூலம் பெற வழி ஏற்பட்டது.

அந்த வகையில் எவ்வளவுக்கெவ்வளவு கூடுதலாக கூம்பு பாகங்களும், குகைப்பகுதிகளும் ஒரு மலை யில் உள்ளதோ அந்த அளவுக்கு அந்த மலை பிரசித்தி பெறத் தொடங்கி விடும்!'

"சரவண மார்த்தாண்டன்கற
ஆபீசர் அவங்களை அரெஸ்ட்
பண்ணி என்கொயரிக்கு
அவங்களை கூட்டிகிட்டு
வரதா சொல்லியிருக்கார்..."

"சுரங்கம்னா ஆழமா கிணறு மாதிரிதான்
எனக்கு கற்பனை உருவாகுது. என்

லைப்ல தங்கச் சுரங்கத்தை நான்
பார்த்ததேயில்ல சார்... ஏன் சார்...
அங்க தங்கம் எப்படி இருக்கும்?
மண்ணுல கலந்து இருக்குமா, இல்ல
பாளம் பாளமா இருக்குமா..."

ரேகா சொன்னதை நட்ராஜும் கெட்டியாக பிடித்துக் கொண்டான்.

"பிரதர்... ரேகா சொன்னதுதான் சரி. இந்த வானத்து மேலுலங்கதான் நீங்க எங்களை நினைச்சாலே வந்துடு வேம்னு சொன்னாங்கல்ல... இப்ப நினைப்போம். இங்க இருக்கிற எல்லாரும் நினைப்போம். வர்றாங்களான்னு பார்ப்போம். அவங்ககிட்டயே கேட்போம்" என்றான்.

"முட்டாள் மாதிரி பேசாதே... உங்களுக்கு தெரிஞ்ச எல்லா உண்மைகளையும் நீங்க சொல்லுங்கன்னு நான் சொன்னப்போ எல்லாத்தையும் சொல்லிட்டேன்னு சொன்னார். வீரனுக்கு தெரிஞ்ச ரகசியங்கள் பத்தி கேட்டப்போ அதை அவன்கிட்ட கேட்டு தெரிஞ்சுக்குங்க. நோகாம நோம்பு கொண்டாட பாக்கறீங்களான்னு கண்டல் செய்தார். ஞாபகம் இருக்கா?"

"அதனால அவங்களுக்கு நிஜமா எதுவும் தெரியாதுன்னு நம்பறியா பிரதர் நீ?"

"நான் அப்படி நினைக்கல... அவங்க மேல எனக்கு இப்பவும் நிறைய சந்தேகங்கள் இருக்கு. அதை அவங்ககிட்ட நான் கேட்காம விடப்போறதில்ல..."

"எப்போ?"

"சரவண மார்த்தாண்டன்கற ஆபீசர் அவங்களை அரெஸ்ட் பண்ணி என்கொயரிக்கு அவங்களை கூட்டிகிட்டு வரதா சொல்லியிருக்கார். அப்போ..."

"அவங்களை அரெஸ்ட் பண்ணப் போறீங்களா?"

இளக்காரமாக கேட்டாள் ரேகா.

"ஆமாம்... ஏன் இப்படி கேட்கற?"

"அவங்க என்ன தப்பு செஞ்சாங்கன்னு அரெஸ்ட் பண்ணுவீங்க?"

"காட்டுல எங்க அனுமதியில்லாம நடமாடினாலே போதும். நாங்க அரெஸ்ட் பண்ணலாம்."

"அதை இவ்வளவு வருஷமா செய்யாம இப்ப செய்யறது ஏன்னு கேட்டாக்க?"

"எல்லாத்துக்கும் நாங்க பதில் சொல்லத் தேவையில்ல. ஆனா நாங்க கேட்டா யாரா இருந்தாலும் பதில் சொல்லியே தீரணும்!"

"இது ரொம்ப அராஜகம். வீரப்பன் விஷயத்துல இப்படித்தான் நடந்துகிட்டீங்களா?"

"ரேகா... சப்ஜெக்ட்ட மாத்தாத. இங்க நான் சொல்ல எல்லா விஷயமும் நடக்கும். அப்ப உங்களுக்கு பல உண்மைகள் தெரிய வரப்போறது நிச்சயம்."

சிவக்குமார் சொல்லிவிட்டு புறப்பட்டார். நட்ராஜ் விடுவதாக இல்லை.

"ரேகா... உன் கருத்தை நான் இப்ப டெஸ்ட் பண்ணப் போறேன். யார் இந்த அகோரசாமி? அப்புறம் இந்த கற்பக மரம் பத்தி வானத்து மனுஷங்களை வரவழைச்சு கேட்கப் போறேன்!'

"நீங்கதான் அவங்களை சந்தேகப்படறீங்களே... அவங்க சொல்றதை மட்டும் நம்புவீங்களா?"

"முதல்ல அவங்க சொல்லட்டும்... பிறகுநாம முடிவுக்கு வருவோம். என் வரைல இரண்டுமே சூப்பர் கிரிமினல் விஷயமாதான் இருக்கணும்."

"ஒருவேளை வேற மாதிரி இருந்தா?"

"வாட் டூ யூ மீன்... கற்பகமரம் நிஜமாவும் அகோரசாமி மாரியாகவுமே இருந்தான்னு சொல்ல வர்றியா?"

"ஆமா!"

"ஒரு படிச்ச பொண்ணு மாதிரி தயவு செய்து பேசு. நீ எல்லாம் விஷுவல் கம்யூனிகேஷன் படிச்சிருக்கறது விஞ்ஞான பூர்வமா செயல்படத்தான். இப்படி கண்மூடித்தனமா நம்பறதுக்கில்ல..."

"முதல்ல உங்க காண்ட்ரவர்சியை நிறுத்திட்டு அவங்களை வரவைக்கறதுக்கான வழியைப் பாருங்க. அவங்கள நம்பினா என்னை நல்லா நடக்க வைப்பாங்கன்னா நான் அவங்களை நம்பத் தயாரா இருக்கேன். ரேகா... நீ ப்ரேமண்ணி அவங்களை வரவழை."

இடையில் புகுந்து திலீப் ரேகாவை தூண்டிவிட அவளும் உடனே தயாரானாள். கண்களை மூடிக்கொண்டு தீவிரமாக அவர்களை நினைத்தாள். குறிப்பாக இறுதியாக அவள் பார்த்த சுந்தர் என்கிற வானத்து மனிதரை நினைத்தாள். சுற்றி எல்லாரும் அமைதியடைந்தனர். நேரமும் மௌனம் சொட்டாக கரைந்தது. ஆனால் வானத்து மனிதர் யாரும் வரவில்லை.

திலீப் சிரமப்பட்டு நடந்து சென்று வெளியில் எட்டிப் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தொலைவுக்கு சப்தமே இல்லை.

ஒரு பத்து நிமிட காலத்துக்குப் பிறகு கண்விழித்தாள் ரேகா. மற்றவர்கள் அவளை ஏமாற்றத்தோடு பார்த்தனர்.

"திலீப்... அவங்க வரலையா?" மெல்லிய குரலில் கேட்டாள்.

"என்ன ரேகா இது கேள்வி... அதான் பார்த்துகிட்டே இருக்கியே..."

"ரேகா... நீ தீர்க்கமா நினைச்சியா? இங்க என் முன் வந்து நிக்கணும்னு நினைச்சியா... அதை முதல்ல சொல்லு?"

"இது என்ன கேள்வி திலீப்?"

"அப்ப இனிமே கூட ஒரு வேளை வரலாம். கொஞ்சம் வெயிட் பண்ணிப் பார்ப்போம்..."

அவர்கள் தங்களுக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டு வானத்து மனிதர்கள் வருவார்கள் என்று காத்திருக்கத் தொடங்கினர்.

சரவண மார்த்தாண்டன் தலைமையில் ஒரு க்ரூப்... அதில் முப்பது போலீசார் இருந்தனர். புழுதி பறக்க அரசாங்க ஜீப்களில் மதிகெட்டான் வனம் நோக்கி சென்றபடி இருந்தனர். முதலில் சென்ற ஜீப்பின் முன் சீட்டில் சரவண மார்த்தாண்டன்!

தாணுமாலய வனத்தின் உட்பாகங்களை நோட்டமிட்டபடியே அமர்ந்திருந்தார். நடுநடுவே கழுத்தில் மாலை போல கிடந்த டெலஸ்கோப் வழியாக சில இடங்களைப் பார்ப்பதும், பின்பு டெலஸ்கோப்பை விட்டு விலகி பார்ப்பதுமாக இருந்தார்.

பின் சீட்டில் இரண்டு ஆபீசர்கள். துரைசாமி வானவராயன் என்று... அதில் துரைசாமி பேசினார்.

"சார்... நாம இப்ப அந்த தங்கச்சுரங்கம் கிட்ட போகப் போறோமா சார்?"

"ஆமாம் துரைசாமி... நாம மூணு பேர் மட்டும் அங்க போகப்போறோம். நம்ம பட்டாலியன் நாம போயிட்டு வர்ற வரைக்கும் அந்த மதிகெட்டான் வனத்துல ரோந்து சுத்திகிட்டே இருக்கணும்."

"எனக்கும் அந்த சுரங்கத்தை பாக்க ஆசையா இருக்கு சுரங்கம்னா ஆழமா கிணறு மாதிரிதான் எனக்கு கற்பனை உருவாகுது. என் லைப்ல தங்கச் சுரங்கத்தை நான் பார்த்ததே

மில்லை சார்... ஏன் சார்... அங்க தங்கம் எப்படி இருக்கும்? மண்ணுல கலந்து இருக்குமா, இல்ல பாளம் பாளமா இருக்குமா?"

"வீரன் சொன்னதை நீங்க கேட்கலையா?"

"எங்க சார்... என் கொயரியை நீங்க ரகசியமா தானே வச்சிருக்கீங்க?"

"சரி... இப்ப நான் சொல்றதை நல்லா கேட்டுக்குங்க. நாம போகப் போற இடம் ஒண்ணும் சாதாரணமா போய்வர முடிஞ்ச இடம் கிடையாது. மதிகெட்டான் வனத்துல மூச்சு விடாம நடக்கணும். விட்டா உங்க மதி மயங்கி கெட்டுடும். அப்புறம் உங்க ஞாபகமே உங்களுக்கு இருக்காது. அதே மாதிரி மலைமேல ஏறணும். ஏறணும்னா சாதாரணமா இல்ல. ஏ' ரெக்கிங்ல ஏறுகிற மாதிரி... அங்க காட்டு நாய்கள், முதலை மாதிரி ஆபத்தும் அதிகம் எல்லாத்தையும் சமாளிக்கணும்."

"நீங்க சொல்றதை பார்த்தா நம்ம மூணு பேராள அதை முடிக்க முடியாது போல தெரியுதே சார்..."

"பயப்படாதீங்க... எப்படியாவது நாம அந்த இடத்துக்கு போறோம். அங்க இருக்கற தங்க மண்ணையும் மூட்டை கட்டிக்கறோம். அதுக்கு தோதா நான் பிளாஸ்டிக் சாக்கை எடுத்துகிட்டு வந்துருக்கேன்..."

"என்ன சார் இது... சிவக்குமார் சார் நம்மளை காவல் மட்டும் தானே சொல்லியிருக்கார். நாம அங்க மண் எடுக்கறது தப்பாச்சே சார்..."

"அப்படின்னா ஒரு ஃபாரெஸ்ட் ரேஞ்சரா மாசம் நாப்பதாயிரம் சொச்சம் சம்பளமும், இயர்மென்ட்டுக்கு மூணு இருபதாயிரம் பென்ஷனும் மட்டும் வாங்கிகிட்டு இப்ப இருக்கற மாதிரியே வாழ்ந்துட்டு செத்துப் போங்க.

ஆனா நான் உலகம் பூரா சுத்தி பார்க்க விரும்பறேன். எல்லா நாட்டு சாப்பாட்டையும் சாப்பிட்டு, எல்லா ஊர்

காத்தையும் சுவாசிச்சு அந்த ஊர் தண்ணி குடிச்சு சந் தோஷப்பட விரும்பறேன். சாகும்போது யாரும் எதையும் மூட்டை கட்டி எடுத்துக்கிட்டு போகப் போறதில்ல. எல்லாம் இருக்கற வரைதான். இதுல அம்பானிக்கு மட்டும்தான் எல்லாம் வசப்படணுமா? எனக்கு கூடாதா?"

சரவண மார்த்தாண்டன் புது சித்தாந்தம் பேசினார்.

"அதுக்கில்ல சார்... டிபார்ட்மெண்ட்டுக்கு தெரியாம எப்படி சார் நாம அந்த தங்கத்தை நம்ம இடத்துக்கு கொண்டு போறது?"

"அப்படி கேள்... நான் அதுக்கெல்லாம் எல்லா ஏற் பாடும் பண்ணிட்டேன். நாம வந்த இதே ஜீப்புலதான் நாம கடத்தப்போற தங்க மண்ணும் இந்த இடத்த விட்டுப் போகப் போகுது. வெளியே தாஹீர்ங்கற பம்பாய்காரர் தயாரா இருப்பார். நாம கொடுக்கப் போற ஒரு மூட்டைக்கு ஒரு கோடி கொடுப்பார்."

"தாஹீர்... கேள்விப்பட்ட பேரா இருக்கே?"

"சர்வதேச கடத்தல் மன்னன். அதுலயும் தங்கம் கடத்துறதுல இவன் டாக்டரேட் வாங்கினவன். இந்தக் காட்டு தங்க மண்ணும் அவன் மூலமா உலகம் பூரா போயிடும்."

"மண்ணுக்கா சார் ஒரு கோடி?"

"மண்ணாங்கட்டி. அவ்வளவும் தங்கம்யா. அது தங்க மண். அப்படித்தான் வீரன் சொன்னான்."

"சார் கொஞ்சம் நம்ப தேவைக்கு எடுத்துக்கலாமா?"

"அது உங்க சாமர்த்தியம். ஆனா நமக்குள்ள ஒத்துமை முக்கியம். பிசிறு இல்லாம காரியம் நடக்கணும். சிவக்குமார் சென்னை போயிட்டு வர்றதுக்குள்ள நாம எவ்வளவு சுருட்ட முடியுமோ அவ்வளவு சுருட்டிடணும்."

"பட்டாலியன் போலீஸ் பார்த்தாக்க?"

"பார்த்தா என்ன... மூட்டைல நெல்லிக்காய் இருக்கு, அந்த காய் இருக்குன்னு சமாளிக்கணும். அதுக்கு தகுந்த மாதிரி இரண்டு நெல்லி மூட்டையையும் ஜீப்ல போட்டிருக்கீங்களா பார்."

சரவண மார்த்தாண்டன் கூற பின்பக்கம் திரும்பி சீட்டுக்கு கீழ் பார்த்த வானவராயன் கண்களில் அந்த நெல்லிக்காய் மூட்டை தென்பட்டது.

"சார் நீங்க சூப்பர் கிரிமினல் சார்."

என்று வழிய ஆரம்பித்தார் துரைசாமி.

49

'தா'ணுமாலய வனத்தில் ஆயிரத்துக்கும் மேல் சுயம்பு லிங்கங்கள் இருப்பது போலவே, திருமாலுக்கு உகந்த சாளக்கிராம கற்களும் மிகவே உள்ளது. அதேபோல பிரம்மாவுக்கு உகந்த தாமரைமலர்களும் மிக உள்ளது.

இவைகளை பார்ப்பதே பாக்கியம் சார்ந்த விஷயமாகும். சிலர் இவைகளை தங்கள் வசப்படுத்தி எடுத்துச் சென்று பூஜை செய்ய ஆசைப்படுவர். ஆனால் எல்லாராலும் இதை தாணுமாலய வனத்தில் இருந்து எடுத்துச் செல்ல முடியாது. சுயம்பு லிங்கங்களை இந்த மலையில் நந்திகேஸ்வரர் ரிஷபகாளை வடிவில் காவல் காக்கிறார். அந்த காளைகளிடம் இருந்து தப்பித்து அந்த லிங்கங்களை கொண்டு செல்ல முடியாது.

பக்தி மிகுதியில் சிலர் தவறாக நடந்து கொள்ளும் போது அவர்களை தடுத்து நிறுத்துவதே நந்தியின் பணியாகும். அதேபோல சாளகிராம கற்களை எடுத்துச் செல்ல முற்படுபவர்களை கருடன் வடிவில் இறைசக்தி தடுத்து நிறுத்த முயலும்...'

"ஸ்விஸ் பேங்குல இருக்கற நம்ம
நாட்டு கறுப்பு பணத்தை வெச்சு
இந்தியாவோட கடனை எல்லாம்
அடைச்சுட்டு தலைக்கு
பத்துலட்ச ரூவா பேங்குல
டெபாசிட் பண்ணலாமாம்.
அவ்வளவு பணம் இருக்கு..."

"காளிமுத்து இருந்த இடத்துக்கு நான்
வந்துருக்கேன். அதேசமயம் விஷயம்
சென்ட்ரல்வரை போயிடுச்சு. இந்த
தாணுமாலயக்காடு இனிமே
அமேசாமன் காடு, ஆரவல்லி மலை
மாதிரி ஒரு உலக விஷயமா மாறப்
போகுது..."

துரைசாமி சூப்பர் கிரிமினல் என்றதை சரவண மார்த்தாண்டனால் ஒரு பாராட்டாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. துரைசாமி தன்னை விமர்சிப்பது போலதான் தோன்றியது. அது சரவண மார்த்தாண்டனின் கண்களில் எதிரொலித்தது.

ஆனால் அது துரைசாமிக்கு தெரியவில்லை.

"சார்... எனக்கு தெரிஞ்சு இந்த கலிகாலத்துல நல்லதுக் கெல்லாம் காலமே இல்ல. தப்பு செய்யறவனுக்குதான் காலம். நீங்க நூறு இருநூறுன்னு லஞ்சம் வாங்கினாதான் மாட்டு வீங்க. அதுவே லட்சம் கோடின்னு போயிட்டா யாரும் எதுவும் பண்ணமாட்டாங்க. பாருங்க... ஸ்விஸ் பேங்குல

இருக்கற நம்ம நாட்டு கறுப்பு பணத்தை வெச்சு இந்தியாவோட கடனை எல்லாம் அடைச்சுட்டு தலைக்கு பத்துலட்ச ரூவா பேங்குல டெபாசிட் பண்ணலாமாம். அவ்வளவு பணம் இருக்கு. ஆனா எந்த கவர்மெண்டும் நடவடிக்கை எடுக்க மாட்டேங்குது. எல்லா கட்சிலையும் பெரண்டு பேர் கறுப்பு பணம் வெச்சிருக்கறதால இந்த விஷயத்துல அவங்க ரொம்ப ஒத்துமையா இருக்காங்க.

பத்திரிகைங்க கரடியா கத்தியும் புண்ணியமில்ல. இப்படிப்பட்ட நாட்டுல நேர்மையா வாழ்ந்தா வாழறவனுக்கும் புண்ணியமில்ல. அவன் குடும்பத்துக்கும் உபயோகமில்ல. ஆகையால இந்த மாதிரி நல்ல சந்தர்ப்பம் மாட்டும்போது ஒரு அமுக்கு அமுக்கிடணும். என்ன நான் சொல்றது?"

துரைசாமி அவ்வளவு நீளமாக பேசிய பிறகு அவர் வியாக்கியானிக்கவில்லை. நிஜமாகவே பாராட்டியிருக்கிறார் என்பது சரவண மார்த்தாண்டனுக்கு புரிந்து போனது.

"நூத்துல ஒரு வார்த்தை துரைசாமி... நான் டிபார்ட்மெண்டுல சேர்ந்து இருவது வருஷம் ஓடிப்போச்சு. நாலைஞ்சு வருஷத்துக்கு முந்தி சேர்ந்தவன்லாம் எனக்கு மேலதிகாரி. கேட்டா அவன் ஐபிஎஸ், ஐஎப்எஸ்னு படிச்சுட்டு வரானாம். அவ்வளவு படிச்சிட்டு வர்றவனுக்கு இந்த ஊர்ல தோதகத்தி மரத்துக்கும், மஞ்சக் கடம்பைக்கும் வித்தியாசம் தெரியல. மிளா மானைப் பார்த்துட்டு வரையாடுன்னு நினைச்சிருக்குங்கறான். அப்புறம் நான்தான் அது இல்ல சார் மானுன்னேன்... உடனே அவருக்கு ரோஷம் வந்துடுச்சு. என்னை தப்பின்னுல்லாம் கூப்பிடக் கூடாது சார்னு கூப்பாடு போடறாரும். நான் இங்க ஆபீசர்ங்கறான்...

நம்ப அன்பைவிட அவருக்கு அதிகாரம் பிடிச்சிருக்கு. இதை நான் யார் கிட்ட போய் சொல்ல முடியும்?"

வானவராயனும் தன் பங்குக்கு வாசித்தார். மூவரும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர். செய்யப் போவது தப்பு என்று

தெரிந்திருப்பதால் அது தப்பில்லை என்று முதலில் தங்க ளுக்கு சொல்லிக் கொள்வது ஒரு தேவையாகி விட்டது.

"பேசினது போதும். இனி காரியம் ரொம்ப முக்கியம். அசந்தா உசிர்போயிடும். அப்படித்தான் காளிமுத்து செத்துப் போய் உடம்பு கூட இன்னும் கிடைக்கல.

வாங்க... நாம முதல்ல ஒத்துமையா மேல ஏறி அந்த படகுல ஏறப்பார்ப்போம். துரைசாமி துப்பாக்கில ரவையை லோட் பண்ணி ரெடியா வெச்சுக்குங்க. முதலைகளால ஆபத்து உண்டு. அதுங்க வரும் போதே டுப்பு, டுப்புன்னு போட்டு தள்ளிடணும்.

அதேபோல வானவராயன்... நீங்க காட்டு நாயுங்கள கவனிச்சுக்கனும். நான் மூட்டையை கட்றேன். ஆளுக்கு ஒரு மூட்டை... சராசரியா நூறு கிலோவுக்கு குறையாது.

பாதி தேறினாலும் அம்பது கிலோ தங்கம். ஒரு கிலோ இன்னிக்கு 22 லட்சம். அம்பது கிலோவுக்கு 11 கோடி ரூபா...

விடக்கூடாதுய்யா..."

சரவண மார்த்தாண்டனிடம் பேச்சில் பேராசையும் வெறியும் மின்னியது.

அதே வெறியோடு தாங்கள் வந்த ஜீப்பை அங்கேயே நிறுத்திவிட்டு டிபார்ட்மெண்ட் தந்த மேப்பை கையில் எடுத்து விரித்து அதன்மேல் காம்பசையும் வைத்து திசை முதல் சகலத்தையும் பார்த்துக் கொண்டனர். நடுவில் கார்டுலெஸ் போன் பாதுகாப்பு போலீசாரின் ஒவ்வொரு அசைவையும் தெரியப்படுத்திக் கொண்டே இருந்தது.

அவர்களுக்கு உரிய கட்டளைகளை இட்டபடியே மூவரும் மதிகெட்டான் வனம் நோக்கி நடக்கத் தொடங் கினர். இடையில் சரவண மார்த்தாண்டனுக்கு அந்த மும்பைக்கார தாஹீரிடம் இருந்தே அழைப்பு.

"என்ன எஃப்ஆர்ஓ... நான் எப்ப அங்க வரட்டும்?"

"என்னது... நீங்க இங்கயா? நோ... நோ... அதான் நான் அது சாத்தியம் இல்லேன்னு சொன்னேனே..."

"ஏன் சாத்தியம் இல்ல? யார் இடைஞ்சலா இருக்கான்னு சொல்லுங்க. நான் அவங்களை என் பணத்தால அடிக்கறேன்..."

"தாஹீர்... இது டாப் சீக்ரெட்டான விஷயம். ஒரே ஒரு நபருக்கு மட்டும்தான் தெரிஞ்சிருக்கணும். அந்த வகைல காளிமுத்து இருந்த இடத்துக்கு நான் வந்துருக்கேன். அதே சமயம் விஷயம் சென்ட்ரல்வரை போயிடுச்சு. இந்த தாணு மாலயங்காடு இனிமே அமேசாமன் காடு, ஆரவல்லி மலை மாதிரி ஒரு உலக விஷயமா மாறப்போகுது.

இண்டியா கவர்மென்ட்டும் இதனால சர்வாதிகாரத்துக்கு மாறினா நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆகையால இதை நாம மட்டும் நம்ப வசப்படுத்தறதெல்லாம் சாத்தியமே இல்ல. ஸ்டேட்டும் சென்ட்ரலும் இதை தேசத்தோட சொத்தா டிக்ளேர் பண்றதுக்குள்ள எவ்வளவு அள்ள முடியுமோ அவ்வளவு அள்ளிடணும். அதுதான் இப்ப என் திட்டம். அதை முடிச்சுட்டு நானே கூப்பிடறேன். அவசரப்பட்டு இந்த காட்டுப்பக்கம் வந்து எங்க டிபார்ட்மெண்ட் கண்ணுல பட்டு மாட்டிக்காதீங்க.

உங்க போட்டோவை முந்நூத்தி அறுவது டிகிரியிலயும் விஷுவலைஸ் பண்ணி போட்டோஸ் ரெடியாகிட்டு இருக்கு. அது மெயில் ஆயிட்டா நீங்க மும்பைல கூட காலம் தள்றது கஷ்டம். அவசரப்படாம அமைதியா இருங்க" பேசி முடித்து விட்டு ஓடி வந்து வானவராயனிடமும், துரை சாமியிடமும் சேர்ந்து கொண்டு நடக்க ஆரம்பித்தார் சரவணமார்த்தாண்டன்.

நான்கு பேருமே பெரும் ஏமாற்றத்தில் இருந்தனர். குறிப்பாக ரேகா. திலீப் கூட சலனப்பட்டான். ஆனால் நட்ராஜிடம் ஒரு உற்சாகம்.

"நான் முதன் முதலா சொன்னதுதான் சரி. இந்த வானத்து மனுஷங்க கிரிமினலுங்க, ஃப்ராடுங்கன்னு நினைச்சதுதான் சரி. இப்ப அது புரூப் ஆயிடுச்சு. பெருசா கிளம்பிப்போகும் போது எங்கள நினைச்சாலே போதும் நாங்க வந்து நிப்போம்... எங்க தவ சக்தி அப்படிப் பாதுன்னு சொன்னாங்களே... சொன்ன மாதிரி வந்தாங்களா?"

"வரலைல்ல?"

கையை ஆட்டி கேட்டான் நட்ராஜ்.

"அதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு... ஆனா அவங்க வராம இருக்கிறதுக்கு பின்னால நிச்சயம் ஏதோ சரியான காரணம் இருக்குங்கற மாதிரியும் நான் நினைக்கறேன்" என்றாள் ரேகா.

"குப்புற விழுந்தும் கூட மீசைல மண் ஒட்டலைங்கற மாதிரி பேசாத ரேகா. எனக்கென்னவோ அவங்க சாயம் வெளுக்கப் போற நேரம் வந்துட்டாதான் தோணுது. நீ வேணா பார்... அந்த சரவண மார்த்தாண்டன் அவங்களை அரெஸ்ட் பண்ணி அவங்களை சட்டம் முன்னால நிறுத்தும் போது எல்லா உண்மையும் வெட்ட வெளிச்சமாயிடும்."

நட்ராஜ் சொன்னதைக் கேட்டு ரேகா முகத்தில் குப்பென்று ஒரு திகைப்பு.

"என்ன ரேகா?"

"நீ சொன்னதுல எனக்குள்ள ஒரு எண்ணம்."

"என்னன்னு சொல்லு..."

"ஒரு வேளை அந்த ஆபீசர் அவங்களை அரெஸ்ட் பண்ணியிருந்தா கூட அவங்க வர முடியாது. அப்படி ஒரு வேளை நடந்துருக்குமா?"

"இல்ல... அவங்களை பிடிக்க முடியாது. அவங்க சாதாரணமானவங்க கிடையாது. நீ சொல்ற மாதிரி இருக்காது" என்று வள்ளியம்மை பட்டவர்த்தனமாக பட்டவர்த்தனமாக பட்டவர்த்தனமாக

"எதுக்கு சந்தேகம்... நான் போய் பார்த்துட்டு வரேன்..." என்று ரேகா புறப்பட யத்தனித்தாள்.

"ரேகா... நீ தனியா கிளம்பிட்டியா?"

"ராத்திரியிலயே போயிட்டு வந்தாச்சு. இப்ப பகல் வெளிச்சம்தானே... போதாக்குறைக்கு திரும்பின பக்கம் எல்லாம் போலீஸ் ரோந்து வேற... எனக்கு என்ன பயம்?"

"வேண்டாம்... கோவிந்தன் வரட்டும் நான் இருசனை பத்தி சொல்றேன். அவனோட வேணும்னா வெளியே போக லாம்..."

"இருசனா... யார் அந்த நீலி புருஷன் தானே?"

"அவனேதான்... பாவம் நீலி காணாம போகவும் அவன் ரொம்ப நொந்து போயிட்டான். இங்க வந்து கிட்டிருந்தவன். இப்ப என்ன செய்யறான்னும் தெரியல" என்றாள் வள்ளியம்மை.

"அக்கா நீங்க பயப்படாதீங்க. எனக்கு எதுவும் ஆகாது. வானத்து மனிதர்கள் ஏன் வரலைங்கறதுக்கு எனக்கு பதில் கிடைச்சிருச்சே தீரணும். அவங்க மேல நமக்கு ஏற்பட்டுருக்கற நம்பிக்கை மரியாதை பத்திங்கற எந்த ஒரு விஷயத்துக்கும் எந்த பங்கமும் ஏற்பட கூடாது. நான் வரேன்..."

ரேகா துணிச்சலாக கிளம்பிவிட்டாள். நல்ல வேளை வாசல் எதிரில் கோவிந்தன் வந்து கொண்டிருந்தான். ரேகாவின் புறப்பாட்டை பார்த்து ஆச்சரியமானவன். "என்னம்மா எங்க கிளம்பிட்டீங்க" என்றான்.

"அது இருக்கட்டும். வானத்து மனுஷங்களை உங்க டிபார்ட்மெண்ட்டுல அரெஸ்ட் பண்ணிட்டாங்களா?"

"என்னது... அவங்களை அரெஸ்ட் பண்றதா... என்ன விளையாடறீங்களா?"

"விளையாட ல கோவிந்தன். இது சீரியசான கேள்வி தான். என் கேள்விக்கு பதில்..."

"அப்படி எதுவும் நடக்கல. நடக்கவும் முடியாதும்மா. அதுலயும் நம்ப சார் சென்னை போயிருக்கற இந்த நேரத்துல அதுக்கெல்லாம் வாய்ப்பே இல்ல."

"ரொம்ப சந்தோஷம்... அதே சமயம் எனக்கு ஒரு சந்தேகம். அவங்களை நினைச்சாலே அவங்க வருவாங்க தானே?"

"ஆமாம்... அப்படித்தான் நான் கேள்விப்பட்டுருக்கேன்."

"ஆனா இப்ப நான் நினைச்சேன். அவங்க வரலையே..."

"சும்மா நினைச்சால்லாம் வரமாட்டாங்கம்மா. அவங்களுக்கு ஒரு மந்திரம் இருக்கு. அதை சொன்னீங்களா?"

"மந்திரமா?"

"ஆமா... அது தெரியாதா உங்களுக்கு?"

"தெரியாதே..."

"அதான் வரல போல இருக்கு."

"போகட்டும். அவங்களை இப்ப நான் பாக்கணும். சில கேள்விகளையும் கேட்கணும். அதுக்கு என்ன வழி?"

"ரொம்ப சுலபம்... நம்ப மூப்பரை சந்திச்சு அவங்களை பாக்க விரும்புறதைப் பத்தி சொன்னா போதும். அவங்களை அவர் வரவழைச்சிடுவார். அன்னிக்கு யானைங்க தாக்க வந்தப்பவும் அப்படிதானே நடந்தது...?"

கோவிந்தன் சரியாகவே எடுத்துக் கொடுத்தான்.

"அப்ப வாங்க கோவிந்தன் போய்முதல்ல மூப்பரை பார்ப்போம்..." என்று வேகமெடுத்தாள் ரேகா.

"ரேகா நில்லு. நீ தனியா போகாத. நானும் வரேன்" என்று வள்ளியம்மையும் அவளோடு சேர்ந்து செல்லத் தொடங்கினாள்.

நட்ராஜ் 'ச்சே...' என்று கையை உதறிக் கொண்டான். மீரா யோசனையிலேயே இருந்தான்.

வெளியே அவர்களை கோவிந்தன் தான் வந்த ஜீப்பில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். புறப்பட்ட அந்த வினாடியில் எதிரில் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக விசுக்கென்று அகோரசாமி தோளில் ஒரு பெண் பிணத்துடன் கடந்து போயிற்று. முதல் தடவையாக அந்த பெண் உடலிலிருந்து ஏதோ ஒன்று கீழே விழுவதும் தெரிந்தது.

50

'வேதங்கள் நான்கு என்பதை அறிவோம். இதில் அதர்வண வேதம் காம்யார்த்த காரியங்களுக்கான சக்தியை தரவல்லது. இதற்குள்தான் மாந்திரீகம் சார்ந்த விஷயங்கள் புதைந்துள்ளன. இதை கவனமாகக் கற்று பயன்படுத்த வேண்டும். ராணுவத்தில் உள்ளவர்கள் அதிக அழிவை தரும் விஷயங்களை கையாளுவது போல இதனிடம் மிக கவனமாக நடந்து கொள்ளவேண்டும்.

இந்த மாந்திரீகம் சார்ந்த விஷயங்களுக்கு மூலிகைகளும் சில சமயங்களில் தேவைப்படும். இந்த மூலிகைகள் எல்லா இடங்களிலும் வளர்ந்து விடாது. வளர்க்கவும் முடியாது. 'பேயடக்கி' என்றொரு மூலிகை இருந்தது. அது கையில் இருந்தால் அலைந்து திரியும் பேய்களை கண்ணால் ஒருவர் பார்க்க முடியும். பார்ப்பதோடு அதை தன் வசப்படுத்தி அடக்கவும் முடியும். இந்த 'பேயடக்கி' தாணுமாலய வனத்தில் உள்ளது. ஆனால் இதை கண்டறிவது அசாதாரணம்!'

"அந்த பிணம் இந்த வனத்துல
செத்த பெண்ணாதான்
இருக்கணும். சமீபமா செத்தது
வங்கியும், நீலியும்தான்...
அப்படின்னா அகோரசாமி
தோள்ல கிடந்த பிணம் வங்கி
அல்லது நீலியா இருக்குமோ?"

"ஆறுகள்ல மணலைத் திருடி எல்லா
ஆறுகளையும் ஒழிச்சு கட்டிட்டோம்.
காடுகளை வெட்டி ஒரு பக்கம் அழிச்சுட்டு
இருக்கோம். நிலக்கரியை
தோண்டி எடுத்து அதுல சரி பாதியை
எரிச்சு சாம்பலாக்கிட்டோம்."

அகோரசாமி வேகமாக மறைந்து விட்டது. அதன் மேல் இருந்த ஒரு பெண் பிணத்திடம் இருந்து விழுந்த பொருளை ரேகா கவனித்து விட்டாள். அதை திடீர் என்று பார்த்த அதிர்வில் இருந்து வள்ளியம்மை விடுபடவில்லை. சிலை போல அப்படியே ஜீப்பில் அமர்ந்து விட்டாள்.

சிலபல வினாடிகள் இருவரும் அப்படியே அமர்ந்து விட்ட நிலையில் ரேகாதான் முதலில் விடுபட்டாள். மெல்ல கீழே விழுந்த அந்த பொருள் அருகே சென்று குனிந்து அதைக் கையில் எடுத்தாள். அது மரத்துண்டால் செய்யப்பட்ட ஒரு க்ளிப். தலைவாரிப் பின்னும் போது கூந்தலை கட்டிப்போட பயன்படுத்துவது. ரேகா அதை கையில் எடுத்து ஆச்சரியத்தோடு பார்த்தாள். மெல்ல பின்னால் வந்த வள்ளியம்மையும் பார்த்தாள். கோவிந்தனும் ஜீப்பை விட்டு இறங்கி வந்தான்.

"என்ன ரேகா இது?" வள்ளியம்மை கேட்டாள்.

"தலை வாரும் போது பயன்படுத்தற ஹேர் கிளிப் மேடம்..."

"அப்ப அதுதான் தலைல இருந்து விழுந்ததா?"

"பாருங்க..." ரேகா வள்ளியம்மையிடம் தர கோவிந்த னும் அதை கவனித்தவனாக, "இது அந்த நாடிமுத்து கொண்டு வந்து விக்கற க்ளிப் ஆச்சே?" என்றான்.

"அது யார் நாடிமுத்து?"

"அவன் ஒரு சிறு வியாபாரிம்மா. வளையல், ரிப்பன்னு விக்கறவன். சொல்லப்போனா செத்துட்ட வங்கியோட காதலன்!"

"என்ன கோவிந்தன் சொல்றீங்க... வங்கிக்கும் நாடி முத்துக்கும் காதலா?"

"ஆமாம்மா... ஒரு நாள் அவ அவன் கூட காட்டை விட்டே ஓடத் தெரிஞ்சா. அப்படி ஓடியிருந்தா கூட பரவா யில்லை. எங்கையாவது உயிரோடையாவது இருப்பா. இப்ப செத்த பொணத்தைக் கூட பாக்க முடியாத படில்ல..."

என்று சொல்ல வந்தவன் பேச்சை நிறுத்தி நெற்றியை சுருக்கிக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தான்.

"என்ன கோவிந்தா ஏதோ சொல்ல வந்து நிறுத்திட்ட?"

"இல்ல... இந்த க்ளிப் ஒரு பெண்ணோட பிணத்து தலைல இருந்து விழுந்துருக்குதுன்னா அந்த பிணம் இந்த வனத்துல செத்த பெண்ணா தான் இருக்கணும். சமீபமா செத்தது வங்கியும், நீலியும்தான்... அப்படின்னா அகோரசாமி தோள்ல கிடந்த பிணம் வங்கி அல்லது நீலியா இருக்குமோ?"

அவன் கேள்வியாக கேட்டுக் கொண்டு இருவரையும் வெறிக்கவும் அவர்கள் அதைக் கேட்டு பதிலுக்கு வெறித் தனர்.

ஆனால் ரேகாவால் அதை ஏற்க முடியவில்லை. அவள் பேயடிப்பள்ளத்தை நேரில் பார்த்தவள். அங்கே வீசப்பட்ட உடம்புகளை பிணம் தின்னும் நாய்களும், கழுகுகளும்

நிச்சயம் விட்டு வைத்திருக்காது. அப்படி இருக்க நீலி, வங்கி உடம்பை எப்படி அகோரசாமி சுமக்க முடியும்?

"இல்ல கோவிந்தன்... சான்சே இல்ல. இந்த க்ளிப்பை இந்த வனத்துல இருக்கற வேற பெண்கள் கூட நாடி முத்துகிட்ட இருந்து வாங்கியிருக்கலாம்தானே?" என்று திருப்பிக் கேட்டாள்.

"கோவிந்தா நீ முதல்ல ஜீப்பை எடு... இங்க நின்று பேச எனக்கு பயமா இருக்கு. ஜீப்ல போய்க்கிட்டே பேசுவோம்..." என்று ஓடிப்போய் ஜீப்பில் ஏறி அமர்ந்தாள் வள்ளியம்மை.

ஜீப் புறப்பட்டது.

"கோவிந்தன் அது நீலியோ, வங்கியோ இல்ல. வேற யாரோதான்..." என்றாள் ரேகா.

"சரிம்மா... வேற யாரா இருந்தாலும் அவங்க இந்த காட்டை சேர்ந்தவங்களாத்தான் இருக்கணும். மூப்பரை சந்திக்கும் போது அது யார்னு தெரிய வரலாம்..." என்ற படியே ஜீப்பின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

வழியில் ஆங்காங்கே கூடாரங்கள் தென்பட்டன. கூடாரத்துக்கு வெளியே வனக்காவல் படைவீரர்கள் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தனர். வழக்கமாக வனக்குடியர்கள்தான் கண்ணில் படுவார்கள். வாழைத்தார், பாக்கு மட்டை, பலாப்பழம் என்று ஏதாவது ஒன்று அவர்கள் கையில் இருக்கும். அவர்களைப் பார்க்கவும் அவர்களும் பணிவாக 'வந்தனமுங்க' என்று நல்ல தமிழில் பதில் வணக்கம் சொல்வார்கள். இப்போது அவர்களில் ஒருவரை கூட பார்க்கமுடியவில்லை. அந்த காடே போலீசார் வசம் வந்துவிட்டது போல தோன்றியது. அங்கங்கே தண்ணீர் பாட்டில்கள், காலி சிகரெட் பாக்கெட்டுகள் கண்ணில் பட்டன. அது போக கசக்கி எறியப்பட்ட காகிதங்கள்...

ரேகாவை அந்தக் காட்சிகள் பெரிதும் பாதித்தன.

"கோவிந்தன் உங்க டிபார்ட்மெண்ட் ரொம்ப மோசம்" என்றாள்.

"ஏம்மா இப்படி சொல்றீங்க?"

"வேற எப்படி சொல்றது... பாதுகாக்க வந்ததா சொல்லி இடு பாழாக்க தொடங்கிட்டீங்க... எங்க பார் சிகரெட் புகை, பியர்பாட்டில், பாக்கெட்டுன்னு குப்பைங்க..."

"எல்லாம் கொஞ்ச நாளைக்கு தாம்மா, எல்லா மர்மமும் தெளிவாயிட்டா எல்லாரும் போயிடப்போறாங்க..."

"எனக்கு அப்படி தோணலை..."

"வேற எப்படிம்மா தோணுது?"

"இந்த காட்டுல தங்கச் சுரங்கம் இருக்கறது உறுதியாயிட்டா இன்னும் கூடுதலா போலீஸ் வரும். இந்த காடே மாறிப் போயிடும்."

"அதுக்கென்னமா பண்ண முடியும். தங்கம்னா சும்மாவா? பாதுகாக்கணுமில்ல...?"

"என்னத்த பாதுகாக்க போறீங்களோ? அதனால நல்லமையை விட தீமைதான் அதிகம். அது என்ன மனிதன் உயிர் வாழ கட்டாயமான அரிசி, தண்ணி மாதிரியா? இது இல்லேன்னா மனித இனம் அழிஞ்சிடும்கறதுக்கு... இது ஒரு லக்ஸ்ட்லியான மெட்டல். அவ்வளவுதான்."

"அப்ப இந்த தங்கச்சுரங்கம் பத்தின உண்மை தெரியாம ரகசியமாவே இருந்திருந்தா நல்லதுன்னு சொல்ல வர்றீங்களா?"

"அதுல என்ன சந்தேகம்? மனுஷன் பயன்படுத்த ஒரு விஷயம் அகப்பட்டா அவ்வளவு தான் அதோட கதி. ஏற்கனவே ஆறுகள்ல மணலைத் திருடி எல்லா ஆறுகளையும் அழிச்சு கட்டிட்டோம். காடுகளை வெட்டி ஒரு பக்கம் அழிச்சுட்டு இருக்கோம். நிலக்கரியை தோண்டி எடுத்து

அதுல சரி பாதியை எரிச்சு சாம்பலாக்கிட்டோம்... எங்கேயும் புதுசா ஒரு விஷயத்தை கூட உருவாக்கல. ஆனா அழிச்சுகிட்டு வர்ற விஷயங்களுக்கு அளவே கிடையாது. கேட்டா மனித இனம் அப்புறம் எப்படி 'சர்வைவ்' ஆக முடியும்னு திருப்பி கேட்கறோம்..." ரேகா விட்டால் உலக கோர்ட்டில் வழக்கு தொடருவாள் போல் தோன்றியது.

அதற்குள் மூப்பர் இருக்கும் இடமும் வந்துவிட்டது முன்பெல்லாம் குடிசைகளுக்கு வெளியே கட்டிலில் எல்லாரும் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இப்போது யாரையும் காணவில்லை. போலீஸ் நடமாட்டம் அவர்களை உள்ளடக்கிவிட்டது. மூப்பர் கூட குடிசைக்குள் சுருண்டு படுத்திருந்தார். கோவிந்தன் போய் அழைத்து வந்தான். ரேகாவும் வள்ளியம்மையும் அவரை வணங்கினார்கள்.

"ஐயா... வணக்கம்..."

"நல்லதும்மா... எங்க இவ்வளவு தூரம்?"

"உங்களால ஒரு விஷயம் ஆகணும்..."

"என்னாலையா?"

"ஆமாம்யா... நாங்க வானத்து மனுஷங்களை உடனே பாக்கணும். ரொம்ப அவசரம்..."

"ஆனா அவங்க இனி இந்த காட்டுல எங்களுக்கு இடமில்லைன்னு கிளம்பி போயிட்டாங்களே..."

மூப்பர் பதில் அவர்களை திகைக்க வைத்தது.

"போயிட்டாங்களா?"

"ஆம்மாம்மா-என்கிட்ட சொல்லிட்டுதான் போனாங்க."

"எங்க போனாங்க?"

"பக்கத்து வனத்துக்கு போறோம்னாங்க..."

"பக்கத்து வனம்னா?"

"அது ஒண்ணும் பெரிய வனமில்ல. சின்னதா ஒரு காடு டுப்பகுதிதான். வண்ணாத்திக்காடுன்னு நாங்க சொல்லுவோம். பருவக்காலங்கள்ல வண்ணாத்தி பூச்சிங்க அங்க இருந்து நிறைய வரும். அதனால அதுக்கு அந்த பேர்... ஆனாலும், நாங்கெல்லாமும் அங்க போனாலும் போயிடுவோம்..."

"எதனால இந்த முடிவு?"

"இனி இந்த வனத்துல எங்களால வாழ முடியாதும்மா. பயமும் மூடியிருக்கிற வரைதான் மகத்துவம். கடவுளே கூட கண்ணுக்கு தெரியாத வரைதான் அவருக்கு மதிப்பு. தெரிஞ்சா அப்புறம்னு மனசு அடுத்ததை தேட ஆரம்பிச்சுடும்."

"புரியுதுய்யா... ஆனா இன்னும் பல கேள்விக்கு எங்களுக்கு விடை தெரியணும். அதுக்குதான் வானத்து மனுஷங்க கிட்ட பாக்க விரும்பறோம்."

"அவங்க போயிட்டாங்க. இனி அவங்களா விரும்பி வந்தாதான் உண்டு. நாம பார்க்க முடியாது. உங்களுக்கு என்ன தெரியணும். என்கிட்ட கேளுங்க. தெரிஞ்சா சொல்றேன்..."

"அப்படின்னா யார் இந்த அகோரசாமி. இவர் தோள்ல ஒரு பொண்ணத்தோட சுத்தறாரு. இப்ப கூட ஒரு பெண் சவத்தை பார்த்தோம். அந்த பிணம் தலைல இருந்து இந்த ஹேர்கிளிப் கிடைச்சது. இது உங்க இனத்து பெண்கள் பயன்படுத்தற ஹேர்க்ளிப். நாடி முத்து வித்த ஹேர்க்ளிப்..."

ரேகா ஹேர்க்ளிப்பை காட்டி அவரிடம் கேட்ட போது நாடி முத்துவே அங்கு வந்து கொண்டிருந்தான்.

51

'தாணுமாலய வனத்தில் மாந்திரீகத்துக்கு உதவும் 'பேயடக்கி' மட்டுமல்ல, மஹா மிருத்யுஞ்சய ஹோமத்தில் போடப்படும் சீந்தல் கொடியும் இந்த வனத்தில் மிகுதி. மஹாமிருத்யுஞ்சய ஹோமம் என்பது உடல் ஆரோக்ய நிமித்தமாகவும், எமபயம் இல்லாதிருக்கவும் செய்யப்படும் ஹோமமாகும். இதில் சீந்தல் கொடியை ஒரு முழு நீளத்துக்கு துண்டு துண்டாக வெட்டி, எரியும் ஹோம நெருப்பில் போடுவார்கள். பசுமையான தாவர இனத்தைச் சேர்ந்த அந்தக் கொடி தீயில் மற்ற மூலிகைகளுடன் கூடி எரியும். அப்போது புகை பெருமளவு உருவாகும். இந்தப் புகையில்தான் ரகசியம் உள்ளது.

பொதுவாக புகை மனிதனுக்குப் பகை!

ஆனால், இந்த ஹோமப் புகை அப்படியல்ல... நோயுற்றவர்கள் இதை சுவாசிக்கையில் அவர்கள் உடம்பில் இது விஷத்தை முறித்து நோய்க்கிருமி களை அழித்து அற்புதம் செய்கிறது'

"இருசன் வந்துட்டு போனது நல்லா
தெரிஞ்சுச்சு. அவன் எப்பவும்
தலைல கட்டுற உருமாத்துண்டு
அங்க கீழே கெடந்துச்சு.
அதுக்குப் பிறகு நான் இருசனை
தேடி அலையோ அலைன்னு
அலைஞ்சேன்..."

அப்போது அங்க வந்த நாடிமுத்து பார்க்க பஞ்சத்தில் அடிபட்ட பரதேசி போல இருந்தான். உடம்பில் உடை எல்லாம் கிழிந்து தலை கலைந்து பரிதாபமாகத் தெரிந்தான். அவன் தோளில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் வளையல் பெட்டியை காணவில்லை. காலில் வினோதமாய் கூ ஷூ அணிந்திருப்பான். அதுவுமில்லை. மொத்தத்தில் தள்ளாடியபடி வந்தவன் ரேகாவின் கையில் இருந்த கிளிப்பை பார்த்துக் கொண்டே வந்து அதை அவளிடம் இருந்து வேகமாய் பறித்தான். பின் உற்று உற்று பார்த்தான். பார்த்தவன் முகத்தில் பலவிதமான உணர்ச்சிகள். கோவிந்தன் அதை துல்லியமாகக் கவனித்தான்.

"இந்த கிளிப் நீ வித்ததுதானே?"

"ஆமா... நான் வித்ததுதான். ஆமா இதை நான் வங்கிக்கும், நீலிக்குமுல்ல வித்தேன். இது இந்த பொண்ணு கைல எப்படி?"

"அப்படி வா வழிக்கு... நானும் அதையே தான் நினைச்சேன்... அப்ப அகோரசாமி தோள்ள கிடந்தது நீலியோ, வள்ளியோதான்..." என்றான் கோவிந்தன்.

"என்ன கோவிந்தண்ணே சொல்ற... அகோரசாமியை பார்த்தியா?"

"பாக்கப் போய்தான் இது கிடைச்சுச்சு..."

"அப்ப நீலி, வங்கி பொணம் காணாப் பொணம் ஆகலையா... அவங்க உடம்பை நாய் நரிங்க திங்கலையா?"

"ஆமா... நீ ஏன் இப்படி பஞ்சத்துல அடிப்பட்டவன் மாதிரி இருக்க... முதல்ல அதுக்கு பதிலைச் சொல்லு..."

"அதை நான் எப்படிண்ணே சொல்வேன்... வங்கி மேல நான் உசுரையே வெச்சிருந்தது உனக்கும் தெரியும். ஆனா அவ உசுரோட இல்ல. அவளை வீரன் கொன்னுட்டான்னு எனக்குத் தெரியவரவும் நான் நொந்து நூலாயிட்டேன். வங்கி

உடம்பை எப்படியாவது பாத்துடணும்னு நான் ரொம்பவே துடிச்சேன். இருசனும் நீலி உடம்பைத் தேடி பேயடிப்பள்ளம் பக்கம் போனதை தெரிஞ்சுக்கிட்டு நானும் போனேன். ஆனா நான் போய் பார்த்தப்ப அங்க பொணங்களில்லை. ஆனா இருசன் வந்துட்டு போனது நல்லா தெரிஞ்சுச்சு. அவன் எப்பவும் தலைல கட்டுற உருமாத்துண்டு அங்க கீழே கெடந்துச்சு. அதுக்குப் பிறகு நான் இருசனை தேடி அலையோ அலைன்னு அலைஞ்சேன். ஆனா இருசன் என் கண்ணுலயே படலை. இடைல கற்பக மரத்தையாவது எப்படியாவது பாத்துட மாட்டோமான்னு துடிச்சேன். ஆனா காட்டுல புதுசா நுழைஞ்சிருக்கற போலீஸ்காரங்க என் கண்ணுல பட்டாங்க. அவங்களும் என்னை சும்மா விடல. கொட கொடன்னு குடைஞ்சாங்க. அவங்கிட்ட இருந்து தப்பிச்சு பிழைச்சு ஓடி வர்றேன்..."

நாடிமுத்து தந்த அந்த நீண்ட விளக்கம் கோவிந்தனை மட்டுமல்ல, ரேகா, வள்ளியம்மை, மூப்பர் என்று சகலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"எலேய்... நீ சொல்றதை பார்த்தா வங்கி, நீலி இரண்டு பேர் பொணமும் இருசன் தூக்கிட்டு போயிட்டாங்கற மாதிரில்ல அர்த்தமாகுது..." கோவிந்தன் கேட்க

"அதுக்கு நிச்சயம் வாய்ப்பிருக்குது கோவிந்தண்ணே... இருசன் நீலி மேல உசுரையே வெச்சிருந்தான். அவ பொணத்தை நிச்சயம் அவன் எடுத்துருப்பான்னுதான் இப்ப நினைக்க தோணுது..."

"ஆனா பொணம் கிடந்தது அகோரசாமி தோள்ள... அதை மறந்துடாதே..."

"இங்கதான் எனக்கும் இடிக்குது..." நாடிமுத்து தாடையை தேய்த்துக் கொண்டான்.

"ஐயா... இந்த காட்டுலேயே பிறந்து இந்த காட்டை விட்டே வெளியே போகாம வாழ்ந்து வர்றவர் நீங்க. உங்க

"நான் ஒரு கேள்வி கேட்க விரும்பறேன். யார் இந்த அகோரசாமி? உங்களுக்கு நிச்சயமா பதில் தெரிஞ்சிருக்கணும்..." என்றாள் ரேகா.

மூப்பர் மவுனம் சாதித்தார்.

"பெருசு... அதான் இந்தக் காடே வேண்டாம்னு வண்டியத்திக் காட்டுப்பக்கம் போகப்போறீங்கள்ல. உங்களுக்கு தெரிஞ்ச உண்மையை சொல்லக் கூடாதா?" என்று கோவிந்தனும் நிமிண்டினான். மூப்பரும் வாய் திறந்தார்.

"என் வரைல இந்தக் காடு இனி வழக்கமான மத்த காடுபோலத்தான். வானத்து மனுஷங்க அவங்களால முடிஞ்ச அளவு இந்தக் காட்டை காப்பாத்தினாங்க. எப்ப அவங்களே இனி இங்க நமக்கு இடமில்லன்னு கிளம்பிட்டாங்களோ அப்பவே எங்களுக்கும் இடமில்லன்னுதான் அர்த்தம். எங்களுக்கே இடமில்லாத போது அகோரசாமி மட்டும் இங்க சஞ்சாரம் பண்ண முடியுமா என்ன? அதுவும் காணா போயிடும். கவலையை விடுங்க..." என்றார் மூப்பர்.

"நாங்க என்ன கேட்டோம். நீங்க என்ன சொல்றீங்க? அகோரசாமி யார்னு தெரியுமா? அது ஒரு மனுஷன்தானே..."

கோவிந்தன் திரும்புவும் கேட்டான்.

"ஆமாம்... மனுஷன்தான்..." மூப்பர் ஒப்புக் கொண்டார்.

"மனுஷனா... அப்ப அது சாமி இல்லையா?" கோவிந்தன் முகத்தில் பலத்த ஏமாற்றம் பரவ ஆரம்பித்தது.

"சாமிதான்... ஆனால் மனுஷ சாமி..." மூப்பர் பதில் குழப்பியது.

"மூப்பரே ஏன் இப்படி குழப்பறீர்? மனுஷன்தான் ஆனா சாமின்னா எப்படி?"

"சொல்றேன்... அதுக்கு முந்தி உங்களுக்கெல்லாம் இந்த வனத்தோட புராண சம்பந்தப்பட்ட விஷயங்கள் தெரிஞ்சிருக்கணும்."

"இப்ப நாங்க இருக்கற நிலைல கதைக் கேட்கற பொறுமை எல்லாம் எங்களுக்கு கிடையாது மூப்பரே அகோரசாமி யாருங்கற கேள்விக்கு வெட்டு ஒண்ணு, துண்டு இரண்டுன்னு ஒரு பதிலை முதல்ல சொல்லுங்க."

"என்னத்தை சொல்றது... அகோரசாமியா தன்னை வரிச்சு கிட்டு கற்பக மரத்தை தேடி அலையற நம்பளை போல ஒரு மனுஷன்தான் அகோரசாமி."

"அவன் வெளில இருந்து வந்தவனா, இல்ல உங்கள்ல ஒருவனா?"

"அது காலத்துக்கு தகுந்த மாதிரி மாறும். எங்க ஆளுங்க அகோரசாமியானதும் உண்டு, வெளில இருந்தும் வந்தவங்க உண்டு."

"அப்படின்னா அவன் தோள்ல எதுக்கு பொணம்?"

"அதுக்குதான் புராணகதை தெரியணும்னேன்..."

"சரி சுருக்கமா சொல்லுங்க..."

"ஆதிகாலத்துல இந்த வனத்துல முனிவர்கள் தவம் இருந்தாங்க. ஆகாசத்து இந்திரன் கூட இந்த வனத்து அன்ன வாவி அதாவது இப்ப தங்கம் இருக்கறதா சொல்லப்பட்ற மதிகெட்டான் வனத்துக்கு மேல் உள்ள ஏரிக்கு வந்து போவானாம்! அப்படிப்பட்ட இந்த வனத்துல ஒரு மகரிஷி தவம் செய்து பிரம்மா அவருக்கு பிரத்யட்சமானார். அவர் பிரம்மா கிட்ட எனக்கு கற்பகமரம்தான் வேணும்னு கேட்டார்."

"பிரம்மாவோ அது கஷ்டம், நீ வேற வரம் கேள்னு சொன்னார்."

"இல்ல எனக்கு கற்பக மரம்தான் வேணும்னு சொல்ல வும் பிரம்மாவும், ஒரு கற்பக மரம்தான் இருக்கு. அது இந்திர லோகத்துல இருக்கு, அதை தர எனக்கு அதிகாரமில்ல. ஆகையால அந்த மாதிரி ஒரு கற்பக மரத்தை நான் என்

சக்தியால உருவாக்கி தரேன்னு சொன்னார். அந்த முனிவரும் சரின்னு சம்மதிச்சார். பிரம்மாவும் கற்பக மரத்தை தர தயாரானார். அதைப் பார்த்த இந்திரன் பிரம்மா கிட்ட கோபப்பட்டான். கற்பகமரம் ஒண்ணே ஒண்ணுதான் இருக்க வேண்டும். ஒரு சிவன், ஒரு பிரம்மா, ஒரு விஷ்ணு மாதிரி ஒரு கற்பகமரம்தான்... ஆகையால இன்னொரு மரம் கூடாதுன்னு சொன்னான். பிரம்மாவோ நான் வரம் தந்துட்டதால அதை மாற்ற முடியாது. வேணும்னா அதுல ஒரு திருத்தம் செய்துக்கறேன். அது ஒரு இடத்துல இருக்காது. இடம் மாறிக்கிட்டே இருக்கும்னு சொல்லிடறேன்னார்...”

அதனால எனக்கு எந்த புண்ணியமுமில்ல. இந்த முனிவர் அது இருக்கற இடத்துக்கிட்ட போய் தனக்கு தேவையானதை கேட்டு வாங்கிடுவார். ஒரு நாள் நான் இந்திரனாகணும்னு பதவியை கேட்டு வாங்கி என் பதவிக்கே வேட்டு வெச்சிடலாம். ஆகையால அந்த மரம் யாருக்கும் பயன்படக் கூடாதுன்னான் இந்திரன்.

ஆனா பிரம்மா சம்மதிக்கல. கேட்கறதை எல்லாம் தந்தாதான் அது கற்பக மரம். இல்லேன்னா அது சாதாரண மரமாயிடும். அப்படி என்னால வரம் தர முடியாதுன்னார்.

வரம் கேட்ட முனிவரும் இந்திரன் கிட்ட சண்டைக்கு போயிட்டார்.

“இந்திரா நீ என் தவத்துக்கு குறுக்க நின்னு கெடுக்கற. உனக்கு நான் சாபம் தரேன். நீ கோரமா மாறி இந்த காட்டையே சுத்தி வா. சும்மா சுத்தி வந்தா உனக்கு வலி தெரியாது. உன் தோள்ள ஒரு பிணம் கிடக்கட்டும். பிணத்தோட நீ சுத்தி வந்துட்டே இருக்கணும்னு சாபம் கொடுத்துட்டாடர். இந்திரனும் கோரமா மாறி பிணத்தோட சுத்த ஆரம்பிச்சான். பிரம்மாவும் கற்பக மரத்தை சொன்னபடி தந்தார். அந்த மரமும் இந்த காட்டை சுத்தி வர ஆரம்பிச்சது.

இதுதான் கற்பக மரத்துக்கும் அகோரசாமிக்கும் பின்னால இருக்கற கதை...!"

மூப்பர் சொல்லி விட்டு சற்று செருமினார்.

52

'தாணுமாலய வனத்தில் பட்சிக் கோட்டம் என்று ஒரு பகுதி உண்டு. இங்கே பிரமாண்டமான மஞ்சக் கடம்பை மற்றும் தேவதாரு மரங்களும், ஆல மரங்களும் மிகுதி. இதில் ஆலம்பழத்தை தின்று தீர்க்கவென்றே கிளிகள் கூட்டம் கூட்டமாய் வரும். அவைகள் பழங்களைத் தின்ன முற்படும் சமயம் பல பழங்கள் கீழே அதன் அலகுபட்டு உதிர்ந்து விழும். கிளி அலகு பட்ட இந்த பழங்களுக்கு மருத்துவ குணம் மிகுதி. சித்த வைத்தியர்களில் சிலருக்குத் தான் இந்த உண்மை தெரியும். இந்த பழங்களை எடுத்துச் சென்று வெய்யிலில் காய வைத்து பின் இடித்து பொடியாக்கி இதை தேனில் கலந்து சாப்பிட குடல் சம்பந்தமான சிக்கல்கள் ஏளிதில் தீரும். இந்த பழங்களுக்காக மட்டுமல்ல இந்த மரங்களின் கீழ் பறவை எச்சில்கள் காய்ந்து கிடக்கும். இதை திரட்டி எடுத்துச் சென்று உரமாக பயன்படுத்தலாம். பட்டுப்போன மரத்தில் கூட இந்த பறவை எச்சம் பச்சையை உருவாக்கிவிடும்!'

"அந்த சாமி ரொம்ப
கோபக்காரசாமி. அது ஒரு
அவதாரம். அந்த சாமியோட
கோபம் அடங்கின நிலையைத்
தான் அகோர வீரபத்ரம்னு சொல்வாங்க.

இந்திரனும் அப்படி
ஆயிட்டான்...”

மூப்பர் சொன்ன அந்த புராண கதையை கேட்டு கோவிந்தன் ரேகாவைத்தான் பார்த்தான். அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்கிற எதிர்பார்ப்பில்...

“உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?”

“நீங்க என்ன கேப்பீங்கன்னு தெரியும்மா...”

“எங்க சொல்லுங்க பார்க்கலாம்?”

“இந்திரன்தான் அகோரசாமியா திரியறானா... பொதுவாக சாபம்னா விமோசனம்னும் இருக்கணுமே... இன்னுமா இந்திரனுக்கு சாப விமோசனம் கிடைக்கலன்னு கேட்பீங்க...”

“கரெக்ட்... நான் இதைத்தான் கேட்கலாம்னு நினைச்சேன்...”

“இப்ப நீங்க கேட்காட்டியும் இந்த சாப விமோசன கதையை நான் சொல்லத்தான் போறேன். ஏன்னா அந்த கதை சொன்னாதான் எங்க காட்டோட விஷயத்தை முழுமையா ஒருத்தராலபுரிஞ்சுக்க முடியும்...”

“தயவு செய்து அதையும் சொல்லிடுங்க... இல்லன்னா எங்களுக்கு தலை வெடிச்சிடும்...”

“இந்த கதையை யாருக்கும் சொல்லக் கூடாதுன்னும் ஒரு தடை இருக்கும்மா. அதையும் சொல்லிடறேன்...”

மூப்பர் அதிர்ச்சி அளித்தார்.

“யாருக்கும் சொல்லக் கூடாதா... ஏன் அப்படி?”

“பொதுவா தங்கம் வைரத்தை எல்லாம் எப்படி வெச்சுப்போம்?”

"வீட்டுல பீரோவுல வைப்போம். இல்லேன்னா லாக்கர்ல வைப்போம்..."

"சரியா சொன்னீங்க... சில ரகசியங்களும் தங்கம் வைரம் மாதிரிதாம்மா..."

"அப்ப இப்ப நீங்க சொன்ன இந்த இந்திரன் கதையும் ரகசியமாவே இருக்கணுமா?"

"அது புதிரா கேள்விக்குறியா உள்ளவரைதான் அதன் மேல ஒரு பயமோ இல்ல, கட்டுப்பாடோ இருக்கும். எப்பவும் மூடின கைக்குதான் மதிப்பு. நீங்க கையை விரிச்சுட்டா எல்லாமே போச்சு..."

"வாஸ்தவம்தான்... தயவு செய்து அந்த சாப விமோசனக் கதையையும் சொல்லுங்க..."

"சொல்றேன்... இந்திரனுக்கு அந்த முனிவர் சாபம் கொடுக்கவும் இந்திரன் அகோரசாமியா மாறிட்டான். அகோரர்னா எல்லாரும் ரொம்ப அருவருப்பா கற்பனை செய்து வெச்சிருக்காங்க. அது ரொம்ப தப்பு. கோரம்னா தான் அருவருப்பு. அகோரர்னா அழகர்னு அர்த்தம். அகோர வீரபத்ரர்னு சிவாம்சமா ஒரு சாமி புராணத்துல உண்டு. நீங்க கேள்விப்பட்டிருக்கலாம். அந்த சாமி ரொம்ப கோபக்கார சாமி. அது ஒரு அவதாரம். அந்த சாமியோட கோபம் அடங்கின நிலையைத்தான் அகோர வீரபத்ரம்னு சொல்வாங்க. இந்திரனும் அப்படி ஆயிட்டான். அழகா இருக்கற ஒருத்தன் தோள்ல பிணத்தோடு சுத்தினா பாக்க சகிக்குமா?"

"நிச்சயமா சகிக்காது."

"இந்திரனுக்கு முனிவர் சாபம் கொடுக்கவும் இந்திரன் கதிகலங்கிப்போய் முனிவர் கால்ல விழுந்து கதறினான். உடனே முனிவரும் அகோரனான பிணத்தோட சுத்தற உன் கண்ணுல எப்ப கற்பகமரம் படுதோ அப்ப உனக்கு சாப விமோசனம். அதேசமயம் உன் தோள்ல இருக்கற பிணம்,

[illegible]. அந்த மரத்தால உயிர் வந்துடும். அப்படின்னார்- நான் [illegible]... பிணத்துக்கு எங்கே போவேன்னு [illegible] இந்திரன்.

அதற்கு முனிவர், கவலைப்படாதே. இந்த கற்பக [illegible] பத்தி கேள்விப்பட்டு பேராசையால இந்த காட்டுக்கு [illegible] காட்டுக்கு தீங்கு நினைக்கறவங்களும், செய்யற [illegible] உயிரை விடுவாங்க. அதேபோல இந்த மரத்தை [illegible] பாத்துட மாட்டோமான்னு சில நல்லவங்க [illegible] வருவாங்க. பெரிய அளவுல புண்ணியம் செய்திருந்தா [illegible] கண்ணுக்கு கற்பகமரம் தானே படும். சொல்லப் [illegible] அதுவே அவங்க முன்ன வந்து நிக்கும். அப்படி [illegible] மரம் கால் நாழிகை நேரம்தான் நிற்கும். அதுக்குள்ள [illegible] எதை வேண்டுமானாலும் கேட்கலாம். [illegible] தை கொடுத்துடும். தப்பித்தவறி அதுகிட்ட நிக்கும் [illegible] விளையாட்டா ஒரு கெட்டதை நினைச்சாலும் அது [illegible]..."

"ஐ மூப்பரே... இத்தன வருஷமா இந்த காட்டுலதான [illegible] இருந்தேன். இதுல ஏதாவது ஒரு விஷயத்தை நீர் [illegible]னீரா?" என்று குறுக்கிட்ட கோவிந்தன் வருத்தத்தோடு [illegible] ன்.

"முழுசா கேளுங்க... உங்களுக்கு எல்லாமே தெரிய [illegible]."

"சரி சொல்லுங்க... இந்திரனுக்கு யாரோட பிணம் [illegible] கிடைச்சது?"

"சொல்றேன். எப்பவுமே இந்த உலகத்துல எல்லாமே [illegible] ரெண்டாத்தானே இருக்கு?"

"ரெண்டு ரெண்டான்னா?"

"இன்பம்னா துன்பம். கசப்புன்னா இனிப்பு..."

"ஓ... அப்படியா... சரி இப்ப இந்த கேள்வி எதுக்கு?"

"இந்த ரெண்டுல மனுஷங்களும் அடக்கம். முதல்ல இதுல ஆண் பெண்ணுன்னு இரண்டு. அடுத்து நல்லவங்க கெட்ட வங்கன்னு இரண்டு!"

இப்படி மூப்பர் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவரின் உடம்பு வியர்க்க ஆரம்பித்தது. அக்னி வெயிலில் அலைந்தவருக்கு வருவது போல் வியர்வை வந்தபடி இருந்தது. ஆனால் சூழ்நிலை அப்படி இல்லை. கெடி காரத்தில் மணி மாலை நான்கு. மூப்பருக்கு வியர்ப்பது எல்லாருக்குமே வியப்பாக இருந்தது. அவர் தொடர்ந்தார்.

"அந்த காலத்துல மனுஷங்களும், தேவர்கள், அசுரர்கள்னு இரண்டு பிரிவாதானே இருந்தாங்க... இதுல பேர்லயே பொருள் இருக்கே... 'தேவம்'ங்கிற வார்த்தைல 'தவம்' இருக்கு. அதேசமயம் அசுரன்ங்கிற வார்த்தையை பாருங்க. அதுல 'அசுரம்' இருக்கும். அதாவது சுரம் தப்பினவன். அதாவது ஒழுங்கு இல்லாதவன்னு அர்த்தம்.

"சரிங்க மூப்பரே... நீங்க மேலே போங்க..."

"போகத்தானே போறேன். நேரம் வந்துடுச்சே?"

மூப்பர் இருபொருள் படப்பேசியது வள்ளியம்மை, ரேகாவுக்கு புரிந்தது.

"மூப்பரே உங்க உடம்புக்கு ஏத்தாவது பண்ணுதா?"

"அதை விடுங்க. நான் சொல்ல வேண்டியதை சொல்லிடறேன். அசுரர்கள் இந்திரனுக்கு சாபம் கிடைச்சது தெரியவும் ஒரேடியாய் குஷியாயிட்டாங்க. இந்த கற்பக மரத்தை அடைய ஆசைப்பட்டவங்கதானே அவங்களும். இந்த காட்டுக்கு வந்து கற்பக மரத்தை அவங்க தங்களோட பிடில வெச்சுக்க பார்த்தாங்க. ஆனா அந்த முயற்சியில அவங்க இறந்து போனாங்க. அப்படி இறந்து போனவங்களைத்தான் இந்திரன் முதல்ல தோள்ல தூக்கிட்டு திரிஞ்சான். கற்பக மரம் கண்ணுல பட்டவும் அவனுக்கு சாப விமோசனம் ஏற்பட்டது. அந்த பிணத்துக்கு உயிர் வந்தது. உயிர் வந்த பிறகு அந்த

அசுரன் அசுரனா இல்ல. தேவனா மாறிட்டான். இதுதான் இந்திரன் சாபம் பெற்று விமோசனமும் அடைஞ்ச கதை."

"சரி மூப்பரே... இதெல்லாம் எப்பவோ நடந்தது. இப்பவும் அகோரசாமி பிணத்தோடு சுத்திக்கிட்டு இருக்கே. சரியாகமரம் நடமாடறதா பேச்சிருக்கே... எப்படி?"

"அதுதான் பெரிய கூத்து... இந்திரன் இங்க அகோரனா நடமாடின நாள்ல தேவர்கள்ள பலர் இங்க வந்து இந்திரனுக்கு நிழல் தரவும், பழம் தரவும் தங்களோட சக்தியை கொண்டு தேவலோக விருட்சங்களை இங்க நட்டாங்க. அதுல ஒண்ணுதான் தேவதாருங்கற மரம். இந்திராணியே வந்து நட்டதுதான் இந்த காடே வணங்கற விருட்சம். அதுக்கு இந்திர விருட்சம்னுதான் பேர். அதை சுத்தினாலே நல்லது.

இப்படி இந்த காட்டுல பாக்கற ஆயிரம் வருஷத்து மரமெல்லாம் தேவர்கள் நட்டது. அதனால அவங்க சக்தி இங்க அப்படியே இருக்கு. இங்க இருக்கற அன்னவாவி, சொர்ண கிடங்கு எல்லாமே குபேரனால வந்தது... நாங்கல்லாமும் தேவலோகத்துல இருந்து இங்க பரிபாலனம் பண்ண வந்தோம். அகத்தியர்தான் கொண்டு வந்து விட்டு எங்க குருவா இருந்தார்..."

"வாவ்... வாவ்... பிரில்லியண்ட்!" ரேகா எக்சைட் ஆனாள்.

"இந்திரனுக்கு சாப விமோசனம் கிடைச்சிட்டாலும் இந்திரன் ஒரு ஏற்பாடு செய்தான். இந்த காட்டுக்கு அசுரர்களால ஆபத்து வரக் கூடாது. அவங்க எந்த மரத்தையும் வெட்டி தேவசக்தியை குறைச்சுடக்கூடாதுன்னு நினைச்சான். அதுக்காக ஒரு அகோர பரம்பரையை உருவாக்கற முடிவுக்கு வந்தான். அதோட விளைவு அவனைப் போலவே கோபமா சுயநலமாக யார் இந்த காட்டுக்கு கற்பக மரத்தை தேடி வந்தாலும் அவங்க அகோர சாமியாகிடுவாங்க. அதேபோல காட்டுக்கு கேடு நினைக்கறவங்க பிணமாவாங்க. அகோரசாமியும் அந்த பிணத்தோட கற்பக மரத்தை தேடி

அலையும். ஒருநாள் இல்லை ஒரு நாள் மரம் கண்ணுல படும். அவங்களுக்கு நல்லது நடக்கும். அதேசமயம் அடுத்த அகோரசாமியும் பிணமும் உருவாயிடும்.

இதனாலதான் நாங்க யாரும் அகோர சாமியை பார்த்தா நிக்காம போயிடுவோம். அதுவும் மனிதர்களைக் கண்டா நிக்காது. ஏன்னா அதோட நோக்கம் அப்புறம் கெட்டுப் போய் மனிதர்களுக்கு அது யார்ங்கற ரகசியம் தெரிஞ் சிடுமே?"

மூப்பர் கேட்டு நிறுத்தினார்.

"இந்த கதையை ஏன் ஒரு தடவைதான் சொல்லணும்?"

"எல்லாமே மனித மனங்களைப் பத்தி தெரிஞ்ச தாலதான். இதை எழுதியும் வைக்கக் கூடாது. இதுக்கு பேர் 'எழுதாக் கிளவி'. அதாவது இதை எழுதக் கூடாது. வாய் மொழியாவே இது பேசப்படணும். மனசுல இது பத்திரமா இருக்கணும். இந்த கதை தெரிஞ்சவங்க யாரா இருந்தாலும் அவங்களுக்கு 100 வயசுக்கு மேல ஆயுசு உண்டு. அதேசமயம் இந்த கதையை எப்ப அவங்க அடுத்தவங்களுக்கு சொல் றாங்களோ அப்பவே அவங்க செத்துப் போயிடுவாங்கறதும் நம்பிக்கை..."

"ஐயோ அப்ப உங்களுக்கு உயிர் போயிடுமா?" ரேகா பதற்றத்துடன் கேட்டாள்.

"நான் செத்தாதான் சொன்ன அவ்வளவும் சத்தியம். இல்லேன்னா அவ்வளவும் கற்பனைன்னு ஆயிடும்மா... நான் செத்துடுவேன்கற ஒரு விஷயம் இருந்தாதானே நானும் கதையை சொல்லாமலே இருப்பேன்?"

"ஓ- விஷயம் அப்படி போகுதா? இந்த கதை எங்களுக்கு தெரிஞ்சதால என்ன கேடு வந்துடும்? கதையை கேட்டதால நாங்களும் 100 வயசு வாழப்போறோமா?"

"என்ன கேடா... அது எப்பவோ வந்தாச்சு! எப்ப அரசாங்கம் இந்த காட்டுல கால வெச்சுதோ அப்பவே அழிவு ஆரம்பமாயிடுச்சு. ஆண்டவன் புண்ணியத்துல வானத்து மனுஷங்க இந்த காட்டை காப்பாத்தி வந்தாங்க. இப்ப அவங்களாலேயே முடியாம விட்டுட்டு போயிட்டாங்க. அப்புறம் எங்களால மட்டும் எப்படி காப்பாத்த முடியும்?

தங்க மண்டிங்கற சொர்ண கிடங்கு மறைஞ்சு இருக்கற வரைதான் இது தாணுமாலய வனமா இருக்கும். அது தெரிய வரும் போது இதோட புனிதம் போயிடும்கறதுதான் இந்த காட்டோட விதி. இப்பதான் தெரிஞ்சு போச்சே...?"

"சரி இந்த வானத்து மனுஷங்க உண்மையில யார்... பிரிஞ்சு விழுந்த ஏரோப்ளேன்ல இருந்து வந்தவங்கதானே?"

"ஆமா.. ஆனா அவ்வளவு பேரும் காடு வாழணும், காடு வாழ்ந்தாதான் நாடு வாழும்னு நம்பின விஞ்ஞானிங்க. அதனால அவங்களுக்கு கற்பகமரம் காட்சியாச்சு. அதனாலதான் அவங்களுக்கு சில அதிசய சக்திகளும் கிடைச்சது..."

மூப்பர் முக்கியமான கட்டத்துக்கு வந்து நின்றார். அதேசமயம் மூச்சும் வாங்க ஆரம்பிச்சது...!

53

'இப்போது நடந்து கொண்டிருப்பது கலியுக மாகும். கலியுகத்தில் மாற்றங்கள் மிக வேகமாக ஏற்படும். பஞ்சபூதங்களுக்கு தனித்தனியே குணப் பாடு இருப்பது போல் கலியுகத்தின் தன்மையாக இது பிரம்மாவால் தீர்மானிக்கப்பட்டது. பொதுவாக ஒன்று இரண்டாக இருப்பதும், அப்படி அது இரண்டாக இருந்தாலே அதைக் கொண்டு அந்த

ஒன்றின் தன்மையை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்பதே யதார்த்தம். உதாரணமாக காலம் என்கிற ஒன்று இரவு பகல் என இரண்டாக உள்ளது. உயிரினங்கள் ஆண் பெண் என்று உள்ளனர். இப்படி...

இப்படி இரண்டாக இருப்பது கலியுக மாற்றத்தில் ஒரு கட்டத்தில் ஒன்றாக கலக்க முற்படும். அதாவது நல்லது தீயது பிரித்துப் பார்க்க இயலாதபடி கலி யுகத்தில் மாற்றங்கள் ஏற்படும். உதாரணமாக தாய்க்கும் தாரத்துக்கும் வேற்றுமையே பெரிதாக இராது. நல்லதும் கெட்டதும் கூட இனம் காண முடியாததாகும். இந்நிலையில் இதைக்காண சகியாதவர்களும், வாழ விரும்பாதவர்களும் தங்கள் பாவங்களை கடைத்தேற்ற தாணுமாலய வனத்தில் ஒரு வழிமுறை சொல்லப்பட்டுள்ளது. அது என்ன தெரியுமா?'

"இன்னும் பத்து வருசத்துலயே
தாகத்துக்கு குடிக்கற தண்ணி ஒரு
குவளை ஆயிரம் ரூபாய்க்கு
விக்கும். மழை தண்ணி மண்ணுல
படாதபடி அதை பிடிச்சு
வெச்சுக்கற தந்திரங்கள்ல
மனிதன் பூந்துடுவான்..."

மூப்பர் முடிவை நெருங்கி விட்டவர் போல தெரிந்தார். அதுவரை குடிசைக்கு வெளியே கட்டிலில் அமர்ந்து பேசியபடி இருந்தார். வியர்த்து மூச்சு வாங்கவும் அப்படியே மல்லாந்தார்.

ரேகாவும், வள்ளியம்மையும் அவரைப் பார்த்து பதட்டப்பட ஆரம்பித்தனர். கோவிந்தனும் புரிந்து கொண்டான்.

"மூப்பரே... வைத்யரை வரச் சொல்லட்டுமா... என்ன பண்ணுது?" என்று கேட்டான்.

மூப்பர் அந்த நிலையிலும் சிரித்தார்.

"என்ன சாமி நீங்க... விடிய விடிய கதை கேட்டுட்டு மேலுக்கு ராமன் சித்தப்பாங்கற மாதிரி கேட்கறீங்களே... இந்த பாவிமனோட கொஞ்ச நஞ்ச சக்தியும் போகப் போகுதுங்க. நான் கிளம்பிட்டேன். தாணுமாலயன் என்னைக் கூப்பிட்டான்..."

"கூப்பிட்டா போகாதீங்க... இங்க எங்களுக்கு இன்னும் பல விஷயங்கள் தெரிஞ்சுக்கணும்..."

"எனக்கு தெரிஞ்சதை எல்லாம் தெளிவா சொல்லிட்டேன். இது கலியுகம். வேகமா எல்லாமும் மாறும். மாறுனா அது கலின்னும் சொல்லலாம். எல்லாத்துக்குமே ஒரு காலம்கற மாதிரி எங்க தாணுமாலய வனத்துக்கும் ஒரு காலம்!

அது முடியப்போகுது. இனி இது பெருங்காய டப்பா! பேருலவுலதான் இது தாணுமாலய வனம். இனி இங்க எந்த அதிசயத்துக்கும் வாழ்க்கை கிடையாது. கால காலமா வளர்ந்து நிக்கற மரங்களெல்லாம் கூட வாழ்ந்தது போதும்னு இல்லாம போகும். இதை எல்லாம் நீங்க பார்ப்பீங்க.

நான் புறப்பட்டேன். மூச்சு அடைக்குது. என் கண்ணுக்கு தாணுமாலயர்கள் தெரியறாங்க. மூணு சாமியும் ஒண்ணா தெரியறாங்க. என்ன வாவான்னு கூப்பிடறாங்க. நான் திரும்ப பொறக்க கூடாது. அதுதான் என் விருப்பம். ஏன்னா இன்னும் பத்து வருசத்துலயே தாகத்துக்கு குடிக்கற தண்ணி ஒரு லிட்டர் ஆயிரம் ரூபாய்க்கு விக்கும். மழை தண்ணி மண்ணுல பட்டு பதபடி அதை பிடிச்சு வெச்சுக்கற தந்திரங்கள்ல மனிதன் இறங்கிடுவான்.

வயல்காட்டை எல்லாம் ராணுவம் பாதுகாக்கும். ஒரு குடும்பத்துல பத்துதலை முறைக்கு ஒரு வாரிசுதான்

உருவாகும். சனக்கூட்டமும் அதிகமாகாது. குறைஞ்சு கிட்டேதான் போகும். அரவாணிகள் பிறப்பு அதிகமாகும். மொத்தத்துல இப்ப வாழுற சாதாரண வாழ்க்கையே பெரிய சொர்க்கம் அளவுக்கு ஆயிடும். ஆயிடும்...!"

மூப்பர் பேசிக் கொண்டே வந்து வார்த்தைகள் தேய்ந்தன. அவர் மூச்சு முற்றாக அடங்கியது. ரேகாவும், வள்ளியம்மையும் உறைந்து போய் நிற்க கோவிந்தன், 'புறப்பட லாங்களாம்மா... இனி இங்க சடங்குங்க நடக்க தொடங்கிடும்...' என்றான்.

"மூப்பர் ரொம்ப நல்ல ஆத்மா... இல்லையா கோவிந்தா?"

வள்ளியம்மை மிக மெலிதாக பேசினாள்.

"ஆமாமா... பெரிய பெரிய விஷயங்களை சாதாரணமா சொல்லிட்டு கண்ண மூடிட்டாரு. மனசு வெச்சிருந்தா இந்த விஷயங்களை வெச்சுக்கிட்டு இந்த காட்டுக்கு ராசாவா மட்டுமல்லாம உலகத்தையே திரும்பிப் பாக்க வெச் சிருக்கலாம். ஆனா ஒரு கோடு போட்டுக்கிட்டு இப்படித் தான் வாழணும் இந்த சந்தோஷம் கெடாம இருந்தா போதும்னு வாழ்ந்துட்டு போய் சேர்ந்துட்டாரு.

அதேசமயம் இந்த காடு இனி என்னாகுமோன்னு எனக்கு பயமா இருக்கும்மா..."

கோவிந்தனும் கசிந்தான். ரேகா மூப்பர் அருகே சென்று திறந்தபடி இருந்த அவர் கண்களை மூடினாள். கையில் இருந்த செல்போனைக் கொண்டு ஒரு புகைப்படம் எடுத்தாள். பின் அவர் கால்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாள். வள்ளியம்மையும் அதேபோல் வணங்கினாள். கோவிந்தனும் வணங்கினான். முதல் முறையாக அவன் அழுதான்.

தாணுமாலயக்குடி ஜனங்கள் செய்தி அறிந்து வரத் தொடங்கினர். கையில் காட்டுப் பூக்களுடன் வந்தனர். சிலர் கூடையில் தானியங்கள், தேன் என்று எடுத்து வந்தனர்.

அதுதான் அவர்களின் இறுதி மரியாதை?

மூப்பரை குழிவெட்டி அதில் அமர்ந்த நிலையில் வையாசிகளை புதைப்பது போல்தான் புதைப்பார்கள். பின் அந்த குழிகள் இந்த தானியங்கள் எல்லாம் சேர்க்கப்பட்டு பின் மண்ணைப்போட்டு மூடுவார்கள். அதற்கு மேலே ஒரு யாகம் நடப்படும். அது மூப்ப மரம் என்று காலத்தால் அழைக்கப்படும்.

அந்த காட்டில் மொத்தமாய் 143 மூப்ப மரங்கள் உள்ளன. என்றால் 143 தலைமுறையாக வழிவழியாக அவர்கள் வந்துள்ளனர் என்பது புலனாகும்.

இதில் மிக வயது முதிர்ந்த ஒரு மூப்ப மரத்துக்கு ஆயிரத்து ஐநூறு வயது மதிக்கப்படுகிறது. சராசரியாக எல்லா மூப்பர்களுமே நூறாண்டுகள் வாழ்ந்தே இறந்துள்ளனர்.

ஜீப்பில் திரும்பிச் செல்கையில் அந்த 1500 வருட வயதுள்ள மூப்ப மரத்தை கோவிந்தன் காட்ட அதை ரேகா செல்போனில் படம் எடுத்துக் கொண்டாள். செல்போனை முத்தமிட்டாள்.

"என்ன ரேகா... செல்போன்ல இருக்கற போட்டோக்களுக்காக சந்தோஷப்படறியா?" என வள்ளியம்மை கேட்டிட,

"இல்லக்கா... மூப்பர் சொன்ன கதை இதுல ரெக்கார்டா ஆகியிருக்கு. உங்க கணவர் வந்த உடனே டிபார்ட்மென்ட்டே இதை கேட்கும். அப்புறமா நான் இதை ஜனாதிபதியில இருந்து சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், பத்திரிகை ஆசிரியர்கள், சமுதாய நலம் விரும்பிகள்னு எல்லாருக்கும் அனுப்பப் போறேன்.

இந்த காட்டை தங்கச் சுரங்கம் இருக்கற காரணத்தால அழிய விடக்கூடாது. அந்த சுரங்கத்துல இருந்து தங்கமும் எடுக்கக் கூடாது.

இந்த காடு காடா நீடிக்கணும். உள்ள நுழைஞ்சிருக்கற போலீஸ் ஃபோர்ஸ் வெளியேறணும். திரும்பவும் இந்த தாணுமாலயர்களே இந்த காட்டை பாத்துக்கணும்.

இந்த மூப்பரோட எதுவும் முடிஞ்சிடக் கூடாது. இந்த மூப்பர் 144வது மூப்பர்னா 145ஆவதா ஒருத்தர் வரணும். வானத்து மனிதர்களையும் அந்த வண்ணாத்தி காட்டுக்குப் போய் சந்திக்கணும். திரும்பி வந்துடுங்கன்னு சொல்லணும்."

ரேகா பேசிக் கொண்டே போனாள். கோவிந்தன் அதைக் கேட்டு சன்னமாக சிரித்தான்.

"என்ன கோவிந்தன் சிரிக்கறீங்க?"

"உங்க கற்பனையை நினைச்சேம்மா..."

"இது கற்பனையா உங்களுக்கு?"

"பின்ன என்னம்மா... காவேரி, வைகை, தாமிரபரணி, பாலாறுன்னு ஓடற ஆறுங்களையே திருடித்திருடி அதை, ஒண்ணுமில்லாம பண்ணிட்டோம். இந்த காடுகளையா விட்டு வைப்போம்? அதுலயும் இது தங்கக்காடு..."

"அதனாலதான் சொல்றேன். இது பாதுகாக்கப் படணும்னு..."

"அதெல்லாம் ஒண்ணும் பண்ண முடியாதும்மா... இது ராஜா காலமா இருந்தாலாவது பரவால்ல. ராஜாங்கற ஒருத்தருக்கு புரிய வெச்சா போதும். இது பாழாப்போன ஜனநாயகம்..."

"இருக்கலாம் கோவிந்தன். ஆனா நாம இதை எப்படியாவது சாதிக்கணும். சாதிச்சே தீரணும்."

"முதல்ல உங்களை பேச விட்டாதானே?"

"அதையும் பார்க்கறேன்."

"அதெல்லாம் எதுவும் நிக்காதும்மா. மூப்பர் சொன்னது ஒரு புராண கதை. அவர் ஒரு காட்டு வாசி. விஞ்ஞானம்,

நாகரீகம்னு எதுவும் தெரியாதவர். இவர் புராணகதையை பேசி அது உண்மைன்னு நம்பினா அதைவிட கூமூட்டைத்தனம் இருக்கவே முடியாதுன்னு இந்த செல்போன்ல இருக்கற பேச்சை குப்பைல தூக்கி போட்டுடுவாங்கம்மா.."

"சரி... இதை நான் சொன்னாதானே இப்படி நடந்துப்பாங்க. வானத்து மனுஷங்கள் வந்து சொன்னா?"

"அவங்களையே பெரிய புதிரா நினைக்கும் போது அவங்க பேச்சு எப்படிம்மா எடுபடும்?"

"அவங்கல்லாம் யாரோ இல்ல. விஞ்ஞானிகள்! நம்ம நாட்டு விஞ்ஞானிகள் மட்டுமல்ல, உலக விஞ்ஞானிகள்!"

"அதுக்கு என்னம்மா ஆதாரம்?"

"கோவிந்தன் நீங்க ரொம்ப எதிர்மறையாவே பேசறீங்க. பாசிடிவா எதையும் நினைங்க..."

அதற்குள் இருப்பிடம் வந்து மூவரும் இறங்கி உள்ளே வந்தனர்.

நட்ராஜும், திலீபும் ஆவலாக பார்த்தனர்.

மூவரிடமும் ஒருவித அமைதி.

"என்னாச்சு ரேகா... வானத்து மனுஷங்கள பாத்தீங்களா? வந்தாங்களா?" திலீப் ஆரம்பித்தான்.

ரேகா நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து நடந்ததை எல்லாம் சொல்லத் தொடங்கினாள்.

அப்போது கெடிகாரத்தில் மணி ஐந்து. மாலை நேரம். வெளியே காற்றிடம் சற்று கூடுதல் வேகம்.

வானத்திலும் கரிப்பு தட்டி மழை வருவதற்கான அறிகுறிகள்.

அந்த மலை உச்சியை சரவண மார்த்தாண்டனும், வானவராயனும், துரைசாமியும் ஒரு சேர அடைந்து

நின்றபோது மூவருக்கும் மூச்சு வாங்கிற்று. மூவர் முதுகிலும் மலை ஏறுபவர்கள் முதுகில் சுமந்து செல்வது போல கேரிபேக். அதில் முதலுதவி மருந்தில் இருந்து கைத்துப்பாக்கி, கை எரி குண்டு, கத்தி, கயிறு, கேமரா, டார்ச்லைட் என்கிற இத்யாதிகள்.

சரவணமார்த்தாண்டன் இரவிலும் ஊடுருவிப் பார்க்க முடிந்த கண்ணாடியையும், எடுத்து வந்திருந்தார்.

இடுப்பில் சட்டென்று எடுக்க முடிந்த விதத்தில் கத்தியும், டார்ச்சும் இருந்தது. கைக்கு கிளவுஸ், காலை லெதர் ஷூக்கள் முழங்கால்வரை மறைத்து விட்டிருந்தது.

அவர்கள் மூவர்கள் எதிரில் 'அன்னவாவி' என்னும் அந்த மலை ஏரி ஜில்லென்று விரிந்து பரந்திருந்தது.

பார்ப்பதற்கே ரம்யமாக இருந்த அதன் ஒரு பகுதியில் மூங்கிலால் உருவாக்கப்பட்ட தெப்பம் மிதந்து கொண்டிருந்தது. கொடிகளை கயிறாக கொண்டு அது கட்டப்பட்டிருந்த விதம் சற்று ஆச்சரியமளித்தது. அவ்வளவும் நன்கு விளைந்த மூங்கில்கள். சீராக வெட்டப்பட்டு கட்டப்பட்டிருந்தது.

மூங்கில் நடுவில் இடுப்புயரத்துக்கு நிற்கின்ற விதத்திலும் சில மூங்கில்கள். அதை பிடித்துக் கொண்டு நிற்கலாம்.

மூவரும் அதில் ஏறும்முன் வாவி நீர்பட்டு சிலிர்த்தனர்.

"சார்... இப்படி ஒரு பளிங்குத்தண்ணியை நான் எங்கேயும் பார்த்ததில்ல" என்றபடி துரைசாமி ஒரு வாய் அள்ளிக் குடித்தார்.

"எங்க சார் இருக்கு அந்த தங்கக் கரை... இந்த காட்டு மனுஷங்க இதுக்கு தங்கக்கிடங்குன்னு பேர் சொன்னதா ஞாபகம். ஆமாம்தானே சார்?"

வானவராயன் தங்கம் பற்றித்தான் முதலில் பேசினார்.

"சார் இருட்டப்போகுது... வேகமா அந்த தங்கம் இருக்கற இடத்துக்குப் போகணும்" என்றபடியே துரைசாமி தெப்பத்தில் ஏற மற்ற இருவரும் கூட ஏறினர்.

"முதலைகள் எப்ப வேணும்னாலும் வரலாம். துப்பாக்கில குண்டை லோட் பண்ணியே வெச்சிருங்க..."

சரவண மார்த்தாண்டன் எச்சரித்தபடியே நீர்ப்பகுதி மேல்பார்க்க தெப்பம் நகர ஆரம்பித்தது.

54

'தங்கள் பாவங்களைக் கடைக்கேற்றிக் கொள்ள தாணுமாலயவனம் ஒரு வழியை காட்டியுள்ளது. அந்த வனத்திற்குள் நுழைந்து ஏதாவது ஒரு நீர் நிலையில் நீராடி பின் தங்கள் நட்சத்திர கதிக்கு ஏற்ப மரம் நட்டு அது பட்டுப் போகாமல் வளரத் துணை செய்தால் போதும். அதைச் செய்தவர் நற்கதிக்கு செல்வார்.

இந்த மரம் நட்டு வளர்க்கும் வினைப்பாட்டை கர்ம விடுதலையாகச் சொல்கிறது தாணுமாலய வனச் செய்தி. இந்த வனம் குறித்து செய்திகள் எழுத்தில் இல்லை. எழுத்தில் இருக்கக் கூடாது என்பது முக்கியம்.

எழுதாக்கிளவியாக இது திகழ வேண்டும் என்பதே விருப்பம். காரணமில்லாமல் காரியமில்லை. இப்படி இது எழுதாக்காவியமாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதும் ஒரு நல்ல நோக்கம் கருதியே.

ஆனால், இது எப்படி நல்ல நோக்கமாகும் என்று சிந்தித்து இதை எழுதி தாணுமாலயவன சரிதம்

என்று ஆக்க முனைந்தவர்கள் அந்த சரிதத்தை எழுத முடியாமல் இடையில் அவர்கள் சரிதமே முடிந்து போனதுதான் விந்தை!'.

"மின்சாரமும் டெலிபோனும்
கண்டுபிடிக்கப் படாத போது ஒரு
வானம் எப்படி இருந்ததோ
அப்படி ஒரு வானத்துகிட்ட இப்ப
நாம இருக்கோம்..."

அன்னவாவி மேல் மூங்கில் தெப்பத்தில் மூவரும் பயணிக்க தெப்பம் நகரத் தொடங்கியது. தெப்பத்தை இயக்கிய அனுபவம் துளியும் இல்லாத நிலையில் முட்டி போட்டு அமர்ந்து கொண்டு கைகளால் தண்ணீரைத் தள்ளிவிட தள்ளிவிட தெப்பம் நகர்ந்தது.

ஆனால், எந்த திசை நோக்கி செல்வது என்பதில் குழப்பம்.

எந்தப் பக்கத்தில் அந்த தங்கக் கிடங்கு இருக்கிறது என்பதிலும் தெளிவில்லை. சரவண மார்த்தாண்டன் அண்ணாந்து பார்த்தார்.

"என்ன சார் மேல பாக்கறீங்க... மழை வருமான்னா?" கேட்டது துரைசாமி.

"இல்ல துரை... மேலே இருந்து பார்க்கும்போது இங்க மறைவா இருக்கற பாகம் எதுவா இருக்கும்னு யோசிக்கறேன். ஏன்னா அங்க தான் அந்த தங்ககிடங்கு இருக்கணும்..."

"கரெக்ட்... அப்படித்தான் இருக்கணும். இல்லாட்டி தான் அது எப்பவோ வானத்துல பறக்கறவங்க கண்ணுல பட்டுருக்குமே? இவ்வளவு நாளா ரகசியமாவா இருக்க முடியும்?" என்று ஒத்து ஊதினார் வானவராயன்.

தெப்பம் மெல்லத்தான் நகர்ந்தது.

சரவண மார்த்தாண்டன் மேலே பார்த்ததை வைத்து [illegible] ங்கு பகுதியை தீர்மானித்து "அதோ அந்த பக்க [illegible] இருக்கணும்" என்றிட ஒரு வேகம் வந்து துரைசாமி, [illegible] யான் இருவரும் தெப்பத்தை மிக வேகமாக கடத்த [illegible]. நடுமையில் கொஞ்சம் பயம், நிறைய சுயநலம் [illegible] உணர்வோடு நின்று கொண்டிருந்தார் சரவண [illegible]ண்டன். அப்படியே தன் வசம் உள்ள செல்போனை [illegible]. துப்புரவாக சிக்னல் இல்லை.

'நெட் வொர்க் பெயிலியர்' என்கிற எழுத்துகள் [illegible].

"இங்க நமக்கு எதாவது ஆனா உதவிக்கு கூட யாரையும் [illegible] முடியாது. சுத்தமா இங்க நெட் ஓர்க் இல்ல. [illegible] மின் காந்த அலைகளே இல்லாத ஒரு சுத்தமான [illegible] ம் இந்த இடமாதான் இருக்கணும்.

. அதாவது மின்சாரமும் டெலிபோனும் கண்டுபிடிக்கப் [illegible] போது ஒரு வானம் எப்படி இருந்ததோ அப்படி ஒரு [illegible]த்துகிட்ட இப்ப நாம இருக்கோம்..." என்றார்.

. அப்படி அவர் சொன்ன நொடி அவர் பார்க்க நீர் நிலை [illegible] ஒரு இடத்தில் முதலை ஒன்று தன் மூக்கு பாகத்தை [illegible]டும் காட்டிவிட்டு திரும்ப உள் சென்றது.

சரவண மார்த்தாண்டனுக்கு அந்த நொடியே நெஞ்சை [illegible]த்தது. தன் துப்பாக்கியால் மிக வேகமாக அந்த [illegible]த்தை பார்த்து சுட்டார்.

தெப்பத்தை கடத்த தண்ணீரை தள்ளியபடி இருந்த [illegible]வராயனும், துரைசாமியும் கைகளை வேகமாக தண் [illegible]ரை விட்டு எடுத்தவர்களாக பதட்டப்பட ஆரம்பித்தனர்.

"நீங்க தள்ளுங்க... நான் பாத்துக்கறேன். சுட்டுட்டேன் [illegible]ல்லையா... முதலைகள் பயந்துகிட்டு நம்மகிட்டயே வராது" [illegible]று அவர்களை தெப்பத்தை கடத்த சொன்னார்.

அவர்கள் அவரை வெறித்தவர்களாக "நீங்களும் ஒரு கை போடுங்க சார்... பாதுகாப்பா நடுவுல நின்னுகிட்டு பேசறீங்களே...." என்றார்கள்.

அது சரவண மார்த்தாண்டனை கொஞ்சம் போல சிறியது.

"துரைசாமி... ஒரு நபர் கண்காணிச்சாதான் நாம பாதுகாப்பா போய் சேர முடியும். இங்க நான் உங்களுக்கு சுபீரியர் ஆபீசர் வேற... ஒ பே மை ஆர்டர்..." என்றார்.

சரவண மார்த்தாண்டனின் இந்த பேச்சு இருவரையுமே உள்ளுக்குள் கோபப்படச் செய்தது.

தெப்பமும் கிட்டதட்ட வாவியின் மையப்பகுதியில் நின்று கொண்டிருந்தது. அங்கும் இங்குமாக முதலைகளின் தலைகள் தெரிய ஆரம்பித்தன. சுற்றியுள்ள கரைப்பகுதியில் மான் ஒன்று கண்ணில் பட்டு மறைந்தது. குரங்கு ஒன்று தண்ணீர் குடிக்க முனைய ஒரு முதலை ஒரே பாய்ச்சலில் அதை கவ்வி தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டு மறைந்தும் போனது.

துரைசாமிக்கும், வானவராயனுக்கும் அந்த நொடியே உயிர் போய்விட்டது போல்தான் இருந்தது. கரையில் இருக்கும் மிருகத்தையே இழுத்து விழுங்கும் துணிச்சல் மிக்க முதலைக்கு அதன் வாழ்விடத்தில் நட்ட நடு இடத்தில் மிதந்து கொண்டிருப்பது என்பது எத்தனை சுலபமான விஷயம்?

சரவண மார்த்தாண்டன் துப்பாக்கியை நீட்டி பிடித்துக் கொண்டு "கமான்... க்விக்... சீக்கிரமா துடுப்பு போடுங்க. கையால போட வேண்டாம். இந்த மூங்கிலால தள்ளப் பாருங்க..." என்று தெப்பத்தின் மையத்தில் நட்டு பட்டது போல் நின்று கொண்டிருக்கும் மூங்கிலை காட்டினார். உயிர் பயம் அவர்களை மிக வேகமாக செயல்பட வைத்தது வானிலும் கருமேகங்கள் மண்டிக் கொள்ள காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

அது தெப்பம் நகர உதவியாகவும் இருந்தது. கூடவே அவர்கள் முயற்சியும் ஒன்று சேர்ந்து தெப்பம் வேகமாக நகர்ந்து அந்த தங்கக் கரை வெளியும் தெரியத் தொடங்கியது.

"அதோ... அதோ கரைப்பகுதி... மஞ்சளா தெரியுது பாருங்க. கமான் க்விக்... உம்... க்விக்..." சரவண மார்த்தாண்டன் எமோஷன் ஆனார்.

அவர்களும் எமோஷன் ஆயினர்.

"சார்... டைமே கொஞ்சம் கூட இல்ல. நம்மகிட்ட இருக்கிற சாக்குப்பைல தங்கத்தை மூட்டையா கட்டிகிட்டு எவ்வளவு சீக்கிரம் திரும்பறோமோ அவ்வளவு சீக்கிரம் திரும்பிடணும்..." என்று மிக வேகமாக ஒரு கணக்கு போட்டு பேசினார் துரைசாமி.

"ஆமாமா... மூட்டைகளை தெப்பம் நடுவுல வெச்சுடுவோம். இல்லேன்னா பேலன்ஸ் தவறி இந்த ஏரியிலேயே விழுந்துடும்..."

"அதெல்லாம் விழாது... உங்க வாயை வெச்சுகிட்டு சும்மா இருங்க. நல்ல நேரத்துல பேசற பேச்சப் பாரு..." வானவராயனை ஒரு சுரீர் கோபத்தோட கண்டித்தார் துரைசாமி.

"பேச்செல்லாம் பிறகு... கமான் க்விக்... கரை வந்துடுச்சு பாருங்க..." சரவண மார்த்தாண்டன் உற்சாகமாக கூவ தெப்பமும் கரை தட்டி நின்றது. அவர்களும் தங்கள் லெதர் ஷூக்கள் அணியப் பெற்ற கால்களோடு முதன்முதலாக அந்த தங்க மணல் வெளியில் கால் பதித்தனர். குனிந்து வேகமாக அந்த தங்க மண்ணை அள்ளினர். ஈரத்தோடு அவர்கள் கையில் அது மின்னியது. அதேவேளை வானத்தில் ஒரு மின்னல். இடக்கோடியில் இருந்து வலக்கோடிக்கு தாறு மாறாக ஓடியது.

கூடவே காதையே தீய்ந்து போகச் செய்யுமளவு ஒரு சப்தம். அதன் தொடர்ச்சியாக பலமான நீர்ப்பொட்டுகள் மழையாக கொட்டத் தொடங்கியது.

"சார். மழை பிடிச்சுகிடிச்சு..."

"மலைன்னா மழை சகஜம்யா... இதை எல்லாம் பார்த்தா ஆகாது. சாக்கைப் பிரியுங்க. மண்ணை அள்ளுங்க..."

"சார் நல்லா வெயிட் தெரியுதுல்ல..."

"இதுல கொஞ்சம் கூட மண்ணே இல்ல. அவ்வளவுமே தங்கம்!"

"ஐயோ... திரும்பின பக்கமெல்லாம் மஞ்சளாதான் இருக்கு. உண்மைல நாம ஒகொடுத்து வெச்சவங்க..."

"கொடுத்து வெச்சவங்களா... போய்யா! அதுக்கும் மேல ஒரு வார்த்தை இருந்தா சொல்லு. ஒரு கிராம் தங்கம் இன்னிக்கு மூவாயிரம் ரூபாய்... இங்க டன் கிணக்குல கிடக்குது. விடக்கூடாது. விடவே கூடாது. அவ்வளவையும் அள்ளிடணும். இப்படியா மதிப்பில்லாம எனக்கென்னன்னு கிடக்கும்? இது கொடுமை... கொடுமையிலும் கொடுமை..."

பரவசத்தில் ஏதேதோ பேசினார் துரைசாமி. மழையோ வலுக்க ஆரம்பித்தது.

"முதல்ல எக்சைட் ஆகாம மண்ணை மூட்ட கட்ற வழியை பாருங்க..." சரவண மார்த்தாண்டனின் கட்டளையை செயல்படுத்தியபடியே அந்த மண் வெளி மேல் படுத்து உடம்பெல்லாம் தங்க மண்ணை பூசிக் கொண்டு சின்னப் பிள்ளை போல பூரித்து போனார் வானவராயன்.

"நான் இப்ப தங்க மனுஷன்... என் உடம்பெல்லாம் இப்ப தங்கம். வானவராயா என்னை இந்த தங்க மண்ணால மூடுய்யா. திரும்ப வருவோமோ மாட்டோமோ..."

மண்வெளி மேல் படுத்தபடி விளையாட விரும்பினார் துரைசாமி.

"இப்ப ரெண்டு பேரும் மூட்ட கட்டப் போறீங்களா இல்லையா?" அதட்டினார் சரவண மார்த்தாண்டன்.

"ஒரு அஞ்சு நிமிஷம் சார்!" கெஞ்சியது வானவராயன் மட்டு.

தலையில் அடித்துக் கொண்டார் சரவண மார்த்தாண்டன்.

கொட்டும் மழைக்கு இடையே குவார்ட்டர்ஸ் முன்னால் நின்றது சிவக்குமாரின் ஜீப்!

எட்டிப் பார்த்தாள் வள்ளியம்மை.

சிவக்குமார் நனைந்தபடி இறங்குவது தெரிந்தது.

"அவர் வந்துட்டார்..." என்றாள் உற்சாகமாக... நட்ராஜும் கெந்திக் கெந்தி நடந்தபடி வந்து பார்த்தான். சிவக்குமாரும் உள் வந்துவிட்

"என்ன பிரதர்... நாளைக்குதான் நீ வருவேன்னு நான் நினைச்சா இப்பவே வந்துட்டே?" என்று உள் நுழையும் போதே கேள்வியை கேட்டான்.

சிவக்குமாரும் தலைத் தொப்பியை தவிர்த்து விட்டு தன் ஈரக்கி மேல் உடுப்பை கழட்டிக் கொண்டே

"பாதி வழியிலேயே என்னை திரும்பி போகச் சொல்லி வெறட் குவார்ட்டர்சுல இருந்து மெசேஜ் வந்துடுச்சு. நான் யாரையெல்லாம் பார்க்க நினைச்சேனோ எல்லாரும் இப்ப வந்துகிட்டிருக்காங்க. அனேகமா இன்னும் ஒரு இரண்டு மணி நேரத்துல வந்துடுவாங்க.

இன்னிக்கு இரவு அவங்க அடிவாரத்துல இருக்கிற அரசினர் மாளிகைல தங்கிட்டு நாளை காலை ஒன்பது மணிக்கு காட்டுக்குள்ள இருக்கற நம்ம ஆபீசுக்கு வந்துடு வாங்க.

ஒரு மீட்டிங்கை போட்டு பேச வேண்டியதை பேசிட்டு காட்டுக்குள்ள ரைட் போக வேண்டியதுதான் பாக்கி..."

என்ற சிவக்குமார் சற்று ஆச்சரியமாக நட்ராஜ், திலீப் இருவரையும் பார்த்தார்.

இருவரும் படுத்த நிலையில் இல்லாமல் நின்று கொண்டிருந்தனர்.

"என்ன பிரதர் பாக்கற... நாங்க எழுந்து நின்னதையா?"

"எஸ்... நான் இல்லாதப்ப எதுவும் நடந்துடலையே?"

"எதுவும் பாசிடிவா? இல்ல நெகடிவாவா?"

"இரண்டு விதமாவும்தான்... இந்த காட்டுலதான் அதுக்கெல்லாம் எந்த பஞ்சமும் இல்லையே..?"

"யு ஆர் ரைட்... உனக்கு நிறைய தகவல்கள் தயாரா இருக்கு. கிட்டத்தட்ட வானத்து மனிதர்கள் பற்றிய எல்லா ரகசியமும் தெரிஞ்சு போச்சு. அது மட்டுமல்ல அகோரசாமா யாருங்கறதும் தெரிஞ்சிடுச்சு. ஆனா இதை நீ நம்பறதும், நம்பாததும் உன் இஷ்டம்..."

"போதும் நட்ராஜ்... பீடிகை, அப்புறம் என்ன நடந்தது?"

"எல்லாம் பக்காவா ரெக்கார்டாவே இருக்கு. நாங்க எதையும் பேசவே வேண்டாம். அதுக்கு முந்தி ஒரு கேள்வி. உங்க டிபார்ட்மென்ட்டால வானத்து மனிதர்களை பிடிக்க முடிஞ்சுதா?"

55

'தா'ணுமாலய வன சரிதம் இதனால் பாதியோடு ஒரு புதிர் போல நின்று போனது. அதைத் தொடர்ந்து எழுதவும் அதன் பின் யாரும் முனையவில்லை. காலம் உருண்டதில் அப்படி ஒரு சரிதம் இருப்பதே கூட தெரியாமல் போனது.

காலம் பல அதிசயங்களை ஒன்றுமில்லாமல் செய் கிறது. பல ஒன்றுமில்லாத விஷயங்களை அதிசய மாக மாற்றி விடுகிறது.

இந்த விந்தை இன்று நேற்றல்ல...

காலம் காலமாக இப்படித்தான் நடந்து வருகிறது.

வனங்கள் கடவுள் சீதனமாய் தந்திருக்கும் விஷயங் கள். சீதனத்தை தலைமுறை தலைமுறை யாகத் தொடர வேண்டும். ஆனால், சிலர் விற்றுச் செலவழித்து தாங்களும் அழிந்து விடுகின்றனர்.

தாணுமாலய வனமும் அது போல அழிவை நெருங்கிவிட்டதோ?'

"புதுசா சைக்ளோன் ஃபாம்
ஆகியிருக்காம். அதுக்கு 'சிஷ்மா'ன்னு
நம்ம நாடுதான் பேர் வெச்சிருக்கு.
கிட்டத்தட்ட மூன்று இடத்துல காற்ற
முத்த தாழ்வு நிலை ஏற்பட்டு அந்த
மூணும் ஒண்ணா சேர்ந்து கன்யாகுமரி
கரையோரமா கரை கடக்கலாமாம்..."

"இல்ல நட்ராஜ்... நான் அந்த பொறுப்பை சரவண பாபுத்தாண்டன்கிற ஆபீசர்கிட்ட விட்டுருந்தேன். அவரை இப்ப என்னால தொடர்பு கொள்ளவே முடியல. நாட் ரீச்சபிள்னே வருது..."

"காட்டுக்குள்ள எங்கையாவது வசமா சிக்கியிருக் கலாம். போகட்டும். அந்த தங்கச்சுரங்கம் இருக்கிற இடம் அவருக்கு தெரியுமா?"

"தங்கச்சுரங்கம் இருக்குங்கற மேட்டர் தெரியும். ஆனா இடம் தெரியாது. அங்க எல்லாரும் ஒரு குரூப்பா போறதுதான் சரி. குறிப்பா எங்க ஃபாரஸ்ட் ஆபீசர்ஸ் எல்லாரும் இருக்கணும்."

"நீ அரிச்சந்திரன் பிரதர். உன்ன மாதிரி, அந்த ஆபீசர் இருக்கணும்கற அவசியம் இல்லையே?"

"வாட் டூ யூ மீன்?"

"அவர் ஏன் அங்க போயிருக்கக் கூடாது?"

"இட்ஸ் இம்பாசிபிள்... அது அவ்வளவு சுலபமில்ல"

"என்ன சுலபமில்ல... சுலபமில்லாமதான் உனக்கு முன்னால இருந்த காளிமுத்து போனாராக்கும்?"

"எதையாவது சொல்லி என்னை கன்ஃப்யூஸ் பண்ணாத. அப்படியே போயிருந்தா தான் என்ன இப்ப? அவரும் எங்க டிபார்ட்மென்ட்தான?"

"அதுசரி... டிபார்ட்மென்ட்டா இருக்கலாம். ஆனா உன்ன மாதிரியே உண்மையா இருக்கணும்கறது முக்கியமாச்சே?"

"இதோ பார்... இனிமே யாரும் இந்த காட்டுல எந்த பித்தலாட்டமும் பண்ண முடியாது. விஷயம் டெல்லி வரை போயாச்சு. பை த பை நீங்க வானத்து மனுஷங்க பத்தி தெரிஞ்சு போச்சுனீங்களே என்ன அது?"

"இந்த ரெக்கார்டட் வாய்சைக் கேள். அப்புறமா முடிவுக்கு வா."

நட்ராஜ் கூற ரேகா தன் செல்போன் ரெக்கார்டரை ஆன் செய்ய மூப்பருடன் நடந்த உரையாடல் தொடங்கியது.

அந்த நொடியே சிவக்குமாரின் செல்போனுக்கு ஒரு அழைப்பு. அவரும் செவிகளை அளித்தார்.

"சார்... ஒரு இம்பார்ட்டன்ட் நியூஸ். புதுசா சைக்ளோன் ஃபாம் ஆகியிருக்காம். அதுக்கு 'சிஷ்மா'ன்னு நம்ம நாடுதான் பேர் வெச்சிருக்கு. கிட்டத்தட்ட மூன்று இடத்துல காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டு அந்த மூணும் ஒண்ணா சேர்ந்து கன்யாகுமரி கரையோரமா கரை

க்கலாமாம். இதனால அந்த பகுதியை மையமா வெச்ச 300 மி.மீ. அளவுக்கு ஒரு அசுர மழையை எதிர்பார்க்க ஆரம்பிக்களாம். அதுல பெருமளவு மழை மலைப் பகுதி களையும் காட்டுப் பகுதியிலயும் தான் பெய்யப் போகுதாம். ஆபத்துக்கு மெசேஜ் பண்ணியிருக்காங்க."

"ஐசி... அப்ப நாளைக்கு மீட்டிங்கும் ரைடிங்கும் சாத்திய மில்லைன்னு சொல்லுங்க..."

"ஆமாம் சார்... உங்கள டிராவலர்ஸ் பங்களாவுக்கு வரச் சொல்லி சேலம் டிஸ்ட்ரிக்ட் ஹெட் குவார்ட்டர்ஸ்ல இருந்து சொல்லச் சொன்னாங்க சார்..."

செய்தி காதில் விழுந்தபடி இருக்க வானில் மிகப் பெரிய அளவில் ஒரு இடி சப்தம். மின் வெட்டும் கூட.....

"ஓகே" என்றபடி செல்போனை அணைத்த சிவக்குமார் "இந்த சிஷ்மா இப்பவா வரணும்... ஹூம்!" என்று சலித்துக் கொள்ள 'சிஷ்மாவா?' ரேகா கேட்டாள்.

"ஆமாம்மா... புது சைக்ளோன். நம்ப நாடுதான் இந்த சைக்ளோனுக்கு பேர் வைக்கணும். அதோட பேர்தான் சிஷ்மா..."

"இதுக்கு அர்த்தம்?"

"வெச்சவங்க கிட்டதான் கேக்கணும்."

"எனக்கென்னவோ சிவா விஷ்ணு பிரம்மாங்கற பேர்ல இருந்து முதல் எழுத்து இரண்டாவது எழுத்து மூன்றாவது எழுத்தை கோர்த்து உருவாக்கின பேர் மாதிரி தெரியுது."

ரேகா சொல்ல எல்லார் முகத்திலும் வியப்பு. ஆமோ தம்பது போல் மீண்டும் இடி மின்னல்...

இடி மின்னலைத் தொடர்ந்து பெரிய மழை பிடித் தாட்டத் தொடங்கியது. காற்றும் கோரமாக வீசியது.

"சார்... சிஷ்மா புயல் வேலையை காட்டத் தொடங்கிடுச்சு. உத்தர்கண்ட்ல ஏற்பட்ட அழிவைப் போலவே ஒரு பெரிய அழிவு ஏற்படுமா சார்...?"

திலீப் பயத்தோடு கேட்டான்.

"கொஞ்சம் சும்மா இருக்கியா? சிஷ்மா புயல் தாக்கப் போறது கன்னியாகுமரி கிட்ட நாம இருக்கறது 300 கிமீட்டர் இந்தப் பக்கம்... சான்சே இல்ல. பொதுவா சைக்ளோன் ஃபார்ம் ஆனா இப்படி மழை பெய்யறது சகஜம். அனேகமா தமிழ்நாடு பூரா மழை பெய்ய ஆரம்பிச்சிருக்கும்" என்றான் நட்ராஜ்.

வள்ளியம்மையும், ரேகாவும் மவுனமாயிருக்க சிவக்குமாரிடம் மட்டும் அடுத்து என்ன செய்வது என்கிற தவிப்பு.

அப்போது, "சார்..." என்றபடியே கோவிந்தன் உள்ளே நுழைந்தான். டிபார்ட்மெண்ட்டின் மழைக்கோட்டை அணிந்து கொண்டு நனைந்தபடி வந்த கோவிந்தனிடம் படபடப்பு.

"என்ன கோவிந்தன்?"

"சார் முக்கியமான விஷயம். மூப்பர் இறந்துட்டார். இவங்க சொன்னாங்களா?"

"இல்லையே... மூப்பர் இறந்துட்டாரா?" அதிர்ந்தது சிவக்குமார் முகம்.

"ஆமாம் சார்... நீங்க இந்த வாய்சை கேட்டா உங்களுக்கு எல்லாம் புரியும். இது அவர் சாகறதுக்கு முந்தி பேசினது."

"மை குட் நெஸ்..."

"சார் இதை கேக்கறதுக்கு முந்தி நான் சொல்ல வந்ததைக் கேட்டுடுங்க. தாணுமாலயக்குடிகள் இந்த காட்டை விட்டு கிளம்பிட்டாங்க. அவங்களோட வழிபாட்டுக்குரிய

விருட்சம் மேல இடி விழுந்து அந்த மரம் எரிஞ்சுகிட்டு இருக்கு! அப்படி நடந்தா இந்த காடு அழிஞ்சிடும்கறது அவங்க நம்பிக்கையாம். அதனாலதான் மழையும் பெய்யத் தொடங்கி இருக்காம்..."

"ஐய்யோ... என்ன இது... எல்லாமே தப்பான விஷயமாவே இருக்கே..."

"தப்பு நம்ம மேலதான் சார். பாவம் சார் அந்த மலை மக்கள். வானத்து மனுஷங்க காட்டை விட்டு போயிட்டாங்கன்ன உடனேயே அவங்கள்ள பாதிபேர் இனி இந்த காட்டுல இருக்கக் கூடாதுன்னு முடிவு செய்துட்டாங்க..."

"வாட்... வானத்து மனுஷங்க இப்ப இந்த காட்டுல இல்லையா?"

"ஆமாம் சார்..."

"சரவண மார்த்தாண்டன் அவங்கள அரெஸ்ட் பண்ணி பிடிச்சு வெச்சிருவேன்னு சொன்னாரே?"

"அவரே இப்ப எங்க இருக்காருன்னு தெரியல... அந்த தங்க மண்டி இருக்கற மலை மேல அவர் ஏறினதாக தகவல்..."

"என்ன கோவிந்தன்... அவரை யார் அங்க போகச் சொன்னது?"

"தங்கம்கற பிசாசு யாரை வேணா எது வேணா செய்யும் சார். நீங்க இந்த ரெக்கார்ட் வாய்சை முதல்ல கேளுங்க..."

கோவிந்தன் சொல்வதை ஆமோதிப்பது போல் வானில் மீண்டும் இடி சப்தம். சிவக்குமாரும் அந்த ரெக்கார்ட் வாய்சை கேட்க ஆரம்பிக்க வெளியே ஒரு மின்னல் டிராகன் சூதிரை போல் ஓடி மறைந்தது.

வள்ளியம்மையும் ரேகாவும் பக்தியோடு சுற்றிய அந்த ஆயிரம் வருஷத்து விருட்சம் திகு திகுவென தீப்பற்றி, மழையை மீறி எரிந்து கொண்டிருந்தது.

56

'தா'ணுமாலய வன நம்பிக்கைகளில் பிரதான நம்பிக்கை அங்குள்ள மரங்களின் மேல் இடி விழுந் தால் அது காட்டுக்கு அழிவு என்பதற்கான அறிகுறி! அதிலும் வணங்கி வந்த தேவ விருட்சமே இடிக்கு ஆளாகும்போது மொத்த கானகமும் பாதிப்படை யும் என்பதுதான்... தேவ விருட்சம் அழியும்போது பேரழிவு நிச்சயம்... அது தாணுமாலய வனத்திற்கு மட்டுமல்ல... தாணுமாலய வனம் சார்ந்த நாடு நகரம் முதல் சகலமும் அழியும்! இது ஒரு பாட லாகவே உள்ளது!

"கேளப்பா!

மூவதேவ வனமிதுவும் மண்மிசை சொர்க்கம்; இதில் பாவசாபம் சேரச்சேர மண்ணிலும் கலக்கம்! சாவாதி விருட்சங்கள் சங்கடங்கள் தீர்க்கும் - இதன்மேல் சரமாக இடிபாய சர்வமுமே விதிர்க்கும்!"

"மழையோ மகாபாரதத்து போரில்
அர்ஜுனனும் கர்ணனும்
பாணச்சண்டை போடுவது போல
சரம்சரமாகவே பெய்தபடி
இருந்தது. இதில் காற்றின் திசை
பிசகிப் போன தாறுமாறான வீச்சு
வேறு...

'ஐயா' என்கிற குரல் கேட்டு
திரும்பிய போது இருசன்
நீலியோடும், வங்கியோடும்
அவர்களை நோக்கி வந்து

கொண்டிருந்தான். தென்னங்கிடுகு
கூம்பிக்குள் மூவரும்
மறைந்திருந்தனர்...”

வானில் இருந்து பாணம் போட்டது போல் மழை பொழிந்திட அதிலும் நனைந்து அணையாமல் விருட்சம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அதன் புகை மிக வெண்மையாக வித்யாசமாக தெரிந்தது. அது பற்றி எரிவதை கண்கள் கலங்க பார்த்தபடி அந்த வனத்தை விட்டு சாரை சாரையாக ஜனங்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். தென்னங்கிடுகு கொண்டு வேய்ந்த கூம்பிகள் அவர்கள் நனையாதபடி பார்த்துக் கொண்டது.

அதை இருகைகளால் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு மிக வேகமாக விரைந்து கொண்டிருந்தனர்.

எருமையும், காளையும் பூட்டிய வண்டிகளில் சாமான் களை அள்ளிப் போட்டுக் கொண்டு அதில் பெண்டு பிள்ளை களை ஏற்றி விட்டிருக்க அவர்களும் வண்டிகளின் கூம்பி களில் ஒளிந்து கொண்டிருந்தனர்.

ஒரு சிறுமி பூச்செடி ஒன்று நட்டிருந்தாள். அது மொட்டு விட்டிருந்தது. அது பூப்பதை பார்க்காமலே போகும் ஏக்கம் அவள் கண்களில் தெரிந்தது.

“மழையோ மகாபாரதத்து போரில் அர்ஜுனனும் கர்ணனும் பாணச்சண்டை போடுவது போல சரம் சரமாகவே பெய்தபடி இருந்தது. இதில் காற்றின் திசை பிசகிப் போன தாறுமாறான வீச்சு வேறு. இடையில் வனச் சரக அலவலகத்தை ஒட்டியும், வனத்தின் இடையில் தட்டை யான நிலப்பரப்பிலும் முகாம்கள் அமைத்து தங்கியிருந்த வனப்பாதுகாப்பு படை வீரர்களும் முகாமின் கூடாரங்களை அவிழ்த்துக் கொண்டு மூட்டை கட்டுவதில் மும்முரமா யிருந்தனர்.

இரண்டு லாரிகளில் அவர்களின் உடமைகள் வெகு வேகமாய் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. வானம் மின்னலை ஓடவிட்டு உம் சீக்கிரம் என்பது போல அவர்களை விரட்டிக் கொண்டிருந்தது.

சிவக்குமாரும் புறப்பட வேண்டிய கட்டாயம்!

நன்றாக இருள்பரவி மழையும் வலுக்கத் தொடங்கிய சமயமாக பார்த்து சென்னையில் இருந்து எச்சரிக்கை செய்தி கட்டளையாகவே பிறப்பிக்கப்பட்டிருந்தது.

"மிஸ்டர் சிவக்குமார்!

காட்டைவிட்டு எல்லாரும் உடனடியா வெளியேறி டுங்க. 5.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் கன்னியாகுமரியில் பதிவு ஆகியிருக்கு. இது எட்டு, ஒன்பதுன்னு அதிகரிச்சா சுனாமி மட்டுமல்ல மலைப்பகுதிகள்ல விரிசல் விழவும் வாய்ப் பிருக்கு. ஜப்பான்ல ஃபியூஜி மலைத் தொடர்ல இருக்கற ஏரிகள் அப்படியே காணாமல் போய் புது இடத்துல நீர் நிலைகள் உருவாகின மாதிரி இப்ப இங்க உருவாக வாய்ப்பு அதிகமிருக்கறதா ஆய்வாளர்கள் சொல்றாங்க..." என்று சிவக்குமாருக்கு வந்த செய்தியை தொடர்ந்து வீட்டை அப்படியே பூட்டி விட்டு அவர்கள் அவ்வளவு பேரும் ஒரு ஜீப்பிலும் காரிலும் அங்கிருந்து புறப்பட தயாராகி விட்டனர்.

காரில் சிவக்குமாரும், வள்ளியம்மையும், ரேகாவும் ஏறிக் கொள்ள ஜீப்பில் நட்ராஜும் திலீபும் ஏறிக் கொண் டனர். காரை சிவக்குமார் ஓட்ட ஜீப்பை கோவிந்தன் ஓட்டத் தொடங்கினான்.

ஜீப்புக்குள் நட்ராஜின் புலம்பல்.

"திலீப்... கடைசில காடு ஜெயிச்சுடுச்சு... பாத்தியா?" என்றான்.

"எப்படி குரு?"

"எப்படியா? இங்க நாம வரும் போது எவ்வளவு ஆர்வமா வந்தோம்... அதை யோசிச்சு பார்! விதம் விதமான டாக்குமென்ட்ரி பண்ணி உலக அளவுல போட்டிகளுக்கு அனுப்பி எல்லா அவார்டையும் அச்சீவ் பண்ணப் போறதா நினைச்சோமே..."

"அஃப்கோர்ஸ் குரு... ஆனா இயற்கையோட மனுஷன் மோதினா இயற்கைதான் ஜெயிக்கும்கறது திரும்ப ஒரு முறை புரூவ் ஆகிகிட்டிருக்கு..."

"எனக்கு பெரிய ஏமாற்றம்... கடைசிவரை இந்த வானத்து மனிதர்கள் பற்றிய புதிர் அவிழவே இல்லை பாத்தியா?"

"இல்லையே... அவங்க யாருங்கற உண்மைதான் தெரிஞ் சிடுச்சே..."

"அதை நீ நம்பறியா?"

"அதுல உங்களுக்கு என்ன சந்தேகம். இன்ஃபாக்ட் அவங்க ஸ்பெஷல் பவருக்கு காரணம் கற்பகமரம்கிற உண்மையும் தெரிஞ்சிடுச்சே..."

"கற்பகமரம் முதல்ல உண்மையா?"

"குரு... நீங்க அந்த சந்தேகத்துல இருந்தே இன்னும் விடுபடலையா?"

"நீ விடுபட்டுட்டியா? இன்ஃபாக்ட் நான் இந்த காட்டுக்குள்ள வரும் போது அந்த மரத்தை பார்த்தவன். இப்ப கூட சொல்றேன். அது மிஸ்ட்ரி இல்லை, அதுக்கு பின்னால் ஏதோ இருக்கு.

நீ லிவ் அண்ட் லைட்டைங்கற ஜேம்ஸ் பாண்ட் படம் பாத்துருக்கியா?"

"உம்... அதுல பல மிஸ்ட்ரியான விஷயங்கள் கடைசில மனுஷனோட புத்திசாலித்தனம்னு சொல்லப்பட்டிருக்கும். அதான?"

"ஏன் அப்படி இருக்கக் கூடாது திலீப்..."

"சாரி குரு... இதுக்கு என்னால பதில் சொல்ல முடியாது இது ஒரு நல்ல கேள்விதான்..."

- ஜீப்பில் நட்ராஜ், திலீப் இடையே பேச்சு இப்படி இருக்க காருக்குள் வள்ளியம்மை சிவக்குமார் ரேகா இடையேயான பேச்சு அப்படியே வேறு விதமாய் இருந்தது.

"என்னங்க இப்படி மழை பெய்யுது... ஒரு அருமையான காடு அழிய நாம காரணமாகிட்டோமேன்னு நினைக்கும் போது வருத்தமா இருக்குங்க..." என்றாள் வள்ளியம்மை.

"உளறாதே வள்ளியம்மை... புயலுக்கும் மழைக்கும் நாம எப்படி காரணமாக முடியும்?"

"நாம நேரடியா காரணம் இல்லாம இருக்கலாம். ஆனா எப்ப உங்க டிபார்ட்மென்ட் திபுதிபுன்னு உள்ள நுழைஞ்சதோ அப்பவே அழிவு தொடங்கிடுச்சு. எனவே குழந்தையை கொடுத்த விருட்சம் எப்படி எரியுது பாருங்க..."

"நீ அந்த மரம் எரியறத சொல்ற... எனக்கு மனசு பத்தி எரியுது... இப்பதானா இந்த மழையும் காத்தும் வரணும்? இதால எல்லாமே கெட்டுப் போச்சு..."

"சாரி சார்... இந்த மழையும் காத்தும் வெளில தெரியற காரணம்... உள்ளடக்கமான காரணங்கள் மனிதர்களோட சுயநலம், சந்தேகம், பேராசை இதெல்லாம்தான்..."

ரேகா குறுக்கிட்டு பதில் கூறிய போது கார் செல்லும் அந்த பாதையில் தாணுமாலயக் குடிகள் வரிசையாக சென்றபடி இருப்பது தெரிந்தது.

"ஹூம்... இவங்க ராஜா மாதிரி வாழ்ந்த மலைக்காடு இது. இப்ப இவங்களையே துரத்திடுச்சு"

என்று ரேகா வருத்தம் தோய சொல்லும் போதே நிலம் பெரிய அளவில் அதிர்ந்து ஆங்காங்கே மரங்கள் சரிந்து விழத் தொடங்கின.

சிவக்குமார் காரை நிறுத்திவிட பின்னால் வந்த கோவிந்தனும் ஜீப்பை நிறுத்திவிட்டு இறங்கி வர காலடியில் மிகப்பெரிய நடுக்கத்தை உணர முடிந்தது.

அப்போது 'ஐயா' என்கிற குரல் கேட்டு திரும்பிய போது இருசன் நீலியோடும், வங்கியோடும் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். தென்னங்கிடுகு கூம்பிக்குள் மூவரும் மறைந்திருந்தனர். அவர்களைப் பார்த்த நொடி சிவக்குமாரில் இருந்து அவ்வளவு பேரிடமும் ஆச்சரியத் தும்கைப்பு.

"ஐயா என்ன பாக்குறீங்க... இவங்க உசுரோட இருக் காங்கன்னா? இவங்கள நான் காப்பாத்திட்டேன்... என் நம்பிக்கை வீண் போகலய்யா..."

"என்ன சொல்ற இருசா... எனக்கு புரியல..."

"ஐயா நின்னு பேச நேரமில்ல... வண்டிய எடுங்க. போய்கிட்டே பேசுவோம். பொழுது விடியலுக்குள்ள இந்த மலைக்காடே அழியப் போகுது. விடியும் போது ஒரு புதுக் காடு இங்க இருக்கும். பழசெல்லாம் போய் புதுசா எது இருக்கோ அதுதான் இனி தாணுமாலய வனம்... நீங்க முதல்ல காரில ஏறுங்க... புள்ளை நீ பின்னால ஏறிக்க..."

- இருசன் பேச்சோடு சிவக்குமாருக்கு பக்கத்து சீட்டில் மறி அமர, நீலியும் வங்கியும் பின்னால் ஏற கார் திரும்ப புறப்பட்டது. கோவிந்தனும் ஜீப்பில் பின் தொடர ஜீப்புக்குள் நடராஜிடம் திகைப்பின் வெடிப்பு.

"கோவிந்தா... இந்த நீலி, வங்கி ரெண்டு பேரும் சாக லையா?"

"எனக்கே ஒண்ணும் புரியல சார்... செத்ததா கேள்விப் பட்டோம். இப்ப உயிரோட பாக்கறோம்..."

"திலீப்... இவங்க உடம்பை நீ பேய்ப்பள்ளம் பகுதியில பாத்தியா பாக்கலையா?"

"இல்ல குரு... அங்க உடம்பை பாக்கல. மிருகங்க இழுத்துட்டு போயிடிச்சுன்னாங்க... அங்கபோனதுல கேமராவை தொலைச்சது தான் மிச்சம்..."

"அது நம்பர் ஒன் ஜப்பான் மேட் கேமரா திலீப். இன்னிக்கு அதோட ரேட் 13 லட்சம்..."

"சார்... உயிர் தப்பிச்சு வந்ததை நினையுங்க. பணத்தை நினைக்கற நேரமா இது?"

"நீ வேற... செத்துட்டதா நினைக்கற இவங்க உயிரோட வந்த மாதிரி அந்த கேமராவும் கிடைச்சா நல்லா இருக்கும்ல!"

நட்ராஜிடம் ஆசையின் எதிர்பார்ப்பு. முன்னால் காருக்குள் இருசன் நட்ராஜிடம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"சார்... இவங்க உயிரோடு வரகற்பமரம்தான் காரணம். என் நம்பிக்கை வீண் போகல. நீலி, வஞ்கி ரெண்டு பேர் உடம்பையும் நான் தூக்கிட்டுப் போய் பாதுகாப்பா ஒரு குகைல போட்டுட்டு உக்காந்து அழுதுகிட்டிருந்தப்ப என் கண்ணுல அகோரசாமி பட்டுச்சு சார்.

அது யாரோ இல்ல சார்... நம்ம ஆபீசர் காளிமுத்து சார் உடம்போடு அவரோட கூட்டாளி ஒருத்தர்தான் அகோர சாமியா சுத்திகிட்டு இருந்தார். நான் எந்த குகைல நீலி, வங்கி உடம்பை போட்டுட்டு உட்கார்ந்திருந்தேனோ அங்கதான் அந்த ஆளும் காளிமுத்து சார் உடம்போட வந்தான். எனக்கு தூக்கி வாரி போட்டுச்சு. இதே காட்டுல பொறந்து வளர்ந்த எனக்கு அகோரசாமியோட நடமாட்டம் பத்தி தெரியும். ஆனா அகோரசாமி யார், அது எதுக்கு சுத்துதுன்னு தெரியாது. அந்த ஆளும் 'நான்தான் காளிமுத்து சார் உடம்பை புதைச்ச இடத்துல இருந்து தோண்டி எடுத்தேன். காளிமுத்து சாருக்கு தான் மலைல தங்கம் இருக்கற இடம் தெரியும். ஆனா, இடையுல தகராறு வந்து

அவரை கொன்னுட்டாங்க. அவரோட கூட்டணிலதான் நானும் இருந்தேன். என்னையும் கொலை செய்யப்பாத்தாங்க. நான் எப்படியோ தப்பிச்சிட்டேன். தப்பிச்சு வந்தப்பதான் நீங்க காளிமுத்து சார் உடம்பை பாத்துட்டு ஆம்புலன்சோட வர்றதுக்காக விலகிப் போனீங்க. அந்த கேப்ல உடம்பை நான் தூக்கிண்டி எடுத்தேன். அகோரசாமியா காட்டை சுத்தினா கற்பகமரம் வேகமா கண்ணுல படும்னு மூப்பர் பேசிகிட்டிருந்ததை கேட்டதால நானும் அகோரசாமியா மாற முடிவு செய்தேன்.

கற்பக மரத்தை பாத்தா காளிமுத்து சாருக்கு உயிரை மட்டுமல்ல தேவையான சகலத்தையும் கேட்டு வாங்கிடுவேன்னு அந்த ஆள் சொன்னான். அது என்னையும் அகோரசாமியா மாத்திடுச்சு. நானும் நீலி, வங்கி உடம்பை தூக்கிட்டு நடமாட ஆரம்பிச்சேன். நீங்க நம்பினாலும் நம்பாட்டியும் நான் சொல்லப் போறதுதான் சத்தியம் எங்க முன்னால கற்பகமரம் தெரிஞ்சிடுச்சு.

ஆனா, காளிமுத்துசாரோட இருந்த அகோரசாமி மரத்தை பார்த்து நம்பமுடியாம 'இது பொய்யா இருக்குமோ'ன்னு நினைச்ச மாத்திரத்துல மரம் மறைஞ்சிடுச்சு. அது எனக்கு ஒரு பாடத்தை கத்து தந்தது. அப்புறமா நானும் மனசை ரொம்ப சுத்தி சுத்தி வந்தேன்.

என் கண் முன்னால ஒரு ராத்திரி மரம் தென்பட்டவும் நான் இவங்களுக்கு உயிர் வரணும் கேட்டேன். ரெண்டு பேரும் தூக்கத்துல இருந்து எழுந்திரிச்ச மாதிரி எழுந்திரிச்சாங்க. நான் அதைப் பார்த்து வாயைப் பொளந்தேன். அதுக்குள்ள மரம் மறைஞ்சிடுச்சு. எப்படியோ இவங்களுக்கு உயிர் வந்ததே அதுவே போதும்னு தேத்திகிட்டு உங்களை பார்க்க புறப்பட்டேன். வழியில ஒரே மழையும் காத்துமா இருந்துட்... ஆரம்பிச்சிடுச்சு. நல்லவேளை... உங்கள எப்படியோ பார்த்துட்டேன்..."

மூச்சு விடாமல் பேசி முடித்தான் இருசன். சிவகுமாரும் மெல்ல அவனைப் பார்த்தபடி காரையும் ஓரமாக நிறுத்திய நிலையில் அவனை அழுத்தமாக பார்த்தார்.

"இருசா... கற்பகமரம். அதனால உயிர் வந்ததுன்னு என்கிட்ட புளுகாதே. உண்மைல என்ன நடந்ததுன்னு மறைக்காம சொல்லு..." என்றார்.

57

'பஞ்ச பூதங்களில் ஆகாயம்தான் முதல் பூதம். இது இருந்தாலே மற்ற நான்கு பூதங்கள் உருவாகி செயல்பட முடியும். அந்த ஈசன்தான் ஆகாய வடிவாகக் காட்சி தருகிறான் என்றும் அதில் சக்தியின் அம்சம் மற்ற பூதங்களையும், அதைக் கொண்ட உயிர்களையும் உருவாக்குகிறது. இப்படி ஒரு 'அலகிலா விளையாட்டு' காலங்காலமாக நடந்து வருகிறது என்பர்.

இம்மட்டில் பூமியில் இயற்கைக்கு குந்தகம் இல்லாத படி வாழும் வரை இந்த 'அலகிலா விளையாட்டு' வெளிய தெரிவதில்லை. இயற்கைக்கு எதிராய் செயல்படும்போது அதன் எதிரொலிதான் பூகம்பம், சுனாமி, ஊழிப்புயல் போன்றவை. ஒன்றுதான் இன்னொன்றாக மாறுகிறது. நாள்தோறும் கோடிக் கணக்கான லிட்டர்களில் பூமிக்குள் இருந்து பெட்ரோலை எடுத்து ஒரு வெற்றிடத்தை கீழே உருவாக்கி வருகிறோம்... இதனால் நில அடுக்குகளில் மாற்றமும் நகர்வும் உருவாகி அது பூகம்பமாகிறது. இதே பெட்ரோலிய புகை வானில் ஓசோன் படலத்தையே ஓட்டை போட்டுவிட்டது. இதுவே

மழையின்மை அல்லது அதிக மழை போன்ற விளைவுகளுக்கும் காரணம். இந்த விளைவுகளை பிராந்தியப் பகுதிகளில் வனங்களைக் கொண்டே சமாளிக்க முடியும். இயற்கையாக உள்ள வனங்களைப் போல இருமடங்கு புதிய வனங்களை உருவாக்கினாலே மோசமான விளைவுகளை எதிர் கொள்ள முடியும். ஆனால் நாம் இருப்பதையே நல்லவிதமாக வைத்துக் கொள்வதில்லை. அதற்கு அழியப் போகும் தாணுமாலயவனமே சாட்சி!

"கடைசில கற்பகமரத்தை பாத்து
இவர் வேண்டிக்கவும் நாங்க எங்க
உடம்புக்குள்ள நுழைய முயற்சி
செஞ்சோம். அதுக்கு முந்தியும்
செஞ்சோம். ஆனா அப்ப முடியல.
மரத்தை பார்த்த சமயத்துல ஒரு
நொடில முடிஞ்சிடுச்சு..."

சிவக்குமாரின் கேள்வி இருசன் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. இருசனின் முகம் மாறிப்போனது.

"ஐயா... நான் பொய் எதுவும் சொல்லலீங்க. எது நடந்ததோ, அதைத்தாங்க சொல்றேன்..." என்றான்.

நீலியும் பதில் கூறத் தொடங்கினாள்.

"ஐயா இந்த வங்கியோட மானேஜர் எங்க கழுத்தை நெறிச்சு கொன்னுட்டாங்க. அப்பால என் உசுரு பொணமா கிடந்த என் உடம்பை சுத்திச் சுத்தி வந்துச்சுங்க.

என் உடம்பை தோள்ள தூக்கிக்கிட்டு பேய்ப் பள்ளத்தாக்கமா போய் அங்க திரியற நாயும், நரியும் தின்னுட்டும்னு உருட்டியும் விட்டுட்டாங்க. என் உடம்பை மட்டுமில்ல வங்கியோட உடம்பும் கூட சேர்ந்து உருண்டுடுச்சு.

யார் செஞ்ச புண்ணியமோ அப்ப கொஞ்ச தூரத்துல இன்னும் இரண்டு பொணங்க கிடந்துச்சு. அதை நாயும் நரியும் தின்னு பசியாறிட்டதால அந்த நேரத்துக்கு எங்க உடம்பு பக்கம் வரவே இல்ல. அதுக்குள்ள என் புருஷன் தேடி வந்து எங்க உடம்பை தூக்கிட்டாரு.

அப்பல்லாம் நான் ஒரு காத்தா உடம்பில்லாத உசுரா அவரை சுத்திச் சுத்தி வந்தேன். கத்துனேன். கதறுனேன். ஆனா அவருக்கு கேட்கல.

ஐயோன்னு பரிதவிச்சேன். என் கூடவே வங்கியும் பரிதவிச்சா. அப்பால நாங்க இரண்டு பேரும் விருட்சமரம்கிட்ட போய் சுத்துனோம்.

அங்க நாங்க நினைச்ச மாத்திரத்துல இருந்தோம். அதெல்லாம் எப்படின்னு தெரியல. இப்ப நான் சொல்ற தெல்லாம் சத்தியம்ங்க. எங்களுக்கு சுட்டுப் போட்டாலும் பொய் சொல்ல வராதுங்க.

கடைசில கற்பகமரத்தை பாத்து இவர் வேண்டிக்கவும் நாங்க எங்க உடம்புக்குள்ள நுழைய முயற்சி செஞ்சோம். அதுக்கு முந்தியும் செஞ்சோம். ஆனா அப்ப முடியல. மரத்தை பார்த்த சமயத்துல ஒரு நொடில முடிஞ்சிடுச்சு. உடம்போட எழுந்திரிக்கவும் எங்களாலேயே நம்ப முடியல. இதுதாங்க நடந்துச்சு...”

நீலி சொல்லியதைக் கேட்டு வள்ளியம்மையும் ரேகாவும் வாயைப் பிளந்து விட்டிருக்க அப்போதும் சிவக்குமாரால் அதை நம்ப முமடியவில்லை. பதிலும் கூற முடியவில்லை. அவர்கள் வாகனமும் வன எல்லையை தாண்டிவிட்டிருந்தது.

வனத்துக்குள் முகாமிட்டிருந்தவர்களின் வாகனங்களும் முன்னும் பின்னுமாய் சென்று கொண்டிருந்தன. தாணுமாலய வனத்தைக் கடந்து தரைமார்க்கத்தில் அருகாமையில் நகரத்துக்கு இடையில் ‘அந்தணன்பட்டி’

ல்கிற ஊரின் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் தற்காலிக
ாக கேம்ப் போட்டவர்கள் வந்து தங்க உத்தரவு ஆகி
யிருந்தது.

இது தெரியாத வள்ளியம்மை சிவக்குமாரிட..ம், 'ஏங்க
நாம இப்ப எங்க போய் தங்கப்போறோம்?' என்று கேட்
ாள்.

"அந்தணன்பட்டி ஹைஸ்கூல் கிரவுண்டுல..." என்று
இறுக்கமாய் பதில் வந்தது சிவக்குமாரிடம்.

"அது எங்க இருக்கு?"

"கொஞ்ச நேரத்துல கார் போய் நிக்கும்போது
ாக்கத்தான போற..."

"அங்க தங்க வசதி இருக்கா?"

"தெரியாது... வகுப்பறைகள் இருக்கலாம். அதை
யன்படுத்திக்க வேண்டியதுதான்..."

சொல்லும்போது எதிர்சாரியில் மரம் ஒன்று விழுந்து
கிடக்க சிவக்குமாரின் காரும் தேங்கியது. இருசன் இறங்கிச்
சென்று அந்த மரத்தை நகர்த்த முயல நீலியும் வங்கியும் கூட
இறங்கினர். மழையில் நனைந்தபடியே அப்படியே தூக்கி
ஓரமாய் போட்டு விட்டு பாதையை உருவாக்கி தந்தனர்.

அந்த நொடி ஆகாயத்தில் ஒரு பெரும் மின்னல்... இந்த
கோடிக்கும் அந்த கோடிக்குமாய் ஒரு ஓட்டம். பெரிதாக ஒரு
இடி சப்தமும் கேட்டது. காருக்குள் இருந்த வள்ளி
யம்மையும் ரேகாவும் காதுகளை பலமாய் பொத்திக் கொண்
டனர்.

தரையிலும் நடுக்கம். எங்கே நிலம் பிளந்து கொண்டு
அப்படியே எல்லாரும் உள்ளே விழுந்து சமாதியாகி விடு
வோமோ என்கிற பயமும் ஏற்பட்டது.

இருசன் ஓடிவந்து காரில் ஏற முனைந்தான் நீலியும்,
வங்கியும் அடித்து பிடித்து பஸ்சில் ஏறுவது போல் ஏறி

ரேகா, வள்ளியம்மைக்கு பின்னால் நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டனர்.

எட்டுபேருக்கான கார் அது. பின் தொடர்ந்து வந்திருந்த கோவிந்தனும் கார் நிற்பதைப் பார்த்து ஜீப்பை நிறுத்தி திரும்பவும் ஒரு இடிச்சப்தம் மின்னல் வெட்டு!

இருசன் காரில் ஏறாமல் காதைப் பொத்திக் கொண்டு வெளியிலேயே நின்றுவிட்டான். ஜீப்பை விட்டு இறங்கப் பார்த்த கோவிந்தனும்...

இடிச்சப்தம் முடிந்து ஒரு அமைதி ஏற்பட மழை பொழிவுச் சப்தம் மட்டும் கேட்ட நிலையில் மெல்ல தலையை நிமிர்த்தினான் இருசன்.

அப்போது அவர்கள் எதிரில் தாணுமாலய வனத்தின் 'அன்னவாவி' உள்ள அந்த உச்சிப்பரப்பில் தீப்பற்றி எரிவது தெரிந்தது.

இருசன் அதைப் பார்த்தபடியே அப்படியே தேங்கி நின்று விட்டான்.

"ஏய் இருசா ஏறு..." சிவக்குமார் கத்தினார்.

"ஐயா நீங்க இறங்குங்க... அங்க பாருங்க..." அவன் கையை நீட்டியபடி சொன்னான்.

என்னவோ ஏதோவென்று சிவக்குமாரும் இறங்கிப் பார்க்க அடர் இருளின் உச்சியில் தீ நாக்குகள்... அதுவும் பலத்த மழை பொழிவுக்கு நடுவில்...

"சொர்ணக் கெடங்கு இருக்கற இடம் அது... தாணு மாலயத்தோட உச்சி. பத்தி எரியுது பாருங்க..." சொல்லி முடிக்கு முன் காலடியில் திரும்ப நடுக்கம். சிவக்குமாரும் இருசனும் தடுமாறிவிழுந்தனர்.

காருக்குள் வள்ளியம்மை ரேகா நீலி வங்கி நால்வருமே அலறிவிட்டனர்.

சற்றுதள்ளி நின்றுவிட்ட கோவிந்தனின் ஜீப்பில் இருந்தும் அலறல் சப்தம் கேட்டது.

ஒரு முப்பது நொடிக்காலம் அந்த நடுக்கம் நீடித்தது. அது நிற்கவும் மெல்ல நிமிர்ந்தனர். முன்பு எரிந்தபடி தெரிந்த பாதையும் இப்போது தெரியவில்லை. இருள் மட்டுமே கண்களில் அப்பி எடுத்தது.

ஜீப்பின் ஹெட்லைட் வெளிச்சமும், காரின் ஹெட் லைட் வெளிச்சமும் மட்டும் கோணல் மாணலாக சாலையில் பாய்ந்தபடியிருந்தது.

அதன்பின் காரும், ஜீப்பும் அந்தணன்பட்டி நோக்கிச் சென்று ஒரு வகுப்பறையில் அவர்கள் தங்குவதுவரை அவர்களிடையே பேச்சு மூச்சே இல்லை.

தூக்கமும் வரவில்லை. குளிர்வேறு வாட்டியது... அப்படியே இரவுப் பொழுது விடிய ஆரம்பித்தது.

மழை சீராக பெய்தபடியே இருந்தது. காலை எட்டு மணிப் பொழுதே விடியற்காலை ஐந்தரை போல்தான் இருந்தது.

பள்ளி முழுவதும் கூட்டம் நெருக்கிக் கொண்டிருந்தது. ஓங்காங்கே கிரவுண்டில் டிபார்ட்மெண்ட்டின் வாகனங்கள் நின்றிருந்தன. அந்த நிலையிலும் இரு சென்ட்ரி போலீசார் பிளாஸ்டிக் டீ தயாரித்து அதை பெரிய எவர்சில்வர் ஜக்கில் வைத்து எடுத்து வந்து எல்லாருக்கும் குடிக்க தந்தனர்.

ஒரு வகுப்பறையில் சிவக்குமாரும் அவரைச் சேர்ந்த அவ்வளவு பேரும் இருக்க இருசனைக் காணவில்லை.

"எங்க இருசன்?"

"மல ஜலம் கழிக்க போயிருக்காங்க..." அந்த பதில் தற்காலிகமாக அமைதிப்படுத்தியது.

ரேகா திலீபின் தோளில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். நட்ராஜ் 'டேபை' வைத்து பேஸ்புக் பார்த்துக் கொண்டிருந்தான். சிக்னல் போய் போய் வந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு போலீஸ்காரர் தலைக்காயத்தோடு வந்தார்.

"நான் சரவண மார்த்தாண்டம் ட்ரூப் சார் ஜண்டர் சார்..."

"அவர் எங்க இருக்கார்? இங்க கிரவுண்டுக்கு வந்துட்டாரா?"

"வெரி சாரி சார்... அவரும், வானவராயனும், துரை சாமி சாரும் மலை மேல் ஏறிப்போனாங்க. கீழ வரவே இல்ல சார். நடுவுல எங்களுக்கு வயர் லெஸ்ல காட்டை விட்டு வெளியேறச் சொல்லி தகவல் வரவும் நாங்க புறப்பட்டோம். நாங்க புறப்படும் போது அந்த பகுதியே நடுங்கி நிலம் பிளந்துடுச்சு சார். நான் திரும்பி பார்க்காம ஓடி வந்தேன் சார். அப்ப ஒரு மரம் என் தலைல விழுந்துடுச்சு சார். அதான் இந்த காயம்..."

அவர் சொல்லிமுடிக்க சிவக்குமார் பார்வை தாணு மாலயவனம் இருக்கற பக்கமாய் திரும்பியது.

"பிரதர்... நான் சொன்னதுதான் சரி. அந்த ஆபீசர் தங்க ஆசையிலதான் மேல போய் இப்ப அதுக்கும் மேல போய்ச் சேர்ந்துட்டாருன்னு நான் நினைக்கறேன். நாம உயிர் பிழைச்சது உண்மைல யார் செஞ்ச புண்ணியமோ?" என்றான் நட்ராஜ்.

58

'மாற்றம்!'

மாறாதது இது ஒன்று மட்டும்தான். மாறினால்தான் வாழ்வு. இல்லாவிட்டால் அது முடிந்த நிலை! ஒரு அசைய முடியாத, அசைக்க முடியாத மலை கூட தன் மேல் தாவரங்களைக் கொண்டு மாற்றம் நிகழ்த்திய படியேதான் இருக்கிறது. உலகின் மிகப் பெரியது எனும் கடல் கூட பூமியை அங்குல அங்குலமாக விழுங்கியபடி தன் நீள மற்றும் அகலத்தில் மாற்றம் கண்டபடியேதான் இருக்கிறது.

மனிதனும் குழந்தைப் பருவம், பிள்ளைப்பருவம், இளமைப்பருவம், நடுமைப்பருவம், முதுமைப் பருவம் என்று தன்னில் மாறியபடியேதான் இருக் கிறான். எவராலும் இந்த மாற்றங்களைத் தடுக்க முடியாது. பூமி சுழலும் வரை மாற்றமும் தொடரும்.

ஒரு வகையில் மாறுவதே வாழ்வு. மாறுவதாலேயே வாழ்வு என்பதே பேருண்மையாகும். மாற்றத்தை ஏற்க மறுப்பவர்கள் பயப்படுகிறார்கள் என்பதே உண்மை. இப்படி எவ்வளவுதான் இந்த மாற்றம் குறித்து நாம் பேசினாலும் இந்த மாற்றத்துக்குள் மாறாத சில உணர்வு நிலைகளும் இருப்பதை கவனிக்க வேண்டும். தாய் தந்தை, அண்ணன் தம்பி, அக்கா தங்கை, கணவன் மனைவி, உறவு பெரிதான நட்புறவு போன்றவை மாறுவதே இல்லை. மாறிக் கொண்டே இருப்பதெல்லாம் ஜடமான விஷயங்களே! மாறாதது இதனுடே உணர்வே!

இந்த உணர்விலும் சாசுவதமானவை சாகாவரம் பெற்றவை உண்டு. அது தாய்மையாகும். அடுத்து ஆண்மை பெண்மையாகும்.

எல்லாவிதமான அழிவிலும் இவை மட்டும் உயிர்த் தெழுந்து தொடர்ந்தபடியே உள்ளன!'

"இந்த சுனாமியும் புயலும்
இறைவனின் கோபம் என்றும்
செவ்வாய் சனி என்னும் கோள்கள்
வான் மண்டலத்தில் ஒரு
ராசிக்கட்டத்துக்குள் வந்ததுதான்
காரணம் என்று மிரட்டிக்
கொண்டிருந்தார்..."

நட்ராஜ் சொன்னதைக் கேட்டபடியே மவுனமாக ஒரு ஓரமாக உட்கார்ந்த சிவக்குமாரிடம் அதன்பின் பேச்சே இல்லை. மழையும் சற்று தளர்ந்து ஒரு கசிவு மழை போல் காட்சியளித்தது. தாணுமாலய வனமும் அதன் மலைக்குன்று களும் சதுரங்கத்தில் இடம் மாறும் காய்கள்போல இடம் மாறியிருந்தன. மாநில அரசு வன இலாகா மந்திரியை மலை யின் அழிவைக் கண்டு வர அனுப்பியிருந்தது. மீடியாக்கள் மிகுந்த சிரமத்துக்கு நடுவில் செயல்பட்டதில் உலகம் முழுக்க அந்த வனத்தின் அழிவு பரவிவிட்டது.

முகநூல் என்னும் ஃபேஸ்புக்கில் புகைப்படங்களுடன் கூடிய குறிப்புகள் பரவிக் கொண்டே இருந்தன. மலைமேல் ஹெலிகாப்டர்கள் பறக்கும் சப்தம் கேட்கிறது.

அந்த எந்திர ஈசலின் பறத்தலுக்கு கீழே மலை ஒரு முறை தன்னை குலுக்கி இடம் மாற்றிக் கொண்டதில் அந்த 'அன்னவாவி' ஏரியும், தங்கக்கிடக்கும் போன இடமே தெரியவில்லை.

சரவண மார்த்தாண்டனுக்கும் அவர் சகாக்களுக்கும் இவ்வளவு பெரிய சமாதியை அவரது குடும்பத்தவர்கள் எப்படித்தான் கூட கட்ட முடியாது.

காலம் கட்டி விட்டது!

ஹெலிகாப்டரில் டிவி மீடியாக்காரர்கள் அந்த மலை மேல் மாற்றத்தை பதிவெடுத்தபடியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தனர்.

ஒரு தொலைக்காட்சியில் ஒரு ஆன்மீக பேச்சாளர், 'நாம் ஒரு அரிய அருள்செல்வத்தை இழந்துவிட்டோம்...' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு தொலைக்காட்சியில் ஒரு சமூக ஆர்வலர் வனத்துக்குள் போலீசார் புகுந்து, அதன் பவித்ரத்தை கெடுத்து தான் காரணம்' என்று பேசிக் கொண்டிருந்தார்.

ஒரு தொலைக்காட்சி மூப்பரின் மரணத்தைச் சொல்லி அவரை 'ஒரு கடவுளின் பிரதிநிதி' அளவுக்கு உயர்த்தி வைத்திருந்தது.

ஒரு நாளிதழ் 'தாணுமாலயக் குடியர்கள் மறுவாழ்வுக்கு அரசாங்கம் உதவ வேண்டும்' என்று தலையங்கம் எழுதி யிருக்க இன்னொரு பத்திரிகையில் ஒரு ஜோதிடர் இந்த சுனாமியும் புயலும் இறைவனின் கோபம் என்றும் செவ்வாய் சனி என்னும் கோள்கள் வான் மண்டலத்தில் ஒரு ராசிக் கூட்டத்துக்குள் வந்ததுதான் காரணம் என்று மிரட்டிக் கொண்டிருந்தார்.

அழிவு தாணுமாலய வனத்தில் மட்டுமில்லை. ஆனால் அங்கேதான் அதிகமாக இருந்தது.

சிவக்குமார் வரையில் முதல்முறையாக மனித சக்திக்கும் விஞ்சிய ஒரு பெரும் சக்தி மனித முறையை விட பேராற்ற லோடு இயங்கிக் கொண்டிருப்பதாகப்பட்டது. வள்ளி யம்மையின் நம்பிக்கை சார்ந்த அணுகுமுறை நட்ராஜின்

எதிரான அணுகுமுறை இரண்டிலுமே ஒரே விஷயம்தான் இருப்பது போலவும் தோன்றியது.

'அது இருக்கிறது... அதுவே இல்லாமலும் இருக்கிறதோ?'

ஒரு அளவிற்கு இந்த வானத்து மனிதர்கள் யார் என்பது தெளிவாகிவிட்டது. அகோரசாமி பற்றியும் தெரிந்து விட்டது. ஆனால் கற்பக மரம் பற்றித்தான் தெளிவாக ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

இந்திரலோகத்தில் இருப்பதாக புராணங்கள் கதை கட்டி விட்டிருக்கும் கற்பகமரத்துக்கு பரந்த இந்த உலகில் இந்த தாணுமாலய வனக்காட்டில் என்னவேலை என்கிற கேள்விக்கு அறிவுக்கு பொருத்தமான ஒரு விடை கிடைக்கவே இல்லை. அது மட்டுமில்லை... அது கேட்டதைத் தரவல்லது என்பதற்கு எதிரான சாட்சிகளே இல்லை. நீலியும், வங்கியும் தாங்கள் மறுஜென்மம் எடுக்க கற்பகமரமே காரணம் என்று உறுதியாக நம்புகின்றனர். இருசன் நம்புவதோடு அதை எண்ணி கண்ணீர் வடிக்கிறான்.

'ஐய்யா... எது வேணா அழியலாங்க. கற்பக மரத்தை எதாலயும் அழிக்க முடியாதுங்க. அது நிச்சயமா திரும்ப வருங்க' என்ற டிவி பேட்டியிலேயே அவன் பேசியதுதான் இதில் உச்சம்.

டிவிக்காரர்களும், மீடியாகாரர்களும் தேடியதில் வானத்து மனிதர்கள் இருக்குமிடம் தெரிந்தது. அவர்களே தேடி வந்து பேசினார்கள். அவர்கள் முகத்தில் வருத்தம் நன்றாக தெரிந்தது.

ஒரு பத்திரிகைகாரர் அவர்களை ரொம்பவே குடைந்தார். ஆனால் அவர்கள் சளைக்காமல் பதில் தந்ததுதான் விந்தை!

'நீங்கள் விஞ்ஞானிகளா? சித்தர்களா?'

'இரண்டும்தான்!'

'அது எப்படி இரண்டாக முடியும். விஞ்ஞானிகளுக்கு கூட வள்நம்பிக்கை கிடையாது. சித்தர்கள் அப்படி இல்லையே...'

'அப்படின்னு யார் சொன்னது? தன்னையே கடவுளாக உணர்ந்தவர்தான் சித்தன். புராண இதிகாச கடவுள் கூட்டத்தை அவன் ஏத்துக்கறானா இல்லையாங்கறது அவன் பொறுத்த விஷயம். ஆனா அவன் விஞ்ஞானமும் மெய் ஞானமும் பெற்று இரண்டும் கொண்டவன்!'

'நீங்க ஏன் உங்க குடும்பங்களைவிட்டு இந்த காட்டுலையே தங்கினீங்க... அவங்களுக்கு கூட தகவல் தராம போக என்ன காரணம்?'

"எங்களை இறந்தவங்களா இந்த உலகம் நினைக்க ஆரம்பிச்சதை நாங்க கெடுத்துக்க விரும்பல. இந்தக் காடு மிருகங்களுக்கு ரொம்ப பிடிச்சுப்போனதும் இதன் அருள் அமைதியும் நாங்க இங்கேயே தங்க காரணம்!"

'நீங்க கற்பக மரத்தை பார்த்துருக்கீங்களா?'

'இல்லை!'

'இல்லையா?'

'ஆமாம்... அது ஒரு அழகான கற்பனை.'

'அப்ப எப்படி செத்துப்போன நீலி, வஞ்சி உயிர் பிழைத்து வர முடியும்?'

'அவங்க சாகவே இல்லைன்னும் போது உயிரோடு வர்றதுங்கற கேள்விக்கும் இடம் இல்லையே...'

'ஆனா அவங்களே கற்பக மரம்தான் தங்களுக்கு உயிர் கொடுத்ததா சொல்றாங்களே...'

'அதை பத்தி எனக்குத் தெரியாது. எங்க வரைல அது ஒரு அழகான கற்பனை!'

'இப்படி சொன்னா எப்படி?'

'வேற எப்படிச் சொல்லணும்... அது ஒரு இமாலய புளுகுன்னு அழுத்தமா சொல்லணுமா?'

'சரி... உங்க விசேஷ சக்திக்கு எது காரணம்?'

'முதல்ல எங்ககிட்ட என்ன சக்தி இருக்கறதா நீங்க நினைக்கறீங்க?'

'நாங்க கேள்விப்பட்ட வரைல உங்களுக்கு மிருகங்கள் கட்டுப்படுமாம். நினைச்ச மாத்திரத்துல எதிர்ல வந்து நிப்பீங்களாம்!'

'இதெல்லாம் உங்ககிட்டயும் இருக்கு. உங்களுக்கு அந்த சக்தியை பயன்படுத்த தெரியலை. எங்களுக்கு பயன்படுத்த தெரியும் அவ்வளவுதான் வித்தியாசம்!'

'அப்ப அது ஹியூமன் பவர்தானா?'

'நிச்சயமா... இன்னொரு விஷயமும் சொல்லிடறோம், ஆன்மிகமும் ஒரு விஞ்ஞானம்தான். பள்ளிகள்ல தமிழ் பாடம் பார்ட்-ஒன், பார்ட்-டூன்னு இருக்கற மாதிரி ஆன்மிகமும் அறிவுக்கு உட்பட்ட, அப்பாற்பட்டதுன்னு ரெண்டு பிரிவா இருக்கு. இந்த அப்பாற்பட்ட பாடத்தை விளங்கிக்க முதல்ல ஒருத்தருக்கு அவரை முதல்ல தெரியணும். பிறகு இந்த பிரபஞ்சம் பத்தி தெரியணும். அப்புறமா அவர் இந்த அப்பாற்பட்ட ஆன்மிகத்துகிட்ட வரணும். அப்படி வராம இருக்கற இடத்துல இருந்தபடி எல்லாவற்றையும் மறுத்துப் பேசறது ரொம்ப சுலபம்!'

'தாணுமாலய வனம் இப்படி அழியும்னு எதிர்பார்த்தீங்களா?'

'நாங்க எதையும் எதிர்பார்க்கறதே இல்லை. இயற்கையோடு கலந்து வாழ்ந்தோம். இனியும் வாழ்வோம்...'

'எப்படி வாழ்வீங்க... அதான் வனம் அழிஞ்சு [illegible]'

'இலவில்தான் எங்களுக்கு வேலையே... உங்க வீடு இடிஞ்சு போச்சு நீங்க அதை அப்படியே விட்டுவீங்களா... திரும்பி கட்டுவீங்களில்ல. அது மாதிரி நாங்களும் புதிய வனத்தை உருவாக்குவோம்.'

'நீங்க மொத்தம் பதினெட்டு பேர்- அது என்ன கணக்கு?'

'இது இயல்பா அமைஞ்சது...'

'உங்களை பதினெட்டு சித்தர்கள்னும், அவங்க சூட்சும [illegible] உங்களுக்குள்ள புகுந்து இயக்கறதாவும் சொல்றாங்க...'

'தெரியலியே...'

'நீங்க வெட்டு ஒண்ணு துண்டு இரண்டுன்னே பேச [illegible] டீங்களா?'

'பேசினது போதும்!'

'நிறைய பேசினாதானே புரியும்?'

'தப்பு... பேசினா புரியவே புரியாது. தப்பாயிடும்.'

'அப்ப மவுனம்தான் சரியா?'

'வெளிய மவுனமும், உள்ளே பேசிக்கறதும் தான் சரி.'

'இப்ப எங்க எதிர்ல ஏதாவது அதிசயத்த செய்து காட்டுவீங்களா?'

'இப்ப எப்படி முடியும்... தாணுமாலய வனம்கற அதிசயத்தை சாதிக்க பலகாலம் தேவை...'

பேட்டி இப்படி கேள்விபதிலோடு இருந்தது. பத்திரிகையாளர்களால்தான் அவர்களிடம் மேற்கொண்டு கேள்விகளை கேட்க முடியவில்லை.

அவர்களே அவர்கள் வாயால் கற்பகமரம் ஒரு கற்பனை என்றதுதான் விந்தை.

அவர்கள் வேண்டுமென்றே அப்படி சொன்னதாக ஒரு சாரரும், அதுவே உண்மை என்று ஒரு சாரரும் வெட்டியும் ஒட்டியும் பேச்சை துவக்கி விட்டனர். அது தொடர்ந்த படியே இருக்கும்.

எப்படியோ வங்கி நாடி முத்துவையே திருமணம் செய்து கொண்டு விட்டாள். இருசன், நீலி இருவரும் முன்னை விட இப்போது அதிக நேரம் பாராட்டுகிறார்கள்.

சிவக்குமாரோ அந்த வனச்சரக அதிகாரியாக தொடர்கிறார். நட்ராஜ்ம், திலீபும் கேமராவோடு சீர்திருத்த நடவடிக்கைகளை படம் எடுப்பவர்களாகி விட்டனர்.

வள்ளியம்மை வயிற்றில் கருவின் வளர்ச்சி நன்றாகவே இருக்கிறது. ரேகா அவளுக்கு துணையாக இருக்கிறாள். 'குழந்தை பிறந்தப்புறம் பையனா இருந்தா தாணுமாலயன், பெண்ணா இருந்தா தாணுமாலயின்னு தான் வைப்பேன்' என்கிறாள் வள்ளியம்மை!

முற்றும்


திருமகள்
நிலையம்